ஒரு காவிரியைப் போல...

பூங்கொடி பதிப்பகம்

லக்ஷ்மி

''லக்ஷ்மி'' யின்

பூங்கொடி வெளியீடுகளில் சில...

- அழகின் ஆராதனை 52.00
- அடுத்த வீடு 100.00
- அரக்கு மாளிகை 125.00
- அவள் ஒரு தென்றல் 42.00
- இரண்டாவது மலர் 90.00
- இரண்டு பெண்கள் 27.00
- இருளில் தொலைந்த உண்மை 37.00
- இன்றும் நாளையும் 65.00
- உறவுகள் பிரிவதில்லை 20.00
- உயர்வு 50.00
- உறவின் குரல் 31.00
- என் வீடு 40.00
- கடைசி வரை 25.00
- கங்கையும் வந்தாள் 80.00
- கழுத்தில் விழுந்த மாலை 36.00
- கணவன் அமைவதெல்லாம் 60.00
- ரஷ்மீர் கத்தி 30.00
- ளியின் கண்கள் 53.00
- றாமல் சன்னியாசம் 32.00
- ன்டுக்குள்ளே ஒரு பச்சைக் கிளி 24.00
- மாறியபோது 42.00
- ம்பிப் பார்த்தால் 30.00
- பிறக்கட்டும் 21.00
- நேரமில்லை 38.00
- த கதைகள் 70.00
- க் கைகள் நீளம் 50.00
- ம்வி 50.00
- 50.00
- னவ் 40.00
- னம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) 50.00

ஒரு காவிரியைப் போல...

1

இன்னும் கொஞ்ச நேரம் போர்வைக்குள்ளேயே சுருண்டு கொண்டிருக்க வேண்டுமென்று காவேரிக்கு ஆசை தான். குளிர்கால விடியற்காலைத் தூக்கத்திற்கே ஒரு தனி இன்பம் இருப்பதை அவள் பலமுறை அனுபவித்திருக்கிறாள். ஆனால் விடியும் தருவாயாகி விட்டதை அறிவுறுத்தத் தலைமாட்டிலிருந்த அலாரம் கடியாரம் ஒருமுறை அடித்து எச்சரித்துவிட்டது.

பக்கத்துப் படுக்கை அறையில் நோயாளியாகப் படுத்திருக்கும் பெரிய அண்ணி சவுந்தரி இருமுவது கேட்டது. அண்ணியும் விழித்துக் கொண்டுவிட்டாள் என்பதின் அறிகுறி அந்த இருமல் சத்தம். மேலும் வேலைக்குக் கிளம்ப வேண்டிய வாரத்தின் முதல்நாள். போர்வையை வழித்து எறிந்துவிட்டு எழுந்தாள்.

பிளானல் நைட் டிரஸ்ஸையும் மீறிக் குளிர் ஊசியாக உடம்பைக் குத்தியது.

அப்பாடா என்று கத்தி அழவேண்டும் போல்தான் அவளுக்கு இருந்தது. ஆனால் மழை-இடி-குளிர் எதுவானாலும் அவள் கட்டாயமாக வேலைக்குக் கிளம்பி ஆக வேண்டுமே!

அலாரம் மறுமுறை அடிக்கும் முன் அதன் தலையை அழுத்திவிட்டு அவள் துவாலையுடன் பெரிய அண்ணி உபயோகிக்கும் குளியலறைக்கு ஓடினாள்.

இருபத்துநான்கு மணிநேரமும் சூடான நீரை எல்லா அறைகளில் உள்ள குழாய்களும் கொட்டும் வசதிகள் பல நிறைந்த வீடு அது.

தன் அறையை ஒட்டிய குளியலறையிலிருந்து ஸ்நானத் தொட்டியில் வாசனைப் பொடியைத் தூவி... வெந்நீரை நிரப்பி ஜலக்கிரீடை செய்துகொண்டு நீரில் படுத்துக்கிடக்க அவளுக்கு இப்போது நேரம் ஏது?

ஆப்பிரிக்காவில் வந்து குடியேறி ஆண்டுகள் பல ஆகிய போதிலும் பெரிய அண்ணி சவுந்தரி குளியல், உடை, சாப்பாடு அத்தனையிலும் தமிழ்நாட்டின் பழக்க வழக்கங்களைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். பட்டதாரி என்ற போதிலும் எப்பொழுதும் தமிழிலேயேதான் பேசினாள். தாயற்ற அவளையும், சின்ன அண்ணன் லோகேந்திரனையும் தன் குழந்தைகளாக வளர்த்து ஆளாக்கியதன் பலன்...அந்த வீட்டில் தமிழ்ப் பேச்சு வழக்கிலிருந்தது.

ஆனால் சின்ன அண்ணி யசோதா கேப் மாகாணத்தி லிருந்து வந்தவள். தமிழில் பேசத் தடுமாறினாள். அவள் ஒருத்திதான் வீட்டிலே ஆங்கிலத்திலும்-ஆப்பிரிக்கன் மொழியிலும்-இடையே ஸுலுவிலும் உரத்த குரலில் எல்லோரிடமும் கத்திக்கொண்டிருப்பாள்.

முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை சின்ன அண்ணி தன் கணவனுடன் காலையிலேயே தங்கள் நண்பர்களைப் பார்க்கப் புறப்பட்டுப் போனாள். இரவு பத்து மணிக்குமேல்தான் வீடு திரும்பினாள். அதனால் அடித்துப் போட்டாற்போல அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் அண்ணன்

லோகேந்திரனுக்கு விடியும்வரை தூங்கிக் கொண்டிருக்கக் கட்டுப்படியாகாதே! சீக்கிரம் எழுந்து சென்று அவர் நடத்தி வரும் அந்த பிரபல உணவுக்கடையைத் திறந்தாக வேண்டும்.

அண்ணி சவுந்தரியின் குளியலறையில் குழாயடியில் கிடந்த அந்தப் பெரிய பித்தளை அண்டாவிலே காவேரி மிதமான சூட்டில் நீரை நிரப்பிக்கொண்டு பல் துலக்கிவிட்டு வேகமாகக் குளியலை முடித்தாள்.

அரசு நிர்வாகத்திலிருக்கும் பள்ளி மருத்துவச் சோதனைப் பகுதியில் அவள் சில ஆண்டுகளாக நர்ஸ் வேலை பார்க்கிறாள். வெளிர்நீலச் சீருடையைத் தரித்துக்கொண்டு தன் பெயர் பொறித்த பிளாஸ்டிக் பட்டையை இடது தோளின் கீழ் உடை மீது குத்திக்கொண்டாள்.

பள்ளிப் பரிசோதனை வேலையிலிருக்கும் நர்ஸ்கள் ஆஸ்பத்திரி நர்ஸ்களைப் போலத் தலையில் வெள்ளைத் துணியால் ஆன விசிறி அலங்காரம் செய்து கொள்ளத் தேவையில்லை என்பது அரசு உத்தரவு. அவள்வரை அது நல்லதாகிவிட்டிருந்தது. இடைவரை மயில் தோகையாக விரிந்து தொங்கிய தன் அடர்ந்த கூந்தலை வாரி அழகானதொரு கொண்டையாக அவசரமாகச் சுற்றி முடித்துக் கொண்டாள். வெளிர் ரோஜா வண்ண உதட்டுச் சாயத்தில் உதடுகள் மின்னுவதையும், மஸ்காராவில் கண் இமைகள் பட்டாம் பூச்சியின் சிறகு போல அலங்காரமாகத் துடிப்பதை யும் கண்ணாடியில் பார்த்துத் தன் அழகிலே ஒரு கணம் மயங்கி மகிழ்ந்து போனாள்.

மறுகணம் மனதை முள்போன்றதொரு வேதனை நெருடுவதை உணர்ந்தாள். அண்ணா எழுந்துவிட்டார் என்பதை அடுத்து குளியலறையிலிருந்து வந்த ஓங்கார ரீங்கார சப்தங்கள் உணர்த்தின. அவர் காலை வேளையில் பல் துலக்கி ஒரு கோப்பைத் தேநீர் குடித்துவிட்டு கடைக்கு ஓடிவிடுவார். இரவு படுக்கப் போகு முன்தான் அவர் குளிப்பது வழக்கம்.

டர்பன் நகரைவிட அவள் போய் வேலை செய்ய வேண்டிய பகுதியில் குளிர் அதிகமாகவே இருக்கும் என்பதை அறிவாள். எனவே அவசரமாகத் தனது நைலான் பாண்டி ஹோசை எடுத்து அணிந்துகொண்டு பரபரப்புடன் ஷூக்களைக் காலில் திணித்துக் கொண்டாள். அலமாரியில் தொங்கிய கனமான திவப்புக் கம்பளிக் கோட்டை எடுத்துப்போட்டுக்கொண்டாள்.

சமையலறைக்குள் புகுந்து விளக்கைப் போட்டு மின்விசைக் கெட்டிலில் நீரைப் பொங்கவிட்டாள். வழிப் பயணத்துக்குத் தேவையான ரொட்டி ஸாண்ட்விச்சுகளைத் தயாரித்துப் பிரம்புக் கூடைக்குள் போட்டாள். தேநீரைச் சட்டென்று கலக்கி ஃபிளாஸ்கில் ஊற்றிப் பத்திரமாகக் கூடைக்குள் வைத்தாள்.

வண்டி ஓட்டிக்கொண்டு போகும்போது தூக்கம் வந்து தொலைத்தால்...? ஏதாவது தின்றால் தூக்கம் கலையும் என்ற எண்ணத்தில் இரண்டு ஆப்பிள் பழங்களையும் கூடைக்குள் போட்டு அதன் மேல் ஒரு வெள்ளைத் துவாலையைப் போட்டு மூடித் தயாராக்கினாள்.

ஐந்து நாட்கள் லேடீஸ் ஸ்மித்தில் தங்க ஏற்கனவே தன் சிறு பெட்டியில் மாற்றுச் சீருடை, சில புடவைகள், ரவிக்கைகள் எல்லாம் எடுத்துத் தயாராக வைத்துவிட்டிருந்தாள். கைச்செலவுக்குப் பணம் எடுத்துப் பர்சில் திணித்துக் கொண்டு அதைத் தோள் பையில் போட்டு மாட்டிக் கொண்டாள்.

அவள் கிளம்பத் தயாராகிவிட்டாள். அவசரமாகத் தயாரித்த தேநீரைக் கப்புகளில் ஊற்றி ஒன்றை எடுத்து வேகமாகப் பருகி முடித்தாள்.

அண்ணா லோகேந்திரன் சமையலறைக்குள் வந்தார். அவரும் வெளியே செல்ல ஆயத்தமாகப் பளிச்சென்ற உடையில் காணப்பட்டார். குளிர் தாங்க முடியாது அவரும் ஒரு கனமான ஸ்வெட்டரைப் போட்டுக் கொண்டிருந்தார்.

''இந்த வாரம் உனக்கு லேடீஸ் ஸ்மித்தில் வேலையா? ஓ.கே...'' தோள்களைக் குலுக்கிக் கொண்டு தயாராக இருந்த ஒரு கப் தேநீரை எடுத்து ஒரே மூச்சில் குடித்தார்.

''குட்பை'' என்று சொல்லிக் கொண்டே வெளியே ஓட்டமும் நடையுமாகச் சென்றார். சில நிமிடங்களில் அண்ணாவின் வெள்ளை பென்ஸ் கார் உறுமிக்கொண்டு காராஜிலிருந்து புறப்பட்டுத் தெருவுக்குள் ஓடி மறைந்து விட்டது.

குளிர் காலமாகையால் இன்னமும் சூரியன் தலையைக் காட்டவில்லை. வானம் முழுவதும் புகையைப்போலப் பனி கப்பிக் கொண்டிருந்தது. மீதமாக மேஜை மீதிருந்த தேநீர்க் கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டு பெரிய அண்ணியின் அறைக்குள் புகுந்தாள் காவேரி. அதற்குள் சீராக்கிக்கொண்டு இஸ்திரி மடிப்புக் கலையாத புடவை ஒன்றில் சுத்தமாகப் படுக்கைமீது தலையணையின் மேல் சாய்ந்து கொண்டிருந்தாள்.

பெரிய அண்ணன் இறந்த பின்னர் அண்ணி ரொம்பவும் இடிந்து போய்விட்டாள். அத்துடன் இருதய நோய் வேறு. சமீப காலத்தில் அவளது ஆரோக்கியம் மிகவும் கெட்டுவிட்டிருந்தது என்பது காவேரிக்குத் தெரியும்.

சவுந்தரியைக் கவனித்த ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் காவேரியிடம் உண்மையைச் சொல்லிவிட்டிருந்தார். ''இன்னொரு மாரடைப்பு வந்தால் உடம்பு தாங்காது... இருதயம் வீங்கி மிகவும் பழுதடைந்து விட்டிருக்கிறது. ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளவேண்டும். வேறு எதுவும் செய்ய இயலாது...''

எந்தச் சமயமும் அண்ணிக்கு மரணம் வரக்கூடும் என்ற நினைவு நெருப்பாகக் காவேரியின் நெஞ்சைச் சுட்டுக் கொண்டிருந்தது.

வாய்விட்டு அழ முடியாத ஒரு இறுக்கமான துயரத்தில் அவள் சித்திரவதைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த வாரம் வெள்ளிக்கிழமை மாலைவரை. தொடர்ந்தாற்போல நான்கு முழுநாட்கள் அவள் வீட்டில் இருக்க மாட்டாள். அப்போது அண்ணிக்கு ஏதேனும் ஏற்பட்டு விட்டால்...? அம்மாவின் முகத்தைக் கூட அவள் பார்த்ததில்லை. அண்ணி சவுந்தரிதான் அவளுக்கு அம்மா...அப்பாவுக்குப் பின் அப்பா...அண்ணா, தோழி எல்லாம். சவுந்தரிக்குக் குழந்தைகள் ஏதும் கிடையாது. அந்தக் குறையை அவள் நினைத்துப் பார்க்க நேரமின்றி அந்தக் குடும்பத்தின் தாயாக அண்ணனையும் - அவளையும் மனைவியை இழந்த வயதான மாமனாரையும் அவர்கள் நடத்தி வந்த உணவுக்கடையையும் எத்தனை சிறப்பாகக் கவனித்துக் கொண்டாள்! சதா சுறுசுறுப்பாக வளைய வந்தவள் இப்போது படுத்த படுக்கையாகி விட்டிருந்தாள்.

தாயைப் போன்ற பாசம் மிகுந்த அண்ணிக்கு உடம்புக்கு முடியாதுபோது, கூட இருந்து பணிவிடை செய்ய முடியாமல் -எங்கேயோ போய்ப் பள்ளிக்கூடக் குழந்தைகளைப் பரிசோதித்துக் கவனிக்கப் புறப்பட்டு விட்டிருக்கிறாளே!

தன் இயலாமையை நொந்து கொண்டவண்ணம் கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள் காவேரி.

''டீ கொண்டு வந்திருக்கேன். சாப்பிடுங்க அண்ணி...'' என்று அன்புடன் கோப்பையை அவளிடம் நீட்டினாள்.

''லேடீஸ் ஸ்மித் பள்ளிக்கூடத்துக்குப் போகணும் இல்லையா? இங்கிருந்து இருநூத்தம்பது கிலோ மீட்டர் தொலைவாச்சே...பத்திரமா காரை ஓட்டிக்கிட்டுப் போ. பராக்குப் பாக்காதே. வீட்டைப்பத்தியும் வேறே எந்தக் கவலையும் மனதிலே வச்சுக்காதே. அங்கே தங்கறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டே இல்லியா...?''

சவுந்தரி அண்ணி அன்புடன் கேட்டாள்.

''ஆமாம் அண்ணி, டிபார்ட்மெண்டிலிருந்து டிரங்க்கால் போட்டு நம்ம ஜோதி சித்தப்பா வீட்டிலே தங்க ஏற்பாடு செய்திருக்கேன்.''

''உனக்கு லேடீஸ் ஸ்மித் போக இஷ்டமில்லேங்கிறது எனக்குப் புரியுது. நீ திரும்பி வரதுக்குள்ளே எனக்கு ஒண்ணும் ஆயிடாது. கவலைப்படாதே. அந்தப் பள்ளிக் கூடத்திலே இப்போ மோகன்தான் பிரின்ஸ்பால்னு கேள்விப்பட்டேன். அதைப் பத்தியும் நீ கவலைப்படத் தேவையில்லை. தைரியமா போயிட்டு வா.''

சவுந்தரி அவள் கன்னத்தை அன்போடு வருடினாள்.

கண் இமைகளைச் சுட்ட கண்ணீரைக் காவேரி சமாளித்துக் கொண்டாள். ''உங்களுக்குச் சாப்பிட ஏதாச்சும் எடுத்துக் கொடுத்து விட்டு போகட்டுமா அண்ணி?''

''சாப்பிட ஒண்ணும் வேணாம். நான் தினமும் கேட்டு ரசிக்கிற சீர்காழியின் அந்தப் பாட்டை டேப் ரிகார்டில் போட்டுட்டுப் போ; அதைக் கேட்கும் போதெல்லாம் எனக்குத் தாய்நாட்டின் நினைப்பு வரது...அந்த அகண்ட காவேரி என் கண் முன்னே தெரியறா. உன் அண்ணன் உசிரோடு இருந்தப்போ ஒரு வாட்டி நானும் அவரும் தாய் நாட்டுக்குப் போய் என் பக்க மனுஷாளைப் பார்த்துட்டு வந்தோம். அதுக்குப் பிறகு போக எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இப்போ இந்த உடம்போட என்னாலே போக முடியாது. ஊருக்குப் போகணுங்கிற ஆசையை நிதமும் அந்தப் பாட்டைக் கேட்டாவது தீர்த்துக்கிறேன். போட்டுட்டுப் போம்மா...''

சவுந்தரியின் குரல் தடைப்பட்டது.

அவளது ஏக்கம் காவேரியின் மனதைத் தொட்டது.

அலமாரியிலிருந்த டேப்ரிகார்டில் பொருத்தி அருகிலிருந்த மேசை மீது வைத்து பட்டனை அமுத்தினாள்.

சீர்காழி கோவிந்தராஜன் தமது இனிய குரலில் கணீரென்று பாடத் தொடங்கினார்:

நடந்தாய் வாழி காவேரி
நாடெங்குமே செழிக்க
நன்மையெல்லாம் சிறக்க
நடந்தாய் வாழி காவேரி
அடர்ந்த மலைத்தொடரில் அவதரித்தாய்-இந்த
அழகுத் தமிழ் நிலத்தை அலங்கரித்தாய்
நடந்த உன் வழியெல்லாம் நலமளித்தாய்
நங்கையர் உனை வணங்கவும்-மலர்கள்
கொஞ்சும் சோலைகள் நெருங்கவும்
இன்ப யாழிசை முழங்கவும்-செவியில்
செந்தமிழ்த் தேன் வழங்கவும்...
அசைந்து-வளைந்து-நெளிந்து-தொடர்ந்து...
அலைகடல் எனும் ஒரு
மணமகன் துணை பெறவே...
நடந்தாய் வாழி காவேரி...

''எனக்குப் பிடிச்ச காவேரி நதியின் பேரையே என் மாமியார் உனக்கு வச்சிருக்கிறதைப் பத்தி எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு. காவேரி.. எனக்கு ஒண்ணு செய்வியா...கிட்டவா...''சவுந்தரி அழைத்தாள்.

உணவளிக்கும் உழவர்களுக்கெல்லாம் கண்ணாக
பண்பு

உயர் தமிழ்நாட்டின் செல்லப் பெண்ணாக
புலவர் எல்லாம் பாராட்டும் பொன்னாக
அன்பு பொங்கி வரும் காவிரியே வாழியே...

சீர்காழி பாடி முடித்ததும் அதை மீண்டும் கேசட்டில் சுழற்றி திரும்பப் பாடத் தயாராக வைத்துவிட்டு... கன்னத்தில் கோடிட்ட கண்ணீரை சவுந்தரி மெல்ல முந்தானையால் துடைத்துக்கொண்டாள்.

''கே.டி. சந்தானம் என்கிறவர் எழுதியிருக்கிறார். சீர்காழி இனிய குரலில் பாடியிருக்கிறார். என் நாட்டையும் எங்கள் ஊரில் அகண்டு விரிந்து ஓடும் காவிரியையும் நினைத்தால் உடம்பு புல்லரிக்கிறது. மறுபடியும் தாய்நாட்டுக்குத் திரும்பிடணும். அந்தக் காவிரிக் கரையிலே உயிரை விடணும்... என் உடல் சாம்பல் அந்தப் புனித நதியுடன் இணைந்து கரைந்து ஒண்ணாகிடணும்னு ஆசையா இருக்கு... ஆனால் நம்பிக்கை இல்லை...அதனாலே...''

''அண்ணி என்ன பேச்சு இது?'' ஒங்கிக் கத்திவிட்டாள் காவேரி.

''முழுக்கக் கேட்டுக்கோ. நெருப்புன்னா வாய் வெந்துடாது. நான் செத்துட்டா இங்கே உள்ள நம்ப உறவினர்கள் என் சாம்பலை இந்த ஊர் அம்கேணி ஆற்றில் தான் கரைப்பாங்க. ஒரு சமயம் டர்பன்பேயில் கரைச்சாலும் கரைச்சு காரியத்தை முடிச்சுடுவாங்க. நீ சின்னப்பெண். உன் வார்த்தையை யாரும் கேட்டுக்கமாட்டாங்க. அதனாலே நீ லீவு எடுத்துக் கொண்டு எப்பவாகிலும் இந்தியாவுக்குப் போனால் என்னுடைய துணிமணிகளில் ஏதாவது ஒரு கைக்குட்டையையாகிலும் எடுத்துப் போய் எங்க ஊர்க் காவேரியில் என்னை நினைச்சுட்டுப் போட்டுக் கையெடுத்துக் கும்பிடு. போதும்...என் ஆன்மா சாந்தியடைஞ்சுடும்...''

''அண்ணி, நான் வெளியூருக்குப் பயணப்பட்டுக் கொண்டிருக்கும்போது இப்படிப் பேசறது நியாயமா...'' செல்லமாக அதட்டியபடி மறுபடியும் டேப்ரிக்கார்டரைத் தட்டி விட்டாள்.

மீண்டும் சீர்காழியின் கம்பீரக் குரல் காதுகளைத் தழுவியது.

அறைக்கதவைத் திறந்துகொண்டு நைட்கவுன் சரசரக்கக் கோபாவேசமாகச் சின்ன அண்ணி யசோதா உள்ளே வந்து நின்றாள்.

''பக்கத்தறையிலே நான் தூங்கறது பிடிக்கலையா? விடியறதுக்கு முந்தி பாட்டுப் போட்டுக்கிட்டு ஊரையே எழுப்பணுமா?'' எரிச்சலுடன் ஆங்கிலத்தில் ஓரகத்தியிடம் கத்தினாள்.

''ஸாரி யசோதா, இனிமேலே ஹெட்போன் வச்சுக் கொண்டு டேப்ரிக்கார்டரைப் போடறேன். உன் தூக்கத்தைக் கெடுத்திட்டேன். மன்னிச்சிக்கோ...'' சவுந்தரி அண்ணி மெல்லிய குரலில் பேசியதைக் கேட்டுக் கொதித்துப் போனாள் காவேரி.

தாயைப் போன்ற பெரிய அண்ணியிடம் யசோதா மட்டு மரியாதையில்லாமல் இப்படியா வந்து கத்துவாள்! அதுவும் இருதய வியாதிக்காரி... பாவம்...சே! இவளும் ஒரு பெண்ணா!

யசோதாவை வெறுப்புடன் வெறித்துவிட்டு சவுந்தரி பக்கம் திரும்பினாள்.

''அண்ணி! நான் போய்விட்டுவரேன். நம்ப வேலைக் காரி லீனா உங்களைக் கவனிச்சுக்க ஏற்பாடு பண்ணி யிருக்கேன். மருந்துகளை மறக்காம சாப்பிடுங்கோ. ஏதாச்சும்னா உடனே போன் பண்ணுங்கோ. லீவு போட்டுட்டு ஓடி வந்திடுவேன், வரட்டுமா?''

சின்னவளின் முகத்தைக் கூடப் பாராது விடைபெற்றுக் கொண்டு, பெட்டி, கூடை இவைகளைத் தானே தூக்கி எடுத்துக்கொண்டு தயாராகக் காராஜில் நின்ற கவர்மெண்ட் காரின் டிக்கியில் வைத்து மூடினாள்.

முன் கண்ணாடியில் படிந்திருந்த பனி மூட்டத்தைத் துடைத்துச் சரிசெய்து விட்டுக் காரில் ஏறி உட்கார்ந்து வேகமாக அதைக் கிளப்பினாள்.

நெடுஞ்சாலைக்குள் புகுந்ததும் ஒரு ஓரமாகக் காரை நிறுத்தினாள். அவளுக்கு லேடீஸ் ஸ்மித்திற்குப் போகவே விருப்பமில்லை.

அங்கே மோகனைச் சந்திக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வேதனையாக நெஞ்சை நொறுக்கியது. கருணை கடுகளவுமில்லாத யசோதாவிடம் இருதய நோயில் வேதனைப்படும் பெரிய அண்ணியை விட்டுப் போகிறோமே என்கிற துயரத் தவிப்பும் சேர்ந்துகொள்ளவே, அவள் ஸ்டியரிங் மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு குமுறி அழுதாள்.

2

''ஹலோ!'' அதிகாரத் தோரணையில் மிடுக்காக அழைத்த ஆணின் குரலைக்கேட்டு அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். விர் விர் என்று நெடுஞ்சாலையில் விரைந்த கார்கள் எழுப்பிய ஓசையில் அந்த மோட்டார் சைக்கிள் அருகே ஊர்ந்து வந்து நின்றது அவளுக்குக் கேட்கவில்லை.

வெளிர் நீல ஷர்ட்டும்-கருநீல அரைக்கால் பாண்டுமான சீருடையில் பளிச்சென்று மோட்டார் சைக்கிள் மீது உட்கார்ந்திருந்த அந்த வெள்ளைக்காரப் போக்குவரத்துப் போலீஸ்காரரின் நீலக் கண்கள் சிரித்தன.

''ஏதாவது உதவி தேவையா நர்ஸ்'' அதிகாரத் தோரணையும் அனுசரணையும் கலந்த மிடுக்கான குரலில் கேட்டபடி புன்முறுவலித்தார்.

''தாங்க்யூ ஆபீசர். ஒன்றும் தேவையில்லை'' என்று முணுமுணுத்த காவேரி சட்டென்று தன்னைச் சமாளித்துக்

கொண்டாள். கைக்குட்டையால் அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

'ஸ்கூல் மெடிக்கல் இன்ஸ்பெக்ஷனுக்குத் தானே கிளம்பியிருக்கீங்க? வெகு தூரம் போகணுமா?'' அவளது தோள் பட்டையில் தெரிந்த பிளாஸ்டிக் பட்டையைப் பார்த்தபடி கேட்டார்.

''லேடீஸ் ஸ்மித்வரை போகணும்.''

''நேற்று இரவு மூய் ரிவர் அருகே நல்ல மழை பெய்திருக்கு. டிராகன்ஸ்பர்க் மலை பனியால் மூடப்பட்டுக் கிடக்கு. சாலையில் நிதானமாகப் பார்த்து வண்டியை ஓட்டிக் கொண்டு போங்க!'' எச்சரித்தார் அதிகாரி.

''சாலை விபத்துக்களுக்கு என்று தனிப்பட்ட முறையில் கணிசமானதொரு தொகைக்கு நான் இன்ஷ்யூர் செய்து கொண்டிருக்கிறேன் ஆபீசர்! கவலைப்படாதீங்க!'' புன்னகைத்தபடி அவள் வண்டியைக் கிளப்பினாள்.

''உங்கள் குடும்பத்திற்கு அந்தப் பணம் பெருத்த அளவில் உதவலாம். அதற்காக நம் அரசு ஒரு துடிதுடிப்பான இளம் பெண் நர்ஸை இழக்க மனம் ஒப்புமா? விஷ் யூ எ வெரி பிளசண்ட் ஜர்னி பை...பை...'' என்று கையசைத்து விட்டுக் கனவேகமாக நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்த கிளைச் சாலைக்குள் புகுந்து மறைந்து போனார் போலீஸ்காரர்.

சிறிது தூரம் ஓட்டிய பின்னர்தான் அவளுக்கு அந்த எண்ணம் மனதில் தோன்றியது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஹைவே வழியாகப் போகாது, நேட்டாலின் தலைநகரான மாரிட்ஸ்பர்க்கிற்குப் போகும் பழைய சாலை வழியாகப் போனால்... மறுபடி ஒரு முறை அந்த அற்புதக் காட்சியை ஒரு சில நிமிடங்கள் பார்க்க வாய்ப்பு ஏற்படுமே!

வார இறுதியில் திரும்பி வந்ததும், நர்ஸ்களின் தலைவி, அந்த வெள்ளைக்காரி, கார் ஓடிய தூரத்தின் விவரம் குறிக்கப்பட்டிருக்கும் லாக் புக்கை வாங்கிப் பார்ப்பாளே. அந்த கவர்மெண்ட் கார் எத்தனை கிலோ மீட்டர் அந்த வாரம் ஓடியிருக்கிறது என்று கணக்கிடுவாளே. அவளுக்கு நேட்டால் சாலைகள் எல்லாம் மனப்பாடம். 'நேர்வழியாகப் போகாது குறுக்குச் சாலை வழியே போனால், பின்னர் ஏன் இந்த அதிகப்படியான கிலோ மீட்டரை உன் கார் காட்டுகிறது?' என்று எல்லோர் முன்னாலும் கேட்டு அவமானப் படுத்துவாள்.

மேல் அதிகாரிக்கு அந்தச் சில கிலோ மீட்டர் எதனால் அதிகமாகியது என்பதற்குக் காரணம் காட்டி ஒரு கடிதம் எழுதித் தொலைக்கவேண்டுமே! பிக்கல் பிடுங்கல் நிறைந்த தொரு தொல்லையான வேலையாச்சே அவளுடையது!

ஆனாலும் இறந்து போன பெரிய அண்ணனின் நினைவு நெஞ்சைப் பாறாங்கல்லாக அமுக்குவதை உணர்ந்தாள்.

கடைசி முறையாகப், பெரிய அண்ணன், அண்ணி இருவருடன் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை அங்கே போய் அந்த அற்புதக் காட்சியைப் பார்த்து ரசித்துச் சிரித்து மகிழ்ந்த நினைவு மனதை வருடவே, அவள் துணிவுடன் காரை அந்தச் சாலையின் பக்கம் திருப்பினாள்!

நேட்டால் ராஜதானிக்கே தனிச் சிறப்பைத் தரும், சுற்றுலாப் பயணிகள் வந்து பார்த்து மகிழும் 'தி வாலி ஆஃப் தவுசண்ட் ஹில்ஸ்' என்பதை மீண்டும் ஒருமுறை பார்க்காது போனால்... பள்ளிக்கூடத்தில் வேலை ஓடாது போன்றதொரு இறுக்க உணர்வு ஏற்பட்டிருந்தது.

பெரிய அண்ணன் இறந்து போவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் அவர்கள் மூவரும் அங்கே வந்திருந்தனர்.

வெகு தொலைவு பயணம் போல், அண்ணி சவுந்தரி விஜிடபிள் பிரியாணியுடன் தயிர்ப்பச்சடியும் எடுத்து வந்திருந்தாள்.

''பார்த்தியா உங்க அண்ணி வேலையை. கேப்டவுனுக்கு நாம புறப்பட்டாப்பல சோத்து மூட்டையோட வந்துட்டாங்க. இதோ கொஞ்ச தூரத்திலே மாரிட்ஸ்பர்க் இருக்கு. அங்கே என் மாமன் மகன் வீடு இருக்கு. அத்தை என்னைக் கண்டதும் கூடா மீன் குழம்பு வச்சி, கறி கபாப் பண்ணிட மாட்டாங்களா?'' பெரிய அண்ணன் கலகலவென்று சிரித்த நினைவை நெஞ்சினின்று உதறமுடியவில்லை அவளால்.

அண்ணி சவுந்தரியும் அவளும் மட்டுந்தான் அந்த வீட்டில் சைவ உணவுக்காரர்கள். மற்றவர்கள் அசைவ உணவு உட்கொள்கிறவர்கள். அத்துடன் அண்ணன்மார்கள் இருவருக்கும் குடிப்பழக்கமும் உண்டு. பெரிய அண்ணன் ஓய்வு நாட்களில் மட்டும்தான் குடிப்பார். சின்ன அண்ணன் வேலையில் போதும் சரி, வீட்டில் இருக்கும்போதும் சரி, கொஞ்சம் தாகத்துக்குப் போட்டுக் கொள்ளும் வழக்கம் உடையவர்.

காரை நிறுத்திவிட்டுக் காவேரி இறங்கினாள். சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழ, பள்ளத்தாக்கை நன்றாக பார்க்குமிடத்தில் பலத்த இரும்புக் கம்பித் தடுப்புப்போட்டு வைத்திருந்தார்கள் சுற்றுலா அலுவலகத்தார். கம்பிக் கைப்பிடி மீது சாய்ந்தபடி கீழே கிடுகிடுபள்ளமாகத் தெரிந்த அந்தப் பள்ளத்தாக்கைப் பார்த்துப் பரவசமடையாப் பயணிகள் யாருமே இருக்க முடியாது.

பச்சைப் போர்வையணிந்ததுபோல ஒன்றன் அருகே ஒன்றாக எழுந்து குவியலாகக் காணப்படும் ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறு குன்றுகளும் அந்தப் பசிய போர்வையிலே சிதறிக் கிடக்கும் ரத்தினச் சுடர்கள்போல் சிவந்த பூக்களைத் தாங்கி நிற்கும் கல்யாண முருங்கை மரங்களும் அவைகள்

னிடையே சூரிய ஒளியில் வெள்ளிக்கோடு போல நெளிந்து ஓடிக் கடலுடன் கலக்க அவசரப்படும் அம்கேனி ஆற்றின் அழகுத் தோற்றமும்... பார்க்கக் கண்களுக்குப் பெரும் விருந்து என்பதில் சந்தேகமில்லை.

பைனாகுலரை வைத்துப் பார்த்துக் கொண்டே நின்ற அவளிடம் அண்ணா ஐஸ்கிரீம் கோன் ஒன்றை அருகிலிருந்த கடையில் வாங்கிக் கொண்டு வந்து நீட்டினார். அதை அவள் நாவால் வழித்துச் சுவைத்துக்கொண்டு நிற்கையில் ஐஸ்கிரீம் உருகி முழங்கைவரை ஓட அதைக்கண்ட அண்ணி சிரித்தாள்.

''சரியான குழந்தை நீ இன்னமும்'' என்று அன்புடன் கடிந்தபடி தன் கைக்குட்டையால் துடைத்துவிட்டாள்.

''சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவள் நம் குழந்தைதானே சவுந்தரி.''

''இந்தக் குழந்தையைச் சீக்கிரம் கல்யாணம் செய்து வச்சு, அவள் குழந்தையை நான் என் மடிமேல் வச்சுக் கொஞ்சணும்னு ஆசைப்படுகிறேன். நேத்துக்கூட மோகனைப் பார்த்தேன்....''பொருள்பட அண்ணன் பேசியதும் அவள் நெஞ்சு இன்பத்தில் துடித்தது. முகம் சிவந்து போனாள்.

''அதோ பாருங்க. அம்கேனி ஆறு எத்தனை அழகா இருக்கு...'' பேச்சை வேறு திசையில் திருப்ப முயன்றாள்.

மோகனுக்கும் அவளுக்கும் நடக்க இருந்த கல்யாணம் நின்று போனது என்பதை அறியாமலே பெரிய அண்ணன் இறந்து போனது ஒரு வகையில் நல்லதுதான். அவரால் அந்த அவமானத்தை-அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொண்டிருக்க இயலுமா?

ஆயிரம் குன்றுகளைப் பார்த்துவிட்டு அவர்கள் திரும்பிய அன்று இரவே அண்ணனுக்குத் தாங்க முடியாத வயிற்றுவலி வந்து, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பல பிரபல வைத்தியர்கள் கவனித்தும் அ
இறந்து போனார். அக்யூட் ஹெமராஜிக் பா
யாட்டைட்டிஸ் என்றார்கள் வைத்தியர்கள். விதி எ
எதிர் வீட்டுப் பாட்டி. பேரிழப்பு என்றார்கள் அ
நண்பர்கள்.

பெரிய அண்ணனை அழுத்தமாக நினைவுறுத்திய அ
ஆயிரம் குன்றுப் பள்ளத்தாக்கைப் பார்க்க அவள் கைப்
மீது சாய்ந்து கொண்டாள்.

''அப்பப்பா என்ன குளிர்! ஊசிபோல முகத்
குத்துகிறதே'' என்று முனகியபடி தனது கம்பளிக் கோட்
இழுத்து மூடிக்கொண்டு கைகளைப் பின்னியபடி நின்றா

கீழ்வானம் லேசாகச் சிவக்கத் தொடங்கிவிட்டிருந்
குளிர்காலமானதால் பசிய போர்வைக்கு மேல் குன்று
வெள்ளைப் பனிப்படலம் மூடிக் கொண்டிருந்தது. இ
மங்கும் அதையும் மீறிக் கல்யாண முருங்கையின் சி
பூக்கள் சில எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

''டிசம்பர் மாதத்திலே சூரியன் பளிச்சென்று புறப்
காலை வேளையிலே வந்து பார்த்தால் இது
கோலாகலமான காட்சி. இப்போ பள்ளத்தாக்கு ப
போர்வையிலே தூங்கிகிட்டு இருக்கே... ஆமாம், எ
போறாப்பல?....'' கேட்டபடி மிக அருகில் வந்து கைப்
மீது சாய்ந்துகொண்டு நின்றான் தாமோதரன்.

காவேரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவன் இ
காலை வேளையில் இங்கே எப்படி?

அவள் மனதினுள் எழுந்த கேள்விக்கு உடனே அ
பதில் தந்து விட்டான்.

''ஜுபுலானா என்கிற கல்லூரி மாணவனு
பயங்கரவாதி என்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை வ

யிருக்காங்க இல்லையா? அவனை பிரிட்டோரியா ஜெயிலில் பார்த்து, அப்பீல் செய்யப் போகிறோம். அவசரப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொல்லிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

குளிருக்கு அடக்கமாகத் தாடைவரை எட்டிய கழுத்து வைத்த கம்பளிச் சட்டைக்குள் அவன் முன்னைவிடப் பருமனாகத் தோன்றினான்

''அப்படி ஒண்ணும் பார்க்க வேணாம். நான் எப்போதும் போல ஒரே சீரான உடல் எடையில்தான் இருக்கேன். கம்பளிச் சட்டையில் குண்டாகத் தெரிகிறேன். மற்றப்படி அதே தாமோதரன்தான்'' சிரித்தான்.

பளிச்சென்று அவனது முகத்தில் களையிட்ட அந்தச் சிரிப்பை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். பல்வேறு கலவை உணர்வுகளால் அவள் மனம் கொந்தளித்தது.

''இந்தத் தங்க நிறக் கைகள் பக்கத்திலே என் கைகளைப் பார். எத்தனை கருப்பு! பிரிட்டோரியா குளிரில் முன்னைவிட நான் கருத்துப் போனேன். கவனிச்சியா?'' கலகலவென்று சிரித்தான் தாமோதரன்.

நிறம் கருப்பானாலும் கம்பீரமான தோற்றம். களையான முகம், கனிவு நிறைந்த கண்கள், கூர் மூக்கின் கீழ் அழகான கட்டை மீசை, வரிசையான பற்கள். எல்லாவற்றையும் விடப் பிரபலமானதொரு வழக்கறிஞர். எஸ்டேட் ஏஜன்சி நடத்தி, பணத்தில் புரள்கிறவன் என்கிற தகுதி. அவனை மணந்துகொள்ள அந்த ஊரில் பெண்கள் பலர் ஆவலுடன் கியூவில் நிற்பார்களே!

''நமக்குள் கருப்பு-வெள்ளைன்னு வித்தியாசம் பாராட்டுகிற மனப்பான்மை இருக்கும்போது வெள்ளைக் காரர்கள் நிற பேதம் காட்டுகிறார்கள் என்று அவர்களை நாம்

சாட என்ன உரிமை இருக்கு!...'' சொல்லிக்கொண்
சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்

''உனக்காகக் குடிப்பதை விட்டு விட்டேன்.
மாமிசம் சாப்பிடுவதைக்கூட நிறுத்தி விட்டிருந்தேன்.
என்ன பயன்? உன் சின்ன அண்ணிக்கும், அண்ணனுக்
ஏன் பெரியவருக்குக்கூட என் நிறம் பிடிக்காமல் போயி
மோகனைப் போலக் கோதுமை நிறத்தில் உ
மாப்பிள்ளை தேட ஆசைப்பட்டார்கள்.''

கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக்கொண்டு கோப
அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''உண்மை அதுவல்ல என்பது உங்களுக்கே தெரி
மிஸ்டர் தாமோதரன். காலை வேளையில் தொலை
வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும்போது என்
வம்புச் சண்டை இழுக்கிறீங்க... இல்லையா?''

''ஏதோ ஒரு காரணம். அதை விட்டுத் தள்ளு.
தூரம் நீ போக வேண்டியிருக்கும். நேர்சாலையில் போ
இப்படி இந்த வழி வந்ததுக்கு ஈடுகட்ட நீ ஏதா
வழிசெய்து லாக் புக் எழுதணும். கொஞ்சம் இரு'' எ
கையமர்த்தினான். அருகிலிருந்த கடையில் ஒரு பெ
சாக்லெட் கட்டியை வாங்கிக் கொண்டு வந்து அவள்
நீட்டினான். ''ஆல்பேனி சாக்லெட் உனக்குப் பிடி
என்பதை நான் மறக்கலை. அதில் உள்ளது போலக் கசப்
இனிப்பும் நிறைந்ததுதான் வாழ்க்கை. சிலருக்கு
இனிப்பாக வாழ்க்கை அமைந்து விடுகிறது. சிலருக்கு
முடிக்காது அவளிடம் அதைக் கொடுத்தான். ''வழி
தூக்கம் வந்தால் ஒரு விள்ளலை ஒடிச்சு வா
போட்டுக்கொண்டு மென்று தின்றபடி வண்டியை ஓ
தூக்கம் கலைஞ்சு போயிடும்.''

''தாங்க்யூ மிஸ்டர் தாமோதரன்''. அதை அவள் பெற்றுக் கொண்டாள். ''எனக்கு இந்த மிஸ்டர் பிடிக்காது. நீ எப்பொழுதும் என்னைத் தாமு என்று நட்புரிமையோட கூப்பிடலாம்னு சொல்லியிருக்கேனே..ப்ளீஸ்...?'' என்றான்.

துயரமும் வெட்கமும் நெஞ்சை நொறுக்க, அவள் மௌனமாக முறுவலித்தாள்.

''உங்க அம்மா இறந்தபோது என்னால் சாவுக்கு வர முடியலை. புரிஞ்சுக்குவீங்கன்னு நினைக்கிறேன் தாமு?''

''அரசியல் கோதாவிலே குதிச்சிருக்கிற என்னை, சதா சி.ஐ.டி. கண்காணிச்சிட்டிருக்காங்க. அரசு ஊழியரான நீ என் வீட்டுக்கு வரது சாத்தியப்படாது. புரிகிறது. மேலும் சாவுக்கோ வாழ்வுக்கோ பெருத்த கூட்டம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்யறது எனக்குப் பிடிக்காது. அம்மாவை அமைதியாக அனுப்பி வைத்து விட்டேன்.'' மெல்லியதாகச் சிரித்தான் அவன்.

''அம்மாவுக்குப் பிறகு வீட்டை?...''

''அம்மாவை ஆர்ப்பாட்டமில்லாமல் அனுப்பிவச்சது போல் சத்தம் போடாம ஒரு பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டேன்னு நினைச்சா அது தப்பு. ஒரே ஒருத்தியைத்தான் நான் விரும்பினேன். அது வீணாகிப் போச்சு. வீட்டை என் ஆப்பிரிக்க வேலையாள் பார்த்துக்கிறான். சமையல் கூட அவன்தான்.''

காது மடல்கள் சூடாக உடம்பு குறுகிப்போன உணர்வில் அவள் ஒரு கணம் ஆடிப்போனாள்.

''நான் கிளம்பணும். நேரமாகிறது. சாக்லெட்டுக்கு நன்றி.'' அவனை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி, வேகமாகத் திரும்பிக் காரில் ஏறிக்கொண்டு விரைவில் கிளம்பினாள்.

தாமோதரன் அவளை நேசித்தான். திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். துணிந்து அவளது அண்ணனிடம்

கேட்டான். அண்ணன்களுக்குத் தாமோதரனின் அரசி
கொள்கைகள் பிடிக்கவில்லை. மறுத்தனர்.

அவளுக்கு?

மோகனது மோகன உருவத்தில் பெரிய ஈர்ப்பு இருந்து
மறுத்துவிட்டாள்.

ஆனால் மோகன்? அவள் மனதை எப்படி உடைத்
விட்டான்?

கிர்ரென்று வண்டியை ஓட்டிக்கொண்டு போனவ
சடக்கென்று ஒரு ஓரமாக ஒடித்தாள்...

''ப்ளடி ஃபூல்!'' என்று வேகமாக அவள் கார் மீ
உராயும் வண்ணம் வண்டியை ஓட்டிய ஒரு வெள்ளைக்கார
அவளைப் பார்த்து உறுமியபோது அவள் கைகளும் கால்களு
நடுங்கின. ஒரு பெரும் விபத்திலிருந்து மயிரி
இடைவெளியில் தப்பியிருக்கிறாளே!

மோகனைப் பற்றிச் சிந்திக்காது தன் வேலையை
பற்றிய நினைப்போடு இனி எச்சரிக்கையாக வண்டியை ஓட்
வேண்டும் எனத் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்
மேலே வண்டியை ஓட்டிக்கொண்டு போனாள்.

3

இத்தாலிய இன்ஜீனியர்களால் உருவாக்கப்பட்ட அந்
புதிய நெடுஞ்சாலை, மலைச்சரிவின் மீது அகன்ற நீண்ட
தொரு கோடுபோலக் கண்களுக்கெட்டிய தூரம்வரை ஓடி
கொண்டிருந்தது. பனிப்படலத்தை விரட்டி விட்டு வீ
தொடங்கிய சூரிய ஒளியில் மூன்று பகுதிகளாகப் பிரிக்

பட்டிருந்த சாலையில் வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக விரைந்து கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. எதிர்ப்புற மாக வரும் வாகனங்களுக்கு வேறு வழி அமைக்கப்பட்டிருந்த தால் போக்குவரத்தில் நெரிசலுக்கிட மிருக்கவில்லை. விபத்துக்களுக்கும் வாய்ப்பு அதிகமில்லை.

சாலையின் நடுப்பகுதியில் நிதானமான வேகத்தில் வண்டியைக் காவேரி ஓட்டிக்கொண்டு சென்றாள். பொழுது நன்றாக விடிந்து, பூமி சூரியனின் பொன் ஒளியில் மூழ்கிக் கிடந்தது. குளிர் காலத்து வெய்யிலை அவள் எப்பொழுதுமே வரவேற்பது வழக்கம். பச்சிளங் குழந்தை தன் பிஞ்சு விரல்களால் மெல்ல வருடுவது போலச் சூரியனின் வெப்பம் அவளது முகத்தைத் தடவியது மனதிற்கு இதமாக இருந்தது. கண்களை இருபுறமும் ஓடவிட்டபடி அவள் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

நேட்டால் மாநிலத்தை 'தி கார்டன் காலனி ஆஃப் சௌத் ஆப்பிரிக்கா' என்று செல்லப் பெயரிட்டு அழைப்பதற்கு அர்த்தமில்லாது போகவில்லை. எத்தனை ஒரு அழகான இயற்கைக் காட்சி!... தனக்குள்ளே அவள் முணு முணுத்தபடி கண்களால் அதைப் பருகுவதுபோல ஆவலுடன் இரு பக்கமும் பார்த்துக் கொண்டே வண்டியை ஒரே நிதானத்தில் ஓட்டிக்கொண்டு போனாள்.

மஞ்சள் பூக்கள் குலுங்கிய வாட்டல் மரங்கள் சாலைக்கருகே அணிசெய்ய, இடையிடையே ஊதாப் பூப்பாவாடை விரித்த ஜகராண்டா மரங்கள் எழிலுடன் காற்றுக்குத் தலையசைத்துக் கொண்டிருந்தன. அவைகளைத் தாண்டிப் பசிய வயல்கள். அதற்குப் பின்னால் வானத்தை முத்தமிட்டபடி ஓடிய நீல மலைத்தொடர். பார்க்கத் திகட்டாத ஓர் எழில் மிக்க காட்சி. வண்டியை ஓட்ட அலுப்பே தெரியாதபடி உற்சாகமூட்டும் சூழ்நிலை.

இத்தனை இருந்தும் மனதில் பூரண மன நிம்மதியின்றி உணர்வுகள் தொய்ய அவள் பயணப்பட வேண்டியிருந்தது ஒரு துர்ப்பாக்கியமே. பெருமூச்செறிந்தாள் காவேரி.

சிறிது தூரத்தில் சாலை ஓரத்தில் மரங்களுக்கிடையில் புதராக மண்டிக் கிடந்த அசேலியா செடிகளில் சிரித்துக் கொண்டிருந்த வெள்ளை மலர்களைக் கண்டதும் சங்கிலித் தொடராகத் தாமோதரனைப் பற்றிய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக உள்ளத்தில் எழுவதை உணர்ந்தாள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் -முதல் முதலாக அவனைச் சந்திக்க நேர்ந்த அந்த நிகழ்ச்சி-அப்பொழுதுதான் நடந்தது போல எத்தனை தெளிவாக நினைவில் எழுந்தது!

★ ★ ★

அந்த வாரம் அவள் சாட்ஸ்வொர்த் எனும் பகுதியிலிருந்த ஒரு இந்தியப் பள்ளிக்கூடத்திற்கு மெடிகல் இன்ஸ்பெக்ஷனுக்குச் செல்ல வேண்டியிருந்தது. பள்ளிக் குழந்தைகளைப் பரிசோதிக்க டாக்டர் வருமுன் நர்ஸ்கள் பரிசோதனைக்கு ஒரு அறையைத் தயார் செய்து மாணவ மாணவிகளை வகுப்புவாரியாகப் பிரித்து வரிசைப்படுத்தி வைக்க வேண்டும். அவளுடன் கூட வந்த நர்ஸ் நளினா பரிசோதனை அறையைத் தயாராக வைத்து விட்டிருந்தாள்.

காலைப் பிரார்த்தனை முடிந்ததும் பள்ளிப் பிள்ளைகளை வகுப்புகளுக்கு அனுப்பிவிட்டுத் தமது அறைக்குத் திரும்பிய பிரின்ஸ்பால், தம் வரவுக்காக, மெடிகல் இன்ஸ்பெக்ஷன் பற்றி ஏதோ பேச அவள் காத்திருப்பதைக் கண்டார். உட்கார் சொல்லி உபசரித்தபடி, காவேரி வாயைத் திறக்குமுன், திறந்து கிடந்த அறைக் கதவை யாரோ விரலால் தட்டுவது கேட்டது. ''நான் வரலாமா?''- கனத்த ஆனால் காதுகளை மென்மை

யாகத் தழுவும் குரலோடு, ஷேவிங்லோஷனின் மணம் குப்பென்று அறைக்குள் வந்து மோதியது.

''வரலாம்,'' பள்ளிக்கூடத் தலைவர் பதிலளித்து முடிப்பதற்குள் புயலாக உள்ளே வந்து நின்ற உயரமான, வெளிர் நீல ஸபாரி ஸூட்டுக்காரனை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். நாளேட்டுத் தாள் ஒன்றில் சுற்றி அவன் கையில் பிடித்திருந்த பொட்டலத்திலிருந்து வெள்ளை அசேலியா மலர்க் கொத்தொன்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

''உன் பள்ளிக்கூடத்தில் வெள்ளை அசேலியாச் செடி இல்லை என்று வருத்தப்பட்டாய் இல்லையா? மாரிட்ஸ் பார்க்குக்கு கேஸ் விஷயமா போயிருந்தேன். வழியில் என் மாமன் வீட்டில் டீ சாப்பிட போயிருந்தேன். வழியில் அசேலியாச் செடிகளிலிருந்து ஒண்ணை உனக்காக வேரோட பிடுங்கிப் பத்திரமா எடுத்திட்டு வந்திருக்கேன். உடனடியா தோட்டக் காரனிடம் கொடுத்து நடச்சொல்!'' சிரித்தபடி, பிரின்ஸ்பால் காட்டிய ஆசனத்தில் அமர்ந்து கொண்டான் அவன்.

''தாமு! இவங்க நம்ம ஸ்கூலை இன்ஸ்பெக்ட் பண்ண வந்திருக்கிற மெடிகல் டீமைச் சேர்ந்த நர்ஸ்- மிஸ் காவேரி, இவர் மிஸ்டர் தாமோதரன். கேள்விப்பட்டிருப்பீங்க. விக்டோரியா தெருவில் பெரிய ஆபீஸ் வைத்துத் தன் கீழ் ஜூனியர் இரண்டு பேரோட சக்கைப் போடு போடும் பிரபல வக்கீல் தாமோதரன்...'' அறிமுகம் செய்து வைத்தார் பிரின்ஸ்பால்.

''கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இன்றுதான் சந்திக்கிறேன்.'' முறுவலித்தாள் காவேரி.

''உங்கள் பேரையும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்பத்தான் நேரில் பார்க்கிறேன்.'' சிரித்தான் உரத்த குரலில் தாமோதரன்.

...ட்டது அவளுக்கு. பள்ளிக்கூடக் ...மைப்பில் வேலை பார்க்கும் பல நர்ஸ்களில் அவளும் ஒருத்தி. அதைத் தவிர அவள் அப்படி ஒன்றும் பிரபலமானவள் இல்லையே?- குழப்பத்துடன் விழித்தாள்.

''பயந்து போய் விட்டீர்களா? எங்கம்மா போனவருஷம் தாய் நாட்டுக்குப் போய்க் கோவில் குளமெல்லாம் சுத்திப் பார்த்துட்டு வந்தாங்க. அங்கே அகண்ட காவேரியிலே பல தடவை தலைமுழுகிப் புண்ணியத்தைச் சேகரித்துக் கொண்டாங்களாம். அக்கரையே தெரியாத அளவுக்கு அந்த ஆறு அத்தனை கம்பீரமாக ஓடுதாம். அடிக்கடி சொல்வாங்க. அதனால் காவேரி என்கிற பெயரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். இப்போ ஒரு நர்ஸ் உருவிலே பார்க்கிறேன்.'' மறுபடியும் அவன் சிரித்தபோது காவேரியும் கூடவே சிரித்துவிட்டாள்.

'சரியான வாயாடி மனிதன்! வக்கீலாச்சே, வாய்ப் பேச்சுக்குப் பஞ்சம் இருக்குமா?'... எண்ணியபடி தனக்குள்ளே முறுவலித்துக்கொண்டாள்.

''சரி, நீங்கள் எல்லோரும் ரொம்ப வேலையா இருக்கீங்க. நான் உங்கள் நேரத்தைப் பாழாக்கக்கூடாது. பிறகு சந்திப்போம்'' கூறிவிட்டுச் செடிப் பொட்டலத்தை மேஜை மீது வைத்துவிட்டு அவன் வெளியே விரைந்து விட்டான்.

★ ★ ★

தாமோதரனை அவள் மறுபடியும் எதிர்பாராதவிதமாகச் சில தினங்களுக்குப் பின்னர் மீண்டும் சந்தித்தாள்.

அன்று மாலை அம்கேனி வைத்தியநாதர் ஆலயத்திற்குள் ஒரு பக்கம் குடிகொண்டிருக்கும் விஷ்ணு பகவானுக்குப் புரட்டாசிச் சனிக்கிழமை முதல்வாரப் பூஜை அமர்க்களப்

பட்டுக் கொண்டிருந்தது. சவுந்தரி அண்ணிக்குக் கோவிலில் நடக்கும் விழா, பூஜைகள் முதலியவற்றில் ஈடுபாடு அதிகம். பஜனைக் கூட்டங்களில் கலந்து பங்கேற்றுக் கொள்வது வழக்கம்.

''தலை முழுகிட்டு அழகா காஞ்சிபுரம் சேலையைக் கட்டிக்கொண்டு நெற்றியில் பொட்டு வச்சுக்கிட்டு, தமிழ்ப் பெண்ணா லட்சணமா கோவிலுக்கு வா..'' காவேரியை வற்புறுத்தி அழைத்துப் போவாள் அண்ணி.

அந்தப் புரட்டாசிச் சனிக்கிழமை அவர்கள் வீட்டு உபயமாக விஷ்ணு பகவானுக்குப் பூஜை நடந்தது. தன் கையால் கட்டிய மாலையைச் சவுந்தரி அண்ணி காரின் டிக்கியில் வைத்துவிட்டிருந்தாள். ''போய் மாலையைத் தட்டில் வச்சிஎடுத்துட்டு ஓடிவா, நேரமாச்சு, பூஜை ஆரம்பிக்கப் போறாங்க.'' அண்ணி காவேரியை விரட்டினாள்.

கோயிலுக்கு வெளியே தெருவில் ஓரத்தில் நூற்றுக் கணக்கான கார்கள் நின்று கொண்டிருந்தன. தங்கள் வீட்டு காரைத் தேடி மேலும் கீழும் அலைந்துவிட்டு முடிவில் கண்டுபிடித்து அவசரமாக டிக்கியைத் திறந்து மாலையை வைத்திருந்த தட்டைத் தூக்கிக்கொண்டு டிக்கியைப் பூட்டிக் கொண்டிருந்தாள் காவேரி. ''ஹலோ!'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''கோவிலில் கூட்டம் அதிகமோ?'' தன் டொயோட்டா விலே டிரைவர் ஆசனத்திலிருந்தபடியே கேட்டான் தாமோதரன்.

அவள் பதில் சொல்லத் தயங்குவதைக் கண்டு ''என்னைத் தெரியலையா? விக்டோரியா ஸ்ட்ரீட்... அட்வகேட் தாமோதரன். இப்ப நினைவுக்கு வருதா?... கேட்டபடி மெல்லச் சிரித்தான்.

''நல்ல கூட்டம். நீங்க ஏன் இன்னமும் இங்கே உட்கார்ந்திருக்கீங்க? இடம் கிடைக்காம வெளியே நிக்கவேண்டி வரும்.'' என்றாள்.

''நீங்க பஜனையில் பாடுவீங்கன்னா ஒரு சமயம் உள்ளே வந்து எட்டிப் பார்ப்பேன். இல்லாட்டா நான் கோவிலுக்கு வர பழக்கம் கிடையாது. எங்க அம்மாதான் உலகத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஒருங்கே சேர்த்துப் பிரார்த்தனை செய்ய உள்ளே போயிருக்காங்களே!''

''நீங்க ஒரு நாத்திகரா?... கம்யூனிஸ்ட்டா?...''

''பொது உடைமைக் கொள்கை அல்லது நாத்திகம் என்றதுமே பாப்பா பாம்பைப் பார்த்துட்டாப்பல அத்தனை திகிலோட என்னைப் பார்க்கிறீங்களே? நான் ஒரு தீவிர கம்யூனிஸ்ட்டாக் இருந்தா போலீஸ் என்னைக் கோயில் வாசலில் காரில் உட்கார வச்சிருக்குமா? இத்தனை நேரம் என்னைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் உட்கார வச்சிருப்பாங்களே. நாத்திகம் பேசினால் இந்திய சமூகம் என்னை ஏதோ அசிங்கம் பிடித்த வியாதிக்காரனைப் பார்ப்பது போல் வெறிக்கும். எனக்குன்னு ஒரு கொள்கை உண்டு. அதை நீங்க எந்த நோக்கில் எடுத்துக் கொண்டாலும் நான் மறுப்புத் தெரிவிக்கமாட்டேன்.''

''நீங்க ரொம்ப வேடிக்கையா பேசறீங்க. உங்களைச் சட்டுனுபுரிஞ்சுக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.'' காலோடு தலைவரை தன்னை அவனது காந்தக் கண்கள் ஊடுருவுவதை உணர்ந்தபோது அவளால் மேலே பேச முடியவில்லை.

''என் பசிக்கு ஒரு உருண்டைச் சோறு தர முடியாத இறைவன் எனக்குச் சொர்க்கத்தைத் தருவான் என்கிற நம்பிக்கை துளியும் இல்லை. இதை நான் சொல்லவில்லை. விவேகானந்தரே இப்படிச் சொல்லியிருக்கிறார். அவர் போதனைகளில் எனக்கு ஈர்ப்பு உண்டு, அவ்வளவுதான். நம்

நாட்டில் கவனிக்க வேண்டிய எத்தனையோ முக்கிய பிரச்சனைகள் இருக்கும்போது, பாடி-தாளம் போட்டுக் கொண்டு பஜனை செய்து கொண்டிருக்க எனக்குப் பொறுமை இல்லை.''

''உங்க அம்மாவுக்காக இப்படிக் காரில் உட்கார்ந்து கொண்டு காத்திருக்க உங்களுக்குப் பொறுமை இருக்கிறதா?''

''அது கடமை. பொறுத்துக் கொள்கிறேன்.''

''நேரமாச்சு-வரேன்'' அவள் விடை பெற்றுக் கொண்டு மாலை இருந்த தட்டுடன் கோவில் உள்ளே சென்று விட்டாள்.

பூஜை முடிந்தபின் கூட்டம் வெளிப்பட்ட போதுதான் அவன் கோவிலின் முக்கிய உறுப்பினரான சிவகாமி அம்மாளின் மகன் என்பது அவளுக்குத் தெரிந்தது.

சிவகாமி அம்மாளின் குடும்பம் கோவில் திருப்பணிக்கு ஆண்டாண்டு காலமாக எவ்வளவோ செய்திருக்கிறது என்பதை அந்த ஊரே அறியும். அந்தப் பரம்பரையில் வந்த தாமோதரனுக்கு இப்படி ஒரு விசித்திரமான கொள்கையா?

அவனைப் பின்னர் அவள் கல்யாண வீடுகளிலும், விருந்து வைபவங்களிலும், கடைத்தெருவிலும் பலமுறை சந்தித்திருந்தாள். 'ஹலோ!' என்பதைத் தவிர அதிகம் இருவரும் பேசிக் கொண்டதில்லை.

★ ★ ★

அந்த ஆண்டு நவராத்திரியின்போது நண்பர்கள் தெரிந்தவர்கள் என்று பலரைத் தங்கள் வீட்டில் கொண்டாடிய சரஸ்வதி பூஜைக்கு அழைத்திருந்தாள் சிவகாமி.

சவுந்தரி குடும்பத்தாரும் அதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தனர்.

நீச்சல் குளம்-பெரிய தோட்டம் இத்யாதியுடன் மிக அழகாகக் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த வீட்டைக் கண்டு காவேரி பிரமித்துப் போய்விட்டாள். முதல் பந்தியில் சாப்பிட இடம் இல்லாது போகவே அவள் அடுத்த பந்தியில் உட்காரக் காத்திருக்க வேண்டியிருந்தது. தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிட்டபடி முன் பக்கம் வந்து மதில் சுவர்மேல் பொருத்தப்பட்டிருந்த கம்பிமீது சாய்ந்து கொண்டு எதிரே சற்றுத் தொலைவில் மற்றொரு குன்றின் மீது பரவலாகக் கட்டப்பட்டிருந்த வெஸ்ட்வில் யுனிவர்சிட்டியை வேடிக்கை பார்த்தபடி நின்றாள்.

பலநூறு மின்விளக்குகளின் ஒளியில் பல்கலைக்கழகக் கட்டடம் அலங்காரமானதொரு பெரிய தேர் நிலையில் நின்று காட்சி தருவது போலக் கம்பீரமாக நிமிர்ந்து வானை நோக்கி நின்று கொண்டிருந்தது.

''இந்தியருக்கு இத்தனை பெரியதொரு தனிப்பல்கலைக் கழகமான்னு பிரமிப்புடன் பார்க்கறீங்க இல்லை?''-கரகரத்த குரலைக் கேட்டு வியப்புடன் திரும்பினாள் அவள்.

அருகில் தாமோதரன் வந்து நின்று கொண்டிருந்தான்.

''கூச்சலும் குழப்பமும் பிடிக்காமல் ஊரைச் சுற்றிவிட்டு வரேன். இன்னமும் அம்மா விருந்து வைபவங்களை முடிக்கலை போலிருக்குது'' பெருமூச்செறிந்தான் அவன்.

''இத்தனை பெரிய வீடு வச்சுக்கிட்டிருக்கீங்க-சௌகர்யமா வாழ்றீங்க. அழுத்தப்பட்ட மக்களுக்காக நீங்க பரிந்து பேசுவதும் அவர்களது ஏழ்மைக்காக அனுதாபப் படுவதும் கொஞ்சமும் பொருந்தவில்லையே?'' கொஞ்சம் துணிச்சலுடன் கேட்டு விட்டாள் அவள்.

''இந்த வீடு, இந்த ஆடம்பரமான வாழ்க்கை எல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் காலமான என் தந்தை எனக்கு விட்டுப் போயிருக்கும் சொத்து. நான் சம்பாதிக்கிறேன்,

அதை நான் எப்படிச் செலவழிக்கிறேன் என்பது என்னோடு நெருங்கி வாழ்கிறவங்களுக்குத்தான் தெரியும்.''

''ஒரு வக்கீலுடன் வாதாடிச் சமாளிப்பது சாத்தியப் படுமா?'' சிரித்தபடி அவள் விடைபெற்றுக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

★ ★ ★

சில நாட்களுக்குப் பின் அவன் அவளைத் தேடிக் கொண்டு அவர்கள் வீட்டுக்கு வந்தான்.

''இந்த டிப்பு ஷீனா செடி உங்களுக்குப் பிடிக்கிறதுன்னு அம்மா சொன்னாங்க... இன்னிக்கு உங்க பிறந்த நாள் இல்லையா... இது என் பரிசு...?'' சொல்லிக்கொண்டே ஒரு சிறு மண் தொட்டியில் நட்டிருந்த செடி ஒன்றை அவர்கள் வீட்டு வாயிலில் வைத்து விட்டுப் போய்விட்டான்.

பின்னர் சந்திப்புகள் தொடர்ந்தன. அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு ஏதோ ஒரு காரணம் சொல்லிக் கொண்டு வந்தான்.

ஒரு நாள். அவளுடன் தனியாக அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தபோது சொன்னான்:

''காவேரி! உன்னை நான் காதலிக்கிறேன். நீயும் என்னை விரும்புவதாகப் புரிகிறது. உன்னைக் கல்யாணம் செய்துக்கப் பிரியப்படுகிறேன். அம்மா வந்து முறைப்படி பெண் கேட்பார்கள்.''

திடுக்கிட்டுப் போனாள் காவேரி. அவனை அவளுக்குப் பிடித்திருந்தது. அதை வெறும் நட்பா- காதலா என்று அவள் புரிந்து கொள்ளுமுன் அவளது வாழ்க்கையில் மோகன் குறுக்கிட்டு அவள் மனதை ஈர்த்துக் கொண்டு விட்டிருந்தான்.

''ஐயோ! இதென்ன தொல்லை...' -அவள் குழப்பத்தில் தவித்துப் போனாள்.

முறைப்படி பெண் கேட்கச் சம்பிரதாயத்தை விட்டுக் கொடுக்காது சிவகாமி அம்மாள் சில சுமங்கலிப் பெண்களுடன் ஒரு நல்ல நாளில் வந்திருந்தாள்.

பெரிய அண்ணா அவளிடம் மரியாதையாகத்தான் பேசினார். ஆனால் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

தாமோதரனின் அரசியல் கொள்கைகள் தங்களுக்கு ஒத்துவராது. அதனால் பெண் தருவதற்கில்லை.

★ ★ ★

அதற்குப்பின் பள்ளிக்கூடத்தில் சந்தித்துக் காதல் கொண்ட பள்ளிஆசிரியர் மோகன் பெண் கேட்டபோது அண்ணா மகிழ்ச்சியுடன் ஒப்புதல் கொடுத்தார்.

நிச்சயதார்த்த வைபவம் நடக்கும் முன்னரே அண்ணா நோயுற்று இறந்து போனார். ஒரு ஆண்டு காலம் கழித்து லோகேந்திரன் தங்கை கல்யாணத்தை அடுத்து நடத்த ஏற்பாடுகள் செய்து நாள் குறிப்பிட்டு- எல்லோருக்கும் திருமண அழைப்பு அனுப்பிய பின்... திடீரென்று நடக்கவிருந்த கல்யாணம் நின்று போனது.

தாமோதரன் அவளுக்குப் பரிசாகத் தந்துவிட்டுப்போன அந்தச் செடி ரோஜா வண்ண மலர்களைச் சொரிந்து கொண்டு வீட்டு வாசல் முகப்பிலே இன்னமும் ஓங்கி உயரமாக நின்றுகொண்டிருந்தது. ஆனால் அவன் அவளுக்கு வழங்க இருந்த திருமண வாழ்க்கை பெண் கேட்க வந்த நாளே நசிந்து போனது.

சமூகத்தின் முன் அவள் முகத்தில் கரியைப் பூசிவிட்டு வேறு ஒரு பெண்ணை மணந்துகொண்ட மோகன், பதவியில் உயர்ந்து, இப்போது பள்ளியின் தலைவனாக -ஒரு குழந்தையின் தந்தையாக-சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அவள்? அவனையே நினைத்து மனம் நொறுங்கி அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறாள்.

யாரோ பின்னால் பலமாகக் காரின் ஹாரனை அமுக்குவதைக் கேட்டுத் திடுக்கிட்டு நினைவினின்று விழித்துக் கொண்டாள். எக்ஸ்கோர்ட் எனும் ஊரின் எல்லையைச் சமீபித்துவிட்டதை உணர்ந்தாள்.

களைப்புத் தீரப் பச்சைத் தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்டால்தான் மேலே வண்டியை ஓட்டத் தெம்பு ஏற்படும் என்ற எண்ணம் தோன்றவே அவள் காரை அந்தப் பெட்ரோல் காராஜின் முன் கொண்டு வந்து நிறுத்தினாள்.

4

காரைக் கண்டதும் வேகமாக அருகில் ஓடி வந்து நின்றான் பெட்ரோல் பங்க்கில் வேலை செய்யும் ஆப்பிரிக்கப் பையன்களில் ஒருவன். தேவைப்பட்ட அளவை அவள் சொன்னதும் துரிதமாகப் பெட்ரோலை ஊற்றி முடித்து, சக்கரங்களில் உள்ள காற்று அழுத்தம், எண்ணெயின் அளவு எல்லாவற்றையும் சோதித்துச் சரிசெய்துவிட்டுக் காரின் முன் கண்ணாடி மீது நீர் தூவி நன்றாகத் துடைத்துவிட்டான்.

பர்சிலிருந்து இரண்டு பத்து செண்ட் நாணயங்களை எடுத்து அவனிடம் நீட்டினாள் காவேரி.

''யபோங்கா!'' (நன்றி) என்றபடி தன் இரு கைகளையும் நீட்டி அதைப் பெற்றுக் கொண்டு முகமெல்லாம் பற்களாகப் பளிச்சென்று சிரித்துவிட்டு, அடுத்தபடியாகப் பின்னால் வந்து நின்ற காரைக் கவனிக்க அவன் ஓடிவிட்டான்.

காவேரி மெல்லத் தன் காரை அங்கிருந்து நகர்த்தி பங்க்கை ஒட்டியபடி கட்டப்பட்டிருந்த பயணிகளின்

இளைப்பாறும் பகுதிக்கு முன் கொண்டு நிறுத்தினாள். டிக்கியைத் திறந்து சாப்பாட்டுக் கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு பெண்கள் உபயோகிக்கும் பகுதிக்குள் புகுந்து அங்கிருந்த மேஜைமேல் கூடையை வைத்தாள்.

டர்பன் நகரைவிடக் குளிர் இன்னும் சற்றுக் கடுமையாக வீசிக் கொண்டிருந்ததால் அவளது உதடுகள் நடுங்கின. ஒட்டமாகக் கழிவறைக்குள் புகுந்தாள். உடையைச் சீர் திருத்திக்கொண்டு வாஷ்பேசின் குழாயைத் திறந்து இளஞ்சூடான நீரில் முகத்தைப் பரபரப்புடன் கழுவிக் கொண்டாள். சுவரில் உருளையாகத் தொங்கிய பேப்பர் டவலை இழுத்துச் சிறிதளவு கிழித்து எடுத்து முகத்தையும் கைகளையும் துடைத்துக் கொண்டு அருகிலிருந்த குப்பைக் கூடைக்குள் போட்டாள்.

வாஷ்பேசினுக்கு மேலே பதிக்கப்பட்ட கண்ணாடியில் பார்த்தபடி முடியை அவிழ்த்து வாரி மறுபடி முடிந்து கொண்டாள். பவுடர் ஒத்தியால் பவுடரை லேசாக முகத்தில் பூசிக் கொண்டாள். பயணக்களைப்பு மறைந்து முகத்தில் தெம்பு தெரிவதைக் கண்ட திருப்தியுடன் வெளியே வந்தாள்.

இன்னும் சில கிலோ மீட்டர்கள்தான் அவள் காரை ஓட்ட வேண்டிவரும். லேடிஸ் ஸ்மித்தை அடைந்ததும் அவள் தங்க ஏற்பாடு செய்திருந்த சித்தப்பா மருமகள் ஜோதியின் வீட்டிற்கு நேராகப் போக நேரம் இருக்காது. அவளுக்கு முன்னதாக முதல்நாள் மாலையே டர்பனிலிருந்து புறப்பட்டுப் போயிருந்த நர்ஸ் ஜயா பரிசோதனை அறையைத் தயார் செய்து வைத்துவிட்டு, அவளது வருகைக்காகவும், டாக்டர் வருகைக்காகவும், வராந்தாவிலே வந்து பல முறை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

★ ★ ★

காலை மணி பத்தாகிக் கொண்டிருப்பதைக் கடிகாரம் அறிவித்தது. இந்த வேளை பள்ளிக்கூடத்தில் மாணவ மாணவிகள் தேநீர் சாப்பிடும் நேரம். அரை மணிக்குப் பின்னர்தாம் வகுப்புகள் துவங்கப்படும். அவளைப் போல அன்று காலை மெடிகல் இன்ஸ்பெக்ஷனுக்குப் புறப் பட்டிருக்கும் அவர்களது குழுவின் டாக்டர் ஸ்காட் இத்தனை நேரம் பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சேர்ந்திருப்பார். வயது அறுபதை எட்டிக்கொண்டிருந்தாலும் கிழவருக்கு வேலை மீது படு உற்சாகம். ஒரு கௌபாயைப் போல்தான் காரை ஓட்டுவார்... தனக்குள் சிரித்துக்கொண்டு பிளாஸ்க்கைத் திறந்து தேநீரை மூடியில் ஊற்றி மேஜைமேல் வைத்துக் கொண்டாள். அவள் காலையில் அவசரமாகத் தயாரித்து எடுத்து வந்த ஸாண்ட்விச்களில் ஒன்றை எடுத்துக் கடித்தபடி யோசித்தாள்.

நேர்வழியாகப் புதிய ஹைவேயில் வராது அவள் வளைவுப் பாதை வழியாக ஆயிரம் குன்றுகளைப் பார்க்கத் திரும்பியதால் கார் மீட்டர் அதிகப்படியாகக் காட்டப் போகும் கிலோ மீட்டருக்கு அவள் வார இறுதியில் கணக்குக் காட்டியாக வேண்டுமே! இதுதான் வழி. அன்று பகல் வேலை முடிந்ததும் ஜோதி வீட்டில் காரைக் கொண்டு போய் கராஜில் நிறுத்திப் பத்திரமாகப் பூட்டி வைத்துவிட்டு தினசரி அவள் பள்ளிக்கூடத்திற்கு நடந்து செல்ல வேண்டும். ஜோதி வீட்டிலிருந்து அந்தப் பள்ளிக்கூடம் தொலை தூரமில்லை. காலையும் மாலையும் கால்நடையாகப் பள்ளிக்கு வந்து போனால் அதிகப்படியாகிவிட்ட கிலோ மீட்டரைக் கணக்கில் பிசகு ஏற்படாது சரிக்கட்டிவிட முடியும். குளிர் காலம். அதனால் நடக்க அப்படி ஒன்றும் சிரமமாக இருக்காது.

தேநீரைப் பருகி முடித்துக் கூடையை மூடிக்கொண்டு அவள் கிளம்புவதற்குள் பல பெண் பயணிகள் அந்த அறையை நிறைத்துக் கொண்டு விட்டனர். இப்போதெல்லாம்

இது மாதிரியான பொது இடங்களில் நிறபேதம் காண்பிப்பதை அதன் அமைப்பாளர்கள் கைவிட்டிருந்தனர். அதனால் கருப்பர் உபயோகிக்கும் இளைப்பாறும் அறையை வெள்ளைக்காரப் பெண்களும் வெறுப்பின்றி, சகஜ பாவத்துடன் உபயோகித்தனர்.

டிக்கியை மூடிவிட்டுக் காரில் ஏறி உட்கார்ந்து அதை லேஹஸ்மித் போகும் பாதைக்குத் திருப்பியபோது தாமோதரனின் குரல் காதுகளில் ஒலிப்பது போன்ற ஒரு பிரமையில் திடுக்கிட்டுப் போனாள்.

''தபால் நிலையங்களிலும், வேறு சில பொது இடங்களிலும் வெள்ளைக்காரர்கள் நம்முடன் கியூவில் கலந்து கொள்வதைக் கண்டு நீ மகிழ்ந்துவிடக்கூடாது. முன்பெல்லாம் ஒரு கருப்பரைக் கண்டதும் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்ட வெள்ளையன், இப்போது 'ஹலோ, குட்மார்னிங்' என்று சொல்லுமளவுக்கு வந்துவிட்டிருக்கிறான், உண்மை. ஆனால் இவை மட்டும் போதாது. அரசியல் உலகிலும் தொழில் உலகிலும் சம உரிமை, சம அந்தஸ்து, உழைப்புக்குச் சம ஊதியம் கொடுக்கப்படும் போதுதான் நிறபேதம் எனும் 'அப்பார்த்தீட்' இந்நாட்டை விட்டு ஒழியும். அதுவரை அது ஒரு அபாரமான தீட்டு. மக்களின் ரத்தத்தில் குளிப்பாட்டி தியாகத் தீயில் எரிந்தால்தான் இந்தத் தீட்டு ஒழியும். அது ஒழிந்தால்தான் எல்லா மக்களும் மகிழ்ச்சியாக இங்கே வாழ முடியும்.

'இந்தத் தாமோதரன் தமது கொள்கைகளைக் கொஞ்சமும் அச்சமின்றி வெளிப்படையாகப் பேசுகிறாரே, இது முடிவில் ஆபத்தாகிவிடாதா! நல்ல வருவாயுள்ள தொழிலைத் தூக்கி எறிந்துவிட்டு தியாகம், புரட்சி என்று ஏன் இப்படிப் பிதற்ற வேண்டும்?'

வண்டியைச் சற்று வேகமாக ஓட்டினாள். 'லேஹஸ்மித்துக்கு வாருங்கள்' என்று நல்வரவு கூறியபடி சாலையின்

முகப்பிலே சூரிய ஒளியில் பளிச்சிட்ட அந்தக் கரும் பலகையைக் கண்டதும் அவள் மனதிலே திக்கென்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. அதுவரை சிந்தித்து வந்த எண்ணங்கள் யாவும் சிதறிப் போயின. 'அந்த விபரீத நிகழ்ச்சிக்குப்பின் முதல் முதலாக மோகனை மறுபடி சந்திக்கப் போகிறோம்' என்ற நினைவில் அவள் ஆடிப்போனாள்.

எதிர்பாராத காரணங்களால் இந்தத் தேதியில் நடக்கவிருந்த திருமணத்தை நிறுத்திவிட்டிருக்கிறோம் என்று லோகேந்திரன் அண்ணன் பத்திரிகைகளில் போட்டு முன் கூட்டியே அழைப்பு விடுத்தவர்களுக்கு எச்சரிக்கை விடுத்த போது ஊரில் என்ன பேசிக் கொண்டனர்.

'காவேரி நர்ஸ் வேலை பார்க்கிறாள் அல்லவா? டாக்டர் எவனையாவது சிநேகம் பிடித்திருப்பாள். மோகன் காதில் விஷயம் எட்டிவிட்டிருக்கிறது. அவனுக்குப் பிடிக்காது போய்விட்டது. வேண்டாம் இந்தக் கல்யாணம் என்று நிறுத்திவிட்டிருக்கிறான்...'

எல்லோரும் கல்யாணம் நின்று போனதின் காரணத்தைச் சுலபமாக அவள் தலையில் சுமத்தினர். வம்பு பேசிப் பழிச் சொல்லைப் பரவவிட்டு மகிழ்ந்தனர். அது சமயம் அவளும் அவளது குடும்பத்தாரும் பட்ட அவமானம்!

சவுந்தரி அண்ணி கொஞ்ச நாட்கள் கோவில் பக்கமே போகவில்லை. லோகேந்திரன் அவளுடன் முன்போலச் சிரித்துப் பேசுவதையே விட்டுவிட்டான். சின்ன அண்ணி சமயம் வந்தபோது குத்தூசியாக வார்த்தைகளை வீசினாள்.

தலையணைமீது முகத்தை அழுத்திக் கொண்டு அவள் அவமானமும் ஆத்திரமும் தாளாது, இரவு வேளையில் அழுதபோது சவுந்தரி அண்ணி பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு முதுகை மெல்லத் தடவிக் கொடுத்து, ''விடு...விட்டுத்தள்ளு. அவனுக்கு உன்னைக் கட்டிக்கக்

கொடுத்து வைக்கலை. உனக்குன்னு பிறந்தவன் ஒருத்தன் எங்கேயோ இருக்கான். அதனால்தான் இந்தக் கல்யாணம் நின்று போச்சு. நல்லவேளை, மூணு முடிச்சுப் போடு முன்பே நின்னது நல்லதாச்சு. இல்லாட்டா நாம ரொம்ப கஷ்டப் பட்டிருப்போம்'' என்று எத்தனை முறை ஆறுதல் சொன்னாள்!

அண்ணி மட்டும் பக்கபலமாக இருந்து அவளுக்கு அவ்வப்போது அறிவுரை சொல்லிக் கொண்டிராவிடில், அந்த அதிர்ச்சியைத் தாங்காது அவள் இடிந்து போய்-மனம் குழம்பிச் சித்தம் கலங்கிப் போய் விட்டிருப்பாள். நல்ல வேளை, அப்படியெல்லாம் நடக்காது, தன் வேலைகளை ஒழுங்காகச் செய்துகொண்டு நாலுபேர் முன்னிலையில் தலை நிமிர்ந்து அவள் இன்னமும் வாழ்கிறாள்.

அந்தச் சமயந்தான் அவளுக்குத் தாமோதரன் ஒரு கடிதம் எழுதியிருந்தான்.

'கல்யாணம் நின்று போனதை அறிந்து வருந்துகிறேன். இதை உனக்கேற்பட்டதொரு அவமானமாக எண்ணுவதை விட்டு ஒரு விபத்து என்று ஏற்றுக்கொண்டு உன் நினைவு முழுவதையும் வேலையில் திருப்பு. விரைவில் எல்லா வற்றையும் மறந்து போவாய். தயவு செய்து நிமிர்ந்து நில்-தாமு.'

மோகனை நம்பி மனதைப் பறிகொடுத்து-தலை குனிந்து நின்றாள். நிமிர்ந்து நிற்க ஊன்றுகோலாக உதவிய தாமோதரனைப் புரிந்துகொள்ளாது-அசட்டை செய்து விட்டாள். அவளது வாழ்க்கையில் இன்னும் என்னென்ன வேடிக்கைகள் நிகழ மீதமிருக்கின்றனவோ? உம்...யார் கண்டது? பெருமூச்செறிந்தபடி லேடீஸ்மித் ஊருக்குள் காரை நிதானவேகத்தில் செலுத்திப் பள்ளிக்கூடத்தின் திறந்த கேட்டின் வழியே உள்ள நடைபாதை மீது ஓட்டி, பள்ளிப் பரிசோதனைக்கு வந்துள்ள டாக்டர், ஸ்காட், நர்ஸ் ஜயா இருவரின் கார்கள் நிற்குமிடத்திற்குத் திருப்பி அவை அருகே நிறுத்திவிட்டு இறங்கினாள்.

தேநீர் வேளை முடிந்து விட்டதை அறிவிக்க மணி அடித்தது. முன்புறத் தோட்டத்திலே சிட்டுக் குருவிகள் போல் ஓடி ஆடிக் கொண்டிருந்த பள்ளிச் சிறுவர்-சிறுமியர் வகுப்புகளுக்கு விரைந்தனர்.

டிக்கியைத் திறந்து ஃபைல்கள் கொண்ட பெட்டியை இறக்கி அவள் கீழே வைத்துவிட்டுத் திரும்பியபோது பார்த்துவிட்டாள். நர்ஸ் ஜயாவுடன் சிரித்துக் கொண்டு என்னவோ பேசியபடி மோகன் தனது அறையை நோக்கி வராந்தாவிலே வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

சம்மட்டியால் யாரோ ஓங்கித் தலைமீது அடித்து விட்டது போன்றதொரு அதிர்ச்சியில் அவள் உடல் முழுவதும் நடுங்கியது. நெஞ்சை அடைத்து விடும் போன்றதொரு துக்கம் அடிவயிற்றினின்று புரண்டு எழுவதை உணர்ந்தாள்.

''நான் கொண்டு போய் இந்தப் பெட்டியைப் பரிசோதனை அறையில் வைக்கட்டுமா நர்ஸ்?'' ஒரு மாணவன் சிரித்தபடி ஓடிவந்து பெட்டியைத் தூக்கிக் கொண்டு கேட்டான்.

''தாங்க் யூ லிட்டில் பாய்'' என்று நன்றி தெரிவித்தபடி டிக்கியை மூடிப் பூட்டிச் சாவியைச் சீருடைப் பையில் போட்டுக்கொண்டு வேதனைமிக்க அந்தச் சந்திப்புக்குத் தன்னைத் தயாராக்கிக் கொண்டு வராந்தா மீது மெல்ல நடந்தாள்.

தலைமை ஆசிரியர் அறையை நோக்கி அவள் தயங்கியபடி நடந்தபோது, முன்னாலிருந்த அறையில் வகுப்பைத் துவங்கிவிட்ட ஆசிரியர் உரத்த குரலில் ஒரு மாணவனிடம் கேட்ட கேள்வி துல்லியமாக அவள் காதுகளில் விழுந்தது. சரித்திர வகுப்பு நடந்து கொண்டிருந்தது போலும்.

''லேடீஸ்மித் என்று இந்த ஊருக்குப் பேர் வந்ததுக்குக் காரணம் என்ன? யாருக்குத் தெரியும்? தெரிஞ்சவங்க கையைத்

தூக்குங்க'' ஆசிரியர் மறுபடியும் கேட்டபோது, 'எனக்குத் தெரியும் சொல்லட்டுமா?' என்று கத்த வேண்டும் போன்ற தொரு வேகம் அவளுக்கு எழுந்தது. கண்களில் நீர் முட்டிக்கொண்டது. அவளும் பள்ளிக்கூட நாட்களில் அந்நாட்டுச் சரித்திரத்தில் படித்த கதைதான் அது.

கேப் மாநிலத்திற்குக் கவர்னராக இருந்த ஹாரி ஸ்மித் என்பவர் உள்நாட்டில் ஏற்பட்ட கலகமொன்றை அடக்கச் சில போர் வீரர்களுடன் ஒரு திடலில் முகாமிட்டிருந்தார். ஒரு மாலைப்பொழுது சில கலகக்காரர்கள் பதினைந்து வயதான ஒரு அழகிய ஸ்பானியப் பெண்ணைப் பலவந்தம் செய்யத் துரத்தியபோது, அவள் முட்புதர்கள் மீது விழுந்து ஓடி, அவர்களிடமிருந்து தப்பி, கவர்னர் தங்கியிருந்த கூடாரத்திற் குள் புகுந்து 'காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கதறி அழுதாள்.

உள்ளே எரிந்த மெழுகுவர்த்தியின் ஒளியில் கண்ணீரும் கம்பலையுமாகத் தரைமீது மண்டியிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார் கவர்னர். அதுவரை திருமணத்தைப் பற்றியே எண்ணாதிருந்த அவர் மனதில் காதல் பிறந்துவிட்டது. கலகத்தை வெற்றிகரமாக அடக்கியதுடன்-கலகக்காரர்களிடமிருந்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றிய கவர்னர் கேப்புக்குத் திரும்பியதும் அவளைத் திருமணம் செய்து கொண்டு விட்டார்.

பலகாலம் லேடீஸ்மித் அம்மையார் தமது கணவருக்கு உற்ற துணையாக-காதல் மனைவியாக-மக்களுக்கு அன்பான சமூக சேவகியாக இருந்தார். தமது காதலின் நினைவை நிரந்தரப்படுத்த அந்த ஊருக்கு 'லேடீஸ்மித்' என்று தமது மனைவியின் பெயரையே வைத்துவிட்டார் கவர்னர்.

காதலின் சின்னமாகத் திகழும் அந்த ஊருக்கு, காதலில் தோல்வி அடைந்த அவள் வந்திருக்கிறாள். தோல்வி

தந்தவனைச் சந்தித்து, வேலையைப் பற்றிப் பேச வேண்டும். ஒரு விநோதமான, வேதனையான சந்திப்பு.

பிரின்ஸ்பாலின் அறைக்கதவை லேசாகத் தட்டினாள்.

''கம்மின் ப்ளீஸ்''. பழக்கப்பட்ட-ஒரு காலத்தில் தேனாக இனித்த அந்தக் குரல் காதுகளில் நெருப்புத் துண்டாக விழுந்தது. நெஞ்சே வெடித்துவிடும் போன்றதொரு இறுக்க உணர்வில் மூச்சு முட்டத் திணறிக் கொண்டு மெல்லக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். கீழே விழுந்துவிடுபவள் போலக் கால்கள் நடுங்கின. நெற்றியில் வியர்வை முத்துக்களாக அரும்ப, மார்பு துடிதுடிக்க, மோகன் முன் நின்றாள் காவேரி.

5

''எஸ் நர்ஸ்?'' கோட்டு ஷூட்டு அலங்காரத்தில் ஆசனத்தை நிறைத்துக் கொண்டிருந்த மோகன் இடது கையால் கழுத்து டையை நாசூக்காகத் தளர்த்திக் கொண்டு... மிடுக்குடன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

எதிரே தெரிந்த ஒரு நாற்காலியை மௌனமாக அவளுக்குக் காட்டிவிட்டு அருகில் வந்து நின்ற ஒரு இளம் ஆசிரியர் பக்கம் திரும்பினான்.

''மிஸ்டர் சதீஷ்! இவங்க நம்ப பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்கும் மெடிகல் இன்ஸ்பெக்ஷன் டீமைச் சேர்ந்த நர்ஸ். இந்த வாரம் முழுவதும் நடக்கப் போகும் பரிசோதனைக்குத் தேவைப்பட்ட உதவிகளைக் கவனிக்கும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன். சரிதானே?'' முறு வலித்தான்.

முன்பின் தெரியாதவளை அவளது உத்தியோக நிலையில் அறிமுகப்படுத்துவதுபோல் எத்தனை அசட்டையாகப் பேசிவிட்டான்! அவமானத்தில் குறுகிப் போய் அவள் தொப்பென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். பேச முடியாது போலத் தொண்டை இறுகிப் போயிற்று.

புதிதாக ஆசிரியர் வேலையில் வந்தமர்ந்திருக்கும் அந்த இளைஞனுக்கு அவர்களைப் பற்றிய கதை தெரியாது போலும். ஆனால் டர்பன் நகரத்தில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் - கணக்கர்கள் - ஆயாக்கள் - தோட்ட வேலைக்காரர்கள் என்று அனைவருக்கும் தெரிந்த ரகசியம் அது. பள்ளி ஆசிரியர் மோகனுக்கும்-நர்ஸ் காவேரிக்கும் நடக்க இருந்த திருமணம் திடீரென்று நின்று போய் விட்டது.

சில மாதங்களுக்குப் பின் டர்பன் நகர் அருகேயுள்ள அம்சிண்டே என்ற ஊரில் அன்னாசிப் பயிர் செய்து வெளிநாட்டு ஏற்றுமதி மூலம் பணத்தைக் குவித்துவிட்ட பிரபல விவசாயி சதானந்தத்தின் செல்வமகள் பிரமிளாவுக்கும் அவனுக்கும் தடபுடலாகத் திருமணம் நடந்தேறியது.

மருமகனுக்கு டர்பன் நகரில் மிக வசதியானவர்கள் வாழ்கிற வெஸ்ட்வில் பகுதியில் அழகானதொரு வீட்டை வாங்கி-அதில் சாமான்களை நிறைத்துக் கல்யாணப் பரிசாகக் கொடுத்துவிட்டிருந்தார், சதானந்தன்.

தமது ஒரே மகன் இங்கிலாந்துக்குப் படிக்கப் போனவன் ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டுவிட்டான். நாட்டின் சட்டப்படி கருப்பு நிறத்தவன் ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு அங்கே தங்கி வாழ இயலாது என்பதை அறிந்து, அவன் திரும்பித் தன் நாட்டுக்கு வராது இங்கிலாந்திலேயே தங்கிவிட்டான் என்ற ஏக்கமும் கோபமும் தாங்க முடியாத கிழவர் சதானந்தன் தமது சொத்துக்களை

விற்று முதலாக்கி வங்கியில் போட்டுவிட்டுத் தமது மகளுடன் தங்கிவிட்டார்.

டர்பனிலிருந்து பதவி உயர்ந்து மோகன் லேடீஸ்மித் சென்றதும் நிழல்போல் மகளையும் மருமகனையும் தொடர்ந்த சதானந்தன் அங்கே ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொடுத்துவிட்டுத் தாமும் அவர்களுடன் தங்கிக் கொண்டுவிட்டிருந்தார்.

மோகன் மாமனார் கைப் பொம்மையாகிவிட்டான், தன் சுதந்திரத்தைப் பணத்திற்கு அடகு வைத்துவிட்டான் என்பது டர்பன் நகரத்தில் உள்ள பல தமிழர்களுக்குத் தெரிந்த கதை. ஆனாலும் எத்தனை திமிர் இந்த மனிதனுக்கு? வெகுண்டு போனாள் அவள்.

தண்ணீருக்குள் இறங்கித் தலையை நனைக்கும்வரை தான் குளிரைப் பற்றி அச்சம் தீவிரமாக இருக்கும். சுரீர் என்று ஒரு முறை குளிர்ந்த நீர் உடலில் பட்டதும் அந்த பயம் போய்க் குபுக்கென்று தலையைத் தண்ணீருக்குள் அமுக்கிக் கொள்ளும் துணிவு தானாக ஏற்படுவதில்லையா? அதைப்போல, நடக்கவிருந்த கல்யாணம் நின்று போய் விட்ட அவமானத்தில் மனமுடைந்து போய் அவள் பின்னர் மோகனைச் சந்திக்கவேயில்லை. நீண்ட நாட்களுக்குப் பின் அவனை இப்போது சந்தித்துப் பேச வேண்டிய நிர்பந்தம் வந்துவிட்டதே என்று கலங்கிப் போய் திகிலில் தவித்துக்கொண்டு வந்த அவளுக்கு அவனது அசட்டை மண்டையில் அடித்தாற் போன்றதொரு அதிர்ச்சியைத் தந்தது. துயரமும் கிலியும் மின்னலாக மறைந்து போயின. அதற்குப் பதில் ஆத்திரம் புயலாக மனதிற்குள் மூள, விருக்கென்று நாற்காலியினின்று எழுந்தாள்.

''நன்றி'' என்ற வார்த்தையைக் கேட்கக்கூட அவன் தகுதியற்றவன் என்ற சீற்றத்துடன், ''மிஸ்டர் சதீஷ் நாம்

போகலாமே, நேரமாகிறது. வார முடிவுக்குள் பல காரியங்களைக் கவனித்து முடிக்கணுமே?'' என்று கூறிவிட்டு மோகனைத் திரும்பிப்பாராது விரைவாக வெளியே வந்தாள். புதிதாக உள்ளத்தில் ஊற்றெடுத்த ஒரு துணிச்சலால், பாதணிகள் சப்திக்க, வேகமாக நடந்தாள்.

அவளுடன் கூட நடைபோட்ட அந்த இளம் ஆசிரியர் மிகவும் உற்சாகமாகப் பேசிக்கொண்டே வந்தான். வராந்தாவிற்குச் சற்று தூரத்தில் கார் பார்க்கில் முதலாவதாக நின்ற இளம் பச்சைவண்ண பென்சை அவளுக்கு ஆவலுடன் காட்டினான்.

''இது மிஸ்டர் மோகனுடைய புதிய கார். முந்தாநாள் அவரது பிறந்தநாள். அதற்குப் பரிசாக அவர் மனைவி அவருக்கு வாங்கித் தந்தார்களாம். இதுமாதிரி ஒரு கார் வச்சுக்க என்னைப் போன்ற ஆசிரியர்களுக்குக் கட்டுப்படி ஆகாது.'' ஏக்கத் தவிப்பில் மெல்லச் சிரித்தான்.

'ஒரு பழைய தகர டப்பா போன்ற கார்கூட வச்சுக்க முடியாத நிலையில் இருந்தபோதுதான் இந்த மோகனை நான் சந்தித்தேன். பெற்றோர்களைச் சிறு வயதிலேயே இழந்து விட்டுத் தன் அக்கா வீட்டில் அத்தான் தயவில் படித்து ஆளானவன். உபகாரச் சம்பளம் வாங்கி பி.ஏ முடித்து ஆசிரியர் பயிற்சி பெற்று இசிப்பிங்கோ பள்ளியில் வேலைக்கமர்ந்த புதிதில் அவனை நான் சந்தித்தேன். அப்போதெல்லாம் வேலைக்குப் பஸ்சில்தான் இவன் வருவது வழக்கம்.

சிரிக்கச் சிரிக்கப் பேசும் இவனது சாமர்த்தியத்திற்கும் அழகான கம்பீரத் தோற்றத்திற்கும் மனதைப் பறிகொடுத்தேன். என்னை மணந்து கொள்ளத் தன் தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற வீம்புக்காக, தவணை முறையில் முதன் முதலாக ஒரு குட்டி வீ.டபுள்யூ காரை வாங்கிக் கொண்டு வந்து எங்கள் வீட்டு வாசலில் வந்து

நிறுத்திவிட்டு உள்ளே வந்தானே, அதைச் சுலபமாக மறக்க முடியுமா?

முன்னறையில் இவனை உட்காரச் சொல்லிவிட்டு அண்ணி சவுந்தரியிடம் ஓடி அவன் வந்திருப்பதைப் பற்றிச் சொல்ல வாயைத் திறக்குமுன் அண்ணி கேட்டுவிட்டாள்.

''அடிக்கடி உன்னைப் போனில் கூப்பிடுகிறானே - மோகன் என்கிற டீச்சர். அவன்தானே வந்திருக்கிறான்? நீ சொல்ல வேண்டாம். எனக்கு எல்லாம் புரிகிறது!''

''அண்ணி நீங்க ரொம்பக் கெட்டிக்காரங்க!'' என்று கொஞ்சியபடி அவளது கையைப் பற்றிக் கொண்டேன். மூக்கும் முகமும் சிவக்க நெஞ்சு படபடக்க, ''தாயைப் போல என்னைச் சின்ன வயதிலிருந்து வளர்த்து விட்டவங்க நீங்க. அந்த நம்பிக்கையிலே உங்ககிட்டே கேட்டுக்கிறேன், இவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுகிறார். அண்ணன்கிட்டே சொல்லி ஒப்புதல் வாங்கிக் கொடுக்க உதவணும் அண்ணி.'' ரொம்பவும் குழைந்தேன்.

அதற்குப் பின் எத்தனை முறை வந்துவிட்டான் எங்கள் வீட்டுக்கு இந்த மோகன்.

ஒரு நாள் வீட்டுக்கு வந்தவன் தன்னை என்னுடன் கூடக் காரில் அழைத்துப் போக விரும்பினான். அனுமதி கொடுக்க உடனடியாக அண்ணி சவுந்தரி மறுத்து விட்டாள்.

''நிச்சயதார்த்தம்னு ஒரு சடங்கு ஊர் அறிய ஆகுமுன் நீங்க அவளை வெளியே தனியே அழைத்துப் போவதை நான் ஒப்புக்க மாட்டேன்.'' கண்டிப்பாக - கடுமையாகப் பேசிவிட்டாள். மோகன் முகம் சுருங்கிப் போனான்.

''நிச்சயதார்த்தத்துக்கு ஒரு வைர மோதிரம் வாங்கி வரத்தானே கடைக்குக் கூட்டிப்போக ஆசைப்படுகிறேன்.'' சமாளித்தான்.

''நீங்க பார்த்து வாங்கி வந்து போடும் மோதிரத்தை அவள் ஏத்துப்பாள். அதுதான் முறை.'' சவுந்தரி அண்ணி விடாப்பிடியாக மறுத்தாள்.

வீட்டுக்குத் திரும்பியவன் என்னைப் போனில் அழைத்து ஒரு மூக்க என் பெரிய அண்ணியைத் திட்டித் தீர்த்தான்.

''உன் அண்ணி சவுந்தரி இந்தியாவில் பிறந்தவங்க இல்லையா? அதனால்தான் இத்தனைக் காலமும் இந்த நாட்டில் வாழ்ந்தும் அந்த நாட்டுக் கட்டுப்பெட்டித்தனம் போகலை. உனக்காகத்தான் பொறுத்துக்கொண்டு போனேன். இல்லாட்டி அந்த இந்தியக்காரியின் மூஞ்சியில் அடிச்சாற்போலச் சொல்லியிருப்பேன். உங்க இந்தியாவிலே தான் இன்னமும், சுதந்திரமடைந்து இத்தனை ஆண்டுகளாகியும் வரதட்சிணை -சீர் இதுகளைக் கொடுத்து ஒரு பெண் தன் கணவனை விலைக்கு வாங்கும் அவலம் நடந்துகொண்டிருக்கிறது. அப்படியெல்லாம் நாங்க இந்த நாட்டில் ஒரு பெண்ணை அவமானப்படுத்துவதில்லை. திருமணச் செலவு பூராவையும் மாப்பிள்ளையே எடுத்துக் கொண்டு வாழ்க்கைத் துணைவி என்று ஒரு பெண்ணை ஏற்றுக்கொண்டு நாங்கள் பெண் குலத்தைப் பெருமைப் படுத்துகிறோம். அதனாலே உங்களது கட்டுப்பெட்டித் தனத்திற்கு நான் ஏன் கட்டுப்படணும்? கேட்டிருப்பேன். போனால் போகட்டும் என்று உன் அண்ணியை இந்த முறை மன்னித்து விட்டிருக்கிறேன்'' என்றான்.

அன்றிலிருந்து மோகன் பெரிய அண்ணியை வெறுக்கத் தொடங்கி விட்டிருந்தான். சவுந்தரி அண்ணிக்கு இவனை ஏனோ பிடிக்கவில்லை.

கல்யாண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் அவளே கேட்டு விட்டாள்.

''காவேரி! மோகனை நீ மனப்பூர்வமாக விரும்பு கிறாயா? இன்னும் கல்யாணத் தேதியை நாம் குறிப்பிடலை. எந்தவிதமான வாக்குறுதியும் கொடுத்து விடவில்லை. அதனால்...''

''அண்ணி! என்ன வார்த்தை இது. மோகனை நான் ரொம்பவும் நேசிக்கிறேன்!'' கோபமும் துயரமுமாகக் கத்திவிட்டேன.

''அவனுக்குக் குடிப்பழக்கம் உண்டாமே?''

''இந்த நாட்டில் குடிப்பழக்கம் வச்சுக்கிறது நாகரிகமான பொழுது போக்காகி விட்டிருக்கே. நான் மோகனை அந்தப் பழக்கத்திலிருந்து திருத்திவிடுவேன்.''

''அப்படித்தான் உன் அண்ணனைப் பத்தி நினைச்சேன். திருத்த முடிஞ்சுதா? கடைசி மூச்சுவரை அவர் குடிப்பதை நிறுத்தலை. உன் சின்ன அண்ணனைப் பத்திக் கேட்கவே வேண்டாம். மோகனுக்குக் குதிரைப் பந்தயத்துல ரொம்ப ஈடுபாடாமே?''

''அண்ணி! கல்யாணம் என்பதே ஒரு பந்தயத்தைப் போலத்தானே. வெற்றி தோல்வி என்ற இரண்டையும் சம அளவிலே எதிர்பார்க்க வேண்டிய ஒரு இணைப்புத்தானே? குறை கண்டுபிடிச்சுக்கிட்டிருக்கீங்க?'' கோபத்துடன் மிகவும் வெறுப்பாக நான் பதிலளித்துவிட்டேன்.

அண்ணி முகம் சிவந்து போனாள். அதற்குப் பின் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை.

அன்று அண்ணிமேல் நான் கோபம் கொண்டது நியாயமாக எனக்குப் பட்டது. ஆனால் பின்னர்தானே மோகனது உண்மை உருவம் தெரிந்தது. எங்கள் வீட்டுச் சம்பந்தத்தைவிடப் பெரிய இடம் என்றதும் கல்யாணத்திற்குத் தேதி வைத்து- அழைப்பு அனுப்பி விட்டதைக் கூடப்

பொருட்படுத்தாது ஒரு கந்தல் துணியைக் கழற்றி எறிவது போல என்னை உதறி விட்டுப் பிரமிளாவை மணக்கத் திட்டம் போட்டுக் கல்யாணத்தை நிறுத்தி என் முகத்திலே கரியைப் பூசிவிட்டான் காதகன்!

''தாய் நாட்டில் வரதட்சணை வாங்குகிறவர்கள் என்று அவர்களைப் பற்றி கேவலமாக வாய் கிழியப் பேசிய இவன் தன்னை எவ்வளவு கேவலமாகப் பணத்துக்கு விற்றுக் கொண்டிருக்கிறான் தெரியுமா? 'மிஸ்டர் சதீஷ்! இவன் ஒரு காலத்தில் என்னைக் காதலிப்பதாக நடித்த அயோக்கியன். பணத்திற்காகத் தன் மானத்தை அடகு வைத்துவிட்ட பாதகன்...' படபடவென்று நடந்தது அனைத்தையும் மனம் தன்னுள்ளே கொட்டிக் கொண்டிருக்க அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு குளிரை விரட்டக் கோட்டை இழுத்து நெஞ்சின் மீது நன்றாக மூடிக்கொண்டு மௌனமாக ஆத்திரத்தில் வேகமாகப் பரிசோதனை அறையை அடைந்தாள்.

டாக்டர் ஸ்காட்டும் அதுசமயம்தான் அங்கு வந்து சேர்ந்தார். ஒருவருக்கொருவர் வணக்கம் தெரிவித்துக் கொண்ட பின்னர் நர்ஸ்களும் டாக்டரும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டு விட்டனர். காவேரி, மோகனை மறந்து, தன் வேலைக்குள் மூழ்கிப் போனாள்.

6

பகல் இரண்டு மணி அளவில் பள்ளிக்கூட நேரம் முற்றுப் பெற்று விட்டதை அறிவிக்க மணி ஒலித்தது. பிள்ளைகள் எல்லோரும் வீட்டுக்குக் கிளம்பிய பின்னர் அன்று தாம் கவனித்த மாணவ -மாணவியரின் ஆரோக்கியம் பற்றிப் புள்ளிவிவரம் தயாரித்துக் கொண்டு டாக்டர் ஸ்காட், இரு

நர்ஸ்களும் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிக் கூறிவிட்டு ஏற்கனவே அவர் தங்க ஏற்பாடாகியிருந்த ஹோட்டலுக்குக் காரில் விரைந்து விட்டார்.

அவர் போன பின்பு நர்ஸ்களுக்குக் கொஞ்சம் எழுத்து வேலை இருந்தது. இருவரும் பேசிக்கொண்டே வேகமாக வேலையை முடித்துவிட்டு எழுந்தனர். நர்ஸ் ஜெயா தான் போக அவசரப்பட்டாள். காவேரி அவளை முந்திக் கொண்டு கிளம்பிவிட்டாள். எல்லோரும் கிளம்பியபின் ஒரு கணம் கூட அங்கே அவள் தனியாக இருக்கக்கூடாது. ஒரு சமயம் மோகன் அதைப் பயன்படுத்திக்கொண்டு வந்து பேச ஆரம்பித்துவிட்டால்..? என்ற கிலி அவளுக்கு. பற்களைக் கடித்துக்கொண்டு வேகமாக ஓடித் தன் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு அதைத் துரிதமாகப் பள்ளிக் கூடத்துத் தோட்டத் தினின்று சாலைக்கு ஓட்டினாள்.

குளிர்காலத்து முன் இருட்டுப் பொழுது. மாலை மூன்று மணி ஆவதற்குள் எங்கும் இருள் கவிந்துகொண்டு விட்டது. முன்னைவிடக் குளிர்காற்று சில்லென்று எலும்பைத் தகர்த்து ஈட்டியாக உடல்மீது வீசியது.

சித்தப்பா வீட்டின் கீழ்ப் பகுதியிலிருந்த பெரிய கராஜின் கதவு தயாராகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. சதாசிவத்தின் புயூஷோ அருகில் தன் காரை நிறுத்திவிட்டு டிக்கியிலிருந்த தனது மாற்றுடைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு படிகள் மீது ஏறி அவள் வராந்தாவுக்கு வருவதற்குள் வாயில் கதவைத் திறந்துகொண்டு சித்தி எதிர்ப்பட்டாள்.

முன் உச்சியில் பட்டையாக நரைத்துவிட்ட கூந்தல் லேசாக நெற்றியில் புரள, காதுகளில் கிம்பர்லி வைரக் கம்மல்கள் ஜொலிக்க, கண்களில் மகிழ்ச்சி மின்ன, புடவை மீது கனத்த கம்பளிக் கோட்டணிந்திருந்த சித்தி பார்வதி பாதணிகள் டக்டக்கென்று ஒலிக்க முன்வந்து அவளை ஆரத்தழுவிக் கன்னங்களில் ஆசையுடன் முத்தமிட்டாள்.

''கார்ச் சத்தம் கேட்டு ஓடிவரேன், காலையிலே அப்படியே பள்ளிக்கூடம் போயிட்டியா... பசியோட வந்திருப்பே... வாம்மா...'' அணைத்தபடி உள்ளே அழைத்துச் சென்றாள்.

''ஆமாம் சின்னம்மா. இப்பத்தான் வேலை முடிஞ்சது. நேரே இங்கேதான் வரேன்'' என்று கூறியபடி தன்னை விடுவித்துக் கொள்வதற்குள் பாண்ட் சட்டை அலங்காரத்தின் மீது கனமான கம்பளி ஸ்வெட்டர் தரித்திருந்த சித்தியின் மருமகள் அம்பிகா சீராகவெட்டிக் கொண்டிருந்த முடி முதுகில் பாவாடை விரிக்க ஓடிவந்து அவளைக் கட்டி யணைத்துக் கொண்டு, கன்னத்தில் சாயப்பூச்சில் மின்னிய தன் உதடுகளை அழுத்தினாள்.

''ஹலோ! காவேரி, நீ வந்திருக்கிறதைப் பத்தி எங்கள் எல்லோருக்கும் சந்தோஷம்'' உண்மையான அன்போடு சொன்னாள்.

எப்பேர்ப்பட்ட வரவேற்பு! சித்தப்பா ஜோதி வீட்ட வர்கள் விருந்தோம்பலில் அவளைத் திணறவைத்து விடுவார்கள் என்பது முந்தைய அனுபவங்களில் அவள் அறிந்திருந்த உண்மை.

அவள் எதுவும் பேசுமுன் அம்பிகா அவளது கைப் பெட்டியை வாங்கிக் கொண்டு அவள் தங்கப்போகும் அறைப்பக்கம் தள்ளிக்கொண்டு போனாள்.

விருந்தாளிகளில் மிகவும் வேண்டியவர்களுக்கு மட்டுமே உபயோகிக்கக் கொடுக்கும் அந்த அறையை அம்பிகா மிகவும் அமர்க்களமாக அவளுக்காக அலங்கரித்திருந்தாள்.

''இந்த பிங்க் ரூமைத்தான் உன் அண்ணன் உனக்கு தயார் செய்து வைக்கச் சொன்னார்.'' என்று சிரித்துக் கொண்டே அறைக்குள் அவளது பெட்டியை வைத்தாள் அம்பிகா.

கனமான ரோஜா வண்ண வெல்வெட் திரைச்சீலை ஜன்னல்களை மறைக்க, படுக்கை மீது ரோஜா வண்ண கம்பளிகள் தயாராகப் போடப்பட்டிருந்தன.

தொப்பென்று படுக்கையில் விழுந்து கம்பளிக்குள் சுருண்டு கொண்டு, 'வாயை மட்டும் திறந்து சாப்பாட்டை என் வாயில் கொஞ்சம் போட்டுடு போதும். குளிர் தாங்கலை' என்று கூவவேண்டும் போன்ற தவிப்பு அவளுக்கு.

''டர்பன்காரங்களுக்கு மேல் தேசத்துக் குளிரைக் கண்டு, ஒரே பயம். எங்களுக்கு இது ரொம்பப் பழக்கமாயிடுச்சு.'' பற்கள் பளிச்சிட மெல்ல சிரித்த அம்பிகா, டவல்-சோப்புப் பெட்டி இத்யாதிகளை அவள் கையில் வைத்துக் குளியலறைப் பக்கம் தள்ளிவிட்டாள்.

நறுமணம் தரும் பாத் ஸால்டைத் தூவி-இதமான சூட்டில் தொட்டியில் நீரை நிரப்பிக்கொண்டு வெகு நேரம் குளித்தபோது, பயணக் களைப்பெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போய்விட்ட உணர்வில் புதுத்தெம்புடன் நைட் டிரஸ் மீது சைனீஸ் டிரசிங் கவுன் அணிந்து வெளியே வந்தாள்.

கணவனும்-மாமனாரும் தாங்கள் நடத்தி வந்த சூப்பர் மார்க்கெட்டை மூடிவிட்டு வீடு வரும் நேரம் என்பதை உணர்ந்த அம்பிகா சாப்பாட்டைச் சூடுபடுத்திக் கொண்டி ருந்தாள்.

''இன்று சோமவாரம்... எல்லோரும் விரதம். கறி-மீன் கிடையாது. பயப்படாதே. உனக்குத் தேவையான சைவ சமையலைத் தனியே உனக்காகத் தினம் தயார் செய்து தருவேன். உள்ளே வாயேன். உங்க அண்ணி சவுந்தரியைப் போல நான் சமையலில் அத்தனை கெட்டிக்காரி இல்லை. ஆனாலும் மோசமில்லை. இந்த வீட்டுக்கு வந்த ரெண்டு வருஷத்திலே ரொம்பவே கத்துகிட்டிருக்கேன்.'' சிரித்தாள் அம்பிகா.

திடீரென்று அண்ணியின் நினைவு நெஞ்சிற்குள் கவலையை எழுப்பவே, காவேரி மெல்லச் சமையலறைக்குள் வந்தாள்.

''அம்பிகா..ஊருக்கு ஒரு டிரங்கால் போட்டு அண்ணியை விசாரிக்கணும். அவங்க உடம்பு சுகமில்லாது படுத்திருப்பதாலே...''

அவள் முடிக்குமுன் அம்பிகா அவளது கையைப் பற்றி இழுத்துச் சென்று நடையில் பொருத்தப்பட்டிருந்த தொலைபேசியருகே நிறுத்தினாள்.

''தாராளமா ஊருக்கு போன் செய்துக்கோ, ஏன் இப்படித் தயங்கறே. நாங்கள் எல்லாம் உனக்கு அன்னியரா? இந்த வீடு உனக்குப் புதுசா?'' கேலியாகக் கேட்டாள்.

சில நிமிஷங்களில் டர்பனுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கிடைத்துவிட்டது.

அண்ணியின் குரலைக் கேட்டதுமே காவேரியின் மேனி புல்லரித்தது.

''நல்லா போய்ச் சேர்ந்துட்டியா கண்ணு. குளிரிலே ரொம்ப அலையாதே, பத்திரம்.''

பெற்ற தாயைவிடப் பரிவுடன் விசாரித்தபோது கண்கள் ஈரமாகிப் போனாள். நெஞ்சை உணர்வுகள் இறுக்கின.

''நீங்க எப்படி இருக்கீங்க அண்ணி! எனக்கு உங்களைப் பத்தித்தான் கவலை. மருந்துகளைப் சாப்பிட மறக்காதீங்க...'' பேசமுடியாது உணர்ச்சியில் அவள் குரல் தடைப்பட்டது.

அண்ணியின் மடியில் அமர்ந்தபடி, மூக்கை அவளது பட்டுக் கழுத்துமீது உராய்ந்துகொண்டு, இரவு வேளைகளில் 'ஒரு கதை சொல்லுங்க அண்ணி, ஒரு சின்னக் கதை, இந்தியக் கதை,' என்று வற்புறுத்தி விளையாடிய அந்தச் சிறுமிப்

பருவம் குபீரென்று நினைவில் விரிய அண்ணியின் காதோரத்திலே மணத்த லாவே சென்டின் வாசனை போன் வழியே அறை முழுவதும் லயித்துக் கொண்டு விட்டது போன்றதொரு பிரமிப்பிலே அவள் ஒருகணம் மலைத்துப் போனாள்.

அண்ணி சவுந்தரி இந்த வயதிலும் எத்தனை ஒரு அழகி-என்ன கம்பீரமான தோற்றம்- பேச்சில் என்ன கனிவு-வார்த்தைகளில் எத்தனை பணிவு- எல்லாவற்றையும் விட அவள் மீது அண்ணிக்கு எத்தனை அன்பு -பாசம்...!

''நான் நல்லா இருக்கேன். என்னைப் பத்தி நினைச்சுட்டு கவலைப்படறதை விட்டுட்டு வேலையை நல்லா செய்துட்டுப் பத்திரமா ஊருக்குத் திரும்பிவிடு.'' ரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு 'குட்நைட்' என்றதுடன் போனை வைத்து விட்டாள் அண்ணி.

சவுந்தரிஅண்ணி தொலைபேசியில் யசோதா அண்ணி போல மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருக்க மாட்டாள். 'மத்தவங்களுக்கு இடைஞ்சலா ஊர்க்கதை பேசித் தொலைபேசியில் நேரத்தை போக்குறது தப்பும்மா'-அவ்வப் போது இப்படி எத்தனையோ அறிவுரைகளைச் சொல்லி அவளை ஆளாக்கிவிட்டவள் சவுந்தரி. பெற்ற அன்னைக்கு மேல் ஒரு படி வைத்துப் பூஜிக்கப்பட வேண்டியவள்.

'சே! என்ன இது! பச்சைக் குழந்தைபோல எத்தனையோ வருடம் பிரிஞ்சுட்டாப்போல கண் கலங்கிட்டு, அம்பிகா பார்த்தால் கேலி செய்வாள்!'

தன் உணர்வுகளைச் சமாளித்துக் கொண்டு உள்ளே வந்து மற்றவர்களுடன் கலந்து கொண்டாள்.

சித்தப்பா ஜோதியும், அண்ணன் சதாசிவமும் வீடு திரும்பியதும் ஒரே பேச்சும் சிரிப்புமாகப் பொழுது வேகமாக ஓடியது.

அன்று இரவு அவள் வெகுநேரம் உறங்கவில்லை. ஜோதி சித்தப்பாவும், சித்தியும், அண்ணன், அம்பிகா எல்லோருடன் முன்னறையில் உட்கார்ந்து கொண்டு மின்விசைக் கணப்பில் எழுந்த கதகதப்பை அனுபவித்தபடி கோப்பை நிறையக் காப்பியை நிறைத்து மெல்ல உறிஞ்சியபடி இடையே சூடான சமுசாவைக் கடித்துக் கொண்டு கதைகள் பல பேசி மகிழ்ந்த போது அவள் நெடு நாட்களுக்குப்பின் மனம்விட்டு கலகலவென்று அவர்களுடன் சிரித்தாள்.

ஆனால் சித்தப்பாவோ, அம்பிகாவோ, யாரும் மறந்துகூட வாய் தவறி மோகனைப் பற்றிய பேச்சை எடுக்கவேயில்லை. அவர்களிருவருக்கும் நடக்கவிருந்த கல்யாணம் நின்று போனது சித்தப்பா குடும்பத்திற்கும் தெரிந்த கதைதான். அவன் தலைமை ஆசிரியராகப் பணி செய்யும் பள்ளிக்கூடத்திற்கு அவள் இன்ஸ்பெக்ஷனுக்கு வந்திருக்கிறாள்-அவனைச் சந்தித்து மனம் இடிந்து... உணர்வுகள் தொய்ந்து போயிருப்பாள் என்ற ஊகம் அவர்களுக்கு. எனினும் யாரும் அதைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

சித்தப்பா குடும்பத்தினர் மிக்க கண்யமானவர்கள்... ஆனால் இப்போது அங்கு மட்டும் சின்ன அண்ணி யசோதா இருந்திருந்தால், அப்பப்பா! குரோதமும் கேலியுமாக மோகனைப் பற்றி நினைவூட்டி வார்த்தைகளால் சித்திரவதை செய்து அவளை ஒரு மூச்சு அழ வைத்திருப்பாளே!

பேச்சுவாக்கில் அவள் மறுநாள் பள்ளிக்கூடம் போவதற்கு அங்கிருந்து நடந்து போகப் போகிறாள் என்பதை அறிந்ததும் சித்தப்பா உடனே மறுப்புத் தெரிவித்தார்.

''என்னத்துக்குக் குளிரில் நடக்கணும்... சதாசிவத்தின் கார் சும்மாத்தானே காரேஜில் நிக்குது. அம்பிகா கிட்ட

சாவியிருக்கு. எடுத்துட்டுப் போய் வா'' அன்புடன் உத்தரவிட்டார்.

அவளது சொந்த வீட்டில் கூட இத்தனை சலுகை கிடைத்ததில்லை. சின்ன அண்ணன் லோகேந்திரன் தன் பென்ஸை ஓட்ட அவளிடம் ஒரு நாள் கூட கொடுத்ததில்லை. ஒரு தடவை அவசரத்திற்குக் கேட்டதற்கு, 'கார், பேனா, ரிஸ்ட்வாட்ச் இவைகளை ஒருவன் தன் மனைவியைப் போலப் பத்திரமா பாதுகாக்கணும்-மற்றவங்க தொட அனுமதிக்கக் கூடாது' விளையாட்டு போலப் பேசி அழுத்தமாக மறுத்து விட்டான்.

ஆனால் சித்தப்பாவுக்குத்தான் எத்தனை தாராளமான மனம்!

போர்வைகளின் அடியில் உருவான கதகதப்பில் மிருதுவான படுக்கையிலே அன்பான உறவினர்களின் அரவணைப்பில் அவள் நடு இரவுக்குப் பின் நன்றாகவே உறங்கிப் போனாள்.

★ ★ ★

மறுநாள் காலை சதாசிவத்தின் காரை எடுத்துக்கொண்டு அவள் டாக்டர் உத்தரவிட்டிருந்த அந்த ஹோம் விசிட்டிற்குப் புறப்பட்டாள்.

நான்காவது ஸ்டாண்டர்டை அடைந்துவிட்டிருந்த ராமுவுக்குப் பிறந்த பொழுதே ஏற்பட்ட நோய் அது. பாரம்பரியமாக வரக்கூடிய ஒரு கொடுமையான நோய் அவனது ஆரோக்கியம் நலிந்து கொண்டு போவதைப் பற்றி எச்சரிக்க அவன் தாயுடன் நேரிடையே பேச விரும்பி டாக்டர், காவேரியை, காலை வேளை அந்தத் தாயைச் சந்தித்துப் பள்ளிக்கூடத்திற்கு டாக்டரைக் காண வரச் சொல்ல

அன்று இரவு அவள் வெகுநேரம் உறங்கவில்லை. ஜோதி சித்தப்பாவும், சித்தியும், அண்ணன், அம்பிகா எல்லோருடன் முன்னறையில் உட்கார்ந்து கொண்டு மின்விசைக் கணப்பில் எழுந்த கதகதப்பை அனுபவித்தபடி கோப்பை நிறையக் காப்பியை நிறைத்து மெல்ல உறிஞ்சியபடி இடையே சூடான சமுசாவைக் கடித்துக் கொண்டு கதைகள் பல பேசி மகிழ்ந்த போது அவள் நெடு நாட்களுக்குப்பின் மனம்விட்டு கலகலவென்று அவர்களுடன் சிரித்தாள்.

ஆனால் சித்தப்பாவோ, அம்பிகாவோ, யாரும் மறந்துகூட வாய் தவறி மோகனைப் பற்றிய பேச்சை எடுக்கவேயில்லை. அவர்களிருவருக்கும் நடக்கவிருந்த கல்யாணம் நின்று போனது சித்தப்பா குடும்பத்திற்கும் தெரிந்த கதைதான். அவன் தலைமை ஆசிரியராகப் பணி செய்யும் பள்ளிக்கூடத்திற்கு அவள் இன்ஸ்பெக்ஷனுக்கு வந்திருக்கிறாள்-அவனைச் சந்தித்து மனம் இடிந்து... உணர்வுகள் தொய்ந்து போயிருப்பாள் என்ற ஊகம் அவர்களுக்கு. எனினும் யாரும் அதைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

சித்தப்பா குடும்பத்தினர் மிக்க கண்யமானவர்கள்... ஆனால் இப்போது அங்கு மட்டும் சின்ன அண்ணி யசோதா இருந்திருந்தால், அப்பப்பா! குரோதமும் கேலியுமாக மோகனைப் பற்றி நினைவூட்டி வார்த்தைகளால் சித்திரவதை செய்து அவளை ஒரு மூச்சு அழ வைத்திருப்பாளே!

பேச்சுவாக்கில் அவள் மறுநாள் பள்ளிக்கூடம் போவதற்கு அங்கிருந்து நடந்து போகப் போகிறாள் என்பதை அறிந்ததும் சித்தப்பா உடனே மறுப்புத் தெரிவித்தார்.

''என்னத்துக்குக் குளிரில் நடக்கணும்... சதாசிவத்தின் கார் சும்மாத்தானே காரேஜில் நிக்குது. அம்பிகா கிட்ட

சாவியிருக்கு. எடுத்துட்டுப் போய் வா'' அன்புடன் உத்தரவிட்டார்.

அவளது சொந்த வீட்டில் கூட இத்தனை சலுகை கிடைத்ததில்லை. சின்ன அண்ணன் லோகேந்திரன் தன் பென்ஸை ஓட்ட அவளிடம் ஒரு நாள் கூட கொடுத்ததில்லை. ஒரு தடவை அவசரத்திற்குக் கேட்டதற்கு, 'கார், பேனா, ரிஸ்ட்வாட்ச் இவைகளை ஒருவன் தன் மனைவியைப் போலப் பத்திரமா பாதுகாக்கணும்-மற்றவங்க தொட அனுமதிக்கக் கூடாது' விளையாட்டு போலப் பேசி அழுத்தமாக மறுத்து விட்டான்.

ஆனால் சித்தப்பாவுக்குத்தான் எத்தனை தாராளமான மனம்!

போர்வைகளின் அடியில் உருவான கதகதப்பில் மிருதுவான படுக்கையிலே அன்பான உறவினர்களின் அரவணைப்பில் அவள் நடு இரவுக்குப் பின் நன்றாகவே உறங்கிப் போனாள்.

★ ★ ★

மறுநாள் காலை சதாசிவத்தின் காரை எடுத்துக்கொண்டு அவள் டாக்டர் உத்தரவிட்டிருந்த அந்த ஹோம் விசிட்டிற்குப் புறப்பட்டாள்.

நான்காவது ஸ்டாண்டர்டை அடைந்துவிட்டிருந்த ராமுவுக்குப் பிறந்த பொழுதே ஏற்பட்ட நோய் அது. பாரம்பரியமாக வரக்கூடிய ஒரு கொடுமையான நோய் அவனது ஆரோக்கியம் நலிந்து கொண்டு போவதைப் பற்றி எச்சரிக்க அவன் தாயுடன் நேரிடையே பேச விரும்பி டாக்டர், காவேரியை, காலை வேளை அந்தத் தாயைச் சந்தித்துப் பள்ளிக்கூடத்திற்கு டாக்டரைக் காண வரச் சொல்ல

உத்தரவிட்டிருந்தார். தாய்மார்களைக் கண்டு அவர்களது பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பற்றி டாக்டர் நேரிடையே பேச விரும்புவதை வீட்டைத் தேடிப் போய்ச் சொல்லிவிட்டு, வீட்டுச் சூழ்நிலை, சுகாதாரம் எல்லாவற்றையும் குறிப்பெடுத்து வரும் வேலைதான்- ஹோம் விசிட். சில சமயம் காவேரிக்கு ஒரு காலைப் பொழுதில் ஐந்து அல்லது ஆறு ஹோம் விசிட்டுகளை முடித்துக்கொண்டு பள்ளிக் கூடத்திற்கு வரவேண்டியிருக்கும். ஆனால் அன்று காலை ராமுவின் வீடு ஒன்றைத்தான் அவள் பொறுப்பில் டாக்டர் கொடுத்திருக்கிறார்.

வசதிக் குறைவான அடிமட்டவாசிகளான இந்தியர்கள் வசிக்க முனிசிபாலிடியார் கட்டி உதவியுள்ள 'சப்-எக்னாமிகல் ஹவுஸ்' என்ற வீட்டுவாரியக் குடியிருப்புப் பகுதியில்தான் ராமுவின் பெற்றோர்கள் வசித்தனர். இந்தி மொழி பேசும் வட நாட்டவர்கள் என்பதை வாசல் முன்புறத் தோட்டத்தில் கர்த்தா பூசை மூங்கில் கொடியில் பதிக்கவிட்டிருந்த அனுமான் கொடி அறிவுறுத்தியது.

அதைக் கண்டு திடீரென்று அவள் நினைவு தாமோதரன் பக்கம் தாவவே அவளையும் மீறிச் சிரித்து விட்டாள்.

''அமெரிக்க நண்பர்களில் ஒருவன் டர்பனில் உள்ள மத்திய தர வகுப்பு இந்தியர்கள் வசிக்கும் பகுதியைப் பார்க்க விரும்பினான். காரில் அவனை நமது சாட்ஸ்வொர்த் பகுதிக்கு அழைத்துப் போனேன். ஹைவேயில் ஓரமாகக் காரை நிறுத்திப் பள்ளத்தாக்கில் நெருப்புப் பெட்டிகள் போல அடுக்கடுக்காகக் கட்டப்பட்டிருந்த வீடுகளைக் காட்டினேன். உஷ்...என்று என் நண்பன் விசிலடித்தான். இந்த சாட்ஸ்வொர்த்தில் மட்டும் எப்படி இத்தனை கம்யூனிஸ்ட்டுகள் இருக்க அனுமதிக்கப்பட்டிருக்காங்க? கம்யூனிஸத்தை எதிர்க்கும் நாடாச்சே இது!-'' ஆச்சரியப் பட்டான்.

''இது அனுமான் பகவானுக்கு இந்தி பேசுகிற இந்தியர்கள் போடும் பூஜைக்கொடி. ஒவ்வொரு ஆண்டும் கர்த்தா பூஜை முடிந்ததும் அடையாளமாக ஒரு சிவப்புக் கொடியை வாசலில் ஏற்றுவார்கள்'' என்று விளக்கினேன்.

உடனே அவன் பிடித்துக்கொண்டு விட்டான்.

''ஆமாம், இந்த அனுமார் என்பவர் யார்?''

''அவரைத் தெரிஞ்சுக்க நீங்க ராமாயணம் என்பதை படிக்கணும்'' என்றேன்.

''ராமாயணம் என்பது என்ன?'' என்று ஆரம்பித்தானே பார்க்கணும்!

''அது ஒரு லாங் ஸ்டோரி. ஒரு நாளில் சொல்லிமாளாது என்று ஒருவாறு அவனை அடக்கினேன். அடுத்த படியாக ராமாயணத்தைப் படிச்சுச் சொல்லுன்னு ஆரம்பிச்சுடு வானோன்னு பயந்து போயிட்டேன்.'' குறும்புத்தனமாகக் கூறிவிட்டு அவள் குலுங்க குலுங்கச் சிரித்ததை மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டு அவன் நின்ற நினைவு நெஞ்சை நெருடியது.

காரை வீட்டின் முன் நிறுத்திவிட்டு, வெளியே வந்து எட்டிப் பார்த்த மெலிந்த தோற்றமுள்ள அந்தப் பெண்மணியிடம் ''குட்மார்னிங் மதர், நான் உள்ளே வரலாமா?'' என்று கேட்டாள்.

''வாங்கோ நர்ஸ். இப்படி உட்காருங்கோ.'' ஒரு நாற்காலியைக் காட்டினாள் அந்தத் தாய். ''தாகத்துக்கு டீ கொண்டு வரேன் இருங்க.'' சொல்லிவிட்டு உள்ளே மறைந்தாள்.

பள்ளிக்குப் புறப்படச் சீருடையில் ராமு தள்ளு வண்டியில் சிரித்துக் கொண்டு முன்னறையில் அமர்ந்திருந்தான்.

''ஹோம் வொர்க் செய்தியா ராமு...?'' என்று கேட்டபடி அவன் அருகே நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''இது தான் ஹோம் வொர்க்'' என்று புத்தகப்பெட்டியிலிருந்த ஒரு வெள்ளைத் தாளை எடுத்து அவளிடம் நீட்டினான் ராமு.

பனிரெண்டு வயதுப் பையன் நோயினால் ஒடுங்கித் தசைகள் தேய்ந்து, முதுகு எலும்பு வளைந்து, மிகவும் கோரமான நிலையில் நடக்க முடியாது தள்ளு வண்டியில் ஒரு ஊனமுற்றவனாக உட்கார்ந்திருப்பதை எண்ணி மனம் தளர்ந்து போனாள் அவள்.

பென்சில் கோடுகளால் சீருடையில் ஒரு நர்ஸைக் காகிதத்தில் வரைந்திருந்தான் ராமு.

''ரொம்ப அழகா ஓவியம் வரைகிறாயே? யார் இந்த நர்ஸ்?'' வேடிக்கையாகக் கேட்டாள்.

''இது நீங்க. உங்களை அப்படியே வரைய முயன்றேன். முடியலை. ஆனாலும் நல்லாவே வரைஞ்சிருக்கேன். இதை என் பரிசா ஞாபகத்துக்கு வச்சுக்கோங்க. நாம் மறுபடி சந்திக்கப் போறது இல்லையே?''

தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு. ராமு என்ன சொல்லுகிறான்? எழுந்து அருகில் சென்று நெற்றியில் புரண்ட அவனது கிராப்புச் சிகையை அன்போடு தள்ளி ஒழுங்கு செய்தாள்.

''ரொம்ப அழகா வரைஞ்சிருக்கே. தாங்க்யூ. அடுத்த வாட்டி வரும்போது வாட்டர் கலரிலேயே என்னை ஓவியம் தீட்டித் தரணும். சரியா?...''

''எப்படி முடியும்? எனக்குத்தான் 'சூடோ ஹைபர் டிரேபிக் மஸ்குலர் டிஸ்ட்ரோஃபி' என்கிற வியாதி வந்திருக்கே. இன்னும் அதிக நாள் நான்...'' அவன் முடிக்கு

முன் பதறிப் போன காவேரி அவன் வாயைச் சட்டென்று பொத்தினாள்.

''யார் இதெல்லாம் சொன்னது?'' அதட்டிக் கேட்டாள்.

''டாக்டர் என்னைப்பத்தி எழுதி வச்சிருக்கிற கார்டை என் அருகே வச்சுட்டு சிகரெட் பிடிக்க வராந்தாவுக்குப் போனார். சட்டுனு நான் எடுத்துப் படிச்சேன். தப்புதான், ஆனால் என்னைப் பத்தி நான் தெரிஞ்சுக்க ஆசைப்படறது தப்பா? இன்னும் கொஞ்சநாளில் நான் இறந்து விடுவேன்னு பயப்படறதாக டாக்டர் அதில் எழுதியிருந்தார். நேத்து ராத்திரி நான் அப்பாவோட டிவைன் லைப் புத்தகமொன்றை எடுத்துப் படிச்சேன்..''

''என்ன படிச்சே?'' காவேரியின் குரல் கரகரத்தது.

''மரணத்திற்குப் பின் வாழ்வு என்கிறதைப் படிச்சேன். சுவாமி வெங்கடேசானந்தாவின் சொற்பொழிவில் ஒன்று அது. அதைப் படிச்சதும் எனக்கு மரணத்தைப் பற்றி பயம் போயிட்டது.'' முறுவலித்தான் ராமு.

இந்தச் சின்ன வயதில், இத்தனை அறிவா? சிந்திக்கும் திறமையா? மரணத்தைத் துச்சமாகக் கருதும் இந்தச் சிறுவனிடம் உள்ள துணிவில் ஒரு துளியாவது அவளுக்கு இருக்க வேண்டாமா?

காதல் தோல்வியில் இப்படிப் பொடிப் பொடியானது எத்தனை மதியீனம்? மோகனது நினைவுகளை உதறிவிட்டு அவள் நிமிர்ந்து நின்று தனக்காக ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டாமா?

வேகமாக வந்த காரியத்தை முடித்துக் கொண்டு ராமுவின் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்துவிட்டு-புதியதொரு துணிவுடன் காரில் ஏறிக்கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டாள்.

7

அதற்குப் பின் பள்ளிக்கூட வேலையில் நாட்கள் துரிதமாக நகர்வதைக் காவேரி உணர்ந்தாள்.

தினமும் காலை பத்து மணி அளவில் பள்ளிக்கூட வேலையாளிடம் பெரிய மரத்தட்டில் போன்சைனா டீகெட்டிலில் சூடான தேநீரும், ஊற்றிச் சாப்பிட கோப்பைகளும், ஒரு பீங்கான் தட்டில் பிஸ்கட்டுகளும் நிறைத்து மோகன் பரிசோதனை அறைக்கு அனுப்பிக் கொண்டிருந்தான்.

தேநீர் நேரம் முடிந்து பள்ளிக்கூடம் மீண்டும் துவங்கப்போகும் சமயம் அவசரமாக அவர்களது அறைக்குள் புகுந்து உரத்த குரலில், ''குட்மார்னிங் டாக்டர் குட்மார்னிங் எவ்வரிபடி!'' என்று வணக்கம் தெரிவித்து விட்டு முகத்தில் பெரியதொரு புன்னகையுடன் டாக்டரது மேஜையருகே வந்து, ''தேநீர் சாப்பிட்டீர்களா? ரொம்பக் குளிராக இருந்தால் சொல்லுங்கள். மின்விசைக் கணப்புகளைக் கொண்டு வந்து அறைக்குள் வைக்கச் சொல்கிறேன். இன்னும் ஏதாவது தேவையென்றால் சொல்லத் தயங்கவேண்டாம். பரிசோதனை பற்றி ஏதாவது சந்தேகங்கள் எழுந்தால் உடனடியாகச் சொல்லி அனுப்புங்கள், வந்து ஆவன செய்கிறேன்'' மிகவும் குழைவாகப் பேசினான்.

அவன் அனுப்பிய தேநீரையும் பிஸ்கட்டுகளையும் காவேரி திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஜோதி சித்தப்பாவின் மருமகள் அம்பிகா தினமும் அன்புடன் கட்டிக் கொடுத்த ஸாண்ட்விச்சுகளையும். ஃபிளாஸ்க்கில் நிறைத்துக் கொடுத்த தேநீரையும் இடைவேளையின்போது சாப்பிட்டாள். அத்துடன் அவன் அறைக்கு டாக்டரிடம் பேச வந்ததுமே தலையைக் குனிந்துகொண்டு தன் குறிப்புப் புத்தகத்துடன் உறவாடினாள்.

டாக்டர் ஸ்காட்டிடம் அவன் பல்லை இளித்துக் கொண்டு பவ்யமாக நின்று பேசியதை ஓரக் கண்ணால் கவனித்தபோது அவளுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு தான் வந்தது. தாமோதரன் கூறுவது முற்றிலும் உண்மை-

''இந்த நாட்டில் இந்தியன் காலடி வைத்து நூறாண்டு காலத்திற்கு மேலாகிவிட்ட போதிலும் மவுண்ட் எச்சோம் என்ற இடத்தில் தொழிலாளிகள் தங்கும் கொட்டகையில் கூட்டமாகக் குவிந்து கொண்டு வெள்ளைக்கார எஜமானது வருகைக்கு எதிர்பார்த்து அரண்டு போய் நெஞ்சு படபடக்க அன்று நின்று கொண்டிருந்தானே -அந்த ஏழைத்தொழிலாளி இந்தியனின் பயங்கொள்ளித்தனம் இன்னமும்- படித்த பின்னரும்-பிரபலமான பெரும் புள்ளிகளாக எல்லாத் துறையிலும் முன்னேறிவிட்டபோதிலும் அநேக இந்தியரின் நெஞ்சிலிருந்து நீங்கவேயில்லை. வெள்ளைத் தோலைக் கண்டு மிரண்டு கொள்ளும் இந்தக் கோழைத்தனம் நம் மனதினின்று முற்றிலும் நீங்கும்வரை நமக்குக் கதி மோட்சம் கிடையாது.''

'இந்த மோகன் ஒரு அயோக்கியன் மட்டுமல்ல; மிகப் பெரிய கோழை. அடிமை உணர்வில் ஊறிப் போனவன். சே! இவனும் ஒரு மனிதனா! இவனைப் போய் நான் காதலித்தேனே! நானும் ஒரு முட்டாள்.'

தனக்குள்ளே எண்ணியபடி புத்தகத்தில் வேகமாக எழுதிக்கொண்டிருந்தாள். லேடீஸ்மித்துக்குக் கிளம்பியபோது அவளுள் உருவாகி விட்டிருந்த அந்த பயமும் கவலையும் மாயமாகிப் போயின. அதற்குப் பதில் 'அப்பாடா! இவனைத் திருமணம் செய்து கொள்ளாது தப்பினேன். அதுவே என் பாக்கியம்' என்றதொரு அமைதியும் தெம்பும் ஏற்பட்டன.

வியாழக்கிழமை மாலையுடன் பரிசோதனை வேலை முடிந்துவிட்டது. வெள்ளிக்கிழமை காலை பள்ளிக்கூடம் வந்ததும் டாக்டர் ஸ்கார்ட் மோகனுடன் பள்ளிக்கூடக்

கட்டிடத்தைச் சுற்றிப் பார்வையிட்டு, வகுப்பு அறைகள் எத்தனை-ஜன்னல்கள் போதியவைகளாக உள்ளனவா-வெளிச்சம் தேவையான அளவு அறைக்குள்ளே கிட்டுகிறதா, கழிவறைகள் சுத்தமாக உள்ளனவா? அங்குள்ள பிள்ளைகளுக்குத் தேவையான அளவுக்கு விளையாட்டு மைதானம் உள்ளதா? என்று பல குறிப்புகளையும் தமது அறிக்கையில் சேர்த்துக் கொண்டு கடைசியாக, பிரின்ஸிபால் அன்போடு வழங்கும் தேநீரைக் குடித்துவிட்டுக் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிடுவார்.

அவருடன் நர்ஸ்களும் தங்கள் மூட்டையைக் கட்டிக் கொண்டுகிளம்ப வேண்டும். கடைத் தெருவுக்கோ, உறவினர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வரவோ பொழுது இருக்காது என்று எண்ணிய காவேரி, வியாழக்கிழமை மாலையே வீடு திரும்புமுன் கடைத் தெருவுக்குக் காரை ஓட்டினாள்.

பூக்கடை ஒன்றின் அருகே காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றாள். சித்தப்பா-சித்தி இருவரும் தன்னிடம் காட்டிய அன்பிற்கும், அவர்களது சிறந்த விருந்தோம்பலுக்கும், நன்றி தெரிவிக்க விரும்பி அவர்கள் வீட்டு முன்னறையில் வைக்க மலர்கள் வாங்கப் பிரியப்பட்டாள்.

விதவிதமான அலங்காரத்தில் பலவகை மலர்களைத் தயாராகப் பீங்கான் கிண்ணத்தில் செருகி, விலைப்பட்டியலுடன் கடைக்காரர் மேஜைகள் மீது பரத்தி வைத்திருந்தார்.

காரனேஷன்-கிளாடியோலாஸ்-ஜவ்வந்தி-ரோஜா மலர்களைக் கையில் விரித்துப் பிடித்திருக்கும் விசிறி போல அழகான ஒரு பீங்கான் கிண்ணத்தில் செருகி, கிண்ணத்தின் முன்னால் ஒரு வண்ண ரிப்பனை வளைத்துப் பட்டாம் பூச்சிபோல மடித்துக் கட்டியிருந்த மலர் அலங்காரம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதைத் தேர்ந்தெடுத்துக்

கடைக்காரர் கொடுத்த கார்டில் 'அன்புள்ள சித்தப்பா-சித்திக்கு காவேரி நன்றியுடன் அனுப்பியது' என்று ஆங்கிலத்தில் எழுதிக் கையெழுத்துப் போட்டு, மாலை நாலு மணி அளவில் அவர்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று கடைக்காரரிடம் முகவரியையும்-உரிய பணத்தையும் கொடுத்து விட்டு வெளியேறினாள்.

அடுத்தபடியாகத் தெரிந்த பெரியதொரு கடைக்குள் புகுந்தாள். அம்பிகாவுக்கு ஒரு அழகான மேஜை விரிப்பை வாங்கி அதைக் கடைக்காரப் பெண்ணிடம் கொடுத்து வண்ணக் காகிதத்தால் சுற்றச் செய்து 'நன்றி' என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட கார்டை அதன் மீது ஒட்டச் செய்தாள். கையெழுத்திட்டு அதை எடுத்துக்கொண்டு வெளியே திரும்பியவளுக்குச் சட்டென்று நினைவுக்கு வந்தது.

அண்ணி சவுந்தரிக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேண்டுமே! வெளியூருக்குப் போய் வந்ததும் பச்சைக் குழந்தையைப் போல 'ஆமாம், எனக்கு என்ன கொண்டு வந்தே?' என்று வேடிக்கையாகக் கேட்டு மார்புடன் தழுவி நெற்றி மீது முத்தமிட்டு வரவேற்பாளே. அண்ணிக்கு மிகவும் பிரியமானது பாரிஸ் நாட்டுத் தயாரிப்பான செண்ட் வகைகள். அதில் எதாவது... மறுபடி கடைக்குள்ளே வளைய வந்தாள்.

அண்ணி சவுந்தரிக்குப் பிடித்தமான 'வொர்த்' செண்ட் பாட்டில் ஒன்றைக் கொஞ்சம் அதிக விலை கொடுத்தே வாங்கினாள். 'அண்ணிக்குக் கொடுக்க விலையைப் பற்றி யோசிப்பது தவறு. அண்ணி காட்டும் அன்புக்கு உலகத்தையே விலைக்கு வாங்கித் தந்தால் கூட ஈடாகாதே' என்று எண்ணியபடி மணிபர்சிலிருந்த பணத்தில் பெரும் பகுதியைக் கொடுத்து அந்த செண்ட் பாட்டிலை வாங்கிக் கொண்டாள்.

''ஊருக்குத் திரும்பி வரதுக்கு முன்னாடி-ஜோதி சித்தப்பா இருக்கும் தெருக் கோடியிலே தோட்டத்திலே

மகாத்மா காந்திக்கு ஒரு சிலை எழுப்பியிருக்காங்களே, அந்தத் தோட்டத்துத் தரையில் கிக்கியூ புல் வளர வச்சு அழகா வெட்டிவிட்டிருக்காங்களாம். உனக்கு அந்த வகை புல் பிடிச்சா சொல்லு. நம்ம வீட்டு முன் பக்கத்துத் தோட்டத்திலே அதை வளர வச்சுக்கலாம்''-சவுந்தரி அண்ணி அவள் புறப்படும் முதல் நாள் மாலை சொன்னது நினைவுக்கு வரவே காரை ஜோதி சித்தப்பா வசித்த தெருக்கோடிக்கு ஓட்டினாள்.

மகாத்மா காந்தியடிகள் அந்த நாட்டுக்கு வந்து சுதந்திரப் போராட்டத்திற்கு வித்து ஊன்றி மக்களைத் தட்டி எழுப்பி விட்டுத் தாய்நாட்டிற்குத் திரும்பிவிட்டார். அந்த நினைவை வலியுறுத்த-அவருக்கு நன்றி தெரிவிக்கும் பாணியில் இந்திய மக்கள் அவருக்கு அங்கே ஒரு சிலை எழுப்பி அந்த இடத்தை ஒரு புனித ஆலயம் போல் அமைத்திருந்தனர். சிலையைச் சுற்றிலும் பரவியிருந்த தோட்டத்துத் தரைமீது கிக்கியூ புல் பசுமையாகப் படர்ந்திருந்ததைப் பார்த்து வியப்புடன் மெல்ல அதைக் கையால் தொட்டாள் காவேரி.

பார்வைக்குக் கோரையைப்போல் சற்றுக் கடினமாகத் தென்பட்ட அந்தப் புல் கையால் தொட்டபோது வெல்வெட்டை வருடுவது போன்று எத்தனை மென்மையாக இருந்தது! வெளிப்பார்வையில் தெரிந்த தாமோதரனின் முரட்டுத்தனம் போலப் பார்வைக்குக் கோரையாகத் தெரிந்த புல். அவனது மென்மையான அன்பு உள்ளத்தைப் போல மிருதுவாக...

திடீரென்று காவேரியின் கண்களில் நீர் புரண்டது. அவள் வாழ்க்கையில் எத்தனை ஒரு பெரிய தவறைச் செய்து விட்டிருக்கிறாள்.!

தாமோதரனை நன்றாக ஆரம்பத்திலேயே புரிந்து கொண்டிருந்தால், -அண்ணி மறுப்புத் தந்திருந்தாலும்- அவள் ஒரே பிடிவாதமாக இருந்திருந்தால், மோகனால் அவளுக்கு

அவமானம் வந்திருக்காது. அவள் தாமோதரன் மனைவியாகிச் சகல வசதிகளுடன் அன்பான கணவனுடன் சுகமாக வாழ்ந்து கொண்டிருப்பாள்.

அரியதொரு வாய்ப்பை ஏற்கத் தெரியாது, அழகுக்கு மயங்கி ஒரு அடிமையைக் காதலித்து, அவனால் கைவிடப்பட்டு.. தாமோதரன் மனதை அவள் புண்படுத்திவிட்டது பெரும் தவறு, மன்னிக்க முடியாத குற்றம். கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கடிகாரத்தைப் பார்த்தாள்.

'ஐயோ! இத்தனை நேரம் நர்ஸ் ஜயா லேடீஸ்மித்தை விட்டு வெளியேறியிருப்பாளே' என்ற நினைப்பிலே அரண்டு போனாள். சித்தப்பா வீட்டிற்கு விரைந்தாள். சித்தப்பா வீட்டவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு அம்பிகாவுக்குத் தெரியாது அவளது படுக்கையறை மேஜை மீது பரிசுப் பொட்டலத்தை வைத்துவிட்டுத் தன் பெட்டியைக் கார் டிக்கியில் வைத்துப் பூட்டிக்கொண்டு அவள் உடனடியாகக் கிளம்ப வேண்டும்.

வழியில் மறக்காமல் பெட்ரோல், எண்ணெய் இத்யாதிகளைக் காருக்குப் போட்டுக்கொண்டு நிதானமான வேகத்தில் மாலை நாலு மணிக்குள் டர்பன் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். நேரே தலைமை அலுவலகத்திற்குப் போய்ப் பரிசோதனை அறிக்கை, லாக் புக் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு, நான்கு நாட்கள் வெளியூரில் தங்கியதற்கு அரசு அளிக்கப்போகும் போக்குவரத்துச் செலவுத்தாளைப் பூர்த்திசெய்து தலைமை அதிகாரியிடம் கொடுத்து விட்டு, கவர்மெண்ட் கராஜில் காரைக்கொண்டு நிறுத்திவிட்டுத் தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு நர்ஸ் நளினியின் காரில் ஒரு லிப்ட் வாங்கிக்கொண்டு வீடு போய்ச் சேர வேண்டும். இருட்டிய பின் கவர்மெண்ட் காரை டாக்டரோ நர்ஸ்களோ சாலையில் ஓட்டக்கூடாது என்பது சட்டமாயிற்றே. அதனால்தான் அவள் சிறிதும் தாமதிக்கக்கூடாது; கிளம்ப வேண்டும் என்ற கவலையில் அவசரப்பட்டாள்.

சித்தி வற்புறுத்தியும் அவளால் பகல் உணவுக்கு அங்கே தங்க இயலவில்லை. தொலைதூரம் அவள் போக வேண்டியது போல எண்ணி, சித்தி ஒரு பெரிய பிளாஸ்டிக் டப்பா முழுவதையும் ஸாண்ட்விச்சுகளால் நிறைத்து விட்டிருந்தாள். குடிக்க ஒரு பாட்டிலில் நீரும், பிளாஸ்க்கில் சூடாகக் காப்பியும் நிறைத்துக் கூடைக்குள் வைத்து, அம்பிகா அத்துடன் தன் கையால் பின்னிய ஸ்வெட்டரையும் கொண்டு வந்து காரில் ஏற்றினாள்.

சித்தப்பாவும் அவர் மகனும் கடையைக் கவனிக்கப் புறப்பட்டுப் போய்விட்டிருந்தனர். காலையில் போகு முன்பே சித்தப்பா அவள் ஊருக்கு எடுத்துப்போக ஒரு கூடை மாதுளம் பழங்களைத் தயாராகக் கட்டி வைத்து விட்டுத் தமது பரிசாக அவள் உபயோகிக்கக் கோட்டேல் கம்பளம் ஒன்றையும் வைத்துவிட்டுப் போயிருந்தார்.

அன்பையும் பரிசுகளையும் கொடுத்து அவளது உணர்வுகளைத் திணறச் செய்து பிரியாவிடை கொடுத்தனுப்பிய ஜோதி சித்தப்பா வீட்டவர்களுக்கு 'பை...பை...' சொல்லிவிட்டு அவள் காரில் அமர்ந்து அதை வேகமாகச் செலுத்தினாள்.

★ ★ ★

லேடீஸ்மித்திலிருந்து கொண்டு வந்த பரிசுப் பொருள்களையும், பெட்டியையும் வாயில் முன் இறக்கிவிட்டு நளினிக்கு நன்றி தெரிவித்தபடி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழையத் திரும்பியவள் திடுக்கிட்டுப் போனாள்.

குளிர்காலப் பொழுதானதால் வராந்தாவிலிருந்த விளக்கைச் சீக்கிரமாகவே எரியவிட்டிருக்கிறார்கள். ஆனால் ஜன்னல் கதவுகளை ஏன் அடைத்திருக்கிறார்கள். வீட்டில் யாருமில்லையா? நெஞ்சு படபடக்க ''லீனா'' என்று ஓங்கிக் குரல் கொடுத்தாள்.

பின்பக்கத்துத் தோட்டத்திலிருந்து அவர்களது ஆப்பிரிக்க வேலைக்காரி தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்தாள்.

அவளது பெட்டியையும் சாமான்களையும் தூக்கிக் கொண்டே பரபரப்புடன் ஸுலுவில் பேசினாள்.

''தோச்சான்! பிக் மக் கோட்டி மனீங்கிசிக்.'' (சின்ன யஜமானி, பெரிய யஜமானிக்கு உடம்பு முடியலை. ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போயிருக்காங்க.)

'சவுந்தரி அண்ணிக்கு உடம்புக்கு முடியலையா? எந்த ஆஸ்பத்திரியில், எப்போது அனுமதிச்சாங்க? சின்ன அண்ணி டிரங்கால் போட்டுச் சொல்லியிருக்கக் கூடாதா? ஐயோ அவங்களுக்கு ஒண்ணும் ஆயிடக்கூடாது. கடவுளே!' மார்பு வேகமாகத் துடிக்க, கால்கள் தள்ளாட நின்றாள்.

அப்பொழுது பக்கத்து வீட்டுப் பெண் தோட்டத்திற்குள் ஓடி வந்தாள்.

''அக்கா! உங்க சின்ன அண்ணி வீட்டுச் சாவியை எங்க அம்மாகிட்ட கொடுத்துட்டு இப்பத்தான் சித்த முன்னே செயிண்ட் ஏடன் ஆஸ்பத்திரிக்கு உங்க பெரிய அண்ணியை காரில் கூட்டிக்கிட்டுப் போனாங்க. டாக்டர் வந்து பார்த்துட்டு ஹார்ட் கேஸ், உடனே ஆஸ்பத்திரிக்குப் போகணும்னு சொன்னாராம்'' என்றாள்.

'மாரடைப்பா? சவுந்தரி அண்ணிக்கு மறுபடியும் ஒ மாரடைப்பா?' கலங்கிப் போன காவேரி பக்கத்து வீட்டு பெண் நீட்டிய சாவியை வாங்கிக் கொண்டு 'தாங்க்யூ' என்றாள்.

கதவைத் திறந்து உள்ளே சென்றவளுக்கு வி வெறுமையாக இருக்கும் தோற்றமே மனதைக் கலவர படுத்தியது. தாங்க முடியாத ஒரு துயரம் அவளுக்கு ஏற்பட

போகிறது என்ற உள்ளுணர்வின் உந்துதலால் காவேரி விக்கி விக்கி அழுதாள்.

8

காவேரி கொண்டு வந்த சாமான்களை லீனா உள்ளே எடுத்து வந்து வைத்தாள்.

பரபரப்புடன் சமையலறைக்குள் சென்று ஃபிரிட்ஜைத் திறந்து பால் புட்டியை எடுத்து ஒரு அலுமினியப் பாத்திரத்தில் ஊற்றி மின்விசை அடுப்பிலே சூடாக்கினாள். வேகமாக ஒரு கோப்பையைக் கழுவித் திடீர் காப்பித்தூளைக் கரண்டியால் அள்ளிப் போட்டுச் சூடாக ஒரு கோப்பைக் காப்பி தயார் செய்தாள்.

துயரத்தின் கொடுமையைத் தாளாது இன்னமும் அழுது கொண்டிருந்த சின்ன எஜமானியின் தோளை மெல்லத் தொட்டாள் லீனா. மரத்தட்டிலே பத்திரமாக எடுத்துவந்த காப்பியை அவள் முன் நீட்டினாள்.

''நர்ஸுக்குப் படிச்சிருக்கிறீங்க. துணிவாக இருக்கணும். முன்பு ஒரு தடவை பெரிய எஜமானி மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் கொஞ்ச நாள் தங்கிவிட்டு வரலையா? அதுபோல இப்பவும் குணமாகிச் சீக்கிரம் வந்துவிடுவாங்க. பயப்படாதீங்க, காப்பியைச் சாப்பிட்டுட்டு முகத்தைக் கழுவிக் கொண்டு உடை மாத்திக்கோங்க. ஆஸ்பத்திரிக்குப் போய் அவங்களைப் பார்க்க வேண்டாமா?'' படபடவென்று ஸுலுவில் பொரிந்து தள்ளினாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு லீனாவைப் பார்த்து முறுவலிக்க முயன்றாள் காவேரி.

நீண்ட காலமாக அந்த வீட்டிலே வேலை பார்த்து வந்த லீனா, தான் ஒரு ஆப்பிரிக்க வேலைக்காரப் பெண் என்பதை

மறந்து அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக உணர்விலும்-உணவு விஷயங்களிலும் ஒன்றி, ஒரு இந்தியப் பெண்ணாக மாறி விட்டிருந்தாள். குழந்தையாக இருந்தபோது காவேரியை அவள் தன் முதுகிலே தூக்கி வைத்துக் கட்டிச் சுமந்தபடி வீட்டு வேலைகளைக் கவனித்தவள். அதனால் அவளுக்குக் காவேரிமீது தன் சொந்த மகள் போன்றதொரு பாசம், உரிமை. சவுந்தரியிடம் வீட்டு எஜமானி என்ற மரியாதை கலந்த விசுவாசம்.

''ம்! நேரமாகுது. இருட்டிப் போச்சு. பஸ்ஸில் போகணுமே. சீக்கிரம் காப்பியைச் சாப்பிட்டுட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு... நான் பெட்டி போட்டு வச்சிருக்கிற துணிகளில் ஏதாவது எடுத்துத் தரேன்-உடுத்திட்டு கிளம்புங்கோ.'' மீண்டும் லீனா உசுப்பினாள்.

பசி, தாகம், பயணக் களைப்பு அத்தனையும் அந்தச் செய்தியைக் கேட்டதில் ஏற்பட்ட துயரத்தில் பஞ்சாகப் பறந்து விட்டிருந்தன. ஒரு வாய்க் காப்பியைப் பருக முயன்றாள். ஊகும், குமட்டிக் கொண்டு வந்தது.

வேகமாகக் குளியலறையை நோக்கி ஓடினாள். முகத்தைக் கழுவி அவள் முடியைச் சீராக்கிக் கொண்டு வருவதற்குள் லீனா அவள் அணிந்து செல்ல, தான் துவைத்துக் காயவைத்துக் பெட்டி போட்டுச் சீராகப் பீரோவில் அடுக்கி வைத்திருந்த உடைகளிலிருந்து ஒரு பிராக்கை எடுத்து வந்து கொடுத்தாள். நாற்காலிக் கைமீது கிடந்த அவளது பச்சை வண்ண ஜெர்சி கோட்டையும் எடுத்துக் கொண்டு விரைந்து வந்தாள்.

''ஹாண்ட்பாக்கை மறக்காம எடுத்துக்கோங்கோ...'' நினைவுறுத்தியபடி வாயில்வரை ஓடிவந்து வழியனுப்பி வைத்தாள்.

சில நிமிடங்களில் காவேரி பஸ் நிலையத்தை அடைந்துவிட்டாள். அதற்குள் நன்றாக இருட்டி விட்டிருந்தது.

இருட்டிய பின்பு தனியே பெண்கள் பஸ்களில் போக அவ்வளவாக விரும்புவதில்லை. அவளுக்குச் சிறிது அச்சமாகத்தான் இருந்தது. நல்ல வேளை; அதிக நேரம் காத்திருக்கத் தேவையிருக்கவில்லை. அடுத்த சில நிமிஷங்களில் வந்து நின்ற பஸ்ஸில் அவசரமாக ஏறி இடம்பிடித்துக் கொண்டாள்.

ஆஸ்பத்திரி வாயிலில் அவள் இறங்கியபோது பார்வையாளர்களின் நேரம் முடிவடையவில்லையாதலால் வராந்தாவிலும் வார்டுகளிலும் உறவினர்கள்-நண்பர்களின் கூட்டம் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. அதனால் அவளால் லோகேந்திரன் அண்ணனையும் யசோதாவையும் சட்டென்று அந்தக் கூட்டத்தில் கண்டு கொள்ள முடியவில்லை. அலுவலக அறையிலிருந்த அறிவிப்பாளரிடம் கேட்டாள். சவுந்தரி இன்டென்ஸிவ் கார்டியாக் கேர் யூனிட்டில் தீவிரக் கவனிப்பில் இருப்பதாகத் தெரியவந்தது.

கண்ணாடித் தடுப்புக்கு வெளியே வராந்தாவில் அண்ணன் லோகேந்திரனும் அண்ணி யசோதாவும் நிற்பதைக் கண்டு ஓடிச்சென்று கலந்து கொண்டாள்.

''எப்படியிருக்காங்க அண்ணி?'' காவேரி மெல்லிய குரலில் கேட்டாள். யசோதாவின் பதிலில் எரிச்சல் தொனித்தது.

''இந்த இடத்திலே கொண்டு வந்து சேர்த்திருக்காங் கன்னா ரொம்பக் கடுமையான கேஸ்னு அர்த்தம். கார்டியாக் மானிடர், பிராண வாயுக் குழல், ஊசி மருந்துன்னு உள்ளே தடபுடல் படுது. ஸ்பெஷலிஸ்ட் இப்பத்தான் வந்திருக்கார். அதனாலே படுக்கையைச் சுத்தி ஸ்கிரீன் வேறே போட்டுட்டாங்க. எனக்கு என்ன தெரியும்? நீதான் நர்ஸ். இதைப் பத்தி உனக்கு என்னைவிட அதிகம் தெரியும்.'' அடிக்குரலில் முணுமுணுத்தாள்.

அன்று இரவு டர்பன் ஸிட்டி ஹாலில் நடக்கவிருந்த ஒரு நடன நிகழ்ச்சிக்குத் தன் கணவனுடன் சென்று கலந்து கொள்ள அவள் ஏற்கனவே டிக்கெட்டுகள் வாங்கியிருந்தாள். மாதத்திற்கு ஒரு முறை எங்கேயாவது அவள் தன் கணவனுடன் பார்ட்டிகளிலும் பால்களிலும் நடனமாடப் புறப்பட்டு விடுவது வழக்கம். சவுந்தரிக்குத் திடீரென்று மாரடைப்பு வந்து அவள் எதிர்பார்ப்பில் மண் விழுந்துவிட்டதை எண்ணி அவள் ஆத்திரத்தில் புகைந்து கொண்டு அலுப்புடன் நின்றாள்.

ஒரு ஆப்பிரிக்க நர்ஸ் படுக்கையைச் சுற்றியிருந்த ஸ்கிரீனை நகர்த்தியபோது கண்ணாடித் தடுப்பருகே சென்று காவேரி அதன் ஊடே பார்த்தாள்.

சவுந்தரி அண்ணி நினைவின்றிக் கட்டிலின் மீது தலையணை உயரத்தில் சாய்ந்த வாக்கில் கிடந்தாள். மூக்கு வழியே பிராண வாயுக் குழாயும் தலைமாட்டருகே கார்டியாக் மானிட்டரும் காணப்பட்டன. டாக்டர்களும் நர்ஸ்களும் அறைகளுக்குள் பரபரப்புடன் வளைய வந்து கொண்டிருந்தனர். பார்வையாளர் யாரும் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

அண்ணியின் கன்னத்தைத் தொட்டு, ''அண்ணி! நான் வந்திருக்கேன். சீக்கிரம் குணமாகி வீடு வந்து சேர்ந்துடுவீங்க. பயப்படாதீங்க'' என்று கூற வேண்டும் போன்றதொரு தவிப்பு அவளுக்கு. அதன் இயலாமையால் ஏற்பட்ட துயரம் கண்களில் நீராகப் பொங்கப், பெருமூச்சுடன் அவள் வராந்தாவின் மறுபக்கம் நடந்தாள்.

''இப்போது நீ இங்கே இருந்து பார்த்துவிட்டு என்ன சொல்றாங்கன்னு கேட்டுகிட்டு வா. கார் வேணுமின்னா டெலிபோன் பண்ணு. அண்ணன் வந்து அழைச்சிட்டுப் போவார். நான் போய் வீட்டைக் கவனிக்கணும். அண்ணன் கடையை அப்படியே ஆள்காரங்க கிட்ட விட்டுவிட்டு

போட்டது போட்டபடியே கிளம்பிவந்திருக்கோம். அதனாலே ரொம்ப நேரம் இங்கே நின்னுட்டு இருக்க முடியாது'' என்று கூறிவிட்டு, யசோதா தன் கணவனின் பதிலுக்குக் காத்திராது, வேகமாக வெளியேறி விட்டாள்.

மனைவியின் பேச்சுக்கு அடங்கியவனாக லோகேந்திரனும் கிளம்பி விட்டான். வீட்டை நிர்வகித்து அவர்கள் எல்லோரையும் அன்னையைப் போல அரவணைத்துக் கொண்டிருந்த சவுந்தரியைப் பற்றி அவர்களிருவருக்கும் அக்கறை அவ்வளவுதான்!

கோபமும் வெறுப்புமாக அவர்கள் போன திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டு வெகு நேரம் காவேரி நின்றாள். மனைவி வந்த பிறகு சின்ன அண்ணன் ரொம்பவும் மாறி விட்டார்; ரொம்ப சுயநலக்காரராகி விட்டாரே என்ற வேதனையுடன் அருகிலிருந்த வார்டு ஒன்றில் நுழைந்து மேலும் கீழும் நடந்தபடி நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தாள்.

பார்வையாளர் நேரம் முடிந்து விட்டதன் அறிகுறியாக மணி ஒலித்தது. தீவிரக் கவனிப்புக் பகுதிக்கு அவள் மீண்டும் விரைந்து வந்தாள். ஸ்பெஷலிஸ்ட் போய் விட்டிருந்தார். உதவி டாக்டர் கையில் வைத்திருந்த கேஸ் ஷீட்டைப் படுக்கையின் காலடியில் தொங்கவிட்டு நர்ஸிடம் ஏதோ சொல்லிவிட்டு வெளியே வருவதைக் கண்டதும் வேகமாக அவரை அணுகினாள்.

''எக்ஸ்கியூஸ் மீ டாக்டர். நான் ஸ்டேட் ஹெல்த் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த ஒரு நர்ஸ். உள்ளே படுத்திருப்பது என் அண்ணி. அவங்க உடம்பு நிலை எப்படி இருக்குன்னு...'' மேலே பேச முடியாது எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''நீங்களே ஒரு நர்ஸ். இந்த நோயைப் பத்தி ஓரளவு தெரிந்திருக்கும். முன்னமேயே ஒரு தடவை இவர்களுக்கு மாரடைப்பு வந்திருக்கு. இது இரண்டாவது முறை. கவலைக்கிடமான நிலையில்தான் இருக்காங்க. நாற்பத்தெட்டு

மணி நேரத்துக்குப் பிறகுதான் எதுவும் சொல்ல முடியும்'' என்று கூறிவிட்டு முறுவலித்தார்.

உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு விழித்த காவேரியைப் பரிதாபமாகப் பார்த்தார் டாக்டர். ''நீங்க கவலைப்படுவதில் அர்த்தமில்லை. இருதய நோய் தீவிரக் கவனிப்புப் பகுதியில் உங்க அண்ணியை நன்றாகவே கவனித்துக் கொள்கிறோம். ஸ்பெஷலிஸ்ட் மறுபடி ராத்திரி பத்து மணிக்கு மேல் ஒரு தடவை பார்த்துவிட்டுப் போவதாகச் சொல்லியிருக்கார். சிகிச்சையளவில் எந்தக் குறையும் இருக்காது. அதனால் நம்பிக்கையோடு இருப்போம்'' என்று கூறிவிட்டு வேறு ஒரு நோயாளியைக் கவனிக்க விரைந்து விட்டார்.

அவளையும் மீறிக் கன்னத்தில் கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவள் பார்வையாளர் கூட்டத்துடன் கலந்தபடி வாயிலை நோக்கி நடந்தாள்.

அண்ணன் கடையை மூடிவிட்டு வர இன்னும் நேரம் அதிகம் இருந்தது. அதனால் கடைக்குப் போன் செய்தால் காரை எடுத்துக்கொண்டு ஒரு நடைவந்து போவார். இந்த இருட்டில் தனியாக அவள் பஸ்ஸில் எப்படிப் போகமுடியும்?- எண்ணியபடி பொது உபயோகத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தொலைபேசியருகே சென்றாள்.

''ஹலோ!''- பழக்கமான குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது.

''மெடிகல் வார்டில் என் சிநேகிதன் ஒருவன் முட்டிவீக்கம்னு படுத்திருக்கான். அவனைப் பார்க்க வந்த இடத்தில் உங்க அண்ணிக்கு மாரடைப்பு வந்து இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் இருப்பதாக தெரிந்தது. நம்ம இந்தியர்களைப் பத்திக் கேட்கணுமா? யாருக்காவது ஏதாவது நேர்ந்துவிட்டா அது ஒரே நொடியில் தீ போல் பரவிடுமே,

அதுவும் உங்க குடும்பம் கொஞ்சம் பிரபலமான குடும்பம். உங்க அண்ணி மாதர் சங்கத்திலே உறுப்பினர். கேட்கணுமா? அவங்களுக்கு உடம்பு முடியலைங்கிற சங்கதி ஆஸ்பத்திரி முழுவதும் தெரிந்து விட்டிருக்கு. உள்ளே அனுமதிக்க மாட்டாங்களே. அதனாலே கண்ணாடி வழியாகச் சித்த எட்டிப் பார்த்துவிட்டு வெளியே வந்து கொண்டிருக்கேன்...''

பேசியபடி அருகே வந்து நின்றான் தாமோதரன்.

அவனது கையைப் பற்றிக்கொண்டு, 'தாமு! எங்க அண்ணி பிழைப்பாங்களா, சொல்லுங்க' என்று கூறி அழ வேண்டும் போன்றதொரு துயரம் நெஞ்சை அடைப்பதை உணர்ந்தாள். கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்ள அவள் தன் கைக்குட்டையை தேடித் தடுமாறுவதைக் கண்டு அவன் சட்டென்று தன் கோட்டுப் பையில் இருந்த தனது சுத்தமான கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''என்ன இப்படி மனதைக் குழப்பிக் கொண்டு- சிறுபிள்ளையைப் போல. சே சே! நர்ஸ் வேலை செய்கிற உனக்கு நிறையத் தைரியம் இருக்கணும்.'' அன்புடன் கடிந்து கொண்டான்.

அவனது அருகாமை அது சமயம் அவளுக்கு எத்தனை பெரிய ஆறுதலாக இருந்தது!

அவனது கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அதை அவனிடம் சட்டென்று திருப்பிக்கொடுத்தாள். ''தாங்க்யூ. அண்ணாவுக்குப் போன்செய்ய வந்தேன். பெரிய அண்ணி என்னைப் பொறுத்தவரை தாய் போல. அதனாலே தாங்க முடியவில்லை.'' வெட்கத்துடன் வேறு பக்கம் பார்த்தாள்.

''உனக்கு ஆட்சேபணை இல்லைன்னா என் காரில் உன்னை அழைச்சுக் கொண்டுபோய் வீட்டில் விட்டுடறேன்.

எதிர்ப்பக்கத்திலே காரை நிறுத்தி வச்சிருக்கேன். இங்கேயே நின்று கொண்டிரு. நான் போய் ஓட்டிக் கொண்டு வருகிறேன்'' என்று அவளிடம் மறுப்பை எதிர்பார்க்காது அவன் தெருவைக் கடந்து எதிர்ப் பக்கத்துப் பாதை ஓரத்திற்கு நகர்ந்துவிட்டான்.

சில்லென்று வீசிய குளிர் காற்றில் அவள் உடல் நடுங்கியது. டாக்டர் வைத்திருந்த நாற்பத்தெட்டு மணிநேரக் கெடுவை நினைத்து உள்ளம் பதறியது.?

கார் அவர்கள் வசித்த பகுதியை நோக்கிப் போகாது கடற்கரைப் பக்கமாக விரைவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

''இப்போ நாம் எங்கே...?'' அவள் தடுமாறுவதைக் கண்ட தாமோதரன் உரக்கச் சிரித்தான்.

''உன்னை நான் எங்கோ கடத்திக் கொண்டு போகிறதாகப் பயந்துட்டியா?- இப்போ நாம் பாரடைஸ் ரெஸ்ட்டாரண்டுக்குப் போகிறோம். நீ லேடீஸ்மித்திலிருந்து வந்ததும் இந்தச் சேதி கிடைச்சிருக்கும். உடனே ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டு வந்திருப்பே. நீ பட்டினியாக இருக்கேன்னு உன் முகம் சொல்றதே. இப்போ நீ அனுபவிக்கிற வேதனையில் வீட்டுக்குப் போய்ச் சாப்பாட்டைச் சுடவச்சு சாப்பிடக் கஷ்டப்படுவே. அதனாலே முதல்லே பசியடங்கச் சீஸ் டோஸ்ட்டும் சூடா காப்பியும் சாப்பிடு. பிறகு உன்னை வீட்டிலே கொண்டு போய் விடறேன்.''

சின்னக் குழந்தைக்குப் பரிந்து உணவை ஊட்டுவது போல அவன் மேஜைக்கு எதிரே அமர்ந்துகொண்டு ''ம்! முழுவதையும் சாப்பிடு. இந்தக் காப்பியைக் கூடு ஆறுமுன் குடி. கொஞ்சம் தெம்பு வரும். அண்ணியைப் பத்திக் கவலைப்படாதே. அவங்களைக் கவனிக்கிற அந்த வெள்ளைக் கார ஸ்பெஷலிஸ்ட் எனக்குப் பழக்கமானவர். அவருக்கு

நேரே போன் பண்ணி உனக்கு அப்பப்போ தெரியப் படுத்தறேன்.'' ஆறுதலாகச் சொன்னான்.

ஆமாம்; இந்தத் தாமோதரனுக்கு இன்னமும் அவள் மேல் அன்பு குறையவில்லையே? தன்னை ஏற்க மறுத்த குடும்பத்திற்கு உதவ நினைக்கும் அளவுக்கு இவருக்குத்தான் எத்தனை ஒரு பெரிய மனம்!

வீட்டுக்குள் நுழைந்தபோது யசோதா அடுப்பருகில் சாப்பாடு தயார் செய்து கொண்டிருந்தாள்.

எப்படி வந்தாள், யார் அழைத்து வந்தார்கள் என்று அவள் சிறிதும் கவலைப்படவில்லை.

இரவு பத்து மணியளவில்போனில் தாமோதரன் அவளை அழைத்தான். ''ஸ்பெஷலிஸ்டிடம் பேசினேன்; மாரடைப்பு கொஞ்சம் தீவிரமாகத்தான் இருக்கு, ஆனாலும் நல்ல வைத்தியக் கவனிப்பு இருப்பதால் நம்பிக்கை இழப்பதற் கில்லை என்கிறார்... கவலையை விட்டுத் தூங்கு. குட்நைட்.'' சுருக்கமாகப் பேசி முடித்தான்.

கணவன் வரவுக்காகக் காத்து அலுத்துப்போன யசோதா தூக்கக் கண்களுடன் முன்னறைக்கு வந்தாள்.

''ஆமாம், ஸ்டோர் ரூமிலே ஒரு சாக்கு மூட்டையைக் கொண்டுவந்து வச்சிருக்கியே. அதில் என்ன இருக்கு.''

''லேடீஸ்மித்திலிருந்து ஜோதி சித்தப்பா சவுந்தரி அண்ணிக்குச் சாப்பிட மாதுளம் பழங்கள் சில அனுப்பி வச்சிருக்கார். அவைகள் அந்த மூட்டையிலிருக்கு.''

''ஸில்லி ஸ்டுப்பிட் ஃபுரூட். இதை ஒரு பெரிசா அவர் கொடுத்தார். அதை நீ தூக்கிட்டு வந்தியாக்கும். இந்த இந்தியக்காரர்களுடைய ரசனையே ரொம்ப வேடிக்கையானது. ஆப்பிளும் ஆரஞ்சும் பீச்சும் லீச்சும் அனாசியும் மலிஞ்சு கிடக்கிற இந்த நாட்டிலே உங்க பெரிய அண்ணிக்கு மாதுளம் பழத்துமேலே மோகம். அதை அவங்க இப்போ சாப்பிடவா போறாங்க? நாளைக்கு முதல் வேலையா எடுத்துக் குப்பைத் தொட்டி எடுக்க வரும் ஆள்களிடம் கொடுத்துவிடு. யாருக்கு இந்தப் பழம் இங்கே வேணும்!'' கோபமாகப் பேசினாள்.

அசட்டையாக-அபசகுனம்போல யசோதா பேசியதைக் கேட்டு அதிர்ந்து போனாள் காவேரி. ஒரு சமயம் அண்ணி...? அவளால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

9

திடுக்கிட்டு விழித்து எழுந்து உட்கார்ந்தாள் காவேரி. பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டதை உணர்ந்து பரபரப்புடன் குளியலறைக்கு விரைந்தாள். சனி, ஞாயிறு இரு தினங்களுக்குப் பள்ளிக்கூட விடுமுறை நாட்கள். அவளுக்கு ஓய்வு நாட்கள். ஆனால் வீட்டில் தங்கியிருக்க வேண்டிய அந்த நாட்களிலும் அவளுக்கு அதிகப்படியான வேலைகள் இருந்தன. வாரம் முழுவதும் வீட்டைக் கவனிக்கும் பொறுப்பு தன் தலையில் சுமத்தப்பட்டு விட்டதாக அடிக்கடி பொருமிக் கொண்டிருந்த யசோதா அந்த இரு நாட்களையும் தன்னுடைய ஓய்வு நாட்களாக்கிக் கொண்டு விட்டிருந்தாள்.

வேகமாகப் பல்துலக்கி முகத்தைக் கழுவி முடியைச் சீராக்கிக் கொண்டு டிரஸ்ஸிங் கவுனின் நாடாவை இழுத்து இடுப்பில் இறுக்கிக் கட்டிக் கொண்டு அவள் சமையலறைக்குள் நுழையுமுன் யசோதா, பாண்ட்-சட்டை, கம்பளி ஜர்சி, தலையில்நைலான் டூக் (மப்ளர்) என்ற அலங்காரத்தில் தோளில் பையுடன் வெளியே கிளம்ப ஆயத்தமாகி விட்டிருந்தாள். இஞ்சி, பூண்டு, தைம் இலைகள் என்ற கலவை மணத்தை அறைக்குள் நிரப்பியபடி அருகிலிருந்த மேஜைமீது பீங்கான் கிண்ணத்தில் தக்காளிச் சட்டினியில் கோளா உருண்டைகள் ஊறிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''சனிக்கிழமை பெருமாள் சாமியைக் கும்பிடும் நாள். மாமிசத்தைக் கையால் தொடமாட்டேன்னு நீ சொல்லுவியேன்னுட்டு விடியக் காலையிலே எனக்கும் உன் அண்ணனுக்கும் கொத்துக்கறியிலே கபாப் பண்ணி வச்சுட்டேன். ஆறினதும் அதை எடுத்து ஃபிரிஜிற்குள் லீனாவை வைக்கச்சொல். நாங்கள் வீட்டுக்கு வர ஒரு சமயம் நேரமானாலும் ஆகும்'' என்று உத்தரவிட்டவண்ணம் வெளியே போகத் திரும்பினாள்.

அதற்குள் பாதி வேளையில் கடையை வேலையாட்கள் வசம் ஒப்படைத்துவிட்டு மனைவியைக் கூட்டிக்கொண்டு கடைத் தெருவில் விடக் காருடன் வந்து தெருவில் காத்துக் கொண்டிருந்த லோகேந்திரன் காரின் ஊதுகுழலை எரிச்சலுடன் அழுத்திக் கொண்டிருந்தான்.

''இதோ வந்துட்டே இருக்கேன்.'' உரத்த குரலில் கூவியபடி யசோதா குதிகால் உயரமான காலணிகளில் பாதங்களை அவசரமாகத் திணித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகத் தோட்டத்தைக் கடந்து தெருவுக்குள் மறைந்து போனாள். அவளது செலவுக்கு என்று கணவன் வாரந்தோறும் முப்பது ராண்டுகளைத் தந்து கொண்டிருந்தான். அத்தனையையும் அவள் வெஸ்ட் ஸ்ட்ரீட்டிலிருந்த வெள்ளைக்காரர்கள் கடையில் உதறிவிட்டு வரத்தான் வேகமாக ஓடிக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் யசோதாவுக்குக் காலை வேளையில் கடைத்தெருவைச் சுற்றி வலம் வருவது ஒரு பெரும் பொழுது போக்கு. இரவு தன் கணவனுடன் பின்னிரவுக் காட்சிக்குச் சினிமாவுக்குப் புறப்பட்டு விடுவாள். ஞாயிற்றுக்கிழமை அவள் காலை பத்து மணிக்கு மேல்தான் எழுந்திருப்பது வழக்கம்.

பெரிய அண்ணன் உயிருடன் இருந்தபோது அவரிடமிருந்த பயத்தினால் அவள் தன் பழக்க வழக்கங்களைப் பகிரங்கப்படுத்திக் கொண்டதில்லை. ஓரளவு [illegible]தையுடன் பழக முயன்றாள். அவர் மறைந்ததும்- ஓரகத்தி நோயாளியாகி விட்டதும்- கடையும் அந்த வீடும் லோகேந்திரனுக்குச் சொந்தமாகிவிட்டதும் அவள் தன் சுய உருவத்தைப் பளீரென்று வெளிப்படுத்தத் துவங்கி விட்டிருந்தாள்.

ஓரகத்தியைப் புழுவாக மதித்து உதாசீனப்படுத்தினாள். நாத்தனார் காவேரியை அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ''எவனையாவது கட்டிக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்ப மாட்டாளோ இந்த மகராசி; நமக்குப் பெரும் விலங்காக, கழுத்திலே ஏற்றி விட்ட கல்போல..'' என்று பலமுறை காவேரியின் காதுபடத் தன் கணவனிடம் கடுத்துக் கொண்டிருக்கிறாள்.

கர்வம்-பொறாமை-ஆத்திரம் என்ற பல கெட்ட குணங்களுக்கும் இருப்பிடம் யசோதா என்ற அளவில் அவள் மிகவும் மாறிவிட்டிருந்தாள். அவளுடன் தனியே அந்த வீட்டில் சவுந்தரி அண்ணி குணமாகித் திரும்பும்வரை எப்படித்தான் சமாளிக்கப் போகிறோமோ என்று எண்ணிக் கவலையுடன் தெருவை நோக்கியிருந்த ஜன்னல் வழியே வெறித்துக் கொண்டு நின்றாள் காவேரி.

''கோச்சான்! நான் டீ கெட்டிலைப் போடறேன். ரொட்டியைச் சுட்டு மேஜைமேல் தயாராக வைக்கிறேன். நீங்க சீக்கிரம் குளிச்சுட்டு ஆஸ்பத்திரிக்குப் போகத் தயாராகுங்க. உங்க பெரிய அண்ணி எப்படி இருக்காங்கன்னு போய்ப் பார்த்துட்டு வரவேண்டாமா?'' உள்ளே லீனா கேட்டாள்.

அவளுக்கு வீட்டு யஜமானியைப் பற்றி இருந்த அக்கறை நெருங்கிய உறவினளான யசோதாவுக்கு இல்லையே.

''சின்ன யஜமானி இன்னிக்குக் கடைக்குப் போவது அவசியமா? ஓரகத்தியைப் பத்திக் கொஞ்சங்கூடக்

கவலைப்படாம ஊர் சுத்தக் கிளம்பிட்டாங்களே! சே! நான் இப்படி ஒரு பெண்ணைப் பார்த்ததில்லை. உங்க வீட்டுக்கு வேலைக்கு வருமுன் ஒரு வெள்ளைக்காரர் வீட்டில் வேலை பார்த்தேன். அந்தக் குடும்பத்தினரும் ரொம்ப ஒற்றுமையாக இருந்தாங்க. வெள்ளையரைவிட இந்தியர்கள் குடும்பப் பாசம் அதிகமுள்ளவங்க என்கிறார்களே. ஆனால் இங்கே அதைக் காணலையே! இது மாதிரி எங்கள் இனத்திலே நடக்கவே நடக்காது. வீட்டுக்குப் பெரியவளை இளைய பெண்கள் ரொம்ப மரியாதையாக நடத்துவாங்க. இப்படி ஒரு அசட்டை பண்ணினா ஒரு கொலையே விழுந்துடும். அப்படி எங்கள் ஆண்கள் கோபம் கொண்டு விடுவாங்க. ம்!...'' என்று பெருமூச்செறிந்தபடி ஆங்கிலமும் ஸுலுவும் கலந்த மொழியில் படபடத்தாள் லீனா.

''இதையெல்லாம் விட்டுத் தள்ளு, வீட்டைக் கவனிச்சுக்கோ. நான் சீக்கிரம் கிளம்பறேன்'' என்றாள் காவேரி.

''கோச்சான், நீங்க இன்னிக்குச் சமையலைப் பத்திக் கவலைப்படாதீங்க. உங்களைப் போலச் சமைக்கப் பெரிய யஜமானி கத்துக் கொடுத்திருக்காங்களே. சாதம் வடிச்சு, ரசம் வச்சு, அப்பளம் பொரிச்சு வைக்கிறேன். வீட்டைச் சுத்தப்படுத்தி துணி துவைச்சுக் காயவச்சுப் பெட்டி போட்டு அலமாரியில் அடுக்கி விடறேன். அமைதியா கடவுளை வேண்டிக்கிட்டு நீங்க ஆஸ்பத்திரி போய்ட்டு வாங்க.'' ஆறுதலாகச் சொன்னாள்.

நன்றி உணர்வில் உள்ளம் கரைந்து போனாள் காவேரி. ''தாங்க்யூ லீனா. உன்னைப்போல ஒரு வேலையாள் ஊர் முழுதும் தேடினாலும் கிடைக்காது. அதுவரை நாங்கள் ரொம்பப் பாக்யசாலி'' என்று புகழ்ந்துவிட்டு வெளியே கிளம்ப ஆயத்தம் செய்யலானாள்.

இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் இருந்த சவுந்தரி அருகில் அவளால் போக முடியவில்லை. வெளியிலிருந்தபடி கண்ணாடித் தடுப்பு வழியே இன்னமும் மயக்கமாகப் படுத்திருந்தவளைப் பார்த்துவிட்டு வராந்தாவில் மேலும் கீழும் நடந்தபடி தவித்துக் கொண்டிருந்தாள். அது சமயம் வெளியே வந்த அந்த யூனிட்டின் நர்ஸ்-காவேரிக்குத் தெரிந்தவள், அருகில் வந்து அவளது கரத்தை ஆதரவுடன் பிடித்து அமுக்கினாள்.

''காலையில் ஸ்பெஷலிஸ்ட் வந்திருந்தார். நேத்து இருந்ததைவிட இப்போது தேவலை என்று திருப்தி தெரிவித்துவிட்டுப் போயிருக்கார். கவலைப்படாதே. குணமாகி வீட்டுக்கு வந்துடுவாங்க'' என்று அடிக்குரலில் ஆறுதல் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

நம்பிக்கையும் சந்தேகமும் மாறி மாறி மனதைக் குழப்ப, கவலையுடன் அவள் வெகுநேரம் வராந்தாவிலேயே ஒரு தூண்மீது சாய்ந்துகொண்டு நின்றாள். பின்னர் வேறு வழியின்றி வீட்டுக்கு கிளம்பினாள்.

கேட்டைத் தாண்டிக் கொண்டு வெளியே வந்தவளுக்கு மிக்க வியப்பாக இருந்தது. சொல்லி வைத்தாற்போலத் தாமோதரன் அவளை வீட்டுக்கு அழைத்துப் போகக் காருடன் தெருவின் ஓரத்தில் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

''நீங்க...வந்து..'' என்று அவள் தடுமாறுமுன் அவன் பேசினான்.

''உன்னை வீட்டுக்குப் பத்திரமாக அழைத்துப் போகத் தான் வந்து காத்திருக்கிறேன். சனிக்கிழமை பகல் வேளையில் பஸ்காரில் இடம் கிடைப்பது ரொம்பக் கஷ்டம் என்று எனக்குத் தெரியும்.'' புன்முறுவலித்தபடி காரின் கதவைத் திறந்து உட்காரச் சொல்லி உபசரித்தான்.

''நீங்க வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை. ஆனாலும் ரொம்ப நன்றி. நான் வீட்டிலிருந்து காலை வரும்போது

ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டேன். பஸ்ஸில் ஆப்பிரிக்கர்களின் கூட்டம் அதிகமாகவே இருந்தது. என் பக்கத்தில் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒரு ஆப்பிரிக்க இளைஞன் என் மேலே உரசிக் கொண்டிருந்தான். கொஞ்சம் நகர்ந்து உட்காரு என்று அவனிடம் சொல்ல எனக்கு அச்சமாக இருந்தது. என்னை வெட்டித் தின்றுவிடுவான் போல முறைத்தான். இப்பொழுதெல்லாம் ஆப்பிரிக்கர்களுக்கு இந்தியர்களைக் கண்டால் ரொம்ப அசட்டை. எங்கள் தாத்தா காலத்தில் ஆப்பிரிக்கர்கள் இந்தியர்களிடம் ரொம்பப் பணிவாக நடந்து கொள்வார்களாம்.''

''இப்போது நாம் பேத்தி காலத்தில் வாழ்கிறோம். ஆடை, பழக்க வழக்கங்கள் எப்படிக் காலத்தோடு மாறிப் போயிருக்கோ அதுபோலக் கருத்துக்களும் மாறிவிட்டிருக்கின்றன. ஆப்பிரிக்கர்கள் நம்மை அசட்டை செய்யுமளவுக்கு மாறிவிட்டதற்கு நாம்தான் காரணம். அரசியல் அளவில் நாம் நம்மைக் கருப்பர் என்று கூறிக் கொள்கிறோம். ஆனால் மனதிற்குள் நாம் மாறுபட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்; நமக்கு ஒரு தாய்நாடு ஆறாயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிறது; நமது மூதாதையர் அங்கிருந்து தான் வந்தவர்கள்; நமது பண்பாடு- கலாச்சாரம்-என்று நாம் இன்னமும் ஒதுங்கி இந்தியராக வாழ்கிறோம் இல்லையா?''

''அப்படி வாழ்வது தப்பா?''

''தப்புதான். அதனால்தான் ஆப்பிரிக்கர்களுக்கு நம் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. தங்களது உரிமைகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டிருக்கிறார்கள். அதற்கு இடையூறாக -முட்டுக்கல்லாக நிற்கும் நம்மைக் கண்டால் அவர்களுக்கு வெறுப்பு மூளுவது இயற்கைதானே!''

''இதென்ன நியாயம்? நாம் பாடுபடுகிறோம், வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறோம்.''

''நம்முடன் சமமாக உழைக்கிறான் ஆப்பிரிக்கன். ஆனால் சம ஊதியம் கிடையாது. எங்கோ வெளிநாட்டிலிருந்து வந்து தங்கியுள்ள இந்தியனுக்கு அரசு பல சலுகைகள் வழங்கிவிட்டு, இந்த நாட்டின் குடிமகனான அவனை அழுத்தப்பட்டவனாக வாழ வைத்திருப்பது நியாயமாகுமா? சுயநலத்துடன் தனக்குக் கிட்டும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறிக்கொண்டு வரும் இந்தியனை அவன் எப்படி நேசிக்க முடியும்!''

''நீங்க வக்கில், வாய்ச்சாலமாகப் பேசுவீங்க. இதுக்கு வழி என்னன்னு சொல்ல முடியுமா?''

''ஒரே வழிதான் இருக்கு. நாம் இந்தியர் என்ற இனவேறுபாட்டை மறந்து அவர்களுடன் ஒன்றுபட்டுவிட வேண்டும். நாட்டில் வெள்ளை-கருப்பு என்ற நிறபேதம் ஒழிந்து எல்லோரும் ஒரே இனத்து மக்கள்-எல்லோருக்கும் இந்த நாடு சொந்தம் என்கிற மனப்பான்மை எல்லார் மனதிலும் ஏற்படணும். அதுதான் வழி.''

''நமது தனித் தன்மையை நாம் மறக்க மறுத்தால்?''

''மறுத்தால் மூட்டையைக் கட்டிக்கொண்டு உங்கள் மூதாதையர் வந்த நாட்டுக்கே திரும்பிப் போய்விடணும்.''

''மிஸ்டர் தாமு! ஒண்ணு சொல்ல விரும்பறேன். கோவிச்சுக்கமாட்டீங்களே!''

''சிலரிடம் என்னால் கோபித்துக்கொள்ளவே முடியாது. அதில் நீயும் ஒருத்தி. தாராளமாக பயப்படாமல் சொல்லு'' மென்மையாக முறுவலித்தான் அவன்.

''அயோக்கியனது கடைசிப் புகலிடம் அரசியல் என்பார்கள்.''

''அதை நீ சொல்லவில்லை. ஜான்ஸ்டன் சொல்லியிருக்கிறார். அவர் அப்படிக் கருதினார். என் கருத்து வேறு.

அவரை விடு. உன் கண்களுக்கு நான் அயோக்கியனாவா தெரிகிறேன்? அதைச் சொல்'' கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தான்.

குப்பென்று முகம் சிவந்து போனாள் காவேரி. நெஞ்சு வேகமாகத் துடித்துக்கொள்வதை உணர்ந்தாள்.

''இரக்க சுபாவமுள்ள ஒரு நல்ல மனிதர் நீங்கள். ஒப்புக்கொள்கிறேன். உங்களைப் பற்றி நான் கவலைப் படுகிறேன். உங்கள் கொள்கைகளை நீங்கள் அச்சமின்றி மேடைகளில் எடுத்துப் பேசுகிறீர்களாம். உங்கள் வீட்டில் அடிக்கடி வெள்ளையர்-ஆப்பிரிக்கர்-கலப்பு வர்க்கத்தார் எல்லோரும் கூடுகிறார்களாம். மீட்டிங்குகள் நடப்பதாக வெளியில் பேசிக் கொள்கிறார்கள். உங்களுக்கு இவைகளால் ஆபத்து ஏற்பட்டால் என்று அச்சமாக இருக்கு.''

''ஆபத்தை நினைத்துப் பயந்தால் அரசியலில் இறங்கக் கூடாது. பேசாது ஒரு டீக்கடை வைத்து அதில் வரும் லாபத்திலே அமைதியாக வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகவேணும், இல்லையா?''

மேலே விவாதிப்பதற்குள் வீடு வந்துவிடவே அவள் நன்றிதெரிவித்து விடைபெற்றுக் கொண்டாள்.

அவனுடன் சிறிது நேரம் பேசியது மனதிற்கு அமைதியை யும் திருப்தியையும் அளித்திருப்பதை உணர்ந்தாள்.

அதற்குப்பின் அவள் ஒரு வார காலம் வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டாள்.

மூன்று தினங்களுக்குப் பின்னர் சவுந்தரியின் உடல் நிலை அபாயக் கட்டத்தைத் தாண்டி விட்டிருந்ததால் அவளை ஸ்பெஷல் வார்டுக்கு மாற்றி விட்டிருந்தனர். அப்போது அவள் தாள் முழுவதும் அண்ணியுடன் கூடவே இருந்து

கவனித்துக்கொள்ள முடிந்தது. இடையே இரு முறை காலையும் மாலையும் வீட்டிற்குப்போய் உடை மாற்றிக் கொண்டு சாப்பிட்டு வரச் செல்ல நேர்ந்தது. அப்பொழு தெல்லாம் மிகவும் துணிவுடன் தாமோதரனுக்குப் போன் செய்து அவனது உதவியுடன் அவன் காரில் போய் வந்து கொண்டிருந்தாள்.

அந்த உதவி சவுந்தரி ஆஸ்பத்திரியில் இருந்த ஆறு வாரங்கள் தொடர்ந்து அவளுக்குக் கிடைத்தது. அவளும் மகிழ்ச்சியுடன்-ஆவலுடன் அதை ஏற்றுக் கொண்டாள். தாமோதரன் சொல்லும் அரசியல் சங்கதிகளைக் கவனமாகக் கேட்டு ஆச்சரியப்பட்டாள். அவன் சொன்ன ஜோக்குகளுக்குக் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அவன் வாங்கித் தந்த ஐஸ்கிரீம் கோன்களை ஆர்வத்துடன் குழந்தையைப்போல் நாவினால் நக்கிச் சுவைத்துவிட்டு கடைக்கண்ணால் தன்னை அவன் கவனிப்பதை உணர்ந்து முகம் சிவக்க, ''ஐஸ்கிரீமை பின் எப்படி சாப்பிடுவதாம், கடித்தா விழுங்க முடியும்'' என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

அவனது அருகாமை-அவன் பேச்சு-அவன் காட்டிய அன்பு-அவன் உதவிகள் எல்லாமே அவளுக்கு இனித்தன. அவனை அவளுக்கு ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது.

★ ★ ★

அன்று காலை அண்ணி சவுந்தரி ஓரளவுக்கு உடல் நிலை குணமாகி வீட்டுக்கு வந்திருந்தாள். அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடத் தாமோதரன் அழைப்பை மறுக்க முடியாது, காவேரி அவனுடன் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தாள்.

இரவு பத்து மணி அளவில் வீட்டுக்குள்ளே வந்து நின்ற தங்கையை முன்னறையில் கூண்டுப்புலி போல உலாவிக் கொண்டிருந்த அண்ணன் கோபத்துடன் வெறித்தான்.

''அப்படியே நில்லு. உங்கிட்டே பேசணும். எத்தனை நாளா அவனோட உனக்கு இந்த சிநேகிதம்?'' ஆத்திரத்துடன் கத்தினான் லோகேந்திரன்.

திடுக்கிட்டுப் போன காவேரிக்குச் சட்டென்று பேச இயலவில்லை. முத்தைக் கடுத்துக் கொண்டு நின்ற யசோதாவைப் பார்க்கக் கூசினாள்.

''ஆஸ்பத்திரிக்குப் போய் வர கார் கொடுத்து உதவினார். அது தப்பா?'' குமுறினாள் மெல்லிய குரலில்.

''தெரிஞ்சிருந்தும் தப்பான்னு கேட்கிறியே. உனக்கு எத்தனை திமிர்! அவனது அரசியல் கொள்கை நமக்கு ஒத்து வராதுன்னு அவனுக்குப் பெண் கொடுக்க அண்ணா மறுத்ததை இத்தனை சீக்கிரத்தில் நீ மறந்துட்டியா? அவன் சிநேகிதத்தாலே உன் வேலைக்கு ஆபத்து. உன்னாலே எங்களுக்கு ஆபத்து. நாளைக்கே ஒரு சி.ஐ.டி. நம்ப வீட்டு வாசல்லே வந்து நிற்பான். வேண்டாம்னு ஒதுக்கினவனோட ஊர் சுத்திகிட்டு எங்க மானத்தை விலை பேசறியே, உனக்கு எத்தனை ஆணவம்...'' சொல்லிக் கொண்டே கையை ஓங்கியபடி தங்கையை நெருங்கினான்.

''அண்ணா! டோண்ட் பி ஸ்டுபிட்!'' என்று கூறியபடி அவள் பின்னால் நகருமுன் பளீர் என்று ஒரு அறை கன்னத்தில் விழவே காவேரி-அவமானமும் கோபமும் வேதனையும் தாளாது ''அண்ணி!'' என்று அலறி விட்டாள்.

படுக்கையிலிருந்து எழுந்து தள்ளாடியபடி வெளியே வந்த சவுந்தரியின் முகம் வெளுப்படைந்து போனது. அவளது கால்கள் தடுமாறின. ''லோகேந்திரா! என்ன காரியம் செஞ்சே. தோளுக்கு உசந்து வளர்ந்துட்ட பெண்ணை கைதொட்டு அடிக்க உனக்கு யார் அதிகாரம் தந்தது?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''யார் தரணும்? வீட்டுக்கு எஜமான் அவர். அவருக்கு எதிரா நடந்தா...'' சீறிக் கொண்டு குறுக்கிட்டாள் யசோதா.

''நான் உசிரோட இருக்கிறவரை யாரும் விரலால்கூட காவேரியைத் தொடக் கூடாது. புரிஞ்சுக்கோங்கோ.'' பேச்சு தடுமாற, கண்கள் மேலே சொருக, மயக்கமாகி தடால் என்று சவுந்தரி தரை மீது விழுந்தாள்.

10

முன்னிருட்டையும் குளிரையும் பொருட்படுத்தாது வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அர்ச்சகர் பூசையை முடித்ததும் உறவினர்கள் அனைவரும் ஒரு பக்கமும், ஊரார் ஒரு பக்கமுமாகத் தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளங்கள் மீது உட்கார்ந்து கொண்டனர். சில வயதான ஆண்களும் பெண்களும் தரையில் அமர சங்கடப்பட்டுக்கொண்டு சுவர் ஓரமாகக் கிடந்த பெஞ்சிகளில் உட்கார்ந்தனர்.

தூண்மீது சாய்ந்தபடி அமர்ந்திருந்த காவேரி இன்னமும் அந்தஅதிர்ச்சியிலிருந்து பூராவும் விடுபடவில்லை. எதிலும் ஒன்றிக்கொள்ள முடியாது ஒடுங்கிப் போன உணர்வுடன் பொம்மை போல அசையாது அமர்ந்திருந்தாள்.

பாரோடு விண்ணாய்ப் பரந்த யெம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்-
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரியாயே!

வெள்ளைப் புடவையும் பச்சை ரவிக்கையுமான சீருடையில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த மாதர் சங்கத்துப் பெண்கள் துக்க காரியங்களின்போது வாசிக்கும்

திருவாசகத்திலிருந்து வாழாப்பத்து என்பதை உரத்த குரலில் பக்கவாத்யங்களுடன் பாடினர்.

துயரத்துடன் ஒலித்த அவர்களின் கூட்டுக்குரல் மனதில் புதைந்து கிடந்த வேதனையைக் கிளறிவிட முதல் முதலாகப் பத்து தினங்களுக்குப் பின்னர்தான் காவேரியின் கண்களில் நீர் புரண்டது.

தாய்க்குச் சமமான அன்புமிக்க அண்ணி சவுந்தரி மறைந்த பதினோராவது நாள் மாலை இறந்தவளுக்கு மோட்ச விளக்கு ஏற்றி வழிபட வந்திருந்தாள் அவள்.

சவுந்தரி தன் விருப்பத்தை முன்னதாகவே பலமுறை லோகேந்திரனிடமும் காவேரியிடமும் தெரிவித்திருந்தாள். இல்லாவிடில் வழக்கம்போல தமிழர்கள் இல்லத்திலே இறந்தவர்களுக்கு நடத்தும் சடங்குகளை விட்டுக் கொடுக்காது லோகேந்திரன் நடபுடலாக நடத்தியிருப்பான்.

உயிரோடு இருக்கும்போது அன்பும் ஆதரவுமாக இல்லாவிடினும் ஊர் மெச்சத் தன் ஓரகத்தி இறந்த பதினோராவது நாள் கருமாதி என்ற சடங்கைத் தோட்டத்திலே பெரிய பந்தல் போட்டு ஊரைக் கூட்டி, செத்தவளுக்குப் படையல் போட்டு ஊராருக்கு விருந்து படைத்து அமர்க்களப்படுத்தியிருப்பாள் யசோதா.

வயிறாரச் சாப்பிட்டு விட்டு ''என்னமா சாவை எடுத்தாங்க! வாட் ஏ கிராண்ட் ஃபியூனரல்! என்னமா கருமாதி செய்தாங்க!'' என்று யசோதாவின் புகழை அடிக்குரலில் கிசுகிசுத்து விட்டுப் போயிருப்பார்கள் வந்தவர்கள். ஆனால் அந்த மாதிரியான சந்தர்ப்பத்திற்கு இடம் வைக்காது சவுந்தரி தன் இறுதி ஆசையை மைத்துனனிடம் உறுதிப்படுத்தி விட்டுப் போயிருந்தாள்.

பிரார்த்தனைப் பாடல்கள் முடிந்ததும், மாதர் சங்கத் [illegible] லை வியும், ஊரிலுள்ள சில பிரமுகர்களும் [illegible] ந்து

சவுந்தரியின் குண விசேஷங்களைக் கூறி மக்கள் சார்பில் அவளது குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்து அவள் ஆன்மா சாந்தியடையட்டும் என்று பிரார்த்தித்தனர். பின்னர் அர்ச்சகர் தீபாராதனையைத் துவக்கினார். தூபக்கலசத்தின் மீது ஹோவென்று எரிந்த கற்பூர ஜோதி மீது உறவினர்கள் வரிசையில் வந்து கற்பூரத் துண்டுகளைப் போட்டு வணங்கினர்.

மன்னிப்புப் பிரார்த்தனையுடன் கூட்டம் வெளியே வரத் தொடங்கியது. அவர்கள் சிரமப்பரிகாரம் செய்து கொள்ள வெளியே அண்டாக்களில் சூடான பால் பாதாம், சாரை பருப்புகள் மிதக்க ஏலக்காய் வாசனையில் தயாராகக் காத்திருந்தது.

வாசலில் நின்ற உறவினப் பெண்கள் காகித டம்ளரில் பாலை நிறைத்துப் பரபரப்புடன் விநியோகிக்கத் துவங்கினர்.

சில்லென்ற குளிருக்கு இதமாக நல்ல சூடான பால், பாடினவர்கள் தொண்டைக்கு இதமாகவும், வம்பு பேசத் துடித்தவர்களின் உணர்வுகளுக்குத் தூண்டுகோலாகவும் இருந்தது.

ஓரமாக வந்து நின்று கொண்ட இரண்டு பெண்கள் சற்று உரத்த குரலில் கிசுகிசுத்தது காவேரியின் காதுகளில் கணீரென்று கேட்டது.

''ஆமாம், இந்த பொண்ணு காவேரி அன்னிக்கு அப்படியென்ன கல்லுப்பிள்ளையாராட்டம் கொஞ்சம்கூட கலங்காம உட்கார்ந்திருந்தா? தாயைப் போல வளர்த்த அவளுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடலையே. ரொம்ப நெட்டு பிடிச்ச பொண்ணு...கல்லு மனசு...''

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் காவேரி. அவளைப் பற்றிய விமரிசனம் நெஞ்சைச் சுட்டது.

திருவாசகத்திலிருந்து வாழாப்பத்து என்பதை உரத்த குரலில் பக்கவாத்யங்களுடன் பாடினர்.

துயரத்துடன் ஒலித்த அவர்களின் கூட்டுக்குரல் மனதில் புதைந்து கிடந்த வேதனையைக் கிளறிவிட முதல் முதலாகப் பத்து தினங்களுக்குப் பின்னர்தான் காவேரியின் கண்களில் நீர் புரண்டது.

தாய்க்குச் சமமான அன்புமிக்க அண்ணி சவுந்தரி மறைந்த பதினோராவது நாள் மாலை இறந்தவளுக்கு மோட்ச விளக்கு ஏற்றி வழிபட வந்திருந்தாள் அவள்.

சவுந்தரி தன் விருப்பத்தை முன்னதாகவே பலமுறை லோகேந்திரனிடமும் காவேரியிடமும் தெரிவித்திருந்தாள். இல்லாவிடில் வழக்கம்போல தமிழர்கள் இல்லத்திலே இறந்தவர்களுக்கு நடத்தும் சடங்குகளை விட்டுக் கொடுக்காது லோகேந்திரன் நடபுடலாக நடத்தியிருப்பான்.

உயிரோடு இருக்கும்போது அன்பும் ஆதரவுமாக இல்லாவிடினும் ஊர் மெச்சத் தன் ஓரகத்தி இறந்த பதினோராவது நாள் கருமாதி என்ற சடங்கைத் தோட்டத்திலே பெரிய பந்தல் போட்டு ஊரைக் கூட்டி, செத்தவனுக்குப் படையல் போட்டு ஊராருக்கு விருந்து படைத்து அமர்க்களப்படுத்தியிருப்பாள் யசோதா.

வயிறாரச் சாப்பிட்டு விட்டு ''என்னமா சாவை எடுத்தாங்க! வாட் எ கிராண்ட் ஃபியூனரல்! என்னமா கருமாதி செய்தாங்க!'' என்று யசோதாவின் புகழை அடிக்குரலில் கிசுகிசுத்து விட்டுப் போயிருப்பார்கள் வந்தவர்கள். ஆனால் ...ந்த மாதிரியான சந்தர்ப்பத்திற்கு இடம் வைக்காது சவுந்தரி ...ன் இறுதி ஆசையை மைத்துனனிடம் உறுதிப்படுத்தி ...டுப் போயிருந்தாள்.

பிரார்த்தனைப் பாடல்கள் முடிந்ததும், மாதர் சங்கத்தலை ..., ஊரிலுள்ள சில பிரமுகர்களும் மறைந்து ...

சவுந்தரியின் குண விசேஷங்களைக் கூறி மக்கள் சார்பில் அவளது குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்து அவள் ஆன்மா சாந்தியடையட்டும் என்று பிரார்த்தித்தனர். பின்னர் அர்ச்சகர் தீபாராதனையைத் துவக்கினார். தூபக்கலசத்தின் மீது ஹோவென்று எரிந்த கற்பூர ஜோதி மீது உறவினர்கள் வரிசையில் வந்து கற்பூரத் துண்டுகளைப் போட்டு வணங்கினர்.

மன்னிப்புப் பிரார்த்தனையுடன் கூட்டம் வெளியே வரத் தொடங்கியது. அவர்கள் சிரமப்பரிகாரம் செய்து கொள்ள வெளியே அண்டாக்களில் சூடான பால் பாதாம், சாரை பருப்புகள் மிதக்க ஏலக்காய் வாசனையில் தயாராகக் காத்திருந்தது.

வாசலில் நின்ற உறவினப் பெண்கள் காகித டம்ளரில் பாலை நிறைத்துப் பரபரப்புடன் விநியோகிக்கத் துவங்கினர்.

சில்லென்ற குளிருக்கு இதமாக நல்ல சூடான பால், பாடினவர்கள் தொண்டைக்கு இதமாகவும், வம்பு பேசத் துடித்தவர்களின் உணர்வுகளுக்குத் தூண்டுகோலாகவும் இருந்தது.

ஓரமாக வந்து நின்று கொண்ட இரண்டு பெண்கள் சற்று உரத்த குரலில் கிசுகிசுத்தது காவேரியின் காதுகளில் கணீரென்று கேட்டது.

''ஆமாம், இந்த பொண்ணு காவேரி அன்னிக்கு அப்படியென்ன கல்லுப்பிள்ளையாராட்டம் கொஞ்சம்கூட கலங்காம உட்கார்ந்திருந்தா? தாயைப் போல வளர்த்த அவளுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடலையே. ரொம்ப நெட்டு பிடிச்ச பொண்ணு...கல்லு மனசு...''

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் காவேரி. அவளைப் பற்றிய விமரிசனம் நெஞ்சைச் சுட்டது.

வீட்டில் அன்று நடந்த குழப்பத்தில் மயங்கி விழுந்த அண்ணி சவுந்தரி அதற்குப்பின் திரும்பக் கண்களை விழித்துப் பார்க்கவேயில்லை.

லோகேந்திரன் பயந்து போய் உடனடியாகக் குடும்ப வைத்தியருக்குப் போன் செய்தான்.

இரவின் அந்த வேளையிலும் -வெளியே வீசிய குளிரையும் பொருட்படுத்தாது-லேசாக ஆரம்பித்த மழையில் இரவு உடைமீது கம்பளிக்கோட்டைப் போர்த்திக்கொண்டு பத்து நிமிடங்களில் அவர்களது குடும்ப வைத்தியர் டாக்டர் ஸ்மித் வந்து விட்டார்.

ஆனால் பலன்...?

படுக்கை மீது கிடத்தப்பட்டிருந்தவளைப் பரிசோதித்து விட்டுக் காவேரியின் கையைப் பிடித்து. ஆதரவுடன் அழுத்தினார் டாக்டர்.

''ஐயாம் ஸாரி. இவங்க இறந்துபோய் அரை மணிக்கு மேலாகுதே, மாரடைப்பால் இறந்து விட்டாள் என்று உடனடியாகச் சான்றிதழ் எழுதித் தந்து விடுகிறேன். தைரியமா இரும்மா.'' முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு அந்தக் கிழவர் வெளியேறி விட்டார்.

'அண்ணீ!' என்று ஒரே ஒரு தடவை அடிவயிற்றிலிருந்து வந்த அலறலுக்குப் பின் அவள் அழவில்லை.

தலைக்குள் ஏதோ ஒன்று வெடித்து அந்த வேதனையின் தீவிரத்தில் உணர்வுகள் எல்லாவற்றையும் இழந்து விட்டது போன்றதொரு அதிர்ச்சியில் அவள் மரக்கட்டையாகிப் போனாள். பின்னர் காரியங்கள் விரைவாக நடந்தன. இரவு முழுவதும் அந்தப் படுக்கை அருகே பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

மறுநாள் காலை உடலைக் குளிப்பாட்டிப் புதிய புடவையொன்றில் பட்டையாகத் திருநீற்றுக்கீற்றுடன் பிரேதப் பெட்டிக்குள் அடக்கமாக்கிவிட்டிருந்தனர். உறவினப் பெண்கள் முன்னறையில் எல்லோர் பார்வைக்கும் வைக்கப்பட்டிருந்த பெட்டியின் தலைமாட்டில் நெருங்கிய பந்து என்ற தகுதியில் நாற்காலி ஒன்றில் அவள் உட்கார்ந்திருந்தாள். கத்தையாகப் புகைந்த ஊதுவத்தியின் மணம் வீடு முழுவதையும் கப்பிக் கொண்டிருந்தது.

''அது என் பிறந்த வீட்டிலிருந்து நான் கொண்டு வந்த காமாட்சி விளக்கு. அண்ணியோட குத்துவிளக்கை ஏத்தித் தலைமாட்டுக்கிட்டே வையுங்கோ'' என்று யசோதா உத்தரவிட்டது காதில் கேட்டது. அப்பொழுதும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

அன்று நடந்த குழப்பத்தின் அதிர்ச்சியை அண்ணி தாங்க முடியாது மீண்டும் மாரடைப்பு வந்து இறந்து போய் விட்டாள். அவள் மரணத்திற்குத் தான்தான் காரணம் என்ற குற்ற உணர்வு நெஞ்சைக் குடைய அழ முடியாது பெரும் வேதனையில் உணர்வுகள் உறைந்து போய் அவள் உட்கார்ந்திருந்தாள்.

அதைப்பற்றி இப்போது விமரிசனம்!

இவர்களுக்கு வேலை கிடையாது. யார் வீட்டிலாவது ஏதாவது நடந்துவிட்டால் போதும், வெறும் வாய் மெல்கிறவனுக்கு அவல் கிடைத்தது போல. மரணம், விபத்து என்று அவர்கள் கவனத்தைக் கவர இன்னும் வேறு ஒரு திடுக்கிடும் செய்தி கிட்டும்வரை சவுந்தரியின் வீட்டு சங்கதி அவர்கள் வாயில் அகப்பட்டு அரைபடும் என்பது நிச்சயம்.

இந்தியா-அதுவும் தமிழர் சமுதாயம் ஒரு சிறு வட்டத்திற்குள் அடங்கிப் போனதால் எந்த ஒரு செய்தியும் உலக மகா செய்தி போன்ற விளம்பரத்தைப் பெற்று

விடுகின்றது. வாய் அலுக்காது வம்பு பேசுவதைத் தவிர வேறு பொழுது போக்குகள் அதிகம் ஏதும் இல்லையே!

தன்னுள் சினந்தபடி யாரையும் கவனிக்காது தங்கள் வீட்டுக் காரில் உட்கார்ந்து கொண்டாள் காவேரி.

அண்ணி ஒருத்தி இருந்தபோது ஆயிரம்பேர்கள் இருந்ததைப் போன்று கலகலத்த வீடு இப்போது வெறுமையாக சூன்யமாகத் தென்பட்டது.

''பிக்மக் கோட்டி, ஊப்பிலோனோ வனா அம்பிலே?'' (பெரிய யஜமானியே, நீ எங்கே போய்விட்டே?) என்று உரத்த குரலில் அழுது ஆர்ப்பரித்த லீனாவிடம் யசோதா எரிந்து விழுந்தாள்.

''இங்கே இருக்கிற மத்தவங்கள்ளாம் நல்லபடியா வாழணும். சும்மா இப்படி ஊளையிட்டுகிட்டு இருக்கத் தேவையில்லை. எங்களுக்கு இல்லாத சொந்தம் உனக்கென்ன வந்துவிட்டது. வேலைகளை ஒழுங்கா கவனி'' என்று கத்தினாள்.

இப்பொழுது அவள்தான் வீட்டு யஜமானி-அவள் வைத்ததுதான் சட்டம்-எல்லோரும் அவளுக்கு அடங்கிப் போக வேண்டும்- என்ற விதத்தில் நடந்து கொண்டாள்.

★ ★ ★

சில தினங்களுக்குப் பின் வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பிய காவேரி திடுக்கிட்டுப் போனாள். சவுந்தரி அண்ணியின் அறை காலியாக இருந்தது. அவளது படுக்கை, கட்டில், மேஜை எதையும் காணவில்லை.

''அண்ணியோட சாமான்கள் எல்லாத்தையும் டர்பன் ஒல்ட் ஏஜ் ஹோமுக்கு அனுப்பிட்டேன். புடவை, ரவிக்கை, கம்பளிப் போர்வை இதுகளை எல்லாத்தையும் மூட்டை கட்டி

வெல்ஃபேர் சொசைட்டிக்கு அனுப்பிட்டேன். இந்த அறையில் புதிய ஃபர்னிச்சர் வாங்கிப் போட்டு விருந்தாளிகள் தங்கும் அறையாக உபயோகிக்கப் போகிறேன்.''

பிரமித்துப்போய் நின்ற காவேரியை ஏளனமாகப் பார்த்தாள்.

''கவலைப்படாதே. உன் அண்ணியின் பட்டுச் சேலைகள் நான்கையும் அப்படியே உனக்கு எடுத்து வச்சிருக்கேன். எடுத்து உன் அலமாரியில் வச்சுப் பூட்டிக்கோ.'' ஒரு மூலையில் அசட்டையாகக் காகிதத்தில் சுருட்டி வைத்திருந்ததைச் சுட்டிக் காட்டினாள் யசோதா. ''செத்தவ துணியை நான் கட்டிக்க மாட்டேன். நீ தாராளமா எடுத்துக்கலாம்'' என்று கூறிவிட்டு ''செத்தவளின் நகைகள் மட்டும் தேவையான்னு ஏடாகூடமா கேட்காதே. என் கல்யாணத்தின்போது உன் பெரிய அண்ணன் வாக்குக் கொடுத்தது உனக்குத் தெரியாது. அண்ணி காதில் போட்டிருந்த வைரத்தோடும், கழுத்துச்செயினும் கைவளையும் அவர்களுக்குப் பின் என்னைத்தான் சேரும்னு சொல்லியிருந்தாங்க.''

'பொய், சின்ன அண்ணி, இது பெரிய பொய். அவங்க எனக்குன்னு உயிலில் எழுதி வச்சிருக்காங்க!'-உரத்துக் கத்த வேண்டும் என்றதொரு துடிப்பு ஏற்பட்டும் மௌனமாகக் காவேரி உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றாள்.

அதைப் புரிந்து கொண்டது போல் யசோதா சட்டென்று அன்று தபாலில் வந்த கடிதம் ஒன்றை அவளிடம் நீட்டினாள்.

அவர்களது குடும்பத்து வக்கீல் எழுதியிருந்தார்.

'தயவு செய்து நாளை பிற்பகல் நான்கு மணியளவில் என் அலுவலகத்திற்கு வரவும். முன்னதாகவே என் காரியதரிசியிடம் தெரிவித்துவிட்டு வந்தால் நலம்-மில்லர்' என்று சுருக்கமாக அந்த வெள்ளைக்கார வக்கீல் எழுதியிருந்தார்.

மறுநாள் மாலை- அவர் உத்தரவுப்படியே வேலை முடிந்ததும் கவர்மெண்ட் காரை காரேஜில் நிறுத்திவிட்டு அவள் பொடி நடையாக வக்கீலின் அலுவலகம் இருந்த தெருவை அடைந்து லிஃப்ட்டைப் பிடித்து பதினான்காம் தளத்தில் இறங்கி வராந்தாவில் நடந்து, கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு ரிஸப்ஷனில் உத்தரவு பெற்றுக் கொண்டு வக்கீலின் அறைக்குள் நுழைந்தாள். அவளுக்குள் ஏற்பட்ட பரபரப்பில் மூச்சடைத்துக்கொண்டு திணறி விட்டாள்.

மிஸ்டர் மில்லரை அவள் பார்த்துக் கொஞ்சக் காலமாகி விட்டிருந்தது. அண்ணன் மறைவுக்குப் பின் சவுந்தரி அண்ணியுடன் சில தடவைகள் அங்கே அவள் வர நேர்ந்தது. முன்னைவிடத் தலை முழுவதும் நரைத்து, கன்னங்கள் ஒட்டி வக்கீல் மிக முதுமையாகக் காணப்பட்டார். எதிரே கிடந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்டினார். குப்பென்று வியர்த்துக் கொட்ட, மார்பு படபடக்க அவள் நாற்காலியில் அமர்ந்தாள்.

மேஜை மீதிருந்த ஒரு பித்தானை அவர் அமுக்கியதும் ஓசைப்படாது கதவைத் திறந்து கொண்டு வந்த காரியதரிசி. ஒரு இளம் வெள்ளைக்கார பெண்-கனமானதொரு ஃபைலை அவர்முன் வைத்துவிட்டு மாயமாகினாள். அதை அவசரமாகத் திறந்து ஒரு பழுப்பு உறையை எடுத்து அதிலிருந்து காகிதக் கத்தையை இழுத்தார். வக்கீல் வழக்கமான புன்னகையுடன் ஆரம்பித்தார்.

''உங்கள் அண்ணி இறப்பதற்கு முன் உங்கள் வீட்டுக்கு என்னை அழைத்தார்கள். அவர்களது உயிலை மாற்றி எழுத வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதனால் ஒரு புது உயில் தயாரிக்கப்பட்டது. அதிலுள்ள ஷரத்துக்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். சொல்ல வேண்டியது என் கடமை'' என்றபடி வேகமாக வாசிக்க ஆரம்பித்தார்.

சவுந்தரி அண்ணிக்கு லோகேந்திரன் நடத்தி வந்த வியாபாரத்திலே ஒரு பங்கு இருந்தது. அவர்கள் வசித்த வீட்டின் பக்கத்திலே ஒரு சிறு காலிமனை அவளுக்குச் சொந்தமாக இருந்தது. அத்துடன் பாங்கியில் அவள் பெயரில் பத்தாயிரம் ராண்ட் பணம் இருந்தது.

அவளுக்குப் பின், அவளது நகைகளும்-அந்தச் சொத்துக்களும் காவேரிக்குச் சேர வேண்டுமென்று உயிலில் எழுதி வைத்திருந்தாள். ஆனால் புதிய உயிலின்படி அத்தனையும் லோகேந்திரனுக்குச் சேரவேண்டும் என்று மாற்றப்பட்டிருந்தது. காவேரியின் கல்யாணச் செலவிற்கு அவளது பணத்திலிருந்து ஐந்தாயிரம் ராண்ட் மட்டும் கொடுத்தால் போதும் என்றும் ஒரு நிபந்தனை இருந்தது.

திடுக்கிட்டுப் போனாள் காவேரி! அண்ணி சவுந்தரியின் உயிலில் ஏன் இந்த மாற்றம்? எதனால் இது ஏற்பட்டது?

தன் உள்ளத்துப் போராட்டங்களை அடக்கிக்கொண்டு ''தாங்க் யூ மிஸ்டர் மில்லர்'' என்று நன்றி தெரிவித்துவிட்டு வெளியே வந்தாள்.

வீட்டையடையும்போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. லீனா மட்டும் வாயில் வராந்தாவில் உட்கார்ந்திருந்தாள். சின்ன அண்ணி யசோதா தன் சிநேகிதி ஒருத்தியைப் பார்த்து வர வெளியே போயிருந்தாள். தன் யஜமானியின் திடீர் மறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த லீனா பைத்தியக்காரிபோல தானே அழுதாள்-தானே பேசிக் கொண்டாள்- முகத்தைக் கடினமாக வைத்துக்கொண்டு மௌனமாக வளைய வந்து கொண்டிருந்தாள். திடீரென்று நினைவு பளிச்சிட அவள் விருக்கென எழுந்தாள்.

''கோச்சான், மறந்தே போயிட்டேன். லேடீஸ்மித் போனபோது பெரிய யஜமானி என்னிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்காங்க. தனக்கு ஏதாவது ஏற்பட்டால் உங்களிடம்

துயரத்தில் அதைப் பற்றி நினைப்பேனக்கில்லாது போய்விட்டது.'' வேகமாகத் தன் அறைக்கு ஓடி ஒரு கடித உறையுடன் திரும்பி வந்தாள்.

இறந்துபோன அண்ணியின் கையால் கடைசியாக எழுதப்பட்ட கடிதத்தை நெஞ்சு பதற வாங்கிப் பிரித்தாள் காவேரி. அதிலிருந்து ஒரு சிறு பொட்டலமும், ஒரு துண்டுக் கடிதமும் வெளிப்பட்டன.

'அன்புள்ள காவேரி, புதிய உயிலை வக்கீல் வாசிக்கும் போது நான் உன்னை ஏமாற்றி விட்டதாக எண்ணி மனம் நொந்து போவாய். உன்னை வஞ்சிக்க என் மனம் ஒருபோதும் இடம் தராது. உன்னை நாத்தியாக நான் ஒரு பொழுதும் கருதியதில்லை. பெற்ற மகளைப் போல நினைத்தேன். நீ லேடீஸ்மித் சென்ற சமயம் லோகேந்திரன் என்னை மிகவும் வற்புறுத்தி அந்தப் புதிய உயிலை அவன் இஷ்டப்படி எழுதச் சொன்னான். நீயும் அருகில் இல்லை. கணவனும் மனைவியும் என்னிடம் ரொம்பவும் வம்பு செய்து என்னைத் துன்பப்படுத்தி எழுத வைத்தார்கள்.

வக்கீலை அழைத்து வந்து வற்புறுத்தியதை மறுக்க முடியவில்லை. என்ன செய்வேன். நோயாளியாகி அவர்கள் தயவில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். மனக் கசப்போடுதான் புதிய உயிலில் கையெழுத்துப் போட்டேன். அன்று இரவு முழுவதும் உனக்குத் துரோகம் செய்து விட்டோமே என்று நான் அழுத அழுகை...

ஆனாலும் உனக்கு என் ஆசிகளுடன் என் வைர மோதிரத்தை வைத்துவிட்டுப் போகிறேன். இந்த மோதிரத்தைப் பற்றி லோகேந்திரனோ, யசோதாவோ அறிய மாட்டார்கள். இது என் பாட்டனுக்கு அவர் வேலை செய்த வெள்ளைக்காரக் கம்பெனி முதலாளி தமது பரிசாகக் கொடுத்தது. தம் கணவரிடமிருந்து பெற்ற அந்த மோதிரத்தை என் மாமியார் எனக்குத் தந்துவிட்டுப் போனார்கள்.

அண்ணன் தம்பியிடையே இதன் பொருட்டு மனத் தாங்கல் ஏற்படக்கூடாது என்று நான் இதை என் விரலில் அணிந்ததேயில்லை. பத்திரமாக அலமாரியில் ஒரு மூலையில் ஒளித்து வைத்திருந்தேன். உன் பாட்டியின் மோதிரத்தை உனக்குத் தந்துவிட்டுப் போகிறேன். புளு ஒகர் கல்-ஒரு காரட்டுக்கு மேல் உள்ளது. பழைய வெட்டு என்றாலும் நல்ல விலை கிடைக்கும். என் நினைவுக்கு என்று வைத்துக் கொண்டு உபயோகித்தாலும் சரி, விற்று அதனால் நீ பலன் அடைந்தாலும் சரி, உன் இஷ்டம்.

உன்னை ஏமாற்றிவிட்டு சீனாவையாக்கி விட்டுப் போகிறேன். மன்னித்துக்கொள் என் அருமை காவேரி, நீ சுகமாக-மங்களமாக இருப்பாய் என்று ஆசீர்வதிக்கிறேன்.

உன் அன்புள்ள அண்ணி

'சவுந்தரி'

நீல ஒளி வீசிய வைரக் கல்லுக்குப் போட்டிபோல காவேரி கண்கள் கண்ணீர் முத்துக்களைச் சொரிந்தன. கொட்டிக் குமுறிக் குமுறி அழுதாள்.

''அண்ணி உங்க ஆசி ஒண்ணே எனக்குப் பெரும் சொத்து. அதுக்கே நான் ரொம்ப நன்றியாக இருக்கேன் அண்ணி. இதைத் தெரிஞ்சு உங்க ஆன்மா அமைதியடையட்டும் அண்ணி. நீங்கு கேட்டுக் கொண்டபடி...''

மேலே பேச முடியாது தேம்பினாள்.

11

சின்ன அண்ணி யசோதாவுக்குச் சில சின்னத்தனமான குணங்கள் உண்டு என்பதைக் காவேரி அறிவாள். அவள் வீட்டில் இல்லாதபோது அவளது அலமாரியைத் திறந்து

அவள் பத்திரமாக வைத்திருக்கும் கடிதங்கள், அவளது வங்கிச் சேமிப்புப் புத்தகம், புதிதாக வாங்கி வந்துள்ள துணி மணிகளின் விவரம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள முயற்சிப்பாள்.

அதை அவள் ஒரு கேவலமான செய்கையாகக் கருதியதே யில்லை. கல்யாணமாகாத பெண் காவேரி. அண்ணன் அரவணைப்பில் வாழ்கிறாள். அவளைப்பற்றி, அண்ணியான தான் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதுதான் அவளது வாதம்.

யசோதாவின் கண்களில் அந்தக் கடிதமோ, வைரமோதிரமோ அகப்பட்டுவிட்டால் வீடு ரணகளமாகி விடும் என்ற பயத்தில் காவேரி அவைகளைத் தன் தோள் பைக்குள் வைத்து அன்றாடம் சுமந்து கொண்டு வேலைக்குப் போய் வந்தாள்.

வைர மோதிரத்தைப்பற்றி இன்னொரு விதமான கவலையும் அவள் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் தோழி நர்ஸ் நளினியின் காரில் வரமுடியாது. சில சமயங்கள் பஸ்ஸில் பயணப்பட்டு வீடுவர நேர்ந்தது. கூட்டம் நிறைந்த வழியில் பஸ்ஸில் ஜேப்படி திருட்டும் அதிகம் என்பது அவளுக்குத் தெரியும். திருடன் எவனாவது அண்ணி சவுந்தரி அவளுக்கு அன்புடன் விட்டுப்போன அந்த அழகான வைர மோதிரத்தைத் தட்டிக்கொண்டு போய்விட்டால்...?

அண்ணி சவுந்தரியின் கடைசி கடிதத்தை அவள் பத்திரமாகப் பாதுகாக்க விரும்பினாள். அதே சமயம் அதைப் பையில் வைத்துக்கொண்டிருக்கவும் சங்கடமாக இருந்தது. சமையலறையிலோ தோட்டத்திலோ அவள் வேலையாக இருக்கும்போது யசோதா அண்ணி அவளது தோள் பையைத் திறந்து பரிசோதிக்கையில் அந்தக் கடிதம் அவள் கைக்குப் போய்ச் சேர்ந்துவிட்டால்...பிறகு வேறு வினையே வேண்டாம் என்ற அச்சம்.

அன்று மாலை அவள் வேலையினின்று வீடு திரும்பிய போது திடீர் என்று அந்த எண்ணம் தோன்றியது. பாதை ஓரத்திலிருந்த கார் பார்க்கில் வண்டியை நிறுத்திவிட்டு அரை மணிக்குத் தேவையான சில்லரையைப் பார்க்கிங் மீட்டரில் போட்டுவிட்டு நேரத்தைக் கடிகாரத்தில் பார்த்து மனதில் குறித்துக்கொண்டு வேகமாகத் தாமோதரனின் அலுவலகம் இருந்த கட்டிடத்தை நோக்கி நடந்தாள்.

மூன்றாவது தளத்தில் லிஃப்டிலிருந்து வெளிப்பட்டு வராந்தா மீது விரைந்து கண்ணாடிக் கதவில் பளிச்சிட்ட பெயர் தாங்கி நின்ற அலுவலகத்திற்குள் கதவைத் தள்ளிக் கொண்டு சென்றாள்.

''யெஸ் ப்ளீஸ்'' பற்களை முல்லைச்சரமாகக் காட்டிச் சிரித்த ரிஸப்ஷனிஸ்ட்டிடம் தன் பெயரை எழுதிக் கொடுத்தாள்.

சில நிமிஷங்களில் இண்டர்காம் ஒலித்தது.

''யெஸ் சார். அனுப்பி வைக்கிறேன்'' என்று ஆங்கிலத்தில் குழைந்த அந்தப் பெண் காவேரியின் பக்கம் திரும்பி, ''உங்களை மிஸ்டர் தாமோதரன் உள்ளே வரச் சொல்கிறார்.'' பெரியதாக முறுவலித்தாள்.

காவேரி அவனது அலுவலகத்திற்குச் செல்வது அதுதான் முதல் முறை. ஜன்னல்களை வெல்வெட் திரைச்சீலை அடைக்கச் சுற்றுச் சுவருடன் ஒட்டினாற்போல் விரிக்கப் பட்டிருந்த கால் புதையும் கம்பள விரிப்பும், வெளியே வீசும் குளிர் தெரியாது மின்விசை பரப்பிய கதகதப்புமானதொரு விஸ்தாரமான அறை அது. கூரை முகட்டைத் தொட்டபடி சுவரோடு பதிக்கப்பட்டிருந்த பெரிய புத்தக அலமாரிக் கண்ணாடி வழியே பொன் எழுத்துக்களைப் புறமுதுகில் காட்டியபடி தடிமனான சட்டப்புத்தகங்கள் வரிசையாக நிற்க,

முன்னால் கிடந்த மேஜை மீது அடுக்காக வைக்கப் பட்டிருந்த ஃபைல்களின் இரு பக்கத்திலும் பச்சை - சிவப்பு வண்ணத்திலே தொலைபேசிகள் அழகு செய்ய, சுழல் நாற்காலியில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தான் தாமோதரன்.

அவளைக் கண்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தான். எதிரே தெரிந்த ஆசனத்தைக் காட்டி அமரச் சொல்லி உபசரித்தான்.

''உங்க அண்ணியின் மறைவுக்கு நான் ரொம்ப வருந்துகிறேன். அன்று நீ மனம் இடிந்து போய் துயரத்தில் மூழ்கித் தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தாய். அதனால் நான் என் அனுதாபத்தை உன் அண்ணன்-அண்ணி இருவரிடமும் தெரிவித்துவிட்டு, பின்னர் கிரிமடோரியத்திற்குச் சென்று கூட்டத்துடன் கலந்து கோண்டேன்.''

''நீங்கள் வந்து போனதாக எங்கள் வேலைக்காரி லீனா சொன்னாள். மிக்க நன்றி'' என்றாள் காவேரி மெல்லிய குரலில்.

மலர்வளையம்-சந்தனக்கட்டை முதலியவைகளை அனுப்பி அஞ்சலி செலுத்திய நண்பர், உறவினர்களுக்கு அவள் பதிலுக்கு தாங்க்யூ கார்ட் அனுப்பித் தங்கள் குடும்பத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருந்தாள்.

''உன் கார்டு கிடைத்தது. உன் கையெழுத்தை நான் இது வரை பாத்ததேயில்லை. உண்மையில் முத்துப்போல எத்தனை அழகாக இருக்கு தெரியுமா?'' புன்முறுவலித்தான் அவன்.

'என் தலையெழுத்து அத்தனை அழகாக இல்லையே தாமு!' என்று கூவத் துடித்த நாவை அடக்கிக் கொண்டாள்.

''சவுந்தரி அண்ணிக்கு ரோஜா மலர்கள் என்றால் பிரியம். நீங்கள் அவங்களுக்குப் பிடித்த சிவப்பு ரோஜா மலர்க்கொத்தை அனுப்பியிருந்தீங்க. அதுக்கு நான் நேரிடையா [illegible]போது நன்றி தெரிவிச்சுக்கறேன்.''

''அதுக்காகவா இவ்வளவு சிரமப்பட்டு வந்திருக்கே?''

முகம் சிவந்து போனாள் காவேரி. அவளுக்கு மூச்சு முட்டியது.

''இல்லை மிஸ்டர் தாமோதரன். ஒரு முக்கிய காரியமா நான் அவசரமா இங்கு வந்திருக்கிறேன். பார்க்கிங் மீட்டரில் அரைமணி நேரத்துக்குத்தான் பணம் போட்டுட்டு வந்திருக்கிறேன். அதனால்...'' என்று கூறி விட்டுத் தன் கைக்கடிகாரத்தைக் கவலையோடு பார்த்தாள்.

''என் கட்சிக்காரர் ஒருவரைப்பற்றி சில முக்கிய செய்திகளைப் பேசி ஆலோசிக்க நான் க்யூ.சி.யிடம் போயிருந்தேன். இப்பொழுதுதான் இங்கே வந்தேன். நான் டீ சாப்பிடும் நேரம். தயாரித்து எடுத்து வரப் பையன் உள்ளே போயிருக்கிறான். நீயும் என்னோட கொஞ்சம் டீ சாப்பிடு. உன் முகத்தைப் பார்த்தால் ரொம்ப சோர்வாகத் தென்படுகிறது.

அலுவலகத்து ஆப்பிரிக்கப் பையன் தேநீர் கெட்டில், கோப்பைகள் கொண்ட மரத்தட்டை மேஜை மீது கொண்டு வந்து வைத்தான்.

''ஜோ ஹனஸ்! கீழே இந்த நர்ஸ் அம்மாளின் கவர்மெண்ட் கார் பார்க்கிங் இடத்தில் நின்று கொண்டிருக்கும். சிறிது நேரம் கழித்துக் கீழே போய் இன்னும் ஒரு அரை மணி பார்க்கிங் நேரத்திற்காக இந்தச் சில்லறையை மீட்டருக்குள் போட்டுவிட்டு வா.'' ஸுலுவில் உத்தரவிட்டபடி தன் பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

''யா! பாஸ்!'' என்றபடி ஆப்பிரிக்க வேலையாள் வெளியேறியதும் புன்முறுவலுடன் தேநீரைக் கோப்பையில் வார்த்துப் பால் விட்டுக் கலக்கி அவளிடம் நீட்டினான்.

''சர்க்கரைபோட்டுச் சாப்பிடுவதுண்டல்லவா?...''கேட்டபடி சர்க்கரைக் கிண்ணத்தை அவளருகே நகர்த்தி வைத்தான்.

பால் விடாது கருப்புத் தேநீரை மட்டும் ஒரு கப்பில் எடுத்துக்கொண்டு அவன் மெல்லக் குடிக்கத் தொடங்கினான்.

''சர்க்கரை, பால் இதுகளை நான் சேர்த்துக் கொள்வதில்லை. உடம்பை டிரிம்மாக வைத்துக்கொள்ள இவைகளை ஆரோக்கியம் காரணமாக ஒதுக்கி விட்டிருக் கிறேன். மற்றபடி சர்க்கரை வியாதி எதுவும் எங்கள் குடும்பத்தில் யாருக்கும் கிடையாது. இப்பப் பாத்தியா பந்தயக் குதிரை போல் உடம்பில் துடிப்பு நிறைய இருக்கு. செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருப்பதால் அதை நீடித்துக் காப்பாத்திக்கவேணுமே!'' மெல்லச் சிரித்தான்.

கோப்பையைக் கீழே வைத்துவிட்டு வாயைத் துடைத்துக்கொண்டாள் காவேரி.

''உங்க ரிஸப்ஷனிஸ்ட் பார்க்க ரொம்ப அழகா இருக்கிறாள். ரொம்பப் பணிவா பேசுகிறாள்'' என்றாள்.

''அப்படியா, என்வரை ஒரே ஒரு பெண்தான் என் கண்களுக்குப் பேரழகியாக எப்பவும் தெரிகிறாள்.'' கலகலவென்று அவன் சிரித்தபோது குப்பென்று முகம் சிவந்து போனாள் காவேரி. படபடவென்று மார்பு துடிக்க மேஜைமீது போடப்பட்டிருந்த கண்ணாடியைப் பார்ப்பது போலத் தலையைக் குனிந்துகொண்டு பேசினாள்.

''சில தினங்களுக்கு முன்னர் மிஸ்டர் மில்லர் எனக்கு என் பெரிய அண்ணியின் உயிலைப் படித்துக் காட்டினார்.''

''அதன் பிரகாரம் கொஞ்சம் சொத்து வரப்போகிறது. அதை எப்படி முதலீடு செய்யலாம் என்று ஆ[illegible]னை கேட்க வந்திருக்கிறாயா?''

லேசாகப் புரண்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர் தாமோதரன், நான் ஊரில் இல்லாத சமயம் முன்பு எழுதிய உயிலை மாற்றி விட்டிருக்கிறார்கள். அண்ணியின் பிசகல்ல அது. இந்தக் கடிதத்தைப் படித்துப் பாருங்கள். அவங்களை வற்புறுத்தி லோகேந்திரன் அண்ணன் உயிலைத் தனக்குச் சாதகமாக மாத்தி அமைச்சுக் கொண்டார்.''

''மிஸ்டர் மில்லர் உங்கள் குடும்பத்து வக்கில். அவர் உங்க அண்ணியின் விருப்பப்படி உயிலைத் தயாரித்திருப்பார். உங்க அண்ணி பூரண நினைவோடு இருந்த சமயம் அவங்க கேட்டுக் கொண்ட நிபந்தனைகளை வைத்து எழுதப்பட்ட உயில்-தக்க சாட்சிகள் கையெழுத்திட்டிருப்பார்கள். அது செல்லுபடியாகாதுன்னு நீ வம்பு வழக்கு செய்வதில் பலன் ஏதும் இருக்காதே!''

''அந்த உயிலைப் பத்தியோ-எனக்குத் தர மறுத்த சொத்தைப் பத்தியோ நான் பேச இங்கே வரலை. நீங்கள் ஒரு உதவி செய்யணும்னு கேட்கத்தான் வந்திருக்கேன்.''

''நீ கேட்கும் உதவி சிரமமானதாக இருந்தால்கூட மறுக்கமாட்டேன். சொல்லு.''

''இந்தக் கடிதத்தையும், இந்தப் பொட்டலத்திலிருக்கும் வைர மோதிரத்தையும் உங்கள் பாதுகாப்பில் எனக்காக வைத்திருக்க வேணும்.''

''என் கட்சிக்காரர்களின் தஸ்தாவேஜ்-முக்கிய கடிதங்கள் இவைகளை நான் எனது ஸேஃப் கீப்பிங்கில் வைத்துக் கொள்வது வழக்கம். அதிகப்படியான நகைகளாக இருந்தால் பாங்க் லாக்கரில் வைப்பேன். ஒரே ஒரு மோதிரந்தானே, இங்கேயே என் இரும்பு பீரோவில் வைத்து விடுகிறேன். அதற்கு நான் கொடுக்கும் ரசீதைப் பத்திரமாக வைத்துக் கொள். அதுபோதும்.''

''ரதி தேவையில்லை. உங்களை நான் நம்புகிறேன்.''

''உண்மையாகவா காவேரி. உனக்கு என்மேல் அத்தனை நம்பிக்கை இருக்கிறதா?'' மோகனமாக முறுவலித்தபடி அவளை மென்மையாகப் பார்த்தான்.

நெஞ்சு படபடப்பதை உணர்ந்த காவேரி, மறுபடியும் மேஜைப் பக்கம் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''உங்கள் ஒருவரைத் தவிர இது சமயம் எனக்கு யாரையும் நம்ப முடியவில்லை. இந்தக் கடிதமும் மோதிரமும் என் கைவசமிருந்தால் வீட்டில் வீணான குழப்பங்கள் ஏற்படும். புதிய உயில் பிரகாரம் சவுந்தரி அண்ணியின் சொத்துக்கள் அண்ணன் லோகேந்திரனுக்குச் சொந்தமாகி விடுகிறது.''

''அடப் பாவமே! நீ சொல்வதைப் பார்த்தால் உன் அண்ணனே இதில் ஒரு சூழ்ச்சி செய்திருக்கிறார் போலிருக்கே.''

''பரவாயில்லை, என் கையில் ஒரு தொழிலிருக்கு. ஒரு வேலையிருக்கு. என்னை நானே காத்துக்கொள்ள முடியும்'' என்றாள் விரக்தியாக.

அவள் கொடுத்த கடிதம், மோதிரம் அடங்கிய பொட்டலம் இரண்டையும் ஒரு கனமான பழுப்புக் காகித உறைக்குள் போட்டு மூடி சீல் வைத்து இரும்புஅலமாரியைத் திறந்து ஒரு தட்டில் வைத்துப் பூட்டினான். பின்னர் ஒரு தடிமனான நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்து அவள் முன் விரித்து ''நான் சொல்றபடி இதில் எழுதிக் கையெழுத்தும் தேதியும் போட்டுவிடு. நீ இந்த இரு பொருள்களையும் இன்று என்னிடம் பாதுகாப்பாக இருக்கக் கொடுப்பதற்கு அத்தாட்சி வேணும்?''

''உங்களை நான் நம்புகிறேன் என்ற பிறகு இதெல்லாம் அவசியமா?'' வியப்புடன் கேட்டாள் காவேரி.

''முத்துப்போன்ற இந்தக் கையெழுத்து என் குறிப்பு நோட்டுப் புத்தகத்தில் இருப்பதை நான் விரும்புகிறேன் என்று வைத்துக் கொள்ளேன்.'' வேடிக்கையாகச் சிரித்தான். ''இந்தக் குறிப்பு அவசியம். ஏன் என்றால் அரசியலில் ஈடுபட்டிருக்கும் எனக்கு இடையே ஏதாவது நேர்ந்தால் உன் பொருள்கள் என் பாதுகாப்பில் இருக்கிறது என்பதற்குச் சாட்சி தேவை. அப்பொழுதுதான் உனக்கு அவைகள் கிட்டும் இல்லையா?''

''உங்களுக்கு எதுவும் நேரக்கூடாதுன்னு நான் சாமியை வேண்டிக்கிறேன்...'' கூறியபடி அவன் சொன்னபடி எழுதிக் கையெழுத்துப் போட்டாள்.

வேலை முடிந்ததும், ''நன்றி மிஸ்டர் தாமோதரன்'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள். அப்பாடா என்றதொரு நிம்மதி மனதிற்குள் நிறைந்தது.

★ ★ ★

அன்று இரவு உணவிற்குப் பின்னர் சமையலறை வேலைகளை லீனாவுடன் கூட இருந்து கவனித்துவிட்டுத் தோட்டப் பக்கத்துக் கதவைத் தாளிட்டு விட்டு மிகவும் களைப்புடன் தன் அறைக்குள் வந்து படுக்கை மீது உட்கார்ந்து கொண்டாள்.

லேசாக விரலால் கதவைத் தட்டிவிட்டுச் சைனீஸ் ப்ரோகேட் டிரஸ்ஸிங் கவுன் சரசரக்க அண்ணி யசோதா உள்ளே வந்து எதிர்ப்புறம் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

''நல்லவேளை, நீ இன்னமும் தூங்க ஆரம்பிக்கவில்லை. ஒரு பத்து நாளா உன்னிடம் பேசணும்னு நினைக்கிறதை ஒத்திப்போட்டுக் கொண்டே வந்தேன். இன்னிக்கு ஒரு முடிவு செய்துவிடலாம்னு நினைக்கிறேன்.'' போலியாக முறுவலித்த படி ஆரம்பித்தாள்.

திக்கென்ற உணர்வில் பதில் பேசத் தோன்றாது வெறித்தாள் காவேரி.

''இப்போ விலைவாசிகள் எல்லாம் நாளுக்கு நாள் அதிகரிச்சுக் கொண்டு போகிறது உனக்கே தெரியும். நான் இந்த வீட்டுக்கு மருமகளாக வந்தபோது ரொட்டி பதினோரு செண்டுக்கு விற்றது. இன்னிக்கு இருபத்தஞ்சு செண்டாக உசந்து போயிட்டது. பாலும் வெண்ணையும் காய்கறிகளும், முட்டை, மீன் எல்லாம் எக்கச்சக்கமாக ஏறி விட்டிருக்கே.''

''ஆமாம் அண்ணி! எங்கள் சம்பளத்தைத் தவிர வெளியே சாமான் விலைகள் ரொம்பவே ஏறிவிட்டிருக்கு.'' மெல்லச் சிரித்தாள் காவேரி.

''புத்திசாலி, நீயே புரிஞ்சு கொண்டது நல்லதாப் போச்சு. தாய் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறேன்னு பெரியவங்க சொல்லுவாங்க. இப்ப இருக்கிற விலை வாசியிலே இன்னொரு ஆளுக்குச் சாப்பாடு போட்டு வச்சு காப்பாத்துகிறதுங்கிறது கொஞ்சம் கடினம்தான். நம்ப கடைப்பக்கத்திலே ஒரு குஜராத்திக்காரர் ஒரு சாப்பாட்டுக் கடை திறந்துட்டார். சூடான கைரொட்டியும் சப்ஜியும் தரார்னு கூட்டம் அந்தப் பக்கம் திரும்பிட்டதிலே நம்ப வியாபாரம் கொஞ்சம் படுத்துட்டது.''

''இப்போ நான் என்ன பண்ணனும் சொல்லுங்க அண்ணி. ஒழிந்த வேலையில் அண்ணனோட கடையில் வேலை செய்யணுமா?''

''அதெல்லாம் தேவையில்லை. அங்கே ஏகப்பட்ட ஆட்கள் இருக்காங்க. உன் கல்யாணம் ஆகிறவரை நீ எங்களோடுதான் தங்கி இருக்கணும். ஆனால் நீ படிச்சு நர்ஸ் வேலை பார்க்கிறவ. மாதம் இவ்வளவுன்னு சம்பாதிக்கிறே. அதனாலே உன் போர்டிங் லாட்ஜிங்குக்குன்னு மாதம் நீ ஏதாச்சும் எங்களுக்குக் கொடுத்து உதவணும். உன்

அண்ணனும் நானும் கணக்குப் போட்டோம். நீ தாராளமாக மாதம் நூறு ராண்ட் தந்து உதவலாம்.''

''அண்ணி. என் சம்பளமே முன்னூறு ராண்டுக்குக் கொஞ்சம் குறைவு. அதில் பிடிப்பு போக இரு நூற்றைம் பதுக்குமேல் கொஞ்சம் கூடுதலா கிடைக்கிறது. அதில் நூறு ராண்ட் கொடுத்திட்டா...'' மென்று விழுங்கினாள் திகிலுடன்.

''உன் சொந்தச் செலவுக்கு துணிமணி வாங்கிக்க உன் கல்யாணத்துக்குச் சேர்த்து வைக்க மீதி நூற்றைம்பது ராண்ட் இருக்கே, பத்தாதா? உங்க அண்ணா உத்தரவு, சொல்லி விட்டேன். பிறகு உன் பாடு'' என்றாள் யசோதா கடுமையான குரலில்.

துக்கம் பந்தாக நெஞ்சையடைக்கக் கண்களில் பொங்கிய கண்ணீரைச் சமாளித்துக் கொண்டாள் காவேரி.

அண்ணி சவுந்தரியின் மறைவுக்குப்பின் அவள் அந்த வீட்டிற்கு அந்நியமாகி விட்டாளே. கூடப் பிறந்த சகோதரியிடம் சோற்றுக்குப் பணம் கேட்குமளவுக்கு லோகேந்திரன் மகா மட்டமாகி விட்டாரே!

''சரி அண்ணி அப்படியே செய்கிறேன்'' துக்கத்தை விழுங்கிக் கொண்டு பதிலளித்தாள்.

''இன்னும் ஒண்ணு-அதையும் சொல்லிடறேன். இந்த வீட்டு வேலைகளைக் கட்டிக் கொண்டு நான் இதுவரை ரொம்பப் பாடுபட்டேன். அதனாலே நீயும் இதில் கொஞ்சம் எனக்குச் சமையல், தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சறது, வெள்ளிக்கிழமை விளக்குகளைத் துலக்குகிறது, ஞாயிற்றுகிழமை முழு நேரமும் வீட்டு வேலை எல்லாம் இனி கவனிக்கவேண்டும்.''

சாப்பிடவும் தூங்கவும் பணம். அது போதாதுபோல வீட்டு வேலையிலும் பங்கு. இதைவிட லீனாவைப்போல

ஒரு வேலைக்காரியாக இருந்தால்...தங்குமிடம்...சாப்பாடு சம்பளம் எல்லாம் கிடைக்குமே என்று எண்ணமிட்டுக் குமைந்தாள்.

''சரிதானே? அண்ணன்கிட்டே ஓகேன்னு சொல்லிடறேன்'' மறுபடியும் கவுன் சரசரக்க யசோதா வெளியேறினாள்.

சவுந்தரி அண்ணிக்குப் பிறகு அந்த வீட்டின் நிலை இப்படி மாறிவிட்டதே. இந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப் படிந்து அவள் எத்தனை காலம் அங்கே நீடித்துவாழ முடியும்? வேறு வழி? கண்கள் கலங்க நெஞ்சு துயரில் விம்மக் காவேரி விளக்கை அணைத்து விட்டு இரவு உடைமாற்றிக் கொள்ளாது அப்படியே படுக்கை மீது சாய்ந்து விட்டாள்.

12

நன்றி உணர்வுள்ள-சலியாத உழைப்பைத் தரும் விஸ்வாசமிக்க வேலைக்கார இனத்தைச் சேர்ந்தவள் லீனா. எஜமானி எதுவும் சொல்லத் தேவையில்லை. அன்றாடம் அவள் செய்யவேண்டிய வேலைகளை மனதிற்குள்ளே அட்டவணை போட்டுக்கொண்டு கண்ணும் கருத்துமாகக் கச்சிதமாகச் செய்துமுடித்து விடுகிறவள்.

சவுந்தரி உயிருடன் இருக்கையில் லீனாவை அதட்டியோ மிரட்டியோ கடிந்துகொண்டோ வேலை வாங்கியதேயில்லை. வீட்டில் உள்ள உறவினர்களில் ஒருத்தி போன்றதொரு உணர்வை உண்டாக்கி அவளுக்குச் சகல சுதந்திரங்களையும் கொடுத்திருந்தாள்.

ஆனால் யசோதாவின் கொள்கையே வேறு. ஆப்பிரிக்கப் பெண்களை அடுப்பங்கரையில் தாராளமாக அனுமதிப்பது தவறு. வேலைக்காரி என்பவளை வைக்கிற இடத்தில்தான் வைக்க வேண்டும் என்றதொரு அதிகார மனப்பான்மை, இனக்கொள்கை முதலியவை கொண்டவள்.

ஆரம்பத்திலேயே அவள் காவேரியிடம் சொல்லி விட்டாள்.

''சவுந்தரி அண்ணி இருந்தவரை விஷயங்கள் அவங்க இஷ்டப்படி நடந்தது. இனி அப்படி நடக்க நான் சம்மதிக்க மாட்டேன். மேல் தேசத்திலிருந்து எங்க உறவுக்காரங்க இனி அடிக்கடி விருந்தாளிகளாக இங்கே வந்து தங்குவாங்க. அவங்களுக்கு லீனாவைச் சமைத்து போடச் செய்வது தவறு. சிலருக்கு ஆப்பிரிக்க வேலைக்காரி பரிமாறினால் கூடச் சாப்பிடப் பிடிக்காது.''

இதுநாள்வரை காவேரிக்கு அப்படி ஒரு எண்ணம் ஏற்பட்டதேயில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து அவள் லீனாவுடன் நெருங்கிப் பழகியவள்; லீனாவின் முதுகில் கட்டுண்டு வளர்ந்தவள். பள்ளிப்பருவத்தில் லீனா அவளைத் தோளில் சுமந்துகொண்டு பள்ளியில் விட்டு வருவாள். குளிப்பாட்டி-சீருடை அணிவித்து-சோற்றைப் பிசைந்து ஊட்டி... அண்ணி சவுந்தரிக்கு அடுத்தபடியாக அவளைக் கவனித்துக் கொண்டவள். லீனாவை-அதுவும்-தள்ளாத வயதை எட்டிக் கொண்டிருக்கும் நிலையில்-வெறுத்து ஒதுக்கி நீ ஒரு வேலைக்காரி என்று துச்சமாகப் பேச அவளுக்கு மனமே இல்லை.

விடிந்ததும் பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு ரோஜா வண்ணச் சீருடை அணிந்துகொண்டு அதன்மேல் வெள்ளை ஏப்ரனும் தலையில் வெள்ளைக் குட்டையும் கட்டிக்கொண்டு படுசுத்தமாக ஒரு நர்ஸைப் போல அடுப்பருகே வந்து கெட்டிலில் நீர் நிரப்புவதற்குள் காவேரி பதறி அடித்துக் கொண்டு அருகே வந்தாள்.

''லீனா வீட்டைப் பெருக்கித் துணிகளைத் துவைக்கிற வேலைகளைக் கவனி. காலை டீ போட்டு, ரொட்டி சுட்டு நானே மேஜையில் எடுத்து வைப்பேன். நீ கவலைப்படாதே''

என்று நடுத்தபோது லீனாவின் கண்களில் நீர் புரண்டு விட்டது.

''கோச்சான்! மீனாயாஸ். (சின்ன எஜமானியே! எனக்குப் புரிந்துவிட்டது.) யசோதா. அம்மாவின் உத்திரவு இது. இல்லையா? ஏன் என்றால் நான் உங்களைவிட நிறத்தில் மட்டமானவள் என்பதால் ஜாதியிலும் மட்டமானவள் என்று நினைப்பாலா...?'' பேச முடியாது விக்கி விக்கி அழுதபடி பின் பக்கம் இருந்த தன் விடுதிக்குப் போய்விட்டாள்.

அன்றிலிருந்து அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு மௌனமாகவே தனக்கு இட்ட கட்டளைகளை மட்டும் நிறைவேற்றத் துவங்கினாள்.

லீனாவுக்குக் கோபமோ, மனத்தாங்கலோ ஏற்பட்டு விட்டால் 'ஷிமீன்' எனப்படும் கள்ளச் சாராயத்தை ஒரு பெரிய தகர டின் நிறைய வாங்கி வைத்துக்கொண்டு குடிப்பாள்.

குடிவெறியில் யசோதாவை முறைத்துப் பார்த்துவிட்டு, ஸுலுவில் தன் மூதாதையரின் ஆத்மாக்களை அழைத்து அவளைச் சபிக்க செய்தாள்!

முன்போல காவேரி வேலையிலிருந்து வந்ததும் ஓடி வந்து பெட்டியைத் தூக்கி உள்ளே வைக்கும் சிறிய உதவிகளைக் கூட அவள் நிறுத்திக் கொண்டிருந்தாள்.

துணிகளைத் துவைத்து, பெட்டி போட்டு, தூக்கி வந்து படுக்கை மீது வைத்துவிட்டு, சமையலறையின் பின்புறக் கதவின் ஓரம் உள்ள முக்காலி மீது தட்டில் எடுத்து வைத்திருக்கும் ரொட்டி, குழம்பு-பீங்கான் கிண்ணத்தில் இருக்கும் தேநீர் ஆகியவற்றைத் தூக்கிக்கொண்டு போய்விடுவாள்.

''லீனா! கொஞ்சம் இங்கே வாயேன்'' என்று பின்னர் யார் கூப்பிட்டாலும் தனது அறைக் கதவைத் திறக்கமாட்டாள். ஆழ்ந்து உறங்குவதாகப் பாவனை செய்வாள்.

சில நாட்கள் மனதிற்கு அமைதியைத் தேடிக்கொண்டு இரவு ஏழு மணியளவில் நீல அங்கியுடன், வெள்ளைத் துண்டை இறக்கி, முண்டாசும் கையில் ஒரு பெரிய கம்புமாகக் கிளம்புவாள்.

தீவிரமாகக் கடவுளை வழிபடும் ஒரு தொழுகைக் குழுவைச் சேர்ந்தவள் அவள். நடுவில் ஹரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு, சுற்றிலும் பெண்கள் கைதட்டியபடி பாட்டுப் பாட ஒருவர் மெல்ல மேளத்தை ஒலிக்க, இரவு முழுவதும் தொழுகை நடக்கும். மறுநாள் காலை சோர்ந்து களைத்து வேலை செய்ய முடியாத நிலையில் துவண்டு போய்க் காணப்படுவாள்.

வீட்டிலே ஏற்பட்ட மனக்கசப்பில் அவள் இப்பொழுதெல்லாம் அடிக்கடி தொழுகைக்குக் கிளம்பி விட்டிருந்தாள்.

தக்க காரணமின்றி-யார் என்பதை நிரூபிக்க தன் கைவசம் பையில் பாஸ் புத்தகம் இன்றி எந்த ஆப்பிரிக்கத் தொழிலாளியும் இரவு பத்து மணிக்கு மேல் தெருவில் நடமாடக் கூடாது என்பது அந்த நாட்டுச் சட்டம்.

தொழுகைக்குப் போய்விட்டுக் கொஞ்சம் தாமதமாகத் திரும்பும்போது லீனா கடவுளைத் தீவிரமாகக் கும்பிட்டுக் கத்திப் பாடிய ஆவேசத்தில் வயிறு முட்டக் குடித்த சாராயம் கழுத்தைப் பிடித்துத் தள்ள ஆடியபடி வந்து கொண்டிருப்பாள்.

காவேரியின் படுக்கையறை ஜன்னல் பின்பக்கத்துத் தோட்டத்தைப் பார்த்தபடி இருந்ததினால், லீனாவின் நலனை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டு உறங்காது படுக்கையிலே புரண்டு கொண்டிருப்பாள் காவேரி. கேட் சத்தம் கேட்டதும் எழுந்து மெல்லத் திரையை விலக்கிப் பார்ப்பது வழக்கம்.

''பெரிய மிஸஸ் போனதும் இந்த வீடு வீணாவே போயிட்டுது. எல்லாம் நாசமாப் போச்சு'' என்று ஸுலுவில் திட்டிக்கொண்டு, குடிவெறியில் ஆடியபடி, தோட்டத்தினுள்

புகுந்து அறைக்கதவைத் திறந்து, படீரென அறைந்து அவள் மூடிய பிறகுதான் காவேரிக்கு நிம்மதியாக உறக்கம் வரும்.

அந்த வியாழக்கிழமை தொழுகைக்குப் போன லீனா திரும்பவேயில்லை. காற்றில் கேட் அசையும்போதெல்லாம் திடுக்கிட்டு ஜன்னல் ஊடே பார்த்து ஏமாந்து போனாள் காவேரி.

மறுநாள் காலை-எழுந்து அவசரமாக வேலைகளைக் கவனித்தாள். அமைதியின்றி பின்புறத் தோட்டத்திற்குச் சென்று லீனாவின் விடுதிக் கதவைத் திறந்து விளக்கைப் போட்டாள்.

பழைய மரக்கட்டிலின் மீது பிரித்துக் கிடந்த படுக்கை சிறிதும் கலையாமல் இருந்தது. தலையணைமீது கனமான டைரி போன்ற சிறு புத்தகம். பளிச்சென்று காவேரிக்குப் புரிந்து போனது.

லீனா தொழுகைக்குப் போனவள் தன் பாஸ் புத்தகத்தைக் கையோடு எடுத்துப் போக மறந்து விட்டிருக்கிறாள்.

நடுஇரவிற்குப் பின்னர் தொழுகையை முடித்துவிட்டு, பின்னர் தோழிகளுடன் அமர்ந்து சாராயத்தைப் பருகி, அதன் போதையில் உளறியபடி தனியே தள்ளாடி வருவதை டியூட்டி போலீஸ் கவனித்திருக்கும். அவர்களது வேனில் கடத்திக் கொண்டு போய் காவல்துறை அலுவலகச் சிறையில் தள்ளிப் பூட்டியிருக்கும். இனி, அன்று காலை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு, மற்றக் கைதிகளுடன் அவளும் அழைத்து வரப்படுவாள். சிறு குற்றங்கள் புரிந்த மற்ற குற்றவாளி களுடன், பாஸ் இல்லாது தெருவைச் சுற்றிய குற்றத்திற்காக அவளும் விசாரிக்கப்படுவாள்.

மாஜிஸ்ட்ரேட், விதிக்கும் அபராதத் தொகை- ஐந்து ராண்டோ, பத்து ராண்டோ-உடனடியாகக் கட்டிவிட்டால் அவளை விடுதலை செய்து எச்சரித்து அனுப்பி விடுவார்கள்.

கையில் இந்தத் தொகை இல்லாவிடில்-அப்படி விடுதலை செய்ய வீட்டு எஜமானனோ அல்லது எஜமானியோ சிரமத்தை எடுத்துக்கொள்ளாவிடில்-அபராதத்திற்குப் பதிலாக பதினைந்து நாளோ அல்லது ஒரு மாதமோ சிறைவாசம் இட்டும். அவர்கள் வீட்டு அன்பான வேலைக்காரியைச் சிறையில் தள்ளிவிட்டு நிம்மதியாக இருக்க இயலுமா?

இமைகளைக் கண்ணீர் சுட்டது. காவேரி சட்டென அந்தப் பாஸ் புத்தகத்தை எடுத்துத் தன் சீருடைக்குள் போட்டுக் கொண்டாள். கதவை மூடியபடி வெளியே வந்தாள்.

அண்ணன் லோகேந்திரன் அவசரமாகக் கடைக்குப் புறப்பட்டதில் லீனாவைப் பற்றிய தகவலைத் தெரிந்து கொள்ளவேயில்லை. யசோதா நன்றாக நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். ஒரு கோப்பைத் தேநீரைக் குடித்துவிட்டு வேகமாகக் கிளம்பிவிட்டாள் காவேரி.

நேராக அவர்கள் தலைமைக் காரியாலயத்தை அடைந்தவள் லீவுக் கடிதம் ஒன்றை எழுதி அவர்கள் தலைவியின் பார்வைக்காக மேஜைமீது வைத்துவிட்டு, தொலைபேசியில் தாமோதரனை அழைத்தாள்.

''ஹலோ! இத்தனை காலையில் என்னைக் கூப்பிடும் படி என்ன கலாட்டா நடந்திட்டது?'' மறுபக்கம் வழக்கம் போன்ற கேலியுடன் சிரித்தான்.

''உங்ககிட்ட முக்கியமான உதவி தேவை. எங்கள் லீனா பாஸ்புக் இல்லாம வெளியே போயிருக்கிறாள்...'' துயரம் அவளைத் 'தடுத்தது.

''சரி அங்கேயே 'ஹெட் குவார்ட்டர்ஸ்'ஸில் இரு. நான் கிளம்பிக் காரில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு போனை வைத்தான் அவன்.

சிறிது பொழுதில் மாடியிலிருந்து இறங்கி அவனுக்காகத் தெருவோரத்தில் காத்திருந்தவளுக்கு ஒரு பெருத்த திகைப்பு.

முத்துப் பல்லழகியான அந்த ரிஸப்ஷனிஸ்ட் அருகே அமர்ந்திருக்க, காரை நிறுத்தினான் அவன்.

நெஞ்சு படபடத்தது. இனம் விளங்காத ஆத்திரமும் ஆவேசமும் அவளை உலுக்கின. தன் பையிலிருந்த பாஸ் புஸ்தகத்தை அவனிடம் நீட்டினாள்.

''காரின் பின்பக்கம் ஏறிக்கோ. பாஸ் புத்தகத்துக்கு அவசரம் இல்லே. முதலில் என் ஆபீசைத் திறக்க என் ரிஸப்ஷனிஸ்டைப் போற வழியில் இறக்கிவிட்டுப் பிறகு போனால் போதும்'' என்றான்.

விக்டோரியா தெருவில் அலுவலகத்தின் முன் காரை நிறுத்தினான். ''தாங்க்யூ ஸார்! நான் கதவைத் திறந்து எல்லா வற்றையும் கவனிக்கிறேன்- நீங்க 'பிரேக்பாஸ்ட்' சாப்பிட்டு விட்டு வரலாம்'' என்றபடி மோகனப் புன்னகையை வீசிவிட்டு, அவள் இறங்கிச் சென்றாள்.

''இப்படி முன்னால் வரலாம்.'' அவன் கூறியபோது அவளுள் சினம் பொங்கியது.

'அந்த இடம் உங்க சிநேகிதி, அந்த ரிஸப்ஷனிஸ்டுக்குச் சொந்தம். நான் பின்னாலேயே இருக்கேன்.' சொல்ல வேண்டும் போல ஆவேசம் குமுறியது.

''நான் உன் டிரைவர் இல்லே. அதனாலே முன்னால் வந்து என் பக்கத்தில் உட்காரணும் புரியுதா?'' தாமோதரன் சீண்டினான் விளையாட்டாக. பதில் கூறாமல் அவள் அவ்வாறே செய்தாள்.

''நான் இன்னமும் காலைப் பலகாரம் சாப்பிடவில்லை. அவசரமாக நீ கூப்பிட்டாய் என்று ஓடிவந்தேன். தினமும் வழியில் பஸ் நிலையத்தில் என் ரிஸப்ஷனிஸ்ட் நிற்பாள்- பாவம் என்று அவளுக்கு லிஃப்ட் கொடுப்பது வழக்கம். இன்று அவளை வீட்டிலிருந்தே அழைத்து வந்தேன். நான்

ஆபீஸ் போகுமுன், அதைச் சுத்தப்படுத்தி ஃபைலை ஒழுங்குபடுத்த ஆட்கள் வந்து விடுவார்கள். அவர்களை வாசலிலே நிற்க வைக்க முடியாதே! இப்ப ரிசப்ஷனிஸ்ட்டை முன்னேற்பாடா சாவியுடன் அனுப்பிவிட்டதில் எனக்கு நிம்மதி. அது போகட்டும். காலை வேளையில் நீ என்ன சாப்பிடுவாய்? பாரிட்ஜ்ஜா? போஸ்ட்டோஸ்டியா? இல்லை... வீட் பீட்ஸா? எது வேணும்? எங்கள் வீட்டு எலியாட் ஒரே நிமிஷத்தில் பிரேக் பாஸ்ட் ஏற்பாடு செய்து விடுவான்...'' காரை வீட்டு வாயிலில் நிறுத்தினான்.

காக்கிச் சீருடையில் ஓடிவந்த ஆப்பிரிக்க இளைஞன் கேட்டை அகலத் திறந்து வைத்துவிட்டு ''பாஸ்! ஐ ஈட்லஸ்காப்'' (நீங்க சாப்பிடலையே) என்றான் கவலையுடன்.

''இரண்டு பேருக்கு பிரேக்பாஸ்ட் தயார் செய்'' என்று உத்தரவிட்டபடி தோட்டத்து முன்புறத்திலே வளர்ந்து காற்றுக்குத் தலையசைத்தபடி நின்றதொரு ரோஜாச் செடியி லிருந்த மலர் ஒன்றைப் பறித்து அவளிடம் கொடுத்தான்.

''இந்த ரோஜாவின் பெயர் என்ன தெரியுமோ? ஹாப்பினஸ். நீ எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கணும்னு வாழ்த்திட்டுக் கொடுக்கிறேன். தலையில் வச்சுக்கோ'' என்றான்.

மகிழ்ச்சி, கோபம் என்ற கலவை உணர்வில் நெஞ்சு துடிக்க அதை வாங்கித் தன் தலையில் சொருகிக் கொண்டாள்.

சிறிது பொழுதில் காலைப் பலகாரத்திற்குப் பின்னர் அவளைக் காரில் ஏற்றிச் சென்று அவர்கள் வீட்டில் விட்ட பிறகு, பாஸ் புத்தகத்தை வாங்கிக் கொண்டான்.

''கவலைப்படாதே, உன் லீனா வந்துவிடுவாள்.''

அவன் போனதும் அவள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள். நல்ல வேளை! யசோதா வீட்டில் இல்லை. கடைத்தெருவுக்கோ,

சிநேகிதி வீட்டுக்கோ காலையிலேயே வீட்டைப் பூட்டி விட்டுப் போயிருந்தாள். தோட்டத்து அறையில் லீனா இல்லை என்பதைக்கூட அவள் கவனிக்கவில்லை.

என்னென்னவோ எண்ணியபடி வீட்டு வேலைகளை முடித்தாள் காவேரி-பின்னர் சமையலையும் முடித்தவளுக்கு, நேரம் நீண்டு கொண்டிருந்தது. தனிமையிலேயே வீட்டுக்குள் வளைய வந்தபடி மனதினுள் அந்த ரிஷப்ஷனிஸ்டின் முல்லைப் சிரிப்பில் அடிக்கடி மனம் குமுறிக் கொண்டிருந்தாள்.

வாயில் அழைப்புமணி ஒலித்தது. ஓடிச்சென்று கண்ணாடி வழியே பார்த்தாள்.

வெளியே லீனா, இரவெல்லாம் தரையில் உருண்டு விட்டு முகம் ஊதி, ஆடை அழுக்கேறிய நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

கதவைத் திறந்தவுடன் உள்ளே வந்தவள் உணர்ச்சிகளை அடக்க மாட்டாது ''மீனா பேபி-மூவ்ல பேபி?'' (என் குழந்தே! ரெம்ப நல்லவள்) என்று தழுதழுத்தபடி அவளை அப்படியே இறுக அணைத்துக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டு குமுறி அழுதாள்.

''ஸ்? லீனா...இப்போ எதுக்கு அழறே, எல்லாம் சரியாய்ப் போய்விட்டது.''

''கோச்சான்! என் வாழ்க்கையிலே நான் முதல் முதலா போலீஸ் லாக்கப்பிலே கிடந்தேன். ரொம்ப அவமானமாப் போச்சு. செத்துடலாமானு இருந்தது. லாயர் பாஸ் வந்து என்னை உடனே விடுதலை செய்தார். பத்து ராண்ட் அபராதம் போட்டுட்டாங்க. நான் என்ன தப்பு செய்தேன்?'' பெரியதாக அழ ஆரம்பித்தாள்.

காவேரி அவள் தோள்களை ஆதரவுடன் தட்டினாள். ''ஸ்! லீனா! அழாதே.''

''பதியோட இருப்பே, முதல்ல சாப்பிடு'' கூறியபடி சூடான சோற்றையும் குழம்பையும் தட்டில் போட்டு அவளிடம் நீட்டினாள்.

வீட்டில் யசோதா இல்லை என்பதைக் கண்களால் துழாவியபடி புரிந்து கொண்டாள் லீனா. பிறகு நிம்மதியாகத் தரையில் அமர்ந்து காலைநீட்டி உட்கார்ந்து கொண்டபடி, சோற்றைக் குழம்புடன் குழைத்துக் கொண்டு வாயில் அள்ளிப் போட்டாள்.

''கோச்சான்! நான் ஒண்ணு சொல்வேன் கேப்பியா?''

அடுப்பில் கவனமாக இருந்த காவேரி திரும்பினாள் வியப்போடு.

''நீ அந்த லாயர் பாஸைக் கல்யாணம் பண்ணிக் கோயேன். உன் வீட்டுக்கு வேலை செய்ய நான் வந்துடறேன்.''

குப்பென்று முகம் சிவக்க உதட்டைக் கடித்தபடி அவளை உறுத்துப் பார்த்தாள்.

''இது உன் யோசனையோ?'' போலிக் கோபம் பொங்கியது.

'' அந்த லாயர் பாஸ் உன்னைக் காதலிக்கிறார்னு நான் நம்பறேன்.''

''வழியில் யாராவது செங்கோமா (ஜோசியக்காரி) விடம் கேட்டியா?''

''செங்கோமாகிட்ட கேட்க வேணாம். வெளியே வந்ததும் என்கிட்ட அவர் என்ன சொன்னார் தெரியுமா!''

''என்ன சொன்னார்!''

''உன் சின்ன எஜமானியை நீ நல்லாக் கவனிச்சுக் கொள்ளுன்னார். அப்படிப் பேசறப்போ, அவர் முகத்திலே

தான் எத்தனை சிரிப்பு? கோச்சான்! அவர் நிச்சயமா உன்னைக் காதலிக்கிறார்!''

''ஷட்அப் லீனா! இந்தப் பேச்சு அண்ணன் காதில் பட்டா உன்னைக் கொன்று போடுவார். பேசாம சாப்பிட்டு விட்டு வேலையைக் கவனி!'' பொய்க் கோபத்துடன் லீனாவை மிரட்டினாள். ஆனால் அவள் மனம் ஏன் இப்படி அடக்கமாட்டா மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கிறது?

13

வீட்டு யஜமானனும் -யஜமானியும் தன்னைப் பற்றி துளியளவும் கலவைப்படவில்லை. காவேரியின் உதவி இல்லாதிருந்தால் கம்பி எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமே... எண்ணியபோதெல்லாம் லீனாவுக்கு எரிச்சலும் கோபமும் மண்டிக்கொண்டு வந்தன.

இந்த நன்றியற்றவர்களுக்கு உடம்பைச் செருப்பாகத் தைத்துப் போட்டுக்கொண்டு வாழ்ந்தேனே?..தன்னையே கடிந்தபடி அவள் முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு பேசாமடந்தையாகச் சில நாட்கள் வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைக்காரர்களுக்கு அரை நாளாவது ஓய்வு தர வேண்டும் என்று சட்டம். காலை பத்து மணிக்கே தன் வேலைகளை முடித்துவிட்டு நன்றாக உடுத்திக் கொண்டு தோள்பையை மாட்டிக்கொண்டு குதிகால் பாதணி சப்திக்க அவள் கிளம்பி விடுவாள். அப்போது அவளைப் பார்த்தால் ஒரு வேலைக்காரி என்றே சொல்ல முடியாது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கை கொண்ட லீனா தான் வாங்கும் சம்பளத்தை அழகான துணிமணிகளுக்கும்- பவுடர்-செண்ட்-உதட்டுச் சாயம் முதலியவற்றிற்கும் மீதியைச்

சாராயத்திற்கும் செலவழித்துக் கொண்டிருந்தாள். 'வருங் காலம்?' அது தானே தன்னைக் கவனித்துக் கொள்ளும் என்ற அசட்டையான மனப்பான்மை.

சனிக்கிழமை இரவு அவர்கள் வீட்டில் தங்கி ஞாயிறு இரவு புறப்பட யசோதாவின் தூர உறவினர்-கணவன் மனைவி-குழந்தைகள் இரண்டு என்ற ஒரு படையுடன் வந்து இறங்கியிருந்தனர். வந்தவர்களுக்கு இரவு சமைத்துப் போட்டு-காலை காப்பி பலகாரம் கொடுத்து உபசரித்து-பகல் விருந்து சமைத்து- மாலை தேநீரும் கேக்கும் தந்து- மறுபடி இரவுச் சாப்பாட்டைக் கவனித்து அவர்களை வழி அனுப்புவதற்குள் காவேரி அதிகப்படி வேலையில் திணறிப் போய்விட்டிருந்தாள். தானே கழுவி மேடை மீது கவிழ்த்து வைத்திருந்த பாத்திரங்களைத் துடைத்து அடுக்கி வைப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவள் கவனிக்கவில்லை.

யசோதா பண விஷயத்தில் மிகவும் கணக்குப் பார்க்கிறவள்- பண்டம் பாழாகிப் போகிறதே என்ற ஆதங்கத்தில் விருந்தாளிகள் எச்சில் தட்டில் மீதமாக விட்டுப் போயிருந்த மாமிசத் துண்டங்களையும் கோழி வறுவல் களையும் பொறுக்கி எடுத்து லீனாவின் தட்டில் போட்டு அத்துடன் கொஞ்சம் சாதத்தையும எடுத்துப் போட்டு மீதத்தை ஃபிரிட்ஜில் பத்திரமாக வைத்துவிட்டிருந்தாள்.

எட்டு மணியளவில் ஊரைச் சுற்றி விட்டு வீட்டுக்குத் திரும்பிய லீனா தன் அலங்கார உடைகளைக் களைந்துவிட்டுச் சீருடையில் தோட்டத்துப் பக்கமாக உள்ள கதவைத் திறந்துகொண்டு கமையலறைக்குள் புகுந்தாள்.

வீட்டு வாயில் வழியே வேலைக்காரர்களை யாரும் அந்நாட்டில் அனுமதிப்பதில்லை. சமையலறையின் பின் பக்கத்துக் கதவு வழியாக பின்புறமாகத்தான் வேலையாட்கள் உள்ளே வரவேண்டும் என்ற வழக்கத்தை எல்லோரும் தீவிரமாக அனுசரித்தனர். சில வேலையாட்களுக்கு இது

தங்களை அவமதிப்பது போன்ற எண்ணத்தைக் கொடுத்து எரிச்சலை மூட்டியது. சவுந்தரி உயிருடன் இருந்தவரை லீனா வீட்டின் முன்பக்கமும் பின் பக்கமுமாகத் தாராளமாகப் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந்தாள். இப்பொழுது யசோதாவின் ஆட்சியிலிருந்த வீட்டில் அவள் தீண்டப் படாதவள் போல் பின் கதவு வழியே வந்து நிற்க வேண்டிய நிலை. அந்த எரிச்சலில் உள்ளே வந்தவள் முகம் கடுமையாகிப் போனது.

''கோச்சான்! சாப்பாடு யார் எடுத்துவச்சது எனக்கு?'' அடிக்குரலில் காவேரியைப் பார்த்து அதட்டினாள்.

குக்கிங் ரேன்ஜை சுத்தம் செய்து துடைத்துக் கொண்டிருந்த காவேரி திரும்பிப் பார்க்கவில்லை.

''ஏன் கேட்கிறே- யஜமானியம்மாள் எடுத்து வச்சாங்க'' என்றாள்.

''எத்தனை நாளாக இந்தப் பழக்கம்? நீங்க கடிச்சுத் துப்பின எச்சிலைச் சாப்பிட நான் என்ன நாயா?'' ஓங்கிய குரலில் கத்திவிட்டு அந்தத் தட்டை எடுத்துக் கொண்டு தோட்டத்து மூலையிலிருந்த குப்பைத் தொட்டியில் கவிழ்த்தாள்.

ஜன்னல் வழியே யசோதா பார்த்துவிட்டாள். வேகமாகச் சமையலறைக்குள் ஓடி வந்தாள்.

''அத்தனை சாப்பாட்டையும் குப்பைத் தொட்டியில் கொட்ட உனக்கென்ன தைரியம்! திமிர் பிடிச்ச காப்பிரிக் கழுதை'' என்று கோபத்துடன் சீறினாள்.

காப்பிரி என்றால் கடவுள் நம்பிக்கையில்லாத காட்டு மனிதர் என்று பொருள். தன்மானத்தைப் பெரிதாகக் கருதும் ஆப்பிரிக்கர்கள் தங்களை மற்றவர்கள் அந்தப் பெயரால் அழைப்பதைக் கட்டோடு வெறுத்தனர். இடுப்பில் ...

ஆன்றியபடி தலையை நிமிர்த்திக்கொண்டு யஜமானியைக் கோபத்துடன் வெறித்தாள் லீனா.

''டூலோ லோ மக்கூலா'' (வாயை மூடு கூலி!) என்றாள், பதிலுக்கு.

''என்ன சொன்னே?'' சீறிக்கொண்டு அருகில் நெருங்கிய யசோதா உரத்த குரலில் கத்தினாள்.

''உண்மையைச் சொன்னேன். உங்க நாட்டிலே பிழைக்கத் தெரியாம எங்க நாட்டுக்குக் கூலி வேலை செய்ய வந்தவர்களின் பரம்பரைதானே நீ! இல்லாட்டி விக்டோரியா ராணியின் வாரிசோ?'' ஏளனமாக லீனா கேட்டாள்.

''லோகன்! இங்கே வாங்கோ'' என்று வீரிட்டு அலறினாள் யசோதா.

கை வேலையைப் போட்டுவிட்டுக் கலவரத்துடன் காவேரி நின்று கொண்டிருந்தாள்.

அரைத் தூக்கமாகப் பத்திரிகையொன்றைப் புரட்டிக் கொண்டு முன்னறையில் சோபாவில் சாய்ந்து கிடந்த லோகேந்திரன் திடுக்கிட்டுப் போய் எழுந்து விரைந்தோடி வந்தான்.

''இந்த லீனா என்ன பேசறா தெரியுமா, நம்மையெல்லாம் கூலி என்று திட்டறா. (இந்தியர்களுக்கு அது கேட்கப் பொறுக்காத ஒரு அவமானமான சொல்) எத்தனை திமிர்-நம் வீட்டுச் சோற்றை தின்று வளர்ந்த கழுதைக்கு..'' ஆங்கிலத்தில் கத்தினாள்.

''லீனா என்ன சொன்னே?'' என்று கையை ஓங்கியபடி அவளை லோகேந்திரன் கோபத்துடன் நெருங்குவதைக் கண்ட காவேரி ஓடிச்சென்று இடைமறித்தாள்.

''அண்ணா! லீனா குடிச்சிருக்கா. இப்போ அவளோட

வம்பு வழக்கு வேண்டாம்'' என்று தமிழில் கெஞ்சினாள்.

அழுகையும் துயரமும் தொண்டையை அடைக்க கண் கலங்கிப் போய் அவள் லீனாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

தாராளமாகச் சாராயத்தைக் கொஞ்சம் சாப்பிட்டதுமே லீனாவுக்கு அசுர பலம் வந்துவிடும். துணிச்சலும் அதிகமாகி விடும். அந்தச் சமயம் அதிகமாக அரசியல் பேசுவாள்!

''என்மேல் கைவச்சினா பாஸ், என்ன நடக்கும் தெரியுமா? ஆயிரத்துக் தொளாயிரத்து நாற்பத்தெட்டில் நடந்த கதை மறுபடி ஆரம்பிச்சிடும்! ஜாக்கிரதை''-கண்ணில் நெருப்புப் பறக்க உறுமினாள்.

மதுவின் போதையில் நீர்வீழ்ச்சியாக வார்த்தைகளை ஸுலுவில் உரத்த குரலில் கண்டபடி கொட்ட, அக்கம் பக்கத்து வீட்டு ஜன்னல் திரைகள் விலகிப் பல தலைகள் எட்டிப் பார்க்க, லோகேந்திரனுக்கு ஆத்திரமும் வெட்கமும் தாங்க முடியவில்லை. பற்களை நறநறவென்று கடித்தான்.

''இவ்வளவு பேச ஆரம்பிச்ச பிறகு உன்னை எங்கள் வீட்டுக்கு வேலைக்கு வச்சிருப்பது ஆபத்து. நீ உடனடியா மூட்டையைக் கட்டிக்கொண்டு புறப்படு. இல்லாட்டா போலீசைக் கூப்பிடுவேன்!'' மிரட்டினான்.

''போலீசைக் கூப்பிடு. உன் பெண்சாதி எச்சில் சோற்றைச் சாப்பிட எனக்கு எடுத்து வச்சா நான் கோவிச்சுக் கொண்டு அதைக் குப்பைத் தொட்டியில் கொட்டினேன். நீ அதுக்காக என்னை அடிக்க வந்தேன்னு நானும் அவர்களிடம் புகார் செய்து கொள்ள முடியும். ஒண்ணை மறக்காதே பாஸ்! எங்கள் மனிதர்கள் முன் போல மூடர்களாக மயங்கிக் கிடக்கலை. நன்றாக விழித்துக்கொண்டு இருக்காங்க. நான் இனியும் வெட்கம் கெட்டு இந்த வீட்டில் வேலை செய்வேனா? ஊகும். முதலில் எனக்குச் சேர வேண்டிய சம்பளத்தையும் - ஒரு மாசம்

நோட்டீஸ் கொடுக்க வேண்டியதின் பணத்தையும் முதலில் எண்ணிக் கீழே வை. நான் என் துணிமணிகளை மூட்டை கட்டிக்கிட்டுக் கிளம்பிடறேன்'' என்று பதிலுக்குக் கத்தினாள். வேகமாகப் படிகளில் இறங்கிப் பின்பக்கம் மறைந்து போனாள்.

ஒரு சில நிமிஷங்களில் ஒரு மூட்டையுடன் மூச்சிறைக்க வந்தாள்.

''நல்லா பார்த்துக்கோ. இந்த வீட்டில் பல வருஷங்களா நான் வேலை செய்திருக்கேன். இதுவரை ஒரு தூசி கூட இங்கே காணாமல் போனதில்லை. நான் போன பிறகு இதைக் காணலை-அதைக் காணலைன்னு எனக்குத் திருட்டுப் பட்டம் வேண்டாம்'' என்று கூறியபடி தன் துணிகளை உதறிக்காட்டி விட்டு ஒரு மூட்டையாகக் கட்டித் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டாள்.

லோகேந்திரன் கோபத்துடன் தன் சட்டைப் பையி லிருந்து எடுத்து வைத்த பணத்தை எண்ணிப் பார்க்காது அசட்டையாகத் தன் மணிபர்சில் திணித்துக் தன் தோள் பையில் போட்டுக் கொண்டு அவள் கிளம்பினாள்.

திடீரென்று திரும்பி காவேரியைப் பார்த்தாள். ''கோச்சான்! மூனா ஆம்பா... (சின்ன யஜமானியே, நான் போகிறேன்) நீ வருத்தப்படாதே. உன்னை நான் மறக்கவே மாட்டேன்'' என்று படபடவென்று ஸுலுவில் பேசிவிட்டு தோட்டத்து இருளில் கலந்து வெளியேறி விட்டாள்.

''பாவம் லீனா! இந்த ராத்திரி வேளையில் அவள் எங்கே போவாள்! பட்டினியாகப் போகிறாளே அண்ணா'' காவேரியின் குரல் தழதழத்தது. கண்களில் நீர் புரண்டது.

''ஷட் அப் காவேரி. நீ என்ன அவளுக்காக வக்காலத்து வாங்கறே?'' அண்ணன் சீறினார்.

''இது அவ பேசலை. அந்த லாயர் ஃபெல்லோவோட

போதனை. அவன்தானே இந்த ஜாதி ஜனங்களைத் தன் உறவு போலக் கட்டிக் கொண்டு மாரடிக்கிறான்...'' யசோதா வார்த்தைகளை வெடித்தாள்.

''யாரும் எனக்குப் போதிக்க அவசியமில்லே அண்ணி. கொஞ்சம் படிக்கத் தெரிஞ்ச ஒவ்வொரு இந்தியர்க்கும் தெரிஞ்சிருக்க வேண்டிய அடிமட்டத்து அரசியல் இது. இந்த நாட்டில் நாம் நால்வகை மக்கள் வசிக்கிறோம். ஆனால் எல்லோரும் ஒரே மனித குலத்தைச் சேர்ந்தவங்க. அதனால்...''

''போதும் உன் பிரசங்கம். இன்னொரு தடவை உன்னை அந்த லாயர் பயலோட வெளியே எங்காவது பார்த்தேன்னா- ரெண்டு பேரையும் வெட்டிப் போட்டுடுவேன். அதனால் தூக்கில் தொங்க நேர்ந்தாக் கூடப் பரவாயில்லை'' என்று உறுமிய லோகேந்திரன் தங்கையை உறுத்துப் பார்த்துவிட்டு உள்ளே போய்விட்டான்.

''அவன் ஒரு வெட்கம் கெட்டவன். உனக்குப் பெண் தர முடியாதுன்னு பெரிய அண்ணன் கண்டிப்பா சொல்லி ஒதுக்கிட்ட பிறகுகூட மானம் ரோஷமில்லாம அன்னிக்கு அண்ணி சாவுக்கு வந்து நம்ம வீட்லே நிக்கிறானே.. சே! அவன் ஒரு மனிதனா...'' யசோதா தோள்களை அசட்டை யாகக் குலுக்கி விட்டு உள்ளே போய்விட்டாள்.

தொண்டையை அடைத்த துயரத்தை விழுங்கிக் கொண்ட காவேரி கதவுகளை அடைத்துவிட்டுத் தன் அறைக்குள் சென்று படுக்கைமீது உடகார்ந்தாள். கண்ணில் பொங்கிய கண்ணீரை அவளால் அடக்கவே முடியவில்லை. லீனா போன பின்னர் அவளது தனிமை இன்னும் அதிக பயங்கரமாகிவிட்டதே.

''விரோதியாக அவளைப் பாவிக்கும் அண்ணன்... அண்ணி இருவருடன் வீட்டு வேலைகள் செய்து கொண்டு தன் வேலைகளையும் ஒழுங்கா[illegible]ளித்துக்

கொண்டு அவள் எத்தனை காலம் சமாளிக்க இயலும்? மின்விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கை மீது சாய்ந்தபடி மௌனமாக அவள் கண்ணீர் உகுத்தாள். அவளையும் மீறி எழுந்த விம்மல்களை அடக்க அடிக்கடி முகத்தைத் தலையணைக்குள் பதித்துக் கொண்டாள்.

★ ★ ★

அந்த வெள்ளிக்கிழமை மாலை-வேலை முடிந்ததும் வழக்கம்போல் காரை கவர்மெண்ட் கராஜில் நிறுத்திவிட்டு வெளியே வந்தாள். தோழி நளினி அன்று லீவு எடுத்துக் கொண்டுவிட்டிருந்தாள். அவள் காரில் பயணப்பட்டு வீடு போய்ச் சேரும் வாய்ப்பு இருக்கவில்லை. அவளுக்காக வீட்டில் வேலை காத்திருக்கும் என்ற பரபரப்பில் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள்.

குளிர் குறைந்து போகத் தொடங்கியதால் பருவம் மழைக்காலத்தை வரவேற்றுக் கொண்டிருந்தது. வானம் கருத்துக்கொண்டு இடியுடன் உறுமுவதைக் கண்டு கலவரத்துடன் வேகமாக நடந்த அவள் தோளை யாரோ தொட்டதும் நடுங்கிப் போய்விட்டாள். நடைபாதையை நிறைத்த மக்கள் கூட்டத்தில் திணறியபடி அவள் திரும்பிப் பார்த்தாள். அழுகையும் ஆனந்தமும் நெஞ்சை அடைத்தன.

''மழை கொட்டப் போகுது. இந்த வெள்ளிக்கிழமைக் கூட்டத்தில் பஸ்ஸில் எப்போது போய்ச் சேரப்போறே? இங்கேயே நில். நான் என் பார்க்கிங் ஸ்கொயருக்குப் போய் என் காரை எடுத்துவரேன்.'' தாமோதரன் உத்தரவிட்டபோது அவளால் மறுக்க முடியவில்லை.

சில நாட்களாக அவனை அடிக்கடி பார்த்துப் பேச மாட்டோமா என்றதொரு ஏக்கம் தன்னுள் உருவாகிக் கொண்டு வருவதை அவள் உணராமலில்லை.

காரை அவன் ஓட்டிக்கொண்டு வருவதற்குள் மழை சோவென்ற கோஷத்துடன் கொட்டத் தொடங்கிவிட்டது.

பாதை ஓரமாகக் காரை நிறுத்திக் கதவைத் திறந்துவிட்டு "ஏறிக்கோ. மழைக்கோட்டை எடுத்து வரலையா? நான் சீக்கிரமா ஆபீசை மூடிவிட்டு இந்தப் பக்கம் வந்தது நல்லதாப் போச்சு" என்றபடி உபசரித்தான்.

காரில் அவனது அருகே அமர்ந்து கொண்டு ஓரக் கண்ணால் அவனை உற்றுப் பார்த்தாள்.

அண்ணி சவுந்தரி அடிக்கடி சொல்லுவது வழக்கம். கருப்பு என்கிற நிறம் கூட அழகில் ஒருவகைதான். புராணத்துக் கண்ணன் கருமை படிந்த நீலவண்ணன். பார்வதி தேவி-உலகத்துக்கே தாய்- கருமை நிறம் கொண்டவள். கருப்பு என்று உதாசீனப்படுத்தக்கூடாதுன்னு பெரியவங்க கடவுள்களையே கருத்த நிறத்திலே உருவகப்படுத்தினாங்க.

கூர்மையான மூக்கும், பிடிவாதத்தை உணர்த்தும் முகவாயும், கோபத்தில் குவியும் உதடுகளும், சுருண்ட முடியும், கச்சிதமான தோற்றமும் கொண்ட தாமோதரன் உண்மையில் அழகான ஆண்பிள்ளைதான். தோற்றத்தை விட அவரது குணம்...எத்தனை அழகு...?

"என்ன பேசமாட்டேங்கிறியே? என்ன சங்கதி?" வேடிக்கையாகக் கேட்டபடி காரை செலுத்திக்கொண்டு போனான் தாமோதரன்.

"எங்கள் வீட்டு லீனா வேலையைவிட்டுப் போய்விட்டாள்.

"அட பாவமே! வீட்டு வேலையும் உன் தலையில் விழுந்து விட்டதா?"

"அதைப் பத்தி நான் கவலைப்படவில்லை. அவளை மிகவும் கடினமாகப் பேசி அண்ணா குளிர் வீசிய இரவில் பட்டினியோடு அனுப்பி வைத்ததை எண்ணி வருத்தப்

படறேன்" என்றவள் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னாள்.

காரைத் திடீரென்று வழியில் ஒரு ஓரத்தில் நிறுத்தினான் தாமோதரன். அவன் மிக்க கோபத்துடன் அவள் பக்கம் திரும்பிப் பேசினான்.

"உங்க அண்ணன் ஒரு பெரிய தவற்றைச் செய்திருக்கிறார். அவரும் ஏறக்குறைய என் வயசுக்காரர்தான். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழர்கள் பொங்கல் திருநாளை வைத்திய நாத ஈஸ்வரர் ஆலயத்தில் அமோகமாகக் கொண்டாடிக் கொண்டிருந்த மாலைப்பொழுதில் என்ன நடந்தது என்பது அவருக்கும் லேசாக ஞாபகம் இருக்கும் என நினைக்கிறேன். நீ அப்போது பிறந்திருக்கமாட்டாய்.

"பசி தாங்க முடியாது ஒரு ஏழை ஆப்பிரிக்கச் சிறுவன் மேல் மார்க்கெட்டில் ஒரு இந்தியர் கடையில் ஒரு ரொட்டியைத் திருடிவிட்டான். கடைக்காரர் கோபம் தாளாது அவன் கன்னத்தில் அறைய, அதைப் பார்த்த மற்ற ஆப்பிரிக்கர்கள் அருகிலிருந்த பியர் ஹாலில் பியர் அருந்தி கொம்மாளமடித்துக் கொண்டிருந்த ஆப்பிரிக்கர்களிடம் சொல்ல, அத்தனை பேரும் கோபத்துடன் எழுந்து இந்தியர் களின் கடைகளைச் சூறையிட்டுப் பொருள்களை உடைத்துப் பலரைக் காயப்படுத்தி அமர்க்களம் செய்தார்கள். செய்தியை வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயத்திற்கு யாரோ போனில் சொல்ல, பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த கூட்டம் நாலா பக்கமும் சிதறி ஓட ஒரே அமர்க்களம்.

"அத்தோடு நின்றதா? தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் ஆப்பிரிக்கர்கள் கூட்டம் கூட்டமாகக் கையில் கத்தி-ஈட்டியுடன் இந்தியர்கள் வசித்த பகுதியைத் தாக்கி-பெண்களைக் கற்பழித்து -வீடுகளைக் கொளுத்தி-பஸ்களுக்கு நெருப்பு வைத்து-ஒரு பெரிய புரட்சியை நடத்தினர்.

காரை அவன் ஓட்டிக்கொண்டு வருவதற்குள் மழை சோவென்ற கோஷத்துடன் கொட்டத் தொடங்கிவிட்டது.

பாதை ஓரமாகக் காரை நிறுத்திக் கதவைத் திறந்துவிட்டு "ஏறிக்கோ. மழைக்கோட்டை எடுத்து வரலையா? நான் சீக்கிரமா ஆபீசை மூடிவிட்டு இந்தப் பக்கம் வந்தது நல்லதாப் போச்சு" என்றபடி உபசரித்தான்.

காரில் அவனது அருகே அமர்ந்து கொண்டு ஓரக் கண்ணால் அவனை உற்றுப் பார்த்தாள்.

அண்ணி சவுந்தரி அடிக்கடி சொல்லுவது வழக்கம். கருப்பு என்கிற நிறம் கூட அழகில் ஒருவகைதான். புராணத்துக் கண்ணன் கருமை படிந்த நீலவண்ணன். பார்வதி தேவி-உலகத்துக்கே தாய்- கருமை நிறம் கொண்டவள். கருப்பு என்று உதாசீனப்படுத்தக்கூடாதுன்னு பெரியவங்க கடவுள்களையே கருத்த நிறத்திலே உருவகப்படுத்தினாங்க.

கூர்மையான மூக்கும், பிடிவாதத்தை உணர்த்தும் முகவாயும், கோபத்தில் குவியும் உதடுகளும், சுருண்ட முடியும், கச்சிதமான தோற்றமும் கொண்ட தாமோதரன் உண்மையில் அழகான ஆண்பிள்ளைதான். தோற்றத்தை விட அவரது குணம்...எத்தனை அழகு...?

"என்ன பேசமாட்டேங்கிறியே? என்ன சங்கதி?" வேடிக்கையாகக் கேட்டபடி காரை செலுத்திக்கொண்டு போனான் தாமோதரன்.

"எங்கள் வீட்டு லீனா வேலையைவிட்டுப் போய்விட்டாள்."

"அட பாவமே! வீட்டு வேலையும் உன் தலையில் விழுந்து விட்டதா?"

"அதைப் பத்தி நான் கவலைப்படவில்லை. அவளை மிகவும் கடினமாகப் பேசி அண்ணா குளிர் வீசிய இரவில் பட்டினியோடு அனுப்பி வைத்ததை எண்ணி வருத்தப்

படுறேன்" என்றவள் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னாள்.

காரைத் திடீரென்று வழியில் ஒரு ஓரத்தில் நிறுத்தினான் தாமோதரன். அவன் மிக்க கோபத்துடன் அவள் பக்கம் திரும்பிப் பேசினான்.

"உங்க அண்ணன் ஒரு பெரிய தவற்றைச் செய்திருக்கிறார். அவரும் ஏறக்குறைய என் வயசுக்காரர்தான். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழர்கள் பொங்கல் திருநாளை வைத்திய நாத ஈஸ்வரர் ஆலயத்தில் அமோகமாகக் கொண்டாடிக் கொண்டிருந்த மாலைப்பொழுதில் என்ன நடந்தது என்பது அவருக்கும் லேசாக ஞாபகம் இருக்கும் என நினைக்கிறேன். நீ அப்போது பிறந்திருக்கமாட்டாய்.

"பசி தாங்க முடியாது ஒரு ஏழை ஆப்பிரிக்கச் சிறுவன் மேல் மார்க்கெட்டில் ஒரு இந்தியர் கடையில் ஒரு ரொட்டியைத் திருடிவிட்டான். கடைக்காரர் கோபம் தாளாது அவன் கன்னத்தில் அறைய, அதைப் பார்த்த மற்ற ஆப்பிரிக்கர்கள் அருகிலிருந்த பியர் ஹாலில் பியர் அருந்தி கொம்மாளமடித்துக் கொண்டிருந்த ஆப்பிரிக்கர்களிடம் சொல்ல, அத்தனை பேரும் கோபத்துடன் எழுந்து இந்தியர்களின் கடைகளைச் சூறையிட்டுப் பொருள்களை உடைத்துப் பலரைக் காயப்படுத்தி அமர்க்களம் செய்தார்கள். செய்தியை வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயத்திற்கு யாரோ போனில் சொல்ல, பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த கூட்டம் நாலா பக்கமும் சிதறி ஓட ஒரே அமர்க்களம்.

"அத்தோடு நின்றதா? தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் ஆப்பிரிக்கர்கள் கூட்டம் கூட்டமாகக் கையில் கத்தி-ஈட்டியுடன் இந்தியர்கள் வசித்த பகுதியைத் தாக்கி-பெண்களைக் கற்பழித்து -வீடுகளைக் கொளுத்தி-பஸ்களுக்கு நெருப்பு வைத்து-ஒரு பெரிய புரட்சியை நடத்தினர்.

''டர்பன் நகரில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் நேட்டாலின் மற்றப் பகுதியில் பரவ ஆரம்பிக்க வெள்ளைக்காரன் அதற்குமேல் இதை அடக்காவிடில் தங்களுக்கும் ஆபத்து என்று பயந்து போக கடற்படையின் உதவியால் ஒருவாறு புரட்சியை அரசு அடக்கியது. ஆனாலும் அன்று ஆரம்பித்த கசப்பு உணர்வு ஆப்பிரிக்கரின் நெஞ்சினின்று நீங்கவில்லை. அப்படியிருக்கும்போது முன்னைவிட ஆப்பிரிக்கர்கள் படித்தவர்களாகித் தங்கள் உரிமைகளைப் பற்றிப் பேசத் தெரிந்த தன்மானமுள்ள வர்களாகிவிட்டிருக்கும் இந்தக் காலத்தில் உன் அண்ணன் இப்படி ஒரு காரியம் செய்தால், லீனா சொன்னது போல மறுபடி ஒரு பயங்கரப் புரட்சி ஏற்பட்டால்?...

''ஒன்றைத் தெரிந்துகொள். உலகத்தின் கண்ணோட்டத் தில் அழுத்தப்பட்டவனாக வாழும் ஆப்பிரிக்கர்கள் மீதுதான் அனுதாபம் நிறைந்திருக்கிறது. அவர்களது விடுதலையைப் பற்றித்தான் உலகமே பேசுகிறது. யாரும் ஒரு துளி நேரம் கூட ஆப்பிரிக்கர் வெள்ளையர் இருவர் இடையே ஸாண்ட்விச்சாகக் கிடந்து ஓரளவு உரிமையின்றி அழுத்தப்பட்டவனாக வாழும் இந்தியனைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. காரணம், இந்தியன் ஆப்பிரிக்கனையும் அழுத்திக்கொண்டு சுயநலமாக வாழ்கிறான் என்ற எண்ணத்தினால்தான் அந்த அசட்டை.

''பூத் ரோடு, காட்டமேனர், காவண்டிஷ் போன்ற பகுதிகளில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட அந்த பயங்கரம் மீண்டும் வரக்கூடாது என்றால் நாம் ஆப்பிரிக்க மக்களைச் சரிசமமாகக் கருதி மனிதாபிமானத்தோடு அணுகி, அவர்களது உரிமைப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும்.''

திடீரென்று திரும்பிய தாமோதரன், ''என்ன நான் பாட்டுக்குப் பேசிக்கொண்டு போகிறேன், நீ பதிலே சொல்லாம உட்கார்ந்திருக்கியே'' கேட்டபடியே மெல்லச் சிரித்தான். காரை கிளப்பி மேலே ஓட்டத் தொடங்கினான்.

'தாமு! என் மனம் பதில் சொல்லிக் கொண்டுதான் இருக்கு. உங்கள் பேச்சைக் கேட்கும் போதெல்லாம் நீங்க ஒரு உயர்ந்த மனிதன் என்று என் மனம் புரிஞ்சுகொண்டு பெருமைப்படுது. அந்த உயர்ந்த மனிதனை என் மனம் ரொம்பவும் நேசிக்கிறது. தாமு ஐ லவ் யூ! தாமு...' தன்னுள் எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்கிக் கொண்டு, ''கேட்டுகிட்டிருந்தேன். அண்ணா செய்தது தப்பு- வருத்தப்படறேன்... அட வீடு வந்துவிட்டது. இங்கேயே இறங்கிக்கிறேன்'' என்றாள்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே ஓடியவள் வாயில் உப்புக் கரிப்பதை உணர்ந்தாள். அது மழைத் தண்ணீர் அல்ல. தாமோதரனைக் காதலித்துப் பயனில்லை. வீட்டில் பலத்த எதிர்ப்புத்தான் கிடைக்கும். மேலும் தாமோதரன் அவளைக் காதலிக்கிறார் என்று எப்படி நம்பமுடியும்? வேண்டாம் என்று ஒதுக்கிவிட்ட வீட்டுப் பெண்ணை வேண்டும் என்று அணுக அவர் மானமிழந்து மதிகெட்டுப் போய்விடவில்லை. நினைத்தால் அவருக்கு க்யூவில் வந்து கல்யாணத்துக்குப் பெண்கள் நிற்பார்கள். அவளுக்கு? என்ற சிந்தனையில் ஏற்பட்ட துயரக்கண்ணீர் அது என்று புரிந்துகொண்டு முகத்தைத் துடைத்துக்கொண்டு உள்ளே ஓடினாள். ஆனால் தாமோதரனைத் தன் இதயத்தினின்று துடைத்துவிட முடியாது என்பதை முதன் முதலாக அவள் பூரணமாகப் புரிந்து கொண்டாள்.

14

முன்பெல்லாம் வார இறுதியை அவள் பள்ளிக்கூடக் குழந்தையைப் போல மகிழ்ச்சியுடன் எதிர் நோக்குவது வழக்கம்.

காதலில் தோல்வியுற்று மனம் உடைந்த நிலையிலும் பெரிய அண்ணன் மறைவால் ஏற்பட்ட துன்பத்தில் உள்ளம் நொறுங்கிவிட்டிருந்தபோதிலும் வெள்ளிக்கிழமை மாலை வேலை முடிந்ததும் காவேரி சில எதிர்பார்ப்புகளுடன் வீட்டிற்குத் திரும்புவது வழக்கம்.

சூடான வெந்நீரில் தலைமுழுகிவிட்டு-சுத்தமான உடையணிந்து கொண்டு குத்துவிளக்கைத் தேய்த்துக் கழுவிப் பொட்டிட்டுப் பூ வைத்து பூஜையறையில் ஏற்றி வணங்கி விட்டு, நோயாளி அண்ணிக்குச் சாப்பாடு கொடுத்து உதவி விட்டு, தன் உணவை முடித்துக்கொண்டு ரேடியோவில் நாடகமோ-இசையோ வெகுநேரம் கேட்டு அனுபவிப்பாள். இடைஇடையே அண்ணியுடன் ஏதாவது வேடிக்கையாகப் பேசிச் சிரிப்பாள்.

சவுந்தரி மருந்துகளின் மயக்கத்தால் உறங்கத் துவங்கியதும் மெல்ல வெளியே வந்து யசோதா அண்ணி வீட்டில் இல்லாவிடில், முன்னறையிலிருந்த கலர் டெலிவிஷன் அருகே உட்கார்ந்து அவளுக்குப் பிடித்தமான போனன்ஸா, ஸ்கீபாய், காண்டி காமரா, ரிச்மேன் புவர்மேன் என்று பலவற்றையும் . பார்த்துக் களித்துவிட்டு செய்திக்குப்பின் அதை மூடிவிட்டுத் தன் அறைக்குள் வந்து, லீனா சுத்தமாகத் துவைத்து அழகாக விரித்து ஒழுங்கு செய்து விட்டிருக்கும் படுக்கைமேல் சாய்ந்தபடி முனிசிபாலிடி நூலகத்திலிருந்து எடுத்து வந்த கதைப் புத்தகத்தைப் படிப்பாள். மின் விளக்கை அணைத்துவிட்டு நிம்மதியாக உறங்கிப் போய்விடுவாள்.

மறுநாள் காலை பெரிய அண்ணியைக் கவனித்துவிட்டு வீட்டு வேலைகளில் சிறிது பங்கேற்றுக் கொண்டுவிட்டு, அண்ணியின் உத்தரவுடன் தன் நர்ஸ் தோழி ஒருத்தியுடன் பகல் சினிமா பார்க்கப் போய்விடுவாள். சனிக்கிழமை பகலோ-இரவோ ஒரு தமிழ் சினிமா பார்க்காவிடில் அவள்

தலை வெடித்துவிடும். தான் இதுவரை பார்த்திராத தமிழ்நாட்டைப் படத்திலாவது பார்க்கிறோமே என்ற திருப்தி.

ஞாயிற்றுக்கிழமை காலை உணவுக்குப் பின் கைகளில் ரப்பர் உறை அணிந்துகொண்டு லீனாவுடன் தோட்டத்தைக் கவனிக்கப் புறப்பட்டு விடுவாள். களையெடுத்துச் செடிகளுக்கு நீர் பாய்ச்சி, உரம் போட்டுவிட்டுப் பின்னர் சவுந்தரி பயிரிட்டு வளர்த்திருந்த தோட்டத்துக்குப் பின்புறமாக இருந்த கிச்சன் கார்டனிலிருந்து வீட்டுக்குத் தேவையானவைகளைப் பறித்தெடுத்துக் கொண்டு வருவாள்.

''அண்ணி! நீங்க வந்து பார்க்கலையேன்னு வருத்தமா இருக்கு. உங்க கிச்சன் கார்டனில் லெட்யூஸ் எப்படி வளர்ந்திருக்கு தெரியுமா? பார்சிலியும் வீக்கம் சிலிரியும் பசேல்னு கண்ணைப் பறிக்குது. அதெல்லாம் போட்டு கமகமன்னு உங்களுக்கு ஒரு விஜிடபிள் ஸூப் செய்துட்டு வந்திருக்கேன். சாப்பிடுங்க அண்ணி'' என்று கொஞ்சியபடி படுக்கை அருகே உட்கார்ந்து ஸ்பூனால் கிண்ணத்திலிருக்கும் ஸூப்பை அள்ளி அண்ணிக்கு ஊட்டுவாள்.

பின்னர் பகல் உணவுக்குப்பின் அண்ணியின் அறையில் கிடக்கும் நீண்ட சோபாவிலே படுத்துக்கொண்டு மாலைப் பொழுது அமிழும்வரை உறங்கிப் போவாள். மறுநாள் வேலைக்கு உடலுக்குத் தேவையான தெம்பை அந்த ஆனந்தமான உறக்கம் சேகரித்துத் தரும் என்ற நம்பிக்கை.

ஆனால் இப்பொழுது நிலைமை முற்றிலும் வேறாகி விட்டிருந்தது. வெள்ளிக்கிழமை மாலை என்றாலே ஒரே திகில். வீட்டுக்குள் புகுந்ததும் சுமையாக வேலைகள் காத்திருந்தன. லீனா இல்லாததால் இரவு பத்துமணி வரை சாப்பிட்ட தட்டுகளைக் கழுவவும்-சமயலறையைக் கழுவித் துடைக்கவுமே பொழுது சரியாக இருந்தது. படுக்குமுன் வழக்கமாக வாசிக்கும் கதைப் புத்தகங்களில் ஒன்றைக் கையில் எடுத்தாலே முதல் பக்கத்தைத் திருப்புமுன் தூக்கம்

வந்து தொலைத்தது. அடித்துப் போட்டது போன்றதொரு வலியில் உடம்பு நொந்தது.

சனிக்கிழமை எழுந்ததுமே மலையாக வேலை முன்னே நின்று அச்சுறுத்தியது. வார முழுவதும் குவிந்து கிடக்கும் அழுக்குத் துணிகளை வாரி மின்விசைச் சலவைப் பெட்டியில் போட்டுத் துவைத்து பாதி காய்ந்த நிலையில் எடுத்து உடனே பெட்டி போட்டு அடுக்கி வைத்துவிட்டு, வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து, தரைக்குப் பாலீஷ் போட்டு குளியலறைத் தொட்டிகளைத் துப்புரவாகக் கழுவி, பின்னர் சமைத்து, கடையிலிருந்து வரும் அண்ணன் அண்ணிக்குப் பரிமாறி, தானும் சாப்பிட்டு, மறுபடி தட்டுகளை எல்லாம் கழுவித் துடைத்து...இரவு தூங்கும்வரை வீட்டைக் கவனிக்கும் வேலை அவளுடையதாகி விட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் யசோதாவின் உறவினர் கும்பலை வரவேற்று உபசரித்து அனுப்புவதற்குள் முதுகு ஒடிந்து போனது.

படுக்கையில் போய்ச் சாய்ந்தால் போதும் என்ற அளவில் காவேரி ரேடியோ - டெலிவிஷன்-சினிமா எல்லாவற்றையும் துறந்துவிட்டிருந்தாள்.

வீட்டிலும் வேலைகள்-உத்தியோகம் பார்க்குமிடத்திலும் கடுமையான உழைப்பு என்ற நிலையை அவளால் சமாளிக்க இயலாது உடல் சோர்வடையத் தொடங்கியது. நாள் முழுவதும் வீட்டில் உழைத்துவிட்டு அதிகத் தூக்கமின்றி வேலைக்குப் புறப்பட்டிருந்தவள் காரை ஓட்டிக்கொண்டு போனபோது ஒரு எதிர்பாராத முடுக்கில் எதிரே வந்த வண்டியைத் தவிர்க்கக் காரைச் சட்டென்று திருப்பிய வேகத்தில் பாதையோரமிருந்த ஒரு மின் விளக்குக் கம்பத்தின் மீது உரசி, பல சிராய்ப்புக் காயங்களுடன் தலைமை அலுவலகத்துக்குப் போக, கவனக் குறைவாகக் கார் ஓட்டியதற்காக அவளுக்கு அன்று தலைவரிடமிருந்து கிடைத்த

மண்டகப்படி? அப்பப்பா...! அந்தச் சிறு விபத்து ஏற்பட்ட விபரத்தைப் பலமுறை டிபார்ட்மெண்டின் பல பகுதிகளுக்குக் கடிதங்கள் எழுதித் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ள அவள் பட்டபாடு?

வீட்டில் இதே நிலை நீடித்துக் கொண்டு போனால் அவளது வாழ்க்கையின் முடிவுதான் என்ன? ஆத்திரமும் துயரமும் குமுறி எழ, அவள் யாரிடமும் முறையிட்டுக் கொள்ள முடியாது, இரகசியமாகப் பலமுறை தன் அறையில் தனிமையிலே அழுது தீர்த்தாள்.

★ ★ ★

மூன்று நாட்களாக விடாது கொட்டிக்கொண்டிருந்த மழை அந்த வெள்ளிக்கிழமை மிகவும் பலத்துவிட்டது. தோழி நளினி வேலை சம்பந்தமாகப் பக்கத்து ஊருக்குப் போயிருந்தாள். நேரே தன் காரை கவர்மெண்ட் கராஜில் கொண்டு நிறுத்திவிட்டு,தயாராக வந்து காத்திருந்த கணவனின் காரில் புறப்பட்டுப் போய்விட்டாள். கொட்டும் மழையில் வெள்ளிக்கிழமை மாலைக் கூட்டத்தில் திணறிக் கொண்டு அவள் எப்பொழுது பஸ் பிடிப்பது? எப்பொழுது போய்ச் சேர்வது?

அனாவசியமாகக் கௌரவம் பாராட்டுவதில் பயன் இல்லை என்ற எண்ணத்துடன், அவள் தலைமை அலுவல கத்துத் தொலைபேசியில் தாமோதரனை அழைத்தாள்.

''ஒரு உதவி செய்ய முடியுமா?'' கரகரப்பான அவன் குரல் காதுகளைப் பட்டுப்போலத் தழுவுவதை உணர்ந்து மெய்சிலிர்த்துப் போனாள்.

''வீடு வரைக்கும் உங்க காரில் ஒரு லிஃப்ட் தேவை. இந்த மழையில்...''தடுமாறினாள் மேலே பேச முடியாது.

''இவ்வளவுதானே? காரை கராஜில் நிறுத்திவிட்டு வாசலில் எனக்காகக் காத்திரு. ஐந்து மணிக்கு டாண் என்று நான் காருடன் வருவேன். கவலை வேண்டாம்'' சிரித்தாள் மறுபக்கத்தில் தாமோதரன்.

நிற்காது கொட்டிக் கொண்டிருந்த மழையில் மழைக் கோட்டை இறுக்க மூடிக்கொண்டு மழைக் குல்லாயை மீறி முகத்திலே வழியும் தண்ணீரை மெல்லக் கைக்குட்டையால் துடைத்தபடி அவள் காத்து நின்றாள்.

சொன்ன நேரத்தில் தாமோதரன் வந்து விட்டான். தன் பக்கத்துக் கதவைத் திறந்து காரில் ஏறிக்கொள்ள உபசரித்தான்.

''கடந்த மூன்று வாரமாக நான் ஊரில் இல்லை. அதனால் உன்னைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டதைப் போல ஒரு பிரமிப்பு ஏற்படுகிறது. ஜுபுலானா கேஸ் பற்றிச் சொன்னேனே, ஞாபகமிருக்கா? இந்த மாதக் கடைசியில் அவனுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற இருந்தது. அதற்கு ஸ்டே ஆர்டர் வாங்கிவிட்டோம். அப்பீல் செய்ய உத்திரவு கிடைச்சிருக்கு. அதைப்பற்றி ஆவன செய்யப் பிரிட்டோரி யாவுக்கும் புளூம்ஃபௌண்டினுக்கும் மூணு வாரமா அலைஞ்சு கொண்டிருந்தேன்'' என்றான்.

''கன்கிராட்ஸ்- நீங்க பாடுபட்டதிற்கு வெற்றி கிடைச்சிட்டது.''

''ஜுபுலானா நிரபராதின்னு விடுதலை கிடைக்கும்வரை போராட ரொம்ப விஷயங்கள் இருக்கே. இப்பத்தானே பாதிக் கிணத்தைத் தாண்டியிருக்கேன்.''

''நீங்க ரொம்பக் கெட்டிக்காரர். நினைச்சதை முடிச்சுடுவீங்க.'' காவேரி புன்முறுவலித்தாள்.

''உண்மையாகவா சொல்றே. நான் நினைச்சதெல்லாம் வெற்றியாக முடியும்னா சொல்றே?'' காரை ஓட்டிக்

கொண்டே போனவன் சிறிது திரும்பி அவளைக் கூர்மை யாகப் பார்த்தான்.

மூக்கும் முகமும் சிவந்துபோனாள் காவேரி. கார் வேறுதிக்கில் அவன் வீட்டை நோக்கிப் போவதைக் கவனித்து விட்டாள்.

''மிஸ்டர் தாமோதரன், காரை...'' என்று அவள் முடிக்குமுன் குறும்பாக அவனும்,

''மிஸ் காவேரி..இப்போ நான் உன்னை எங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறேன். பயமா இருக்கா? கடந்த மூணு வாரமா வெளியூரில் இருந்தப்போ என் மனதில் ஒரு எண்ணம் தீவிரமாக எழுந்தது. அதை இன்று செயல்படுத்த விரும்பறேன். இன்று வெள்ளிக்கிழமை; உனக்கு மிகவும் பிடித்த நாள். ஏன் என் தாயாருக்கும் ரொம்ப உகந்த நாள். அந்த ஒரு காரணத்திற்காக என் வீட்டில் அமைதியானதொரு சூழ்நிலையில் என் மனதில் தோன்றியுள்ள அந்த எண்ணத்தை உன்னிடம் சொல்ல விரும்புகிறேன்'' என்றான்.

மழைக் கோட்டுக்குள் காவேரிக்கு வியர்த்துக் கொட்டியது. காது மடல் ஜிவ்வென்று ஆகிவிட்டதை உணர்ந்தாள். கட்டுக்கொள்ள இயலாத பரவசத்தில் நெஞ்சு துடித்தது.

முன்பு தனக்கேற்பட்ட அவமானத்தை ஒதுக்கிவிட்டு மறுபடியும் தாமோதரன் அவளை மணந்துகொள்ள விரும்பித் தானே அவளைக் கேட்கப் போகிறாரா?... அப்படிக் கேட்டால் அவள் உடனடியாக என்ன பதில் சொல்வது?...

கொந்தளித்துப் புரண்ட தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு மௌனமானாள்.

கராஜிற்குள் காரை நிறுத்திவிட்டு, சுவர் ஓரமாக உள்ளே போகும் கதவைத் திறந்து மழையில் நனையாதபடி அவளை

உள்ளே அழைத்துச் சென்றான். அவளது மழைக்கோட்டைக் கழற்றி வீட்டு வேலையாள் எலியாட்டிடம் கொடுத்து ஸ்டாண்டில் மாட்டச் சொல்லிவிட்டு முன்னறையில் அவளை உட்காரச் சொல்லி உபசரித்தான்.

அவன் வரவிற்காக எலியாட் வீட்டிலிருந்த மின் விளக்குகளை ஏற்றி விட்டிருந்தான்.

''இதோ வருகிறேன்'' என்று கூறியபடி வேகமாகப் பின்னால் விரைந்த தாமோதரன் ஒரு சில நிமிடங்களில் முகம் கழுவி-முடியைச் சீராக்கிக்கொண்டு ஆபீஸ் ஆடைகளைக் களைந்துவிட்டு ஸ்போர்ட்ஸ் ஷர்ட்டும் வெள்ளைப் பாண்டுமாகக் கச்சிதமான தோற்றத்தில் வந்தான்.

''இந்த ஊதுவத்தியின் மணம் உனக்குப் பிடிக்குமோ என்னமோ தெரியாது, அம்மாவுக்கு ரொம்பப் பிடிக்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்மா படத்தருகே இதைப் புகைக்க வைப்பது வழக்கம். அப்படி ஒரு ஸெண்டிமெண்ட் அவ்வளவுதான்''என்றபடி எலியாட் பறித்துத் தயாராக ஒரு ஓலைத்தட்டில் வைத்திருந்த ரோஜாக்களை எடுத்துப் பெரிய அளவில் மூன்றைச் சுவரில் தொங்கிய தன் தாயின் படத்திற்குச் சூட்டினான். ஊதுவத்தியைப் பற்ற வைத்து அருகிலிருந்த ஸ்டாண்டில் சொருகினான். ஒரு வெள்ளை ரோஜாவை எடுத்து அவள் கையில் கொடுத்து, ''இது உனக்கு. என் மனம் இதைப்போல் ரொம்ப வெள்ளை. தோல்தான் கொஞ்சம் கருப்பு'' என்றபடி சிரித்தான்.

அறை முழுவதிலும் ஒரு சில நொடியில் ஊதுவத்தியின் சந்தன மணம் கப்பிக்கொண்டது. மேலே தொங்கிய சரவிளக்கு உமிழ்ந்த ஒளியில் அவனது கண்களில் கனிவு பளிச்சிடுவதைக் கண்டாள். என்னவோ பேச ஆரம்பித்தவன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு அருகிலிருந்த டேப்ரிக்கார்டரிடம் நெருங்கினான்.

''உனக்குத் தமிழ்ப்படம் என்றால் ரொம்பப் பிடிக்கும்னு எனக்குத் தெரியும். நடிகர் சிவாஜியின் பெரிய விசிறி நான்னுகேள்விப்பட்டிருக்கேன். உன்னைச் சில தடவைகள் ஜெமினி தியேட்டரில் பார்த்திருக்கேன்-உன் சிநேகிதி யோடத்தான். உனக்கு நல்லாப் பாடத் தெரியும் என்பதும் எனக்குத் தெரியும். அம்மாவைக் கூட்டிப்போகக் கோவிலுக்கு வரும்போது திருக்கூட்டத்திலே கணீர்னு உன் குரல்தான் கேட்கும்.''

''உங்களுக்குத் தமிழ்ப் படம், பாட்டு இதெல்லாம் பிடிக்குமா?''

''பிடிக்கும். ஆனால் உன்னைப்போல் இனிய குரலில் பாடத் தெரியாது. நான் இப்போ பாட ஆரம்பிச்சா நீ எழுந்து ஓடிப் போயிடுவே. அதனாலே டி.எம்.எஸ்.ஸும், சுசீலாவும் டூயட் பாடட்டும்.'' சிரித்தபடி டேப் ரிக்கார்டரின் பட்டனை அழுத்தினான்.

''இனியவளே என்று பாடி வந்தேன்...

இனி அவள்தான் என்று ஆகிவிட்டேன்...''

கணீரென்று டி.எம்.எஸ்.ஸின் குரல் ஒலித்தது.

முகம் சிவந்து நெஞ்சு பதறி அவனைப் பார்க்கத் தயங்கி அவள் டேப்ரிகார்டரையே பார்த்தாள். சுசீலாவும் அதையே திரும்பிப் பாடியபோது தாமோதரன் அவள் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

''எனக்கு இந்தப் பாட்டு ரொம்பப் பிடிக்கிறது. என் மனதையே இவங்க எனக்காக எடுத்துச் சொல்றாப்பல இருக்கு...'' அவன் முடிக்குமுன் வாயில் அழைப்பு மணி கிணுகிணுத்தது. சட்டென்று ரிக்கார்டரை நிறுத்திவிட்டு வெளிக் கதவைத் திறந்தான்.

வாசலில் ஒரு வெள்ளைக்கார இளைஞன், நடுத்தர வயதுடைய ஒரு இந்தியர், அவரைவிட வயதில் மூத்தவராகத்

தென்பட்ட ஒரு ஆப்பிரிக்க மனிதர் என்று மூன்று பேர்கள் நின்று கொண்டிருந்தனர்.

சோபாவில் சாய்ந்துகொண்டிருந்த காவேரியைக் கண்டதும் அந்த இளைஞன் லேசாகச் சீட்டியடித்தான்.

''தாமு! உன் பியான்ஸி ரொம்ப அழகா இருக்காங்க'' என்றான் வியப்புடன்.

''உனக்கு ஒரு தோழி இருப்பது இத்தனை நாள் எங்களுக்கெல்லாம் தெரியாதே!'' கலகலவென்று சிரித்தார் அந்த இந்தியர்.

''வெரிகுட், சீக்கிரம் நமக்கு நல்ல இந்தியச் சாப்பாடு இங்கே வரும்போதெல்லாம் கிடைக்கப் போகிறது!'' கையைக் கொட்டி ஆர்ப்பரித்தார் ஆப்பிரிக்க மனிதர்.

குங்குமமாக முகம் சிவந்து நெஞ்சு பதற மெல்ல எழுந்து வணக்கம் தெரிவித்தாள் காவேரி.

தாமோதரன் சட்டென்று அவள் அருகே வந்தான். ''எனக்கு ஒரு முக்கிய காரியம் இருக்கிறது, மன்னித்துக் கொள். உன்னை உடனே வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வேகமாகத் திரும்பவேண்டும்'' என்றான். ஸ்டாண்டில் மாட்டியிருந்த மழைக்கோட்டை எடுத்து அணிய அவளிடம் கொடுத்து விட்டு, ''இதோ வந்துடுவேன்-எலியாட் உங்களுக்காக டீயும் கேக்கும் எடுத்து வைப்பான். சாப்பிட்டுக் கொண்டு கொஞ்ச நேரம் ஓய்வாக இருங்கள். வந்து விடுகிறேன்'' என்றபடி காவேரியுடன் கிளம்பிவிட்டான்.

கலவரம் - திகைப்பு - ஏமாற்றம் என்ற பல்வேறு உணர்ச்சி மோதலில் மனம் கனக்க மழை இருட்டில் யாரும் பார்க்குமுன் காரிலிருந்து இறங்கி வீட்டிற்குள் மாயமாகினாள் அவள்.

★

★

★

சனிக்கிழமை காலையே மழைவிட்டு வானம் பளிச் சென்று வெளுக்கத் தொடங்கியது. மூன்று நாட்களாக வீட்டுடன் கிடந்த எல்லோரும் அன்று மாலை மெல்லியதாக வீசிய சூரிய ஒளியை ரசித்தபடி தங்கள் வீட்டுத் தோட்டத்து நார்க்காலிகளில் வந்து உட்கார்ந்து இளஞ்சூடாக முகத்தைத் தடவிய வெய்யிலை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று அண்ணன் லோகேந்திரன் கார் வீட்டு வாசலில் வந்து நிற்பதைக் கண்டு காவேரி திடுக்கிட்டுப் போனாள். இந்த வேளையில் கடையை விட்டுவிட்டு அண்ணன் எதற்காக இப்படிப் பதட்டமாக வருகிறார்?

''யசோதா!'' என்று அலறிக்கொண்டு வந்தவன் மனைவியைக் கண்டதும், ''கேட்டியா சங்கதியை'' என்று உறுமினான்.

முன்னறையில் சோம்பலாகச் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த யசோதா பரபரப்புடன் எழுந்து வந்து கணவனைக் கலவரமாகப் பார்த்தாள்

''இவளுக்கு என்ன துணிச்சல் தெரியுமா? நாம் எச்சரித்திருந்தும் அந்த லாயர் பயலோட ஊர் சுத்த ஆரம்பிச்சிருக்கா. நேத்து அவன் வீட்டிலே நடந்த ஒரு மல்ட்டி ரேஷியல் கூட்டத்திலே இவளும் இருந்திருக்கா.''

''இது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' ஆச்சர்யத்துடன் கேட்ட யசோதா தன் நாத்தியை மிகவும் கோபத்துடன் வெறித்தாள்.

''அந்த சி.ஐ.டி. ரகுநந்தன் என்னைப் பார்க்கக் கடைக்கே வந்துட்டான். நாம் ஒழுங்கா-அரசுக்கு அடங்கின நல்லதொரு குடிமக்களாக வாழறது இந்தச் சண்டாளிக்குப் பிடிக்கலை. நம்மைக் குடும்பத்தோட கொண்டு ஜெயிலில் தள்ள வழி பண்ணத் துவங்கியிருக்காள் பாவிப் பெண்...'' கர்ஜித்தான் அண்ணன்.

''கேடு கெட்டவளே! உனக்கு அத்தனை துணிச்சலா?'' யசோதா இரைந்தவுடன் ஆவேசம் வந்தவன்போல லோகேந்திரன் தங்கையருகே நெருங்கி அழகாகச் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்த அவளது கொண்டையைப் பற்றி அவிழ்த்துத் தலைமுடியை இறுகப் பற்றி வெறி பிடித்தவன் போல ஓங்கி இரு கன்னங்களிலும் மாறி மாறி அறையத் தொடங்கினான்.

''அண்ணே! என்னை அடிக்காதீங்க... அண்ணே! என்னால் தாங்க முடியாது. ஐயோ வலிக்குதே. அண்ணே...'' என்ற அலறல் வீட்டைக் கடந்து தெருவரை ஒலித்தது. லோகேந்திரன் பைத்தியம் பிடித்தவன்போல அவளைச் சுவரிலே மோதிக் காலால் பந்தாடத் துவங்கும்போது...

15

தொண்டை கிழியக் காவேரி ''என்னை அடிக்காதீங்க அண்ணே'' எனற கத்தியதைக் கேட்டுக் கோபாவேசத்துடன் எதிர்வீட்டுக் கந்தசாமி உள்ளே வந்தவர் குறுக்கே புகுந்து ஒரே எட்டில் லோகேந்திரன் கரங்களைப் பலமாகப் பற்றிக் கொண்டு விட்டிருந்தார்.

ஆறடிக்குமேல் தாராளமாக நின்ற உயரம், அதற்கேற்ற பருமன், பீரங்கி போன்ற குரல் கொண்ட கந்தசாமி எதற்கும் அஞ்சாத ஒரு ஆண் சிங்கம். அந்தத் தெருவில் அவர் மிகவும் பெரிய புள்ளி. பல இயக்கங்களின் தலைவர் - செயலாளர்... வைத்யநாத ஈஸ்வர. ஆலயத்தின் ஸ்தானிகர். எல்லா வற்றையும் விட அவர் ஒரு பிரபல வேட்டைக்காரர். கிழக்கு ஆப்பிரிக்காவில் அவர் வேட்டையாடிக் கொண்டு வந்த காட்டெருமை - மான் முன்னறையில் சுவரில் தொங்கிக் கொண்டு வீட்டுக்கு வருகிறவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும். யாருக்கும் பயப்படாத ஒரு த[illegible]லான

ஆசாமி: அந்தத் தெருவிலிருந்த இந்தியர்களில் அவர் ஒருவரிடம்தான் துப்பாக்கிக்கு லைசென்ஸ் இருந்தது.

''லோகா! உனக்குப் புத்தி பேதலிச்சுப் போச்சா? வயசுப் பெண்ணை மாடு அடிக்கறாப்பல அடிக்கிறே... நான்சென்ஸ்'' என்று உறுமினார்.

''அது எங்க வீட்டு விஷயம், இதில் தலையிட உங்களுக்கு என்ன உரிமை...?'' யசோதா கிரீச்சிட்டாள்.

கந்தசாமி கனல் தெரித்; விழிகளால் அவளை உறுத்துப் பார்த்தார்.

''காவேரி ஏதாச்சும் தப்புச் செஞ்சிருந்தா கேட்கிறபடி கேட்டுத் தெரிஞ்சுக்கிறது அண்ணன் என்கிற முறையிலே நியாயம். ஆனால் அவள் நர்ஸ் வேலை செய்து கொண்டு தன் உழைப்பிலே வாழ்கிற ஒரு மேஜரான பெண். அவளைத் தொட்டு அடிக்க அண்ணனுக்கோ வேறு எவனுக்கோ உரிமை இல்லை. ஏம்மா யசோதா, இந்தியாவில் உள்ள ஆண்கள்தான் பெண்டாட்டிகளையும் தங்கச்சிகளையும் போட்டு அடிப் பாங்க. நம்ப நாட்டு ஆண்கள் ரொம்பத் தங்கமானவங்க - பெண்களைப் பூப்போல கௌரவமா நடத்துவாங்க. என்ன இருந்தாலும் நாம் வெள்ளைக்காரங்க மத்தியிலே வாழ்கிறோம் இல்லையான்னு பெருமையாய்ப் பேசுவியே, இப்போ உன் புருஷன் இந்தக் குழந்தையைப் போட்டு அடிச்சு நொறுக்கறதை வேடிக்கை பார்க்கிறதோட தூண்டிக் கொடுக்கறியே... உனக்கு ஈவு இரக்கம் ஏதாச்சும் இருக்கா?'' உரத்த குரலில் கர்ஜித்தார்.

''மிஸ்டர் கந்தசாமி! வில் யூ ப்ளீஸ் கெட் அவுட்!'' லோகேந்திரன் ஆத்திரத்துடன் கத்தியபடி தன் கையை அவரது பிடியினின்று உதறிக்கொள்ள முயன்றான்.

''நான் போக மாட்டேன். நாமெல்லாம் இந்தத் தெருவில் கௌரவமாக வாழ்கிற இந்தியர்கள். ஒரு தாயில்லாத

பெண்ணை அண்ணன்காரன் அடிச்சு கொல்றதைப் பார்த்துட்டு நிக்க நாங்கள்லாம் மீசையில்லாத ஆம்பிளைகள் இல்லே. இதுக்கு மேலே அவமேலே கையை ஒங்கினா நான் என்ன செய்வேன் தெரியுமா...!'' பதிலுக்குக் கூச்சலிட்டார்.

அதற்குள் தெருவே அவர்கள் வீட்டு வாசலில் கூடிவிட்டது. லோகேந்திரன் வெறுப்பும் ஆத்திரமும் தாளாது தன் முழு பலத்தையும் உபயோகித்துத் தன் கரத்தை விடுவித்துக் கொண்டான்.

''இந்தக் கேடுகெட்டவ இனி என் வீட்டிலிருக்கக் கூடாது. ரொம்ப அக்கறை இருந்தா உங்க வீட்டிலே கொண்டு வச்சிக் காப்பாத்திக்கோங்க!'' தலைவெடிக்கும் குரலில் லோகேந்திரன் கத்தினான்.

நர்ஸ் உடையில் மேஜை மீதிருந்த அவளது புகைப் படத்தை எடுத்துத் தூக்கி நடைமீது வீசி எறிந்தான். கண்ணாடி உடைந்து நாலாபுறமும் சிதறியது. அவளது உடைகள், புடவைகள் என்று எல்லாவற்றையும் வாரிக் குப்பைபோல யசோதா தரையில் கொண்டுவந்து கோபத்துடன் போட்டாள்.

'இதெல்லாம் பொறுக்கிக்கிட்டு இவளையும் இந்த நிமிஷமே அழைச்சிட்டுப் போங்கோ. தங்கச்சி இன்னியோட செத்துப் போயிட்டான்னு நினைச்சுக்கிறேன்...'' சவால் விட்டான் லோகேந்திரன்.

''இந்தப் பொண்ணு படிச்சவ. நர்ஸ் உத்யோகம் செய்கிற ஒரு அந்தஸ்திலே இருக்கிறவ. சம்பாதிக்கிறவ. அவளாலே அவள் கால்லே நிற்க முடியும்'' என்று பதிலுக்குக் கடுமையாகப் பேசிய கந்தசாமி, ''மீனாட்சி... வேர் ஆர் யூ!'' என்று இரைந்து கூப்பிட்டார்.

''என்னங்க...'' என்று கேட்டபடி கூட்டத்தைப் பிளந்து கொண்டு சிறிது பருமனான ஒரு பெண்மணி தன் புடவைத் தலைப்பை இழுத்துச் சொருகிக்கொண்டு உள்ளே வந்தாள்.

''காவேரியை அழைச்சுகிட்டு நீ நம்ப வீட்டுக்குப்போ. நான் அவ பெட்டி, மத்த சாமான்களைப் பொறுக்கி எடுத்து வரேன்'' என்று உத்தரவிட்டார்.

கந்தசாமியை லோகேந்திரன் வெறித்தான். அவனால் மேலே பேச முடியாத ஒரு கிலி தொண்டையை அடைத்துக் கொண்டது.

''இந்தாங்க... அவர்கிட்ட வம்பு வேணாம். மனுஷன் பொல்லாதவர்...'' யசோதா கிசுகிசுத்தபடி ஒரு பெட்டியில் காவேரியின் துணிகளை வாரிப்போட்டு மூடி கந்தசாமி முன் கொண்டு வந்து வைத்தாள்.

''மீதியையெல்லாம தேடி எடுத்து வையுங்கோ. எங்க ஆப்பிரிக்க வேலைக்காரியை அனுப்பி வாங்கிக்கறோம்; மத்தபடி வரும் வாரம் நம்ப கோவில் கூட்டத்திலே நம்ப பெரியவர்கிட்டே விஷயத்தைச் சொல்லி நியாயம் வாங்கிக் கலாம். குட்பை...'' கூறியபடி பெட்டியுடன் நடந்தார்.

''மீனாட்சி, காவேரிக்கு சூடா சாப்பிட ஏதாச்சும் முதல்லே கொடு. நம்ப வீட்டு விசிட்டர் அறையிலே படுக்கவை. மேலே காயம் ஏதாச்சும் பட்டிருக்கான்னு பார். எசகுபிசகா இருந்தா நம்ப குடும்ப டாக்டரைக் கூப்பிடுவோம்.'' இரைந்தபடி அவர் வெளியேறுவதைக் கேட்டுக் கணவனும் மனைவியும் அயர்ந்து போனார்கள்.

''இந்தப் பாவிப் பெண்ணாலே நமக்கு எப்படிப்பட்ட தலைக்குனிவு ஏற்பட்டுடுச்சு பார்த்தியா?'' லோகேந்திரன் ஆத்திரத்தை அடக்கமாட்டாது முணுமுணுத்தான்.

''நம்ம கடைக்கு வந்து உங்களைக் கேள்வி கேட்ட அதே சி.ஐ.டி. இப்போ கந்தசாமி வீட்டிலே வந்து நாளைக்கு நிக்கப்போறான். நமக்கேன் பாடு? இனிமே வந்து அவன் ஏதாச்சும் கேட்டா எனக்கும் என் தங்கச்சிக்கும் உறவு முறிஞ்சி

போச்சு. அவ கந்தசாமி வீட்டிலே தங்கியிருக்கா. அங்கே போய்க் கவனிச்சுக்கோ. இல்லாட்டி அவ வேலை செய்கிற தலைமை அலுவலகத்தில் போய் விசாரின்னு நீங்க கையைக் கழுவிடுங்க. இந்தாங்க... இப்பவே உறுதியாச் சொல்லிடறேன். எப்ப அவ திமிரா அந்தம்மாளோட நம்ப வீட்டை விட்டு வெளியே போனாளோ, அப்பவே அவளுக்கு இந்த வீட்டுச் சொந்தம் இல்லேன்னு ஆயிடுச்சு. என் தங்கச்சி பாவம், அது இதுன்னு மனசு மாறி அவளை இங்கே மறுபடியும் கொண்டு வந்து சேர்த்தீங்கனா நான் ரொம்பப் பொல்லாதவளா இருப்பேன்...'' அதட்டலாகப் பேசினாள் யசோதா.

''என் உடம்பிலே ஓடறது பச்சைத் தண்ணியில்லை. சுத்த ரத்தம். மானம், வெட்கம், மரியாதை எல்லாத்தையும் உதறிட்ட கேடுகெட்டவன் நானில்லை; அவதான். அதனாலே கவலைப்படாதே. அவள் மறுபடி இந்த வீட்டுக்குள் காலை வச்சா... கோடாலியாலே ஓங்கி ஒரே வெட்டு வெட்டிடுவேன். அவர்கிட்டே துப்பாக்கி இருந்தா என்கிட்டே கடப்பாரை, கத்தி எல்லாம் இருக்கு. நினைப்பு வச்சுக்கோ!'' சீறினான்.

''அவர் உள்ளே வந்த உடனேயே நான் ஓடிப்போய் வாசக்கதவைச் சாத்தாது வந்தது தப்பு. அப்போ இத்தனை கலாட்டா நடந்திருக்க முடியாது.''

''உனக்கு கந்தசாமியைத் தெரியாது. அவர் ஒரு பெரிய ராட்சசன். ஜன்னல் கண்ணாடியை உடைச்சு உள்ளே குதிச்சிடுவார்.'' என்று கூறியபடி வாயிற்கதவைத் தெருவில் உள்ளவர்கள் முகத்தில் அறைவது போலப் படீர் என்று சாத்திக் கொண்டான்.

உடம்பில் பட்ட அடியின் நோவு போக வெந்நீரில் குளித்துவிட்டு, கந்தசாமி வாரிக்கொண்டு வந்த தன்

துணிகளிலிருந்து ஒரு நைட் கவுனைத் தேடி அணிந்து கொண்டு சாப்பாட்டறையில் வந்து உட்கார்ந்து கொண்டாள் காவேரி. அழுது உப்பிய கண்களும், வீங்கி விரல் பதிந்த கன்னமுமாகத் தெரிந்த அவளைப் பார்த்த மீனாட்சியின் மனம் வேதனைப்பட்டது.

சூடாகத் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து பிஸ்கட்டுகளுடன் பரிமாறினாள்.

''கண்ணைத் துடைத்துக்கொண்டு, அழுகிறதை நிறுத்திட்டு டீயைச் சாப்பிட்டுக்கிட்டே மெதுவாக நடந்தது என்னன்னு விபரமாச் சொல்லும்மா?'' ஆதரவாகப் பேசிய கந்தசாமி எதிர்ப்பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

காவேரியின் கண்களில் தாரையாகக் கோடிட்ட கண்ணீரைத் தன் கையால் துடைத்துவிட்டாள் மீனாட்சி. அவளுக்கு ஒரே ஒரு மகன்தானிருந்தான். டாக்டருக்குப் படிக்க இங்கிலாந்துக்குப் போனவன் அங்கேயே ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு தங்கிவிட்டான். ஆப்பிரிக்கரோ இந்தியரோ வெள்ளைக் காரர்களைக் கல்யாணம் செய்து கொண்டு கணவன் - மனைவி என்று வாழ முடியாதபடி 'இம்மொராலிடி ஆக்ட்' என்ற சட்டம் கடுமையாகத் தடுத்தது. அப்படி வாழ முயன்ற வர்களுக்குச் சிறைவாசம் கிட்டியது.

பல வசதிகளுடன் வாழ்கின்ற தங்களுக்கு மகனுக்குப் பின் ஒரு மகளாவது இருந்திருந்தால்... என்று மீனாட்சி அடிக்கடி நினைத்து வேதனைப் பெருமூச்செறிவது வழக்கம். அவளுக்குக் காவேரியைப் பிடிக்கும். அடக்கமான பெண். என்ன சுறுசுறுப்பு, நோயாளியான அண்ணியை எப்படிக் கவனித்துக் கொள்கிறாள் என்று அடிக்கடி கணவனிடம் பாராட்டிப் பேசுவாள்.

அந்த அடக்கமான பெண் இப்படி அடி வாங்கும்படி அவள் செய்துவிட்ட தவறுதான் என்ன?

''அழாதேயம்மா. தண்ணியை அடிச்சுப் பிரிக்க முடியாது. இன்னிக்கு இப்படித்தான் பெரிசாத் தெரியும். நாளைக்கு அண்ணனும் தங்கையும் கூடிடுவீங்க'' என்று அனுசரணையாகப் பேசினாள்.

ஒரு வாய் டீயும் கண்ணீரையும் சேர்த்துப் பருகியபடி இடையிடையே விசும்பிய காவேரி நடந்ததைச் சொன்னாள்.

''தாமோதரனை நீ காதலிக்கிறாயா அம்மா காவேரி?'' கந்தசாமி பளிச்சென்று கேட்டார்.

பதிலளிக்காது அவள் மேஜையைப் பார்த்தபடி மீண்டும் கண்களில் நீரைப் பெருக்கிக்கொண்டு மௌனமாக இருப்பதைக் கண்டு அவர் ''ஹோ..ஹோ'' என்று உரத்த குரலில் சிரித்தார்.

''கண்ணைத் துடைச்சிக்கோ. காதலிப்பது என்பது தவறுன்னா உங்கண்ணா நினைச்சார்...? இந்த யசோதாவைத் தான் கட்டிப்பேன்னு அவன் ஒத்தக் காலிலே நின்ன சங்கதி எங்களுக்குத் தெரியாதா...?''

''தாமோதரன் அரசியலில் ஈடுபட்டிருக்கார்னு'' பேச முடியாது விசும்பினாள்.

''தெரிஞ்ச கதைதான். உன் மூத்த அண்ணன் அப்படிச் சொல்லி வலிய வந்தவனை உதறித் தள்ளினான். பிறகு மோகன் விஷயத்திலே உன் மனசு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போச்சு. இப்போ மறுபடியும் தானே சமாதானமடைஞ்சு நெருங்கிவரப் பார்க்கிற தாமோதரனை மறுபடி லோகேந்திரன் ஏன் வெறுக்கணும்? இந்த நாட்டில் அரசியல் பேசாத அறிவுள்ள இந்தியன் எவன் இருக்கான்? கோழை

களையும் சுயநலவாதிகளையும், படிப்பு அறிவில்லாத மட்டிகளையும் தவிர எல்லா இந்தியரும் அரசியல் பேசுகிறார்கள் - அதில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

''தாமோதரன் ஒரு பிரபலமான வக்கீல். அவனைப் போல அறிவாளிகள் வாயை மூடிக்கொண்டு இருந்தால் சமூகம் சிரிக்கும். அவன் அழுத்தப்பட்ட மக்களின் உரிமைக்குக் குரல் கொடுக்கிறான். அது தப்புனு சி.ஐ.டி. ரகுநந்தன் வந்து உங்கண்ணனை மிரட்டியிருக்கிறான். உங்க அண்ணன் சுத்தக் கோழை, திருப்பிக் கேட்கிறதுக்கு என்ன?

''ஒரு அரசியல்வாதியை ஒரு பெண் காதலிப்பதில் தப்பு என்ன? ஒரு திருடனையும்-கொலையாளியையும் கூடக் காதலிச்சு அந்தக் கல்யாணங்கள் ஜெயிலில் நடந்திருக் கின்றனவே. அப்படியிருக்கும்போது-தாமோதரன் மேல் இன்னும் அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கா திருக்கும்போது அவன் ஒரு சுதந்திர மனிதன்- அவனை ஒரு பெண் காதலிப்பதோ சிநேகமாக அவனுடன் சேர்ந்து காணப்படுவதோ என்ன தவறுன்னு கேட்கிறதுக்கு என்ன?

''சே! இந்த ரகுநந்தன் போன்ற இந்தியர்கள் சுத்த சுய நலப்புலிகள். தங்கள் பதவி உயர, நல்லவர்களை-சமூகத்துக்குப் பாடுபடுகிறவர்களை- நியாயமான உரிமைகளைப் பற்றிப் பேசுகிறவர்களை பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டி அரசுக்குக் காட்டிக் கொடுக்கும் அயோக்கியப் பதர்கள்-'' படபடவென்று பேசினார்.

''காவேரி, கவலைப்படாதே. நீ எங்களோட இங்கே இருக்கிறவரை ஒரு கஷ்டமும் நேராது. நான் இருக்கேன்'' என்றார்.

''தாங்க்யூ அங்கிள்'' என்று காவேரி மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

அவளை உற்சாகப்படுத்தக் கந்தசாமி மேலே பேசினார்.

''இந்த மீனாட்சி ஆண்ட்டி இப்படிப் பூனைபோல இருக்காங்களே, இவங்க சங்கதி உனக்குத் தெரியுமா?'' உற்சாகமான குரலில் சிரித்தார்.

மெல்லிய புன்னகை அரும்பக் காவேரி தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தாள்.

''இந்த ஆண்ட்டியும் கேப் மாநிலத்தைச் சேர்ந்தவங்க! ஒரு சமயட் என் வியாபார விஷயமா நான் அங்கே போயிருந்தேன். மீனாட்சியின் அண்ணன் சாப்பிடக் கூப்பிட்டிருந்தார். மீனாட்சிதான் பரிமாறினாள். கண்களால் அப்படியே காதலையும் பரிமாறிவிட்டாள்.''

''ஐயோ! நீங்க ஒண்ணு?'' வெட்கத்துடன் மீனாட்சியம்மாள் தன் காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

''அதற்குப் பிறகு நான் அடிக்கடி கேப் மாநிலத்துக்குப் போகத் தொடங்கினேன். ஒரு முறை இவள் என்ன சொன்னாள் தெரியுமா? கேப் மாநிலத்துக் கார்களுக்கு சி.ஏ. என்று ஆரம்பித்து ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் போட்டிருக்கும். தங்கள் வீட்டுக் காரின் நம்பர் பிளேட்டைக் காட்டி 'பாருங்க, எங்க கார்கூட என்ன சொல்லுது, தெரியுமா? கம் எகெய்ன்-மறுபடி வாங்கன்னு சொல்லுது என்றாள். குறும்புத்தனமாக. நம்ப நேட்டால் மாநிலத்துக் கார்களின் நம்பர் பிளேட்டுகள் என்.டி. என்று ஆரம்பித்திருக்குமில்லையா? நான் உடனே என் காரின் நம்பர் பிளேட்டைக் காண்பித்து, 'மீனாட்சி என்னைக் கட்டிக்கிறதா இருந்தா வரேன். இல்லாட்டா என் கார் நத்திங்க் டூயிங் என்று மறுக்கிறது' என்றேன். அப்போ இவளைப் பார்க்கணுமே. அப்படித்தான் நான் என் அன்பை இவளிடம் தெரிவிச்சேன். அதனால நீ வெட்கப்படவேண்டாம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

''நாட்டி மேன்!'' கொஞ்சலாகக் கணவனைக் கடிந்து கொண்ட மீனாட்சியும் சிரித்தாள். காவேரி எல்லா வேதனைகளையும் மறந்து சிரித்தாள்.

16

சில நாட்கள் வேலைக்குப் போகாது காவேரி விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தாள். தெருவே கூடி வேடிக்கை பார்த்த அந்த நிகழ்ச்சி விரைவில் பல உருவில் ஊர் முழுவதும் பரவிவிட்டிருக்கும். அவள் வேலை பார்க்குமிடத்தில் உள்ள மற்ற நர்ஸ்களும் தெரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களை உடனடியாக எப்படிப் பார்ப்பது என்ற வெட்கம் அவளுக்கு.

கூடப்பிறந்த அண்ணன்-அண்ணி, தங்கள் வீடு என்று எல்லாமிருந்தும் எதிர் வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஜன்னல் திரையை விலக்கித் தன் வீட்டவர்களைப் பார்த்துத் துயரப் பெருமூச்செறிந்து தன்னுள்ளேயே அழுது துவண்டு கொண்டிருந்தாள்.

அவளை ஒரேயடியாக மறந்து விட்டவன் போல அண்ணன் லோகேந்திரன் வேலைக்குப் போகும்போதோ-வேலையினின்று வரும்போதோ எதிர் வீட்டுப் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மறுத்தான்.

யசோதா வேண்டுமென்றே ஓங்கிய குரலில் அவள் காதுகளில் கேட்க வேண்டுமென்று வாயில் கேட்டருகே வந்து நின்றுகொண்டு தெருக்கோடியிலிருந்த வம்புக்கார பாட்டியிடம் தன் நாத்தியைப்பற்றி மிகவும் மட்டமாகப் பேசிக்கொண்டிருந்தாள். தாம் கட்டிக்கொண்டிருந்ததொரு ஃபிளாட்டை மேற்பார்வையிட கந்தசாமி வெளியே

போய்விட்டார்; அவர் மனைவி மார்க்கெட்டுக்குப் போயிருக்கிறாள்; வீட்டு முன்னறையில் காவேரி மட்டுமே உட்கார்ந்திருக்கிறாள் என்று தெரிந்து கொண்ட துணிச்சலில் குழப்பம் நடந்த அன்று அவளை ஏசமுடியாது போன குறையைத் தீர்த்துக்கொள்கிறவள் போல, யசோதா தெரு முழுவதும் கேட்கும் குரலில் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''ஆண்டாள் பாட்டி, உங்களுக்குத் தெரியும். பெரிய அண்ணன்-அண்ணி போன பிறகு இவளை நாங்க எங்க கண்கள் போலக் கவனிச்சுக்கிட்டோம். கொஞ்சமும் மட்டு மரியாதை இல்லாம எதிர் வீட்டுக்காரங்களோட கூடிக்கிட்டு எங்களை இளப்பம் பண்ணிட்டாளே!''

''ஆமாம்...முந்தாநேத்து ஒரே கலாட்டாவா இருந்திச்சு. அப்படிக் காவேரி என்ன தப்புதான் செஞ்சான்னு யாருக்கும் விளங்கலையே.'' பாட்டி ஆவலுடன் விவரத்தைக் கேட்டாள்.

கந்தசாமி வீட்டு முன்னறையில் ஜன்னல் ஓரத்திலிருந்த சோபாமீது அமர்ந்து கொண்டிருந்த காவேரியின் காதுகளில் அவர்கள் பேசுவது துல்லியமாகக் கேட்டது.

சி.ஐ.டி. ரகுநந்தன் தன் கடைக்கு வந்து விசாரித்த கதையைப் பற்றி யாரிடமும் சொல்லக்கூடாது-நமக்கே அது ஆபத்து என்று லோகேந்திரன் முன்னதாகவே எச்சரித்து விட்டிருந்தான். யசோதா அதனால் கதையையே மாற்றி விட்டாள்.

''முன்னே மோகன் என்கிற வாத்யாரைக் காதலிச்சு-கல்யாணம் வரை வந்து அவனுக்கு இவ நடவடிக்கை மேலே சந்தேகம் வந்து திடீர்னு கல்யாணத்தை நிறுத்தப் போக... ஊரே கொல்லுனு போச்சு. அந்த அவமானம் ஒண்ணு

எங்களுக்குப் போதாதா? இவளை ஊறுகாய் போடவா நாங்க வீட்டிலே எங்களோட வச்சுக்கிட்டிருக்கோம். ஒரு நல்ல இடம் திகைஞ்சா கட்டிக் கொடுத்துக் கைகழுவிட மாட்டோமா?''

''இப்போ நீங்க ரெண்டு பேருந்தானே அவளுக்குக் கர்பந்து பண்றீங்க. ஒங்க பேச்சைக் கேட்கிறதுதானே நியாயம்.'' பாட்டி ஒத்துப் பாடினாள்.

''இந்தப் பொண்ணு கல்யாணத்துக்கு அவசரப்படறா. அண்ணி செத்து இன்னும் ஒரு வருஷமாகலை...''

''இன்னும் மூணு மாசம் பொறுத்துக்கச் சொல்லு.''

'எவனோ ஒரு காவாலிப் பயலோட ஊரைச் சுத்தத் தொடங்கிட்டா. இவனும் கல்யாணம் வரை வந்து திடீர்னு கைவிட்டா அவமானம் யாருக்கு, சொல்லுங்க பாட்டி..''

''உன்னை நான் குத்தம் சொல்லமாட்டேன் யசோதா, நீ தங்கமான பொண்ணு. காவேரி நர்ஸ் வேலை பண்றோம்னு ரொம்பவே திமிர் பிடிச்சு அலையறா.''

''நான் புத்தி சொல்லப் போக என்னைக் கன்னாபின்னான்னு திட்டினா. ஆம்பிள்ளை அவருக்கு ரோஷமிருக்காதா. கோபமா அடிக்கக் கை ஓங்கினார். அவ்வளவுதான். அடிச்சுட்டாப்பல அலறி ஊரைக்கூட்டி, கந்தசாமியைச் சிபாரிசுக்கு அழைச்சு எங்களை ரொம்ப எளப்பம் பண்ணிட்டா...''

''இந்தப் பொண்ணு நர்ஸ் வேலை செய்யறாளா... கண்டவனைக் காதலிக்கிற வேலை செய்யறாளா?...''

பாட்டி கடகடவென்று சிரிக்க, யசோதாவும் கூடச் சேர்ந்து சிரித்தது கேட்டுக் காவேரி அவமானத்திலும் ஆத்திரத்திலும் துடித்தாள்.

''காவேரி இப்படி அடங்காப்பிடாரியாப் போனதுக்கு, செத்துப் போனாளே உன் ஓரகத்தி சவுந்தரி, அவதான் காரணம். அவ இந்தியாவிலே பிறந்தவ. நம்பளையெல்லாம் விட ரொம்பப் படிச்சவன்னு திமிர்படிச்சவ.'' பாட்டி கோபமாகப் பேசினாள்.

''நூறு தடவை சொல்லுங்க. அந்த இந்தியக்காரி குடுத்த எடம் என் நாத்தி இப்படித் தறுதலையாப் போயிட்டா. தனக்கு எல்லாம் தெரியும்-தானும் படிச்சவ-நல்லாத் தமிழ் வாசிக்க எழுதத் தெரியும்-பாடத் தெரியும்னு ரொம்பக் கர்வம். போறாததுக்குக் கொஞ்சம் சிவந்த தோலா... கேட்கணுமா... கண்ட பயல்களுக்கு வலை போட்டுக்கிட்டு... ரொம்ப அசிங்கமாயிட்டது பாட்டி. நீங்க தான் பெரியவங்க... அவளுக்கு ரெண்டு வார்த்தை புத்தி சொல்லணும்.''

''ஐயோ! நான் வாயைத் திறந்தா அவள் என் பல்லைத் தட்டிக் கையில் தந்திடுவா. இது உங்க வீட்டுச் சங்கதி. இதில் நாங்க தலையிட முடியுமோ?'' வயிறு முட்டும்வரை வம்பை விசாரித்துக் கொண்டு ஆண்டாள் பாட்டி மெல்ல நகர்ந்தாள்.

கண்கள் கலங்க-முகம் சிவக்க-நெஞ்சு துடிக்கக் காதுகளைப் பொத்திக்கொண்டு அவமானத்தில் குறுகிப் போய்க் காவேரி வெகுநேரம் முன்னறையில் உட்கார்ந்திருந்தாள்.

மோகன் அவளை உதறிய சங்கதி ஊரே பரவினபோது கொஞ்ச நாட்கள் அவள் நிம்மதியாகவே எங்கும் போக முடியவில்லை. இப்போது யசோதாவும்-ஆண்டாள் பாட்டியும் கட்டிவிடப் போகும் கதைகளால்...ஐயோ...! அவள் தன்னந்தனியே பழியைச் சுமந்துகொண்டு எப்படி வாழப் போகிறாள்...

அன்று மாலையே அவள் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

அவளுடன் வேலை செய்த நர்ஸ் ஜகதா ஒரு இளம் விதவை. வெஸ்ட்வெல் பகுதியிலிருந்த ஒரு பெரிய வீட்டின் அவுட் ஹவுஸில் தன் தாயுடன் அவள் குடியிருந்தாள். வாடகையைச் சமாளிக்க அவள் ஒரு போர்டரைத்தேடிக் கொண்டிருந்தாள். அவள் சம்மதித்தால்.... அவள் ஏன் ஜகதாவுடன் போர்டிங் அண்ட் லாட்ஜிங் செய்துகொண்டு அதற்குத் தேவையான தொகையைக் கொடுத்துவிடக் கூடாது? உடனடியாக டெலிபோனில் ஜகதாவை அழைத்தாள். அப்போது தலைமை அலுவலக அறையில் மற்ற நர்ஸ்கள் இருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டதும் படபடவென்று காவேரி தன் எண்ணத்தைச் சொன்னாள். ஜகதாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தன்னையொத்த ஒரு நர்ஸ் கூடத் துணைக்கு இருந்தால் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும் என்பதுடன் வாடகை பற்றிய சிரமமும் குறையும்.

''ஓ.கே. நாளைக்கே நீ வந்துடலாம். நான் வேலை முடிந்ததும் கவர்மெண்ட் காரில் உன் வீட்டு வழியாகத் தான் போவேன். உன்னையும் சாமான்களையும் ஏற்றிக் கொண்டு போய்விடுகிறேன். பயப்படாதே'' அபயம் கொடுத்தாள்.

கந்தசாமி எத்தனையோ சொல்லியும் காவேரி மறுத்து விட்டாள். எதிர்வீட்டிலேயே தங்கிக்கொண்டு தொடர்ந்து அண்ணனை அவள் அவமானப்படுத்த விரும்பவில்லை. இதுவரை அவர்செய்த உதவிகளுக்கு நன்றி. இனி அவள் தன் பிரச்சனைகளைத் தானே தீவிரமாகச் சிந்தித்து முடிவு எடுக்க முயலப் போகிறாள்.

ஜகதா வீட்டில் குடியேறிய மறுநாளே அவள் வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டாள். வேலை செய்த இடத்திலிருந்த மற்ற நர்ஸ்கள் தங்களுக்குள் ஏதோ கிசு

கிசுகிசுத்துக் கொண்டனர். யாரும் துணிவாக என்ன நடந்தது-ஏன் வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டாள் என்று கேட்கவில்லை.

வாரங்கள் இரண்டுக்குமேல் ஆகியும்-அவள் வீட்டில் நடந்த குழப்பம் ஊரே பரவி விட்டிருந்த போதிலும்-தாமோதரனிடமிருந்து தொலைபேசி மூலம் கூட ஒரு ஆறுதல் வார்த்தை-ஒரு விசாரிப்பு-ஏதும் வராதது அவளுக்கு மிக்க வியப்பாக இருந்தது-வருத்தமாகவும் இருந்தது.

பலவிதமான சந்தேகங்களில் மனம் அலைபாய, துயரத்தில் நெஞ்சு கனக்க அவள் தொடர்ந்து தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தபோது ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகல்-அவர்கள் அனைவரும் தலைமை அலுவலகத்தில் கூடியிருந்த சமயம், நர்ஸ்களின் தலைவி அந்தச் சிடுசிடுப்புக்காரி அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

''என் அறையில் சி.ஐ.டி. ரகுநந்தன் வந்து உட்கார்ந்திருக்கிறார். உன்னிடம் என்னவோ பேசணுமாம்.'' அடிக்குரலில் அவளிடம் கூறிவிட்டு அவளைக் கடுமையாக விழித்தாள்.

காவேரி திடுக்கிட்டுப் போனாள். அவளைத் தேடிக் கொண்டு சி.ஐ.டி. இப்போது அவளது அலுவலகத்திற்கே வந்துவிட்டாரா?..

துணிவு எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு தலையை நிமிர்த்தியபடி அவர் எதிரே வந்து உட்கார்ந்தாள்.

கதவைச் சாத்திவிட்டு ரகுநந்தன் அருகிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார். தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

''சில தினங்களுக்கு முன்னர் நீங்கள் வக்கில் தாமோதரன் வீட்டில் ஒரு நாள் மாலை காணப்பட்டதாகத் தகவல் கிடைத்தது. எங்கள் ஆள் ஒருவர் சதா தாமோதரனைக்

கண்காணித்துக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்...''

நெஞ்சு படபடவென்று துடிக்க பயத்திலே ஒரு கணம் அவள் உறைந்து போனாள். சட்டென சமாளித்தாள்.

''உண்மை. அவர் வீட்டிலிருந்தேன். அவர் என் ஃபியான்ஸி. சாப்பிட என்னை வீட்டுக்கு அழைத்தார். போனேன்...''

''அப்போ அங்கே மல்ட்டி ரேஷியல் கூட்டம் ஒன்று நடக்கத் தயாராகியிருந்தது தெரியுமா?''

''தெரியாது. நான் விரைவாக எங்கள் வீட்டுக்குத் திரும்பிவிட்டேன். என்ன நடந்தது என்பதை நான் பார்க்கவில்லை...''

''மிஸ் காவேரி, நீங்களும் என்னைப் போல் ஒரு இந்தியர். அந்த வரையில் பரிதாபப்பட்டுக் கொண்டு சொல்கிறேன். அரசாங்க வேலையில் நீங்க இருக்கிறீங்க. அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறவங்களோட தொடர்பு வச்சுக்கிறது நல்லதில்லை.''

''அவரை நான் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்வதுகூடத் தவறா? தூக்குத் தண்டனையடைந்த கைதிகளுக்கு, அவர்களது காதலிகளின் விருப்பத்தை மீற மனமின்றி அரசு சிறையிலேயே கல்யாணம் செய்து வைத்து விட்டு, பிறகு கைதிக்குத் தண்டனை நிறைவேற்றுகிறார்கள். அப்படி சில கேஸ்கள் நம் நாட்டில் நடந்திருக்கிறதல்லவா?''

''உங்கள் வாழ்க்கை சுகமாக இருக்காது. கூடிய சீக்கிரம் அவர் தம்மைச் சுற்றி அரசு விரித்திருக்கும் வலைக்குள் மாட்டிக் கொள்ளப் போகிறார்.''

நெஞ்சில் திக்கென்ற உணர்வில் ஒரு கணம் அவள் தவித்துப் போனாள். ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாது சாமர்த்தியமாகப் பேசினாள்.

''நீங்களும் ஒரு இந்தியர் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். இந்தியர்களுக்கு விதி என்பதில் தீவிரமாக நம்பிக்கை உண்டு. என் தலைவிதி அப்படி இருந்தால் அதை நீங்களோ வேறு யாரோ மாற்ற முடியாதே'' மெலிதாக முறுவலித்தாள்.

ரகுநந்தன் முகம் கோபத்தில் லேசாகச் சிவந்தது. கண்களில் கடுமையும் குரலில் கண்டிப்பும் கூடின.

''நான் சொல்றதைச் சொல்லிட்டேன். பின்னால் ஏதாவது கஷ்டம் நேர்ந்தால் என்னை நொந்துக்கிறதில் பலன் இல்லை.'' அடிக்குரலில் சீறினார்.

''நீங்க வீணாக என்னை மிரட்டுவதிலும் பயன் இல்லை. நான் நல்லதொரு குடிமகளாக வாழ்த்து கொண்டிருக்கேன். எந்தவிதமான தவறுகளும் வேலையில் செய்வதில்லை. தாமோதரனை நான் காதலிப்பது ஒரு குற்றம் என்று கருதவில்லை. ஒருவரை விரும்புவதோ-வெறுப்பதோ என்னுடைய பிறப்பு உரிமை. மேலும் இன்றுவரை தாமோதரன் எங்கள் எல்லோரையும் போல ஒரு சுதந்திர மனிதனாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் ஒரு குற்றவாளி என்று அரசு அவர் மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததில்லை. அதனால் நான் ஏன் வீணாகப் பயப்படவேணும்?''

ரகுநந்தன் அவளை எரித்து விடுவதைப் போலப் பார்த்தார். ''நமக்கு வேண்டியவங்க வீட்டுப் பெண் என்கிற கருணையாலே உங்ககிட்டே இவ்வளவு நேரம் பேசிப் புத்தி சொல்ல முயன்றேன். பிடிவாதமா இருந்தா பின்னால் ரொம்ப வருத்தப்பட நேரும்...'' சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினார்.

''சி.ஐ.டி. வந்து போனாரே! என்ன சங்கதி?'' மற்ற நர்ஸ்களின் தலை ஆவலில் வெடித்தது.

காவேரி மௌனமானாள். ஆனால் உள்ளூர ஒரு பயங்கரக் கலக்கம்.

சி.ஐ.டி. ரகுநந்தனுக்கு ஒரு பழிவாங்கும் குணமுண்டு என்பது பிரசித்தம். அவரது கண்டுபிடிப்பால் அரசின் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டு சில இந்தியர்கள் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அவரது கோபத்தைத் தூண்டிவிட்டது தவறு. தாமோதரனை அவள் எச்சரிக்க வேண்டும். ஆலோசனை கேட்க வேண்டும். எல்லாவற்றையும் விட அவரைப் பார்த்து நடந்ததைச் சொல்லி ஆறுதல் பெற வேண்டும். அவரைப் பார்த்து எத்தனை நாளாகின்றன...!

தொலைபேசியில் ஆவலுடன் அவனது அலுவலகத்திற்கு உடனடியாகத் தொடர்பு கொண்டாள்.

அந்த ரிஸப்ஷனிஸ்ட்தான் பேசினாள். ''மிஸ்டர் தாமோதரன் மேல் தேசத்திற்குப் போயிருக்கிறார். பிரிட்டோரியாவிலிருந்து திரும்ப இரண்டு வாரமாகுமே. வேலை விஷயமாகத்தான் போயிருக்கிறார். உங்களுக்கு முக்கியமான காரியம் ஏதாவது இருந்தால் ஜூனியர்கிட்டே பேசிக்கலாம்.'' தேனாக ஒலித்தாள்.

''இல்லை, அவரிடமே நான் நேரிடையாகப் பேச வேண்டியிருக்கு, ஒரு முக்கிய விஷயம்.'' போனை வைத்து விட்டாள்.

★ ★ ★

இரண்டு வார காலம் இரண்டாயிரம் ஆண்டுகள் போல நீண்டு கனத்தது அவளுக்கு.

ஒரு சனிக்கிழமை-மாலை-தானே வலிய தெருவிலிருந்த பொதுத் தொலைபேசியிலிருந்து தாமோதரனை அழைத்தாள்.

சனிக்கிழமை மாலை வேளையில் சாப்பாட்டுக்குப் பின் ஓய்வாக அவன் வீட்டில்தான் இருப்பான் என்ற நம்பிக்கை யினால் அழைத்தாள்.

மறுபக்கம் ஒலித்த பெண் குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது. அந்த முல்லைச் சிரிப்பழகி ரிஸப்ஷனிஸ்ட்டின் குரல்! சனிக்கிழமை மாலை வேளையில் அவர் வீட்டில் அவளுக்கென்ன வேலை? ஆவேசமாகப் புரண்டெழுந்த பொறாமையில் நெஞ்சு துடிதுடிக்க... உடம்பு முழுவதும் வியர்வை கொப்பளிக்க-உணர்வுகளின் கொந்தளிப்பு மூச்சை அடைக்க தாடையை இறுக்கிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

''மிஸ்டர் தாமோதரனிடம் பேசவேண்டும். தயவுசெய்து கூப்பிட முடியுமா?''

''அவர் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சில நண்பர்களுடன் முன்னறையில் பேசிக்கொண்டிருக்கிறார். நான் போய்க் குறுக்கிட்டு எதுவும் சொல்ல முடியாது. நீங்கள் யார், என்ன வேண்டுமென்று சொன்னால்...''

காவேரிக்குத் துக்கமும், ஆத்திரமும் நெஞ்சை அடைத்தன. ''நான் அவரது கட்சிக்காரர்களில் ஒருத்தி. நீங்க யார்னு சொன்னால் பிறகு சொல்கிறேன்.''

''நான் அவருடைய ரிஸப்ஷனிஸ்ட், பர்சனல் செக்ரட்டரி...''

''தாங்க்யூ! அலுவலகத்தில் நேரடியாக அவரை வந்து பார்த்துப் பேசிக்கொள்கிறேன்...'' சட்டென்று போனை வைத்தாள்.

17

மழைக் காலம் விட்டு இப்போது கோடை லேசாகத் துவங்க ஆரம்பித்துவிட்டிருந்தது. அந்தி மயக்கும் வேளையில்

கூடச் சூரியன் பளிச்சென்று வீசிக்கொண்டிருந்தது. ஆனாலும் காவேரிக்குத் தன் எதிர் காலம் ஒரே இருட்டாக இருந்தது போன்றதொரு பிரமிப்பும் துயரமும் ஏற்பட்டன.

தாமோதரன் வெளியூரிலிருந்து திரும்பிவிட்டிருக்கிறார். அவளைத் தொடர்பு கொள்ள முயலவில்லை. அப்படியென்றால் அவளை அவர் நேசிக்கவில்லை. இரண்டு பொருள்படப் பேசியதெல்லாம் வெறும் பசப்பா? அண்ணன் பெண் கொடுக்க மறுத்து அவமானம் செய்ததற்கு பிரதியாக அவள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் தான் இந்த அன்பு நடிப்பா? மோகன் கூட ஆரம்பத்தில் எப்படிப் பேசினான்? வைரத்தில் உனக்கு நிச்சயதார்த்த மோதிரம் வாங்கித்தர பிரியப்படுகிறேன். என் காதல் வைரத்தைப் போல அத்தனை உறுதியானது-ஒளிமிகுந்தது. பசப்பாகத்தான் பேசினான். பின்னர் கண்ணாம்புக்கல்லாக சிதறி உடைந்துபோன காதல் அது.

தாமோதரன் சென்னாரே! என் மனம் இந்த வெள்ளை ரோஜா போல களங்கம் இல்லாதது... பெண்களை தங்கள் வசம் கவர உபயோகிக்கும் பசப்பு வார்த்தைகள் என்பதில் என்ன சந்தேகம். மயக்க மயக்கப் பேசி... பின்னர் கண்ணீர் விட்டு கதறி அழக் கைவிட்டுவிடும் துரோகச் செயல் காலந் தொட்டு ஆண்குலத்திற்கு கைவந்ததொரு கலைபோலும்.

ஊகும் அவள் ஒரு முறை தீயோடு விளையாடி கையைசுட்டுக்கொண்டுவிட்டவள். இன்னொரு முறை ஏமாந்து மனம் ஒடிந்துபோக அவளால் முடியாது. தாமோதரன் அவள் ஒருத்தியை மட்டும் விரும்பவில்லை என்பது இப்போது திட்டவட்டமாக புரிந்துவிட்டது. அந்த ரிஸப்ஷனிஸ்ட் அவருடைய கேர்ல் ஃபிரண்ட்.

மறுபடியும் காதல் என்று எண்ணி அவள் ஏமாந்து விட்டது பிசகு. இதை மேலே தொடரவிடாது தடுக்க ஒரு வழியிருக்கு. அவளுக்கு வேலை செய்யுமிடத்தில் சம்பளத்துடன் ஆறுமாத லீவு அப்படியே காத்திருக்கிறது. பலு

ஆண்டுகாலமாக விடுப்பு நாட்களை வங்கியில் பணம் சேர்ப்பது போல சேர்த்துவைத்திருந்தது நல்லதாகப் போயிற்று. உள்ள பணத்திற்கு ஒரு விமான டிக்கெட் எடுத்து மீதத்தை கையில் எடுத்துக்கொண்டு இந்தியாவுக்கு பறந்து விட வேண்டும்.

அண்ணி சவுந்தரி கூறியிருக்கிறார்களே, அங்கே பல ஆசிரமங்கள், மடங்கள், கோவில்கள் இருக்கின்றன என்று. ஏதாவது ஒரு ஆசிரமத்தில் சேர்ந்து அங்கேயே தங்கிவிட்டால்... கையில் வேலை இருக்கும்போது வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன். அந்த வாரமே அவள் சட்டென்று இந்தியாவுக்குக் கிளம்ப வேண்டும். யாரிடமும் மூச்சிவிடாது-ரகசியமாகப் பறந்து போய்விட வேண்டும். தீவிரமானதொரு முடிவு எடுத்துவிட்டாள்.

★ ★ ★

காவேரி அதற்குப் பின்னர் மிகவும் துரிதமாகச் செயல்பட்டாள். தலைமை அலுவலகத்தில் வெளியூர் பயணம் செய்யத் தனக்கு ஆறு மாத லீவு தேவை என்று விண்ணப்பித்துக் கொண்டாள்.

அண்ணன் இறந்த பின்னர் காதல் தோல்வியில் மனம் இடிந்து போன சமயம் வெளிநாட்டுக்குப் போக எடுத்த பாஸ்போர்ட் இப்போது கைகொடுத்தது. இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு அது செல்லுபடியாகும் என்பதை உணர்ந்தவுடன் சீக்கிரம் பயணப்பட ஆயத்தங்கள் செய்யலானாள். பைன்-ஸ்ரீட்டிலிருந்த இப்ரஹீம் பிரதர்ஸ் எனும் டிராவல் ஏஜன்சியிடம் தன் பாஸ்போர்ட்டைத் தந்து இந்தியாவுக்குப் பயணப்பட விரைவாக ஒரு விமான டிக்கெட் சென்னைவரை தேவைப்படுகிறது என்றாள்.

வேறு அவளுக்குத் தெரிந்த சில ஏஜென்ஸிகளிடம் டிக்கெட் எடுக்க ஏற்பாடு செய்தால் அந்தச் சங்கதி ஊர் முழுவதும் விரைவில் பரவிவிடும். என்ன காவேரி, இந்தியாவுக்குப் போகிறாயாமே? ஏதாச்சும் வேண்டு தலையா? இல்லை சும்மா ஊரைப் பார்த்துவிட்டு வரக் கிளம்புறியா? தனியே போறியா... கூட யாராவது..? என்று எதிர்ப்பட்டவர்கள் எல்லாம் விசாரிக்கத் தொடங்கி விடுவார்கள். சங்கதி விரைவில் அண்ணன் காதில் விழுந்துவிடும். அதை விட வேகமாகத் தாமோதரனுக்கு விஷயம் தெரிந்துவிடும். யாரிடமும் மூச்சு விடாது டிக்கெட் கிடைத்ததும் சட்டென்று புறப்பட்டு விட வேண்டும்.

இப்ரஹீம் பிரதர்ஸ் அந்த விஷயத்தில் கண்ணியமான வியாபாரிகள். டாக்டர் ஒருவர் தன் நோயாளிக்கு வந்துள்ள நோயை மற்றவரிடம் சொல்வது தவறு என்று கட்டுப்பாடாக இருப்பதுபோல, தன்னிடம் டிக்கெட்டிற்கு யார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்-எந்த ஊருக்குப் போகப் போகிறார்கள் என்ற விவரத்தை அவர்கள் யாருக்கும் தெரிவிக்காது மிகவும் ரகசியமாகவே வைத்திருப்பது வழக்கம். அவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வியாபாரம் தேவை; வெட்டிக் கதைகள் அல்ல என்ற கொள்கை.

சவுந்தரி அண்ணி விட்டுப்போன சொத்தான ஒரு டைரியில் திருச்சியைச் சேர்ந்த அவர்களது கிராமத்து வீட்டின் முகவரியும் இன்னும் சில தகவல்களும் கிடைத்தன. முன்பின் அவள் தனியாக விமானப் பயணம் செய்ததில்லை. அண்ணன் குடும்பத்துடன் காரில் பலமுறை கேப், டிரான்ஸ்வால் முதலிய மற்ற மாநிலங்களுக்குச் சுற்றுலாப் பயணம் போயிருக்கிறாள். ஒரு முறையாவது இங்கிலாந்து போய்வர வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அப்போது வீட்டின் நிலைமை வெளி நாட்டுப்பயணத்திற்கு உகந்ததாக இருக்கவில்லை. வேலை செய்த இடத்திலும் சட்டென்று லீவு கிடைக்கும் வகையாக இருக்கவில்லை. ஆனால் இப்போது சுலபமாகக் கிடைத்து

விட்டது. தேவைப்பட்டவுடன் அவள் எடுத்துக் கொள்ளலாம் என்று மேலதிகாரியிடமிருந்து உத்தரவு வந்துவிட்டது.

இந்தியாவைப் பற்றி அவளுக்குச் சவுந்தரி ஓரளவு சொல்லியிருக்கிறாள். ஆனாலும் அவள் போய் வந்துபல ஆண்டுகளாகிவிட்டிருந்தன. அதற்குப்பின் தாய் நாட்டைப் பார்க்க வாய்ப்பின்றி அண்ணி போய்விட்டாள். இந்தியாவி லிருந்து வரும் பத்திரிகைகளைப் படிக்கும் போது, பல விஷயங்களில் அந்த நாடு மாறிவிட்டதை அறிந்து கொண்டிருந்தாள். ஆனாலும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவா.

சமீபத்தில் இந்தியாவுக்குப் பயணம் செய்துவிட்டுத் திரும்பிய கோவில் திருக்கூட்டத்தைச் சேர்ந்த சற்குணத்தைக் கேட்டால்?...

அவளும் சாட்ஸ்வொர்த் எனும் பகுதியில் வேறு ஒரு யூனிட்டில் வசித்துக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

அடுத்த நாள் மாலை வேலைக்குப்பின் சற்குணத்தைத் தேடி அவள் வீட்டுக்குப் போனாள்.

டிசம்பர் மாதத்தின்போது இந்தியாவுக்கு வந்து விட்டுப்போனவள் அவள்.

''இந்தியாக்காரங்க எப்படிப் பாடறாங்க தெரியுமா? ஒருத்தரே ஒரு மேடையில் மூணு நாலு மணி நேரம் பாடறாங்க. அத்தனை ஜனங்களும் ஆடாம அசையாம கேட்டுக் கொண்டிருக்காங்க. நம்ம ஊர்ல ஒரு பாட்டு பாடினதும் மைக் முன்னே அடுத்த ஆசாமி வந்து பாடினால்தான் நாம் பொறுப்போம்! இல்லாட்டா சலிக்கக்குவோம். ஒரு கச்சேரியில் போய் உக்கார்ந்துட்டேன்-

என் கழுத்தே வலிச்சுப் போச்சு. அப்பப்பா... அங்கே சின்னப் பொண்ணுகள் எல்லாம் எப்படி பரத நாட்டியம் ஆடறாங்க தெரியுமா?...''

வாய் அலுக்காது பேச ஆரம்பித்து விட்டாள் சற்குணம்.

காவேரி பொறுமையுடன் அவள் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த காசிப் பட்டுப் புடவைகள், தலையாட்டும் டான்ஸ் பொம்மைகள், சவுரிகள், வளையல்கள், நடராஜர் சிலை, சந்தனவிசிறி இத்யாதிகளைப் பார்த்துப் பாராட்டினாள்.

சற்குணம் ஒரு பளபளா ஆசாமி என்று ஊரே பிரசித்தம். அவளிடம் விஷயத்தை அத்தனை சுலபமாக விரைவில் கேட்டறிந்துவிட முடியாது என்பதை அறிவாள். எரிச்சலை அடக்கிக்கொண்டு, 'அப்படியா? ஆகா...' என்று பதிலளித்த வண்ணம் காத்திருந்தாள்.

''கச்சேரி-டான்ஸ்-நாடகம் ஒண்ணையும் நான்விட்டு வைக்கலை. மனோகர் டிராமாவுக்குப் போனேன். அவர் என்னமா வேஷம் கட்டறார் தெரியுமா? இன்னொரு அதிசயம்-நம்ப சீர்காழியோட கச்சேரிக்குப் போயிருந்தேன். வெளியிலே வந்தப்போ அண்ணாசாலை கிட்ட நடிகர் நாகேஷ்-அவர் காரில் போவதைப் பார்த்தேன். நாகேஷ் அப்படியே அச்சடிச்சாப்ல சினிமாவுலே பார்க்கறாப் போலவே இருக்கார்...''

''அப்புறம் நீங்க கோயில், ஆசிரமம் இதுகள் எதையுமே பார்க்கலையா?'' பொறுமையை இழந்த காவேரி கேட்டாள்.

''என்ன கோயில்...என்ன கோயில்? எங்கே திரும்பினாலும் ஒரே கோயில் மயம். டூரிஸ்ட் கார் வச்சுக்கிட்டு தரூன் போனோம். கன்னியாகுமரிவரை போயிட்டுவந்தோம். வழியிலே தென்பட்ட கோயிலுக் கெல்லாம் போறதுன்னா நம்ம ஆயுசு பத்தாதுன்னு...

கோபுரம் கண்ணிலே பட்டதும் கையெடுத்துக் கும்பிட்டுக்கிட்டே வந்தேன். திடீர்னு கார் ஓட்டின டிரைவர் சிரிச்சார். ஏம்பா சிரிக்கிறேன்னுகேட்டேன். ''நீங்க இப்போ கையெடுத்துக் கும்பிட்டீங்களேயம்மா, அது ஒரு போலீஸ் ஸ்டேஷன்; தமிழக அரசின் சின்னம் கோபுரம்'' என்றான். கூட வந்தவங்க கொல்லுனு சிரிச்சுட்டாங்க. எனக்கு ரொம்ப வெட்கமாயிட்டது.''

காவேரிக்குச் சிரிப்புக்குப் பதில் எரிச்சல் வந்தது. ''ஏதாவது ஆசிரமத்திற்குப் போனீங்களா ஆண்டி?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''ஓ! போனோமே. நம்ம சோலையப்பன் தம்பி ஒரு அட்ரஸ் கொடுத்திருந்துச்சு-அந்த ஆசிரமத்துக்கு நாங்க எல்லோரும் கூட்டமா ஒரு நாள் போனோம். ஆசிரமம் பார்க்க நல்லா இருந்திச்சி. வெள்ளைக்காரங்க கூட அதிலே வந்து சேர்ந்திருந்தாங்க. எங்களையெல்லாம் ஆசிரம ஆட்கள் நல்லா கவனிச்சாங்க. சாப்பாடு போட்டாங்க. ஆனா எல்லாரும் தரையிலேதான் படுக்கணும். நாமெல்லாம் இங்கே சொகமா வாழ்ந்து பழக்கப்பட்டவங்க இல்லையா, ஒரே நாளில் எனக்கு முதுகுவலி வந்துடுச்சு. ஆசிரமத்திலிருந்தது போதும்னு கிளம்பிவிட்டோம்.'

''வேறு எதையும் பார்க்கலையா ஆண்டி?''

''பார்க்காம என்ன, இந்தியாவிலே பணக்காரங்க-வசதியா வாழறவங்க கொஞ்சம். ஆனால் ஏழைகள் ரொம்ப ஜாஸ்தி. வீடு வாசல் இல்லாம நடை பாதையிலே கூட மனுசங்க வாழறாங்கன்னா உனக்கு அதிசயமா இருக்கும். பழனி கோயிலைப் பார்த்துட்டு படியிறங்கி வந்தப்போ பிச்சைக்காரங்களைப் பார்த்தேன்- பாவமாக இருந்திச்சு. ஒரு பத்து ரூபாயை மாற்றி ஆளுக்குப் பத்து பைசான்னு தகரக்குவளையில் போட்டேன். ஆனாலும் ரொம்ப கருவம்

பிடிச்சவங்க, 'இந்தா உன் பணம்-இதுக்கு என்ன வாங்க முடியும்னு' சில பிச்சைக்காரங்க அந்தக் காசை என் மூஞ்சியிலே விசிறிப் போட்டுட்டானுங்க. அதுதான் எனக்குப் பிடிக்கலை.''

ஆசிரமத்தின் பேரையும் முகவரியையும், இன்னும் அவள் கொடுத்த சில இந்திய நண்பர்களின் முகவரியையும் கேட்டு வாங்கித் தன் டைரியில் குறித்துக் கொண்டாள்.

திடீரென்று சற்குணத்திற்கு நினைவு வந்தது.

''வனிதா அம்மாளை உனக்குத் தெரியுமில்லையா? கிளார் எஸ்டேட் பள்ளிக்கூடத்திலே வாத்தியார் வேலை பார்த்துக் கொண்டிருந்தாங்களே-புருஷன் செத்துப் போனதும் வீடு வாசலை வித்துட்டு தாய்நாட்டுக்குப் போயிட்டாங்களே-அவங்களை அடையாறில் நான் சந்திச்சேன். ஒரு சின்ன வீடு வாங்கி வச்சிகிட்டுத் தனியா ஒரு நாயோட அந்தம்மா வாழ்கிறாங்க. முன்னைவிட ரொம்ப வயதாகிப் போய் இளைச்சுப் போயிருக்காங்க. அவங்களோட போன் நம்பர்-அட்ரஸ் எல்லாம் எங்கிட்ட இருக்கு. ஆமாம் யாருக்காக நீ இதெல்லாம் விசாரிக்கிறே?''

''என்னோட வேலை பார்க்கிற ஒரு நர்ஸின் அம்மா இந்தியாவுக்குப் போகப் பிரியப்படறாங்க. நாலு இடத்து முகவரி வாங்கித்தா, முன்பின் அங்கே போனதில்லைன்னு என்கிட்டே கேட்டாங்க.''

''வயசானவங்களா? டிசம்பர் மாதத்துக்கப்புறம் போகச் சொல்லாதே. அந்த ஊர் வெயில் நம்ப உடம்புக்கு ஒத்துக் கவே ஒத்துக்காது. டிசம்பர் மாதம் புறப்பட்டா சங்கீதக் கச்சேரி, டிராமா பார்த்துட்டு, பொங்கல் கண் காட்சிகளைப் பார்த்துவிட்டு, ஏதாச்சும் வேண்டியதை வாங்கிட்டுத் திரும்பலாம்.''

''என் சிநேகிதியின் அம்மா திருப்பதிக்குப் போக வேண்டிக்கிட்டிருக்காங்க. அதனாலே எந்த மாசமா இருந்தா என்ன?''

''காவேரி மறக்காம அவங்ககிட்ட சொல்லு. திருப்பதியிலே எப்பவும் சாமி கும்பிட ஒரு பெரிய க்யூ நிற்கும். கொஞ்சம் பொறுமையா நின்னுதான் சாமி தரிசனம் செய்யணும். மறக்காம எனக்கு ஒரு லட்டு வாங்கிட்டு வரச்சொல். நான் கொண்டு வந்ததை கஸ்டம்ஸ்காரங்க பிட்டு கையை விட்டுத் துழாவி நாசப்படுத்திட்டாங்க. நீ கேட்டா சிரிப்பே. லட்டிலிருந்த பொடி கற்கண்டுகளை எடுத்து இதென்ன வைரமான்னு ஒரு ஆபீசர் கேட்டுட்டான். எனக்கு பொல்லாத கோபம் வந்திடுச்சு. ''தென் ஆப்பிரிக்காதான் வைரத்துக்கு பிரசித்தி பெற்ற நாடு. யாராச்சும் இந்தியாவிலிருந்து இங்கு வைரத்தை எடுத்திட்டுவர முயற்சிப்பாங்களா? ஆபீசர், உங்க கேள்வி எப்படியிருக்கு தெரியுமா? 'காரியிங் தி கோல்டு நியூ காசில்...' அப்படின்னு அடிச்சுப் பேசினேன். அசந்து போயிட்டான் மனுசன். மன்னிப்பு கேட்டுக்கிட்டான். தயவு செய்து சொல்லு. ஒரு லட்டு எடுத்து வரச் சொல். அதை கஸ்டம்சில் சாமி பிர்சாதம்னு சொல்லச் சொல், பிறகு பயந்துட்டு எவனும் தொடமாட்டான்...''

ஒரு வழியாக அந்தம்மாளிடமிருந்து கழற்றிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள் காவேரி. சற்குணம் தொடர்ந்து நிற்காது பளாபளா என்று பேசிய கதைகளால் அவள் காதுகள் புண்ணாகிப் போயிருந்தன. இப்படியும் வாய் ஓயாது ஒருத்தியால் பேச முடியுமா? நினைத்தாலும், தாடைகள் வலிக்கிறதே என்று தனக்குள்ளே எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

ஆப்பிரிக்காவிலிருந்து புறப்படுகிறவர்கள்...அங்கு போகிறவர்கள் எல்லோரும் எல்லோ ஃபீவர், காலரா, அம்மை முதலியவற்றிற்குத் தடுப்பு ஊசிகள் போட்டுக் கொண்டாக வேண்டும். மூன்று வாரத்திற்கு முன்னதாக இவைகளை எடுத்துக் கொண்டாக வேணும். அந்த விஷயம் இவளுக்கு மிகவும் சுலபமானதாக இருந்தது. அவளது தலைமை அலுவலக அறைக்குப் பக்கத்திலேயே

போர்ட்ஹெல்த் அலுவலகம் இருந்தது. யாரும் கவனிக்காத சமயம் அவள் அந்த அலுவலகத்திற்குள் சென்று அதில் வேலை பார்த்த வெள்ளைக்கார டாக்டரிடம் தேவையான தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொண்டு முத்திரை வைத்துக் கையெழுத்திட்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டாள்.

தாமோதரன் மேல் தேசத்திலிருந்து வருவதற்குள் அவள் புறப்பட்டு விடவேண்டுமென்றதொரு ஆவேசமான ஆத்திரம் அவளுக்கு. அவள் கேட்டுக் கொண்டபடியே இப்ரஹிம் பிரதர்ஸ் நிறுவனத்தார் டிக்கெட்டுகளை வாங்கித் தொலை பேசியில் அழைத்து அவைகளை நேரிடையே அவளிடம் கொடுத்து, அவள் புறப்பட வேண்டிய நேரம், பயணப்படப்போகும் விமானங்களின் எண், தங்கவேண்டிய ஹோட்டல்களின் விவரம் எல்லாவற்றையும் டைப் செய்து விவரமாகக் கொடுத்து விட்டார்கள்.

அடுத்ததாக அவள் தனது வங்கிக்குச் சென்று பாஸ்போர்ட், விமான டிக்கெட் இவைகளைக் காட்டி ஊருக்குப் பயணப்பட கைச்செலவுக்குத் தேவையான பணத்திற்குத் தன் இருப்பு முழுவதையும் எடுத்து ஆயிரத்து ஐநூறுராண்டுக்கு (15 ஆயிரம் ரூபாய்) டிராவலர்ஸ் செக் வாங்கிக் கொண்டாள்.

பின்னர் தன் பயணப் பெட்டியைத் தயார் செய்தாள். புதிதாக ஒரு மடிக்கும் குடை, தோள்பை, மழைக்கோட்டு, கம்பளிச் சட்டை முதலியவைகளைக் கடையில் வாங்கிக் கொண்டாள். அண்ணி சவுந்தரியின் பழைய பட்டுப்புடவை ரவிக்கைகளுடன் தனது புடவைகள் சிலவற்றையும் எடுத்துப்போட்டுக் கொண்டாள். பயணத்தில் கசங்காதிருக்க சில நைலான் புடவைகளைப் புதிதாக வாங்கினாள். உதவி செய்கிறவர்களுக்கு ஏதாவது பரிசு கொடுத்து நன்றியைத் தெரிவிக்க விரும்பி வாசனைச் சோப்புக் கட்டிகள், பவுடர் டின்கள், செண்டு பாட்டில்கள் சிலவற்றை வாங்கி

அடுக்கினாள். வழியில் தின்னக் கொஞ்சம் பிஸ்கட்டும், இரண்டு சாக்லேட் டின்களும் வாங்கிக் கொண்டாள். கொஞ்சம் கொஞ்சமாக எப்படியோ சாமான்களும் விமானப் பயணத்தில் அனுமதித்த எடைக்கு வந்து விடவே, மேலும் வாங்கிச் சேர்ப்பதை நிறுத்திக் கொண்டாள்.

ஜகதா ஒருத்தியிடந்தான் அவள் ஊருக்குப் போவதைப் பற்றிச் சொல்லியிருந்தாள். அவளது குடும்ப விவகாரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு மனம் குமைந்து போயிருந்த ஜகதா அதை யாரிடமும் சொல்லாது ரகசியமாக வைத்திருப்பதாக வாக்குக் கொடுத்திருந்தாள்.

18

காவேரி ஒரு செவ்வாய்க்கிழமை காலை எட்டரை மணிக்கு டர்பனிலிருந்து புறப்பட வேண்டியிருந்தது. அதற்கு முன்னதாகவே ஜகதா வேலைக்குக் கிளம்ப வேண்டியிருந்ததால் அடுத்த வீட்டு மனிதரிடம் பேசிக் காவேரியை விமான நிலையத்தில் விட்டு விடும்படி ஏற்பாடு செய்து விட்டிருந்தாள்.

''தாங்க்யூ அங்கிள்'' என்று அவருக்கு நன்றி கூறி விட்டுத் தோளில் பையும் ஒரு கைமடக்கில் கம்பளிச் சட்டை, மடக்குக்குடை, மழைக்கோட்டு முதலியவற்றுடன் இன்னொரு கையால் உருளை அமைத்திருந்த தனது பெட்டியை இழுத்துக் கொண்டு விமான நிலையத்தில் பயணிகள் புறப்படுமிடத்திற்குள் நுழைந்தபோது அவளுக்குக் கலவரத்திலே நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

அண்ணனுக்குத் தெரிந்தவர்கள் யாராவது அங்கு இருந்து தொலைக்கப் போகிறார்களே!

தாமோதரனின் நண்பர்கள் யாராவது பார்த்து விட்டால்?..

சுற்றும் முற்றும் கவலையுடன் ஆராய்ந்தபடி அவள் மொரேஷியஸ் தீவிற்குப் பயணப்படும் பயணிகளுக்கான கவுண்டரின் அருகே நின்ற க்யூவில் நின்றாள்.

அவளுக்குத் தெரிந்தவர்கள் அங்கே யாரும் இருக்கவில்லை.

வெள்ளைக்காரர்கள், டிரான்ஸ்வாலிலிருந்து வந்த சில இந்தியர்கள் என்று ஒரு கலவைக் கூட்டம்.

அவள் நீண்ட நேரம் காத்திருக்கத் தேவையிருக்கவில்லை. போர்டிங் கார்டுடன் வெளியே இறங்கியவள் மேலே நிமிர்ந்து மாடியிலிருந்தபடி பறக்கப் போகும் விமானத்தைப் பார்க்க வந்திருந்தவர்களின் கூட்டத்தைப் பார்த்தாள்.

அங்கேயும் தெரிந்தவர்கள் யாரும் கண்ணில் படவில்லை. எதையோ திருடிவிட்டு ஓடுகிறவள் போன்று அடக்கமாட்டாத ஒரு திகிலுடன், நெஞ்சு படபடக்க, நெற்றியில் துளிர்த்த வியர்வை காதோரங்களை நனைக்க அவள் விமானத்தை நோக்கி வேகமாகக் கூட்டத்துடன் நடந்தாள்.

அப்போதுகூடத் தாமோதரன் ஓடி வந்து அவள் கையைப் பற்றி இழுத்து அவள் போவதை நிறுத்தி விடுவான் போன்றதொரு எதிர்பார்ப்பில் சிலமுறை திரும்பிப் பார்த்து ஏமாந்தவளாக விமானப் படிகளில் வேகமாக ஏறி உள்ளே சென்று அமர்ந்து கொண்டாள். வயிற்றின் மீது பயணிகள் பெல்ட்டைக் கட்டிக் கொண்டதும் பயணிகளின் கலகலப்பில் இறுக்கம் நிறைந்த ஒரு குளிர்ச்சியில்-விமானம் நகரத் தொடங்கியது.

ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்த காவேரி தான் பிறந்து வளர்ந்த டர்பன் நகரம் பின்னோக்கி நழுவிக்கொள்வதைக் கவனித்தாள். அடுக்கடுக்காக மலைச்சரிவிலே தெரிந்த வீடுகள்-பசுமையான புல்வெளிகள்-நெடுஞ்சாலையில் ஊர்ந்த வாகனங்கள் என்று தெரிந்த காட்சிகள் மறைய, மேலே

மிதக்கும் ஒரு உணர்ச்சியில் பிரமிப்புடன் எட்டிப் பார்த்தாள். டர்பன் நகரம் ஒரு புள்ளியாகத் தெரிந்தபோது குபீரென்று அவளது கண்களில் நீர் புரண்டு கொண்டு கன்னங்களின் மீது வழிந்தது.

அழகான டர்பன் நகரை அவள் இனிமேல் பார்க்கப் போவதில்லையே?

அத்துடன் மட்டுமா? அண்ணன்-அண்ணி- உறவினர்கள்-தோழிகள்...எல்லோரையும் துறந்து- எல்லாவற்றையும் விட அன்பானவன்-அவளுக்கு வாழ்வளிக்கத் துடிக்கிறான்-அண்ணன் வீட்டில் இனி தொடர்ந்து அவதிப்பட வேண்டிய தில்லை-கணவன்-வீடு-வாழ்க்கை என்ற இனிய கனவுகள் நினைவாகப் போகின்றன என்று அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததெல்லாம் வெறும் பகற்கனவாகி, தாமோதரனையும் மறந்து, அவள் இப்போது அனாதையாக-தன்னந்தனியே முன்பின் பார்த்திராத தாய்நாட்டுக்குப் போகிறாள்.

அங்கேயாவது அவளுக்கு நிம்மதி கிடைக்குமா?

கன்னத்தில் ஓடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள். வெள்ளைக்கார விமானப் பெண் சாயத்தில் விரிந்த உதடுகளில் புன்னகையுடன் பல நாள் பழகியவள் போல மிகவும் அன்பான குரலில் ''அதற்குள்ளாகவே வீட்டின் நினைவு வந்துவிட்டதா? மிட்டாய்களை எடுத்துக் கொள்ளுங்கள்-குளிர்பானம் எடுத்து வரேன்'' என்று காதருகே கிசுகிசுத்தாள்.

கழுத்தருகே ஒரு குட்டித் தலையணையை வைத்து அவளிடம் குளிர்பானத்தை நீட்டினாள் விமானப் பணிப்பெண். பருகி முடித்ததும் தட்டில் அதை வைத்தாள் காவேரி. மிட்டாய் ஒன்றின் மீதிருந்த காகிதத்தை உரித்துவாயில் அடக்கிக்கொண்டு தன் ஆசனத்தைப் பின்னால் நகர்த்திக்கொண்டு சாய்ந்தாள்.

''கண்களை மூடிக்கொண்டு கவலைகளை மறந்து நிம்மதியாகக் கொஞ்சநேரம் ஓய்வாக இருங்கள். விரைவில் மொரேஷியஸ் தீவை அடைந்து விடுவோம். அதன் அழகைப் பார்த்தால் வீட்டைப் பற்றிய நினைவு போய்விடும்'' அனுசரணையாகப் பேசிவிட்டு விமானப் பணிப்பெண் நகர்ந்தாள்.

அவள் தந்து போன சிறு அலுமினியக் காகிதப் பொட்டலத்தைத் திறந்து உள்ளேயிருந்த யுடிகோலானில் நனைத்திருந்த காகிதக் கைக்குட்டையை எடுத்து முகத்தையும் கழுத்தையும் துடைத்துக்கொண்டாள் காவேரி. ஜில்லென்ற தொரு உணர்வு முகத்திலும் கழுத்திலும் யுடிகோலான் மணத்துடன் பரவியது. தாமோதரனைப் பற்றி நினைப்பு நெஞ்சில் நெருப்பாகச் சுட்டது.

நேரம் நீண்ட யுகமாகிவிட்ட பிரமிப்பைப் பயணிகள் அடையக் கூடாது என்ற கொள்கை போலும்.

கண்களை இறுக மூடிக்கொண்டு சாய்ந்தபடி தூங்க முயன்ற காவேரியின் தோளைச் சிறிது நேரத்தில் மெள்ளத் தொட்டாள் விமானப் பணிப்பெண்.

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் காவேரி.

அவளிடம் ஒரு அச்சடித்த தாளை விமானப் பணிப்பெண் நீட்டினாள்.

மொரேஷியல் தீவில் இறங்கும்போது இமிகிரேஷனில் இதை நாம் தர வேண்டும். பின்னர்தான் உள்ளேயிருக்கும் பயணிகள் தங்குமிடத்தில் உட்கார்ந்து கொள்ள அனுமதி கிட்டும். பம்பாய்க்கு போகும் ஏர் இந்தியா வரும்வரை பயணிகள் டிரான்சிட் லவுன்ச்சில் காத்திருக்க வேண்டும்.

விளக்கிவிட்டுப் போய்விட்டாள்.

தன் மடிமீது கிடந்த தாளை எடுத்துப் படித்தாள். ஒன்று-இரண்டு என்று இலக்கமிட்டுக் கேள்விகள் இருந்தன.

''பெயர், பிறந்த தேதி, எந்த நாட்டைச் சேர்ந்தவர், எதற்காக மோரேஷியஸிற்கு வருகிறார், சுற்றுலாப் பயணமா, மேற்கொண்டு தொடர்ந்து வேறு ஊருக்குப் பயணப் படுவதற்காகச் சிறிது நேரம் தங்கும் பயணியா..'' பல கேள்விகள், பாஸ்போர்ட்டின் எண், கிடைத்த தேதி, அது எத்தனை ஆண்டு செல்லுபடியாகும் என்ற விவரம் எல்லாம் கேட்கப்பட்டிருந்தன.

தோள்பையைத் திறந்து பாஸ்போர்ட்டை எடுத்து, இழுத்தால் நீளும் சிறு மேஜைமீது வைத்துக் கொண்டு அவள் மெல்ல பூர்த்தி செய்து முடிப்பதற்குள் விமானத்தில் பணிபுரியும் ஓர் ஆண் ஊழியர் வந்து 'சைவ உணவா அசைவ உணவா?' என்று கேட்டார்.

சைவ உணவு என்று கூறிவிட்டு, அவள் மேஜையை மடக்கி முன் நாற்காலியின் பின்னால் பொருத்திவிட்டு விவரங்களைப் பூர்த்தி செய்த தாளைப் பத்திரமாகப் பாஸ்போர்ட்டின் உள்ளே வைத்துத் தோள் பைக்குள் வைத்துக் கொண்டு மீண்டும் ஆசனத்தில் சாய்வதற்குள் விமானப் பணிப்பெண் தட்டில் உணவைச் சுமந்துகொண்டு வந்து விட்டாள்.

தூங்கி வழிந்துகொண்டிருந்த பயணிகள் அனைவரும் சுறுசுறுப்படைந்தனர்.

ஒரு சிறு பிளாஸ்டிக் தட்டுக்குள்ளேயே விஜிடபிள் பிரியாணி, பச்சடி, ஏதோ ஒரு கூட்டு, ஸால்ட் என்று எல்லாம் அடங்கியிருந்தன. குடிக்க நீர் ஒரு காகித டம்பளரில் அத்துடன் ஒரு பக்கம் வைக்கப்பட்டிருந்தது.

ஒரு பெரிய கல்யாணச் சாப்பாடு போலப் பயணிகள் ஆற அமரச் சாப்பிடத் தொடங்கினார்கள்.

சாப்பாட்டுத் தட்டைக் காலி செய்து கொண்டு ஒரு ஊழியர் போகுமுன் பணிப்பெண் 'டீயா, காப்பியா...' என்று கேட்டபடி வந்துவிட்டாள்.

பயணிகள், மூவாயிரம் அடிக்குமேல் பறக்கிறோம்-கீழே கடல் என்ற பயங்கர உணர்வை அடையக்கூடாது-நினைத்துக்கூடப் பார்க்கக் கூடாது-அவர்களை ஏதாவது காரியத்திலே ஈடுபடுத்த வேண்டும் என்கிற கொள்கையோ என்னவோ- சாப்பாடு முடிந்த கையுடன் குடிக்கக் காப்பி கிடைத்தது. அது முடிந்ததும் விமானத்தில் வரிவிலக்குடன் விற்கும் சிகரெட்,செண்ட், குடிவகைகளை ஒரு தள்ளு வண்டியில் நகர்த்திக்கொண்டு ஊழியர்கள் பயணிகளை நெருங்கினார்கள்.

அவைகளை வாங்கிச் சில பயணிகள் குவித்துக் கொள்ளுமுன், ''உங்களது பெல்ட்டுகளைத் தயவு செய்து இடுப்பில் அணிந்து கொள்ளுங்கள். இப்போது நாம் கொஞ்சம் கடுமையானதொரு புயலைக் கடக்கப் போகிறோம்'' என்று காப்டன் அறையிலிருந்து ஒலிபெருக்கி ஒலிக்கவே, பயணிகள் படபடவென்ற சப்தத்துடன் இடுப்பு பெல்ட்டை இறுக்கிக் கொண்டனர்.

விமானப் பயணம் காவேரிக்கு முதல்அனுபவமாதலால் ஊறுகாய்ப் பாட்டிலைக் குலுக்குவது போலப் பயணிகளுடன் சில நிமிஷங்கள் விமானம் மேலும் கீழும் அலைபாய்ந்தபோது அவள் நடுங்கிப் போனாள்.

''இப்போது உங்களது பெல்ட்களை அவிழ்க்கவேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் மரகதத்தீவு என்று புகழாகப் பேசப்படும் மொரேஷியஸின் விமான நிலையத்தில் இறங்கப் போகிறோம்''- தேனாக ஒலித்தாள் விமானப் பணிப்பெண்.

நிமிர்ந்து உட்கார்ந்த காவேரி ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். சின்னஞ்சிறு பள்ளிப்பெண் ஒருத்தி ஸ்கிப்பிங் விளையாட்டின்போது கயிற்றைத் தாண்டிக் குதிப்பதுபோல விமானம் சின்னஞ்சிறு குதியலுடன் மெள்ள மெள்ளக் கீழே இறங்கியது. சற்றுமுன் நீலமாகத் தென்பட்ட மேகப் படலத்தை தாண்டி விமானம் இறங்கிய போது, பசுமைப் பாய் விரித்து நின்ற அழகிய மொரேஷியஸ் தீவு, கடல் சூழக் கண்களுக்குப் பரவசக் காட்சியாகத் தெரிந்தது.

விமான நிலையத்தை அடைய சன்னக்கோடு போன்று தெரிந்த பாதையை நோக்கி விமானம் சாய்ந்தவாக்கில் இறங்குவதைக் கண்டு ஒரு கணம் அவள் பதறிப்போனாள். கரணம் தப்பினால் மரணம் என்பார்களே, அதுபோல. கொஞ்சம் நகர்ந்தால் இந்தப் பக்கம் கடல்-அந்தப் பக்கம் கரும்புக்காடு.

விமான ஓட்டிகளுக்கு இப்படிப்பட்ட குறுகலான இடங்களில் கூட லாவகமாக விமானத்தை இறக்கத் தெரிந்திருப்பதை உணர்ந்து அவள் வியந்து போனாள்.

டக்கென்று சிறு ஒலியுடன் விமானம் தரையைத் தொட்டுச் சீறிக்கொண்டு சிறிது தூரம் ஓடி நிலையத்தின் முன் நின்றபோது பயணிகள் அனைவரும் பற்கள் தெரியப் புன்னகை பூத்த முகத்துடன் தங்களது சாமான்களை எடுக்க அவசரப்பட்டனர்.

படியிறங்கி அவள் கீழே வருவதற்குள் மோரேஷியஸ் விமான நிலையத்தைச் சேர்ந்த நீலச் சீருடையில் தெரிந்த பெண்கள் இருவர் பல காலம் பழகியவர்கள் போல வந்து ''மொரேஷியஸ் தீவுக்கு வருகிறீர்களா அல்லது சற்றுத் தங்கிவிட்டு மேற்கொண்டு பயணப்படுகிறவர்களா'' என்று ஒவ்வொருவரையும் விசாரித்து வகை பிரித்தனர்.

தீவில் தங்கப் போகிறவர்கள் கட்டிடத்தின் வேறு பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேற்கொண்டு

தொடர்ந்து வேறு நாட்டுக்குப் பயணப்படச் சிறிது நேரம் மாற்று விமானத்திற்காகக் காத்திருக்கப் போகிறவர்களை டிரான்ஸிட் லவுன்ச்சுக்குப் போகும் வழியாக ஒரு நீலச் சீருடைப் பெண் அழைத்துச் சென்றாள்.

பூர்த்தி செய்த தாளை இமிகிரேஷன் கவுண்டரில் கொடுத்துவிட்டுக் கிரியோல் மொழியையே அதிகம் பேசிய அதிகாரிகளைச் சமாளித்துக்கொண்டு எப்படியோ போய் முடிவில் காத்திருக்க வேண்டிய அறையில் வந்து ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

மேற்கொண்டு பயணப்பட வேண்டிய ஏர் இந்தியா விமானம் இரவு ஏழு மணிக்கு மேல்தான் புறப்படும். அப்போது மொரேஷியஸில் பகல் மணி நான்கு. தவறாக மணி காட்டிய கை கடிகாரத்தைச் சரி செய்து கொண்டு பயணக் களைப்பைப் போக்கிக்கொள்ள அங்கிருந்த பயணிகளின் கழிவறைக்குள்ளே சென்றாள்.

கண்ணாடி முன் நின்று கூந்தலை அவிழ்த்து வாரிக்கொண்டு, கொஞ்சம் ஒப்பனை செய்துகொண்டு, தன் தோள் பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு அவள் வெளிவர முயன்றபோது- ''அட! நம்பக் காவேரி. எங்க இங்கே வந்திருக்கே...'' கேட்டபடி இரட்டை நாடியான- அவர்களுக்குத் தெரிந்த-காமாட்சி அம்மாள் எதிர்ப்பட்டு விட்டாள்.

''போன வாரம் நான் மொரேஷியஸுக்கு வந்தேன். ஊரைச் சுத்திப் பார்த்துட்டு இன்னிக்குப் புறப்படற ஏர் இந்தியா விமானத்திலே தாய்நாடு போக டிக்கெட் எடுத்திருக்கேன். ஆமாம் நீ எப்போ புறப்பட்டு ஊரிலிருந்து வந்தே...''

காசிக்குப் போயும் சனீஸ்வரன் விட்டபாடில்லை என்று சவுந்தரி அண்ணி சொல்லும் ஒரு பழமொழி சட்டென்று காவேரியின் மனதில் தோன்றியது.

ஒருவருக்கும் தெரியாமல் அவள் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்திருக்கிறாள். வம்பு பேசுவதே தொழிலான அடுத்த தெருக் காமாட்சி அம்மாளையா அங்கு சந்திக்க வேண்டும்! பம்பாயில் இறங்கியதும் முதல் வேலையாக விமான நிலையத்திலே உட்கார்ந்து ஒரு கடிதம் எழுதி ஊரில் உள்ள தன் உறவினர்களுக்கு அனுப்பிவிடுவாள்.

அவ்வளவுதான்! காவேரி இந்தியாவுக்குப் போயிட்டாளாமே... சொல்லாமக் கொள்ளாம ஓடிப்போயிருக்காளே என்ன சங்கதி... எவனோடயோ சுத்திக்கிட்டிருந்தாளாமே... ஏதாவது ஆயிட்டதா?... நம்ப நாட்டிலே கருவைக் கலைச்சாப் பெரிய குற்றமாச்சே. அதனாலே கருச்சிதைவு செய்வதைச் சட்டப்பூர்வமாக அனுமதிக்கும் இந்தியாவுக்கு அதுக்காகப் போயிட்டாளா?...

ஊரில் உள்ளவர்களின் கற்பனை கொடிகட்டிப் பறக்கும். அந்த அசிங்கமான கதையைத் தாமோதரன் கேள்விப்பட்டால்...? அவளைப் பற்றி மிகத் துச்சமாக எண்ணக்கூடும். பற்களைக் கடித்துக் கொண்டாள்.

''திருப்பதிக்கு வேண்டுதலை ஆண்ட்டி. அதனாலே அசவரமா புறப்பட்டு வந்தேன்.''

''தலையை மொட்டையடிச்சுக்கப் போறியா? நான் கூட அங்கே மொட்டை போட்டுக்கப்போறேன். கையோட ஒரு விக் எடுத்து வந்திருக்கேன்.''

அதற்குப்பின் காமாட்சியின் தொணதொணப்பு ஏர் இந்தியா பயணம் முழுவதும் தொடர்ந்தது.

19

பக்கத்து ஆசனத்திலே அட்டையாக ஒட்டிக்கொண்டு விட்ட காமாட்சி பயணத்தின் போது கிசுகிசுத்தாள்

''இதோ பார் காவேரி. கொஞ்சம் இரண்டு பாட்டில் சாராயம், இருநூறு சிகரெட், இரண்டு புட்டி செண்ட் இதெல்லாம் வாங்கிக்கலாம். நீ வாங்காட்டா-நான் பணம் தரேன். உனக்குத் தரும் சலுகையை எனக்குக் கொடு. கஸ்டம் வரை அவைகளை உன் பையில் வச்சிருந்து சுங்க இலாகாவை விட்டு வெளியே வந்ததும் என் கிட்டக் கொடு. இதுகளுக்குப் பம்பாயிலே ஓட்டல் வாசலிலே வந்து வாங்குறவங்க காத்திருப்பாங்க. நமக்குக் கொஞ்சம் லாபம் கிடைச்சா-அதை வச்சு ஊரைச் சுற்றி பார்க்க நல்லா செலவழிக்கலாமே.''

''ஆண்ட்டி, சாமி கோயிலுக்குப் போறதாலே இதெல்லாம் செய்ய எனக்கு இஷ்டமில்லை.'' பளிச்சென்று எரிச்சலுடன் பதிலளித்தாள்.

காமாட்சி முகம் கடுகடுவென்றாகிப் போனது.

இரவு இரண்டு மணியளவிலே பம்பாய் வந்தடைந்த போது சுங்க இலாகாவைத் தாண்டியதும் காமாட்சி மாயமாகி விட்டிருந்தாள். இரயில் பயணத்தின்போது ஏற்படும் நண்பர்கள் வண்டியைவிட்டு இறங்கியதும் மறைந்து விடுவார்கள் என்பது இயல்பு. அவர்கள் வசித்த நாட்டைச் சேர்ந்தவள் காமாட்சி. ஆகாய விமானத்தை விடப் பன்மடங்கு வேகத்தில் மறைந்துவிட்டாளே!

தாய் நாட்டை மிதித்துவிட்டோம் என்று நெஞ்சில் ஏற்பட்ட இன்பச் சிலிர்ப்பு மறைந்து, 'காமாட்சியை விரோதித்துக் கொண்டு விட்டோமே-இதன் விளைவு?...' என்ற கலவரத்துடன் பம்பாய் விமான நிலையச் சுங்க இலாகாவைத் தாண்டி வெளியே வந்தாள் காவேரி.

அடுத்தபடியாகச் சென்னைக்கு அவள் விமானத்தில் பயணப்படும்வரை காத்திருக்க அவளுக்கு ஒரு ஃபைவ்ஸ்டார் ஹோட்டலில் இடவசதி அளிக்கப்பட்டது.

பெட்டியை ஓட்டல் ஊழியர்கள் விமான பஸ்ஸிலிருந்து இறக்கி வைக்க, அந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டலின்

வரவேற்பறைக்குள் நுழைந்தவுடன் அவள் அயர்ந்து போனாள். ஏழ்மை நிறைந்த இந்தியாவில் பயணிகளுக்கு இப்படி ஒரு வசதியா?

தலைக்குமேல் சிங்காரமாகத் தொங்கிய கண்ணாடி சரவிளக்கு காற்றில் லேசாக நகர்ந்தபோது எழுப்பிய கிளுகிளு ஓசையும், அவைகளிலிருந்து எழுந்த வெளிச்சத்திலே கனவு உலகம் போலத் தெரிந்த அந்த வரவேற்பறையும் கவுண்டர்களின் பின்னால் நின்ற அழகிய இளம் பெண்களையும் கண்கொட்டாது வியப்புடன் பார்த்தபடி நின்றாள் காவேரி.

பணம் எத்தனை இருந்தாலும் இத்தகைய வசதி அவளது நாட்டில் இந்தியர்களுக்கோ வேறு இனத்தவர்களுக்கோ கிடையாதே.

வெள்ளைக்காரர்கள் தங்குகிற ஹோட்டல்கள்-அவர்கள் அனுபவிக்கிற சுகங்கள் எல்லாவற்றையும் கருப்பர்கள் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள முடியாதே. இனவேற்றுமை காரணமாக வெள்ளையர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நீச்சல் குளத்தில் கூடத் தப்பித் தவறி ஒரு கருப்பர் கால் வைத்துவிட முடியாதே.

வெள்ளைக்காரர்களும் ஆப்பிரிக்க நாட்டினரும் இன்னும் பல நாட்டினரும் பயணிகளாக ஹோட்டல் முன்னறையில் வந்து குவிந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

இப்படிப்பட்டதொரு ஒற்றுமை-எல்லா மக்களும் எல்லாவற்றையும் பகிர்ந்து அனுபவிக்கும் வாய்ப்பு அவளது நாட்டிற்குள் எப்பொழுது ஏற்படப் போகிறது?

அந்த வாய்ப்பினை நோக்கிப் போராடும் மக்களுடன் கூடத் தாமோதரனும் தன் கடமையைச் செய்யத் துணிந்து விட்டிருக்கிறான். அதை அவள் புரிந்து கொள்ளாது-வெறும் பொறாமையால் உந்தப்பட்டு அவனிடம் சொல்லிக் கொள்ளாது கூடப் புறப்பட்டு வந்தது எத்தனை பெரிய தவறு!

திடீரென்று அவனது நினைவு நெஞ்சை இறுக்குவதை உணர்ந்தாள்.

"இப்படி வருகிறீர்களா மேடம்" ஹோட்டல் ஊழியர் ஒருவர் அவளது பெட்டியை ஒரு கவுண்டர் அருகே வைத்துவிட்டு அவளை அழைத்தபோது, கண் இமைகளைச் சுட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு புன்முறுவலுடன் அங்கே சென்றாள்.

மிகவும் பழகியவள்போல் உதட்டுச் சாயத்தின் பின்னால் ஒளிவிட்ட பல்வரிசை லேசாகத் தெரிய மெலிதாகச் சிரித்த அந்தப் பெண் ஊழியர் அவளிடம் ஒரு பெரிய புத்தகத்தைப் பிரித்து நீட்டினாள். அதில் பெயர், நாடு, வந்த விபரம், தங்கியிருக்கப் போகும் முகவரி, பாஸ்போர்ட் எண் இத்யாதிகளை எழுதிக் கொடுத்து விட்டு அவள் தந்த சாவியை வாங்கிக் கொண்டு நகர்ந்தாள் காவேரி.

அரசிளங்குமரிகளும் கோடீஸ்வரர்களின் குல விளக்குகளும் தங்க ஏற்பாடு செய்யப்பட்டதுபோல அந்த அறையில்தான் எத்தனை வசதி! கால் புதையும் கம்பள விரிப்பு, கண் கவரும் சித்திரங்கள் சுவரில், உடம்பைத் தழுவும் மெத்தை போட்ட சுத்தமான விரிப்புடன் வா வா என்றழைத்த படுக்கை, தலைமாட்டிலே ஒரு தொலைபேசி, எந்த எண்ணைச் சுற்றினால் யாரை அழைக்கலாம், எவைகளைத் தருவிக்கலாம் என்ற ரூம் சர்வீஸ் குறிப்படங்கிய தொரு சிறு அட்டை அருகில் இருந்தது. அவசரமாகக் கடிதம் எழுத ஓட்டலின் முகவரி கொண்ட வெள்ளைக் காகிதங்கள், அனுப்பக் கடித உறைகள், எழுதப் பேனா இத்யாதியுடன் அழகு பார்த்துக்கொள்ள ஒரு ஆளுயரக் கண்ணாடி...

குளியலறையில்தான் எத்தனை வசதி! ஆப்பிரிக்காவில் தாமோதரன் வீட்டிலிருந்த அலங்காரக் குளியலறையைப் போல பாத்டப், டெலிபோன் ஷவர், குளிக்கப் புதியதாக ஒரு

சோப்; தலைகுளிக்க ஷாம்பு, துவாலை...அப்பாடி! எத்தனை வசதி! இவ்வளவும் புதிதாக-பரிசுத்தமாக அவள் உபயோகத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பதை அறிவிக்க... கழிவறை பேசினிலிருந்து கண்ணாடிக் கூஜாவரை ஒரு காகிதத்தால் ஒட்டப்பட்டிருப்பதைக் காண அவளுக்கு மெத்த வியப்பாக இருந்தது.

அவள் வாழ்க்கையிலே இதுவரை அனுபவித்திராத சுகம்! ஒரு நாட்டு மக்களுக்குச் சுதந்திரம் வந்துவிட்டால் கூடவே இத்தனை சுகங்களும் வந்து விடுகின்றனவா?

தன்னுள் பல எண்ணியவாறு களைப்புப் போக முதலில் ஆனந்தமாகச் சூடான தண்ணீரை பாத்டப்பில் நிரப்பிக் கொண்டு குளித்தாள். இரவு ஆடை அணிந்து கொண்டு தலைமாட்டில் பொருத்தப்பட்டிருந்ததொரு ரேடியோ அமைப்பைப் போன்றதின் பட்டன் ஒன்றை அழுத்தினாள். சித்தார் இசை காதை மெள்ளத் தழுவி மனதிலே ஒரு இன்பச் சிலிர்ப்பை உண்டாக்கியது. ஒவ்வொரு பட்டனையும் அழுத்திப் பரிசோதித்தாள்-கீழ் நாட்டு இசை-மேல் நாட்டு இசை-கர்நாடக சங்கீதம் என்று வகைக்கு ஒன்றாக வெளிப்பட்டு அதிசயப்படுத்தியது.

குறிப்பேட்டைப் பார்த்துத் தொலைபேசியில் ஒரு எண்ணைச் சுற்றினாள். ''ரூம் சர்வீஸ்''-மறுமுனையில் தேன் குரல் இனிமையாகக் காதில் வந்து விழுந்தது.

''காலையில் ஐந்து மணிக்கு எழுப்பி விடவும். ஏழு மணி அளவில் எனது காலை உணவை அறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். எக்ஸ்ட்ரா எதுவும் தேவையில்லை. விமானப் பயணிகளுக்குத் தரவேண்டிய காலை உணவு போதும். சைவ உணவுதான்'' எல்லாவற்றையும் கூறிவிட்டுக் கதவை இழுத்துப்பார்த்து நன்றாக உள்ளே பூட்டிக் கொண்டிருக்கிறது என்ற திருப்தியுடன் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கை மீது சாய்ந்தாள். களைப்பில் நன்றாகவே உறங்கிப் போனாள்.

அவள் கேட்டுக் கொண்டபடியே காலை ஐந்து மணிக்குத் தலைமாட்டுத் தொலைபேசி கிணுகிணுத்தது.

''குட்மார்னிங். ரூம் நம்பர் 202'' என்றாள் மறுபக்கத்திலிருந்த பெண்.

''குட்மார்னிங், தாங்க்யூ'' என்று கூறிவிட்டு எழுந்து மறுபடியும் ஆசைதீர நன்றாகக் குளித்தாள்.

தமிழ் நாட்டுப் பெண்கள் அதிகமாகப் பேண்ட் சட்டை அணிவதில்லை. புடவை உடுத்திக்கொண்டு குங்குமப் பொட்டில் பொலிவார்கள் என்று சவுந்தரி அண்ணி கூறியது ஞாபகம் வரவே, அவள் அண்ணியின் புடவைகளில் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு குங்குமப் பொட்டைச் சற்றுப் பெரிதாக நெற்றியில் வைத்துக்கொண்டாள். லேசான ஒப்பனையில் அவளை இப்போது யாராவது பார்த்தால் தமிழ்நாட்டைச் சேர்ந்தவள் என்றுதான் சாதிப்பார்கள். அப்படித் தன் தோற்றம் மாறிவிட்டிருப்பதைக் கண்ணாடியில் கண்டு மகிழ்ந்தாள்.

லேசாகக் கதவு தட்டப்பட்டது. திறந்ததும் உள்ளே ஒரு நகரும் மேசையை தள்ளிக்கொண்டு வந்தார் ஓட்டல் ஊழியர் ஒருவர். ''உங்களது காலை உணவு. பதினோரு மணி அளவில் அறையைக் காலி செய்துவிட்டு நீங்கள் கீழே வரவேற்பறைக்கு வந்துவிட வேண்டும். உங்களது விமானம் பனிரெண்டு மணிக்குக் கொஞ்சம் முன்னதாகக் கிளம்பும். அதனால் அதற்குள் ஹோட்டல் கணக்கு எதாவது இருந்தால் அதை தீர்த்துவிட்டுத் தயாராக வாசலில் நிற்கும் விமானப் பஸ்ஸில் ஏறிக்கொள்ளவேண்டும்.'' விவரமாகக் கூறிவிட்டு வெளியேறினார்.

மேசைமீது போர்த்தியிருந்த வெள்ளை விரிப்பை எடுத்துவிட்டுக் காவேரி 'ஆவ்' என்று ஆச்சரியத்துடன் கூவினாள். இரண்டு பேர்கள் வயிறு புடைக்கச் சாப்பிடும் அளவு, அவள் கேட்ட சுட்ட ரொட்டி, வெண்ணெய், ச்சீஸ், பழரசம், பால், காப்பி டிகாக்ஷன், சர்க்கரை இத்யாதி

தனித்தனியான பீங்கான் கிண்ணங்களில் அழகாக வைக்கப்பட்டிருந்த நேர்த்தியைக் கண்டு வியந்து போனாள்.

மேசைமீது விருந்துகளின் போது அலங்காரமாகத் தட்டுகளை அதனதன் இடத்திலே கத்தி-முள்ஸ்பூன் முதலிய வற்றுடன் வைத்து, நடுவிலே பூங்கொத்துக் கொண்டதொரு அலங்காரப் பீங்கான் கிண்ணத்தை வைத்து அழகாக டேபிள் செட் செய்வதில் மிகவும் கெட்டிக்காரி என்று தன் திறமையைப் பற்றி அவளுக்கு உள்ளூரப் பெருமை இருந்தது.

காலை உணவைத் தாங்கிக் கொண்டு அவள் முன்னே நின்ற அந்த மேஜையின் அலங்காரத்தைக் கண்டதுமே அவள் கர்வம் படபடவென்று இடிந்து பொடியாகிப் போனது.

இந்த இந்தியர்கள் பார்ப்பதற்கு வெகு சாதாரணமான மனிதர்களைப் போலத் தெரிந்தாலும் எத்தனை கெட்டிக்காரர் களாக இருக்கின்றனர்? இன்னும் எத்தனை அதிசயங்களை-தாய்நாட்டின் சிறப்புகளை அவள் சந்திக்கப் போகிறாளோ?

குறித்த நேரத்தில் பம்பாயை விட்டு விமானம் புறப்பட்டது.

ஒன்றரை மணி நேரப் பயணமே தெரியாது, பொழுது மிகவும் இனிமையாகக் கழிந்தது.

சென்னை வரைக்கும்தான் அவள் பயணச்சீட்டு வாங்கியிருந்தாள். விமான நிலையத்தில் இறங்கி டர்பனிலிருந்த இப்ரஹீம் பிரதர்ஸ் நிறுவனம் அவளுக்காக அனுதாபப்பட்டு முன்னதாக ஏற்பாடு செய்திருந்த ஹோட்டல் ஜோதிக்கு டாக்ஸி எடுத்துக்கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

ஹோட்டல் ஜோதி மூன்று நட்சத்திரச் சிறப்புடையது. அதற்குத் தக்கபடி வசதிகளும் சற்றுக் குறைவாகவே இருந்தன.

இனிமேல் ஓட்டல் செலவிற்கு அவள் கையிருப்பி லிருந்து பணத்தை எடுக்க வேண்டுமென்பதால் அவள் மிகவும் எச்சரிக்கையாக-சிக்கனமாக இருக்க வேண்டுமே!

இந்த மூன்று நட்சத்திர ஹோட்டலை விட்டு அவள் சீக்கிரம் கிளம்பியாக வேண்டும். நாளைக்கு நூறு ரூபாய்க்கு மேல் செலவழித்துக்கொண்டு தங்குவது சாத்யப்படாத செய்கை என்று எண்ணியபடி, அவளுக்குத் தந்துவிட்டிருந்த அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு பயணக்களைப்புப் போக முகத்தைக் கழுவி முடியைச் சீர்திருத்திக் கொண்டு, பெட்டியைத் தூக்கி அதற்கென அறையிலிருந்த மர ஸ்டாண்டின் மீது வைத்துத் திறந்து தனது கையிருப்புப் பணத்தை பத்திரமாக எண்ணி ஒரு பர்சில் போட்டு, தோள் பையில் பாஸ்போர்ட் எல்லாவற்றையும் போட்டுப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி, சாவியை இடையில் சொருகிக் கொண்டு நிமிர்ந்தபோது அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்தாள். வெளியே வயதான ஒரு அம்மாளும்-கூட பதினெட்டு வயதுச் சிறுவன் ஒருவனும் நின்று கொண்டிருந்தனர்.

''நீதானே காவேரி!'' கேட்டபடி அந்த அம்மாள் உள்ளே வந்து உட்கார்ந்துகொண்டாள்.

20

ஜன்னல் திரையைத் தள்ளியதும் வெளிச்சம் உள்ளே நன்றாக வீசியபோது காவேரி அறையை உற்றுப் பார்த்தாள்.

பணத்தை மிச்சப்படுத்தும் நோக்கத்துடன் ஆப்பிரிக்காவி லிருந்து பயணப்பட்டு வந்து போய்க் கொண்டிருந்த பயணிகள் சிலர் இந்த ஓட்டலின் பெயரையும் முகவரியையும்

பாவம் இப்ராஹீம் பிரதர்ஸ் நிறுவனத்தார். அங்கிருந்த படியே ஹோட்டல் ஜோதியை ஒரு ஜகத்ஜோதியான ஹோட்டல் என்று எண்ணித்தான் அவள் அங்கு வந்து தங்க முன்னதாக அறையை ஒதுக்கி வைக்க, டிராவல் ஏஜெண்ட் என்ற தகுதியில் கடிதம் எழுதி ஏற்பாடு செய்து விட்டிருந்தனர்.

உண்மையில் அது அழுது வடிந்து கொண்டிருந்த மகா மட்டமானதொரு ஹோட்டல். 'மூன்று நட்சத்திர ஹோட்டல் என்று சொன்னார்கள். இந்த அறையைப் பார்த்தால் ஹோட்டலுக்கு முக்கால் நட்சத்திரங்கள்கூடக் கொடுக்க முடியாது போலிருக்கிறதே' என்று முணுமுணுத்துக் கொண்டாள் காவேரி. சுவர்களுக்கு வர்ணம் பூசி வெகு காலமாகி விட்டதை வெளிச்சம் பளிச்சிட்டுக் காட்டியது. ஹோட்டல் பையனின் சீருடை தண்ணீரைக் கண்டு பல நாட்கள் ஆகிவிட்டது போன்ற காட்சி.

அழுக்குப் பிடித்த தன் தலைக் குல்லாயைச் சரிப்படுத்திக் கொண்டு வாசலை அடைத்தபடி நின்ற ஓட்டல் பையன் பழுப்பேறிய தன் பற்களைக் காட்டி மெல்லச் சிரித்தான்.

''அம்மா! இவங்க ரெண்டு பேரும் மூணு நாளா இங்கே வந்து உங்களைத் தேடிக்கிட்டு அலைஞ்சுக்கிட்டிருந்தாங்க'' என்று அறிமுகத்தைத் துவக்கி வைத்தான்.

''உன் கடுதாசி கிடைச்சதுமே நான் ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டேன். இந்த வயசிலே தன்னந்தனியா நான் மெட்ராசுக்கு வர முடியுமா? அதனால் பேரன் சிவநாதனைத் துணைக்குக் கூட்டிக்கிட்டு என் ஒன்று விட்ட நாத்தனார் வீட்டில் தங்கிவிட்டு இங்கே வந்து நிதத்துக்கும் விசாரிச்சுக்கிட்டிருந்தேன். பள்ளிக்கூடத்திலே படிக்கிற பையன் சிவநாதன். நாலு நாள் படிப்பு வீணாயிடுச்சுன்னு அவன் அப்பன் ஆகாசத்துக்கும் பூமிக்கும் எகிருவான். ந்தாச்சு. உன்னைக் கண்டுபிடிச்சு ஊருக்கு அழைச்சுகிட்டுப்

போகாம எப்படித் திரும்பறதுன்னு பிடிவாதமாக இருந்திட்டேன். நீ இன்னிக்கு வந்து சேர்ந்தா எங்க ஊர் அரசமரத்துப் பிள்ளையாருக்குச் செதர்த் தேங்கா உடைக்கிறேன்னு வேண்டிக்கிட்டேன். அவர் ரொம்ப சக்தி வாய்ந்தவர். நீ வந்துட்டே. மனசுக்கு நிம்மதி ஏற்பட்டுடுச்சு.'' நாற்காலியை இன்னும் சற்று அருகில் நகர்த்திக் கொண்டாள்.

''தென் ஆப்பிரிக்காவிலிருந்து இங்கே பலர் வந்து நம்ப ஓட்டலில் தங்கியிருக்காங்க. எனக்கு கே.ஜி.பிள்ளையைத் தெரியும், ஜி.டி. நாயுடுவைப் பார்த்திருக்கிறேன். சி.கே. முதலியோட ரொம்ப சிநேகிதம்...'' பையன் படபடவென்று அடுக்கியதைக் கேட்டு அவனை மிக்க வியப்புடன் பார்த்தாள் காவேரி.

''இங்கே வந்து தங்குகிற பயணிகளுக்கு ஊர் சுற்றிப் பார்க்க டாக்ஸி ஏற்பாடு செய்து கொடுத்து எல்லா சௌகர்யமும் செய்து தருகிறவன் நான்தான். என் பெயர் மாணிக்கம்'' என்றான் பெருமை பொங்கும் குரலில் அவன்.

''அப்படியா மாணிக்கம் தம்பி. மெட்ராசுக்கு வந்தமே தவிர நாங்க ஒரு கண்காட்சியும் பார்க்கலை. போனது போகட்டும்னு இன்னும் இரண்டு நாள் நாங்க இங்கேயே இருக்கப் போகிறோம்'' என்றாள் முருகம்மாள்.

''ஓ! தாராளமா இருங்கோ பாட்டி. இன்னும் ரெண்டு படுக்கையை இந்த அறையிலேயே கொண்டுவந்து போட ஏற்பாடு பண்றேன். பிறகு டாக்ஸி பேசித் தரேன். மகாபலிபுரம், காஞ்சிபுரம், எல்லாம் கூட நீங்க சுத்திப் பார்த்துட்டு வரலாம். திருப்பதிக்குப் போவதானாலும் எங்கிட்டே சொல்லுங்கோ.''

காவேரி வாயடைத்துப் போனாள். இந்த முருகம்மாள் எப்படி அவளைத் தேடிக் கொண்டு இங்கே வந்திருக்கிறாள்?

திடீரென்று மூளையில் நினைவு பளிச்சிட்டது. சவுந்தரி மரணமடைந்தபோது அண்ணன் லோகேந்திரன் துக்கச் செய்தியைத் தாய்நாட்டில் அவளுக்கிருந்த ஒரே ஒரு உறவினரான அண்ணன் அமிர்தலிங்கத்துக்கு எழுதியிருந்தார். அந்த முகவரிக்குத்தான், காவேரி ஊருக்குப் புறப்படுமுன் தான் வரப்போவதாகவும், தன்னை இந்தத் தேதியில் ஹோட்டல் ஜோதியில் சென்னையில் வந்து சந்திக்க வேண்டும் என்றும் ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.

''சவுந்தரி நம்மையெல்லாம் விட்டுட்டுப் போயிட்டாளே'' என்று திடீரென அழுகையில் குலுங்கிய முருகம்மாள் கண்களைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள். ''நீ அமிர்தண்ணனுக்குக் கடிதம் போட்டிருந்தே, அவர்தான் சவுந்தரி போன துக்கம் தாங்காம அடுத்த வாரமே மாரடைப்பால் போயிட்டாரே. வயசு காலத்தில் அவரை என் மருமகன்- அதுதான் அமிர்தலிங்கத்துப் பங்காளிப் பையன் வச்சுக் காப்பாத்திக் கிட்டிருந்தான். அந்த நன்றிக்காக கிழவர் வீட்டையும் கொஞ்ச சொத்தையும் என் மருமகனுக்கு எழுதி விட்டுட்டுப் போயிட்டார். நீ யாரு எங்க வீட்டுப் பொண்ணு! எங்க சவுந்தரியோட நாத்தி. கடுதாசியைப் பிரிச்சுப் படித்ததுமே நான் துடிச்சுப் போனேன். முன்பின் தெரியாத ஊரிலே வந்து நீ கஷ்டப்படக்கூடாதுன்னு பேரனைக் கூட்டிட்டு வந்திருக்கேன்'' விளக்கமாகத் தெரிவித்தாள் முருகம்மாள்.

''என்னம்மா அப்படி கலங்கறே? என் மருமகன் சட்டநாதன் உன்னைத் தன் பொண்ணு போல கண்ணுலே வச்சு கவனிச்சுப்பான். உங்க சவுந்தரி அண்ணி பிறந்து வளர்ந்து ஆளான வீட்டையும் கொஞ்ச தூரத்திலே ஓடற காவேரி ஆத்தையும் நீ பார்க்க வேண்டாமா? வெளி தேசத்திலே போய் வாழ்ந்தாலும் உங்களுடைய வேர் இந்தத் தாய் நாட்டில் தான் இருக்குன்னு தெரிஞ்சுக்க வாணாமா? எங்க ஊர் சிவன் கோவில் மகமாயி கோவில் எல்லாத்தையும் பார்க்க வாணாமா? என் மருமக கைச் சாப்பாட்டை ஒரு

வாட்டி நீ ருசி பார்த்துட்டே, எங்க கிராமத்தை விட்டு நகரவே மாட்டே...'' வேப்பிலை அடித்தாள் முருகம்மாள்.

''இன்னும் சாப்பாட்டு நேரம் முடியலே, உங்களுக்குக் கெல்லாம் ஏதாச்சும் சாப்பிட அறைக்கு எடுத்து வரவா?'' தானே முந்திக் கொண்டான் ஹோட்டல் பையன் மாணிக்கம்.

''காலையில் பிடிச்சு பச்சைத் தண்ணிகூடப் பல்லில் படாம நான் பசியோட அலையறேன். மூணு பேருக்குச் சாப்பாடு எடுத்துட்டு வா'' மிகவும் அதிகாரமாக உத்தரவிட்டாள் முருகம்மாள்.

மூன்று அலுமினியத் தட்டுகளை அடுக்காகச் சுமந்து கொண்டு வந்த மாணிக்கம் அவைகளை அங்கிருந்த மேஜை மீது வைத்தான். சிறிது பொழுதில் ஒரு அலுமினியத் தண்ணீர் ஜாடியையும், மூன்று அழுக்குப் பிடித்த கண்ணாடி டம்ளர் களையும் கொண்டு வந்து கூட வைத்தான். ''இன்னும் ஏதாச்சும் வேணும்னா சொல்லுங்க. கோயில் குளத்துக்குப் போகிற பயணிகள். அதனால்... நான் கேட்டால் ஒழிய அசைவ சாப்பாடு எடுத்துவர மாட்டேன். எல்லாம் தனிப்பட சமையல் செய்த சைவ சாப்பாடு..'' பற்களைக் காட்டி பகபகவென்று சிரித்தான்.

மேலே மூடியிருந்த அலுமினியத் தட்டை எடுத்துவிட்டு, முருகம்மாளும் பேரனும் கையைக்கூடக் கழுவாது அவசரமாகச் சாப்பிடத் தொடங்கினர். மூலையிலிருந்த வாஷ்பேசினைத் திருகினாள்,. காவேரி. தண்ணீர் கண்ணீரைவிடச் சிக்கனமாகச் சில துளிகள் உதிர்ந்தன.

''இங்கே தண்ணி கஷ்டம் கொஞ்சம் ஏற்பட்டிருக்கு, அதனாலே பாத்ரூமிலே வாளியிலே தண்ணியும் குவளையும் தயாரா வச்சிருக்கேன்.'' மாணிக்கம் எச்சரித்தான்.

கன்னங்கரேலென்றிருந்த குளியலறைக்குள் நுழைந்து விளக்கைத் தேடிப் போட்டுப் பார்த்தபோது காவேரிக்கு

வயிற்றைக் குமட்டியது. லேசாக சிறுநீர் கழித்த வாசனை முகத்தில் மோத, துருப்பிடித்த அந்த இரும்பு வாளித் தண்ணீரில் கையைக் கழுவப் பயந்தபடி அவள் திரும்ப வெளியே வந்து கையைக் கழுவிக் கொண்டாள்.

சாப்பாட்டுத் தட்டை நீக்கினாள். இரண்டு சப்பாத்தி-ஒரு அலுமினியக் கிண்ணத்தில் குருமா இன்னும் இரண்டு கிண்ணத் தில் திரவரூபத்தில் ஏதோ ஒரு உணவு. ஒரு சிறு கிண்ணமாகப் பட்டையடித்த சாதம். ஒரு சிறு அலுமினியத் தட்டில் ஒரு கரண்டியளவு தயிர் சிறிது உப்பு, ஒரு துண்டு எலுமிச்சங்காய் ஊறுகாய்.

''அதிலே ரசம் இருக்கு. அந்தக் கிண்ணத்திலே சாம்பார். அப்பளம் வேணுமினா தனியாப் பணம் தரணும். உளுந்து விலை ஏறிடுச்சு இல்லையா. நாங்க தட்டுச் சாப்பாட்டிலே அப்பளம் வைக்கிறதில்லை..'' விளக்கிக் கொண்டிருந்தான் மாணிக்கம்.

''ஆளுக்கு ரெண்டு அப்பளம் கொண்டுவாப்பா. இன்னும் ஒரு பட்டைச் சோறும் தேவைப்படும்'' உத்தரவிட்டாள் முருகம்மாள்.

சாம்பாரை ஊற்றிச் சாதத்தைக் கலந்து விழுங்க முயன்றாள் காவேரி.

காரமும் உப்பும் கூடிவராத தண்ணீர் போன்ற சாம்பாரை அவளால் ருசிக்க முடியவில்லை. பசியை அடக்கித் தொலைக்கப் பற்களின் பலத்தை அதிகமாகவே உபயோகித்துத் தட்டிலிருந்த சப்பாத்திகளைக் கடித்து விழுங்கினாள். டம்ளரிலிருந்த தண்ணீரைக் குடிக்க அவளுக்குப் பயமாக இருந்தது. ''இந்தியாவிலே கண்ட தண்ணீரைக் குடிக்கக்கூடாது. காலரா, டைப்பாய்டு, மஞ்சள் காமாலை என்று நோய்கள் பரவ்லாக இருக்கும். அதனால் எங்கே போனாலும் ஒரு குளிர்பானம் தருவித்துத் தாகத்துக்குச் சாப்பிடு. இல்லாவி[illegible]ால்

கொதிக்கக் கொதிக்கக் காப்பியைக் கொண்டுவரச் சொல்லி நீயே ஆற்றிச் சாப்பிடு. மட்டரகமான ஹோட்டல்களில் பையன்கள் விரல்களால் தொட்டு டம்ளரைத்தூக்கி வருவார்கள். அவங்க விரல் அழுக்கையும் சேர்த்து நாம் சாப்பிட நேரும்...'' என்று பல விஷயங்களை-கேள்விப்பட்டவைகளையெல்லாம் நர்ஸ் ஜகதா அவளுக்குச் சொல்லியிருந்தாள்.

ஹோட்டல் ஜோதியின் அறையில் தங்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. நர்ஸ் வேலைக்குப் படித்தவள்-சுகாதாரம் என்ன என்பதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் தகுதி யுடையவள். அந்தச் சூழ்நிலை, உணவு, மாணிக்கத்தின் அதிகப் பிரசங்கித்தனம், முருகம்மாளின் அதிகாரம்... ஒன்றுமே அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவர்கள் இருவரையும் விட்டுவிட்டு டைரியில் காணும் வேறு ஏதாவது முகவரியைத் தேடிக்கொண்டு அவள் தனியே புறப்பட்டுவிட்டால்...?

திடீரென்று அண்ணி சவுந்தரியின் நினைவு நெஞ்சை அடைத்தது. அவளது கடைசி வேண்டுகோள் மனதை உறுத்தியது.

''எப்பொழுதாவது நீ தாய்நாட்டுக்குப் போனால் நான் பிறந்த ஊரின் அருகில் ஓடும் காவேரி நதியில் என் துணிகளில் எதையாவது போட்டுவிட்டு என்னை நினைத்துக் கும்பிடு போதும்'' என்று எத்தனை முறை அவளிடம் கூறி அழுதிருக்கிறாள் அண்ணி.

அவர்களது ஆன்மா சாந்தியடைய அவள் கட்டாயம் வரதநத்தத்திற்குப் போயாகவேண்டும். அவர்கள் பிறந்த வீட்டின் மண்ணை மிதித்து, அந்தக் காவேரி நதியோடு சேர்த்துவிட்டு அவர்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டியது அவள் கடமை. அண்ணி சவுந்தரி அவளுக்குத் தாய்க்கு ஒப்பானவளாச்சே?

"இன்னிக்கு ராத்திரி நாம் திருச்சிக்குப் புறப்படலாமா ஆண்ட்டி?" என்று கேட்டாள்.

"அப்படி என்ன அவசரம்-ஊரைப் பார்த்துட்டு ரெண்டு நாள் ஆற அமர ஒய்வா இருந்துட்டு...சில சாமான்கள் வாங்கிட்டுப் பிறகு போகலாம். இந்தத் தம்பி நமக்கு டாக்ஸி ஏற்பாடு பண்ணித் தருவான். காஞ்சிபுரம் கோவில்களை நீ பார்க்க வேணாமா?"

முருகம்மாள் முட்டுக்கட்டை போட்டாள்.

புலிப்பால் வேண்டுமா, இதோ கொண்டு வருகிறேன் என்று மறுப்பே தெரிவிக்காது செயல்பட்ட மாணிக்கம் டாக்ஸி ஒன்றைப்பேசி அவர்களது சுற்றுலாவுக்குத் தயார் செய்து கொடுத்தாள்.

அடுத்தநாள் காலை முதல் வேலையாக அவள் வங்கிக்குச் சென்று கையிலிருந்த டிராவலர்ஸ் செக்குகள் சிலவற்றை மாற்றி மூவாயிரம் ரூபாய்களாக எடுத்துக் கொண்டாள்.

முதல் நாள் பயணத்திற்கு டாக்ஸிக்குக் கொடுத்தது போக-ஊரில் சந்திக்கப் போகும் சட்டநாதன் மனைவிக்குக் காஞ்சிபுரத்தில் ஒரு பட்டுச்சேலையும் முருகம்மாளுக்கு மாற்றுச் சேலையாக ஒரு கைத்தறி நூல் சேலையும், கூடவந்த பேரனுக்குச் சட்டை பாண்ட் துணியும், வீட்டில் உள்ள குழந்தைகளுக்கு பொம்மை-மிட்டாய் இத்யாதிகளையும் வாங்கினதுபோக... ஹோட்டல் பில்லைக் கட்டி முடித்து, பஸ்ஸில் பயணப்படுவதற்குள் பணம் அத்தனையும் காலியாகி விட்டதைக் கண்டு அதிர்ந்து போனாள்.

மீண்டும் கொஞ்சம் டிராவலர்ஸ் செக்குகளை மாற்றி ரூபாய்களாக எடுத்துக்கொண்டு அன்று இரவு புறப்பட்ட பஸ்ஸில் அவர்களுடன் அவள் கிளம்பியபோது மனம் கனத்தது.

பிடிக்குப்பிடி நமச்சிவாயம் என்பார்களே சவுந்தரி அண்ணி, அதைப்போல முருகம்மாள் மூச்சுவிட்ட போதெல்லாம்-வெற்றிலைக்கு ஒரு ரூபாய் எடும்மா, கொஞ்சம் பட்டாணி வாங்கிக்கலாமா, தாகத்துக்கு சோடா... என்று அவளையே சுரண்டிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ந்து போனாள். இந்த நிலையில் அவள் வரதநத்தத்தில் எத்தனை நாள் சமாளிக்க இயலும்? கலங்கிப் போனாள் காவேரி.

21

விடியும் தருவாயில் திருச்சி பஸ் நின்றதும் அவர்கள் இறங்கினார்கள்.

அதற்குப் பின்னர் சேலம் செல்லும் பஸ்ஸில் மீண்டும் நாற்பது கிலோ மீட்டர் பயணப்பட வேண்டும். அங்கங்கு நின்று பயணிகளை இறக்கி ஏற்றிக்கொண்டு பஸ் போகுமாதலால் ஊர் போய்ச்சேர இரண்டுமணி நேரமாவது ஆகும் என்று முருகம்மாள் கூறியதைக் கேட்டுக் காவேரி கலங்கிப் போனாள். துளியளவு தூக்கமின்றி, இரவு முழுவதும் பயணப்பட்டு பஸ்ஸில் குலுக்கப்பட்டு, முதுகு கதவுபோலக் கனக்க அவள் மிகவும் சோர்ந்துவிட்டிருந்தாள்.

மறுபடியும் பஸ் பயணம் அவளை உள்ளூர பயமுறுத்திக் கொண்டிருந்தது. வீட்டு வாசற்படியைத் தாண்டினால் வழுவழுப்பான தார்ச்சாலைகள், அதில் மிதக்கும் கார் என்று சொகுசாக வாழ்ந்து பழக்கப்பட்டவளுக்கு, குண்டும் குழியும் நிறைந்த சாலைகளில் பஸ் குலுங்கி ஓடியபோது உடம்பிலுள்ள எலும்புகள் எல்லாம் நொறுங்கிவிட்டது போன்றதொரு வேதனை.

சற்குணம் அம்மாள் முன்னதாகவே எச்சரித்திருந்தாள். தாய்நாட்டில் கோயில்கள் மிகப் பெரியதாக இருக்கும். பார்க்க பிரமிப்பூட்டும். பட்டுப் புடவைகள் கண்களைப் பறிக்கும். ஆனால் சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கும். மழை பெய்துவிட்டாலோ கேட்கவேண்டாம். நடைபாதையில் கடைகளை விரித்திருப்பார்கள்-மக்கள் வசிப்பார்கள். எங்கு பார்த்தாலும் குப்பை...குவித்துக் கிடப்பதுபோலத் தெரு மூலைகளில் குப்பைத் தொட்டி வழிந்து நிற்கும். சொறிபிடித்த நாய்கள் தன்னிச்சையாகத் திரியும். அந்தக் குப்பைத் தொட்டிகளைக் கிளறிக் கொண்டு காகிதம் பொறுக்க அழுக்குப் பிடித்த உடையும் பரட்டைத் தலையுமாகச் சிறுவர்கள் அலைவார்கள். சுத்தமான தெருக்களுடன் ஆரோக்கிய பாதுகாப்பை அனுசரிக்கும் மக்கள் நிறைந்த நாட்டில் வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்ட நமக்கு அங்கே போனதும் முதலில் கண்களில்படுவது கோவில் அல்ல. குப்பைத் தொட்டிகள்தான். பாரத நாடு பழம் பெரும் நாடுன்னு சொல்லுவாங்க. ஆனால் ரொம்ப அழுக்குப் பிடிச்ச நாடாக நமக்குத் தெரியும்போது மனம் ரொம்ப வேதனைப்படும்...

அத்தனையும் உண்மை என்று எண்ணியபடி அருகே தெருவில் குப்பைத் தொட்டியருகே சுற்றிக் கொண்டிருந்த நாய்களை அருவருப்புடன் பார்த்தபடி தன் சாமான்களைச் சேகரித்துக் கொண்டாள்.

''காவேரி, அதோ தெரிகிற ஓட்டலில் போய்ப் பல்விளக்கி முகம் கழுவிட்டு வயிற்றுப் பாட்டைப் பார்த்துக்கிட்டு பிறகு பஸ் பிடிப்போம். என் மருமகளுக்குக் டைசி குழந்தை பிறந்தப்போ ரொம்ப எசகு பிசகாயிடுச்சு. ப்பப்பையையும் எடுத்துட்டாங்க. அதனாலே அவளுக்குக்

குனிஞ்சு நிமிர்ந்து வேலை எதுவும் அதிகம் செய்ய முடியாது. பாவம்'' என்றாள் முருகம்மாள்.

''ஆபரேஷன் நடந்து எத்தனை நாள் ஆச்சு அம்மா'' விசாரித்தாள் காவேரி.

''குழந்தைக்கு வயசு ஒண்ணாகப் போகுதே.''

'இன்னுமா குனிய நிமிர முடியலை, ஆண்ட்டி, இது என்ன கதை? நர்ஸ் வேலை பார்க்கும் என்னிடமே அளக்கிறீர்களே. எங்கள் நாட்டில் இந்தவிதமான அறுவை சிகிச்சை செய்ததும்...பதினைந்தாவது நாளே அந்தப் பெண் கார் ஓட்டுவாள்-நீச்சலடிப்பாள்-வீட்டு வேலை அனைத்தையும் செய்வாள். வைத்தியர்கள் அப்படி வேலை செய்ய அனுமதிக்கிறார்கள்' என்று கோபத்துடன் பளிச் சென்று சொல்லத் தோன்றியது. பொறுமையைச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டு முறுவலித்தாள். சவுந்தரி அண்ணியின் பிறந்த ஊரைப் பார்க்கப் புறப்பட்டு வந்தாயிற்று. இனி அவள் எந்த இடைஞ்சலையும் பொருட்படுத்தக்கூடாது.

இடுப்பிலிருந்த சிறு வெள்ளி சம்புடத்தை எடுத்துப் பாட்டி முருகம்மாள் பற்பொடியை விரலால் அள்ளிப் பேரனிடம் கொடுத்தாள். ''சீக்கிரம் ஓடி ஹோட்டல் குழாயில் பல் விளக்கி முகம் கழுவிக்கோ. இதோ நாங்களும் வரோம்'' என்றாள்.

காவேரி தன் தோள்பையைத் திறந்து அதில் அடக்கமாக வைத்திருந்த பிளாஸ்டிக் பியூட்டி கிட்டைத் திறந்து தனது பிரஷ், பேஸ்ட், சோப்புப் பெட்டி இத்தியாதிகளை எடுத்துக் கொண்டு ஒரு சிறு துவாலையுடன் ஹோட்டல் குளியலறைப் பக்கம் விரைந்தாள்.

''மசாலா தோசை பாட்டி!'' என்றான் பேரன்.

''எனக்கு இட்லி சாம்பாரும்-மெதுவடையும்-காப்பியும் போதும்'' என்றாள் முருகம்மாள்.

காலை வேளையில் சுட்ட ரொட்டியும், வெண்ணெயும் பாலேட்டுக் கட்டியும் சாப்பிட்டுப் பழகிய காவேரிக்குப் பையன் கொண்டு வந்து வைத்த இட்டிலி சாம்பார் தொண்டையில் இறங்கவேயில்லை.

''பையா! ஒரு பிளேட் தோசை கொண்டா.'' உத்தரவிட்ட முருகம்மாள் காப்பியைக் கடகடவென்று பருகி விட்டு ஹாவ் என்று பலத்த குரலில் ஏப்பம் விட்டாள்.

காவேரி அதிர்ந்து போனாள்.

இருமினாலும்-தும்மினாலும்-அடக்க முடியாது ஏப்பம் விட நேர்ந்தாலும் அருகில் உள்ளவர்களிடம் 'ஸாரி' கூறிவிட்டுக் கூடியவரை முகத்தில் கைக்குட்டையை மூடிக்கொண்டு அதிக சப்தத்தை அடக்கியபடி அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்ற மேல்நாட்டுப் பழக்கத்தில் ஊறிவிட்டிருந்தவளுக்கு முருகம்மாள் பலர் முன்னிலையில் ஏப்பம் விட்டது மிகவும் அருவருப்பாக இருந்தது.

தாய்நாட்டில் கிராமத்தில் வாழ்கிறவர்கள் எல்லோரும் இப்படித்தான் இருப்பார்களா?

இந்தக் கிராமத்திலிருந்து வந்தவர்கள்தானே அண்ணி சவுந்தரி. அவங்க எத்தனை நாசூக்காக-நாகரிகமாக நடந்து கொண்டார்கள! ஒங்கிய குரலில் கூடப் பேசமாட்டாங்களே! அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்து யாரையும் கடிந்து கொண்டதில்லையே! அவர்கள் பிறந்து வளர்ந்த கிராமத்தைச் சேர்ந்த அவர்களது பங்காளிகளின் உறவினரான இந்த முருகம்மாள் ஏன் இப்படிக் காட்டுமிராண்டித்தனமாக நடந்துக்கிறாங்க?

''என்ன, இட்டிலி பிடிக்கவில்லையா... சரி காப்பியைச் சாப்பிடு. எழுந்திரு நேரமாச்சு.'' உசுப்பினாள் முருகம்மாள்.

காவேரி எழுந்து கைகழுவுமுன் பாட்டியும் பேரனும் வெளியே நடந்து சென்றுவிட்டனர்.

பையன் பீங்கான் தட்டில் வைத்து கொண்டுவந்த மில்லை கல்லாப் பெட்டியருகே சென்று தான் கட்டிவிட்டுக் காவேரி வெளியே வந்தாள்.

அதற்குள் பொழுது நன்றாகவே விடிந்து விட்டிருந்தது. அந்த வெளிச்சத்திலே பஸ் நிலையத்தைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினாள் அவள். தலைமீது முக்காடு போட்டபடி மண் தரையில்-பாதை ஓரத்திலே சில மனிதர்கள் இன்னமும் உறங்கிக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சி அவளுக்கு மிகவும் அதிசயமாக இருந்தது. இப்படிப்பட்ட தொரு வினோதத்தை அவள் வசித்த டர்பன் நகரில் அவள் பார்த்ததேயில்லை. ஏன்-இவர்களுக்கெல்லாம் வசிக்க ஒரு சிறு குடிசைகூட இல்லையா? தனக்குள்ளே கேட்டபடி அவள் அவர்கள் மூவருக்கும் பஸ் டிக்கெட்களை வாங்கினாள்.

அதுதான் அன்று காலை முதலாவதாகப் புறப்பட்ட வண்டி. ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டு பஸ் நகர்ந்தபோது நகரத்தையும் அதன் வெளிப்புறத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். நகரத்தைத் தாண்டி நெடுஞ்சாலையில் பஸ் ஓட ஆரம்பித்ததும் சூழ் நிலையில் திடீரென்றதொரு மாற்றத்தைக் கவனித்தாள்.

அடர்ந்து செழிப்பாகத் தெரிந்த பசிய மரங்கள் - அதைத் தாண்டி நெடுஞ்சாலையுடன் நெளிந்து ஓடிய காவேரி நதி... அக்கரையே தெரியாது இத்தனை அகலமாக ஒரு நதியா!... தென் ஆப்பிரிக்கா முழுவதிலும் தேடினாலும் இதற்கு ஈடு

இணையாக ஒரு நதியைப் பார்க்க முடியாதே. அதிசயத்துடன் அகண்ட காவேரியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

''சமீபத்திலே பெய்த மழையாலே காவேரி நிறைஞ்சி ருக்கு. வெய்யக் காலத்திலே சில சமயம் ஒரே முட்டா வறண்டுபோய் ஒரு சிறு வாய்க்காலாட்டமாகூட ஓடும். உன் அதிர்ஷ்டம் நீ காவேரியைக் கண் நிறையப் பார்க்க முடிகிறது'' மேலே இடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த முருகம்மாள் உரத்த குரலில் காதருகே சளசளவென்று பேசிக்கொண்டிருந்தாள்.

''அதோ பார். அதுதான் அழகர்மலை. இன்னும் கொஞ்ச தூரம் போனால் திருவேங்கிமலை வரும். பிறகு அழகான வெற்றிலைக் கொடிக்கால்... கரும்புத்தோட்டம்-வாழைத் தோட்டம்னு பசேலென்று ஊர்கள் பலதைப் பார்க்கப் போறே. ஆமாம், உங்க ஊரிலே நிறையக் கரும்புத் தோட்டம் உண்டுன்னு கேள்விப்பட்டிருக்கேன். அங்கே சர்க்கரை எப்படி? அங்கேயும் ரேஷன்தானா? வைரமும்-தங்கமும் ரொம்பக் கிடைக்குதுன்னு பேசிக்கிட்டாங்க-நீ ஏதாச்சும் கொண்டாந்திருக்கியா?''

பஸ்ஸிலிருந்த பலர் தன்னை வியப்புடன் பார்ப்பதைக் கண்டு வெட்கிப்போனாள் காவேரி.

'அம்மா! கொஞ்சம் வாயை மூடிக்கிட்டிருக்க மாட்டீங்களா? வீட்டுக்குப் போனதும் இதையெல்லாம் பத்தி நல்லா பேசிக்கலாமே? கரும்புக் காடுகள் நிறைந்த நேட்டால் மாநிலத்தில் நூறு வருஷங்களுக்கு முன்னர் கூலி வேலை செய்யப் புறப்பட்டுப் போனவங்கதான் நம்மளவங்களில் பலர். இப்போ பெரிய டாக்டர்களாகவும்-வக்கீல்களாகவும்-வியாபாரிகளாகவும்-அரசியல்வாதிகளாகவும் வசதியாக வாழ்கிறாங்க. தங்கள் உழைப்பினால் அப்படி உயர்ந்து

விட்டிருக்காங்க. சர்க்கரைக்கு எங்க ஊரில் பஞ்சமேயில்லை. அதுபோல சர்க்கரை வியாதிக்கும் பஞ்சமேயில்லை. வைரமும்-தங்கமும் ஏராளம் தோண்டி எடுக்கப்படுகின்றன. ஆனால் நீங்க நினைக்கிறபடி ரூபாய்க்கு மூணு கிலோ எடை என்று இவைகளை நாம் வாங்கிவிட முடியாது. இவைகளுக்கு உலகச் சந்தை விதிக்கும் விலையில் தான் வியாபாரிகள் விற்பனை செய்ய முடியும். அதனால் வைரம்-தங்கம் இவைகளை யாரும் அள்ளிப் பையை நிறைத்துக் கொண்டு வரமுடியாது. அப்படி வந்தால் தாய்நாட்டு சுங்க அதிகாரிகள் சும்மா விடுவார்களா? இதென்ன பேத்தல்!'

படபடவென்று பேசவேண்டும் போல ஆத்திரத்தில் கொதித்துப் போனாள்.

''அம்மா.. எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று கூறி விட்டு ஜன்னல் ஓரமாகச் சாய்ந்தபடி கண்களை இறுக மூடிக்கொண்டாள். இடை இடையே மெல்லக் கண்களைத் திறந்து இடது பக்கத்திலே பஸ்ஸுடன் வேகமாக ஓடி வந்த அந்த அகண்ட காவேரியை அதிசயத்துடன் பார்த்தாள். என்ன கம்பீரம்? என்ன அழகு? என்ன அழகான பெயர்? அவளைப் பெற்ற தாய் அவளுக்குக் காவேரி என்ற அழகான பெயரைத் தந்துவிட்டுப் போயிருக்காங்களே என்று தன்னுள் பெருமையில் பூரித்து மகிழ்ச்சியில் மெய் சிலிர்த்துப் போனாள்.

ஒரு குலுக்கலுடன் பஸ் நின்றது. 'வரதநத்தம்' என்று கண்டக்டர் இரைந்து கூவினார். சில ஆண்களும் பெண்களும்-தங்கள் குழந்தைகளுடன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தனர்.

''நாம இறங்கிற இடம் வந்தாச்சு. எழுந்திரு காவேரி'' முருகம்மாள் அவள் தோளை அழுத்தமாகத் தட்டினாள்.

'இதுவா பஸ் நிலையம்'- அதிசயத்துடன் பார்த்தபடி தன் பெட்டியையும் தோள் பையையும் தூக்கியபடி அவள் இறங்கினாள். கனமான தன் மூட்டைகளையும் பெட்டியையும் கண்டக்டர் பஸ்ஸின் உச்சியிலிருந்து இறக்கித்தர முருகம்மாள் வாங்கிக்கொண்டாள்.

வரதநத்தத்தின் பஸ் நிலையம் என்று கருதப்பட்ட அந்தப் பகுதியில் நிழலைப் பரப்பிக் கொண்டு ஒரு பெரிய புளிய மரமும், அடுத்ததாக ஒரு ஆலமரமும் நின்றன. சில பயணிகள் திருச்சி போகும் பஸ்ஸிற்காகக் காத்திருந்தனர். அவர்களது மூட்டை முடிச்சுகளைத் தாங்கியபடி ஒரு சுமைதாங்கிக் கல் அருகே நின்று கொண்டிருந்தது. அவர்கள் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்-முருகம்மாளுக்குத் தெரியாதவர்கள். எனவே அறிமுகப் படலத்தைத் துவக்காது அவள், ''காவேரி, மூட்டைகளை என் தலைமேல் தூக்கி வை. இந்த மண் பாதை வழியே நாம ஊருக்குப் போகணும். தொலை தூரமில்லை. பயப்படாதே'' என்றாள்.

அந்தக் கிழ வயதில் அத்தனை சாமான்களையும் அவளே தன் தலையில் சுமக்க, பேரன் கை வீசிக்கொண்டு முன்னே நடக்க, காவேரி தன் பெட்டி-கைப்பையுடன் கால் புதையும் மண்ணில் திணறியபடி நடந்தாள்.

நல்லவேளை-சென்னையில் அவர்கள் கடைத்தெருவில் சாமான் வாங்கியபோது காவேரி ஒரு கடையில் தன் உபயோகத்திற்கு ஒரு வகை பிளாஸ்டிக் செருப்புகள் வாங்கியிருந்தாள். புதையும் மண்ணில் அத்துடன் நடக்க அவ்வளவு சிரமமாகத் தெரியவில்லை. குதிகால் பாதம் வைத்த அவளது விலை உயர்ந்த கிளார்க்ஷூ பத்திரமாகப் பெட்டியில் ஒரு பிளாஸ்டிக் பைக்குள் அடங்கியிருந்தது.

''அம்மா! சிவநாதன்கிட்டே அந்தப் பையைத் தாருங்கள்- ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீங்க?'' என்றாள் காவேரி.

''ஆம்பிளைப் பிள்ளை. படிக்கிறவன். அவனைப் போய் மூட்டை தூக்கச் சொல்லலாமா?''

கிழவி பெருமூச்செறிந்தது அவளுக்கு மிகவும் அதிசயமாகத்தான் இருந்தது. அவர்கள் வாழ்ந்த நாட்டில் பெண்கள் சுமையைத் தூக்கிவர ஒரு ஆணும் பார்த்துக் கொண்டு சும்மா நடக்கமாட்டார்கள். சுமையைச் சட்டென்று தாம் வாங்கிக் கொண்டு பெண்களைச் சுகமாக நடக்கவோ உட்காரவோ வைத்து உபசரிப்பார்கள். இந்தியர்கள் எல்லோரும் மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கடைபிடிப்பவர்கள். அதனால்தானோ என்னவோ, பெண்கள் செய்யும் வீட்டு வேலையில்கூடச் சட்டென்று ஆண் பங்கெடுத்துக் கொண்டு உதவுகிற வழக்கம்... இங்கே எல்லாம் தலைகீழாக இருக்கும் போலத் தெரிகிறதே?

லோகேந்திரன் அண்ணன் அடிக்கடி தாய் நாட்டைப் பற்றி இழிவாகப் பேசுவது வழக்கம்.

''படித்திருந்தும் - உத்தியோகம் செய்யும் தகுதியிலி ருந்தும் பெண்கள் தாய்நாட்டில் இன்னமும் அடிமை களாகத்தான் நடத்தப்படுகிறார்கள்'' என்று பேச்சின் நடுவே ஊசியாகக் குத்துவது வழக்கம்.

அது உண்மையா?

சற்றுத் தொலையில் தலையில் ஒரு மூட்டையும் இடையில் ஒரு குழந்தையுமாக நடந்த பெண் அருகே அங்கவஸ்திரத்தை உதறிக்கொண்டு, மீசையைத் தடவியபடி நடந்த கணவனைக் கண்டு அதிர்ந்து போனாள்.

22

கல் எறியும் தூரந்தான் என்றாள் முருகம்மாள்.

பின்னர் தான் காவேரி புரிந்து கொண்டாள். பஸ் நின்ற இடத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவுக்குக் கல்

எறியப்பட்டிருந்தது. வீசினவன் பெரிய விளையாட்டுவீரன் போலும்! தன்க்குள்ளே சிரித்துக் கொண்டு மெல்ல நடந்தான்.

கிராமத்தின் எல்லை ஓரத்திலேயே அமைந்திருந்த அந்தத் தெருவின் நடுவில்தான் அவர்கள் வீடு இருந்தது. சொறி நாய்கள் இரண்டு அவளைக் கண்டதும் கோபத்துடன் குரைத்துக்கொண்டு ஓடி வந்தன. சிவா ஒரு சிறு கல்லை எடுத்து வீசியதும் மாயமாயின. தெருவில் உள்ள பல வீடுகளின் வாயிற்படியிலிருந்தபடி ஆவல் மிக்க ஆண், பெண்கள் எட்டிப் பார்த்தனர்.

எதிர் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு ஒரு அம்மாள் அவசரமாகப் படியிறங்கி வந்து நின்றாள். மஞ்சள் பூச்சில் மினுமினுத்த முத்திலே பெரிய குங்குமப் பொட்டும், கண்களில் ஆவலுமாக வந்தவள் ''யாரு இந்தப் பொண்ணு ஊருக்குப் புதுசாத் தெரியுதே?'' என்று பொதுவாகக் கேட்டபடி, முருகம்மாளை வெறித்துப் பார்த்தாள்.

இரண்டு வீட்டவர்களிடையேயும் துளியும் சிநேகிதம் இல்லை என்று அந்தப் பார்வை பறையடித்ததைக் காவேரி உணர்ந்தாள். முருகம்மாள் தொண்டையைச் செருமிக் கொண்டு உரத்த குரலில் தன் அடுத்த வீட்டுக்காரியை கூப்பிட்டாள்.

''பங்காரு உன்கிட்டே நான் ஊருக்குப் போகும்போது சொல்லிட்டுத்தானே போனேன். சவுந்தரியின் நாத்தனார் சவுத் ஆப்பிரிக்காவிலிருந்து கடிதாசி போட்டிருக்கா-கூட்டிவரப் போறேன்னு சொன்னேன் இல்லையா? அந்தப் பொண்ணுதான் இவ. காவேரின்னு பேர். பிறகு நேரம் கிடைத்ததும் வீட்டுக்கு வா. ஆப்பிரிக்கா பத்தி நிறையக் கேட்கலாம்'' என்று தெருவில் உள்ள அத்தனை பேருக்கும் ஒட்டுமொத்தமாக அறிமுகம் செய்கிற பெருங்குரலில் பேசினாள்.

''அப்படி கொஞ்சம் நில்லும்மா'' என்று சொல்லியபடி உள்ளேயிருந்து வந்த பருமனான நடுத்தர வயதுப் பெண் மணிதான் சட்டநாதன் மனைவி காமாட்சி என்பதைக் காவேரி உணர்ந்துகொண்டாள். பின்னால் இருமும் சப்தம் கேட்டது. ஓங்கி உயரமாக, மெலிந்தவராக லேசாக வழுக்கைத் தலையுடன் வந்தவர்தான் சவுந்தரி அண்ணியின் பங்காளி சட்டநாதன் என்பதையும் புரிந்துகொண்டாள்.

காமாட்சி ஆரத்தி சுத்தி மஞ்சள் நீரில் மிதந்த வெற்றிலை மீது எரிந்து கொண்டிருந்த கற்பூர ஜோதியை விரலால் தொட்டு மஞ்சள் நீரையும் கலந்து அவள் நெற்றியில் பொட்டுவைத்தாள்.

''பிரயாணம் எல்லாம் நல்லாத்தானே இருந்திச்சு?'' என்று பழுப்பாகத் தெரிந்த பற்களைக் காட்டி சட்டநாதன் வரவேற்க, தெருவே வேடிக்கைப் பார்க்க, காவேரி உள்ளே சென்றாள்.

கூடத்தில் தொங்கிய ஒரு ஊஞ்சலையும் சுவரை ஒட்டிக்கிடந்த ஒரு சிறு பெஞ்சியையும் தவிர அந்த வீட்டில் நாற்காலி, மேஜை என்ற அலங்காரம் எதுவும் இருக்கவில்லை. சுவரில் காணப்பட்டதொரு புகைப்படத்தை அவள் வெறிப்பதைக் கண்ட முருகம்மாள், ''நடுவில் உட்கார்ந்திருக்கே, அதுதான் உன் அண்ணி சவுந்தரி. அவ பக்கத்திலே கோட்டும் ஸூட்டுமாக இருக்கிறவர் உன் அண்ணன். பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறது சட்டநாதன். அடுத்தது காமாட்சி, ஓரமா உட்கார்ந்திருக்கிறதுதான் உன் அண்ணியின் தமையன் அமிர்தலிங்கம். எங்க பங்காளி...'' என்று அறிமுகப்படுத்தினாள்.

உண்மைதான். இதே போன்றதொரு படத்தை அண்ணி சவுந்தரியின் போட்டோ ஆல்பத்தில் காவேரி பார்த்திருக்கிறாள். அவள் சரியான வீட்டிற்குத்தான் வந்திருக்கிறாள்- சந்தேகமில்லை என்று மனதிலே கொஞ்சம்

ஆறுதல் கொண்டாள். அவள் உபயோகத்திற்கு என்று தாழ் வாரத்தை ஒட்டிய ஒரு அறையை ஒழித்து வைத்திருந்தார்கள் அவர்கள்.

மூலையில் ஒரு பெரும் நெற்குதிர் நின்று கொண்டி ருந்தது. அதை ஒட்டிச் சில தகர பெட்டிகள் அடுக்காக வைக்கப்பட்டிருந்தன. அந்த அறைக்குள் தான் சுமந்து வந்த பெட்டி, தோள் பைகளை வைத்துவிட்டு முருகம்மாளிடம் வந்து கழிவறை எங்கே இருக்கிறது என்று ரகசியமாகக் கேட்டாள்.

முருகம்மாள் அவளை அழைத்துக்கொண்டு பின்புறக் கதவைத் திறந்து தோட்டத்தின் மூலை ஓரத்திலே எல்லைச் சுவருடன் நான்கு சுவர்களால் அடைக்கப்பட்டிருந்த ஒரு திறந்த வெளியைக் காட்டியபோது அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''ஆம்பிளைங்க காலையில் எழுந்ததும் வாய்காலில் பல் துலக்கிட்டு வயல் வரப்புகளைப் பார்த்தபடி எல்லாத்தையும் முடிச்சிட்டுக் குளிச்சுட்டுக் காப்பி பலகாரம் சாப்பிட வந்துடுவாங்க. பெண்கள் அப்படிக் கிளம்பிப்போக முடியாதேன்னுட்டுத் தம்பி சட்டநாதன் மண்சுவத்தை எழுப்பி இதை கட்டி வச்சிருக்கு'' முருகம்மாள் விளக்கினாள்.

''மின்வசதி இருக்கு. சில வீடுகளில் செப்டிக் டாங்க் உபயோகத்திலிருக்கும்'' என்று வழியில் சிவநாதன் சொன்னானே! ஒரு வசதியும் இல்லாத ஒரு வீட்டில் வந்து மாட்டிக்கொண்டு விட்டிருக்கிறோமே!

காவேரி உள்ளூரக் கலங்கிப் போனாள்.

கிணற்றின் ஓரமாகச் சிறிதளவு சிமெண்ட் பூசப்பட்ட ஒரு பகுதியில் சுற்றிலும் மூங்கில் பாய் தடுப்புப் போட்டு, ஓலை வேய்ந்த கூரையுடன் காணப்பட்ட இடம்தான் குளியலறை என்று காமாட்சி சொன்னாள்.

கற்களைக் கூட்டி அமைத்திருந்த அடுப்பின் மீது காய்ந்த விறகு எரிந்து கொண்டிருக்க, கரியைக் கழுத்து வரை பூசிக்கொண்டிருந்த வெந்நீர் தவலையிலிருந்து தண்ணீரைச் செம்பால் மொண்டு வாளியில் ஊற்றிக் கொண்டு அண்டாவிலிருந்து பச்சைத் தண்ணீருடன் அளவாகக் கலந்து அவள் குளித்து முடிப்பதற்குள் அங்கு சூழ்ந்த புகையில் அவள் திக்குமுக்காடிப் போய்விட்டாள்.

அண்ணியின் வேண்டுகோளை முடிக்கும்வரை இந்தக் கிராம வாசத்தைச் சகித்துக்கொள்ள வேண்டுமே! சற்குணம் கூறியது அத்தனையும் உண்மைதான். வசதியாக வாழ்ந்து பழக்கப்பட்ட அவர்களால் தாய்நாட்டின் கிராம வாழ்க்கை தாக்குப் பிடிக்க முடியாத சங்கதியாக உள்ளதே?

தரைமீது பாயும், தலையணையும் போட்டுப் படுத்துறங்கி விட்டு மறுநாள் எழுந்தபோது முதுகு கதவுபோலப் பிடித்துக்கொண்டு எப்படி வலித்தது!

காப்பி பலகாரம் என்று இட்டலி, தோசை, உப்புமா என்றவைகளை அவளால் சுவைத்துச் சாப்பிடவே முடியவில்லை.

சுட்ட ரொட்டியையும், வெண்ணையையும், பாலேட்டுக் கட்டியையும், ஜாமையும் வந்த ரெண்டு நாளில் நாக்கு தேடித் தவித்தது. இதற்கிடையில் அவளைப் பார்க்க வந்தவர்களின் தொணதொணப்பை அவளால் சகிக்கவே முடியவில்லை.

'சவுந்தரியின் நாத்தனாரா... நர்ஸ் வேலை பார்க்கிறாளா? அங்கெல்லாம் சம்பளம் ரொம்பவாமே. மூக்கும் முழியுமா நல்லாவே இருக்கா' என்று பிரமித்தவர் சிலர்.

'ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருக்கான்னதும் எப்படியோ இருப்பான்னு நினைச்சேன். நம்பளாட்டமே அசல் தமிழ்ப் பொண்ணா இருக்காளே!' அதிசயித்தனர் சிலர்.

தமிழைப் பேசும்போதுதான் இந்தப் பெண் நம்ம ஊர்க்காரியில்லைன்னு தெரிகிறது. மற்றபடி நம்ப கோடி வீட்டு ராசாத்திபோல ஒரு ஜாடையிலே இருக்கா. கல்யாணமாகலையாமே? ஏன் முருகம்மா, உன் அண்ணன் பேரன் சுந்தரத்துக்கு இந்தப் பெண்ணைக் கட்டி வச்சுடலாம் போலிருக்கே' கல்யாணப் பேச்சு வேறு ஆரம்பமாகியது.

'நான் போன மாதம் மெட்ராசிலே ஆப்பிரிக்காவிலிருந்து வந்த ஒரு தமிழ்ப் பெண்ணைச் சந்திச்சேன். அதுக்குச் சுட்டுப் போட்டாக்கூட ஐயோன்னு கத்தக் தமிழ் தெரியலை. நுனி நாக்கைத் தட்டிகிட்டு இங்கிலீஷிலேயே பேசிக்கிட்டிருந்தது. நல்லவேளை, இந்தப் பெண்ணுக்குத் தமிழ் பேசத் தெரிஞ்சிருக்கு. தமிழர்கள் எங்கே போய் இருந்தால் என்ன? அவங்கவங்க தாய் மொழியை மறக்கலாமோ' என்று அதட்டலாகப் பேசிய ஒரு வாயாடிப் பெண்மணி காவேரியை ஏறஇறங்கப் பார்த்தாள்.

நல்லவேளை, சவுந்தரி அண்ணி தயவால் தமிழ் கொஞ்சம் எழுதவும்-படிக்கவும் கூடியவரை நன்றாகப் பேசவும் தெரிந்து கொண்டிருந்தாள், காவேரி. இல்லாவிட்டால் இந்தக் கிராமத்தில் அவள் மிகவும் அவமானப்பட நேர்ந்திருக்கும். நன்றியுடன் அண்ணியை நினைத்துக் கொண்டாள்.

அவளைப் பார்க்க வந்தவர்களுக்கெல்லாம் காப்பியும் மிட்டாய்களும் பலகாரமும் கொடுக்கப்பட்டன.

சாப்பிடக் கலர்கள் தாராளமாக வழங்கப்பட்டன.

முருகம்மாள் அந்தச் செலவிற்கெல்லாம் தினசரி முன்னதாகவே காவேரியிடம் நூறு ரூபாய் வாங்கிக் கொள்ள ஆரம்பித்தாள்.

வெற்றிலை ஒரு கவுளி வாங்க நூறு ரூபாய் எடுத்துப்போன சிவநாதன் மீதிச் சில்லறையை அவளிடம் திருப்பித் தரவேயில்லை.

காவேரி வற்புறுத்திக் கேட்டபோது, மீதியை அவன் புத்தகம் வாங்க எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொன்னான்.

''ஏரு வாங்கணும், அவசரமா ஒரு இருநூறு ரூபாய் கடனாகத் தந்து உதவ முடியுமா?'' சட்டநாதன் கேட்டபோது அவளால் மறுக்கமுடியவில்லை.

கொண்டு வந்து தந்த துணிமணி-பொம்மைகள்-மிட்டாய் கள் போதாது போல் தனக்குக் கைச் செலவிற்கு ஒரு நூறு ரூபாய் தந்து உதவ வேண்டுமென்று வந்து கிசுகிசுத்தாள் காமாட்சி.

''உங்க ஊரிலே சவுந்தரிக்கு கருமாதி-திவசம் இது போன்ற சாங்கியங்கள் ஏதும் செய்திருக்கமாட்டீங்க. அதனாலே நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். புரோகிதரைக் கூப்பிட்டுத் திதி நாளைப் பார்க்கச் சொல்லி, கலசம் வச்சு, பூஜை செய்து, மந்திரத் தண்ணீரை வீடு முழுவதும் தெளித்துக் கழிப்புக்கழிச்சிட்டு ஊரில் உள்ள பத்து வீட்டுக்காரங்களைக் கூப்பிட்டுப் பந்தி போசனம் செய்து வைச்சுடலாம்னு தீர்மானம். அதுக்கு ரொம்ப ஒண்ணும் ஆகாது. இரண்டாயிரம் ரூபாயில் முடிச்சுடலாம். உங்க அண்ணியின் ஆத்மா சாந்தியடையும். என்ன சொல்றே?'' முருகம்மாள் கேட்டதும் காவேரி திடுக்கிட்டுப் போனாள்.

இந்த நிலையில் காரியங்கள் தொடர்ந்தால் அவள் கொண்டுவந்த பணம் எத்தனை நாளைக்கு வரும்? வெகு சீக்கிரம் இவ்விடத்தை விட்டுக் கிளம்பி ஆக வேண்டும் என்றெண்ணிக் கவலையில் ஆழ்ந்து போனாள்.

''ஆத்தில தலைமுழுக ஆசையா இருக்கு'' என்றாள் வந்த மூன்றாவது நாள்.

ஐப்பசி மாத முழுவதும் ஒரு நாள் விடாது காவேரியில் விடியற்காலையில் தொடர்ந்து தலைமுழுகி முருகம்மாள்

தமிழைப் பேசும்போதுதான் இந்தப் பெண் நம்ம ஊர்க்காரியில்லைன்னு தெரிகிறது. மற்றபடி நம்ப கோடி வீட்டு ராசாத்திபோல ஒரு ஜாடையிலே இருக்கா. கல்யாணமாகலையாமே? ஏன் முருகம்மா, உன் அண்ணன் பேரன் சுந்தரத்துக்கு இந்தப் பெண்ணைக் கட்டி வச்சுடலாம் போலிருக்கே' கல்யாணப் பேச்சு வேறு ஆரம்பமாகியது.

'நான் போன மாதம் மெட்ராசிலே ஆப்பிரிக்காவிலிருந்து வந்த ஒரு தமிழ்ப் பெண்ணைச் சந்திச்சேன். அதுக்குச் சுட்டுப் போட்டாக்கூட ஐயோன்னு கத்தக் தமிழ் தெரியலை. நுனி நாக்கைத் தட்டிகிட்டு இங்கிலீஷிலேயே பேசிக்கிட்டிருந்தது. நல்லவேளை, இந்தப் பெண்ணுக்குத் தமிழ் பேசத் தெரிஞ்சிருக்கு. தமிழர்கள் எங்கே போய் இருந்தால் என்ன? அவங்கவங்க தாய் மொழியை மறக்கலாமோ' என்று அதட்டலாகப் பேசிய ஒரு வாயாடிப் பெண்மணி காவேரியை ஏறஇறங்கப் பார்த்தாள்.

நல்லவேளை, சவுந்தரி அண்ணி தயவால் தமிழ் கொஞ்சம் எழுதவும்-படிக்கவும் கூடியவரை நன்றாகப் பேசவும் தெரிந்து கொண்டிருந்தாள், காவேரி. இல்லாவிட்டால் இந்தக் கிராமத்தில் அவள் மிகவும் அவமானப்பட நேர்ந்திருக்கும். நன்றியுடன் அண்ணியை நினைத்துக் கொண்டாள்.

அவளைப் பார்க்க வந்தவர்களுக்கெல்லாம் காப்பியும் மிட்டாய்களும் பலகாரமும் கொடுக்கப்பட்டன.

சாப்பிடக் கலர்கள் தாராளமாக வழங்கப்பட்டன.

முருகம்மாள் அந்தச் செலவிற்கெல்லாம் தினசரி முன்னதாகவே காவேரியிடம் நூறு ரூபாய் வாங்கிக் கொள்ள ஆரம்பித்தாள்.

வெற்றிலை ஒரு கவுளி வாங்க நூறு ரூபாய் எடுத்துப்போன சிவநாதன் மீதிச் சில்லறையை அவளிடம் திருப்பித் தரவேயில்லை.

காவேரி வற்புறுத்திக் கேட்டபோது, மீதியை அவன் புத்தகம் வாங்க எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொன்னான்.

''ஏரு வாங்கணும், அவசரமா ஒரு இருநூறு ரூபாய் கடனாகத் தந்து உதவ முடியுமா?'' சட்டநாதன் கேட்டபோது அவளால் மறுக்கமுடியவில்லை.

கொண்டு வந்து தந்த துணிமணி-பொம்மைகள்-மிட்டாய் கள் போதாது போல் தனக்குக் கைச் செலவிற்கு ஒரு நூறு ரூபாய் தந்து உதவ வேண்டுமென்று வந்து கிசுகிசுத்தாள் காமாட்சி.

''உங்க ஊரிலே சவுந்தரிக்கு கருமாதி-திவசம் இது போன்ற சாங்கியங்கள் ஏதும் செய்திருக்கமாட்டீங்க. அதனாலே நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். புரோகிதரைக் கூப்பிட்டுத் திதி நாளைப் பார்க்கச் சொல்லி, கலசம் வச்சு, பூஜை செய்து, மந்திரத் தண்ணீரை வீடு முழுவதும் தெளித்துக் கழிப்புக்கழிச்சிட்டு ஊரில் உள்ள பத்து வீட்டுக்காரங்களைக் கூப்பிட்டுப் பந்தி போசனம் செய்து வைச்சுடலாம்னு தீர்மானம். அதுக்கு ரொம்ப ஒண்ணும் ஆகாது. இரண்டாயிரம் ரூபாயில் முடிச்சுடலாம். உங்க அண்ணியின் ஆத்மா சாந்தியடையும். என்ன சொல்றே?'' முருகம்மாள் கேட்டதும் காவேரி திடுக்கிட்டுப் போனாள்.

இந்த நிலையில் காரியங்கள் தொடர்ந்தால் அவள் கொண்டுவந்த பணம் எத்தனை நாளைக்கு வரும்? வெகு சீக்கிரம் இவ்விடத்தை விட்டுக் கிளம்பி ஆக வேண்டும் என்றெண்ணிக் கவலையில் ஆழ்ந்து போனாள்.

''ஆத்தில தலைமுழுக ஆசையா இருக்கு'' என்றாள் வந்த மூன்றாவது நாள்.

ஐப்பசி மாத முழுவதும் ஒரு நாள் விடாது காவேரியில் விடியற்காலையில் தொடர்ந்து தலைமுழுகி முருகம்மாள்

கண்ட சுகம்? மூட்டு வலியால் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். வயதுக் கோளாறு, அதனால் மூட்டு வலி என்று டாக்டர்கள் சொன்னதை அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. தன் நோயின் காரணம் காவேரி ஸ்நானம் என்று நம்பினாள்.

இந்தப் பெண்ணைக் கையில் போட்டுக் கொண்டால் தான் மேற்கொண்டு பல காரியங்களை நடத்த இயலும் என்ற எண்ணத்துடன், ''சிவநாதனைத் துணைக்கு அனுப்பி வைக்கிறேன், நீயே போய்த் தலைமுழுகிட்டு வந்துடு' என்று அனுப்பி வைத்தாள்.

பொடி நடையாகக் கையில் ஒரு காகிதப் பொட்டலத்துடன் காவேரி ஆற்றை நோக்கிப் புறப்பட்டாள். சாலையைக் கடந்து, ஆற்றங்கரை ஓரத்தைத் தாண்டி, நாணல் புதர்களிடையே ஓடிய வெண்ணிற மணல் பாதையில் இறங்கி, பெண்கள் குளிக்கும் இறங்கு துறையை அடைந்தாள்.

'அம்மாடி! காவேரி ஆறு இத்தனை அகலமாகவா பரவி ஓடுகிறது?' பிரமிப்புடன் நின்றாள்.

கீழ்வானம் சிவந்து, கொண்டு சூரியன் கிளம்பிப் பொன்னாக இளம் வெய்யிலைப் பரப்பிக் கொண்டிருந்தது.

தோய்க்கும் கல்லில் மஞ்சளை உரசிக் குழைத்து முகத்தில் அப்பிக்கொண்டு நின்ற ஒரு பெண்மணி விருக்கென்று திரும்பினாள்.

''பொம்பளைங்க குளிக்கிற இடத்திலே நீ வந்து நிக்கலாமா சிவா. கரையோரத்திலே போய்க் கொடுக்காபுளி மரத்துக்கிட்ட போய் நில்லு. இவள் குளிச்சதும், நான் கூட்டி வரேன்'' என்று அதட்டினாள்.

சிவநாதன் அங்கிருந்து அகன்றதும் அந்தப் பெண்மணி அவளைப் பார்த்து முறுவலித்தாள்.

''நீ வந்தன்னிக்கே உன்னைப் பார்த்தேன். பயப்படாதே. சும்மா தண்ணியிலே என் கையைப் பிடிச்சுட்டு இறங்கு'' என்று உபசரித்தாள்.

காவேரி கேட்க விரும்பிய சங்கதிக்கு அவள் சட்டென்று பதில் சொல்லிவிட்டாள்.

''உங்க வீட்டுக்கு எதிரே இருக்கிற நீலச் சாயம் பூசின வீட்டிலேதான் இருக்கிறோம். என் பேர் மரகதம். எனக்கும் உங்க வீட்டுக் கிழவி முருகம்மாளுக்கும் ஆகாது. பேசறது கூட இல்லை. ஆமாம், ஆப்பிரிக்க ஆறுகளிலே முதலைகள் இருக்குமாமே, உண்மையா?''

தண்ணீருக்குள் இறங்கக் காலை வைத்த காவேரி திடுக்கிட்டுக் கரைப் பக்கம் திரும்பி ஓடினாள்.

மரகதம் களுக்கென்று சிரித்துவிட்டாள். ''பயப்படாதே. இந்த ஆற்றில் இறங்கு துறையில் முதலை ஏதும் கிடையாது. ஆனால் உங்க வீட்டில்தான் பெரிய முதலை இருக்கு. அதுகிட்ட நீ ஜாக்கிரதையா இருக்கணும்'' என்றபடி அவள் கையைப் பற்றி இழுத்தாள்.

நீச்சல் உடையில் கடலில் இறங்கிக் குளித்துப் பழக்கப்பட்டவள் காவேரி. மரகதத்தைப் போலப் புடவையை மார்பின் மீது இறுக்கமாகக் கட்டிக்கொண்டு தண்ணீரில் இறங்கத் தெரியவில்லை. கூச்சத்துடன் கையிலிருந்த காகிதப் பொட்டலத்துடன் தான் கட்டி வந்த புடவை ரவிக்கையோடு நீரில் இறங்கினாள்.

''அது என்ன பொட்டலம்?'' மரகதம் கேட்டாள்.

''என் அண்ணி சவுந்தரியின் வேண்டுகோளை நிறைவு செய்யத்தான் நான் இந்த ஊருக்கு வந்தேன். அவங்க இறக்குமுன் சொல்லிவிட்டுப் போயிருக்காங்க. அவங்களுடைய புடவை ஒன்றையும் ரவிக்கையையும் இந்தக்

காவேரி நதியில் போடச் சொன்னாங்க. அதைச் செய்யு'' என்று கூறியவள் உணர்ச்சி வசத்தில் பேச முடியாது, கையிலிருந்த பொட்டலத்தை அவிழ்த்துத் தண்ணீரில் போட்டு நனைத்து வெகு தொலைவில் விட்டெறிந்தாள்.

உதயசூரியனை நோக்கிக் கும்பிட்டபடித் தலையை அவிழ்த்துக் கொண்டு தண்ணீருக்குள் மூழ்கி எழுந்தாள். கால்களைப் பச்சிளங்குழந்தைகள் போல சிறு மீன் குஞ்சுகள் மெல்லக் கடித்தபோது, மேனி புல்லரித்தது. மறுபடியும் முழுகி எழுந்தாள்.

''அண்ணி... நீங்க கேட்டுகிட்டபடி செய்துவிட்டேன் அண்ணி'' என்று கூறியபடி அவள் விசும்பியபோது மரகதம் சட்டென்று ஓடிவந்து அவளை ஆதரவுடன் கட்டிக் கொண்டாள்.

''அழாதேயம்மா காவேரி, உன் அண்ணியின் ஆத்மா சாந்தியடைஞ்சுடும். ஆனால் நீ ஒரு காரியம் உடனடியாகச் செய்தால் உனக்கு நல்லது.''

''என்ன செய்யணும்?'' காவேரி வியப்புடன் கேட்டாள்.

''இங்கிருந்து நீ சீக்கிரம் கிளம்பிப் பட்டணம் போய் அங்கே வேறே தெரிஞ்சவங்க வீட்டில் போய்த் தங்கிட்டுக் காலாகாலத்தில் உன் ஊர் போய்ச் சேர்ந்துடணும். இல்லாட்டி உன் கைப்பணம் எல்லாம் கரைஞ்சு போய் நீ நடுத்தெருவில் நிற்பே. இப்படித்தான் கொஞ்ச நாட்கள் முன் உன் பங்காளி வீட்டவர்களுக்குத் தூரத்து உறவுக்காரப் பையன் சிங்கப்பூரிலிருந்து வந்தான். வந்த ஒரு வாரத்தில் கைக் கடிகாரத்திலிருந்து-சட்டை துணிமணிகள்-டேப் ரிக்கார்டர்-போட்டோ காமிரா-டிரான்சிஸ்டர் எல்லாத்தையும் முருகம்மா ஜாலம் செய்து பிடுங்கிக்கொண்டு அந்தப் பையனை அம்போன்னு நிக்க வச்சிட்டாங்க. நான் இருநூ[illegible]பாய் [illegible]டன் கொடுத்து மெட்ராஸ் அனுப்பி [illegible]ன்

எப்படியோ ஊர் போய்ச் சேர்ந்துட்டான். என் பணத்தையும் நாணயமா அனுப்பிட்டான்.''

''நான் என்ன செய்வேன் ஆண்டி? இங்கிருந்து எப்படிக் கிளம்புவேன்?'' பரபரப்புடன் கேட்டாள் காவேரி. அவள் நெஞ்சு பயத்தில் துடித்தது.

''அதுக்கு நான் உதவி செய்கிறேன். கவலைப்படாதே. விவரமா நான் சொல்லறதைக் கேள்.''

''சொல்லுங்க கேட்டுக்கிறேன்'' என்றபடி காவேரி கவலையுடன் தோய்க்கும் கல்மீது உட்கார்ந்து கொண்டாள். நனைந்த உடையில் அவளது உடல் நடுங்கியது. முருகம்மாளை நினைத்து உள்ளம் பதறியது.

23

தண்ணீரைக் கைகளால் அளைந்தபடியே மரகதம் பேசினாள்.

''சட்டநாதன், எரு வாங்கணும்-கடனா கொஞ்சம் பணம் தந்து உதவுன்னு கேட்டிருப்பாரே! காமாட்சி கைச்செலவுக்கு வேணும்னு காதைச் கடிச்சிருப்பாளே? சிவநாதன்-முருகம்மா இரண்டு பேரும் மாத்தி மாத்திக் கை நீட்டியிருப்பாங்களே?''

சிரித்துக் கொண்டே மரகதம் அவளைப் பார்த்தபோது காவேரி திகைத்துப் போனாள்.

''ஆமாம், உண்மைதான். நீங்க அந்த வீட்டு வாசல் படியைக்கூட மிதிச்சதில்லை. ஆனால் பக்கத்திலிருந்து பார்த்ததுபோல சொல்றீங்களே?'' வியப்புடன் கேட்டாள்.

''உன் அண்ணியின் பங்காளியின் குடும்பத்தை நான் ஆரம்பத்திலேயே நல்லா எடைபோட்டு வச்சிருக்கேன்.

பாவம் உங்க அண்ணியின் தமையன் அமிர்தலிங்கம், தமது கடைசிக் காலத்தில் இவங்ககிட்டே வசமா சிக்கிக்கிட்டார். வீடு, நிலம், வங்கியிலிருந்த பணம் எல்லாத்தையும் தன் மேல் எழுதிவச்சால் ஒழிய ஒரு கவளம் சோறு கூடக் கிடையாதுன்னு அந்தக் கிழவரை சட்டநாதன் வாயிற் திண்ணையில் பட்டினி போட்டுவிட்டிருந்தார். பாவம், அந்தக் கிழவர் ஒரு பிச்சைக்காரனைப் போலக் கடைசி வரை காசையும் வீட்டையும் இவங்களுக்குக் குடுத்துட்டுத் திண்ணையிலேயே ஒரு அலுமினியத் தட்டும்-குவளையுமாகக் கிழிந்த பாயில் படுத்துக்கிட்டு உசிரை விட்டார். அப்படிப்பட்ட பாதகர்களாச்சே உங்க பங்காளிமார்கள்...''

''அண்ணியின் வேண்டுகோளுக்கிணங்கி நான் இங்கு வந்தேன். இல்லாட்டா ஒரு கடிதம் எழுதி நானே வலுவில் இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்க மாட்டேன் ஆண்டி. இப்ப நான் என்ன செய்யணும்?'' பரபரப்புடன் கேட்டாள் காவேரி.

''சட்டநாதன் ஒவ்வொரு சனிக்கிழமையும் பக்கத்து டவுனுக்குத் தமது நிலத்துக்கு ஏதாச்சும் வாங்கிவர கிளம்பிப் போய்விடுவார். அங்கே தன் சிநேகிதர்களைச் சந்திச்சு, பேசி சிரிச்சுக்கிட்டு ஓட்டலில் சாப்பிட்டுட்டு மெதுவா சாயங்காலந்தான் வீடு திரும்புவார். முருகம்மாள் காமாட்சி சிவா மத்த குழந்தைகளைக் கூட்டிகிட்டு பகல் வேளை சினிமாவுக்குப் பக்கத்து ஊருக்குக் கிளம்பிடுவாங்க. சனிக்கிழமையன்னிக்கு அங்கே ஒரு டெண்ட் கொட்டகையிலே புதுப்படம் போடுவார்கள். அதை முதல் நாளே பாக்காட்டா முருகம்மாவின் தலை வெடிச்சிடும்.''

''என்னையும் கூட அழைப்பார்களே, என்ன செய்வேன்?''

''நீ உன் அண்ணியின் வருஷ திவசம் முடியும்வரை சினிமா, டிராமா பார்க்க விரும்பலைன்[illegible] பிடிவாதமா

மறுத்துடு. அதுதான் வழி. நீங்கள்ளாம் போய்ட்டு வாங்க, நான் வீட்டைப் பார்த்துக்கறேன்னு சொல்லு. முருகம்மாள் கையில் ஒரு இருபது ரூபாயை வச்சி அழுத்து. ஆசாமி அப்படியே அடங்கிப் போயிடுவா.''

''ரொம்பப் பணம் அவங்களுக்குத் தேவைப்படுதுன்னு என்னைத் தொளைச்சா?''

''அதுக்குமேலே ஒரு காசுகூடத் தராதே. இதுதான் நீ இவளுக்குக் கடைசியாகக் கொடுக்கிற தொகை-நீ இங்கிருந்து தப்பிப் போகச் செலவழிக்கிற பணம். பல்லைக் கடிச்சிட்டுப் பொறுமையா இரு. இரண்டே நாள்தான் இருக்கு. அதுக்குள்ளாரப் பணம் வேணும்னு சட்டநாதன் உன்னைத் தொந்தரவு செஞ்சா கூசாமல் ஒரு பொய்யைச் சொல்லு! ஊரிலிருந்து உன் பெயருக்கு ஒரு பெரிய டிராஃப்ட் வரப்போகிறது. அந்த வீட்டு முகவரிக்குத்தான் வரும். அதை வங்கியில் மாத்தி அவர் கேட்டதைக் கொடுப்பதாகச் சொல்.இப்போ கையில் அத்தனைப் பணம் ஏதும் இல்லைன்னு பயப்படாமச் சொல்லிடு.''

''இதெல்லாம் உங்க மூளைக்கு எப்படி ஆண்டி உதயமாகுது?'' சிரித்தபடி வியப்புடன் கேட்டாள் காவேரி.

''சிங்கப்பூர் பையனின் அனுபவத்தின் பேரில் சொல்கிறேன். அவன் சுத்தக் கோழை. ஊரிலிருந்து அவனுக்கு வந்த டிராஃப்ட்டை மாத்தி இவங்களுக்குக் கொடுத்துட்டுக் கடனாளியாகக் கிராமத்தைவிட்டுப் போனவனாச்சே... ஒருத்தர் தவறு செய்தால் அது அவருக்கு ஒரு பாடமாக அமைகிறதோட ஊரரருக்கும் ஒரு பாடம் இல்லையா?''

''அப்படியே செய்கிறேன் ஆண்ட்டி.''

''இன்னியிலிருந்து காவேரி நதிக்குக் குளிக்க நீ வரதுக்குத் தவிர மத்தபடி அவங்க கூப்பிட்டாங்க, இவங்க

வரச்சொன்னாங்கன்னு முருகம்மாகூட வெளியே எங்கும் போகாதே. பெட்டியையும் தோள் பையையும் பத்திரமாகக் கவனிச்சிக்கோ. மணிபர்சை அவங்க கண் முன்னாடி எங்கேயும் வைக்காதே. ரெண்டுநாள் பொறுமையா இரு. அவங்கள்ளாம் சினிமாவுக்குக் கிளம்பினதும் உன் சாமான்களை எடுத்துக்கிட்டு நீ தயாரா இரு. வீட்டைப் பூட்டி சாவியை அவங்க பக்கத்து வீட்டுக்காரம்மாகிட்ட தர வழக்கம். உன்னை நான் ஒரு மாட்டுவண்டியில் ஏத்திக்கிட்டு கூடவே வந்து பஸ் நிலையத்தில் காத்திருந்து திருச்சிக்குப் போற பஸ்ஸில் ஏத்தி விட்டுடறேன். நீ அங்கே போனதும் நேரே மெட்ராஸ் போற பஸ்ஸிலாவது இல்லாட்டா டிக்கெட் கிடைச்சா ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரசிலாவது பட்டணம் போய்ச் சேர். இவ்வளவு தூரம் புறப்பட்டு வந்திருக்கிற உனக்கு பட்டணத்திலே தெரிஞ்சவங்க இல்லாமலா இருக்கும்?...''

''அங்கே சிவசக்தி ஆசிரமத்துக்குப் போகணும்ன்னுதான் ஊரிலிருந்து கிளம்பி வந்தேன் ஆண்டி.''

''பரவாயில்லை. உனக்கு இந்தச் சின்ன வயசிலே கோவில், குளம், ஆசிரமம், இதுகளைப் பார்க்கணும்னு இருக்கு. அந்த ஆசிரமத்தை நான் ஒரு தடவை மகாபலிபுரம் போறச்சே பார்த்த நினைப்பு. என் மருமகள் திருவான்மியூரைச் சேர்ந்தவ, கேட்டு நாளைக்கு விவரமா சொல்றேன்'' என்றாள்.

காவேரிக்கு மரகதத்தைப் பார்க்க மிக்க வியப்பாகத் தானிருந்தது. பார்த்தால் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பத்தாம்பசலி போன்ற தோற்றம்; வாயைத் திறந்தால் புத்திசாலித்தனம் கொட்டுகிறதே நீர் வீழ்ச்சி போல!

''அப்படியே செய்கிறேன் ஆண்ட்டி'' என்று ஒப்புக்கொண்டாள்.

அந்த இரண்டு நாட்களும் அவள் காலை வேளையில் எழுந்து சிவாவின் துணையுடன் காவேரி ஆற்றில் குளித்து மகிழ்ந்தாள். அவள் வரவுக்காகவே வெகுநேரம் தண்ணீரை அளைந்தபடி மரகதமும் தினமும் காத்திருந்தாள். கொடுக்காபுளி மரத்தடியில் சிவநாதன் சிவனே என்று நிற்க... அவர்களிருவரும் தங்களது திட்டத்தை தீவிரமாகத் தீட்டிக் கொண்டிருந்தனர்.

மரகதத்தின் ஆலோசனைப்படியே காவேரிஅணுவளவும் பிசகாது நடந்துகொண்டாள்.

'எரு வாங்கப் பணந்தானே? சிவாவுக்குப் புத்தகங்கள் வாங்கணும்? வீட்டுச் செலவுக்குக் கொஞ்சம் பணம் தேவையா? கவலைப்படாதீங்க, எனக்கு ஒரு பெரிய டிராஃப்ட் ஊரிலிருந்து அடுத்த வாரத்துக்குள்ளே வந்திடும். அதை மாத்தித் தாராளமா தரேன். எங்க அண்ணிக்குச் சொந்தக்காரங்க-என்னை இப்படி அன்பா கவனிக்கிறீங்க. உங்களுக்குச் செய்யாம..' என்று பகட்டாக மரகதம் சொல்லித் தந்ததைக் கிளிப்பிள்ளையாக ஒப்பித்தாள்.

★ ★ ★

அன்று சனிக்கிழமை அவளை வீட்டுக்குத் துணையாக வைத்துவிட்டு முருகம்மாள் வழக்கம்போல்-மரகதம் சொன்னதைப் போல அவளிடம் கடைசியாக இருபது ரூபாய்களைக் கறந்துகொண்டு குடும்பத்துடன் சினிமாவுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

பலவிதத் தந்திரங்களால் அவளை அவர்கள் ஏமாற்றிய போதிலும் காவேரியின் மனம் கலங்கியது. சொல்லாமற் கொள்ளாமல் திருடியைப் போல வெளியேறுவது முறையில்லை என்று உள்ளம் உறுத்தியது.

பெட்டியையும், தோள்பையையும் தயாராக எடுத்துக் கொண்டுவீட்டைப் பூட்டுமுன் ஒரு கடிதம் எழுதினாள்.

அன்புள்ள அம்மா அவர்களுக்கு,

உங்கள் துணையுடன் வரதநத்தத்திற்கு வந்து உங்களது வீட்டில் தங்கி, பல உதவிகள் பெற்றுக் கொண்டு என் அண்ணியின் கடைசி வேண்டுகோளை நான் நிறைவேற்றி விட்டேன். காவேரி ஆற்றில் அவர்களுடைய ஆன்மா சாந்தியடையக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு, நானும் தலை முழுகி என் கடமையைச் செய்துவிட்டேன். இதுவரை என்னை உங்களுடைய வீட்டில் வைத்து ஆதரித்ததற்கு மிக்க நன்றி. நான் அவசரமாக ஊருக்குப் புறப்பட்டுப் போகிறேன். வேறு ஒரு முக்கிய காரியத்தைக் கவனிக்க வேண்டி யிருப்பதால் உங்களிடம் நேரில் சொல்லிக்கொள்ள இயலவில்லை. மன்னிக்கவும். வீட்டுச் சாவியை பக்கத்து வீட்டு அம்மாளிடம் கொடுத்துப் போகிறேன். எங்களது உறவினர்களான உங்களைச் சந்தித்து உங்களுடன் தங்கியிருக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி.

-காவேரி

கடிதத்தைத் தனக்குத் தெரிந்த தமிழில் சிரமப்பட்டு எழுதி அவர்கள் கண்களில் படும்படி ஊஞ்சல் பலகைமீது வைத்து அது பறந்து விடாதிருக்கக் கனமானதொரு வெண்கல டம்ளரை அதன் மீது வைத்துவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

''சாவியை என்னிடம் கொடு. நான் உன்னை பஸ்ஸில் ஏற்றிவிட்டுப் பிறகு எனக்குத் தெரிந்த கோடிவீட்டுப் பெண்ணிடம் கொடுத்து அதை அவர்களுடைய பக்கத்துவீட்டுகாரிகிட்டே சேர்த்துடறேன். இப்பவே கொடுத்தா பக்கத்துவீட்டுக்காரி சந்தேகப்பட்டா [illegible]காரியம் கெட்டுடும்'' என்று எச்சரித்தாள் மரகதம்.

ஆனாலும் காவேரியின் மனம் திக்திக்கென்று தான் அடித்துக் கொண்டது. கோழை போல... திருடி போல இப்படி அவள் அவர்களிடம் நேர்முகமாக விடைபெற்றுக் கொள்ளாது ஓடுவது முறையா? ஏதாவது சாமான்களைக் காணவில்லை என்று முருகம்மாள் அவள் மீது திருட்டுப் பட்டம் கட்டிப் போலீசை ஏவிவிட்டால்!...

அவளது குழப்பத்தை உணர்ந்து கொண்ட மரகதம் அதற்குப் பதில் சொல்லிவிட்டாள்.

''முருகம்மாள் அப்படி ஏதும் செய்யமாட்டாள். முன்பு ஒரு சமயம் தூரத்து உறவுக்காரி ஒருத்திமேல் திருட்டுப் பட்டம் கட்டிப் போலீஸ்வரை நடந்தபோது... அந்த உறவுக்காரப் பெண், தன் வைர மோதிரத்தை இவள் திருடிக்கொண்டு விட்டாள்னு கிழவிமீது போலீசில் புகார் செய்ய ஊரே இரண்டுபட்டுப் போய்விட்டது. அதிலிருந்து போலீஸ் இருக்கும் திக்குப் பக்கம்கூடத் திரும்பிப் பார்க்கக் கிழவிக்குப் பயம்.'' சிரித்தாள் மரகதம்.

அன்று இரவு ஒன்பது மணியளவில் திருச்சி நிலையத்திலிருந்து ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ் நகர்ந்த போதுதான் காவேரியின் மனதில் சிறிது அமைதி ஏற்பட்டது.

''சென்னையை அடையும்வரை -வண்டியில் ஊர் பேர் தெரியாத யாரிடமும் பேச்சு வச்சுக்காதே. ஊருக்குப் புதுசுன்னு புரிஞ்சு கொண்டா ஆளை அப்படியே முழுங்கிடற ஆசாமிகள் அங்கே உண்டு. அதனாலே டாக்சியில் ஏறினால் சிவசக்தி ஆசிரமத்துக்குப் போகணும்... மகாபலிபுரம் போற பாதையில் இருக்கே, அந்த ஆசிரமம். மருந்தீஸ்வரர் கோயில் தாண்டிக் கொஞ்ச தூரத்திலே நான் சொல்றபடி போன்னு டாக்ஸிகாரர்கிட்டே துணிச்சலாச் சொல்லு. உன்னை வீணா ஊரைச் சுத்தி வலம் வராம நேரே அங்கே ஓட்டிகிட்டுப் போவார் அவர். மருந்தீஸ்வரர் கோயிலுக்குப் பிறகு சில

கிலோ மீட்டர் போனால் பாலவாக்கம் என்னும் ஊர் வரும். அதைத்தாண்டி கொஞ்சதூரம் போனால் கடற்கரை ஓரத்திலே நீ தடுமாறினாலும் உன்னை வாவான்னு அழைக்கிறாப்பல வெள்ளைச் சுற்றுச் சுவருடன் கேட்டின் மேல் வளைவா பெரிய சிவப்பு எழுத்திலே முகத்தில் அறைகிறாப்பல சிவசக்தி ஆசிரமம்னு எழுதியிருக்கும். வழி புரியாட்டா பயப்படாம டாக்ஸியை நிறுத்திட்டுப் பக்கத்திலே இருக்கிற ஒரு கடையிலே கேட்டாக்கூடச் சொல்லுவாங்க. ரிக்ஷாக்காரங் களை விசாரிச்சாலும் வழி காட்டுவாங்க. பயப்படறாப்பல காட்டிக்காதே. நீ படிச்ச பொண்ணு. துணிவா இருக்கணும்'' என்று மரகதம் மூச்சு விடாது மாட்டு வண்டி பயணத்தின் போதும்-பஸ்ஸுக்காகக் காத்திருந்த போதும் உபதேசித்தது அவளது மூளையில் சுழன்று கொண்டிருந்தது.

இனி எச்சரிக்கையாக இரு என்று யாரோ அவளது காதுகளில் கத்துவது போன்ற பிரமையில் உறக்கமின்றி ரயில் பயணம் முழுவதும் பலவாறு சிந்தித்தபடி இருந்தாள்.

★ ★ ★

டாக்ஸிக்கு உண்டானதைக் கொடுத்துவிட்டு இறங்கினாள்.

கையில் சிறு பெட்டியும், தோளில் பையுமாக உள்ளே நுழைய முயன்றவளை வாயில் கேட்டருகே நின்ற காக்கிச்சட்டைக் காவலாளி, வெறித்துப் பார்த்துவிட்டுக் கையமர்த்தினார். ''யார் நீங்க?'' என்று விரைப்பாகக் கேட்டார்.

மரகதம் அதற்கும் முன்னதாகவே ஒரு உத்தி சொல்லிக் கொடுத்திருந்தாள்.

''சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி தரமாட்டார்னு இந்த நாட்டில் ஒரு பழமொழி உண்டு. ஆசிரமத்துக்குள்ளே

போக உன்னிடம் அனுமதி இருந்தாலும் வாயிலில் நிற்கும் காவலாளி உன்னைச் சட்டுனு உள்ளே விடமாட்டார். அவருக்கு நீ ஏதாச்சும் தட்சிணை வைக்கணும். இது ஆதிநாள் தொட்டு நடக்கும் காரியம். அதனால்தான் போலும் ஸ்ரீ ஆண்டாள் அம்மையே தமது திருப்பாவையில் குறிப்பிட்டிருக்காங்க-

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே!
கொடித் தோன்றும் தோரண வாயில் காப்பானே!
மணிக்கதவம் தாள் திறவாய்...

நந்தகோபனுடைய அரண்மனைக்குச் சென்று ஆயர் பெண்கள் வாயில் காப்பானை நோக்கி ''கண்ணனைத் துயிலெழுப்பத் தாங்கள் வருவதற்கு நேற்றே அவர் ஒப்புதல் கொடுத்திருக்கிறார். தூய்மையாக வந்திருக்கிறோம். கதவைத் திறவாய்னு கெஞ்சிக் கேட்டுக்கிறாங்க'' என்று வேடிக்கையாக விரிவுரை தந்ததை எண்ணித் தனக்குள் லேசாக முறுவலித்தபடி காவேரி மணிபர்சை எடுத்தாள்.

பத்து ரூபாய் தாளைக் காவலாளி கையில் வைத்து அழுத்தினாள்.

''இங்கே வருவதாக நான் ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு கடிதம் முன்னதாகப் போட்டுவிட்டிருக்கேன். என்னை இங்கே தலைவர் எதிர்பார்த்துக்கிட்டிருப்பார்'' என்றாள். உண்மையில் அவள் அந்த ஆசிரமத்துக்குப் புறப்படுமுன் ஒரு கடிதம் போட்டிருந்தாள். ஆனால் பதில் வருமுன் பறந்து வந்திருந்தாள்.

''அப்படியா, ஆப்பிரிக்காவிலிருந்து வருகிறீர்களா? எல்லாரும் காலை வேளையில் மௌனப் பிரார்த்தனையில் இருப்பாங்க. சத்தம் செய்யாம அந்த வேப்ப மரத்தடியில் உட்காருங்க. கொஞ்ச நேரம் கழிச்சு-பிரார்த்தனை முடிஞ்சதும்

உங்களைப் பெரிய சாமியார் கிட்ட அழைச்சிட்டுப் போறேன்.'' பற்களைக் காட்டிப் பணிவாகப் பேசினாள் காவலாளி.

முன்னால் தெரிந்த பெரிய ஹாலில் பல தலைகள் தெரிந்தன. எல்லோரும் குனிந்து தரையைப் பார்த்த வண்ணம் அமைதியாக நிலத்தின் மீது சம்மணம் போட்டு அமர்ந்திருந்தனர்.

காற்றில் இலைகள் அசையும்போது எழும்பும் சப்தமும் பறவைகள் அவ்வப்போது எழுப்பும் ஓசையும் தவிர அங்கே அதுசமயம் மயானத்தின் அமைதி நிலவி இருப்பதை உணர்ந்து ஒருவித பயத்துடன் அவள் மரத்தடியில் கிடந்த கல் ஆசனத்தில் அமர்ந்தபடி காத்திருந்தாள்.

24

'குருவே போற்றி-தலைவா போற்றி... உன் பாதம் சரணம்... சரணம்... அமைதி... அமைதி... எங்கும் அமைதி...' என்ற கூட்டு முழக்கம் திடீரென்று எழ, எங்கிருந்தோ அத்துடன் ஓம் ஓம் என்று மணி ஓசை ஒலிக்க, மௌனப் பிரார்த்தனை கோஷமாக முடிவு பெற்றது. வெளியே வந்தவர்கள்தான் எத்தனைத் திறுசு மனிதர்கள்.

வேட்டி குர்த்தாவில் தெரிந்த வெள்ளைக்காரர்கள் - புடவை, ரவிக்கை, மூக்குத்தி, குங்குமப் பொட்டு அலங்காரத்தில் காணப்பட்ட வெள்ளைக்காரப் பெண்கள், வெள்ளைக் குல்லா, மல் ஜிப்பா, பட்டாடை வேட்டியில் சிலர்- தொளதொளவென்று வெள்ளைப் பாண்டும், லக்னோ குர்த்தாவும் தாடியுமாகக் காணப்பட்ட இன்னும் சிலர்-பல வண்ணத்தில் - பல கோணத்தில் - பல அயல் நாட்டவர்கள் - ஆண்களும் பெண்களுமாக-காவி உடையில் காணப்பட்ட இளம் வெள்ளைக்கார சன்யாசிகளுடன்... குறுந்தாடி,

நெடுந்தாடி, வெண்தாடி என்று வகை வகையாக வெளியே வந்தனர். பல இந்திய ஆண்களும் பெண்களும் அக் கூட்டத்தில் இருந்தனர். ஆங்கிலத்திலிருந்து பல மொழிகள் ஒரேயடியாக எழுந்தபோது ஆசிரமம் கலகலத்துப் போனதை அவள் கண்டு திகைப்படைந்தாள்.

டர்பன் நகரத்தில் இருந்த ஆசிரமத்துக்கு அவள் தன் அண்ணி சவுந்தரியுடன் சிவராத்திரி பூஜைகளில் கலந்து கொள்ள-அங்கு நடக்கும் பஜனையில் பங்குகொள்ளச் சில தடவைகள் போயிருக்கிறாள்.

''வைத்தியநாத ஈஸ்வரரை விட்டுவிட்டு இப்போ ஆசிரமங்களைத் தேடிக் கொண்டு ஆன்மநேய வளர்ச்சியில் இறங்கிட்டாப்பல இருக்கே...''- தாமோதரன் ஒரு தடவை அவளைப் பரிகசித்தபோது அவளுக்கு எப்படிக் கோபம் வந்தது?

''இங்கெல்லாம் ஆசிரமத்தில் பெண்கள் பூஜைக்கு வந்து பிரசாதம் வாங்கிட்டுப் போய்விடவேண்டும். தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆசிரமத்தின் விதிகள் மிகவும் கடுமையானவை. முதலில் அதைத் தெரிஞ்சுக்கோங்க'' என்று அவள் சீறி விழுந்திருக்கிறாள்.

ஆனால், இந்த ஆசிரமத்தில்... ஆணும் பெண்ணும் ஜோடி ஜோடியாகப் பேசிக்கொண்டு நடக்கவும், ஒரே ஆசிரமத்தில் தங்கவும் அனுமதிக்கிறார்களே! பல நாட்டவர்களும் இங்கிருக்கிறார்களே! உலக மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் ஒரு ஒருமைப்பாட்டு இயக்கமோ?

காக்கிச்சட்டை அவள் அருகே வந்து கிசுகிசுத்தான். ''அதோ தெரிகிற வெள்ளைக் கட்டிடந்தான் ஆபீஸ். ஆசிரமத் தலைவர் சாமியார் ஜகநாதானந்தாவை நேரில் நீங்க பார்க்க முடியும். அங்கே உடனே போங்க'' என்று உசுப்பினான்.

ஆபீஸ் என்ற கட்டிடத்திற்குள் நுழைந்தாள்.

ஃபைல்களும் பத்திரிகைகளும் அடுக்காக வைக்கப் பட்டிருந்த மேஜைக்குப் பின்னால் ஆரஞ்சு வண்ணச் சேலையும், முழங்கைவரை அதே வண்ணத்தில் ரவிக்கையும், கழுத்தில் துளசி மாலையும், நெற்றியில் குங்குமமும், உயரத் தூக்கி முடியைக் கொண்டையிட்டுக் கொண்டுமிருந்த சற்றுப் பருமனான ஒரு வெள்ளைக்காரப் பெண் அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

'ஸ்வாமிஜியைப் தரிசிக்க வந்திருக்கேன். ஆப்பிரிக்காவி லிருந்து கடிதம் எழுதியிருக்கேன். இங்கேயே தங்கிக்கப் பிரியப்படுகிறேன்...'' பயத்தில் தடுமாறியபடி ஆங்கிலத்தில் சொன்னாள் காவேரி.

''இப்படி உட்காருங்க'' என்று ஒரு பிரம்பு நாற்காலியைக் காட்டிவிட்டு அந்தப் பெண்மணி திரை தொங்கிய ஒரு வாயிற்படியைத் தாண்டி உள்ளே சென்றாள். சில நொடியில் புன்னகையுடன் வந்தாள்.

'ஸ்வாமிஜி நாளைக்கு உங்களைப் பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார். நீங்க இங்கே தங்க ஒப்புதல் தந்து விட்டார். இங்கே நிரந்தரமாகத் தங்க உங்களுக்குத் தகுதியிருக்கிறதா என்று பரிசோதிக்கச் சில பயிற்சிகள் தரப்படும். ஆசிரம விதிகள் கொண்ட இந்த நூலைப் படித்து நீங்களே தெரிந்து கொள்ளலாம். முதலில் மூன்று வாரப்பயிற்சி அளிக்கப்படும். தேறினால் இங்கே நிரந்தரவாசியாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீங்க. மூன்று வாரத்திற்கு இங்கே தங்க, உணவு முதலிய செளக்கியங் களுக்காக ஒரு ஆயிரம் ரூபாயை நீங்கள் முதலில் கட்டவேண்டும்; பின்னர் நிரந்தர வாசியானதும் மாதம் இருநூறு கொடுத்தால் போதும். மின் விளக்கு, தங்கும் குடில், குளிக்க வெந்நீர் இவைகளுக்குத் தனிக்கட்டணம்'' என்றாள்.

வேறு வகையின்றித் தன் கைப்பையிலிருந்த அந்தத் தொகையை எண்ணி எடுத்து மேஜைமேல் [illegible]

அங்கிருந்த வேலையாள் அந்தப் பெண்மணியின் உத்தரவுப்படி காவேரியை அழைத்துக்கொண்டு கடல் ஓரமாக இருந்த ஒரு தனிக்குடிலைக் காட்டினான். ''இது தான் உங்க வீடு? மத்ததெல்லாம் செக்ரட்டரியம்மா கொடுத்த தாளைப் படிச்சுத் தெரிஞ்சுக்குவீங்க'' என்று அவளது தங்குமிடத்தை அறிமுகப்படுத்திவிட்டு மாயமானான்.

பசிய பல பெரிய மரங்களும் பூச்செடிகளும் சூழ்ந்த ஒரு அழகான சூழ்நிலை. சற்றுத் தொலைவில் தென்னஞ்சோலை. அதற்கப்பால் ஆர்ப்பரித்த கடல். இங்குமங்கும் நான்குபுறமும் கற்சுவர் எடுத்து வெள்ளை பூசித் தென்னங்கீற்றுக் கூரை போடப்பட்ட சின்ன வீடுகள். ஆசிரமவாசிகள் அவ்வப் பொழுது அமைதியாகப் படுத்தபடி தியானம் செய்ய, ஒய்வாக இருக்க இரண்டு மரங்களுக்கிடையே அங்கங்கே தொங்கிய ஹாமக்குகள் என்று அந்தச் சூழ்நிலை மிக்க வியப்பைத் தந்தது.

அவளுக்குத் தந்திருந்த குடிலின் கதவைத் திறந்து உள்ளே பெட்டியை வைத்தாள். மேஜை நாற்காலி எதுவுமில்லாத சிறு அறை. எதிர் எதிராகச் சூரிய வெளிச்சமும் கடல் காற்றும் புகச் சிறு ஜன்னல்கள். சிமெண்ட் தரையின் ஓரத்தில் சுருட்டி வைக்கப்பட்டதொரு பாய்-தலையணை. குடிலுக்கு இடதுபுறம் குளியலறை, கழிவறை இத்யாதிகள் இன்னொரு குடிலைப் போன்ற அமைப்பில் காணப்பட்டன. கூரையி லிருந்து ஒரு கவிழ்ந்த சட்டிக்குள் அடைக்கலமாகிய மின்விளக்கொன்று தொங்கியது. அதை இயக்கச் சுவரில் ஸ்விட்ச் இருந்தது. இதைத் தவிர இரவில் தண்ணீர் குடிக்க ஒரு மண் கூஜாவும் ஒரு கண்ணாடி டம்பளருந்தான் அறைக்குள் இருந்த பொருட்கள்.

கதவைச் சாத்திக்கொண்டு தரையில் அமர்ந்தபடி ஆசிரமச் செயலாளர் தந்த அந்தத் தாளை எடுத்து ஆசிரம விதிகளைக் கவனமாகப் படித்தாள்.

காலை எழுந்து குளித்துவிட்டுத்தான் பிரார்த்தனை மண்டபத்திற்கு வரவேண்டும்.

வெந்நீர் தேவைப்பட்டால் முதலிலேயே சொன்னால் ஒரு வாளி தண்ணீர் ஒரு ரூபாய் என்ற கணக்கில் வேலையாட்கள் கொண்டு வந்து தருவார்கள்.

உடம்புக்கு முடியாவிட்டால் ஒழிய காலை-மாலை இரு தடவைகளும் எல்லோரும் மௌனப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டும்.

பிரார்த்தனைக்குப் பின்னர் பொதுச் சாப்பாட்டறையில் காலை-பகல்-மாலை-இரவு உணவுகளுக்குக் கூட வேண்டும்.

மாலை ஓய்வுக்குப் பின் யோகாப்பியாசப் பயிற்சி, தியானப் பயிற்சி இவை ஏதாவது ஒன்றில் கலந்து கொள்ள வேண்டும்.

ஆசிரமவாசிகளுக்கு உடல் நலம் கெட்டுவிட்டால், கவனிக்க ஆசிரமத்திலேயே வைத்தியர் இருக்கிறார். நான்கு படுக்கைகள் கொண்ட சிறு ஆஸ்பத்திரி ஒன்று இயங்குகிறது. படிக்க வேதாந்த் விஷயங்கள்-பக்தி மார்க்க நூல்கள் கொண்ட நூல் நிலையம் ஆசிரமத்திலிருக்கிறது. அன்றாடம் தின ஏடுகளையும் நூல் நிலையத்தில் உட்கார்ந்து படிக்கலாம். யாரும் புத்தகங்களைக் குடிலுக்கு எடுத்துப் போக அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆசிரமவாசிகள் அவ்வப்பொழுது வெளியே போய் வர விரும்பினால் அலுவலகத்தில் உள்ள நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துவிட்டு அதில் குறிப்பிட்ட நேரத்திற்குள் திரும்பிவிட வேண்டும்.

சைவ உணவைத் தவிர வேறு ஏதும் தரப்படமாட்டாது. விழா நாட்களில் விசேஷமான சாப்பாடு உண்டு.

ஆரம்பத்தில் அவரவர்கள் கொண்டுவந்த உடைகளை அணியலாம். காவி உடைகளை அணிய ஆசைப்பட்டால் அலுவலகத்திலிருந்து அவைகளைப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

அவளுக்குப் பழக்கப்பட்ட வசதி நிறைந்த வாழ்க்கைக்கு எதிரானதொரு விசித்திரமான சூழ்நிலை. ஆனாலும் அவளை யாரும் தொந்தரவு செய்ய முடியாததொரு தனித் தங்குமிடம். 'பார்ப்போம்-ஆசிரமம் பிடித்திருந்தால் இங்கேயே நிரந்தர மாக தங்கிவிடுவது என்ற தீர்மானத்துடன் குளியலறைக் குழாயைத் திறந்து பானையில் பச்சைத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு குளித்து முடித்தாள். உடை மாற்றிக்கொண்டு தனது புடவை-ரவிக்கை-பாவாடைகளைத் தோய்த்துக் குடிலுக்குப் பின்னால் காணப்பட்ட மரத்தில் கட்டப்பட்டிருந்த இரும்புக் கம்பிக்கொடியில் காயப் போட்டாள். தோள் பையை மட்டும் எடுத்துக் கொண்டு காலை உணவருந்தச் சாப்பாட்டிற்கு வந்தாள்.

ஆண்களும் பெண்களும் ஆளுக்கு ஒரு ஸ்டீல் தட்டைத் தூக்கிக் கொண்டு கவுண்டர் போலத் தெரிந்த ஒரு பகுதியின் முன்னால் க்யூவில் நின்றார்கள். தட்டுகளில் இரண்டு தோசைகளையும் சட்டினியையும் ஸ்டீல் டம்ளரில் தேநீரையும் கவுண்டருக்குப் பின்னால் நின்ற சமையல் ஆட்கள் வேகமாகப் பரிமாறினார்கள். அங்குமிங்கும் ஜோடியாக-கும்பலாக உட்கார்ந்துகொண்டு அவர்கள் பேசிச்சிரித்தபடி சாப்பிட்டனர். தன்னந்தனியே ஒரு மூலையில் நின்று சாப்பிட்டுவிட்டு ஆசிரமச் சட்டப்படி தட்டைத் தேய்த்துக் கழுவி-துடைத்து அங்கிருந்த மேடைமீது வைத்துவிட்டு அவள் குடிலுக்குத் திரும்பினாள்.

பகல் உணவின்பொழுது இதே மாதிரி வரிசையில் தட்டுடன் நிற்க வேண்டியிருந்தது. சாதம்-ஒரு கரண்டி பருப்பு- ஒரு கரண்டி கூட்டு, கொஞ்சம் பொரியில்-ஒரு ரமைப்பழம்-டம்பளரில் மோர்... இதுதான் பகல் உணவு.

தட்டை வைத்துக்கொண்டு அவள் தனியே நிற்பதைக் கண்டு டங்கரியும் வெள்ளை பனியனும், சிங்கத் தலைபோல பிடரியில் புரண்ட சிவப்பு முடியுமாக ஒரு வெள்ளைக்கார இளைஞன் அருகேவந்து புன்னகைத்தான்.

''ஹாய்! புதிதாக வந்து சேர்ந்திருக்கிறாப்பல இருக்கு. பெயர்? ஊர்?'' விசாரித்தான் அனுதாபத்துடன்.

''தென் ஆப்பிரிக்கா'' என்றதும் அவன் பரபரப்படைந்தவனாகக் காணப்பட்டான்.

''நானும் சில வருஷங்கள் தென் ஆப்பிரிக்காவில் இருந்திருக்கிறேன். பிறந்தது ஆஸ்ட்ரேலியா. இப்படி உலகமெல்லாம் சுற்றிவிட்டு ஆப்பிரிக்காவில் குடியேற நினைத்தேன். பிடிக்கவில்லை. இங்கே வந்திருக்கிறேன். இன்னமும் நான் ஆஸ்ட்ரேலிய நாட்டுப் பிரஜைதான்.''

குப்பென்று ஒரு மக்கல் வாசனை அவன் மீதிருந்து அடிப்பதை உணர்ந்தாள்.

''என் பெயர் காவேரி. உங்கள் பெயர்?'' என்று ஒப்புக்குக் கேட்டு வைத்தாள்.

''என் பெயர் ராபர்ட். நீ பாப் என்று அழைக்கலாம். அமெரிக்கா, இங்கிலாந்து, தாய்லாந்துன்னு பல இடங்களுக்குப் போயிருக்கேன், இங்கே கூட நான் தற்காலிகமாகத் தான் பயிற்சிக்கால நிலையில் இருக்கிறேன். ஆசிரம வசதி பிடிக்காட்டி நான் கிளம்பிடுவேன்.'' அடிக்குரலில் பேசிவிட்டுக் கண்களைச் சிமிட்டினான்.

நெருங்கி மேலே இடிக்கும் அருகாமையில் அவன் நின்ற போது, அவன் குளித்துப் பத்து நாளாகியிருக்கும் போன்று ஒருவித வாடை அவளது மூக்கைத் துளைத்தது.

சாப்பிட்ட பின்னர் கையைக் கழுவிக்கொண்டு தட்டைக் கழுவி வைத்துவிட்டு அவள் புறப்படும்போது அவன் அவளைத் தொடர்ந்தான்.

''இப்படி...இந்த சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து பேசலாமா?'' வற்புறுத்தினான்.

இதென்ன வம்பு என்று உள்ளூர வெகுண்டுபோன அவள் அரைமனதுடன் ஒரு பெரும் மரத்தின் நிழலில் போடப்பட்டிருந்த சிமெண்ட் ஆசனத்தில் ஒரு ஓரத்தில் அமர்ந்துகொண்டாள்.

''உன்கிட்ட கொஞ்சம் கிடைக்குமா?'' என்றபோது அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''உங்கள் தென் ஆப்பிரிக்க மொழியில் தான் சொல்கிறேன் புரியலையா. சரி...கொஞ்சம் ஹஷீஷ் இருக்குமா? அதான் ஹெர்ப். பானபஸ் இண்டிகான்னா புரிகிறதா?'' சிரித்தான் அவன்.

''புரிகிறது. இந்தப் பழக்கம் எனக்கு இல்லை. அயாம் ஸாரி'' என்றாள்.

''உங்கள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இதனாலேயே நான் வேறு நாட்டுக்கு ஓடவேண்டி வந்தது. ஒரு மனிதன் சட்டைப் பையில் ஐந்து கிராம் எடை கஞ்சா வைத்திருந்தாலும் உங்க ஊர் போலீஸ் லபக்கென்று பிடித்துக்கொண்டு பிறகு ஐந்து வருஷம் உள்ளே தள்ளிவிடுகிறாங்க. ரொம்ப அநியாயம். இப்ப என்கிட்டப் பத்து கிராமுக்கு மேலே வச்சிருக்கேன். பயந்து சாகத் தேவையில்லை'' என்று சிரித்தான்.

''பிறகு சந்திக்கலாம்-எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு'' என்று அவள் அவசரமாக அவனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு எழுந்தாள்.

''என் குடிலின் எண் எழுபத்தைந்து. உனக்கு ஏதாவது தேவைப்பட்டால் வந்து கேள், உதவுகிறேன்' என்று அவன் சொன்னபோது அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவளது குடிலின் எண் எழுபத்து நான்கு. அடப்பாவி! அவன் அடுத்த குடிலிலா இருக்கிறான்?...

அதற்குப்பின் மாலை-தேநீர் வேளை-இரவு மௌனப் பிரார்த்தனை-உணவு நேரம்-இதன் போதெல்லாம் அவள் மிகவும் எச்சரிக்கையுடன் ராபர்ட்டின் கண்களில் படாத தொலைவில் நகர்ந்து கொண்டிருந்தாள்.

அன்று இரவு குடிலின் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு அவள் படுத்தபோது நடுநிசி வேளையில் யாரோ லேசாகக் கதவைத் தட்டுவது கேட்டது.

''காவேரி டியர்-தயவு செய்து கதவைத் திற'' என்று ஆங்கிலத்தில் பேசிய ஆணின் குரலைக் கேட்டதும் அவள் நடுங்கிப் போனாள்.

25

அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். நெஞ்சு கிலியில் துடிப்பது காதுகளில் கேட்டது.

தொடர்ந்து அவன் ''காவேரி...காவேரி...கதவைத்திற...'' என்று சொல்லிக்கொண்டே கதவைத் தட்டிக் கொண்டிருந்தான்.

அன்று பகல் பொழுதே அவள் வாயிற் கதவை ஆராய்ந்து விட்டிருந்தாள். சற்று அழுத்தமாக ஒரு ஆள் ஓங்கி ஒரு உதை கொடுத்தால் பெயர்ந்து தாழ்ப்பாள் கீழே விழுந்துவிடும் நிலையில்-துருப்பிடித்து இரண்டு திருகு ஆணிகள் காணாமல் போன நிலையில் மிகவும் பலவீனமானதாக இருந்தது.

மனம்தான் ஒருவருக்குக் காவல்-கதவின் தாழ் அல்ல என்பது ஆசிரமவாசிகளின் கொள்கை போலும்.

அன்று பகல் உணவுக்குப்பின் அவள் தன் குடிலை மூடிக்கொண்டு வெகு நேரம் சிந்தித்தபடி உட்கார்ந்திருந்தாள். பிறகு மெல்லக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தபோது அருகில் தெரிந்த பல குடில்களில் வாயிற்கதவுகள் திறந்து கிடந்தன. சில பெண்கள் தரை மீது பாயில் குடிலுக்குள் சுருண்டு படுத்துக் கிடந்தனர். சில ஆண்கள் குடிலின் கதவைத் திறந்து போட்ட நிலையில் விட்டுவிட்டு மரங்களிடையே தொங்கிய ஹாமக்குகளில் படுத்தபடி கண்களை மூடிக்கொண்டு இயற்கைச் சூழ்நிலை யின் சுகத்தில் மூழ்கிக் கிடந்தனர்.

. ராபர்ட் மறுபடியும் தொடர்ந்து கதவைத் தட்டினான். காலால் ஆத்திரத்துடன் உதைப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

''நான்தான் ராபர்ட், உன் நண்பன்...'' என்று தழதழத்த குரலில் மெதுவாக அழைத்தான்.

ஆசாமி நன்றாகக் கஞ்சா அடித்துவிட்டு வந்திருக்கிறான் போலிருக்கிறது என்றெண்ணிய காவேரி பயத்துடன் கதவின் மீது தன் உடல் எடை முழுவதும் விழச் சாய்ந்து கொண்டு நின்றாள்.

''என்ன வேணும்? என் தூக்கத்தை ஏன் இப்போ கலைக்கிறீங்க?''- கோபத்துடன் சன்னமான குரலில் அதட்டினாள்.

''எனக்கு நீ வேணும் காவேரி. உன்னைக் கண்டதும் நான் காதல் கொண்டுவிட்டேன். எனக்கு இந்தியப் பெண்களிடம் ஒரு மயக்கம்...'' இன்னும் என்னென்னவோ உளறினான் ராபர்ட். கதவைத் தன் தோள்பட்டையால் முரட்டுத்தனமாக அழுத்தி அசைக்கத் தொடங்கினான்.

ஆப்பிரிக்காவில் அவள் பள்ளிக்கூட நாட்களில் விளையாட்டுப் பந்தயத்தில் பெரும் வீராங்கனையாக

இருந்தவள். ஒட்டப்பந்தயம், நீச்சல் பந்தயம், டென்னிஸ் இவைகளில் மற்ற பள்ளிப் பெண்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுத் தன் பள்ளிக்குச் சுழற்கோப்பைகளும் பரிசுகளும் வாங்கித் தந்து பெருமை சேர்த்துக் கொடுத்தவள்.

டர்பன் நகரில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கராத்தே ஜூடோ முதலியவற்றை இந்தியர்-மற்ற இனத்தவர்களுக்குப் போதிக்க ஒரு ஜப்பானியத் தம்பதியினர் வகுப்புகள் வைத்து நடத்திக் கொண்டிருந்தனர். சின்ன அண்ணிக்குத் தெரியாது தன் ஆவலைப் பெரிய அண்ணி சவுந்தரிக்குத் தெரிவித்தாள். ஆச்சரியமாக, பெரிய அண்ணி அவைகளைப் பயில அவளுக்கு உத்தரவு தந்துவிட்டிருந்தாள்.

''கற்பழிப்பு எனும் கொடூரமான குற்றம் தாய்நாட்டில் பரவலாக இருப்பதுபோல இந்த நாட்டில் இல்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று-மக்கள் தொகை குறைவாக இருப்பதால் இந்தக் குற்றம் எண்ணிக்கையில் குறைவாகத் தெரிகின்றது. இரண்டாவது-கற்பழிப்பில் ஈடுபட்டவனுக்குச் சட்டம் மரண தண்டனை கொடுக்கிறது. நிற பேதமில்லாது-வெள்ளையனுக்கும் கருப்பனுக்கும் கடும் தண்டனை வழங்குவது இந்நாட்டின் சட்டம். அதனால் நாம் அந்தப் பயங்கர விபத்தினின்று ஓரளவு காக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நிலைமை என்றும் இப்படியே இருக்காது. அந்தக் குற்றம் இந்நாட்டிலும் பெருகக்கூடும். எதற்கும் ஒரு பெண் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஜூடோ, கராத்தே இவைகளைத் தெரிந்து கொள்வது நல்லதுதான்'' என்றாள்.

இந்தியாவிலிருந்து வந்த சவுந்தரி அண்ணிக்கு அப்படி ஒரு பரந்த முற்போக்கான சிந்தனை!

பள்ளிக்கூடத்தில் மெட்ரிக் வகுப்பிலிருக்கும்போது கொஞ்ச நாட்கள் ஜூடோ பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தாள். பின்னர் நர்ஸிங் கோர்ஸ் முடிந்து வேலைக்கு மனுப்போட்டு

விட்டுக் குறுகிய காலத்தில் கராத்தே வகுப்புகளுக்குச் செல்லத் தொடங்கினாள்.

ஆனால் அவைகளில் அவள் மிகவும் தேர்ச்சி பெற்றுவிட்டிருந்தாள் என்று சொல்வதற்கில்லை. ஓரளவு பாய்ச்சல்-பதுங்கல்-அடி-வெட்டுகள் முதலியவைகளைப் பயின்று கொண்டிருந்தாள். நீண்ட காலம் அது தொடர்பு விட்டுப் போனதினால் மறந்துவிட்டதுபோலத் தெரிந்தது.

ஆனால் ஆபத்து என்றதும் மறந்துபோன சங்கதிகள் எல்லாம் மனதிற்குள் குபுக்கென்று ஒரு பாட்டிலைக் கவிழ்த்தது போலக் கொட்டத் தொடங்கிவிடுமே!

உள்ளங்கைகளைத் தேய்த்துச் சூடாக்கிக் கொண்டாள்.

விளக்கைப் போடாது மெல்லக் கதவைத் திறந்தாள்.

அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தவன் கன்னத்தில் பளார் என்று ஒரு அறைவிட்டாள். கன்னத்தின்மீது ஒரு அழுத்தமான வெட்டு; அவனது பின்புறத்தில் ஓங்கி ஒரு உதைவிட்டாள். வலி தாங்காது அசிங்கமான ஆங்கிலத்தில் அவளைத் திட்டிக்கொண்டே போய்க் குடிலின் மூலையில் குப்புற விழுந்தவன் அங்கிருந்த மண் கூஜாவைத் தட்டிவிட அதன் மேலிருந்த கண்ணாடி டம்ளர் கீழே விழுந்து உடைய கண்ணாடித்துண்டம் ஒன்றின் மீது கையை வைத்து ஊன்றிக் கொண்டு எழ முயன்றவன் மறுபடி அலறிக்கொண்டு கீழே உட்கார... அதற்குள் அவள் இருளில் கால்வந்த போக்கெல்லாம் தலைதெறிக்க ஓடினாள்... ஓடினாள்... ஓடினாள்...

இருதயம் வெடித்துவிடும் போல மூச்சிரைக்க அவள் ஆசிரமத்து அலுவலகத்தின் பின்னால் தெரிந்ததொரு மல்லிகைப் புதர் அருகே இருளில் மறைந்துகொண்டு உட்கார்ந்தாள். சுற்றிலும் ஒரே அமைதி. கடலின் ஆர்ப்பரிப்பையும், எங்கேயோ மரத்தில் அலறிய ஆந்தையின்

குரலையும் தவிர இரவு இருளிலும் அமைதியிலும் மூழ்கியிருந்தாள். கீழ்வானம் சிவக்கும்வரை அவள் கண்களை மூடாது அங்கேயே நடுக்கத்தில் துடியாய்த் துடித்த மார்பின் மீது கைகளைக் குறுக்காக மடித்துக்கொண்டு உடம்பை ஒடுக்கியபடி புதருக்குள் தஞ்சமாகிவிட்டிருந்தாள்.

நன்றாக விடியத் தொடங்கியதும் அவள் ஆசிரமத்துக் கேட்டருகே வந்தாள். இரவு காவல்காரர் தமது பணியை முடித்துவிட்டுப் போனதும் பகல் வேளை காவல் செய்ய வந்த அந்தக் காக்கிச் சட்டைக்காரர் அவளைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார்.

''என்னம்மா இந்த வேளையில் இங்கே?...'' என்று வியப்புடன் வினவினார்.

''ராத்திரி யாரோ ஒரு திருடன் வந்து என் குடிலுக்குள் புகுந்து என் பெட்டியைத் தூக்கிட்டுப் போகப் பார்த்தான். நான் பயந்துகிட்டு உள்ளே போகாமல் இந்த ஆபீஸ் கட்டிடம் பக்கம் ஓடிவந்து ஒளிஞ்சுகிட்டிருந்தேன். ஐயா, எனக்கு என் குடிலுக்குத் தனியாகப் போகப் பயமா இருக்கு, கூட கொஞ்சம் துணையாக வரீங்களா?'' -கெஞ்சியபடி குழைவாகக் கேட்டாள்.

அவளுக்கு உதவி செய்தால் கைமேல் பலன் கிட்டும் என்ற ஆவலில் உற்சாகமாகக் காவலாளி அவள் குடிலுக்கு வந்தார்.

அவளது குடிலின் கதவு திறந்து கிடந்தது. ஆனால் ராபர்ட், விடிந்ததும்-போதை அடங்கியதும் வெளியேறி விட்டிருந்தான்.

உடைந்த கண்ணாடி டம்ளரும்-கவிழ்ந்து கிடந்த மண்கூஜாவும் தரையில் பளிச்சிட்ட சில சொட்டு ரத்தமும் தான் அவன் வந்ததிற்கு அடையாளமாக இருந்தன.

''கடற்கரைப் பக்கமாக இருக்கிற மதிற்சுவர் மேலே ஏறிக் குதிச்சுச் சில சமயம் வெளியிலிருந்து திருடர்கள் வரது உண்டு. ராத்திரி காவல்காரங்க இருக்கிறதாலே பயந்துகிட்டு ஓடிப் போயிருக்கான். அம்மா உங்க பெட்டி பத்திரமாக இருக்கு'' என்று ஆறுதலாக உற்சாகமாகப் பேசினார் காவலாளி.

ஆசிரமவாசிகளும் விஷமம் செய்வார்கள் என்பதை அவர் கண்டு கொள்ளவில்லை. அவருக்கு வேலை முக்கியம். வீண் வம்பு எதற்கு?

பெட்டியைத் திறந்து மணிபர்சிலிருந்து அவள் மீண்டும் ஒரு பத்து ரூபாயை எடுப்பதைக் கண்டதும் அவர் நன்றியில் நெளிந்தார்.

''ஏதாச்சும் வேணும்னா என்னைக் கேளுங்க. பயமா இருந்தா ஒரு குரல் கொடுங்க'' என்று அபயம் அளித்து விட்டுச் சட்டைப்பையில் நோட்டைத் திணித்துக்கொண்டு நகர்ந்தார்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். ராபர்ட்டைக் காணவில்லை. விடிந்துவிட்டது-வெளிச்சம் பரவிக்கொண்டு வருகிறது-ஆசிரமவாசிகள் எழுந்து அவரவர் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டனர் என்றதைக் கண்டதும்-அவளது கலவரம் மறைந்து-மனதில் துணிச்சல் இரட்டிப்பாகியது.

விரித்துக் கிடந்த பாயைத் தலையணையுடன் சுற்றி ஒரு பக்கம் வைத்துவிட்டுக் கண்ணாடித் துண்டுகளைப் பெருக்கி ஒரு காகிதப் பொட்டலமாக்கி வெளியே ஒரு புதருக்குள் எறிந்தாள்.

மண் கூஜாவில் தண்ணீரை நிரப்பி வைத்துவிட்டு அறையைப் பெருக்கினாள். தரையில் பளிச்சிட்ட ரத்தப் புள்ளிகளை ஒரு ஈரத்துணியால் துடைத்தாள். பின்னர் அவசரமாகப் பச்சைத் தண்ணீரில் பல் துலக்கிக் குளித்துவிட்டு

மாற்றுடை அணிந்து கொண்டாள். வேகமாகத் தலையை வாரி முடிந்து கொண்டு, தன் பெட்டிக்குள் முதல் நாள் இரவு அணிந்த கசங்கிப்போன ஆடையை மடித்து வைத்துப் பூட்டிக் கையில் எடுத்துக் கொண்டாள். தோள் பையில் தனது பாஸ்போர்ட், டிராவலர்ஸ் செக், இத்யாதிகள் பத்திரமாக உள்ளனவா என்று பரிசோதித்துப் பார்த்துவிட்டுத் தோளில் பையும்-பெட்டியுமாக வெளியே வந்தாள்.

மௌனப் பிரார்த்தனையில் அவள் கலந்து கொள்ள வில்லை. காலை உணவுக்கும் அவள் போகவில்லை.

பிரார்த்தனைக்குப் பின் உணவுக்கு எல்லோரும் போனதும் அவள் நேரே அலுவலகத்து அறைக்குள் சென்றாள்.

ஆசிரமத் தலைவரின் அந்தரங்கக் காரியதரிசியான அந்தக் காவிப் புடவைக்காரி அவளை ஆச்சரியமாக நிமிர்ந்து பார்த்தாள். பெட்டியை அவள் அருகே வைத்துவிட்டு 'ஸ்வாமிஜி என்னை இன்று பார்ப்பதாகச் சொன்னாரே. அதற்காக வந்திருக்கேன்'' என்றாள்.

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு சிறிது யோசித்தபடி அந்தப் பெண்மணி காவேரியை ஒரு மாதிரி ஏற இறங்கப் பார்த்தாள். பின்னர் தன் தோள்களைக் குலுக்கிவிட்டு வாயிற்படியில் தொங்கிய திரையைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றாள்.

சில நிமிடங்களில் அவளைப் பார்க்கச் சம்மதிப்பதாக ஸ்வாமிஜி உத்தரவு கொடுத்துவிட்டிருந்தார்.

''இந்தப் பெட்டி இங்கேயே இருக்கட்டும். முதலில் அவருக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு வருகிறேன்'' என்று புன்முறுவலித்த காவேரி திரையைத் தாண்டிக் கொண்டு விஸ்தாரமாகக் காணப்பட்டதொரு அறைக்குள் நுழைந்தாள்.

சிவப்பு ரத்தினக் கம்பளம் விரித்த தரைமீது ஒரு பெரிய மேடை. பூச்செடிகள் வைத்து அலங்கரிக்கப்பட்டிருந்த மேடைமீது சிம்மாசனம் போன்றதொரு நாற்காலி. அதன் மேல்-உடம்பு முழுவதையும் வழிய விட்டுக் கொண்டு காவி உடையில்-செம்பட்டை நிற ஜடா முடியும்-முகம் முழுவதை யும் மறைத்த தாடி மீசையுமாகத் தலைவர் ஜகதானந்தா அமர்ந்திருந்தார். புன்னகைத்துத் தலையசைத்த போதிலும், பளபளவென்று குழல் விளக்கின் ஒளியில் மின்னிய அவரது பச்சை வண்ணக் கண்களைப் பார்க்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது.

''நமஸ்காரம்'' என்று கைகுவித்து வணங்கினாள்.

''அப்படி உட்கார்'' தரையைச் சுட்டிக் காட்டினார் தலைவர்.

ரத்தினக் கம்பளத்தின்மீது காலை மடித்துக்கொண்டு சிரமப்பட்டு உட்கார்ந்தாள்.

''ஆசிரமம்...பிடித்திருக்கிறதா குழந்தாய்?'' ஆங்கிலத் தில் கேட்டார் வெள்ளைச் சாமியார்.

''பிடிச்சிருக்கு. ஆனால் உங்களிடம் ஒரு முக்கிய சங்கதியைச் சொல்லி ஆலோசனை பெற வந்திருக்கேன்'' என்று தயக்கமாக ஆரம்பித்து ராபர்ட் செய்த சேஷ்டைகளைப் பற்றி விரிவாகச் சொன்னாள்.

கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டு கேட்டபடி இருந்த ஸ்வாமிஜி சட்டென நிமிர்ந்து அவளைப் பார்த்தார்.

''குழந்தாய்? இவையெல்லாம் உனது மன உறுதிக்கு ஏற்படும் சோதனைகள். மேலும் ஆத்மாவை இந்த வெளிப்புறச் செயல்கள் ஏதும் பாதிக்காது என்பதை நீ புரிந்து கொண்டு அமைதியடைய வேண்டும். அழியப் போகும் உடலுக்கு ஏற்படும் விபத்துகள் ஆன்மாவைத் தொட

முடியாது. அதனால் நீ இதைப்பற்றிப் பேசக்கூடாது. தொடர்ந்து அமைதியாக தியானத்தில் ஈடுபடுவாயாக'' என்றார்.

போகலாம் இனி நீ என்றதுபோல அவர் பார்வை கடுமையாகத் தெரிய மறுபடி சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டு வெளியே வந்தாள்.

'ஸ்வாமிஜியைப் பார்த்தது பற்றிச் சந்தோஷந்தானே?'' சிரித்தாள் அந்தரங்கக் காரியதரிசி.

''ஆமாம்'' என்று தலையசைத்துவிட்டு ''எனக்கு ஒரு முக்கிய வேலை இருக்கிறது. வெளியே போகவேண்டும்.'' என்றாள்.

''குறிப்புப் புத்தகம் அந்த மேஜைமேல் இருக்கிறது. எழுதி வைத்துவிட்டுப் போகலாம்'' என்றாள் அந்த வெள்ளைக்காரப் பெண்.

''முக்கிய வேலை-வெளியே போகிறேன்''என்று எழுதினாள். திரும்பிவரும் நேரம் என்ற பகுதியில் ''திரும்புவதாக எண்ணமில்லை, வணக்கம்'' என்று எழுதி மூடிவிட்டுப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வேகமாகக் கேட்டைத் தாண்டி வெளியே வந்தாள்.

சுள்ளென்று வெய்யில் வீசினாலும் எங்கிருந்தோ குளிர்ந்த காற்று முகத்தைத் தழுவுவதை உணர்ந்தாள்.

'அப்பாடா...பிழைத்தோம்' என்ற நிம்மதியில் ஆசிரம வாழ்விற்கு அங்கேயே மனதளவில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு பஸ் நிலையத்தில் வந்து நின்றதொரு பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

எங்கே போகிறோம் என்ற நினைப்பு இன்றி ''அடையாறு'' என்று கூறி ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொண்டாள்.

26

அடையாறில் அந்த பஸ் நிலையத்தில் இறங்குமுன்னே சட்டென்று மனதில் அந்த நினைவு பளிச்சிட்டது.

மேற்கொண்டு அவள் எங்கே போவது என்பதில் முடிவும் மனதில் தீர்மானமாகி விட்டது.

சாட்ஸ்வொர்த் சற்குணம் சளசளவென்று பேசினாலும் ஏராளமான முகவரிகளைத் தந்து விட்டிருந்தாள். ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தையும் பற்றி விமர்சித்திருந்தாள்.

''மெட்ராசுக்கு யார் போனாலும், மந்தைவெளி மருதூர் ராமசாமி காலனியில் இருக்கும் வசந்தா அம்மாளைப் பார்க்காம வராதீங்க. அவங்க ரொம்ப நல்லவங்க. நம்ப ஊர் ஜனங்களை ரொம்ப நல்லா வரவேற்று உபசரிப்பாங்க. ஓட்டலில் தங்கச் சிரமமாயிருக்குன்னு சொன்னா போதும். அவங்க வீட்டிலேயே தனி அறை கொடுத்து நல்லா கவனிச்சுப்பாங்க. போன மாசம் என் தங்கச்சி கூட அவங்க வீட்டிலே ரெண்டு மாசத்துக்கு மேலே தங்கிட்டு வந்தா. புதுசா கட்டின வீடு. மூணு படுக்கையறை. ஒவ்வொண்ணுக்கும் தனிக் குளியலறை. கால் வழுக்கிடறாப்பல தரையெல்லாம் மொசாய்க்கு இழைச்சிருக்கு. சுத்தி சின்ன தோட்டம். வீட்டை, அந்தம்மா நம்பளைப் போலவே ரொம்ப அழகா வச்சிக்கிறாங்க.

''அவங்க சமைக்கிறதுதான் நமக்கு அத்தனைப் பிடிக்காது. நம்மைப்போல நிறைய எண்ணெயை ஊத்தி இந்தியாக்காரங்க சமைக்க மாட்டாங்க. எல்லாம் பார்த்தா முடியாது. அவங்க சுத்த சைவம். அதனாலே நமக்கு ஏதாச்சும் வேணும்னா பக்கத்து ஹோட்டலில் போய் வாங்கிச்

சாப்பிட்டுக்கலாம். ஆனால் கட்டில் மெத்தை-மின்விசிறி, குளிக்கத் தனிக் குளியலறை-சாமான்களை வச்சுக்க பீரோ-இதுகளோட நிம்மதியா ஒரு வீட்டிலே தங்கிக்கணும்னா வசந்தா அம்மா வீட்டைத் தவிர நமக்கு அங்கே வேற இடம் சட்டுனு கிடைக்காது. வெளியூர்காரங்கன்னு நாம் சொன்னதுமே சிலர் ஒரு மாதிரி பார்த்துட்டு, அப்படியான்னு விசாரிச்சுட்டுக் கதவைத் தாள் போட்டுக்குவாங்க. நம்மைப் போல மாசக்கணக்கா விருந்தாளிகளை வச்சுக் கொண்டாட பழக்கம் இந்தியாக்காரங்களுக்குக் கிடையாது.

''ஆனால் இந்த வசந்தா அம்மா ஒரு தனிரகம். சலிச்சுக்கவே மாட்டாங்க. அவங்களுக்கு ஃபோரின் பொருள் மீது ரொம்ப மோகம், இரண்டு நைலான் புடவைகள், இரண்டு செண்ட் பாட்டல்-பவுடர்... இதுகளை எடுத்துக் கொடுத்திட்டாப் போதும்... சந்தோஷப்பட்டுக்குவாங்க. நான் அனுப்பிச்சதாக என் பேரைச் சொன்னால் விடமாட்டாங்க. ஒரே ஒரு நாளாவது கூட இருந்து விருந்து சாப்பிட்டுப் போகணும்னு நிர்ப்பந்திப்பாங்க.

''ஆனால் அவங்க வீட்டில் சில நாள் சும்மா தங்கிட்டு வரது நல்லா இருக்காது. ஊருக்குக் கிளம்பறதுக்கு முந்தி அவங்களுக்கும் அவங்க அம்மாளுக்கும் காஞ்சிபுரம் சேலைகள் எடுத்துப் பரிசா கொடுத்துட்டு வரது நல்லது. அந்தம்மாளைக் -கேட்டால் எந்தக் கடையில் எதை வாங்கலாம், என்ன விலையில் வாங்கலாம்னு கூட வந்து உதவி செய்வாங்க. தனியே கடைக்குப் போனா நாம் வெளியூர்க்காரங்கன்னு கண்டு பிடிச்சுக் கடைக்காரங்க சிலர் விலையை உசத்தி விடுவாங்க. அதனாலே அந்தம்மாவைத் துணைக்கு அழைச்சிட்டுப் போறது நல்லது. அவங்க வெளியே கூட வரணும்னா டாக்ஸி வைச்சுத்தான் வருவாங்க. பஸ்ஸில் வரமாட்டாங்க..''மூச்சு விடாது சொல்லி முடித்திருந்தாள்.

தோள் பையைத் திறந்து டைரியை எடுத்து வசந்தா அம்மாளின் விலாசத்தைத் தன் மனதிற்குள் பதித்துக் கொண்டாள்.

''அவங்க வீட்டிற்குப் போகணும்னா மந்தவெளி போஸ்ட் ஆபீஸ் என்கிற பஸ் நிலையத்தில் இறங்கிக் கொஞ்ச தூரம் மேற்கால நடந்து பின்னால் இடது பக்கம் திரும்பினால் புதுசா கட்டப்பட்டிருக்கும் சில வீடுகள் கும்பலா தெரியும். நான் போனப்போ சுற்றுச் சுவர்கூடக் கட்டலை. இப்போ கட்டி காலனியின் பேரைப் பளிச்சின்னு ஒரு போர்டில் போட்டிருக்காங்களாம். வழி தெரியாட்டி ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டால் போதும், ரிக்ஷாக்காரரே கொண்டுபோய் விட்டுவிடுவார்.''

கடைசியாக சற்குணம் சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது. அதற்குள் வயிற்றைப் பசி சுருட்டுவதை உணர்ந்தாள். அருகிலிருந்ததொரு டீக்கடையில் ஒரு பன்னும், கண்ணாடி டம்ளரில் சூடான தேநீரும் வாங்கிக்கொண்டு வெளியே கிடந்த பெஞ்சியின் ஓரத்தில் உட்கார்ந்து பன்னைப் பிட்டுத் தேநீரில் தொட்டு விழுங்கத் துவங்கினாள்.

அங்கு ஏற்கெனவே வந்து குவிந்திருந்த சில இளவட்டங்கள் அவளை டீயுடன் சேர்த்துச் சாப்பிடுகிறவர்கள் போலப் பார்த்தனர். ஒரு தொங்கு மீசை இளைஞன் அவளைப் பார்த்துப் புன்முறுவலித்தான். பிடிமீசை-மல் ஜிப்பா-பரந்த கிராப்புத் தலைக்காரன் ஒருவன் தன் மீசையை ஆசையுடன் தடவிக்கொண்டு லேசாகக் கண்களைச் சிமிட்டினான்.

ஒரு இந்தியப் பெண் தனியாக உட்கார்ந்து சமூசாவோ பூரியோ வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் அவள் வசித்த டர்பன் நகரில் அதை ஒரு அதிசயமாக யாரும் நினைக்க மாட்டார்கள். இளைஞர்கள் அவர்கள் வழியே

போய்விடுவார்கள். தெரிந்தவராக இருந்தால் 'ஹலோ' என்று அழைத்து விட்டு அருகில் வந்து உட்கார்ந்து, கூடப் பேசிக்கொண்டே தமக்கு வேண்டியதைச் சாப்பிட்டுவிட்டுப் போவார்கள். வழியில் செல்லும் ஆப்பிரிக்கர் கூடத் தமது தொப்பியைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு ''சக்கபோனா-டொம்பஸான்'' (வணக்கம் இளம் பெண்ணே) என்று வணக்கம் செலுத்திவிட்டுப் பதில் வணக்கத்தை வாங்கிக்கொண்டு போகும் ஒரு பண்பு நிறைந்த குணம் உள்ளவராக இருப்பார்.

ஆனால் இங்கே...இந்தியர் ஒரு அந்நியப் பெண்ணைத் தன்னந்தனியாகக் கண்டுவிட்டால்...லட்டைத் தின்ன ஆசைப்படும் பள்ளிச் சிறுவர்களைப்போலக் கண்களில் வெறியுடன்... சே...!

ஒரே மூச்சில் பன்னைப்பிட்டு விழுங்கித் தேநீரைக் குடித்துவிட்டுக் கடைக்காரரிடம் சில்லறையைக் கொடுத்து விட்டு... ராபர்ட் செய்த ரகளையால் ஏற்கனவே அதிர்ந்து போய் ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தவள், தாங்கமுடியாது தொங்கு மீசைப் பக்கம் திரும்பினாள்.

''மிஸ்டர்... என்ன வேணும்? யார் நீங்க?'' அதட்டலாக ஆங்கிலத்தில் கேட்டாள்.

அவ்வளவுதான்-தொங்கு மீசை அங்கிருந்து மாயமாகினான். பிடி மீசை ஜிப்பாவுக்குள் கையை விட்டுக்கொண்டு வேகமாக வேறு திசைப்பக்கம் திரும்பிக் கொண்டான்.

டீக்கடைக்காரருக்கு வியாபாரம் முக்கியம். காலை வேளையில் வந்து கலாட்டா செய்கிறவர்களை அவர் சும்மா விடமாட்டார். கர்லாக் கட்டையைச் சுழற்றி மனிதன் தேகத்தை இரும்பாக்கிக் கொண்டிருந்தார். சுற்று வட்டாரத்துக்கு எப்பொழுதும் அந்தக் கடைக்காரர் மீது தனி மதிப்

வேகமாக எதிர்ப்பக்கம் நடந்து சென்று, வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். மந்தைவெளி நிலையத்தில் இறங்கியதும் அருகில்சென்றதொரு ரிக்ஷாவைக் கைதட்டிக் கூப்பிட்டு ஏறிக்கொண்டாள்.

''மருதூர் ராமசாமி காலனிக்குப் போக வேண்டும் ஒக்கிரம்'' என்றாள்.

தோளில் பையும்-கையில் பெட்டியும்-முகத்தில் விழுந்த முடியுமாக இருந்த அவளைத் தன்னுள் கணிப்பிட்டுக் கொண்ட ரிக்ஷாக்காரன் ''அஞ்சு ரூபாய்...'' என்று கூலியைக் கூரை முகட்டிற்கே கொண்டுபோய்விட்டான்.

மனதில் அந்தப் பணத்தைத் தன் நாட்டின் நாணயமாக மாற்றிப் பார்த்துக் கொண்டாள் காவேரி. ஃபிஃப்டி சென்ட்ஸ்...ஃபூ! இதுதானே என்று எண்ணியவளாக ''ஆகட்டும் போ'' என்றாள். ஐந்து ரூபாய்களை ஜீரணிக்க ரிக்ஷா அனாவசியமாக ஒரு சுற்று வந்து முடிவில்...பஸ் நிலையத்திற்கு மிக அருகிலிருந்த மருதூர் ராமசாமி காலனிக்குள் புகுந்து அவள் கூறிய ஒன்பதாவது எண் வீட்டருகே நிறுத்திவிட்டு -தனது கூலியைப் பெற்றுக் கொண்டு பறந்து விட்டான்.

முன் பக்கம் அழகானதொரு தோட்டத்துடன் வெளேரென்று உயர்ந்து நின்ற அந்த வீட்டின் கேட்டைத் தொட்டாள். அவ்வளவுதான்-கிழித்துப் போட்டுவிடும்போல உக்கிரமாகக் குரைத்துக் கொண்டு உள்ளேயிருந்து பூப்பந்து போல ஒரு வெள்ளை நாய்க்குட்டி ஓடிவந்து வராந்தாவில் துள்ளிக் குரைத்தது. ''ஜூடி...சும்மா இரு'' என்று அதட்டிக்கொண்டு பின்னால் வந்த ஒரு இளம் பெண்மணி அதைத் தூக்கித் தன் மார்புடன் அணைத்துச் சமாதானப் படுத்தியபடி அவளை வியப்புடன் பார்த்தாள்.

''யார் வேணும்? நீங்க எங்கிருந்து வரீங்க?'' சந்தேகமும் பரபரப்புமாகக் கேட்டாள்.

''மிஸஸ் வசந்தா ரகுபதி என்கிறவங்களைப் பார்க்கணும். ஆப்பிரிக்காவிலிருந்து வருகிறேன். சாட்ஸ்வொர்த் சற்குணம் என்னை இங்கே வரச்சொல்லி அனுப்பினாங்க'' என்றாள்.

''அப்படியா...உள்ளே வாம்மா. வந்து முன் அறையில் உட்காரம்மா.ஜூடி...அவங்க நம்ப சிநேகிதங்க. இப்படி நீ கத்தக்கூடாது...பயப்படாதீங்க. நாய் கடிக்காது. கம்மா அப்படி குலைக்கும்'' என்றபடி அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

சுற்றுச் சுவருடன் அழகான சிறு தோட்டத்திற்குள் அமைந்த புத்தம் புதிய வீடு அது. வீட்டுக்காரி அதை மிகவும் நேர்த்தியாக அலங்கரித்து வைத்திருந்தாள். முன்னறை மேஜைமேல் சாய்ந்த வாக்கில் வீட்டுக்காரியுடன் சற்குணம் ஒரு புகைப்படத்தில் சிரித்துக்கொண்டிருந்தாள்.

சற்குணத்திற்கு அத்தனை நெருக்கமான தோழியா இந்த வசந்தா அம்மாள்!

காவேரி நிம்மதியாக சோபாமீது சாய்ந்து கொண்டாள்.

''காப்பியா-டீயா... எது கொண்டுவரச் சொல்லறது?'' கேட்டபடி மிகவும் தோழமையுடன் அருகில் வந்து உட்கார்ந்த அந்த இளம் பெண்ணையும், இப்போது அடங்கிப் போன அந்த நாய்க்குட்டியையும் பார்த்தாள் காவேரி.

''தென் ஆப்பிரிக்காவிலிருந்து வரவங்க எல்லாரும் டீதான் சாப்பிடற வழக்கம், இல்லையா?'' என்று கேட்டபடி வசந்தா சிரித்தாள்.

மாநிறமாக இருந்தாள் அவள். அவள் சிரித்தபோது வரிசையாகப் பற்கள் பளிச்சிட முகத்தில் களை சிந்தியது. இடையே ஒரு வாயல் சேலையும், அதற்கேற்ற வண்ணத்திலே இறுக்கமான ரவிக்கையும் அணிந்திருந்த போதிலும் மிகவும் அலங்காரமாகத் தென்பட்டாள். காதுகளில் [illegible]ன்னிய

வைரக்கம்மல்களும்-கழுத்திலே தெரிந்த தங்கச் சரடும் கைகளில் குலுங்கிய தங்க வளையல்களும் அவளது மேல் மட்ட அந்தஸ்தை விளம்பரப்படுத்தின.

அதுசமயம் முன்னறையின் மூலையில் மேலே ஓடிய மாடிப்படிகள் வழியே இறங்கி வந்தார் ஒருவர்.

''இவர்தான் என் கணவர்'' என்று வசந்தா சொன்னதும், கையில் தோல் பையும், அலுவலகம் கிளம்ப உடுத்திய சுத்தமான சட்டை பாண்டுமான அலங்காரத்தில் இறங்கி வந்தவரை நிமிர்ந்து பார்த்தாள். உடனே எழுந்து கை குவித்து வணங்கினாள் காவேரி.

''இவங்க தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவங்க. நம்ப சற்குணம் அவங்க அனுப்பி வச்சிருக்காங்க'' என்றாள் வசந்தா மகிழ்ச்சியுடன்.

''அப்படியா? எங்கே தங்கியிருக்காங்களாம்?'' கேட்ட அந்த ஆணின் பார்வை காவேரியை மேலும் கீழும் ஊடுருவியது.

''என் பெயர் காவேரி. நான் வேலை செய்கிறவள். ஓய்வுக்காகத் தாய்நாட்டுக்கு வந்திருக்கேன்'' மெல்லிய குரலில் ஆங்கிலத்தில் சொன்னாள்.

''அப்படியா! நம்ப வீட்டிலேயே தங்கிக்கலாமே. நீ என்ன சொல்றே வசந்தா?'' என்றான் ரகுபதி. மீண்டும் அவனது கண்கள் காவேரியை மேலும் கீழும் ஆராய்ந்தன.

''சற்குணத்திற்கு வேண்டியவங்கள்ளாம் நமக்கும் வேண்டியவங்கதான். அவங்களுக்கு ம்றுப்பு இல்லேன்னா இங்கேயே தங்கிக்கச் சொல்லலாம்'' என்றாள்.

''உங்களைப் பிறகு பார்க்கிறேன். இது உங்க வீடு போல நினைச்சுகிட்டு தாராளமாப் பழகலாம். பை...பை...'' என்று புன்முறுவலித்தபடி அவன் கிளம்பி விட்டான். சிறிது

பொழுதில் கராஜிலிருந்து கார் உறுமலுடன் கிளம்பி வெளியே சாலைக்குள் புகுந்து மறைந்து போனது.

வாயில் கேட்டைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்தாள், பிளாஸ்டிக் கூடை நிறையக் காய்கறிகளுடன் ஒரு வயதான அம்மாள்.

''இவங்க என் அம்மா, பெயர் அலமேலு'' என்று அறிமுகம் செய்து வைத்த வசந்தா தன் தாயின் பக்கம் திரும்பி ''அம்மா! நம்ம சற்குணம் அம்மா இவங்களை ஆப்பிரிக்கா விலிருந்து நம்ப வீட்டுக்கு அனுப்பியிருக்காங்க. உங்க மருமகன்கூட இவங்களை இங்கே தங்க அனுமதி தந்துட்டார்'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''அப்படியா...சந்தோஷம்'' என்று கூறிவிட்டுக் காவேரியைப் பார்த்தாள் அலமேலு. அந்தப் பார்வையில் மகிழ்ச்சி தெரியவில்லை. 'இங்கே எங்கே வந்தாய்' என்பது போன்றதொரு கேள்வி வெறுப்பாகத் தெரிந்தது.

அவள் வரவு அலமேலுஅம்மாளுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு ஏதாவது காரணம் இருக்கும். காவேரி புரிந்து கொண்டு விட்டாள். ஆனால் அவள் இப்பொழுது உடனடியாக எங்கே போவாள்? ஆமாம், அலமேலு அம்மாளுக்கு, வெறுப்பு ஏற்பட அவள் செய்த தவறு? காவேரிக்குக் குழப்பம் தலையைச் சுற்றியது.

27

அறுபது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அலமேலு அம்மாளுக்குக் கோபம் வரப் பல காரணங்கள் இருந்தன.

விதவையாகி விட்ட பின்னர் வேறு கதியின்றித் தன் ஒரே மகளிடம் வந்து தங்க நேரிட்டதே என்று உள்ளூர ஒரு உறுத்தல். 'வசந்தா மட்டும் ஒரு ஆண் மகனாகப் பிறந்திருந் தால், இப்படி மருமகன் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு, அவனது உறவினர்கள் ஏளனமாகப் பேசுவார்களே என்று கூசிக் குறுகிப்போய் அதற்கு ஈடு செய்வதைப்போல அந்த வீட்டுக்கு நாள் முழுவதும் உழைத்து ஓடாகிப் போகும் பயங்கர நிலை வந்துவிட்டிருக்காதே' என எண்ணி அவள் மனம் ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தது.

மருமகன் ரகுபதி ஒரு பெரிய நிறுவனத்தின் உயர்மட்டத்து அதிகாரி. கம்பெனி தயவில் காரும்-தன் பெற்றோர்களின் தயவில் கிடைத்த வீடும்-கைநிறையச் சம்பளமும்- அதைச் செலவழிக்கப் பல பழக்கங்களும் கொண்டவர். முன்கோபி. அலுவலக நண்பர்கள் அடிக்கடி அவரது வீட்டுக்குப் படையெடுப்பார்கள். மாடியறையில் நடக்கும் அரட்டைக் கச்சேரிக்கும் தீர்த்தக் கச்சேரிக்கும் அவள் தட்டுத்தட்டாகத் தின்பண்டங்களையும் சூடான காப்பியைப் பெரிய கெட்டில்களில் நிறைத்தும் அனுப்பிய வண்ணம் இருக்க வேண்டும். அதற்குப்பின் அத்தனை பேர்களுக்கும் சாப்பாடு. அவர்கள் போடும் கூப்பாட்டைக் கேட்காது, சமையலறையில் தலைமறைவாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

வசந்தாவுக்கு ஏகப்பட்ட தோழிகள். உள்ளூர்த் தோழிகளும் வெளியூர்த் தோழிகளும் தொடர் சங்கிலிபோல வந்து வீட்டைக் கலகலக்க வைத்த வண்ணமிருந்தனர்.

ஏழு வருஷ இல்வாழ்க்கையில் வசந்தாவிற்குக் குழந்தைகள் எதுவும் கிடையாது. அதற்குப் பதில் அவளே ஒரு குழந்தையாக நடந்துகொண்டாள்.

காலையில் எழுந்ததும் குளித்தபின், காப்பி பலகாரத்தைக் கணவனுடன் சாப்பிட்டுவிட்டு, நாய்க்

குட்டியை மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டு போல் அருகில் உட்கார்ந்தால் லேசில் எழுந்திருக்க மாட்டாள். தோழிகளுடன் பேசி வீடு அதிரும்படி சிரிப்பாள்.

சாப்பிட்டதும் ஒரு மூச்சு தூக்கம்-மாலைப்பொழுதில் தோழிகளுடன் நாடகம், சினிமா, இரவில் சில சமயம் கணவனுடன் இந்தக் கிளப்பின் ஆண்டு விழா, அந்தக் கிளப்பின் வெள்ளிவிழா என்று கிளம்பிவிடுவாள்.

நாள் முழுதும் உழைக்கும் அம்மாவுக்கு வீட்டுக் காரியங்களில் கொஞ்சம் கை கொடுப்போம் என்ற சிந்தனையே கிடையாத ஒரு போக்கு. முன்னெச்சரிக்கையின்றி 'அம்மா... நாளைக்கு நம்ப வீட்டுக்கு சுதாவையும் சாலினியையும் சாப்பிடக் கூப்பிட்டிருக்கேன்' என்று அறிக்கை கொடுப்பாள்.

முதல் நாள் வந்து போன மருமகனது நண்பர்களுக்கு விருந்து படைத்ததில் வீட்டு ஃபிரிஜ்ஜில் காய்கள் அனைத்தும் காலியாகிவிட்டிருக்கும். சில சமயங்களில் அரிசி, பருப்பு கூடத் தட்டுப்பட்டுவிடும். அந்தச் சமயம் பார்த்து வெளியூரிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வரும் தனது தோழிகளை வீட்டில் தங்கச் சொல்லி...தாய்படும் அவதிகளைப் புரிந்து கொள்ளாமல்...அவர்களுக்கு விமரிசை யாகச் சமைக்கச் சொல்வாள்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்றால் போதும். வசந்தாவுக்கு உற்சாகம் பொத்துக்கொண்டு வந்துவிடும். ஒகோ என்று உபசரிக்கத் தொடங்கிவிடுவாள்.

யாருக்கு வேணும் அந்த ஃபாரின் பொருள்கள்? பர்மா பசாரில் தேடினால் கிடைக்காத சங்கதிகளா? இரண்டு நைலான் புடவைகளையும் ஒரு டப்பா பவுடரையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு ஹோட்டல் செலவுக்குப் பயந்து அவர்கள் வீட்டுக்கு வந்து முகாமிட்டு [illegible]வார்கள்

அந்நிய நாட்டுத் தோழிகள். அவர்களால் செலவு எப்படி அதிகரித்துக்கொண்டு போகிறது என்பதைக் கணக்குப் பார்க்காத மக்குப் பெண் என்று அலமேலு மனம் கோபத்தில் கொதிக்கும். ஆனால் தன் எண்ணங்களை-அபிப்பிராயங்களை-ஆலோசனைகளை அவள் வெளிப்படையாகத் தெரிவிக்க இயலாது தவித்துக்கொண்டிருந்தாள்.

இவைகள் அனைத்தும் அவளைக் கோபாவேசத்தின் தோற்றமாக உருவாக்கி விட்டிருந்தன.

வெகுதூரம் கடைத் தெருவுக்குப் போய் 'சுள்'ளென்று எரிந்த காலை வெயிலில் கூடை நிறையக் காய்களை வாங்கி, தூக்கமாட்டாது திணறிக்கொண்டு மூச்சிறைக்க உள்ளே வந்து நின்றவளுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

முதல் நாள் இரவு அவர்கள் வீட்டில் நடந்ததொரு பெரிய விருந்தைச் சமாளித்துவிட்டு அவள் படுக்கப்போன போது இரவு பனிரெண்டு மணிக்கு மேலாகிவிட்டது. நாள் முழுவதும் ஓடியாடி உழைத்ததின் பயன் முதுகு பாறையாகக் கனத்து வலித்தது. காலை காப்பி, பலகாரம் தயாரித்துக் கொடுத்துவிட்டுப் பகல் சமையலுக்கு வேண்டியதை வாங்கக் கடைத் தெருவுக்கு ஓடியிருந்தாள்.

வீட்டோடு தங்க வந்திருந்த அந்த விருந்தாளியை கண்டதும் அவள் பதறிப் போனாள்.

''முதலில் நீங்க போய்க் குளிச்சிட்டு வேறே உடை மாத்திக்கிட்டு வாங்க. அதுக்குள்ளே நான் உங்களுக்குக் காப்பி டிபனுக்கு எற்பாடு பண்ணுகிறேன்'' என்று வசந்தா சொன்னபோது அலமேலுவுக்கு ஆத்திரம் ஆவேசமாக உடலைக் குலுக்கியது.

அவளா தயார் பண்ணப் போகிறாள்? முன்னறையி லிருந்தபடி 'அம்மா...இவங்களுக்குச் சாப்பிட ஏதாவது செய்து தாங்க' உன்று உத்திரவிடுவாளே.. மகாராணி!

குட்டிதனை மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டு போன அழகில் கட்டாரித்தால் பேரில் எழுதிருக்க மாட்டாள் தோழிகளுடன் பேசி விடு அதிருப்பாடி சிரிப்பாள்.

சாப்பிட்டதும் ஒரு சூச்க தூக்கம்-மாலைப்பொழுதில் தோழிகளுடன் நாடகம், சினிமா, இரவில் சில சமயம் சனிவனுடன் இந்தக் கிளப்பின் ஆண்டு விழா, அந்தக் கிளப்பின் வெள்ளிவிழா என்று கிளம்பிவிடுவாள்.

தான் முழுதும் உழைக்கும் அம்மாவுக்கு வீட்டுக் காரியங்களில் கொஞ்சம் கை கொடுப்போம் என்ற சிந்தனையே கிடையாத ஒரு போக்கு. முன்னெச்சரிக்கையின்றி 'அம்மா... நாளைக்கு நம்ப வீட்டுக்கு தாளையும் சாலினியையும் சாப்பிடக் கூப்பிட்டிருக்கேன்' என்று அறிக்கை கொடுப்பாள்.

முதல் நாள் வந்து போன மருமகனது நண்பர்களுக்கு விருந்து படைத்ததில் வீட்டு ஃபிரிஜ்ஜில் காய்கள் அனைத்தும் காலியாகிவிட்டிருக்கும். சில சமயங்களில் அரிசி, பருப்பு கூடத் தட்டுப்பட்டுவிடும். அந்தச் சமயம் பார்த்து வெளியூரிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வரும் தனது தோழிகளை வீட்டில் தங்கச் சொல்லி...தாய்படும் அவதிகளைப் புரிந்து கொள்ளாமல்...அவர்களுக்கு விமரிசை யாகச் சமைக்கச் சொல்வாள்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்றால் போதும். வசந்தாவுக்கு உற்சாகம் பொத்துக்கொண்டு வந்துவிடும். ஓகோ என்று உபசரிக்கத் தொடங்கிவிடுவாள்.

யாருக்கு வேணும் அந்த ஃபாரின் பொருள்கள்? பர்மா பசாரில் தேடினால் கிடைக்காத சங்கதிகளா? இரண்டு ஜதலான் புடவைகளையும் ஒரு டப்பா பவுடரையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு ஹோட்டல் செலவுக்குப் பணத்து அவர்கள் வீட்டுக்கு வந்து முகாமிட்டு [illegible] பார்கள்

அந்திய நாட்டுத் தோழிகள். அவர்களால் செலவு எப்படி அதிகரித்துக்கொண்டு போகிறது என்பதைக் கணக்குப் பார்க்காத மக்குப் பெண் என்று அலமேலு மனம் கோபத்தில் கொதிக்கும். ஆனால் தன் எண்ணங்களை-அபிப்பிராயங்களை-ஆலோசனைகளை அவள் வெளிப்படையாகத் தெரிவிக்க இயலாது தவித்துக்கொண்டிருந்தாள்.

இவைகள் அனைத்தும் அவளைக் கோபாவேசத்தின் தோற்றமாக உருவாக்கி விட்டிருந்தன.

வெகுதூரம் கடைத் தெருவுக்குப் போய் 'சுள்'ளென்று எரிந்த காலை வெயிலில் கூடை நிறையக் காய்களை வாங்கி, தூக்கமாட்டாது திணறிக்கொண்டு மூச்சிறைக்க உள்ளே வந்து நின்றவளுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

முதல் நாள் இரவு அவர்கள் வீட்டில் நடந்ததொரு பெரிய விருந்தைச் சமாளித்துவிட்டு அவள் படுக்கப்போன போது இரவு பனிரெண்டு மணிக்கு மேலாகிவிட்டது. நாள் முழுவதும் ஓடியாடி உழைத்ததின் பயன் முதுகு பாறையாகக் கனத்து வலித்தது. காலை காப்பி, பலகாரம் தயாரித்துக் கொடுத்துவிட்டுப் பகல் சமையலுக்கு வேண்டியதை வாங்கக் கடைத் தெருவுக்கு ஓடியிருந்தாள்.

வீட்டோடு தங்க வந்திருந்த அந்த விருந்தாளியை கண்டதும் அவள் பதறிப் போனாள்.

''முதலில் நீங்க போய்க் குளிச்சிட்டு வேறே உடை மாத்திக்கிட்டு வாங்க. அதுக்குள்ளே நான் உங்களுக்குக் காப்பி டிபனுக்கு ஏற்பாடு பண்ணுகிறேன்'' என்று வசந்தா சொன்னபோது அலமேலுவுக்கு ஆத்திரம் ஆவேசமாக உடலைக் குலுக்கியது.

அவளா தயார் பண்ணப் போகிறாள்? முன்னறையி லிருந்தபடி 'அம்மா...இவங்களுக்குச் சாப்பிட ஏதாவது செய்து தாங்க' உன்று உத்திரவிடுவாளே.. மகாராணி!

ஃப்ரிஜ்ஜைத் திறந்து கூடையை நிறைத்த காய்களை வகை பிரித்துப் பிளாஸ்டிக் பைக்குள் அவசரமாகத் திணித்து உள்ளே வைத்துக் கொண்டிருந்தாள் அலமேலு.

''ஆண்ட்டி! உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டும்னா சொல்லுங்க. நான் செய்கிறேன்''-கனிவாக-தாழ்மையாகக் கேட்டாள் காவேரி.

கையில் சோப்புப் பெட்டியும், துவாலையும் மாற்று உடையுமாக நின்ற அந்தப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தாள் அலமேலு.

நடுவயதைத் தாண்டிவிட்டிருந்த சற்குணம் கட்டை குட்டையாக, கருப்பாக, எண்ணெய் வடிந்த முகமும், சிரித்தால் பற்களிடையே பளிச்சிட்ட தங்கத் தடுப்புமாக... எப்படியோ இருந்தாள்.

ஆனால்? கூர் மூக்கும் பேசும் விழிகளுமாகத் தந்தச் சிற்பம் போல இந்தப் பெண் கொள்ளை அழகுடன் தெரிகிறாளே. இருவரும் ஆப்பரிக்காவிலிருந்து வந்தவர்கள்! இப்படித் தோற்றத்தில் ஒரு வித்தியாசமா?

இதுவரை ஆப்பிரிக்காவிலிருந்தும் சிங்கப்பூரிலிருந்தும் வந்த வசந்தாவின் தோழிகள் வயதானவர்கள். ஒரு சிலர் படுகிழவிகள். மூட்டுவலி, சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் கடைசி மூச்சு இருக்கும்போதே கோயில் குளங்களைத் தரிசிக்க வந்தோம் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் வீட்டில் வந்து முகாமிட்டவர்கள்.

ஆனால் இந்தப் பெண்?... அவளது மகள் வசந்தாவை விட இளவயதுக்காரியாக இருக்கிறாளே? அத்துடன் பார்க்கவும் அழகாக இருக்கிறாளே? சாதாரணமாகத் தெருவில் நடக்கும்போதே ரகுபதியின் கண்கள் [illegible]ண்கள் பக்கம் துழாவும். வீட்டிலே ஒரு இளம் பெண்ணை [illegible] கொண்டால்

கேட்க வேண்டுமா? அந்த ஆப்பிரிக்காக்காரிக்குத்தான் புத்தி இல்லை என்றால் இந்த வசந்தாவுக்குக் கூடவா புத்தி மழுங்கிப் போகணும்?... அழகான ஒரு இளம் பெண்ணை வீட்டில் தங்க வைத்துக் கொண்டு... கொள்ளிக்கட்டையால், தன் தலையைத் தானே சொரிஞ்சுக்கிறாளே?...

''வேண்டாம் அம்மா... நீ உன் காரியத்தைக் கவனி.'' தாடை இறுக ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மெல்லிய குரலில் மறுப்புத் தெரிவித்தாள்.

கொண்டு வந்த பழைய ஆடைகளை சோப்புப் போட்டுத் தானே துவைத்து, தோட்டத்தில் கட்டியிருந்த கம்பியில் காயப்போட்டுவிட்டுக் காவேரி விரைவில் குளியலை முடித்துவிட்டு மாற்றுடையில் லேசான ஒப்பனை யுடன் உள்ளே பளிச்சென்று வந்து நின்றபோது அலமேலு திடுக்கிட்டுப் போனாள்.

ஆபத்து ஒரு அழகான பெண் உருவில் அவர்கள் வீட்டிற்குள் வந்து நிற்கிறதே?...

சூடான தோசைகளையும் சட்டினியையும் சாப்பாட்டு அறை மேஜைமேல் வைத்துவிட்டு உள்ளே போனாள்.

அதற்குள் வசந்தா அருகிலிருந்த மர பீரோவிலிருந்த புதியதொரு பீங்கான் தட்டு-கண்ணாடி டம்ளர், தேநீர் கோப்பைகள் இத்யாதிகளை எடுத்துத் தயாராக மேஜை மீது அலங்காரமாகப் பரப்பினாள்.

மேலை நாட்டு நாகரிகப் பழக்க வழக்கங்கள் எங்களுக்கு ஒன்றும் புதியதல்ல என்று காட்டிக் கொள்ள வசந்தா புன்முறுவலுடன் ''உட்காரம்மா.. ச்சீஸ்,ஜாம் இதுகள் கூட வீட்டிலிருக்கு.. கொண்டு வரச் சொல்லவா?''- உபசரித்தாள்.

தென் ஆப்பிரிக்க இந்தியர்களுக்கு இவைகள்தான் அதிகம் பிடிக்கும் என்பதை அவள் அனுபவத்தில் அறிந்திருந்தாள்.

'ஆமாம்! நாம் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் வச்சிருக்கோம். விருந்தாளிகளுக்கு வேண்டியதை உடனடியாகக் கொடுக்க முடியும். ஏன்தான் என் பெண்ணுக்கு இந்த டம்பமோ...?' மனதிற்குள் கடிந்தபடி காப்பியைக் கெட்டிலில் நிறைத்துக்கொண்டு வந்து மேஜைமீது வைத்தாள் அலமேலு.

''ஆண்ட்டி! நீங்களும் உட்கார்ந்து எங்களோடு சாப்பிடுங்க'' என்று காவேரி உபசரித்தபோது அலமேலு பற்களை அழுத்தமாகக் கடித்துக்கொண்டாள்.

'எங்கவீட்டு காப்பியை எங்களுக்கே கொடுத்து உபசரிக்கிறாளே. பெரிய தளுக்கி போல இருக்கு. இவகிட்ட ரொம்ப விழிப்பாகவே இருக்கணும்'-மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

காவேரி வந்ததிலிருந்து வீட்டை இரண்டுபடுத்திக் கொண்டு குரைத்தபடி இருந்த அந்த வெள்ளை நாய்க்குட்டி, வெகுவிரைவில் அடங்கிப்போய், முன்னறையில் சோபாவில் அமர்ந்திருந்த காவேரி மடியில் படுத்தபடி வாலை ஆட்டிக்கொண்டிருந்ததைக் கவனித்த அலமேலுவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

'கொஞ்ச நாட்களுக்குமுன் வீட்டுக்கு வருபவரை உள்ளே விடாது குரைத்து பயமுறுத்திய அந்த நாயைக் குளியலறைக்குள் தள்ளிப் பூட்ட எண்ணி வாரி எடுக்கக் குனிந்தபோது வெடுக்கென்று கையைக் கடித்து அவளை ஆஸ்பத்திரிக்கு ஓட வைத்த துஷ்ட நாய்... அது. வந்தவளிடம் இத்தனை சீக்கிரம் பழகி வாலையாட்டுகிறதே, அப்படியானால் அவளது மருமகன் அடுத்தபடி அவள் காலில் விழுந்து சரணாகதி அடைந்து விடுவானே?...

நாள் முழுவதும் அலமேலுவுக்கு ஒரே கவலை... காவேரி அவர்கள் வீட்டுக்கு ஏன் வந்தாள்? எத்தனை நாள் தங்கப் போகிறாள்?... தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் மண்டையைக் குடைந்தது.

வேலையினின்று ரகுபதி சில நாட்கள் நேராக வீடு வருவதேயில்லை. நண்பர்களுடன் அளவளாவிவிட்டு ஆனந்தமானதொரு போதைநிலையில் கண்களும் மூக்கும் சிவக்க, அசட்டுச் சிரிப்புடன் உற்சாகமாக உளறிக் கொண்டு வீட்டுக்குள் நுழைவான்.

அலமேலுவுக்கு வெட்கம் தாங்க முடியாது. தன் அறைக்குள் சென்று தலைமேல் போர்வையை வழிய விட்டுக் கொண்டு படுத்துவிடுவாள். மகளிடம் அதைப் பற்றிப் பேசப்போக... அவள் தாயென்றும் பாராது சண்டைக்கே வந்துவிட்டாள்.

''உயர்மட்டத்து அதிகாரியாக ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்க்கும் என் கணவர் வியாபார நிமித்தம் நடத்தப்படும் பார்ட்டிகளில் சுவரைப் பார்த்துக்கொண்டா நிற்பார்? கொஞ்சம் எல்லோர் போலும் மது சாப்பிட்டால் என்ன? குடியா முழுகிவிடும். ஊர் உலகில் நடக்காத அதிசயமா?...''

அதற்குப்பின் அலமேலு வாயை மூடிக்கொண்டு விட்டாள்.

காவேரியின் சின்ன அண்ணன் மொடாக்குடியன் என்பதும், தென் ஆப்பிரிக்காவில் மது அருந்துவது சிலருக்குத் தண்ணீர்பட்டபாடு என்பதும் அலமேலுவுக்குத் தெரியாத சங்கதிகள். வந்திருக்கும் பெண் ரகுபதியின் போதை நிலையைப் பார்த்துவிடப் போகிறாளே என்று பயந்து போய் மகள் ஏதோ காரியமாக வெளியே போயிருந்த சமயம், இரவு

உணவைச் சீக்கிரமே பரிமாறிச் சாப்பிடச் செய்து-தானும் ஒரு வாய் போட்டுக்கொண்டு, அவளைத் தன் அறையிலிருந்த கட்டில் ஒன்றில் படுக்க வைத்துக் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். பிறகுதான் அவளுக்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது.

''ஆமாம் காவேரி... நீ ஊரைப் பார்க்கத் தனியாகவா வந்தே?''-மெல்ல விசாரித்தாள் அலமேலு.

''ஆமாம் ஆண்ட்டி! இந்த ஊர் என் மனதுக்குப் பிடிச்சால் ஏதாவது ஒரு வேலை தேடிக் கொண்டு இங்கேயே தங்கிவிட யோசனை.''

'அட கர்மமே! இவள் தற்காலிகமாக வந்திருப்பதாக வல்லவா நினைச்சோம். நிரந்தரமாக இருக்கப் போகி றாளாமே?' அலமேலு போர்வையைக் கழுத்துவரை இழுத்துவிட்டுக் கொண்டாள்.

''நான் நர்ஸ் வேலைக்குப் படிச்சிருக்கேன். இன்னும் கல்யாணம் செய்துக்கலை. இங்கே ஒரு வேலை தேடிக்க லாம்னு வந்திருக்கேன் ஆண்ட்டி...'' என்றாள்.

தனக்குத் தன் நாட்டில் ஏற்பட்ட மனக்கசப்பு- அதனால் எடுத்த முடிவு - வந்ததிலிருந்து ஏற்பட்ட அனுபவங்கள் எதையும் அவள் வெளியே சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.

மேலும், வேலை கிடைப்பது என்பது அத்தனை சுலபம் அல்ல என்பதையும் அவள் அறிவாள்.

இரு நாடுகளுக்கிடையே உள்ள தொடர்பற்ற தன்மை யால், அந்நாட்டில் படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களோ- நர்ஸ்களோ தாய்நாட்டில் பட்டங்களைப் பதிவு [illegible] கொண்டு தொழிலைத் துவங்க இயலா[illegible]

நர்ஸ் வேலை இல்லாவிட்டால் அவளுக்கு வேறு என்ன வேலை கிட்டும்? வேலை ஏதுமில்லாது கையிலிருக்கும் கொஞ்சப் பணத்துடன் அவள் எத்தனை காலம் தாய் நாட்டில் தங்கியிருக்க முடியும்? யார் உதவுவார்கள்?

''என்னம்மா யோசிக்கிறே?'' கிழவி ஆவலுடன் துண்டித் துழாவினாள்.

''ஒண்ணுமில்லை ஆண்ட்டி! நீங்க இடம் கொடுத்தது பற்றி நன்றி. உங்கள் மகள்-அல்லது மருமகன் கொஞ்சம் உதவி செய்து வேலை வாங்கித் தந்தால்...''

திகைத்துப் போனாள் அலமேலு. 'மெல்ல மெல்ல இந்தப் பெண் அடிமடியில் கையை வைக்கிறாளே. வேலை என்று சொல்லிக்கொண்டு மருமகன் ரகுபதிக்கு இவள் கொக்கி போட்டுவிட்டால்... இந்த மக்குப் பெண் வசந்தாவை எச்சரிக்க வேண்டும்.'

காவேரி களைப்புத் தாங்காது அயர்ந்து உறங்கிப் போனாள்.

கவலை தாங்காது அலமேலு உறக்கம் இன்றி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

28

காவேரி அவர்களுடன் தங்கத் தொடங்கி ஒரு வார காலம் ஓடிச் சென்று விட்டிருந்தது.

இந்தச் சில நாட்களில் ரகுபதி ரொம்பவே மாறி விட்டிருந்தான். வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளியின்பால் அவன் காட்டிய அக்கறையையும் செய்த பல உபசாரங்களையும் அலுமேலுவால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

முன்பெல்லாம் அவன் அலுவலகம் கிளம்புமுன் சாப்பாட்டறைக்குள் வந்து உட்கார்ந்துவிட்டால் வீடு கிடுகிடுத்துப் போகும்.

முகத்தில் கடுமை பொங்க-குரலில் எரிச்சல் தொனிக்க வேலையாளையும்-மாமியாரையும் ஒருங்கே ஏவிக் கொண்டிருப்பான்.

சாப்பாட்டறையில் அவன் ஒரு நிமிஷங்கூடப் பொறுமையுடன் காத்திருக்கமாட்டான். சூடான இட்டிலிகளையும்-சாம்பார் பாத்திரத்தையும் சுமந்து கொண்டு அலமேலு அரை நொடியில் வந்து பரிமாறவேண்டும்.

அப்போதுகூட ஏதாவது குறை சொல்லாதிருக்க மாட்டான்.

'வெங்காய சாம்பாரா இது? வெங்காயத்தைத் தேட இதில் இறங்கி நீச்சலடிக்கணும் போலிருக்கே?'

'மிளகாய்ப் பொடியா-கன் பவுடரா...?' அப்பப்பா! நாக்கு பிளந்து போறதே... இத்தனை காரம் எதுக்கு?

'கொதிக்கக் கொதிக்கக் காப்பியைக் கொண்டு வந்து வச்சா எப்படிச் சாப்பிட முடியும்!'... ஒரே முணுமுணுப்புத்தான்...

ஆனால் இந்தச் சில தினங்களில் அவன் நடந்து கொண்ட விதமே மிகவும் புதியதாக இருந்தது.

மனைவியும் விருந்தாளியும் குளியலை முடித்துக் கொண்டு உடை மாற்றிக்கொண்டு வரும்வரை அவர்களுடன் சேர்ந்து காப்பி பலகாரம் சாப்பிட அவன் பொறுமையுடன் நாளேடுகளைப் புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கத் தொடங்கினான்.

அத்தோடு மட்டுமா?

''ராத்திரி நல்லாத் தூங்கினீங்களா? இப்போ இந்தப் பக்கம் கொசு உபத்திரவம் அதிகமாயிடுச்சு. விசிறியை வேகமா சுத்தி விட்டுக்கொண்டால் [illegible]க்கள் கடி[illegible]து.

தேவைப்பட்டால் சொல்லுங்க, உள்ளே பீரோவிலிருக்கும் கொசு வலையை எடுத்துக் கட்டச் சொல்றேன்.''மிகவும் அக்கறையோடு விசாரித்தான்.

''நல்லாத் தூங்கினேன். நன்றி...அதெல்லாம் தேவையில்லை. என்னை இங்கே தங்க வைத்துக் கவனிச்சுக்கிறீங்களே அதுக்கே நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்.''

மெல்லிய குரலில் காவேரி கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியில் பூரித்துப் போனான்.

''இன்னும் கொஞ்சம் நெய் போட்டுக்கோங்க. உங்களுக்கு இந்த மாதிரியான பலகாரங்கள் சாப்பிட்டுப் பழக்கமிருக்காது. சாம்பாரில் இட்லியைப் பிட்டு நெய் கலந்து சாப்பிட்டுப் பாருங்கோ. நல்ல ருசியா இருக்கும்'' பச்சைக் குழந்தைக்கு உபசரிப்பது போல ரொம்பவே கவனித்துக் கொண்டான்.

அரைகுறையாகக் காதில் பட்ட அந்த அனுசரணை வார்த்தைகள் அலுமேலுவின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது! மருமகன்மீது காட்ட முடியாத கோபத்தைப் பாத்திரங்கள் மீது காட்டியபடி அழுத்தமாக 'டண்' என்று அவைகளை மேடைமீது வைத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு விள்ளல் இட்லியைச் சாம்பாரில் தொட்டு வாயில் போட்டுக் கொண்டாள் காவேரி. விழுங்குமுன் புரை ஏறிக்கொண்டு விட்டது. அவ்வளவுதான், ரகுபதி கையை உதறிக்கொண்டு உதவிசெய்ய எழுந்து விட்டான்.

''வசந்தா! இவங்க தலையைக் கொஞ்சம் தட்டிவிடு. கொஞ்சம் சில்லுனு தண்ணி கொண்டு வந்து உங்கம்மாவைக் குடுக்கச் சொல்லு... மிளகாயைக் கடிச்சிட்டீங்களா-அடப்பாவமே...!'' என்று உருகிப் போனான்.

அதற்குள் அலமேலு அடுப்பருகிலிருந்து தண்ணீர் டம்பளருடன் ஓடி வந்தாள். ''கொஞ்சம் தண்ணி குடும்மா சரியாயிடும். ஊரில் உன் சொந்தக்காரங்க யாரோ நினைக்கிறாங்க போலிருக்கு. தாய்நாட்டுக்குப் போன பெண் இன்னும் திரும்பலையேன்னு நினைப்பாங்க இல்லையா?...'' என்று கேட்டபடி அவள் தலையைக் கொஞ்சம் அழுந்த மாகவே தட்டினாள்.

ஒரு கணம் காவேரியின் நினைப்புகள் பிறந்த நாட்டை நோக்கித் தாவின:

''போதும் ஆண்ட்டி'' என்று தன் தலையை அலமேலு விடமிருந்து விடுவித்துக் கொண்டு வேகமாகக் கொஞ்சம் நீரைப் பருகினாள்.

அவளைப் பற்றிப் பலர் கட்டாயம் நினைப்பார்கள். உண்மைதான். அண்ணன் லோகேந்திரன் பல தடவை நினைப்பார். 'எத்தனை துணிச்சல் இவளுக்கு? சொல்லாமல் கொள்ளாமல் தாய்நாட்டுக்கு போய்விட்டிருக்காளே?' அண்ணன் அடிக்கடி கருவுவார்.

அண்ணி யசோதா அவரது கோபத்துக்கு அடிக்கடி தூபம் போட்டுக் கொண்டிருப்பாள்.

'படிச்சுட்டோம், நம்ப கையிலே ஒரு வேலை இருக்குன்னு உங்க தங்கச்சிக்கு ரொம்பத் திமிர். எல்லாத்துக்கும் காரணம் உங்க சவுந்தரி அண்ணிதான். ரொம்ப செல்லங்கொடுத்துக் குட்டிச் சுவராக்கி வச்சிருக்காங்க. தலைக்கு மிஞ்சிய பெண்ணை நாம் என்ன செய்ய முடியும்? போய் அவ வேலை செய்கிற டிபார்ட்மெண்டில் எங்கே போயிருக்காள் எங்கே தங்கியிருக்கான்னு முகவரியைக் கேட்டு வச்சுக்கோங்க. நமக்குத் தெரிஞ்சவங்க யாராவது இந்தியா போனால், அவ அங்கே என்ன பண்றான்னு பார்த்துட்டு வரச் சொல்லலாம்' என்று பல ஆலோசனைகள் தந்து கொண்டிருப்பாள்.

மூச்சுக்கு முப்பது தடவை காவேரியைப் பற்றி சின்ன அண்ணி நன்றாகவே நினைத்துக் கொள்வாள். ஏன் என்றால் இப்போது வீட்டு வேலைகளைத் தன்னந்தனியே சமாளிக்க வேண்டியிருக்குமே. வேலை மேலே பட்டால் போதும், அவளுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்து விடும். லீனாவும் வேலையை விட்டுவிட்டாள். உடனடியாக வீட்டு வேலை செய்ய ஆள் கண்டுபிடிப்பது அங்கெல்லாம் ரொம்பச் சிரமமான காரியமாச்சே. 'வீட்டுக் காரியங்களுக்குக் கைகொடுக்கும் நாத்தி வெளியூர் போய்த் தொலைந்து விட்டாளே' என்று கட்டாயம் அடிக்கடி நினைப்பாள்!

அவளுடன் வேலை பார்க்கும் நர்ஸ்கள் கூட அவளைக் கட்டாயம் நினைத்துக் கொள்வார்கள்.

'இந்தக் காவேரி சொல்லாம போய்விட்டாளே. என்னிடம் சொல்லியிருந்தால் ஒரு நைலான் புடவை வாங்கிக் கொடுத்து பம்பாயில் உள்ள எம்பிராய்டரி கடையில் அதில் நிறைய பூப்போட்டு எடுத்துவரச் சொல்லியிருப்பேன்-'

'எதுக்காகப் போனாள்? வியாபார விசயமாகவா? கோயில்களுக்கு வேண்டுதலையா? அங்கே யாரையாவது கல்யாணம் செய்துகொண்டு அங்கேயே தங்கிவிட நினைக்கிறாளா?'

-இப்படிப் பலவும் பேசுவார்கள்-நினைப்பார்கள்? ஊரில் இப்போது அவள் தலை பலர் நாவிலும் உருண்டு கொண்டிருக்கும்.

யார் நினைத்தால் என்ன, மறந்து போனால்தான் என்ன? தாமோதரன் அவளைப் பற்றி என்ன நினைப்பார். ஒரு வார்த்தைக்கூடச் சொல்லாமல் புறப்பட்டுப் போனாள் காவேரி. போகட்டும் என்று ஒரேயடியாக மறந்து போயிருப்பாரா? 'தாய்நாட்டுக்குப் போனவள் ஒரு கடிதமாவது போட்டிருக்கலாமே' என்று கோபத்துடன்

அவளைப் பற்றி கடுமையாகப் பலவும் எண்ணி
ருப்பாரோ...? அந்த ரிஸப்ஷனிஸ்டுடன் உல்லாசமாக
நாட்களை ஓட்டிக்கொண்டு காவேரியைப் பற்றி ஒரேயடியாக
மறந்து விட்டாரோ...?'

இட்டிலியை விழுங்க முடியாது தாமோதரனின் நினைவு
நெஞ்சை அடைப்பதை உணர்ந்தாள். கடைக் கண்களில்
லேசாகப் புரண்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு
தட்டைப் பார்ப்பதுபோலத் தலையைக் கவிழ்த்துக்
கொண்டாள். தாமோதரனைப் பார்க்க வேண்டும், பேச
வேண்டும், தாய்நாட்டில் இதுவரை அடைந்த சில கசப்பான
அனுபவங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் போன்றதொரு
துடிப்பில் ஒரு கணம் அவள் உள்ளம் துவண்டு போனது.
என்ன ஆச்சரியம். இத்தனை தொலைவில் இருந்தும்... மனம்
ஒரே தாவலில் அவன் அருகே ஓடிச் சொந்தம் கொண்டாட
நினைக்கிறதே? 'அவளைப் போல அதே மாதிரி அவன் மனம்
அவளது பிரிவால் தவிக்கிறதா?'

''என்னம்மா... காப்பி கூடா கொண்டுவரச்
சொல்லட்டுமா?'' வசந்தா அவளது தோளை மெல்லத்
தொட்டுக் கனிவுடன் வினவினாள்.

''ஊர் நினைப்பு வந்துவிட்டது போலிருக்கு'' அலமேலு
வேண்டுமென்றே மெல்லக் குத்தினாள்.

''இன்னும் இந்த நாட்டைச் சரிவரச் சுற்றிப் பார்த்து
முடிக்கலை. அதுக்குள்ளே எப்படி ஊருக்குத் திரும்ப
முடியும்'' குறுக்கிட்டுப் பேசிய ரகுபதி மாமியாரைக்
கண்களால் வெட்டினான். புடவைத் தலைப்பை இழுத்துக்
கை மேல் போர்த்திக்கொண்டு அவள் அங்கிருந்து
மாயமானாள்.

''ஊரைச் சுற்றிப் பார்க்கக்கூட நான் ஆசைப்படவில்லை.
முதலில் ஒரு வேலை தேடிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு

நல்ல வேலை கிடைத்து விட்டால் சென்னையிலேயே
நிரந்தரமாகத் தங்கிவிடலாம் என்று யோசனை.''

''அப்படியா?'' என்று உற்சாகத்துடன் கேட்டான் ரகுபதி.
அவனுள் ஆயிரம் கற்பனைகள் கொடிவிட்டன.

''இங்கே பாருங்கோ மிஸ் காவேரி. வேலை
கிடைச்சாலும் நீங்க எங்களோடேயே தங்கிக் கொள்வதைப்
பத்தி எனக்கோ-வசந்தாவுக்கோ-அவங்க அம்மாவுக்கோ
எந்தவித மறுப்பும் கிடையாது. அதனால் இந்த வீட்டை
உங்கள் வீடாக நினைச்சுக்கலாம்'' என்றான்.

''தாங்க்யூ மிஸ்டர் ரகுபதி'' என்றவள் லேசாக
முறுவலித்துவிட்டு ஒரு வழியாகக் காப்பியைப் பருகிவிட்டு
எழுந்திருந்தாள்.

கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு வேலைக்குக்
கிளம்புமுன், முன் அறைக்குள் வந்து ரகுபதி மறுபடியும்
ஆதரவாகச் சொன்னான்.

''என் மனைவி வசந்தாவுக்குப் பல பெரிய இடத்துப்
பெண்களைத் தெரியும். அவர்கள் மூலம் ஏதாவது ஒரு
தனியார் நர்ஸிங்ஹோமில் உங்களுக்கு வேலை வாங்கித் தர
முயற்சி செய்ய முடியும். உங்களுக்கு மறுப்பு இல்லை
யென்றால், நர்ஸ் வேலையைத் தவிர அலுவலக வேலை
ஏதாவது என்னால் வாங்கித்தர இயலும். கவலைப்படாதீங்க''
என்று அபயம் அளித்துவிட்டுக் கிளம்பினான்.

அன்று மாலை வீடு திரும்பிய ரகுபதி உடனடியாகக்
கம்பெனிக் காரியமாக வெளியூர் சுற்றுப்பயணம் ஒன்றை
மேற்கொள்ள நேரிட்டது.

மருமகன் டூர் கிளம்பி விட்டார் என்றால் முன்பெல்லாம்
அலமேலு அரண்டு விடுவது வழக்கம்.

கம்பெனி தயவில் கிடைக்கும் ஒட்டல்கள் ஒன்றில் கையில் புட்டியும்-பக்கத்தில் ஒரு குட்டியுமாக மருமகள் என்ன கூத்தடிக்கிறானோ என்ற பல கற்பனைகளில் அவள் கவலையில் மூழ்கிப் போய்விடுவது வழக்கம்.

ஆனால் இம்முறை அவள் அவனது சுற்றுப்பயணத்தை வெகுவாக வரவேற்றாள்.

இரண்டு வார காலம் ரகுபதி ஊரில் இருக்கமாட்டான். வெளியே அவன் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும், கண் எதிரே காதல் நாடகங்கள் எதையும் அவன் துவங்கத் தேவையில்லை. அவன் ஊரிலிருந்து திரும்பி வருவதற்குள் காவேரிக்கு ஒரு வேலை தேடிக் கொடுத்து வெளியே விரட்டிவிட வேண்டும். அல்லது வேறு எந்தவிதமான சூழ்ச்சியாலாவது அவளை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று தீர்மானமாகத் தன்னுள் திட்டமிடத் துவங்கினாள்.

★ ★ ★

மறுநாள் காலை... வசந்தா மாடியிலிருந்து இறங்கி வந்தவள் உற்சாகத்துடன் கத்தினாள்.

''அம்மா! இந்தப் புடவை எனக்கு எப்படி இருக்கு?'' உடலைத் தழுவிக்கொண்டு நின்றதொரு 'ராஷாம்' சில்கின் தலைப்பை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு பத்திரிகை விளம்பர மாடலைப் போல இடுப்பை வளைத்துக்கொண்டு நின்றாள்.

''உனக்கு எப்பவும் புடவை துணிமணிகள் மேல்தான் நினைப்பு. வேறே வேலை என்ன...?'' என்று முணுமுணுத்த தாய் மகளை நிமிர்ந்து பார்த்தாள்.

இந்தப் புடவையையும் இன்னும் இரண்டு அமெரிக்கன் ஜார்ஜெட்டையும் ஒரு சென்ட் பாட்டலையும் எனக்குப்

பரிசாகக் கொடுத்தாள் காவேரி. இந்த ராஷாம் ரொம்பப் புது தினுசாம். சிங்கப்பூரிலிருந்து வந்து ஆப்பிரிக்கக் கடைகளில் கொட்டிக் கிடக்காம். பிரிண்டெட் சில்க் புடவை போல... அதே சமயம் கசங்காம எத்தனை அழகா இருக்கு பார்த்தீங்களா? இதை இன்னிக்குக் கட்டிக்கொண்டு என் சிநேகிதி சரஸ்வதியைப் பார்த்திட்டு வரப்போகிறேன்.''

''சரஸ்வதி புருஷன் நினைச்சா சிங்கப்பூருக்கு பறந்துட்டு வரான். அவகிட்ட இதைவிட இன்னும் ஏதாவது கஷான், புஷான்னு புது தினுசு புடவைகள் இருக்கும். புடவை, சென்ட் இதுகளுக்கு விலை மதிப்பற்ற உன் வாழ்க்கையைப் பறி கொடுத்துடாதே!''

''என்னம்மா சொல்றீங்க?'' வசந்தா கோபத்துடன் தாயை உற்றுப் பார்த்தாள்.

அதற்குமேல் விளக்கமாகப் பேச அலமேலுவுக்குப் கொஞ்சம் அச்சம். மகள் வசந்தா ஒரு மதில்மேல் பூனை. திடீரென்று வீட்டுக்கு வந்திருப்பவளுக்காகப் பரிந்து கொண்டு தாயிடமே சண்டைக்கு வந்தாலும் வியப்படைவதற்கில்லை.

''குழந்தைத்தனமா இல்லாம, கொஞ்சம் கருத்தோடப் பாடுபட்டு அந்தப் பெண் காவேரிக்கு எங்கேயாவது ஒரு நல்ல வேலை வாங்கித் தரக் கூடாதான்னு சொல்ல வந்தேன்... பாவம்! அந்தப் பெண் வேலையில்லாமல் எத்தனை நாள் பிறர் வீட்டில் வந்து தங்கியிருக்க மனம் ஒப்புவாள். தண்டச் சோறு தின்னுகொண்டு இங்கே இருக்கப் பிடிக்கலைன்னு கிளம்பிட்டா... நம்மால் ஆன உதவியைச் செய்ய முயல வேண்டாமா...?''

தணிந்த குரலில் ஆத்திரம் அனைத்தையும் அடக்கிக் கொண்டு பேசினாள்.

''ஆமாம் அம்மா! நீங்க சொல்றது சரி, என் டாக்டர் சிநேகிதிக்கு இப்பவே போன் செய்கிறேன்'' வசந்தா ஓடினாள் மாடிக்கு.

''எத்தனை சுலபமாகக் கணவனும் மனைவியும் வாக்குத் தந்துவிட்டனர்! வேலை கிடைப்பது என்பது அத்தனை சுலபமா? தாய்நாட்டில் படித்துப் பட்டம் பெற்று விட்டு வேலை கிடைக்காது பல பெண்கள் திண்டாடும் போது... வெளியூரிலிருந்து வந்த இவள் கையில் லட்டுபோல யாரோ வேலையைத் தூக்கித் தந்துவிடப் போகிறார்களோ மகளே சமர்த்து.. உன் திறமைக்கு இப்போது காவேரி ஒரு சவால்...'

தனக்குள்ளே பொருமிக்கொண்டு அலமேலு அடுப்பைக் கவனிக்க உள்ளே சென்றுவிட்டாள்.

அன்றுகாலை காவேரியுடன் புறப்பட்ட வசந்தாவுக்குப் பெரிய ஏமாற்றம். வெளிநாட்டில் படித்துப் பட்டம் பெற்ற நர்ஸ்-அதுவும் தென் ஆப்பிரிக்காவில்... அவளுக்கு நர்ஸ் வேலை தருவது முடியாத காரியம். அவளது பட்டத்தை நர்ஸிங் கவுன்சிலில் பதிவு செய்ய முடியாததுதான் காரணம். டாக்டர் தோழி கைவிரித்து விட்டாள்.

வேலை எதுவும் கிடைக்காவிடில் காவேரி தொடர்ந்து அவர்கள் வீட்டில் எத்தனை காலம் தங்கியிருக்க முடியும்?... அடுத்தபடி அவள் என்ன செய்வாள்?

இருள்மயமான வருங்காலம் காவேரியை மிகவும் அச்சுறுத்தியது.

29

வசந்தா முன்னதாகவே சொல்லியிருந்தாள்.

வேலை தேடித்தரத் தன்னால் இயன்றவரை பல முயற்சிகளில் ஈடுபடத் தயார். ஆனால் தினமும் ஆட்டோவில் நகரத்தைச் சுற்றிவர முடியாது.

ஊறுகாய் பாட்டிலைக் குலுக்குவதுபோல உடம்பு எலும்புகள் குலுக்கப்பட்டு வேதனை தருகின்றன. அதனால் அவள் டாக்ஸி வைத்தால்தான் கூட வர இயலும். வேறு வழியின்றிக் காவேரி கையிலிருந்த டிராவலர்ஸ் செக்குகள் சிலவற்றை மாற்றி டாக்ஸிச் செலவுக்கு வைத்துக் கொண்டாள்.

பணம் தண்ணீராகக் கரைந்ததுதான் மிச்சம். ஒரு வாரகாலம் அவர்கள் ஏறி இறங்காத கட்டிடங்கள் நகரத்தில் அதிகம் இருக்கவில்லை.

என்ன படிச்சிருக்கீங்க? நர்ஸ் பயிற்சியை விட்டுத் தள்ளுங்க. அடிப்படைக் கல்வி? மெட்ரிக் பாஸ் பண்ணி யிருக்கீங்களா? ஃப்பூ! இங்கே எம்.ஏ. படித்த பெண்களுக்கே சட்டுனு வேலை கிடைக்கிறதில்லை... வெறும் மெட்ரிக்குக்கு என்ன வேலை கிடைக்கும்?

கேட்டவர்கள் துச்சமாக அவளது அடிப்படைக் கல்வியை அளவிட்டுத் தூக்கி எறிந்தபோது அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

வேலை எதுவுமே கிடைக்காது போய்விட்டால்... அவள் என்ன செய்வாள்? ஒரு வார காலம் டாக்ஸியும், பகலில் வழியில் தெரிந்த ஹோட்டல்களில் புகுந்து சாப்பிட்டதுமே ஆயிரம் ரூபாய்களை விழுங்கிவிட்டதே. கவலையுடன்தான் அன்று காலை காவேரி புறப்பட்டிருந்தாள்.

''என் கணவரின் கிளப் நண்பர், தேவசுந்தரம் எனும் டாக்டர் புதியதாக ஒரு நர்ஸிங்ஹோம் கட்டியிருக்கிறார். அவரை இப்போது போய்ப் பார்ப்போம்'' என்று உசுப்பிவிட்டுக் கூடக் கிளம்பினாள் வசந்தா.

பூந்தமல்லியில் ஒரு பழைய பங்களா இருந்த இடத்தில் ஒரு ஆண்டு காலத்திற்கு முன்னர்-ஆகாயத்தைத் தொட்டு விடும்போல ஐந்தடுக்கு மாடியாக உருவாகியிருந்த அந்த

நர்ஸிங்ஹோமை ஒரு பிரபல அரசியல்வாதி திறந்து வைத்தார் என்றும்-அன்று அவளும் அவளது கணவரும் டாக்டர் நண்பருடன் முன்பக்கத்துக் தோட்டத்தில் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டார்கள் என்றும் வழி முழுவதிலும் வாய் ஓயாது வளவளவென்று பேசிக்கொண்டு வந்தாள் வசந்தா.

புதுமை இன்னமும் அழியாதிருந்த அந்தக் கட்டிடத்தின் புகுவாயில் வழியாக டாக்ஸி நுழைந்ததும் சட்டென்று பணத்தைக் கொடுத்து வண்டியை அனுப்பச் செய்தாள் வசந்தா.

அவள் எப்பொழுதும் அங்கே தன் கணவருடன் காரில் தான் வருவது வழக்கம். டாக்ஸியில் வந்து இறங்கினால் டாக்டர் அவளது அந்தஸ்தைப் பற்றிக் கொஞ்சம் குறைவாக மதிப்பிட்டால்?... என்ற கவலை அவளுக்கு.

அவளை விடக் கவலையில் மருத்துவமனையில் தமது அறைக்குமுன் அதன் தலைவர் தேவசுந்தரம் வராந்தாவில் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார். மனைவி தவமணியின் பிறந்த வீட்டிலிருந்து அள்ளிக்கொண்டு வந்த செல்வத்தையெல்லாம் போட்டு-வங்கியில் பெரிய கடன் எடுத்து-பல பங்குதாரர்களைச் சேர்த்துக் கொண்டு-அத்துடன் கூடத் தொல்லைகள் பலவற்றையும் தலையில் கட்டிக் கொண்டு அவர் உருவாக்கியிருந்த நர்ஸிங்ஹோம் அது.

மனைவியைச் சமாதானப்படுத்த அவள் பெயரைக் குழல் விளக்காக இரவில் தொலைதூரம் தெரியக் கட்டிடத்தின் உச்சியில் பொருத்தியிருந்தார். தவமணி மருத்துவமனை என்ற அந்தப் பெயர் ஒளியை உமிழ்ந்தபடி சுழன்றது-அத்துடன் காலமும் வேகமாகச் சுழன்றது. மருத்துவமனையின் பெயரும் சில மாதங்களில் பிரபலமாகியது-வாங்கிய கடனின் வட்டியும் விஷமாக ஏறியது. தேவசுந்தரத்தைப் பல கவலைகள் கழுத்துமட்டும் இறுக்கிக் கொண்டிருந்தன.

ஆனாலும் அவர் அவைகளை ஒரு பொழுதும் வெளியே காட்டிக் கொண்டதில்லை. மாப்பிள்ளை அழைப்புக்குத் தயாராகிவிட்ட மணமகன்போல எப்பொழுதும் கோட்டும் ஸூட்டுமான அலங்காரத்தில், பொருத்தமான டையுடன் கால் ஷூவில் முகம் தெரியும் பளபளப்பில், அணிந்து கொண்டிருக்கும் ஆஃப்டர் ஷேவ்லோஷனின் மணம் சுற்றிலும் கமாளிக்க ஆசாமி மிக்க மிடுக்குடன் தான் காணப்படுவார்.

பின்னால் கைகளைக் கட்டியபடி 'டக்டக்' என்று அவர் கவலையை மறக்க வராந்தாவைக் கால்களால் அளந்து கொண்டிருந்தார்.

வரவேற்பறையில் ஸன்மைக்காவில் பளபளத்த வளைவான மேஜைக்குப் பின்னால் பளிச்சென்று புன்னகை காட்டியபடி, வந்தவர்களை விசாரித்து - தொலைபேசித் தொகுதிப் பெட்டியை இயக்கி - அன்றாடம் அனுப்ப வேண்டிய பில்களை அந்தந்தக் காகித உறையிலிட்டு உரிய வரின் முகவரிக்கு அனுப்பி வைத்துக் கொண்டு ஓயாது உழைத்த அவரது ரிஸப்ஷனிஸ்ட் மோகனா தாய்மையடைந்து விட்டிருந்ததால் விடுப்பு எடுத்துக் கொண்டுவிட்டிருந்தாள்.

இரண்டு நாட்களாக அங்கே வரவேற்பறையைக் கவனிக்க டைப்பிஸ்ட் கோபாலனைப் போட்டு வைத்திருந்தார்.

அவனது கரகரப்புக் குரலைக் கேட்டதுமே-தவறான எண்களைச் சுழற்றிவிட்டதாக நோயாளிகள் சட்டென்று தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டனர். தாடியும் மீசையுமான தோற்றத்திலே அவனைக் கண்டதும் நோயாளிகளின் நோய் இன்னும் அதிகரித்து விட்டது போன்ற பிரமையடைந்தனர்.

வரவேற்பறைக்குத் தேவைப்பட்டது ஒரு இளம் பெண். அழகும், பளிச்சென்ற புன்னகையும், பணிவுமான ஒரு

இளஞ்சிட்டு அவருக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. அவளை எங்கே யார் உடனடியாக தேடுவது?

வசந்தாவைக் கண்டதும் உலவுவதை நிறுத்திவிட்டுப் புன்முறுவலில் முகம்மலர வரவேற்றார். அவரது கண்கள் பின்னால் வந்த பெண்ணைப் பார்த்து வியப்பில் விரிந்தன.

''உங்களோடு சில நிமிஷம் ஒரு முக்கிய சங்கதி பேசணும்.''

வசந்தா சொன்னதுமே தன் அறைக்கதவைத் தள்ளித் திறந்து அவளையும் வந்தவளையும் ஏ.சி.யின் குளிரில் மூழ்கடித்தார்.

சுழல் நாற்காலியில் அமர்ந்தபடி தலையை நிமிர்த்திக் கொண்டு கேட்டார். ''உங்க உடம்புக்கு என்ன? உங்கள் கணவர் எதுவும் சொல்லவில்லையே?...'' அனுதாபத்துடன் ஆரம்பித்தார்.

''உங்கள் கருணையால் உடம்புக்கு ஏதும் இல்லை சார். இவள் என் வெளிநாட்டுத் தோழி. தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவள். பெயர் காவேரி. அங்கே நர்ஸ் வேலை பார்த்தவள். கொஞ்ச காலம் நம் நாட்டில் தங்கிவாழ ஆசைப்படுகிறாள். தானே சம்பாதித்து வாழ வேண்டுமென்று பிடிவாதம். இங்கே ஏதாவது வேலை காலியிருந்தால் சௌகர்யமாக இருக்குமென்று அழைத்து வந்தேன்.''

ஒளிவு மறைவின்றி விவரமாகக் கூறினாள் வசந்தா.

மேலும் கீழும் காவேரியைப் பார்த்தார் தேவசுந்தரம். தோற்றம் அவரது ரிஸப்ஷனிஸ்ட் மோகனாவைவிட ஒரு படிமேலான கவர்ச்சியைக் காட்டியது. அதுவரை திருப்திதான்.

''உங்களுக்கு நான் நர்ஸ் வேலை கொடுக்க சாத்தியப்படாது. அதனுடைய சட்டதிட்டங்களை அறிவீங் கன்னு நம்புகிறேன். இங்கே தற்காலிக ரிஸப்ஷனிஸ்ட்

வேலை ஒன்று காலியிருக்கு. உங்கள் படிப்பு, திறமை இவைகளைக் கொஞ்சம் தெரிஞ்சு கொண்டால் அதை நான் உங்களுக்குத் தரமுடியும்'' என்று மெல்லக் கூறிவிட்டு மறுபடியும் அவளை உற்றுப் பார்த்தார்.

காவேரி தனது அடிப்படை கல்வி மெட்ரிக் வகுப்புடன் முடிந்து விட்டதைப் பற்றியும், தன் நாட்டில் அவள் எந்த ஆஸ்பத்திரியில் நர்ஸ் பயிற்சிக்குச் சேர்ந்தாள், எந்த ஆண்டில் தேர்ச்சி பெற்றாள், தற்போது அங்கே பார்த்துக்கொண்டிருக்கும் வேலை இவைகளைப் பற்றிச் சொன்னாள்.

கச்சிதமாக வார்த்தைகளை உச்சரித்து அவள் பேசிய நாசூக்கான ஆங்கிலம் அவரை வியப்பில் ஆழ்த்தியது.

மெட்ரிக்குலேஷன் வரை படித்தவள் என்கிறாள் , எம்.ஏ. பட்டதாரிபோல ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகிறாளே - தமிழ்கூடப் பரவாயில்லையே! குரல் இனிமையாக இருக்கிறது. தோற்றத்துக்கு முதல் மதிப்பெண். தமக்குள்ளேயே சீக்கிரம் தேர்வை முடித்துக் கொண்டார்.

''எங்கள் ரிஸப்ஷனிஸ்ட் ஆறு மாதம் லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் திரும்பும்வரை இந்த வேலையைத் தர எனக்கு மறுப்பு இல்லை. சம்பளம் மாதம் நானூற்றுக்கு மேல் தர இயலாது'' என்றார்.

காவேரி திடுக்கிட்டுப் போனாள். நானூறு ரூபாய் என்றால் அவள் நாட்டு நாணயக் கணக்குப்படி கிட்டத்தட்ட முப்பத்தைந்து ராண்ட் என்று மதிப்பிடப்படும். 'வீடு கூட்டிய லீனா கூட அதைவிட அதிகமான சம்பளம் அங்கே வாங்கினாளே? ஸ்கூல் மெடிகல் சர்வீஸில் நர்ஸ் வேலை பார்த்த அவள் வாங்கிய சம்பளம் எத்தனை... இங்கே கைநீட்டிப் பிச்சை வாங்குவதுபோலச் சம்பாதிக்கப்போகும் பணம் எத்தனை? ஒரு சனிக்கிழமை காலை வெஸ்ட் ஸ்ட்ரீட் கடைகளைச் சுற்றிப் பவனி வரும்போது சாக்லெட்டுகளும்

பிஸ்கட்டுகளும் வாங்கும் பணத்திற்குக் கூட இந்த மாதச் சம்பளம் ஈடாகாதே! சற்குணம் சொன்னவைகள் அத்தனையும் உண்மை. தாய்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். எம்.ஏ. படிச்சவங்ககூட வாங்குகிற சம்பளத்தை நீ கேட்டால் மூர்ச்சை போட்டு விழுவாய் என்று சிரித்தாளே, அது அத்தனையும் வாஸ்தவமான பேச்சு...''

எண்ணிய காவேரிக்கு தலை சுற்றியது. தாய் நாட்டில் தன் கல்விக்கு இருந்த மதிப்பை எண்ணி மனம் கலங்கிப் போனாள். துக்கம் தொண்டையை அடைக்க லேசாகக் கண்களில் நீர் புரள மென்று விழுங்கியபடி சொன்னாள்.

''அதற்கென்ன? நீங்க இந்த வேலையைத் தருவதானால் ஒப்புக் கொள்கிறேன். தாங்க்யூ சார். நாளையிலிருந்து வந்து வேலையைத் துவங்கலாமா?'' கேட்டபடி விடை பெற்றுக்கொண்டாள்.

வெளியே வந்து இருவரும் ஒரு டாக்ஸியைப் பிடித்து ஏறிக்கொண்டனர். காரும்-கைநிறையச் சம்பளமும் கௌரவமான உத்தியோகமும் என்ற வாழ்க்கையை உதறிவிட்டு நண்பர்கள் உறவினர்கள் எல்லோரையும் மறக்கத் தாய்நாட்டின் சிக்கலான வாழ்க்கைக்குள் வந்து புகுந்து கொண்டிருக்கிறாளே-இங்கே நீடித்துக் காலந்தள்ள இயலுமா? அப்படியானால் பிறந்த நாட்டிற்குத் திரும்பப் போகக்கூடாது என்கிற வைராக்கியம் என்னாவது? ஓவென்று வாய்விட்டு அழ வேண்டும் போன்ற துக்கம் மென்னியைப் பிடித்துக் கொண்டு உலுக்கியது. சிரமப்பட்டுத் தன் உணர்வுகளைச் சமாளித்துக்கொண்டு மெல்லச் சிரித்தாள்.

''உங்கள் தாயாருக்கு நாளைக்குப் பிறந்தநாள் என்று பேச்சுவாக்கில் தெரிந்து கொண்டேன். என்னை ரொம்ப கவனிக்கக் கொள்ளும் அவங்களுக்கு ஏதேனும் பரிசு வாங்கலாம்னு யோசிக்கிறேன். என்ன சொல்றீங்க...'' என்று தானே ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டாள் காவேரி.

''அப்படியா? சம்யுக்தா சில்க் கடை முன்னால் டாக்ஸியை நிறுத்தச் சொல்கிறேன். அம்மாவுக்குக் காஞ்சிபுரப் பட்டுச் சேலைதான் பிடிக்கும்'' என்றாள் வசந்தா மகிழ்ச்சியுடன்.

சம்யுக்தா சில்க் ஹவுஸில் நுழைந்தவுடனேயே கடைக்காரர் வசந்தாவுக்குப் பெரிய கும்பிடு போட்டு வரவேற்றார்.

''அம்மாவை ரொம்ப நாளா இந்தப் பக்கம் காணலையே... பையா, இவங்களுக்குச் சாப்பிட ரெண்டு செவண்டி செவன் எடுத்துவா'' என்று உத்தரவிட்டபடி, பின்னால் வந்தவளைக் கண்களால் ஆராய்ந்தார்.

விற்பனையாட்கள் புடவைகளை அடுக்காக எடுத்துத் தரை மெத்தையில் வெள்ளை விரிப்பின் மீது பிரித்து வீச, அவைகளின் வேலைப்பாட்டின் அழகில் மயங்கி, வண்ணங்களை பிரமிப்புடன் பார்த்தபடி திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள் காவேரி.:

''அம்மாவுக்கு இதுபோதும்'' என்று வசந்தா ஒரு புடவையைத் தேர்ந்தெடுத்து அப்பால் வைத்தாள். விலை எழுநூற்று ஐம்பது என்பதைச் சீட்டு காட்டியதை மெல்லப் படித்துப் பார்த்த காவேரி திகைத்துப் போனாள்.

பிறந்த நாள் என்றால் ஏதோ ஒரு கொத்துப் பூக்கள் அல்லது ஒரு பவுடர் டப்பா அல்லது ஒரு செண்ட் பாட்டில்... மிகவும் நெருக்கமான உறவினராக இருந்தால் ஒரு நைலான் புடவை என்றுதான் அவர்கள் நாட்டில் பரிசுகளை வாங்கி வழங்குவார்கள். பத்து அல்லது பதினைந்து ராண்டுக்கு மேல் செலவும் ஆகாது. இந்தக் கணக்கின்படி பார்த்தால் புடவைக்கு மட்டுமே எழுபது ராண்டுக்குமேல் பிடிக்கும் போல் இருக்கிறதே... உள்ளூரக்கவலையில் கலங்கிப்போனாள். ஆனாலும் சற்குணம் சொன்ன புத்திமதியைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது.

''நீங்களும் ஏதாவது எடுத்துக்கறதுதானே? எனக்கு வேலை வாங்கித்தர இவ்வளவு சிரமப்பட்ட உங்களுக்கு நான் ஒரு பரிசு தரவேண்டாமா?'' மெலிதாக முறுவலித்தாள் காவேரி.

வசந்தா மகிழ்ச்சியுடன் தன் மனதிற்குப் பிடித்த ஒரு அழகான விலை உயர்ந்த காஞ்சிபுரத்தை எடுத்து மேஜை மேல் வைத்தாள்.

அதன் விலை ஆயிரத்து ஐநூறு என்பதைக் கண்டதும் காவேரி நடுங்கிப் போனாள்.

அந்த வாரம் அவள் மாற்றி வந்த அத்தனை டிராவலர்ஸ் செக்குகளின் பணத்தையும் போட்டு அந்த இரு புடவை களையும் வாங்கிக்கொண்டு வெளியே வந்தாள்.

ஒரு சில நாட்கள் இவர்கள் வீட்டில் தங்க நேர்ந்ததற்கு இத்தனை செலவா? வசமாக வந்து மாட்டிக்கொண்டு விட்டோமே. தொடர்ந்து அங்கே தங்கினால் இன்னும் எத்தனை பரிசுகளை எதிர்பார்ப்பார்கள்? தாய்நாட்டைப் பற்றி அண்ணி சவுந்தரியே அவளிடம் ஒரு முறை சொல்லி யிருந்தாள்.

''தாய்நாட்டிலுள்ள சிலருக்கு ஒரு கெட்ட குணம் உண்டு. வெளிநாட்டிலிருந்து வரும் உறவினர்கள் விலை உயர்ந்த பரிசுகள் வாங்கி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். வெறும் பவுடருக்கும் சோப்புக்கும் மசிய மாட்டார்கள். திருப்தியில்லாது முணுமுணுப்பார்கள். இந்த நாட்டில் உள்ள இந்தியர்கள் வெள்ளைக்காரர்களைப் பார்த்து அவர்கள்போல வாழத் தெரிந்து கொண்டபோதிலும் சில நல்ல குணங் களையும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கத்தை ஊதுபத்தியையோ, ஒரு சந்தன விசிறியையோ பரிசாகத் தாய்நாட்டிலிருந்து கொண்டு வந்து கொடுத்தால் போதும் ரொம்பவே மகிழ்ச்சியடைந்து விடுகிறார்கள்.''

சவுந்தரி அண்ணி கூறியது முற்றிலும் உண்மை என்பதை அலமேலு அம்மாள் உடனடியாக நிரூபித்து விட்டாள்.

''பிறந்த நாள் பரிசா? அழுத்தம் போறாத புடவையாப் பார்த்துப் பொறுக்கியிருக்கியே. இந்தக் கலர் எனக்கு அத்தனை பிடிக்காது. இன்னும் கொஞ்சம் அதிகம் சரிகை போட்டிருந்தால் ஒரு கல்யாணம் காட்சிகளுக்குக் கட்டிக் கொண்டுபோக சுலுவா இருக்கும்''-மகளிடம் குறைபட்டுக் கொண்டது காவேரிக்குத் துல்லியமாகக் கேட்டது.

அதைவிட அவளை மிகவும் கலவரத்தில் ஆழ்த்தும்படி சில நாட்களுக்குப் பின் ரகுபதி வீட்டிற்குத் திரும்பியதும் அவர்கள் வீட்டில் நடந்த விருந்தின்போது ஒரு சம்பவம் நடந்தது.

30

சவுந்தரி அண்ணி உயிருடன் இருந்தபோது டர்பன் நகரத்தில் கொண்டாடப்படும் எல்லா விழாக்களிலும் தமிழில் பேசும் ஒரு பேச்சாளராக பங்கு கொள்வது வழக்கம்.

மைக்கின் முன் நின்று அண்ணி கொஞ்சமும் அஞ்சாது சரளமாகத் தமிழில், தங்குதடையின்றிக் கேட்பவர் மனதில் பதியும் வண்ணம் மிகவும் எளிமையான நடையில் பேசுவதைக் கேட்டுப் பூரித்துப் போவாள் காவேரி.

''அண்ணி! ரொம்ப நல்லா பேசினீங்க. கேட்டவர்கள் குலுங்கிச் சிரிக்கும்படி நகைச்சுவையோடு சுவாரஸ்யமா பேசினீங்களே! இப்படி எனக்கு ஆங்கிலத்தில்கூடப் பேசவராதே'' என்று அண்ணியை மார்புடன் தழுவிக்கொண்டு

ஒரு சமயம் டர்பன் ஸிடி ஹாலில் தமிழர்கள் கொண்டாடிய பாரதி விழாவின் போது சவுந்தரி அண்ணி பேசியதைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனாள் காவேரி.

''தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே என்று எங்கள் பாரதி எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் பெண்களின் வருங்கால நிலையைப் பற்றிப் பாடியிருக்கிறார்...'' என்று ஆவேசமாகப் பேசினாள் சவுந்தரி.

வீட்டுக்கு வந்ததும் வழக்கம்போல் அண்ணியை அவள் புகழ்ந்தாள். ''உங்க பேச்சைக் கேட்டு என் உடம்பு புல்லரிச்சுப் போச்சு அண்ணி'' என்றாள் மகிழ்வுடன்.

சவுந்தரி அதற்குச் சொன்ன பதில்தான் அவளைத் திகைப்படையச் செய்தது. ''பாரதியார் பல ஆண்டுகளுக்கு முன்பே சுதந்திரம் அடையப் போகும் இந்திய நாட்டில் பெண்களின் நிலைமை எப்படி இருக்கப் போகிறது என்று பாடிவிட்டுப் போனார். அவரது கற்பனையில்-அவரது உணர்வில் பெண்கள் தாயாக-தெய்வமாகத் தென்பட்டனர்.

''உங்க நாடுதான் சுதந்திரம் அடைஞ்சு போச்சே அண்ணி!''

''நாடு சுதந்திரமடைந்துவிட்டது. ஆனால் பெண்கள் சுதந்திரத்தைப் பெறவில்லை. இன்னமும் அடிமைகளாக இருக்கின்றனர்.''

''என்ன சொல்றீங்க அண்ணி?''

''ஆமாம் காவேரி! சரிநிகர் சமானமாக ஆண்களோடு பெண்கள் படிக்கிறார்கள்-வேலை செய்கிறார்கள்- உழைக்கிறார்கள்-பாடுபடுகிறார்கள். ஆனால் சமுதாயத்தின் பார்வையில் அவர்களுக்குச் சமமான அந்தஸ்து ஏற்பட

வில்லை-வரதட்சணை, சீர்... இந்தக் கொடுமைகளால் பெண்கள் இன்னமும் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.''

''நிலைமை மாறிட்டதுன்னு எல்லோரும் சொல்றாங்களே.''

''இல்லை. பெண்கள் இன்னமும் ஒரு போகப் பொருளாகவே கருதப்படுகிறார்கள். பம்பாய் நகரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த இந்த நாட்டு இந்தியர்கள் என்ன சொல்றாங்க தெரியுமா?''

''இந்தியாவைப் பற்றி மட்டமாகச் சிலர் பேசறாங்க...''

''பம்பாயில் உள்ள சிவப்பு விளக்குப் பகுதியைப் பார்த்துட்டு இந்தியாவில் விபசாரம் மலிந்து கிடக்குன்னு சொல்றாங்க. சிவப்பு விளக்குப் பகுதியில் பெண்கள் பல காரணம் பற்றித் தங்கள் பெண்மையை விற்று வாழ்கிறார்கள்.

''நம் நாட்டில் அப்படி விபச்சாரம் பளிச்சென்று பகிரங்கமாத் தெரியவில்லையே; அதனால் சொல்றாங்க அண்ணி.''

''இங்கே பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம். படித்தவர்கள் நர்ஸ்களாகவும் டாக்டர்களாகவும் பள்ளி ஆசிரியர்களாகவும் வேலை தேடிக்கொண்டு கைநிறையச் சம்பாதித்து வசதியாக வாழ்கிறார்கள். மார்க்கெட்டில் காய்கறி விற்றால் கூட பெண் நிம்மதியாக வாழ இயலுகிறது. ஏன், கருவாடு விற்றால் கூட பென்ஸ் கார் வைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கு. அப்படியல்லவே தாய்நாட்டில் பெண்கள் நிலை...''

''பழம் பெரும் நாடு பாரதநாடுன்னு சொல்வீங்களே அங்கே பெண்கள் சரிநிகர் சமமாக வாழமுடியாமல்

ஒரு சமயம் டர்பன் லிடி ஹாலில் தமிழர்கள் கொண்டாடிய பாரதி விழாவின் போது சவுந்தரி அண்ணி பேசியதைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனாள் காவேரி.

''தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே என்று எங்கள் பாரதி எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் பெண்களின் வருங்கால நிலையைப் பற்றிப் பாடியிருக்கிறார்...'' என்று ஆவேசமாகப் பேசினாள் சவுந்தரி.

வீட்டுக்கு வந்ததும் வழக்கம்போல் அண்ணியை அவள் புகழ்ந்தாள். ''உங்க பேச்சைக் கேட்டு என் உடம்பு புல்லரிக்கப் போச்க அண்ணி'' என்றாள் மகிழ்வுடன்.

சவுந்தரி அதற்குச் சொன்ன பதில்தான் அவளைத் திகைப்படையச் செய்தது. ''பாரதியார் பல ஆண்டுகளுக்கு முன்பே சுதந்திரம் அடையப் போகும் இந்திய நாட்டில் பெண்களின் நிலைமை எப்படி இருக்கப் போகிறது என்று பாடிவிட்டுப் போனார். அவரது கற்பனையில்-அவரது உணர்வில் பெண்கள் தாயாக-தெய்வமாகத் தென்பட்டனர்.

''உங்க நாடுதான் சுதந்திரம் அடைஞ்சு போச்சே அண்ணி!''

''நாடு சுதந்திரமடைந்துவிட்டது. ஆனால் பெண்கள் சுதந்திரத்தைப் பெறவில்லை. இன்னமும் அடிமைகளாக இருக்கின்றனர்.''

''என்ன சொல்றீங்க அண்ணி?''

''ஆமாம் காவேரி! சரிநிகர் சமானமாக ஆண்களோடு பெண்கள் படிக்கிறார்கள்-வேலை செய்கிறார்கள்- உழைக்கிறார்கள்-பாடுபடுகிறார்கள். ஆனால் சமுதாயத்தின் பார்வையில் அவர்களுக்குச் சமமான அந்தஸ்து ஏற்பட

வில்லை-வரதட்சணை, சீர்... இந்தக் கொடுமைகளால் பெண்கள் இன்னமும் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.''

''நிலைமை மாறிட்டதுன்னு எல்லோரும் சொல்றாங்களே.''

''இல்லை. பெண்கள் இன்னமும் ஒரு போகப் பொருளாகவே கருதப்படுகிறார்கள். பம்பாய் நகரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த இந்த நாட்டு இந்தியர்கள் என்ன சொல்றாங்க தெரியுமா?''

''இந்தியாவைப் பற்றி மட்டமாகச் சிலர் பேசறாங்க...''

''பம்பாயில் உள்ள சிவப்பு விளக்குப் பகுதியைப் பார்த்துட்டு இந்தியாவில் விபசாரம் மலிந்து கிடக்குன்னு சொல்றாங்க. சிவப்பு விளக்குப் பகுதியில் பெண்கள் பல காரணம் பற்றித் தங்கள் பெண்மையை விற்று வாழ்கிறார்கள்.

''நம் நாட்டில் அப்படி விபச்சாரம் பளிச்சென்று பகிரங்கமாத் தெரியவில்லையே; அதனால் சொல்றாங்க அண்ணி.''

''இங்கே பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம். படித்தவர்கள் நர்ஸ்களாகவும் டாக்டர்களாகவும் பள்ளி ஆசிரியர்களாகவும் வேலை தேடிக்கொண்டு கைநிறையச் சம்பாதித்து வசதியாக வாழ்கிறார்கள். மார்க்கெட்டில் காய்கறி விற்றால் கூட பெண் நிம்மதியாக வாழ இயலுகிறது. ஏன், கருவாடு விற்றால் கூட பென்ஸ் கார் வைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கு. அப்படியல்லவே தாய்நாட்டில் பெண்கள் நிலை...''

''பழம் பெரும் நாடு பாரதநாடுன்னு சொல்வீங்களே அங்கே பெண்கள் சரிநிகர் சமமாக வாழமுடியாமல்

அழுத்தப்பட்டவர்களாக இன்னமும் சிலர் இருக்கிறாங்கன்னா சொல்றீங்க அண்ணி. என்னால் நம்பமுடியலை.''

''நேரில் பார்த்தால் நம்புவாய். ஆப்பிரிக்கர்களைச் சாதாரணமாக நாகரிகத்தில் பிற்போக்கானவர்கள் என்று நாம் எண்ணுகிறோம். அது மிகவும் தவறு. அவர்களது கலாசாரமும், பண்பாடும் நம்முடையதைவிட உயர்ந்தவை. பெண்ணைச் சரிநிகர் சமமாக மதித்து நடத்தும் ஒரு நல்ல வழக்கம் அவர்களிடையே காணப்படுவதை நான் பார்த்து ரொம்பவும் வியக்கிறேன். குடும்பம் என்ற அமைப்புக்கு அவர்கள் எத்தனை பெரிய மதிப்புக் கொடுக்கிறார்கள்! தாய் என்பவளுக்கு எத்தனை கௌரவம் தருகிறார்கள்!

''பெண்ணை அழைக்கும் போதே அவர்களது குரலும்-அவர்கள் தரும் உறவு முறையிலும் மரியாதை தொனிக்கின்றதே. பீசாலாபா டாம்கஸான்-இளம்பெண்ணே இங்கே வா; ஸக்கபோனா மக்கோட்டி-தாயே வணக்கம்; ஆம்ப காஷ்ல கோகோ-பாட்டி சுகமா போங்க-என்று எத்தனை மரியாதை! குழந்தையிலிருந்து-பெரியவர்கள் வரை பெண்ணை எப்படி மதித்து நடத்துகிறார்கள்! காலந்தொட்டு அவர்கள் பெண்ணை உயர்வாக மதித்துப் போற்றுகிறவர்கள். ஆண்பிள்ளைத் தனத்திற்கு அப்பொழுதுதான் மதிப்பு என்று எண்ணுகிறவர்கள்.''

''இரண்டு இனத்தவர்களிடையே வாழும் இந்த நாட்டு இந்தியர்கள் இருபக்கத்திலிருந்தும் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டிருக்கிறார்கள். தாய் நாட்டில் பெண்கள் மரியாதையாக நடத்தப்படுவதில்லையா அண்ணி!''

''ஒரு இந்தியப் பெண் கைநிறையப் பார்சல்களுடன் கடையைவிட்டு வெளிவந்தால் அவள் கணவன் சட்டென்று சென்று அவளது சுமையைத் தான் வாங்கிக்கொண்டு காரின் கதவைத் திறந்து ஏறிக்கொள்ள உபசரிக்கிறார், இங்கே.''

''அங்கே அண்ணி?''

''வயிற்றில் ஒரு குழந்தை-இடுப்பில் ஒரு குழந்தை-கையில் ஒரு மூட்டை என்று மனைவி சுமைகளுடன் நடக்க, பல கணவர்கள், மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு முன்னால் அட்டகாசமாகச் செல்வதைப் பார்த்து நீ அதிர்ந்து போய்விடுவாய்.''

''நிசமாவா அண்ணி?''

''வரதட்சிணை வாங்காது கல்யாணமே செய்துக்க சட்டென்று படித்த வாலிபன் முன்வருவதில்லை.''

''காதலித்தவனைக் கல்யாணம் செய்து கொண்டால் கூடவா?''

''காதல்-கத்திரிக்காய் எல்லாம் ஏட்டுடன். நடைமுறையில் காதல் வரதட்சிணையைத் தாண்டிப் படியேறி விட முடியாது. மங்கையராய்ப் பிறக்க மாதவம் செய்ய வேண்டும் என்பது இந்த நாட்டைப் பொறுத்தவரை உண்மை.

''தாய்நாட்டில் பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்று கேட்டதுமே. வீட்டவர்கள் முகத்தைச் சுளிப்பார்கள். ஏன் என்றால் பெண்ணால் குடும்பத்திற்கு அத்தனை சிரமம்.

இங்கே பெண் வீட்டவர்களைத் தேடிக்கொண்டு மாப்பிள்ளை வீட்டார்கள் பெண் கேட்க வருகிறார்கள்.

''ஒப்புதல் கொடுத்ததும், கூறையலிருந்து தாலிவரை எல்லாம் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்ததாகக் கருதப் படுகிறது. சிறப்பாக மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்து மருமகளை வீட்டுக்கு அழைத்துக் கொள்வதில் இங்குள்ள மக்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள். இஷ்டப்பட்டுப் பெண்ணின் தந்தை சீர் கொடுத்தால் ஒழிய வற்புறுத்தப் படுவதில்லை.

''சீர் சரியில்லை வரதட்சிணையில் திருப்தியில்லை என்று வீட்டுக்கு வந்தவளை மண்ணெண்ணெயில் தீக் குளிக்கச் செய்கிறார்கள், தாய்நாட்டில் சில கொடுமையான மாமியார்கள்...''

''அண்ணி, கேட்க ரொம்ப பயங்கரமா இருக்கே.'' காவேரியின் உடல் பயத்தில் பதறியது.

''அண்ணி சொன்னது அத்தனையும் உண்மை என்பதை நேர்முகமாகவும் - பத்திரிகைகள் மூலமாகவும் அவள் அறிந்து கொண்டபோது தாய்நாட்டைப் பற்றி அவளுள் உருவாகியிருந்த கற்பனைக்கோட்டை மெல்லச் சரியத் தொடங்கியது.

இன்னொரு வரதட்சிணைச் சாவு! நேற்று மாலை சங்கரி என்னும் பெண், ஐந்தாவது மாடிக் கட்டிடமொன்றிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டு விட்டாள். போலீசுக்கு எழுதி வைத்த கடிதத்தில்... தான் அப்படி முடிவு எடுத்ததின் காரணம்... அவள் கல்யாணத்தின்போது வாக்குக் கொடுத்த தொகையை அவளது பெற்றோர் வரதட்சிணையாகக் கொடுக்காது விட்ட குறை-வீட்டில் அதனால் எழுந்த பிரச்சினைகளைச் சமாளிக்க இயலாது சாவை நாடிவிட்டாள்.

திடுக்கிட்டுப் போனாள் காவேரி. இப்படி ஒரு பிரச்சினையால் அவள் நாட்டில் யாரும் தற்கொலை செய்து கொண்டதே இல்லையே? இதென்ன கொடுமை!

இன்னொரு விஷயம் அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. ஆண்களோடு பெண்கள் சரிசமமாகப் படித்தார்கள்- வேலைக்குப் போனார்கள். ஆனால் அவள் வசித்த நாட்டைப் போன்று நேசபாவத்தோடு ஆண்களும் பெண்களும் பழகாது விலகியபடியே வாழ்ந்தார்கள். அதிகப்படியாக ஒரு பெண் ஆணிடம் சிரித்துக்கொண்டு பேசிவிட்டால் அது ஒரு பெரும்

குற்றமாகப் பேசப்பட்டதைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள். அலமேலு அம்மாள் தன் மகளிடம் கூறியது அவளுக்கு நன்றாகக் கேட்டுவிட்டது.

நர்ஸுக்குப் படிச்சவன்னா என்ன? அத்தனை ஆம்பிளை களோடயும் இப்படி சிரிச்சுகிட்டுப் பேசணுமா...? அதென்ன சிரிப்பு-பச்சைச் சிரிப்பு...'' பற்களைக் கடித்தாள்.

காவேரி அந்த விமரிசனத்தைக் கேட்டுத் திகைப்படைந்துபோனாள். ஆண் ஆனாலும் சரி பெண் ஆனாலும் சரி-போலித்தனமாகப் பேச அவளுக்குத் தெரியாது. யதார்த்தமாக - புனிதத் தன்மையுடன் அணுகி - அன்பாக - நட்புரிமையோடு பேசுவது அவளது நாட்டவர் வழக்கம். அந்த வழக்கத்தை அலமேலு அம்மாள் தவறாகவல்லவா கருதுகிறாங்க?

இன்னொரு விஷயமும் அவளுக்கு மிகவும் விந்தை யாகத்தானிருந்தது. அந்தத் தனியார் மருத்துவ மனையில் மேஜைக்குப்பின் நின்ற அவளிடம் தம் உறவினர்களின் உடல் நிலையையும் வார்டின் எண்ணையும் விசாரிக்க வந்த ஆடவர் கள் பலர் அவளை விழுங்கிவிடுவது போலப் பார்த்தனர்.

சகஜமாக நட்புரிமையோடு பேசியதை ஒருவன் தப்பாகப் புரிந்து கொண்டு ''இன்னிக்கு ராத்திரி சினிமாவுக்கு என்னோட வர முடியுமா?'' என்று கேட்டுவிட்டான்.

''என்ன சொன்னீங்க?'' என்று அவள் கோபத்துடன் சீறிக்கொண்டு கேட்காதிருந்தால் அவன் இன்னும் அதிகமாகவே அசிங்கமாகவே பலதும் கேட்டிருப்பான்.

பஸ்ஸிலும், கடைத் தெருவிலும் அவளை மட்டும் ஆண்கள் ஏன் அப்படி முறைக்கிறார்கள்?

அவளது ஒப்பனை-தோற்றம் இதெல்லாம் பார்ப்பவர் களுக்கு வித்தியாசமாகத் தென்படுவதாலா?

அல்லது அவளது தமிழின் உச்சரிப்பு, வெளி நாட்டைச் சேர்ந்தவள் என்பதைக் காட்டிக்கொடுத்து விடுவதாலா?

தன்னந்தனியான வெளிநாட்டுப் பெண்-இவளை வேட்டையாடுவது சுலபம் என்ற தவறான கணிப்பா?

-தன்னுள் பலவும் எண்ணிச் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

அன்று இரவு வசந்தா வீட்டில் ஒரு விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. சின்ன அண்ணி யசோதாவுக்கு இது மாதிரியான விருந்துகள் மிகவும் பிடிக்கும். தனக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் கூப்பிட்டுப் பாட்டும் கூத்துமாக வீட்டை இரண்டாக்கி விடுவாள். காவேரிக்கு மது குடிக்கும் பார்ட்டிகளைக் கண்டாலே பிடிக்காது. அதில் கலந்துகொள்ளாது பெரிய அண்ணியின் அறையில் அடைக்கலமாகிவிடுவது வழக்கம்.

வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் தோழி என்ற நிலையில் வசந்தா தன் வீட்டுக்கு அன்று வந்திருந்த பெரிய மனிதர்களுக்கு அவளை அறிமுகப்படுத்தினாள். வியாபாரிகள்- பெரிய நிறுவனத்தின் தலைவர்கள்-பிரபல என்ஜினியர்கள் என்று பலதரப்பட்ட உயர் மட்டத்து ஆண்களும் பெண்களும் மாடியறையை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

தட்டுகளில் வறுத்த கறியும் - முந்திரிப் பருப்பும், கண்ணாடி டம்ளர்களும் - பலவகை பாட்டல்களும் மேஜையை அலங்கரித்தன.

ஆரம்பத்தில் கையில் பிடித்திருந்த டம்ளரில் மது நிறைய இருந்தபோது ஆண் விருந்தாளிகளிடம் மரியாதையும் அதிகமாக இருந்தது.

டம்ளர் காலியானதும் கண்ணியமும் காலியாகிவிட்டது. அவர்கள் பேசிய ஆபாசமான கதைகள் ஜோக்குகளைக் கேட்டு அருவருப்படைந்து போனாள் காவேரி.

தாய்நாட்டைப் பற்றி அவள் என்னென்னவோ பெருமையாக எண்ணிக்கொண்டு வந்திருந்தாள். இப்படிப் பட்டதொரு அலங்கோலமும் இங்கே இருக்கின்றதே!

அவள் அருகில் சோபாவில் வந்து உட்கார்ந்த பருமனான ஆசாமி அவளைப் பார்த்து லேசாகக் கண்களைச் சிமிட்டினார்.

கண்கள் சிவந்து-நாக்குழற-மனிதர் மூக்குவரை நன்றாகக் குடித்திருந்தார்.

''எனக்கு ஒரு பெரிய வீடு இருக்கு. என் மனைவி பிரசவத்துக்குத் தாய்வீடு போயிருக்கா. நான் தனிமையில் வாடுகிறேன்'' என்றபடி அவளது கையைப் பற்றி உள்ளங் கையை சங்கேதத்துடன் அழுத்தினார்.

காவேரி திடுக்கிட்டுப் போனாள். மேல்மட்டத்து வாசியான வசந்தா வீட்டுக்கு இப்படிப்பட்ட அயோக்கியன் விருந்தாளியாக வந்திருக்கிறானே?

''நான் பெரிய பிஸினஸ்மேன். உன்னைச் சந்தோஷமாக ஒரு ஃபிளாட்டில் வச்சுக் காப்பாத்த முடியும். என்ன சொல்றே?''

ராபர்ட் போதை மருந்து வேகத்தில் அவளிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றான். அவன் ஒரு நாடோடி.

இவன்? ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன் - உயர் மட்டத்து ஆசாமி...மது அருந்தியதும் மதிகெட்டு என்ன பேச்சு பேசுகிறான்!

கோபத்துடன் அவனை வெறித்தாள்.

''அப்படிப் பார்க்காதே, உன் சங்கதி எனக்குத் தெரியும். என் நண்பன் ரகுபதி உன்னைத் தன் வீட்டில் சும்மா அலங்காரப் பொருளாக வச்சுக்கிட்டு இருக்கான்னு நீ சொன்னால் நான் நம்புவேனா? இத்தனை நாள் உன்னைச் சும்மா விட்டிருக்க மாட்டானே? பெண்கள் விஷயத்தில் அவன் ஒரு பரம ரசிகனாச்சே...''

ஆசிரமம் என்று போன இடத்தில் அப்படி ஒரு ஆபத்து. கௌரவமான வீடு என்று புகுந்த இடத்தில் இப்படி ஒரு அதிர்ச்சியா? ஊஹூம்! இங்கிருந்து மெல்லக் கழற்றிக் கொண்டு வேறு இடம் தேடிக் கொள்ள வேண்டும்.

''மன்னிச்சுக்கோங்க-உங்களைச் சந்தித்தது பற்றி மிக்க மகிழ்ச்சி'' என்று கூறிவிட்டுச் சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்படாது விருந்து ஆரம்பிக்குமுன் தப்பிக் கொண்டு மெல்லக் கீழே வந்தாள்.

''சாப்பாடு அதுக்குள்ளேயா முடிஞ்சுடுச்சு...?'' அலமேலு அவளைச் சந்தேகத்துடன் மேலும் கீழும் பார்த்தாள்.

''தலையை வலிக்கிறது. நாளைக்கு நான் வேலைக்குச் சீக்கிரம் கிளம்பணும்'' என்று கூறிவிட்டுப் படுக்கையில் சாய்ந்து கொண்டு போர்வையை இழுத்துத் தலையை மூடிக் கொண்டாள்.

பட்டினி வயிற்றைச் சுருட்டியது. தாமோதரன் நினைவு மனதை வருடிக் கண்களில் நீரைப் பெருக்கியது.

தாமோதரன் அவளை எவ்வளவு ஆழமாக நேசித்தான்! அதை முகாந்திரமாக வைத்துக்கொண்டு அவளிடம் ஒரு முறைகூடத் தவறாக அவன் அணுகியதில்லையே...

'தாமு...ஐ...லவ்...யூ...' என்று கூறிக் கொண்ட அவள் கண்களில் நீர் பொங்கி... தலையணை மீது முத்துக்களாக உதிர்ந்தன.

31

டாக்டர் தேவசுந்தரம் தமது பென்ஸ் காரிலிருந்து இறங்கியதுமே, வரவேற்பறையின் பெரிய கண்ணாடிக் கதவைத் திறந்துவிட்டு ஒதுங்கி நின்றபடி சலாம் போட்டான் ஆஸ்பத்திரியின் காவலாளி. பார்த்தும் பாராது போன்ற மிடுக்குடன் தலையை லேசாக ஆட்டிவிட்டு, டக் டக்கென்று பாதணிகள் ஓசைசெய்ய ஷேவிங் லோஷனின் மணம் அறை முழுவதும் கமாளிக்க-கழுத்தில் மாலையாக ஸ்டெதாஸ்கோப் தொங்க உத்தியோகத் தோரணையில் தலையை நிமிர்த்திக் கொண்டு தேவசுந்தரம் ரிஸப்ஷன் மேஜையை நோக்கி நடந்தார்.

பட்டென்று தமது சட்டைப் பையிலிருந்து ஒரு ச்சூயிங்கம் வில்லையை எடுத்து உரித்து வாயில் போட்டுக் கொண்டார். அமெரிக்காவில் சிலகாலம் வைத்தியச் சிகிச்சைப் பயிற்சிக்குப் போயிருந்தபோது ஏற்பட்ட பழக்கம்.

தொல்லைகள்-கவலைகள்-பிரச்சினைகள் எழுந்து அவரைத் திணற வைக்கும்போது, ஒரு ச்சூயிங்கம் துண்டை வாயில் போட்டுக்கொண்டு அசை போடுவது வழக்கம்.

அன்று காலை அவருக்கு ஒரு பிரச்சனை.

அவரது நர்ஸிங் ஹோமில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு வயிற்றுவலிக்காரருக்கு அறுவைச் சிகிச்சை செய்யக் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பம் என்று நேரம் குறிப்பிடப் பட்டிருந்தது.

''காலை பத்தரையிலிருந்து பனிரெண்டு மணியில் மரணயோகம் வந்துவிடுகிறது டாக்டர். அதனால் சரியாக ஒன்பது மணிக்கே அறுவைச் சிகிச்சையைத் துவங்கிடுங்கோ'' என்று நோயாளியின் மனைவி, வைர அட்டிகைச் சீமாட்டி அவரிடம் புலம்பியிருந்தாள்.

டாக்டருக்கு ராகுகாலம்-மரணயோகம் இவைகள் மீது நம்பிக்கை இல்லை. ஆனால் நோயாளிகள் நம்புவதைத் தடுக்க இயலாதே. அதுவும் தனியார் மருத்துவமனை நடத்தும் ஒரு இயக்குனராக இருந்துகொண்டு-பணத்தைத் தண்ணீராக வாரி இறைக்கும் நோயாளியின் உறவினர்களுக்கு உற்சாகமூட்ட ஓரளவுக்குக் கொள்கைகளைத் தியாகம் செய்தாக வேண்டுமே? காலையில் பல்துலக்கும் முன்னரே மயக்க மருந்து செலுத்தும் நிபுணருக்கு போன் செய்தார்.

''அவர் கே.கே. ஆஸ்பத்திரிக்கு ஒரு எமர்ஜென்ஸிக்கு மயக்க மருந்து கொடுக்கப் போயிருக்கிறார். ஆப்ரேஷன் இந்நேரம் முடிந்திருக்கும். சரியான நேரத்துக்கு உங்கள் நர்ஸிங்ஹோமுக்கு வந்துவிடுவார். கவலை வேண்டாம்'' மறுமுனையில் மயக்கமருந்து நிபுணரின் மனைவி இனிக்கக் குழைந்தாள்.

காலை எட்டரை மணி ஆகியும் ஆசாமியைக் காணவில்லை. டாக்டர் தேவசுந்தரத்துக்கு வலிப்பு வந்து விடும் போன்றதொரு கோபம். நேரே ரிஸப்ஷனிஸ்ட்டிடம் வந்தார்.

சட்டென்று எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தாள்.

''உடனடியாக கே.கே. ஹாஸ்பிட்டலுக்கு போன் செய்து டாக்டர் மேகநாதன் அங்கிருந்து கிளம்பி விட்டாரான்னு விசாரி''. உத்தரவிட்டபடி ச் [illegible]க்கம்மை வேகமாக ஆத்திரத்துடன் பற்களால் கடித்[illegible]ார்.

அவசரமாக டெலிபோன் டைரக்டரியைத் திறந்து ஹாஸ்பிடல் என்ற பகுதியில் கண்களை ஓட்டி அவள் கே.கே. ஆஸ்பத்திரியின் எண்களைச் சுழற்றி முடிப்பதற்குள் தமது ஹைதர் காலத்து ஸ்டாண்டர்டு மோட்டார் வாகனத்தில் தடபுடா சப்தத்துடன் மேகநாதன் வந்து இறங்கினார். ''ஹலோ'' என்று உற்சாகக் குரல் கொடுத்தபடி உள்ளே வந்தார்.

அவரைக் கண்டதும் சட்டென்று சூயிங்கம்மை அருகிலிருந்த குப்பைக் கூடையில் துப்பிவிட்டு, ''வந்துட்டியா... பேஷண்டைவிட அவர் மனைவி கொடுக்கும் தொல்லைதான் ரொம்பப் பெரிசா இருக்கு.'' மெல்லச் சிரித்தார் தேவசுந்தரம். நண்பரைக் கைகுலுக்கி வரவேற்றார்.

''இன்னும் ராகுகாலம் வரவே இருபது நிமிஷங்கள் இருக்கு. நல்ல கடும் ராகுகாலத்தில்தான் கே.கே. ஆஸ்பத்திரி எமர்ஜென்ஸி ஆப்ரேஷனுக்கு உதவினேன். பேஷண்ட் உயிரோடத்தான் இருக்கான்.'' சிரித்தார் மேகநாதன்.

''மரணயோகம் வருமுன் ஆப்ரேஷனை முடிக்கணும்னு நோயாளியின் மனைவி ரொம்பக் கவலைப்படுகிறாங்க'' என்றபோது மேகநாதன் உரக்கச் சிரித்து விட்டார்.

''ஒருவனுக்கு மரணமடைய யோகம் வந்துவிட்டால் எந்த டாக்டராவது அவன் உசிரைப் பிடிச்சு வைக்க முடியுமா? நான்சென்ஸ்!'' என்றபடி ரிஸப்ஷன் மேஜைக்குப் பின்னால் பணிவாக நின்ற அழகு பிம்பத்தைக் கண்களால் அள்ளிப் பருகினார்.

''தியேட்டர் ரெடி. நாம் போகலாமா?'' என்று தேவசுந்தரம் உசுப்பியபோது மேகநாதனின் பார்வை மீண்டும் ரிஸப்ஷன் பக்கம் தாவியது.

ஒரு மாத காலம் ஓய்வில் மனைவியுடன் கோடைக்குப் [illegible]ய்விட்டு இரண்டு தினங்கள் முன்னர்தான் அவர் சென்னை

திரும்பியிருந்தார். அதற்குள் பல தனியார் மருத்துவமனை
களிலிருந்து அறுவைச் சிகிச்சைக்கு வந்து உதவ அழைப்பு
வந்ததில் மனிதர் திக்குமுக்காடி விட்டிருந்தார். புதிதாக அங்கே
இப்போது அமர்த்தப்பட்டிருக்கும் அந்தப் பெண்ணின் அழகு
அவரைக் கிறுகிறுக்க வைத்தது.

ஆப்ரேஷன் முடிந்ததும் யார் இவள்-பேர் என்ன-எந்த
ஊர் என்ற விவரம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று
எண்ணியபடி மாடிப்படியேறுமுன் மறுபடியும் ரிஸப்ஷன்
பக்கம் பார்வையை வீசிவிட்டு தேவசுந்தரத்தைப் பின்
தொடர்ந்தார்.

டெலிபோன் டைரக்டரியில் ஹாஸ்பிடல் என்ற
பகுதியைப் புரட்டிக் கொண்டிருந்தபோது காவேரியின்
மூளையில் ஹாஸ்டல் என்ற வார்த்தை பளிச்சிட்டது.

வேலைக்குப் போகும் பெண்கள் தங்கி வசிக்க
ஹாஸ்டல் என்ற அமைப்பு பலநாடுகளில் உள்ளதே.
சென்னையில் அப்படி ஏதாவது இருந்தால்...பரபரப்புடன்
பக்கங்களைப் புரட்டினாள்.

வொர்க்கிங் உமன்ஸ் ஹாஸ்டல் என்ற தலைப்பில் ஒரு
எண் கிடைத்தது.

மூக்கு நுனியில் வியர்வை பொடிக்க, நெஞ்சு படபடக்க
அந்த எண்களை வேகமாகச் சுழற்றினாள்.

''ஆமாம். இது வேலை செய்யும் பெண்கள் தங்கி
வாழும் விடுதிதான். தற்சமயம் இதில் இடமில்லையே?''

காவேரியின் உற்சாகம் ஊதியிருந்த பலூனை ஊசியால்
குத்தினதுபோல் புஸ்ஸென்று அடங்கிப் போனது.

''வேறே ஏதாவது தெரிஞ்ச இடம்-தனிப்பட்ட
முறையில் இயங்கும் பெண்கள் தங்கும் விடுதி தெரிஞ்சால்
சொல்ல முடியுமா.''

''அமுதா ஹாஸ்டல்னு ஒரு விடுதி இருக்கு. இப்பத்தான்
சமீபத்தில் ஆரம்பிச்சது, கொஞ்சம் இரும்மா. நான் பார்த்து
அதன் டெலிபோன் எண்ணைத் தருகிறேன்'' மறுபக்கத்தில்
பேசியவளின் குரலில் அனுதாபம் ஒலித்தது.

சில நொடிகளில் மூச்சிறைக்க அவள் எண்களைச்
சொன்னாள். டெலிபோன் அந்த ஹாஸ்டலுக்குச் சில
மாதங்களுக்கு முன்தான் கிடைத்தது. டைரக்டரியில் அதன்
எண் இருக்காது. அங்கே வேணுமானால் முயன்றுபார்.
டக்கென்று மறுபக்கம் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

சுற்றுமுற்றும் பார்த்தாள் காவேரி. வார்டு பையன்கள்
டிராலிகளைத் தள்ளியபடி போய்க் கொண்டிருந்தனர்.
அவுட்பேஷண்ட் பகுதியில் வரும் நோயாளிகள் மெல்ல
ஒவ்வொருவராக வரவேற்பறையில் ஒரு பக்கத்தில் வந்து
உட்கார ஆரம்பித்தனர்.

அதை கவனிக்க வரும் வைத்தியர் வருவதற்கு அரை
மணிக்குமேல் நேரம் இருந்தது. அவள் சட்டென்று அமுதா
ஹாஸ்டல் எண்களைச் சுழற்றினாள்.

''எங்க வேலை பார்க்கறீங்க? தங்க தனி அறையா
வேண்டும்? சாத்யப்படாதே, வெளிநாட்டுப் பெண்ணா?
நானும் என் மனைவியும் ஹாஸ்டலை ஒட்டிய வீட்டில்
வசிக்கிறோம். அதனால் ஹாஸ்டல் அலுவலகம்
இரவுபத்துமணி வரை செயல்பட்டுக் கொண்டிருக்கும்.
நீங்களே நேரில் வந்தால் பேச சௌகரியமாக இருக்கும்.
முகவரி தெரியுமா? தேனாம்பேட்டையில் சர் மகாதேவன்
தெரு எதுன்னா யாரும் அடையாளம் காட்டுவாங்க. அதில்
ஏழாம் நம்பர்தான் எங்கள் ஹாஸ்டல். சாயங்காலம் தப்பாமல்
ஐந்து மணிக்குமேல் வாருங்கள். நீங்களே முடிவு
செய்யலாம்.'' துல்லியமான ஆங்கிலத்தில் மிகவும்
மரியாதையாகப் பேசினார் மறுபக்கத்திலிருந்த மனிதர்.

மாலை மணி எப்பொழுது ஐந்தை நெருங்கும் என்று அவளுள் ஒரே துடிப்பு. அடுத்த ஷிப்ட் ஆரம்பமாகி விட்டதை அறிவிக்க மின்விசை மணி கணகணத்தவுடன் அவள் எழுந்து மற்ற ஊழியர்களுடன் பரபரப்பாக வெளியே வந்தாள்.

இருட்டுமுன் அமுதா ஹாஸ்டலுக்குப் போய் ஒரு இடம் பிடித்துக்கொண்டு முன்பணம் கட்டிவிட வேண்டும் என்ற ஆதங்கம் அவளுக்கு. ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டாள். சாலையிலிருந்து திரும்பிய ஆட்டோ சாக்கடை தெரு நடுவே ஒரு வாய்க்காலாக ஓடிய ஒரு குறுகலான தெருவுக்குள் நுழைவதைக் கண்டு கொஞ்சம் அதிர்ந்து போனாள். குண்டும் குழியுமான அந்தத் தெருவின் இருமருங்கிலும் ஓலைக் குடிசைகள். அவைகளின் முன்னால் முருங்கை மரங்கள். இந்த மாதிரியான சூழ்நிலையிலா அமுதா ஹாஸ்டல் இயங்கிக் கொண்டிருக்கிறது? அவள் வியப்புடன் தன்னைச் சுற்றிலும் கண்காணிக்குமுன், இடிந்து விழும் தருவாயிலிருந்த ஒரு மதில் சுவரின் திறந்த கேட்டின் வழியே ஆட்டோ சிவப்பு மண்ணைச் சீறி கிளப்பிக்கொண்டு ஒரு புராதன பங்களாவின் முன் போய் நின்றது.

வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட பங்களா - சுற்றிலும் புளியமரங்கள்... செம்மண் தரை. பொக்கையும் வெடிப்புமான சுவர்கள். வெனேஷியன் ஷட்டர்களைக்கொண்ட ஜன்னல்கள், ஷட்டர்களின்மீது டன்கணக்கில் தூசி, சிவப்பு சிமெண்ட பூசிய தரை என்ற அலங்காரத்திலிருந்த ஒரு பாழடைந்த பங்களா அது.

ஆபீஸ் என்று கருப்பு எழுத்துக்களைத் தாங்கியபடி தொங்கிய வெள்ளைப் பலகை தெரிந்த ஒரு அறைக்குள் அவள் போய் நின்றாள். குழல் விளக்குக்கூட சுவரின் அழுக்குடன் அழுது வடிந்து கொண்டிருந்தது.

''மிஸ் காவேரி...ஃபிரம் ஆஃபிரிக்கா?'' என்றபடி ஆங்கிலத்தில் அவளை வரவேற்று, கைகுலுக்க நாற்காலி

விலிருந்து எழுந்த ஒல்லி மனிதரைப் பார்த்து அவள் கும்பிடுபோட்டாள்.

''நான்தான் சந்திரசேகர். இவள் என் மனைவி சுபத்ரா. இருவரும் சேர்ந்து இந்த ஹாஸ்டலை நடத்தி வருகிறோம். உட்காருங்க'' உபசரித்தார்.

வெள்ளையும் கருப்புமாக நரை கலந்த முடியையும் - கூரான அவரது நாசியையும்-தொங்கும் புருவங்களையும் பார்த்தபடி அவள் உட்கார்ந்தாள். துணை இயக்குனர் என்ற அவரது மனைவி சுபத்ரா அம்மாள் வெறும் பொம்மை போலும்.

பேச்சு முழுவதையும் அய்யாவே முடித்தார் - அம்மாள் இடையே லேசாக முறுவலித்தாள்.

சந்திரசேகரின் பேச்சில் நளினம் இருந்தபோதிலும் பார்வையில் கடுமை தெரிந்தது.

'போர்டிங் அண்ட் லாட்ஜிங்குக்கு முன்னூற்று ஐம்பது ரூபாய் தரவேண்டும். காலை காப்பி, டிபன், கையில் பகல் உணவு பொட்டலமாகக் கட்டித்தரப்படும். வேலையிலிருந்து திரும்பி வந்ததும் ஒரு டம்ளர் தேநீரும் டிபனும் தரப்படும். இரவு ஏழுமணிக்குச் சம்பிரதாயமான குழம்பு - ரசம் - பொரியல் - மோர் என்று சாப்பாடு. முட்டை, பால் வேண்டுமென்றால் தனியாகப் பணம் கட்டவேண்டும். விடுமுறை நாட்களில் பகலில் சாப்பாடு- இரவில் சப்பாத்தியும், சப்ஜியும் மோரும் வழங்கப்படும்.''

சாப்பாட்டைப் பற்றி அவள் கவலைப்படவில்லை.

தாய்நாட்டில் ஹோட்டலிலும் சரி, வீட்டிலும் சரி,கிடைத்த உணவு அவளுக்குப் பிடிக்கவில்லை.

நிம்மதியாக-ஆண்களின் சீண்டுதல்கள் இன்றி அமைதியாக ஒரு இடத்தில் அவள் தங்க விரும்பினாள்.

''உங்களுக்கு என்று தனி அறை கிடையாது. நான்கு பெண்களுக்கு ஒரு அறை வீதம் பல தடுப்புகளால் இந்த பங்களாவை ஒரு ஹாஸ்டலாக மாற்றியிருக்கிறோம். குளியலறை-கழிவறை-தோட்டம் இவை எல்லோருக்கும் பொது. தொலைபேசியை உபயோகிக்க ஒரு முறைக்கு ஒரு ரூபாய் கட்டணம். இரண்டு மாதத் தொகையை முன்பணமாகக் கட்டவேண்டும். அது ஹாஸ்டலின் முக்கிய விதி.'' சந்திரசேகர் கண்டிப்பாகப் பேசினார்.

அவரது கூரிய பார்வையும்-ஒடிசலான தோற்றமும் ஒட்டிய கன்னங்களும் ஒருகணம் அவள் கண்களுக்கு ஒரு கழுகைப் பார்த்த பிரமை. சட்டென்று தன் உணர்வுகளைச் சமாளித்துக்கொண்டாள் காவேரி. மேஜையில் அவள் முன்னால் வைக்கப்பட்ட விண்ணப்பத் தாளைப் பூர்த்தி செய்தாள். இரண்டு தினங்களில் அங்கே வந்து சேர்ந்து விடுவதாகக் கூறி, நூறு ரூபாயை முன்பணத்தின் ஒரு பகுதிக்காக உடனடியாகச் செலுத்தி ரசீதைப் பெற்றுக் கொண்டாள்.

வசந்தாவுக்கும் ரகுபதிக்கும் அவள் ஹாஸ்டலில் போய்த் தங்குவது பிடிக்கவில்லை. எத்தனையோ சொல்லித் தடுக்கப் பார்த்தனர். அவள் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால் அலமேலு அம்மாளுக்கு, விட்டது சனியன் என்ற நிம்மதி.

தான் ஒப்புக் கொண்டபடி இரண்டு தினங்களுக்குப் பின் கையிலிருந்த டிராவலர்ஸ் செக்குகள் சிலவற்றை மாற்றி, தேவைப்பட்ட பணத்துடன், பெட்டியுடன் அவள் அமுதா ஹாஸ்டலில் வந்து குடியேறிவிட்டாள். ஹாஸ்டல் வாழ்க்கை மிகவும் கடினமானது என்பதை வந்த நாளே புரிந்து கொண்டாள்.

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இரும்புக்கட்டில்கள்... திரும்பும்போதெல்லாம் பெருத்த சப்தம் செய்து தூக்கத்தைக்

கெடுத்தன. அவைமீது விரிக்கப்பட்ட மெல்லிய மெத்தையைத் தாண்டி இரும்புப்பட்டை முதுகைச் சுரீரென்று தாக்கிக் குளிரில் இறுக்கியது. போதாததிற்கு மின்விசைத் தண்டிப்பின் காரணமாக இரவில் விளக்குகள் இல்லாது ஹாஸ்டல் இருளில் முழுகிக் கிடந்தது. மின்விசிறியில்லாது பனைஓலை விசிறியால் இரவு முழுவதும் கொசுக்களை ஓட்டிக்கொண்டு - டார்ச் உதவியால் கழிவறைக்குப் போய் வந்து, விடிந்ததும் முதலாவதாகக் குளியலறையைப் பிடிக்கக் கியூவுக்கு ஓடி...ஒரு சில தினங்களில் காவேரி அலுத்துப் போனாள்.

ஒன்றன்பின் ஒன்றாக அவளுக்கு ஏன் இப்படிப்பட்ட சிரமமான அனுபவங்கள்? தாய்நாட்டில் வாழ்க்கை என்பது, ஒரு பலத்த போராட்டமா?

பலவாறு எண்ணியபடி அவள் தலையை வாரி முடித்துக் கொண்டு மாற்றுடை அணிந்துகொண்டு வேலைக்குப் புறப்படு முன்பு, அலங்கார மேஜைமீது கண்ணாடி அருகே தன் காதுகளிலிருந்து அவிழ்த்து வைத்த தங்க வளையங்களை எடுக்கக் கையை நீட்டியபோது அவைகளை அங்குக் காணவில்லை.

திக்கென்ற உணர்வில் அவள் அதிர்ந்து போனாள். மற்ற எல்லோரும் வேலைக்குப் புறப்பட்டுப் போய் விட்டனர். இரவு மற்றவர்கள் படுத்த பின்னர்தான் அவள் அவைகளைக் கழற்றி அந்த மேஜைமீது வைத்தாள். வந்ததிலிருந்து சில தினங்களாக அப்படித்தான் வைத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் இன்று காலை அவைகளைக் காணவில்லை. ஒரு பவுன் எடைகொண்ட தங்க வளையங்கள். சவுந்தரி அண்ணி அவளது பிறந்தநாளுக்குப் பரிசாகக் கொடுத்தது. அவைகளை யாரோ களவாடிக்கொண்டு விட்டிருக்கிறார்களே.

துக்கம் நெஞ்சை அடைக்க, அவளுக்கு அழுகை நெஞ்சை இறுக்கியது. உடனடியாக இதை அவள்

சந்திரசேகரிடம் புகார் செய்தாக வேண்டும். வேகமாக ஆபீசிற்கு ஓடினாள்.

சந்திரசேகர் அவளை நிமிர்ந்து பார்த்து லேசாக முறுவலித்தார்.

''அயாம் ஸாரி-மிஸ் காவேரி. அவரவர் பொருள்களை அவரவர்கள் பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஹாஸ்டலில் உள்ள யார்மீதும் நான் சட்டென்று திருட்டுப் பட்டம் கட்டி நடவடிக்கை எடுக்க முடியாது. எங்கள் ஹாஸ்டல் பெயர் கெட்டுவிடும்'' தலையைப் பலமாக அசைத்தார்.

அன்று முழுவதும் அவளுக்கு வேலை ஓடவே இல்லை. இன்று தங்க வளையங்கள் களவு போயின. நாளை!...

இந்த ஹாஸ்டலையும் உதறிவிட்டு அவள் எங்கே போவாள்?

32

மருத்துவமனையில் ரிஸப்ஷன் பகுதியில் சுவரோடு பதித்துக் கட்டப்பட்ட ஒரு ஸ்டீல் அலமாரி இருந்தது. அதில் அவள் அன்றாடம் தயாரிக்கும் பில்கள், சில பைல்கள், சில வரவு செலவுக் கணக்குப் புத்தகங்கள் இவைகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அவளுடையதாக இருந்தது. இதனால் அலமாரியின் சாவி அவள் வசமே இருந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவள் மிகவும் எச்சரிக்கையாகி விட்டிருந்தாள்.

தன் கழுத்தில் அணிந்திருந்த மெல்லிய தங்கச் சங்கிலி, கையிலிருந்த ஒரு தங்க வளையல், தங்க மோதிரம், தன் பாஸ்போர்ட், டிராவலர்ஸ் செக்குகள் முகவரி கொண்ட டைரி அனைத்தையும் ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டுச் சுருட்டிக் கட்டிப் பத்திரமாக அந்த ஸ்டீல் அலமாரியில் ஃபைல்களுக்குப் பின்னால் வைத்துப் பூட்டினாள். இடது

கையில் கடிகாரமும்-காதுகளில் போலி முத்துத் தோடும், கழுத்திலே கருகமணி மாலையுமாக அவள் எளிய கோலத்தில் வேலைக்குப் போய் வந்தாள்.

ஹாஸ்டல் அறையில் பூட்டி வைத்துவிட்டு வந்த அவளது பெட்டியைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. அதற்குள் உபயோகிக்கப்பட்ட சில புடவைகள், ரவிக்கைகள், உள்ளாடைகள் முதலியனதான் இருந்தன. அதன் பூட்டை எளிதில் திறக்க இயலாது. அப்படியே பெட்டியோடு யாராவது திருடிக்கொண்டாலும் அது ஒரு பெரும் இழப்பாகாது என்ற துணிவில் அசட்டையாக இருந்தாள்.

அன்று காலை அவள் ரிஸப்ஷன் டெஸ்க்கிற்குப் பின்னாலிருந்த தன் இருக்கையில் அமர்ந்த சில நொடிகளில் கம்மென்று டெட்டால் மணம் முகத்தில் மோதுவதை உணர்ந்து திரும்பினாள்.

டாக்டர் மேகநாதன் ஆப்ரேஷன் தியேட்டரிலிருந்து கீழே இறங்கி வந்துகொண்டிருந்தார்.

ஆபீஸ் பையன் எடுத்துக்கொண்டோடி வந்த எலுமிச்சம் பழ சர்பத்தை வாங்கிக் கொண்டார்.

''தாகத்துக்கு சர்பத் சாப்பிடறியா?'' கேட்டபடி உரிமையோடு மேஜைமீது வந்து சாய்ந்து கொண்டு நின்றார்.

''குட்மார்னிங் ஸார், நான் இப்பதான் காப்பி சாப்பிட்டுட்டு வரேன். தாங்க்யூ'' என்று மறுப்புத் தெரிவித்த வண்ணம் மரியாதைக்கு இருக்கையினின்று எழுந்து நின்றாள் காவேரி.

''ஒரு சின்ன உதவி. நான் இன்னும் அரைமணி நேரத்தில் கிளம்பிடுவேன். இப்பத்தான் ஒரு மேஜர் ஆப்ரேஷன் முடிந்தது. அடுத்தபடியாக தில்லை நர்ஸிங்ஹோமில் ஒரு

கேஸ் இருக்கு. அதுக்கு மயக்கம் கொடுக்க என்னை எதிர்பார்த்திட்டு இருப்பாங்க. அவங்களுக்கு எனக்காக போனில் ஒரு செய்தி சொல்லிடு. டாக்டர் மேகநாதன் இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் வந்திடுவார்னு போன் பண்ணு...'' என்று கொஞ்சலான குரலில் உத்தரவிட்டபடி அவளை மேலும் கீழும் பார்த்தார்.

சட்டென்று டெலிபோன் புத்தகத்தைப் புரட்டி அவர் சொன்ன ஆஸ்பத்திரியின் எண்களைச் சுழற்றிச் செய்தியை அவள் சொன்னபோது அவள் உதடுகள் அசைந்த அழகினையும், இனிய குரலையும், துல்லியமான ஆங்கில உச்சரிப்பையும் வியப்போடு பார்த்தபடி நின்றார் மேகநாதன்.

அழகான பெண்களைப் பார்த்தால் அவருக்கு எப்பொழுதும் நெஞ்சுத் துடிப்புத் தடுமாறிப் போகும். அழகும் புத்திசாலித்தனமும் ஒருங்கே அமைந்த பெண்கள் என்றால் சுருண்டு விழுந்து விடுவார். ஆனால் அவரது உணர்வுக் குழப்பங்களுக்கு அவர் மனைவி மாபெரும் எதிரி. தன் கௌரவம் பாழாக அவர் குழைந்துகொண்டு அழகான பெண் யாரிடமாவது பேசுவதை அவள் கண்டுகொண்டு விட்டால் போதும், வார்த்தைகளிலேயே சமாதி கட்டி விடுவாள். மாமனார் தயவில் படித்து முன்னுக்கு வந்தவர். மனைவிக்குச் சலாம் போட்டுக் கொண்டிருந்தார். இருந்தாலும் இடையே அல்ப ஆசைகள்.

இந்த அழகான ரிஸப்ஷனிஸ்ட்டிடம் பற்களைக் காட்டியபடி அவர் பேசிக் கொண்டிருப்பதை மனைவி பார்த்துவிட்டால்? ஒரு பூகம்பமே ஏற்பட்டுவிடுமே!

சில தினங்களுக்கு முன் அவர் மனைவி அனாவசிய சந்தேகத்தின் பேரில் அவரைக் கண்டபடி சாடியபோது அவரது தன்மான உணர்வு தகித்து எழுந்து புரட்சி செய்தது. அவளை எவ்வகையிலும் மட்டம் தட்ட வேண்டு

மென்றதொரு ஆத்திரம் மனதில் மண்டிக்கொண்டு நின்றது. காவேரியை அன்று காலை பார்த்தபோது மனிதன் மூளையில் ஒரு அபார யோசனை பளிச்சிட்டது.

''பேர் என்ன சொன்னே?'' உல்லாசமாகக் கேட்டபடி ஜன்னல் துண்டுகள் மிதந்த சர்பத்தை மெல்ல உறிஞ்சிக் கொண்டு மேஜைமீது அட்டையாக ஒட்டிக்கொண்டு நின்றார்.

''காவேரி, ஏன் கேட்கிறீங்க?...''

''ஊர்வசி, ரம்பை, மேனகான்னு பேர் இருக்கும்னு நினைச்சேன். ஆப்பிரிக்காவிலிருந்து வரேன்னு கேள்விப் பட்டேன். அழகான ஆங்கிலம் பேசறே. ரொம்பக் கர்நாடகமான பேரை வச்சுக்கிட்டு இருக்கியே. ஹி. ஹி...'' உரத்த குரலில் சிரித்தார்.

லேசாகச் செம்மை படிந்த அவளது கன்னங்களைப் பார்த்து மேலும் உற்சாகமடைந்தார்.

''என் தாயார் ஆசைப்பட்டு வச்ச பேர். அவங்களுடைய முன்னோர் பிறந்த ஊரில் ஓடிய பிரசித்தி பெற்ற ஆற்றின் பெயர்.''

''அப்படியா? என் மைத்துனன்கூடக் காவேரிக் கரையிலிருந்து வருகிறவன்தான். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். இங்கேதான் வேலை செய்கிறான். நீ அவனைப் பார்த்திருக்க முடியாது. இரண்டு மாதமா பயல் லீவில் சுற்றுலா போயிருந்தான். நேற்றுதான் ஊர் திரும்பியிருக்கான். நீ வேலைக்கு வந்து சேர்ந்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகலையே!''

என்ன சொல்ல இவர் இப்படிச் சுற்றி வளைக்கிறார்? திகைப்புடன் காவேரி அவர் முகத்தைப் பார்த்தாள்.

வராந்தாவில் டக்டக்கென்று காலணிகளின் அழுத்தமான ஓசை கேட்டது.

''அட! திங்க் ஆஃப் தி டெவில் அண்ட் தேர் ஹீ ஈஸ் என்பாங்க...அவனே வந்துட்டான்...'' புன்முறுவலுடன் திரும்பினார் மேகநாதன்.

''என்ன அத்தான்...'' என்றபடி அருகிலே வந்து நின்ற அந்த இளம் டாக்டரைக் காவேரி அதற்குமுன் அங்கே பார்த்ததில்லை. வாட்டசாட்டமாக, சுருண்ட கிராப்பு முடியும், ஒளி உமிழ்ந்த கண்களும், சுத்தமான உடையுமாக ஆள் கனகச்சிதமாக-கவர்ச்சியாகத்தான் தோன்றினான்.

''என் மனைவியின் சகோதரன், டாக்டர் ரவிகாந்தன். எம்.எஸ். முடிச்சுட்டு இங்கு தேவசுந்தரத்தின் உதவி டாக்டராக வேலை பார்க்கிறான். என் மனைவியல்லாது வேறுயாராவது இவன் சகோதரியாக இருந்திருந்தால் இவன் படிக்கும் நாளிலிருந்து வாங்கிய பல தங்கப்பதக்கங்களையும் அழித்துக் காசு மாலை செய்து போட்டுக்கிட்டிருப்பாங்க. அத்தனை தங்க மெடல்கள் வாங்கினவன். ரொம்பக் கெட்டிக்கார சர்ஜன்.''

''டோண்ட் பி ஸில்லி அத்தான்'' என்று லேசாக அதட்டிய ரவிகாந்தன், முதன் முதலாகத் தலையை நிமிர்த்தி மேஜைக்குப்பின் நின்ற அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

அவன் கண்களில் தெரிந்த ஆச்சரியம் மேகநாதனை மேலும் உற்சாகப்படுத்தியது.

'அழகான பெண்ணைக் கண்டதும் குப்புற விழுகிறேன்னு என்னை எத்தனை துச்சமா பேசறே. உன் ஆசைத் தம்பியை இவகிட்ட பல்டியடிக்க வைக்கிறேன் பார்.' அவரது மனம் துணிவுடன் சவால் விட்டது.

''மிஸ் காவேரி! இவன் எனது மைத்துனன். கல்யாணமாகாத கட்டை. பெரிய புத்தகப் புழு. அடிக்கடி பிளட்ரிப்போர்ட் தேவை, எக்ஸ்ரேக்கள் ரெடியா இருக்கான்னு கேள்னு உனக்கு போன் பண்ணுவான். பாவம், பையனுக்கு வேலைமேல் உயிர், உதவி செய் அம்மா. நான் வரட்டுமா'' என்று அறிமுகத்தைச் சுருக்கிக் கொண்டு நமுட்டுச் சிரிப்புடன் நகர்ந்தார்.

''தாங்யூ! வேணுங்கிறபோது உங்க உதவியைக் கேட்கிறேன்'' என்று கூறிவிட்டு மிகவும் மிடுக்காக - பாதணிகளை அழுத்தமாக வராந்தா மீது பதித்தபடி ரவிகாந்தன் அப்பால் போய்விட்டான்.

யாரிடமும் குழைந்து கொண்டு பேசாது தனது தகுதிகளை அதிகமாகக் காட்டிக்கொள்ளும் தலைக்கனம் பிடித்தவன் என்று நர்ஸ்கள் தமக்குள் பேசிக்கொள்வதை அரைகுறையாகக் கேட்டுப் புரிந்து கொண்டாள் காவேரி.

அவள் நர்ஸ் பயிற்சி பெற்றபோது டர்பன் அரசு ஆஸ்பத்திரியில் அவனைவிட மகா சூரன்களான வெள்ளைக்கார டாக்டர்களிடம் வேலை பயின்றவள். பெரிய ஸ்பெஷலிஸ்ட் என ரயில் வண்டித் தொடராகத் தங்கள் பெயருக்குப் பின்னால் பட்டங்கள் பெற்றவர்களாயிருந்தாலும் பெண்கள் என்றால் மிக மரியாதையுடன் பேசும் பண்பாளர்கள் அவர்கள்.

'கிடக்கிறான் இவன் கர்வம் பிடித்தவன்' என்று தன்னுள் அசட்டையாக இருந்தாள்.

★ ★ ★

அறிமுகம் ஆன நான்காவது நாள் ரவிகாந்தன் தானே அவள் மேஜை அருகே வந்து நின்றான்.

வாயைத் திறக்குமுன் அவனது முகம் குங்குமமாகிப் போயிற்று.

'ஒரு ஆண் பிள்ளைக்கு இப்படியா வெட்கம் வரும்?' காவேரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''எஸ் டாக்டர்? என்ன வேணும்?'' பவ்யமாகக் கேட்டாள்.

''நீங்க நர்ஸ் வேலைக்குப் படிச்சவங்களாம். டர்பன் நகரில் அந்த வேலை செய்து கொண்டிருந்தவங்களாம். பாவம் இங்கே வந்து...'' வார்த்தைகளை விழுங்கினான்.

''நர்ஸிங் கவுன்ஸிலின் விதிகள் உங்களுக்குத் தெரியும். அதனால் என்ன? இதுவும் ஒரு நல்ல வேலைதான்'' காவேரி முறுவலித்தாள்.

''சம்பளம் ரொம்பக் குறைச்சல் இல்லையா?''

''இதாவது கிடைக்கிறதேன்னு சந்தோஷப்படுகிறேன்.''

''ஆமாம். நீங்க எல்லாம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவங்களாமே...''

''என் முன்னோர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவங்க. ஆனால் நான் தென் ஆப்பிரிக்காவில் பிறந்தவள்.''

''நம் இந்தியர்கள் அங்கே குடியேறி எத்தனை ஆண்டுகளாகிறது?''

''சுமார் நூற்று இருபத்து மூன்று ஆண்டுகள் என்று சொல்லலாம்.''

''இங்கே வந்திருக்கிங்களே... உங்களது மூதாதையர்களைத் தேடி உறவு கொண்டாடணும்னு ஆசை ஏற்படலையா?... ஆமாம், எல்லா இந்தியர்களும் இங்கிருந்து போனவர்களா?...''

''தமிழ் நாட்டிலிருந்து தில்லையாடி, புரையார், திருவண்ணாமலை முதலிய இடங்களிலிருந்து தமிழர்கள்

பலர் கங்காணிகளின் மூலம் பிரிட்டிஷ்காரர்களால் கரும்புக் கொல்லையில் வேலை செய்யத் தொழிலாளிகளாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஒரு சிலர் பங்களூர், சேலம் முதலிய இடங்களிலிருந்து கோயில் பூசாரிகள், பள்ளி வாத்தியார்களாகத் தாமே சென்று குடியேறினவர்கள். முதலில் சொன்ன தொழிலாளி வர்க்கத்தை 'இன்டென்செர்டு லேபரர்' என்றும் பின்னால் குறிப்பிட்ட மக்களை 'பாஸஞ்சர் இண்டியன்' என்றும் அந்நாட்டுக் குடியேற்றச் சட்டம் வகை பிரிக்கின்றது.''

''இதனால் என்ன லாபம்?''

''சில சலுகைகள் இருசாராருக்குள்ளும் வித்தியாசப் படுகின்றது. ஆனால் அது ஒரு பெரிய விஷயமல்ல.''

''மற்ற இந்தியர்கள்...?''

''வடநாட்டிலிருந்து இந்திமொழி பேசும் பலர் கல்கத்தா நகரிலிருந்து கரும்புத் தோட்ட வேலைத் தொழிலாளிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களை இன்னமும் நாங்கள் கல்கத்தாக்காரர்கள் என்று அழைக்கிறோம். இவர்கள் மகராஜ், சிங் என்ற ஜாதிப் பட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மகராஜ் என்பவர்கள் தங்களை பிராமணர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். இதையும் தவிர சூரத்தை சேர்ந்த குஜராத்தியர், இந்துக்கள், முஸ்லீம்கள் பலர் வியாபாரிகளாக அந்நாட்டில் குடியேறினர். ஆனால் தமிழர்கள் எண்ணிக்கைதான் மிகவும் அதிகம். மூன்று தலைமுறைக்குள், கரும்புத்தோட்டத்தில் கூலி வேலை செய்ய வந்தவர்கள், மிகவும் முன்னேறி இப்போது வியாபாரிகளாகவும்-டாக்டர்களாகவும்-வக்கீல்களாகவும் வசதியாக வாழ்கிறார்கள்.''

''அப்படியா! இந்த நாட்டுக்கு வந்திருக்கிறீர்களே, உங்களது முன்னோர்களின் பரம்பரையினரைத் தெரிந்து

கொண்டு உறவு கொண்டாட ஆசைப்படவில்லையா? நீங்கள் எந்த மண்ணிலிருந்து வந்தவங்கன்னு அந்த இடத்தைப் போய்ப் பார்க்க ஆவல் கொள்ளவில்லையா? ரூட்ஸ் என்ற புத்தகம் படித்திருக்கிங்களா?''

''அலெக்ஸ் ஹெய்லி எழுதிய பிரபலமானதொரு புத்தகம். படிச்சேன்.''

''அமெரிக்காவில் வாழும் கலர்ட் வகுப்பைச் சேர்ந்தவர் அவர். அவரது மூதாதைகள் ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்கள் என்ற வகுப்பினராக-அடிமைகளாக அந்த நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள். தமது குடும்பத்தின் வேர் எங்கிருந்து கிளம்பியது என்பதைக் கண்டு பிடிக்க அவர் பட்டபாடு, மிகவும் மனதை நெகிழ வைக்கும் புத்தகம். அவருக்கு இருந்த ஒரு தீவிர ஆசை தமிழரான உங்களுக்கு உங்கள் வரலாற்றை அறிய ஆசையில்லையா?''

காவேரி அவனை நிமிர்ந்து பார்த்து லேசாக முறுவலித்தாள்.

அண்ணி சவுந்தரியின் சொந்தக்காரர்களைச் சந்திக்கவும்-அவள் பெயரைக் கொண்ட காவேரி ஆற்றில் தலை முழுகி ஆனந்தப்படவும் அவள் பலவிதக் கற்பனையுடன் வந்து பட்ட அவஸ்தைகளை அவரிடம் ஏன் விவரிக்க வேண்டும்?

அவளது பாரம்பரியம் ஆணிவேர் அல்ல. காசை உறிஞ்ச முயலும் சல்லிவேர்கள். இந்த அவமானகரமான உண்மையை அவரிடம் ஏன் கூறவேண்டும்?...

''கொஞ்சம் இந்த நாட்டைப் பற்றிப் புரிந்து கொண்டதும் என் மூதாதையர் வசித்த இடத்தைத் தேடி அவர்களது பரம்பரையினரைக் கண்டு உறவு கொண்டாட முயலுவேன் நிச்சயம்'' என்றாள்.

''உங்களைப் போன்ற ஒரு புத்திசாலியான பெண்ணை நான் இதுவரை சந்தித்ததில்லை. இதற்கு நான் அத்தானுக்கு

மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் செவேலென்ற முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான்.

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள் காவேரி.

திடீரென்று அவன் திரும்பி மிகவும் அருகில் வந்து ''நீங்க ரொம்ப அழகாக இருக்கிறீங்க. அந்த உண்மையை இதற்கு முன் யாராவது உங்களிடம் சொன்னது உண்டா?''

காவேரி பதிலளிக்குமுன் வேகமாக அங்கிருந்து அகன்றான்.

மறுநாள் காலை அவளது மேஜைமீது வண்ணக் காகிதத்தில் கட்டப்பட்டதொரு பார்சல் இருப்பதைக் கவனித்தாள்.

முகவரியில் அவள் பெயர் காணப்பட்டதும், யாரிடமிருந்து இந்தப் பரிசு? என்று ஆவலுடன் பிரித்தாள்.

அலெக்ஸ் ஹெய்லி எழுதிய 'ரூட்ஸ்' என்ற புத்தகம்.

முதல் பக்கத்தில்...''என் மனதைக் கவர்ந்துக்கொண்டு விட்ட காவேரிக்குக் காதல் காணிக்கை...ரவிகாந்தன்.''

திடுக்கிட்டுப் போனாள் காவேரி. இதென்ன விபரீதம்?

33

யாரும் பார்க்காத சமயம் ரவிகாந்தன் எழுதிக் கையெழுத்திட்டிருந்த புத்தகத்தின் முதல் பக்கத்தைக் கிழித்துச் சுக்கல் துகளாக்கிக் குப்பைக் கூடையில் போட்டாள் காவேரி. பின்னர் அதை ஃபைல்கள் வைக்கும் அலமாரிக்குள் வைத்துப் பூட்டினாள்.

காதல் என்றதும் என்னவோ ஒரு இனிய விவரிக்க முடியாத உணர்வு என்று அதில் திக்குமுக்காடித் திளைத்த

முதல் அனுபவத்திலேயே வாழ்க்கையில் ஒரு பேரிடியால் தாக்கப்பட்டவள். தாமோதரனது அன்பான அனுசரணைகளால்... நட்பால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொண்டு மெல்ல நிமிரத் தொடங்கியபோது, பட்டமரத்தில் துளிர்விட்டுக் கிளைவிடத் தொடங்கியது போல அவள் மனதில் மீண்டும் அன்பு சுரக்கத் தொடங்கியதும் திடீரென்று ஏற்பட்ட பல துன்ப நிகழ்ச்சிகளும் தாமோதரன் மேல் ஏற்பட்ட சந்தேகமும் நெஞ்சு முட்டும் கசப்பு உணர்வாக அவளைத்தாக்க, அந்த வேதனையைத் தாங்க முடியாது பிறந்த நாட்டைத் திரும்பிப்பாரேன் என்று தாய் நாட்டிற்குப் பறந்து வந்தவளுக்கு மூன்றாவது முறையாகக் காதல் அனுபவமா?...

பெண்களைப் பூப்போல மதிக்கத் தெரிந்தவர்கள் என்று நம்பியிருந்த அவள் நாட்டு ஆண்களே அவளது உணர்வுகளைக் காலடியில் போட்டு மிதித்துவிட்டனர். பெண்களைக் கொத்தடிமையாக நடத்துகிறவர்கள் என்று அவள் கேள்விப்பட்டிருக்கும் தாய்நாட்டு இந்தியன் ஒருவனின் காதல் வலையில் சிக்கிக்கொள்ள அவளுக்குப் பைத்தியமா என்ன? அதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று எண்ணியபடி அவள் அன்று மாலை ஹாஸ்டலுக்குத் திரும்பியிருந்தாள்.

அவள் அந்த வேலையை ஆரம்பித்து அன்றுதான் ஒரு மாதம் முடிவு பெற்றிருந்தது. ஆனால் ஹாஸ்டலில் அவளுக்கு அந்த மாதத்திற்குக் கட்டவேண்டிய தொகைக்கான பில் தயாராக அவளது மேஜைமீது காத்திருந்தது.

தூங்குவதற்கும் சாப்பாட்டிற்கும் கொடுக்கவேண்டிய தொகை போக, சில நாட்கள் கேட்டு வாங்கிச் சாப்பிட்ட ஹார்லிக்ஸ், ஐஸ் மோர், குளிக்கக் கேட்டு வாங்கிக் கொண்ட வெந்நீர், தொலைபேசியை உபயோகித்ததின் கட்டணம், புடவைகளைத் துவைத்துக் கஞ்சி போட்டுப் பெட்டிபோட்டு

வேலைக்காரி தயாராக வைத்ததற்கு என்ற பல சலுகைகளுக்காக அவள் பில் மிகவும் கூடிவிட்டிருந்தது.

தாய்நாட்டிற்கு வந்ததிலிருந்து பணம் தண்ணீராகக் கரைந்தது. அத்துடன் அவள் உடல் எடையும் கரைந்து மெலிதாகி விட்டிருந்ததை மருத்துவமனையில் எடை காட்டும் யந்திரம் உறுதிப்படுத்தியது.

கிட்டதட்ட ஐநூறு ரூபாயை எட்டிக்கொண்டிருந்த ஹாஸ்டல் பில்லைப் பலமுறை கணக்கிட்டு அவள் கலவரமடைந்து போனாள். அவள் வாங்கிய சம்பளத்திற்கு மேல் தங்கி வாழ பணம் செலவழிக்க வேண்டியிருந்தால்...? மீதம் கையிலிருக்கும் டிராவலர்ஸ் செக்கை மாற்றினால் கூட ஐயாயிரம் ரூபாய் தேறாதே! வேலையும் நிரந்தரமானதல்லவே. திடீரென்று எதிர்பாராத செலவு ஏதேனும் ஏற்பட்டுவிட்டால் யாரிடம் அவள் உதவி பெற இயலும்?

கவலையில்-இரவின் புழுக்கத்தில் ஸ்டீல் கட்டிலின் மீது புரண்டபோது அது கடாபுடாவென்று சப்திக்க, ஆழ்ந்த தூக்கத்திலிருந்த அறைத் தோழி ஒருத்தி எழுந்து உட்கார்ந்தாள்.

''யார் அது அப்படி யானைபோல அசைகிறது? நாள் முழுவதும் மாடாக உழைச்சுட்டு வந்து படுத்தா நிம்மதியில்லையே. இவங்கள்ளாம் என்ன ஜென்மமோ...'' இரைந்து குரல் கொடுத்துவிட்டுப் பனை ஓலை விசிறியால் கொசுக்களை விரட்டியபடி அவள் தூங்க முயன்றாள்.

திரும்பிப் படுக்கவும் அஞ்சி அதற்குப் பின்னர் உடலைச் சுருட்டிக்கொண்டு ஒரே நிலையில் காவேரி விடிய விடியக் கட்டிலின்மீது உறக்கமின்றிக் கிடந்தாள்.

அதன் பயன்-கண்களில் எரிச்சலும் உடலில் சோர்வுமாக அவள் அன்று காலை வேலைக்கு வந்திருந்தாள்.

ஆஸ்பத்திரியில் எங்கேயாவது ஒரு மூலையில் தரையிலாவது விழுந்து ஒரு மணி நேரம் தூங்க மாட்டோமா

என்று உடல் அலுப்பில் கெஞ்சியது. ஆனால் அன்று என்று வேலை அவளுக்குச் சற்று அதிகமாகவே இருந்தது.

ஓயாது ஒலித்த தொலைபேசிக்கு ஈடு கொடுத்தபடி ஃபைல்களைப் புரட்டி டாக்டர்கள் கேட்ட தகவல்களுக்குப் பதில் சொல்லி, மாதத்தின் முதல் தேதியானதால் மேஜை மேல் வந்து குவிந்து கிடந்த பில்களை அந்தந்த நோயாளியின் உறவினர்களுக்குக் காகித உறையில் போட்டு முகவரி எழுதி மருத்துவமனைப் பையன் வசம் விநியோகம் செய்து... யந்திரமாக மூச்சுவிட நேரமின்றி வேலையில் மூழ்கிவிட்டிருந்தாள்.

பகல் உணவு நேரத்தின்போது பெண் ஊழியர்களின் உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று முகத்தைக் கழுவி, முடியை வாரிச் சரி செய்து கொண்டு ஒப்பனையை லேசாகப் புதுப்பித்துக் கொண்டாள்.

ஆஸ்பத்திரியில் பகல் வேளை ஊழியர்களுக்கு அளிக்கப்படும் காப்பியை அவள் சாதாரண நாட்களில் கையால் கூடத் தொடுவதில்லை. அதிக சர்க்கரையைக் கொட்டிக் காப்பியைப் பாயாசமாகக் கான்டீன்காரர் அனுப்பியிருப்பார். கையோடு கொண்டுவந்த காய்ந்த ரொட்டி ஸாண்ட்விச்சுக்களைக் கடித்து மென்று விழுங்கிவிட்டுப் பையன் கொண்டு வந்து வைத்த காப்பியை ஆவலுடன் சூடு போகுமுன் பருகினாள்.

அப்பாடா என்ற ஒரு உணர்வு, பகல் வேளை தெம்பு தர அந்தக் காப்பி உதவும் என்ற நம்பிக்கை.

வேலை துவங்க இன்னம் கொஞ்ச நேரம் இருந்தது. வரவேற்பறையில் கிடந்ததொரு ஆங்கில வாரப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள் அவள்.

''ஹலோ!'' என்று மிகவும் உரிமையுடன் அழைத்தபடி டாக்டர் ரவிகாந்தன் வராந்தாவின் மறுமுனையிலிருந்து

வேகமாக வந்து, மருந்து வாசனை அவள் முகத்தில் மோத பெரும் புன்னகையோடு மிகவும் நெருக்கமாக வந்து மேஜை மீது சாய்ந்துகொண்டு நின்றான்.

வரவேற்பறையில் அதுசமயம் யாரும் இருக்கவில்லை. நர்ஸ்களும் டாக்டர்களும் தமது பகல் உணவைக் கவனிக்கப் போயிருந்தனர். இங்குமங்கும் டிராலிகளைத் தள்ளியபடி ஆஸ்பத்திரி ஊழியர் இரண்டொருவர் மட்டுமே கண்களில் பட்டனர்.

''நான் கொடுத்த புத்தகத்தைப் படிச்சிங்களா?''

ரவிகாந்தன் முதல் நாளைவிட மிகவும் துணிச்சலாக அவளைக் கனிவுடன் பார்த்தான்.

ஆசையில் பளபளத்த அந்தக் கண்களை நிமிர்ந்து பார்த்தாள் அவள். வழக்கமான ரிஸப்ஷனிஸ்ட்டின் வியாபாரப் புன்னகை ஒன்றை வீசினாள்.

''ஏற்கனவே நான் படித்த புத்தகம். மீண்டும் படிக்கச் சில நாட்கள் பிடிக்கும்'' என்றாள்.

''எத்தனை நாள் ஆனாலும் நான் உங்கள் அபிப்ராயத்திற்குக் காத்திருக்கத் தயார்.''

இரு பொருள்பட அவளை உற்றுப்பார்த்தான் அவன்.

சரியான வம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறோமே என்று உள்ளுணர்வு அவளை உறுத்தியது. அவனது பேச்சைத் திசை திருப்ப விரும்பினாள்.

''இன்னிக்கு நீங்க இரண்டு ஆப்ரேஷன் செய்திருக்கிறீங்க, இல்லையா?''

''சீஃப் என்னையே செய்யச் சொல்லி அனுமதி தந்துட்டார்.''

பெருமை பொங்கியது அவன் குரலில்.

''ஆயிரம் பேரைக் கொன்றால்தானே அரை வைத்தியர். நீங்க இன்னும் எத்தனை பேரை...'' முடிக்காது கன்னங்குழிய அவள் வேடிக்கையாகச் சிரித்ததைப் பிரமிப்புடன் பார்த்து மயங்கிப்போய் ஒருகணம் தன்னை மறந்து நின்றான் அவன்.

சொக்குப்பொடி போட்டுவிட்டுப் பிடிகொடுத்துப் பேச மாட்டேன் என்கிறாளே. மனதில் ஏற்பட்ட ஆற்றாமையை அடக்கிக்கொண்டு, ''ஒரு விஷயம் உங்களைக் கேட்க விரும்பறேன். ஒளிக்காமல் பதில் சொல்வீங்களா?'' என்றான்.

''கேளுங்கள் சொல்றேன்.'' மெல்லச் சிரித்தாள் காவேரி.

''தென் ஆப்பிரிக்காவில் குடியேறிய பெரும்பாலான தமிழர்கள் கரும்புக்கொல்லையில் வேலை செய்யப் போன தொழிலாளிகள் என்கிறீங்க, ஒரு சிலர் வியாபாரிகளாகவும் போனாங்க என்கிறீங்க. அதில் நீங்க எந்த வகையைச் சேர்ந்தவங்க...?''

அவன் உள்ளத்தில் உதயமாகியிருக்கும் காதல் தீ மீது பச்சைத் தண்ணீரைக் கொட்டித் தணியவைக்க இது ஒரு சந்தர்ப்பம் என்று எண்ணியபடி அவள் மோகனமாக முறுவலித்தாள்.

''என் பெரிய அண்ணிதான் இந்தியாவிலிருந்து வந்தவங்க. என் அண்ணனைத் திருமணம் செய்து கொண்டவங்க. அவங்க பாஸஞ்சர் இண்டியன் என்ற பிரிவில் நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்டாங்க. என் முப்பாட்டனின் தந்தையும் தாயும் கரும்புக் கொல்லையில் கூலி வேலை செய்யப் புறப்பட்டுப் போனவர்கள். அதனால் அவர்கள் பரம்பரையில் வந்தவள் நான். தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்ற பிரிவில் இருப்பவள்.''

''இன்னொரு கேள்வி...கேட்கலாமா?''

கேட்கலாம் என்று தலையை ஆட்டினாள் காவேரி.

''சாதாரணத் தமிழர்களான நாம் கருப்பாகவோ புது நிறமாகவோதான் இருக்கிறோம். உதாரணத்துக்கு என்னையே எடுத்துக்கோங்க. நான் மாநிறந்தான். ஆனால் நீங்க தொழிலாளிகளின் பரம்பரையில் வந்தவங்கன்னு சொல்றீங்க. ஆனால் நல்ல நிறமாக இருக்கிறீங்களே?... மேலே கேட்கத் தடுமாறினான்.

காவேரி களுக்கென்று சிரித்தாள்.

''டாக்டருக்குப் படிச்சிருக்கிற உங்களுக்கு இதை ஊகிக்க முடியலையா? ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்கள் என்ற ஆப்பிரிக்க மக்களை அடிமைகளாக அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்று தோட்ட வேலைகளில் ஈடுபடுத்தியபோது அடிமை யான ஆப்பிரிக்கப் பெண்களுக்கு வெள்ளைக்கார யஜமானால் ஏற்பட்ட சிரமங்களைப் போல கரும்புக் கொல்லையில் வேலை செய்யப் போன இந்தியப் பெண்களுக்கும் ஏற்பட்டது....''

''என்ன சொல்றீங்க...''

''ஆண்கள் கரும்புக் கொல்லையில் கடினமாக உழைத்தனர். பெண்கள் வெள்ளைக்கார முதலாளி வீட்டில் சமையல்காரிகளாக அமர்த்தப்பட்டனர். அநேக வெள்ளைக் கார விவசாயிகள் கல்யாணமாகாத கட்டை பிரம்மச்சாரிகளாக இருந்தனர். அதன் விளைவு-இந்தியர் இடையே தமிழர்களில் சிலர் நல்ல நிறமானவர்களாகத் தோன்றினர். கருப்பு முடியையும், கருவிழிகளையும் இந்தியத் தாயிடமும்-வெள்ளைத் தோலை வெள்ளைக்கார அப்பனிடமும் சிலர் பெற்று ரொம்ப அழகாகவே இருக்கிறார்கள. அப்படிப்பட்ட தொரு கலப்படம் எங்கள் குடும்பத்திலும் நடந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் என் குடும்பத்தில் நான் மட்டும் தந்த நிறத்தில் எப்படிப் பிறந்திருக்க முடியும்? என் மூதாதையரான யாருக்கோ வெள்ளைக்காரருடன் தொடர்பு

இருந்திருக்க வேண்டும். என் உடம்பிலே ஒரு துளி வெள்ளைக் காரரின் ரத்தம் ஓடுகிறது....'' கலகலவென்று சிரித்தாள்.

கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக்கொண்டு மெள்ளமாக அவளை வெறித்தான் ரவிகாந்தன்.

''அதனால் நான் கவலைப்படவில்லை. உலகில் உள்ள எந்த இனமும் நாங்கள் பரிசுத்தமான ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெருமை பேச முடியாது. யுத்தங்கள், குடியேற்றம் என்ற பல காரணங்களால் ஒவ்வொரு இனமும் அறிந்தோ அறியாமலோ மற்ற இனத்துடன் கலந்துவிட்டிருக் கின்றனர். உணவில் கலப்படம் போல இது மனிதர் களிடையே ஏற்படும் கலப்படம். அவ்வளவுதான். நீங்கள் உங்களது மூதாதையரைப் பற்றி ஆராய்ந்தால்...''

ஜிவ்வென்று கோபத்தில் முகம் சிவந்து போனான் ரவிகாந்தன்.

எங்கள் குடும்பத்தைப்பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் ஜமீன்தார்களின் பரம்பரை'' பெருமை யாகச் சொன்னான்.

''அப்படிச் சொல்லிக்கொள்ள என்னால் முடியாது. நான் தொழிலாளிகளின் பரம்பரையைச் சேர்ந்தவள். கண்ணகியின் பரம்பரை என்றும் தம்பட்டம் கொட்ட இயலாது. ஆரம்பத் தில் பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிலாளிகளை இங்கிருந்து ஆப்பிரிக்காவுக்கு அனுப்பியபோது நூறு ஆண்களும், முப்பது பெண்களும் என்ற விகிதத்தில் தான் வேலைக்கு அனுப்பி வைத்தனர். சிலர் கணவன் மனைவி களாகக் கிளம்பிப் போனார்கள். சில பெண்கள் காதலனுடன் வீட்டைவிட்டு ஓடியவர்கள். சில பெண்கள் நடு வீதியில்... எப்படியோ வாழ்ந்தவர்கள். வேறு நாட்டில் வாழ்க்கையைத் தேடிக் கொண்டு புறப்பட்டனர். ஒரு சமுதாயத்தில் ஆண்கள் அதிகமாக இருந்து பெண்களின் எண்ணிக்கை குறைவாக

இருந்தால் என்ன நடக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஒழுக்க முடையவர்களாக ஆணும் பெண்ணும் வாழமுடியாத சூழ்நிலை.''

''உண்மையாகவா?''

''ரூட்ஸ் எனும் புத்தகத்தை ரசித்தீர்கள் இல்லையா? நம் நாட்டைச் சேர்ந்தவர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா? அதனால் விஷயத்தைச் சொன்னேன். ஆனால் இப்பொழுது நூற்றுக்கு நூறு நான்காவது தலைமுறையைச் சேர்ந்த நாங்கள் படித்தவர்களாக வும், கண்யமானவர்களாகவும் ஒழுக்கமானவர்களாகவும் இந்தியக் கலாச்சாரத்தைக் கைவிடாது சுகமாக வாழ்கிறோம். அந்தக் காலத்தில் ஏதேதோ நடந்தது என்று அந்தக் கணிப்பிலே நீங்கள் என்னை எடைபோட இயலாது.''

அதற்குள் பகல் பொழுது வேலை துவங்க ஆரம்பித்து விட்டதால் ரவிகாந்தன் அரைமனதுடன் அங்கிருந்து அகன்றான்.

இத்தனை சொல்லியும் அவனது உற்சாகம் தணிந்தபாடில்லை.

★ ★ ★

அடுத்த நாள் காலை உயர்ந்தவகைச் சாக்லெட் பெட்டி யொன்று அவனது பரிசாக அந்த மேஜைமீது அவளுக்காகக் காத்திருந்தது.

அதற்கடுத்த நாள் ஒரு கொத்து வண்ணமலர்கள் அவனது காணிக்கையாக அங்கே அவளை எதிர்நோக்கிக்கொண்டிருந்தன.

பின்னர் ஒரு கட்டுப் புத்தகங்கள்-இரவில் பொழுதைக் கழிக்க, படித்து மகிழ அவளுக்காக மேஜைமீது உட்கார்ந்திருந்தன.

இதென்ன தொல்லை.. இந்த விவகாரம் இப்படியே போனால் இதன் முடிவுதான் என்ன?

கவலையில் தத்தளித்துப் போனவளாக அவள் அன்று காலை வேலைக்கு வந்திருந்தாள். ரிஸப்ஷன் மேஜைமீது ஏதோ ஒரு பரிசுப்பொருள் இருந்து பயமுறுத்தப் போகிறது என்று எண்ணியபடி உள்ளே நுழைந்தவளுக்கு வேறு ஒரு பெருத்த கலவரம் காத்திருந்தது.

34

காவேரி அவளை இதற்குமுன் அந்த மருத்துவமனையில் பார்த்ததில்லை. வந்தவளுக்கு வயது முப்பதுக்கு மேலிருக்கும். காதுகளில் வைரக் கம்மல்கள் ஒளியிட, கழுத்து தங்கச் சரட்டில் தொங்கிய வைரப் பதக்கத்தைத் தன் கருப்புப் பட்டுப் புடவையின் மாராப்பின்மீது கண்களில் பளிச்சிடத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள். கட்டையாக-குட்டையாகச் சிறிது பருமனாகத் தெரிந்த அவள் கண்களில் கடுமை தெரிந்தது.

வைரமும் தங்கமும் கொழிக்கும் நாட்டிலிருந்துதான் காவேரி வருகிறாள். ஆனாலும் அவர்கள் நாட்டுப் பெண்களுக்குத் தாய்நாட்டுப் பெண்களைப்போல இப்படி ஒரு நகை மோகம் கிடையவே கிடையாது. நிச்சயதார்த்தத்தின் போது வைரக்கல் மோதிரத்தை மாப்பிள்ளை பெண்ணுக்குப் பரிசாகத் தருவான். கல்யாணத்திற்கு முன்னர் வசதியுள்ள குடும்பமாக இருந்தால் பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டவர்கள் ஒரு சிறு வைரத்தோடும், ஒரு தங்கச்சங்கிலியும், மெல்லியதாக இரு வளையல்களும், அத்துடன் ஒரு கைக்கடிகாரமும் பரிசுப்பொருளாக வழங்குவார்கள்.

இப்படியா...கழுத்திலேயும்-காதிலேயும்-மூக்கிலும் வைரங்கள் பளபளக்க, நோயாளியைப் பார்க்க வரும்போது கூட ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு சில பார்வையாளர் பெண்கள் வருகிறார்களே, இதென்ன நாகரிகம்?

வெள்ளைக்காரர்களுடன் வாழ நேர்ந்துவிட்டதால் எந்த நேரத்தில் எப்படி உடுத்தவேண்டும், எங்கே எந்தவிதமான அலங்காரத்தில் போகவேண்டும் என்ற சில வரைமுறைகளை அவர்கள் அனுசரித்தனர்.

சுத்தமான எளிய உடையில் நோயாளிக்கு உற்சாகம் தரும் வண்ணம் ஒரு சிறு மலர்க்கொத்துடன் பார்வையாளர்கள் மருத்துவமனைக்குச் செல்வார்கள்.

ஆனால் இங்கே-பகல் வேளையில்கூடக் கண்களைக் கூசவைக்கும் பட்டைச் சரிகைபோட்ட பட்டுப் புடவையில் ....வைர நகைகளில் பார்வையாளராகச் சில பெண்கள் நோயாளிகளைப் பார்க்க வருவதைக் கண்டு அவள் அதிர்ந்து போயிருக்கிறாள்.

ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு இவர்கள் எல்லாம் மகிழ்ச்சியில் திளைக்கிறார்களே - நாம் மட்டும் படுத்துக்கிடக்கிறோமே என்று நோயாளியின் மனம் குமைந்து போகும் என்று இந்தச் சிலர் கொஞ்சமும் நினைத்துப் பார்ப்பதே இல்லை. சே! எத்தனை ஒரு சுயநலம். இரவு வேளையில் அணிந்து கொள்ள வேண்டிய கருப்பு ஆடைகளை நல்ல வெய்யில் நேரத்தில் அணிந்து வந்தால் அவளது நாட்டில் நாகரிக குறைவாக மதிக்கப்படுவார்கள்.

காலை வேளையில் ரிஸப்ஷன் மேஜையருகே நின்ற அவள் ஒரு கருப்புப் பட்டுச் சேலையைக் கட்டிக்கொண்டு வந்திருந்தாள். பார்த்தால் படித்தவள்போல் தென்பட்டாள். யார் அவள்?

திரும்பிப் பார்த்த காவேரி வியாபாரப் புன்னகை ஒன்றை வீசிவிட்டு தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

''யாரைப் பார்க்க வந்திருக்கீங்க? டாக்டர்கள் வந்து போன பின்புதான் விசிட்டர்களைப் பார்க்க அனுமதிப்பாங்க.''

லேசாகச் சிரித்தாள் காவேரி.

''உன் பெயர்தானே காவேரி. என் சிநேகிதி வசந்தா கொண்டு வந்து இங்கே வேலைக்கு வச்ச வெளிநாட்டுக்காரி. உன்னைத்தான் பார்க்க வந்திருக்கேன்.''

காவேரி திடுக்கிட்டுப் போனாள். அவளுக்கு ஒன்றுமே விளங்காத குழப்பம்.

யார் இந்த அம்மாள்.... மிரட்டும் குரலில்-அவள் வேலைக்கு வந்ததும் வராததுமாக அவளை அதட்டறாங்களே?

கோபத்தை அடக்கிக்கொண்டு முகத்தை நிமிர்த்தி வந்தவளை ஊன்றிப் பார்த்தாள்.

''ஆமாம் என் பெயர்தான் காவேரி. ஆப்பிரிக்க நாட்டிலிருந்து வருகிறேன். நீங்க தெரிஞ்சு கொண்டிருக்கிற விவரமெல்லாம் சரி. ஆனால் என்னைப் பார்க்க நீங்கள் எதற்காக?...''

அவள் முடிக்குமுன் வந்தவள் படீரென்று வார்த்தைகளை வெடித்தாள்.

''நான் டாக்டர் ரவிகாந்தனின் அக்கா. மிஸஸ் லாவண்யா மேகநாதன். என் கணவர் இந்த மருத்துவனையின் அனீஸத்திட்டிஸ்ட். நீ என் தம்பியையும்-என் கணவரையும் இங்கே பார்த்திருப்பியே. இப்போ நான் எதுக்காக வந்திருக்கேன்னு புரிகிறதா?''

-லாவண்யா ஆங்காரமாகக் கேட்டாள்.

''உங்களைச் சந்தித்ததுபற்றி மிக்க மகிழ்ச்சி. ஆனால் இன்னமும் எனக்கு உங்களது வருகையின் நோக்கம் புரியலையே...''

''இந்த ரிஸப்ஷனிஸ்ட் வேலையை விட்டுவிட்டு நீ பேசாம சினிமாவிலே சேர்ந்துடலாம். விரைவில் முன்னுக்கு

வந்து விடுவே. அப்பப்பா என்ன நடிப்பு! புரியாததுபோல ஒரு பாசாங்கு...''

''மிஸஸ் மேகநாதன்-தயவு செய்து நேரிடையாகப் பேசுங்க. சுத்தி வளைக்க வேண்டாம்.''

கோபத்தை அடக்கிக்கொண்டு காவேரி அடிக்குரலில் கேட்டாள்.

டாக்டர் ரவிகாந்தனின் அக்காவாக அவள் இருந்தால் என்ன, அம்மாவாகத்தான் இருந்தால் அவளுக்கென்ன? விடிந்ததும் விடியாததுமாக வந்து வேலை செய்யுமிடத்தில் வம்பு வழக்காட என்ன உரிமை இவளுக்கு?

காவேரிக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது.

''என் தம்பி ரவிகாந்தனுக்கு என் அப்பா தமது உறவிலேயே ஒரு பெண் எடுக்க முடிவு செய்து பெண் வீட்டவங்களுக்கு வாக்குத் தந்துவிட்டிருந்தார். பி.ஏ.படிச்ச பெண். குத்துவிளக்குப்போல அழகா இருப்பா. வீணை வாசிப்பா. லட்ச ரூபாய் வரதட்சிணையும் காரும் பங்களாவுமாக வருகிற வரன். இது நிச்சயமாகியிருக்கும் போது...''

''ரொம்ப மகிழ்ச்சியம்மா...''

''உன் மகிழ்ச்சியில் இடிவிழ. இந்த வரனைத் தட்டிவிட்டு ரவிகாந்தனை எங்ககிட்டேயிருந்து பிரிச்சு எடுத்துப்போக நீ திட்டமிட்டிருக்கியே? உனக்கு ரொம்பத் துணிச்சல்தான். இந்தக் காதல் நாடகத்தைப் பத்தி என் கணவர் என்கிட்ட சொல்லாட்டி....''

''என்ன உளறுகிறீங்க...?''

கோபத்துடன் காவேரி சீறினாள்.

''உண்மையைச் சொல்றேன். நேத்துக் காலையிலே விளையாட்டைப்போல என் தம்பி கல்யாணத்தைப் பத்தி பேசப் போக எங்க வீட்டில் ஒரே ரகளையாயிட்டது. திருச்சியிலிருக்கும் என் தந்தைக்கு டிரங்கால் போட்டு அவர் பார்த்து வச்சிருக்கிற பெண்ணைத் தான் கட்டிக்கப் போவதில்லைன்னு தம்பி ஒரேயடியாகக் கத்தினான். போட்டதைச் சாப்பிட்டுவிட்டுப் புத்தகமே கதின்னு உலகம் தெரியாம இருந்த என் தம்பியை நீ இப்படியா மயக்குவே? உன்னைத்தான் கட்டிக்கப் போறானாம். நீ யார்... ஊர் பேர் தெரியாத ஒரு நாடோடி... உன்னை மருமகளாக்கிட்டா எங்க குடும்ப கௌரவம் என்னாகிறது?''

''மிஸஸ் மேகநாதன், நீங்க உங்க தம்பி செய்கிற தப்புக்கு என்னைக் காரணம் காட்டிப் பேசறது நியாயமில்லை.''

''ரொம்ப நியாயத்தைக் கண்டவ.. உன் திட்டத்தைத் தவிடு பொடியாக்க நான் உடனே டாக்டர் தேவசுந்தரத்தைத் தொலைபேசியில் கூப்பிட்டு ஒரு காரியம் செய்திருக்கேன்.''

தாடையை இறுக்கிக்கொண்டு மௌனமாகக் காவேரி அவளைப் பார்த்தாள்.

''உடனே ரவிகாந்தன் கோயம்புத்தூருக்குப் புறப்பட வேண்டும். தமது தம்பி புதிதாக ஆரம்பித்திருக்கும் மருத்துவமனையில் இரண்டு வாரம் தங்கியிருந்து அவருக்கு உதவ வேண்டும் என்று தேவசுந்தரம் உத்தரவு போட்டு விட்டார். ரவிகாந்தன் இன்று காலையில் புறப்பட்டுப் போய்விட்டான். அவன் திரும்பி வருவதற்குள் நீ இங்கிருந்து கிளம்பிவிடவேண்டும் என்று சொல்லத்தான் வந்தேன்.''

திக்கென்ற உணர்வில் காவேரி ஆடிப் போனாள். ஒரு மாதச் சம்பளம் வாங்கியிருக்கிறாள். அதற்குள் வேலையை விட்டுவிட வேணுமா?

''டாக்டர் தேவசுந்தரத்திற்கு என் வேலையில் திருப்தி யில்லாவிடில் யோசிக்க வேண்டிய விஷயம் இது.''

''அவர் நேத்து இரவே யோசித்து முடிச்சுட்டார்.''

போர்டிகோவில் வந்து நின்ற பென்ஸ் காரிலிருந்து இறங்கிய டாக்டர் தேவசுந்தரம் நேரே காவேரியிடம் வந்தார்.

''என் அறைக்கு நீ உடனே வரவேண்டும். உன்னிடம் நான் பேசணும்.''

காரமான குரலில் அதட்டினார்.

கதவைச் சாத்திவிட்டு மேஜையருகே வந்து நின்ற காவேரியை அவர் கோபத்துடன் வெறித்தார்.

''நீ வேலையைவிட்டுப் போனாலும் சரி-நான் உன்னை நீக்கினாலும் சரி - இருபத்து நான்கு மணி நேரம் முன்னறிவிப்புத் தரவேண்டும் என்பது ஆரம்பத்தில் ஒப்புக் கொண்ட சங்கதி, இல்லையா?''

காவேரி மௌனமாகத் தலையை ஆட்டினாள். அவள் நெஞ்சு கலவரத்தில் படபடத்தது.

''இன்றே உனக்கு நோட்டீஸ் கொடுத்து விடுகிறேன். சிறிது நேரத்தில் டைப் செய்த அறிக்கை என் கையெழுத்துடன் உனக்குக் கிட்டும். இன்று மாலையே நீ வேலையிலிருந்து விலகிக் கொண்டு உனக்குச் சேர வேண்டிய சம்பளத்தை கணக்கரிடமிருந்து பெற்றுக்கொண்டு போய்விட்டால் சௌகர்யமாக இருக்கும்...''

''டாக்டர் ....நான்..நான்''

பேச முடியாது திணறினாள் துக்கத்துடன் காவேரி.

''எனக்கு டாக்டர் மேகநாதன் தயவு எப்பொழுதும் தேவை. அவர் மனைவி இந்த நர்ஸிங் ஹோம் அமைப்பில் ஒரு பங்குதாரர். உன் பொருட்டு அவர்களை நான் விரோதித்துக்

''முன்பே சொல்லியிருக்கிறேன், நான் பார்த்து வரும் வேலை தற்காலிகமானது என்று. அதனால் வேறு ஒரு நல்ல வேலை தேடிக்கொள்ள முயன்று கொண்டிருக்கிறேன். அதுவரை சோப்பு பொடி கம்பெனி ஒன்று அவர்களது சோப்புப் பொடியின் விற்பனையை அதிகரிக்க நான் வீடு வீடாகச் சென்று புள்ளி விவரம் சேகரித்துத் தந்தால் அந்த நிறுவனத்திலே ஒரு நல்ல வேலை போட்டுத் தருவதாகவும், புள்ளி விவரம் சேகரித்ததற்குச் சம்பளம் தருவதாகவும் ஒப்புக்கொண்டிருக்காங்க. அதனால் நான் ஹாஸ்டலுக்கு முன்பணமாக மூன்று மாதத்துக்கு உண்டான தொகையைக் கட்ட விரும்பறேன்.

மனதில் தோன்றிய கதையுடன் பணத்தைக் கத்தையாக அவர்முன் நீட்டினாள்.

கரும்பு தின்னக் கூலியா தேவை? சடக்கென்று சந்திரசேகர் பணத்தை வாங்கி எண்ணி மேஜை இழுப்பறைக்குள் திணித்துக் கொண்டு தமது நரிப்பற்களைக் காட்டினார்.

''பால்-ஹார்லிக்ஸ் போன்ற அதிகப்படி உணவிற்கு உண்டாகும் செலவைப் பிற்பாடு தரலாம். நல்ல வேளை நீங்கள் உங்கள் இடத்திற்கு முன்பணம் கொடுத்துச் சட்டென்று உறுதிப்படுத்திக்கொண்டு விட்டீங்க. என் மனைவியின் உறவுக்காரப் பெண் ஒருத்தி வேலை தேடிக் கொண்டு வசிக்க இடமில்லாமல் தவிக்கிறாள். ஆனால் நான் உங்களுக்குக் கொடுத்த வாக்கைத் தவற முடியாதுன்னு அனுப்பி விடப்போறேன்.''

அவளுக்குச் சளைக்காது அவரும் ஒரு கதையை அளந்தார்.

உண்மையைப் பேசி அரிச்சந்திரன் பரம்பரையாக வாழ விரும்பினால்கூட வாழ்க்கையின் போராட்டம் யாரையும் விடுவதில்லையே. ஹாஸ்டலில் தொடர்ந்து தங்க அவள் ஒரு பொய்யைச் சொல்ல வேண்டியுள்ளது. தொடர்ந்து பணம் வசூலிக்க சந்திரசேகர் வேறு ஒரு பொய்யைப் பேச வேண்டியதிருக்கிறது... என்று சலிப்படைந்தவளாக மீதிப் பணத்தைத் தோள்பைக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

''மிஸ்டர் சந்திரசேகர்... எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?''

காவேரி கேட்டதும் ஹாஸ்டலின் தலைவர் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார் ஆவலுடன்.

''என் பாஸ்போர்ட், மற்ற முக்கிய விஷயங்கள் கொண்ட இந்த பிளாஸ்டிக் பையைத் தங்களிடம் பாதுகாப்பாக வைத்துவிட்டு வெளியே போய்வர விரும்புகிறேன். இந்த உதவியை...''

முடிக்காது அவரைப் பார்த்தாள்!

சந்திரசேகரின் முகம் பெரிய புன்னகையில் விரிந்து போனது.

''கட்டாயம் முடியும் மிஸ் காவேரி. இங்குள்ள பெண்களுக்கு உதவி செய்ய வேண்டியது எங்கள் முக்கிய கடமையாச்சே. பையிலுள்ள பொருள்கள் யாவை என்று குறிப்பு எடுத்து ஆளுக்கு ஒரு காப்பி வைத்துக் கொள்வது நலம். பின்னர் தாராளமாக என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகலாம். நீங்கள் வேண்டுமென்று கேட்கும்வரை அவை எனது இரும்பு அலமாரியில் பத்திரமாக இருக்கும். கவலையில்லாமல் நீங்கள் வெளியே போய் வரலாம்.

அபயம் அளித்தார்.

அப்படிச் செய்வதினால் பின்னால் ஏற்படப்போகும் அபாயத்தைப்பற்றி அவள் அப்பொழுதே கொஞ்சம் உணர்ந்து கொண்டிருந்தால்?...

35

ஹாஸ்டல் தலைவர் சந்திரசேகரன் மகா கரும. தாம் அன்றாடம் வாங்கும் ராளேட்டைத் தாமே படித்து விட்டு யார் கண்ணிலும் படாது தமது அலுவலக மேஜை இழுப் றைக்குள் ஒளித்துவைத்து விடுவார்.

''இன்னிக்குக் காலை வரும் பேப்பரைக் கொஞ்சம் இரவல் கொடுக்க முடியுமா?'' என்று காவேரி கேட்டபோது மனிதர் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

''அவரவர்கள் படிக்க வேண்டிய பத்திரிகைகளை அவரவர்களே வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது ஹாஸ்டல் விதிகளில் ஒன்று. வந்த நாளே சொன்னேனே, ஞாபகம் இல்லையா?'' நரிப்பற்கள் தெரிய முறுவலித்தார்.

ஹாஸ்டலில் வசித்த பெண்களிடையே நட்புரிமை என்பதே துளியளவும் கிடையாது. யாரும் எதையும் மற்றவருடன் பகிர்ந்து கொள்ள முன் வந்ததேயில்லை... அப்படிப்பட்டதொரு சுயநலக்காரர்கள். வேறு வழியின்றி ஒன்றாக ஒரு குடியிருப்புக்குள் குவிந்து கிடந்தனர்.

அடுத்த நாளிலிருந்து காவேரி வேலை தேடும் வேட்டையில் மும்முரமாக இறங்க வேண்டியிருந்தது.

நர்ஸ் வேலைக்குப் பயிற்சி பெற்றவளாக இல்லாதுவெறும் பள்ளிப்படிப்பை மட்டும் அரைகுறையாக முடித்துக் கொண்டு விட்டவளாக இருந்தாலும்... உடம்பில் வலுவும் கொஞ்சம் புத்திசாலித்தனமும் இருந்தால் போதும், அவள் வசித்த நாட்டில் வேலைகள் அவளைத் தேடிக்கொண்டு தானே வந்துவிடும்.

நல்ல கம்பெனிகளில்-பிரபலமான நிறுவனங்களில் வரவேற்பறையில் அழகான-புத்திசாலிப் பெண்களைத்

தொலைபேசி இயக்கவும், வந்தவர்களை வரவேற்று உள்ளே வேலை பார்ப்பவர்களுக்குத் தகவல் கொடுக்கவுமான பணி செய்ய ரிஸப்ஷனிஸ்ட் என்ற தகுதியில் அமர்த்தி விடுவார்கள்.

நாலு, வகுப்புகள் படித்திருந்தாலும் போதும். அந்த நாட்டில் பெண்களுக்கு ஆங்கிலம் சரளமாகப் பேசத் தெரியும். கொஞ்சம் பார்க்க அழகாக இருந்து விட்டால் கட்டாயம் அவர்களுக்கு வரவேற்பறையை அலங்கரிக்கும் ரிஸப்ஷனிஸ்ட் வேலை கைமேல் கிடைத்துவிடும்.

தொலைபேசிப் பெட்டியை இயக்கும் பயிற்சியைக் கொடுத்துக் கம்பெனி நிர்வாகிகள் அவர்களை இரண்டே நாளில் மிகவும் திறமையுள்ள வேலைக்குத் தகுதியுள்ள பெண்களாக உருவாக்கி விடுகிறார்கள்.

அவளது நாட்டில் வேலை வாய்ப்புகள்தான் எத்தனை? சம்பளம்தான் எவ்வளவு? வாழ்க்கை நிலைதான் எப்படிப் பட்டது?

அத்தனையையும் உதறிவிட்டுத் தாய்நாட்டில் பால் ஓடுகிறது-தேன் பாய்கிறது என்கிற கற்பனையில் புறப்பட்டு வந்து...

மேலே சிந்திக்க முடியாது நடைபாதையருகேயிருந்த ஒரு சிறு கடையில் அன்று காலைப் பத்திரிகை ஒன்றை வாங்கிக் கொண்டு மெல்ல நடந்தாள்.

காப்பி பலகாரத்தை ஹாஸ்டலில் முடித்துக் கொண்டாகி விட்டது. கையில் கட்டிக்கொடுத்த பகல் டிபன்- காய்ந்த ரொட்டியும் மசாலா உருளைக் கிழங்கும் கொண்ட பொட்டலத்தைத் தோள் பைக்குள் பத்திரமாக வைத்திருந்தாள்.

இனி அவள் எங்கேயாவது நிம்மதியாக உட்கார்ந்து, பத்திரிகைத் தாளில் தேவை என்று காணப்படும் பகுதியை நன்றாகப் படித்துவிட்டுத்தான் கிளம்பவேண்டும்.

உட்கார்ந்து படிக்கக்கூட இடம் இல்லை போல நடைபாதைகளில் கடைகள்... இல்லாவிடில் கால் வைக்க முடியாத அசிங்கம்... எங்கு திரும்பினாலும் கூட்டம். தாய்நாட்டு வாழ்க்கையை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அனுசரித்துச் சமாளிக்க முடியாது போலிருக்கிறதே.

கலவரமும் துயரமுமாக அவள் அருகிலிருந்ததொரு தபால் நிலையத்தின் உள்ளே புகுந்து வராந்தாவில் ஒரு ஓரமாகக் காலைத் தொங்கவிட்டுக் கொண்டு பத்திரிகைத் தாள்களைக் கவனமாகப் புரட்டினாள்.

நிலையத்திற்கு வருவோர் போவோர் அவளை வேடிக்கையாகப் பார்த்ததைப் பற்றிக் கவலைப்படவில்லை.

தேவை என்ற பகுதியைப் பற்றித்தான் கவலைப்பட்டாள். உகந்தது என்று மனதிற்குப் பட்டதையெல்லாம் ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டு கிளம்பினாள்.

தேவை ஒரு பெண் ரிஸப்ஷனிஸ்ட். சம்பளம் மற்ற சலுகைகள் நேர்முகத் தேர்வின் போது தீர்மானிக்கப்படும். ஆங்கிலம் சரளமாகப் பேச, எழுதத் தெரிந்த-அழகான பெண்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

தபாலில் விண்ணப்பம் எழுதி-பதில் வரக் காத்திருக்கப் பொறுமை இருக்கவில்லை. அது ஒரு பிரபல நிறுவனம் என்று விளம்பரம் கூறியது. முகவரியும், நேர்முகமாக விண்ணப்பித்துக் கொள்ள வரவேண்டிய நேரமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

நகரத்திலே புதிதாக உருவாகியிருந்ததொரு பத்தடுக்குக் கட்டிடமொன்றில் பத்தாவது தளத்தில் இருந்தது அந்த அலுவலகம்.

வனிதா ஏஜென்சி என்று பொன் எழுத்துக்கள் மின்னிய கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு அவள் உள்ளே போனபோது திடுக்கிட்டுப் போனாள்.

புகழ் பெற்ற நிறுவனம் என்று விளம்பரம் கூறியது. ஆனால் ஒரே அறையில், மேஜைக்குப் பின் உட்கார்ந்திருந்த நரை இழையோடிய கிராப்புத் தலைக்காரரின் பார்வையும், வெறிச்சென்றிருந்த அறையின் சூழ்நிலையும் அவளுக்கு மிக்க கலவரத்தை உண்டு பண்ணியது.

"எஸ்!..." என்று மிடுக்காக கூறிவிட்டு, வைத்த விழி வாங்காது அவளைப் பார்த்து கோட்டு ஸுட்டில் தெரிந்த அந்த மனிதர் டையை இழுத்து விரலால் நகர்த்திக் கொண்டு முறுவலித்தார்.

"உட்காருங்க... வேலை தேடித்தானே வந்திருக்கீங்க..." ஆங்கிலத்தில் கேட்டார்.

சவுந்தரி அண்ணி அவளுக்குப் பல விஷயங்கள் சொல்லியிருக்கிறாள்.

நான் பிறந்த நாடு பழம் பெருமைகள் பல தாங்கிய பெரும் நாடுதான். ஆனால் மேலைநாட்டு மோகத்திலே மூழ்கிப் போனதாலோ என்னவோ, நமது பண்பாடுகள் நசித்துப்போய், மக்கள் பலவிதமாக வாழத் தலைப்பட்டுள்ளார்கள். புதிதாக அங்கே போகிறவர்களுக்கு ஒரே குழப்பமாகத்தானிருக்கும். வாழ்க்கைப் போராட்டத்திலே எதிர்நீச்சல் போட்டுச் சமாளிக்க மக்கள் கையாளும் உபாயங்களைப் புரிந்து கொள்ளாவிடில்...

அண்ணி காதருகே இப்பொழுது கிசுகிசுப்பது போன்றதொரு உணர்வில் உடல் புல்லரித்துப் போனாள். வனிதா ஏஜன்ஸியின் தலைவர் விரலால் சுட்டிக்காட்டிய பிரம்பு நாற்காலியில் மெல்ல உட்கார்ந்தாள்.

கட்டிடம் என்னவோ புதிதாக சுவரின் சாயம் வைத்த கறைபடாது சுத்தமாகத் தெரிந்தது. ஆனால் அதில் போடப்பட்டிருந்த மேஜை நாற்காலிகள் மிகவும் பழையதாகத்

தெரிந்தன. தரையில் விரித்திருந்த கம்பளத்தின் ஓரம் நைந்து நூல் பிரிந்து காணப்பட்டது.

பொழுது போகாதிருக்கும் போது படிக்கவென்று பழைய புத்தகக் கடையொன்றில் ஒரு கட்டு ஆங்கில வார மாத இதழ்களை வாங்கியிருந்தாள். ஹாஸ்டல் சாப்பாட்டு நேரத்திற்கு முன்னர் தோட்டத்தில் கிடந்த ஒரு கல் தூண் மீது உட்கார்ந்து படித்தபோது, சில திடுக்கிடும் தகவல்களைத் தெரிந்து கொண்டிருந்தாள்.

ஏஜன்சி என்று பத்திரிகையில் விளம்பரம் கொடுத்துவிட்டு அழகான பெண்களை அசிங்கமான வியாபாரத்திற்குக் கடத்திச் செல்லும் ஒரு கூட்டம் இப்பொழுது நகரத்தில் பல இடங்களில் பரவலாகி விட்டிருக்கிறது. டெல்லியில் நடந்ததொரு கதையை மிகவும் சோகம் சொட்ட ஆசிரியர் வார்த்தைகளில் வர்ணஜாலம் கொடுத்துத் தீட்டியிருந்தார். ஏமாந்து போன அந்தப் பெண்ணின் புகைப்படமும் இருந்தது.

திடீரென்று அந்தப் பத்திரிகைச் செய்தி படம்போல முன்னால் விரிந்து நிற்க, காவேரியின் உடல் பயத்திலே நடுங்கத் தொடங்கியது.

மேஜைக்குப் பின்னால் இடது கையை முகவாயில் வைத்தபடி உல்லாசமாகச் சாய்ந்து கொண்டிருந்த அவன் பார்வையில் விஷமம் தெரிந்ததே ஒழிய அனுதாபத்தைச் சிறிதளவும் காணவில்லை. இன்னமும் புரியாத குழப்பம் நிறைந்த புதிய ஊர். யாரையும் நம்பி எதிலும் இறங்க முடியாத நிலை... கையில் அதிகப் பணம் இல்லை என்றதொரு பயங்கர உணர்வு:... இந்த மாதிரியான இக்கட்டில் முன்பின் தெரியாதவனிடம் வேலை கேட்டு என்ன பயன்? உண்மையில் வேலைக்குத்தான் அவன் ஆள் தேடுகிறானா அல்லது அந்தப் பத்திரிகையில் வந்த கதைப்படி... அழகான பெண்களை அபேஸ் பண்ணி...

''ஏஸ்... ஒன்னுமே பேசலையே?... எங்கே வந்தீங்க...'' ஏகாந்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் நாட்டில் டி.வி. காட்சியில் அவள் பார்த்த சில ஆங்கிலப்படத் தொடர்களில் வருகின்ற ஒரு வில்லன் போல அவளது கண்களில் அவன் படவே.. சட்டென்று எழுந்தாள். நாள்கள் தள்ளாடின.

தைலான் கயிற்றைப் போட்டுக் கழுத்தை இறுக்கிவிடுவானோ என்ற பயத்தில், ''தவறாக இடம் மாறி வந்து விட்டேன் மன்னிக்கவும்.'' நாசூக்காகச் சொல்லி விட்டுக் கதவைத் திறந்துகொண்டு நடைமீது வேகமாக ஓட்டமும் பாய்ச்சலுமாக விரைந்தாள்.

லிஃப்டிலிருந்து கீழ்த் தளத்திற்கு வந்து கட்டிடத்தை விட்டுவெளியேறி, கசமுசவென்று நடைபாதை மீது இடித்துக் கொண்டு சென்ற கும்பலுடன் கலந்து கொண்டு வெளி உலகக் காற்றைச் சுவாசித்த பின்னர்தான் அவளுக்கு உயிர்வந்தது.

ஒரு சில தினங்கள் அவள் ஹாஸ்டலிலேயே தங்கி யிருந்தாள். வேலைதேட வெளியே போகக்கூட அவளுக்கு அச்சமாக இருந்தது. பழைய புத்தகக் கடையில் வாங்கிவந்த அந்தப் பத்திரிகைகள் அனைத்தையும் அவள் விடாது படித்து முடித்தபோது, தாய்நாட்டின் உருவம் அவளுக்கு வேறு தினுசாகத் தெரிந்தது.

எங்கு திரும்பினாலும் கொள்ளை-கொலை-கற்பழிப்பு... என்பதுபோலப் பயங்கரமான உண்மைச் சம்பவங்கள் பல கதைபோல சம்பந்தப்பட்டவர்களுடைய படத்துடன் வெளியிடப்பட்டிருந்ததைப் படித்தபோது அவள் மிகவும் கலவரத்தில் பாதிக்கப்பட்டுவிட்டாள்.

இப்படித்தான் அவளது நாட்டிலும் வீட்டில் உள்ள கலர் டி.வி. யில் கோஜாக், சைமன் டெம்ளர், வேர் வுல்ஃப் இன் வாஷிங்டன் என்ற சில கதைகளைப் பார்த்துவிட்டு, இரவு

நேரத்தில் டி.வி.யை மூடிவிட்டுக் குளியலறைக்கு முகங்கழுவி இரவு உடை அணியச் செல்லும்போது அவளுக்கு ரொம்பவும் பயமாக இருக்கும். வெண்டிலேட்டர் வழியே யாரோ ஒருவனின் தலைதெரிவது போன்ற ஒரு பிரமிப்பில் ஒரு சமயம் ஓவென்று அலறிக் கூச்சலிட்டு அண்ணனது வசவுக்கு ஆளாகிப் போனாள்.

''நான்சென்ஸ் ஸ்டுப்பிட்! ஒரு சுண்டெலி! அதைப் பார்த்துவிட்டு இப்படியா கத்துவே. நீ ஒரு நர்ஸ் என்றால் யாரும் நம்பமாட்டாங்க. காயங்களையும் அதில் வடியும் ரத்தத்தையும் பார்த்துக் கலங்காம இருக்கவேண்டியவள்!'' அண்ணி யசோதா ஏளனமாக இரைந்தாள்.

பழைய பத்திரிகைகள் தந்த பாதிப்பில் அவள் சில நாட்கள் வேலை தேடும் வேட்டையைக் கைவிட்டுப் பொழுதைப் போக்க இங்குமங்கும் வெளியே போய்வந்தாள்.

காலம் வேகமாக நகர்ந்தது-காசும் கரைந்தது. அவள் உடல் இளைத்து உள்ளம் சோர்ந்து போனது.

★ ★ ★

மறுபடியும் தெம்பையும் துணிவையும் கூட்டிக் கொண்டு இன்னொரு விளம்பரத்தைக் கண்டுவிட்டு நேர்முகத் தேர்வுக்காக ஒருநாள் காலை புறப்பட்டாள்.

பாரிமுனையில் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கடற்கரை ஓரமாக இருந்த பெரிய கட்டிடங்கள் நடுவே தெரிந்த தெருவுக்குள் நுழைந்து பத்திரிகை விளம்பரத்தில் கண்டிருந்த முகவரியைத் தேடிக்கொண்டு குறுக்கேயிருந்த ஒரு சிறு தெருவுக்குள் நுழைந்து அருகிலிருந்து இடதுபக்கமாக ஓடிய ஒரு சிறு சந்தின் வாயிற்புறத்தை அடைந்தபோது அவளது உற்சாகம் பொடியாகியது.

முதலில் பார்த்த இடமாவது புத்தம் புதிய கட்டிடத்தின் மேல் மாடியில் இருந்தது... அண்ணாசாலையருகே.. நகரத்தின் வசதிகள் மிக்கதொரு பகுதியில் அமைந்த இடம்.

இது... எங்கேயோ ஒரு இருட்டுச் சந்தில்...சே! சே! குழந்தையே சரியாக இல்லை. உள்ளே போனால் திரும்பி வர முடியாது போய்விட்டால்... பத்திரிகைகளில் படித்த கதையின் நாயகிகளுக்கு வந்த ஆபத்துக்கள் அனைத்தும் முன்னால் வந்து பயமுறுத்தவே, அவள் ஓட்டமும் நடையுமாகப் பாரிமுனையை அடைந்து நகரத் தயாராக இருந்த பஸ்ஸில் மூச்சிரைக்க ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

இன்னும் சில நாட்கள் வீணாகக் கழிந்தன.

★ ★ ★

திடீரென்று எதிர்பாராத ஒரு வாய்ப்பு அவள்முன் தானே வந்து நின்றது.

தோளில் பையும் கையில் நோட்டுப் புத்தகமுமாக ஹாஸ்டலின் வாயிலிலே அவளை ஒரு இளம்பெண் சந்தித்தாள்.

ஒப்பனைப் பொருள்கள் தயாரிக்கும் ஒரு பிரபல கம்பெனியிலிருந்து அவள் வருவதாகவும், புள்ளி விவரம் தயாரிக்கக் கிளம்பியிருப்பதாகவும் கூறினாள்.

அவள் உபயோகிக்கும் ஒப்பனைப் பொருள்களின் விவரம் கேட்டு அவள் ஒரு வெளிநாட்டுப் பெண் என்பதை அறிந்ததும், நெருங்கித் தோழமையுடன் உறவாடினாள்.

அவர்களது பிரபல நிறுவனத்தில் காவேரி ஏன் ஒரு வேலை ஏற்கக்கூடாது?

''புள்ளி விவரம் சேகரித்துத் தந்து ஆலோசனைகள் வழங்கினால் நாள் ஒன்றுக்குப் பதினெட்டு ரூபாய் சம்பளமாகக் கிடைக்கும். நாள் சம்பளந்தான், மாதச் சம்பளமில்லை. ஆனாலும் வேலை மோசமில்லை'' என்றாள்.

காவேரிக்கு முதலில் தோளில் பையும் கையில் நோட்டுப் புத்தகமும் பேனாவுமாக வீடு வீடாக ஏறி இறங்கிச் சில வீட்டுத் தலைவிகளின் வேலை நடுவே கரடியாக நின்று எரிச்ச லான வார்த்தைகளை வாங்கி மூட்டை கட்டிக்கொள்ள மனமில்லை.

இதென்ன வேலை...சம்பளம் பதினெட்டு ரூபாய்... நாள் கூலி... ஒரு ராண்டும் சில செண்டுகளும்... அவள் செய்யும் வேலை பற்றி அவள் நாட்டைச் சேர்ந்த யாராவது கேள்விப்பட்டால்?...

வெட்கத்துடன் முதலில் மறுத்துவிட்டாள். நீண்ட யோசனைக்குப் பின்னர் அந்த வேலையை ஏற்றுக்கொள்ள முன் வந்தாள். புதுத் தோழி ராதிகா மூலம் புள்ளி விவரம் சேர்க்கும் வேலை அவளுக்குக் கிட்டியது.

உண்மையில் அது ஒரு பிரபலமான கம்பெனிதான். அதில் வேலை பார்த்தவர்கள் அவளிடம் மரியாதையாகத்தான் நடந்து கொண்டனர். அவளுக்குத்தான் வீடு வீடாகச் சென்று கதவைத் தட்டி, இல்லத்தரசிகளிடம் விஷயங்களைச் சேகரிப்பது பெரும்பாடாக இருந்தது.

வாரத்தில் நான்கு நாட்களுக்கு மட்டுமே வேலை. மாலை அலுவலகத்தில் சேகரித்த சங்கதியைத் தாளில் எழுதிக் கொடுத்தவுடன் கணக்கரிடம் சம்பளம் கேட்டு வாங்கிக்கொண்டு வெளிநடக்க முடிந்தது.

★ ★ ★

தோளில் பையும் கையில் புத்தகமுமாக ஒருநாள் அவள் திருவல்லிக்கேணியில் ஒரு பகுதியிலிருந்ததொரு தெருவுக்குள் நல்ல வெய்யிலில் நடந்து கொண்டிருந்தபோது, ''காவேரி!'' என்று யாரோ கூப்பிட்டதைக் கேட்டுத் திரும்பினாள்

ஆப்பிரிக்காவில் அவர்கள் வசித்த பகுதியில் அடுத்த தெருவிலிருந்த செந்தாமரையம்மாள்தான் அவளைக் கூப்பிட்டது.

சாதாரணமாக அவள் நாட்டு இந்தியர்கள் டிசம்பர் மாதத்தின் போதுதான் கூட்டம் கூட்டமாகத் தாய் நாட்டிற்குக் கச்சேரி கேட்கவும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கவும் வருவார்கள். வெய்யில் காலம் துவங்கி விட்டதும் யாரும் தாய்நாட்டுப் பக்கம் தலை நீட்ட மாட்டார்கள். வெய்யிலைக் கண்டால் அத்தனை பயம்!

''என்னம்மா காவேரி... அண்ணனோட கோவிச்சுக்கிட்டு நீ ஊரைவிட்டே இங்கே வந்துட்டியாமே. வேலையைக்கூட விட்டுட்டியா...? ஆமாம், இது என்ன பை... இந்த ஊரில் வந்து சோப்புத்தூள் விக்கிற வேலையிலா சேர்ந்திருக்கே, அட கஷ்டகாலமே...உங்கண்ணன் காதில் பட்டால் வெட்கம் தாங்காமே அது தற்கொலை செஞ்சுக்குமே?''

படபடவென்று பேசியபடியே வியர்வை படிந்த தன் முகத்தை வைத்து அவளது முகத்தில் அழுத்திக் கன்னம் கனிய முத்தமிட்டாள் செந்தாமரை அம்மாள்.

'அட கடவுளே! செந்தாமரைக்கு உண்மை தெரிந்தால் போதுமே...டர்பன் நகருக்கே நாளை செய்தியைக் காற்றின் மூலம் ஒலிபரப்பிவிடுவாளே! வம்புக்காரியென்று பிரசித்தமான இவளிடமா அகப்பட்டுக் கொள்வது? காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாது என்பாங்களே சவுந்தரி அண்ணி, அதுபோல ஆறாயிரம் மைலுக்கு அப்பால் வந்தும்...இங்கேயுமா இவள் வாயில் விழுந்து புரளணும்.'

கலங்கிப் போனாள் காவேரி.

36

புள்ளி விவரம் சேகரிக்கும் வேலை தற்காலிகமானது. எனவே ஒரே வாரத்தில் வேலை முடிந்ததும் அந்த நிறுவனத்தார் நாள் சம்பளத்தைக் கணக்கிட்டுக் கொடுத்து அனுப்பிவிட்டனர்.

மறுபடியும் காவேரி நல்ல வேலையைத் தேடும் மும்முரத்தில் கொளுத்தும் வெய்யிலில் பஸ்ஸிலும் ஆட்டோவிலும் அலைந்து கொண்டிருந்தாள். கையிருப்பு வேகமாகக் குறைந்து கொண்டு வந்தது. உடலும் மனமும் சோர்ந்து போயின.

ஆப்பிரிக்காவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் யாரையாவது சந்திக்க நேர்ந்துவிட்டால்-அதுவும் மிகவும் தெரிந்தவர்களைச் சந்திக்க நேர்ந்துவிட்டால்-அவர்கள் ஊருக்குத் திரும்பியதும் முதல் வேலையாக அவளைப் பற்றிப் பேசத் தயங்கவே மாட்டார்கள் என்ற அச்சம்.

''காவேரியைப் பார்த்தேன். சென்னை சிந்தாதரிப் பேட்டையிலே ஒரு நெருக்கமான தெருவிலே குடைகூட இல்லாம வெய்யில்லே நடந்து போயிட்டு இருந்தா. இப்போ நீ அவளைப் பார்த்தா அடையாளம் கூடக்கண்டுக்க முடியாது. துரும்பா இளைச்சு கருத்துப்போய் ஒரு பரதேசியைப் போல... ரொம்பவே மாறிவிட்டிருக்கா. ஆமாம், கை நிறையச் சம்பளம் கிடைச்ச நர்ஸ் வேலையை விட்டுட்டு இவ எதுக்காகத் தாய்நாட்டிலே போய் இப்படித் தெருத் தெருவா அலையறா? இதிலே என்னவோ சூட்சமம் இருக்கு...''

இப்படி ஒரு கதை நெருப்பாக பரவிப்போகும். தாமோதரன் அவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டால்...?

நினைத்து நினைத்துக் கலங்கிப்போன காவேரி தெருவில் சற்றுத் தூரத்திலே வெளிநாட்டவர்களது கும்பலைக் கண்டு விட்டாள். அவர்கள் சிங்கப்பூரிலிருந்து வருகிறார்களா, இலங்கைத் தமிழர்களா, மலேசியாவிலிருந்து வந்தவர்களா என்று ஆராயக்கூட நேரமின்றித் தலைமீது புடவையை முக்காடாக இழுத்துப் போட்டுக்கொண்டு வேறு திசைப்பக்கம் வேகமாக நடக்கலுற்றாள்.

அன்றாடம் வெளிவந்த பத்திரிகைகளில் தேவை என்ற விளம்பரங்கள் பத்திபத்தியாக வெளிவந்தன.

அருகில் சென்று விசாரித்தபோது, இடமில்லை என்று சில இடங்களில் தெரிவித்தனர். இன்னும் சில இடங்களில் அவளுக்கு அந்த வேலையை ஏற்கத் தகுதிகள் இல்லை என்று கூசாது இடித்துச் சொல்லி அனுப்பிவிட்டனர்.

தாய்நாட்டில் படித்தவர்களுக்கு, உழைக்கத் தயாராக இருக்கும் இளவயதினருக்கு வேலை கிடைப்பது இத்தனை ஒரு கடினமான காரியமா? படித்திருந்தும்-பட்டங்கள் பெற்றிருந்தும் வேலை கிடைக்காத கொடுமையினால் பட்டினியையும்-பசியையும் நீடித்துச் சகித்துக்கொள்ள இயலாத இளைஞர்கள் கூட்டம் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு விடுகின்றனரோ?

'நல்லவர்களாக, தன்மானமுள்ளவர்களாக வாழ நினைப்பவர்களைக் கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்றங்களில் இறங்க செய்வதற்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு முக்கிய காரணமோ?

ஒழுக்கமுடையவர்களாக வாழ விரும்பும் பெண்களையும் வேலையில்லாத கொடுமை அசிங்கமான தொழிலில் ஈடுபடுத்தி அவலப்படுத்தி விடுகிறதோ...?

அவள் வசித்த நாட்டில் வேலைக்காக அவள் இப்படி நாள் முழுவதும் நாய்போல வெய்யிலில் அடிபட்டு ஏன்னவார்த்தைகளை விழுங்கிக்கொண்டு ஏமாற்றத்துடன் திரியத் தேவையே இருந்திருக்காது...நர்ஸ் பயிற்சிக்குப் படிக்காதவளாக இருந்தாலும், ஹைஸ்கூல் படிப்பைக்கூட முடிக்காதவளாக இருந்தாலும், ஏதாவது ஒரு தொழிற்சாலையில் வாரக்கூலிக்கு நல்லதொரு வேலை கிடைத்துவிடுமே...

வார முழுவதும் வேலைபார்த்துவிட்டு வெள்ளிக்கிழமை மாலை கிடைக்கும் சம்பளத்திலே வீட்டுச் செலவையும் சமாளித்துகொண்டு-அழகாக உடுத்த விதவிதமான துணிகளை வாங்கி பீரோவில் அடுக்கிக்கொள்ளலாம். வார இறுதியில் கிடைக்கும் சனி-ஞாயிறு என்ற: இரண்டு ஓய்வு நாட்களை எத்தனை சுகமாகக் கழிக்கலாம்!

காரில் பல மைல்கள் பெட்ரோலைத் தண்ணீராக ஊற்றிக்கொண்டு டிரைவ் போய் வரலாம்.

கடற்கரையில் தோழிகளுடன் சமுத்திர ஸ்நானம் செய்து பிக்னிக் செய்யலாம்.

சனிக்கிழமை காலை ஒரு தமிழ்ப் படமும் இரவு ஒரு ஆங்கிலப் படமும் பார்க்கலாம்.

ஞாயிற்றுக்கிழமை வைத்தியநாதர் கோவில் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு உற்சாகமாகப் பாடி விட்டுப் பொங்கலும் பாலும் பிரசாதமாகப் பெற்றுக்கொண்டு தோழிகளுடன் பேசி மகிழலாம்.

கடைத்தெருவில் கண்ணாடியில் வைத்திருக்கும் அலங்காரப் பொருட்களை இரவுச் சாப்பாட்டிற்குப்பின் போய், விண்டோ ஷாப்பிங் செய்யலாம். இன்னும் எத்தனையோ வழியில் அந்த இரண்டு நாட்களையும் இனிமையாகக் கழிக்கலாம்.

ஆனால் தாய்நாட்டில் ஓய்வுநாட்கள் வருகின்றனவே என்று அவள் கவலைப்பட்டாள்.

ஹாஸ்டலில் உள்ள மற்றப் பெண்கள் குளியலறையை அடைத்துக்கொண்டு லேசில் வெளிவராது அவளைக் காக்க வைத்தனர்.

சாப்பாட்டறையிலும் தோட்டத்திலும் கும்பலாக உட்கார்ந்து சளசளவென்று பேசினர். காதுசெவிடாகும்படி டிரான்சிஸ்டர்களைக் கத்தவிட்டனர்.

யாருடனும் நெருங்கித் தோழமை கொள்ளாத காரணத்தாலும்-வெளிநாட்டுக்காரி என்கிறதினாலும் அவளைக் கண்டு மற்றவர்கள் ஒதுங்கிப்போயினர்.

தோழிகள் என்று அவளுக்கு யாருமே அங்கு ஏற்படவில்லை.

அதன் பயன் தனிமை; மிகக் கொடுமையான தனிமை. வேலையில்லை என்ற பயங்கர உணர்வு-கைக்காசு கரைந்து கொண்டு வருகிறதே என்ற அச்சம்...

அன்று இரவு உறக்கமின்றி அவள் படுக்கையிலே கட்டைபோல உடலைக் கிடத்திக்கொண்டு கூரை முகட்டைப் பார்த்தபோதுதான் அந்த யோசனை அவளுக்குத் தோன்றியது.

சென்னை என்ன அவளது முப்பாட்டன் ஊரா? ஏன் தொடர்ந்து இங்கேயே தங்க வேண்டும்? தமிழ்நாட்டின் வேறு மாவட்டங்களைப் பார்க்க வேண்டாமா?

மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற முக்கிய நகரங்களைச் சுற்றிப் பார்த்துவர அவள் ஏன் ஒரு சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ளக்கூடாது? இந்த நகரங்களில் ஒரு சமயம் வேறு ஒரு நல்ல ஆசிரமம் கிடைத்து விட்டால்? அங்கேயே தங்கிக்கொள்ள முயற்சி செய்யலாமே? ஒரு சமயம் அங்கே ஏதாவது கம்பெனியில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை கிடைத்தாலும் கிடைக்கலாமே? சென்னையிலேயே தங்கிக்கொண்டு ஹாஸ்டலுக்குத் தண்டமாகச் செலவிடுவதை விட அவள் சுற்றுலா கிளம்புவதுதான் சரி.

இதற்கிடையில் அவள் இன்னொரு காரியமும செய்தாக வேண்டும். சுற்றுலாவுக்குப் போன இடத்தில் ஒரு நல்ல வேலையோ, அல்லது தங்கி வாழ ஒரு அமைதியான ஆசிரமமோ கிடைத்துவிட்டால் அங்கிருந்து அவள் தன் நர்ஸ் வேலையைப்பற்றி ஒரு முடிவு செய்து, வேலை செய்த டிபார்ட்மெண்டுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டியது அவசியம்.

அவள் எடுத்துக்கொண்ட லீவு நாட்கள் வேகமாக ஓடிக் கரைந்து கொண்டிருக்கின்றன. மேலே தொடர்ந்து சம்பளமில்லாது இன்னும் ஆறுமாதம் லீவு தேவை என்று எழுதிப் போட்டால்...ஒரு வருஷ காலத்திலே ஓரளவு தமிழ்நாட்டின் வாழ்க்கையும் போராட்டங்களும் பழகிவிடும். மனதுக்குப் பிடித்த ஒரு ஆசிரமம் கிடைத்து விட்டால்?அவள் ஆப்பிரிக்காவுக்குப் போக வேண்டிய அவசியம்?

★ ★ ★ ★

அடுத்த நாள் காலை உணவிற்குப் பின்னர் அவள் சந்திரசேகரைப் பார்க்க அலுவலக அறைக்குச் சென்றாள்.

முன்பணமாக மூன்று மாதத்திற்கு ஒட்டுமொத்தமாகக் காசை வாங்கிக் கொண்டுவிட்ட திருப்தியில் மனிதன் அவளைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்.

'இன்னைக்கு எந்த கம்பெனிக்கு வேலை தேடிப் போறாப்பல?' அறியும் ஆவலில் கேட்டார்.

''சென்னையிலேயே தங்கி ரொம்பவும் அலுத்துப் போய்விட்டது. அதனாலே தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்க ஆவலாக இருக்கு. அது சம்பந்தமாகச் சில டிராவல் ஏஜண்டுகளைச் சந்தித்து விசாரித்துவிட்டு வர நினைக்கிறேன்.''

சந்திரசேகர் சட்டென்று முகம் சுருங்கிப்போனார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''இரண்டு வாரம் அல்லது மூன்று வாரம் வெளியே சுற்றுலாவுக்குப் போக நேரிடும். அதுவரையில் என் பெட்டி முதலியவற்றைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லத்தானே வந்தீங்க...'' மெல்லக் கேட்டார்.

''இல்லை சார். வெளியே நான் கிளம்பினால் திரும்பிச் சென்னைக்கு வரும் யோசனை இல்லை. அப்படியே சேலம், கோயம்புத்தூர் போன்ற ஏதாவது ஒரு பெரிய டவுனில் தங்கி வேலை தேடிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். அதனால் ஹாஸ்டலுக்குச் சேரவேண்டியதைக் கட்டிவிட்டு மீதியைத் திரும்ப வாங்கிக்கொண்டு நாளை மறுநாள் புறப்படலாம் என்று யோசிக்கிறேன்.''

சந்திரசேகரின் முகம் கடுமையாகியது. ஆனாலும் வழக்கமாகப் பற்கள் தெரியும் மெல்லிய சிரிப்பை உதிர்த்தார்.

''டிராவல் ஏஜண்டுகளைச் சந்தித்துப் பயணத்திற்கு வேண்டியதெல்லாம் முடித்துக்கொண்டு பின்னர் வாருங்கள். கணக்கைத் தீர்த்துக் கொள்ளலாம்'' என்றார் அதட்டும் குரலில்.

ஆமாம் இந்த மனிதருக்கு ஏன் திடீரென்று கோபம் வருகிறது? அப்படி என்ன தவறான சங்கதியைச் சொல்லிவிட்டோம் என்று எண்ணியபடி வெளியே புறப் பட்டாள்.

பத்திரிக்கையில் அவள் படித்த விளம்பரத்தைக் கண்டு அண்ணா சாலையிலிருந்ததொரு டிராவல் ஏஜன்சியை அணுகினாள்.

தென்னாட்டுச் சுற்றுப்பயணமா? பஸ்ஸில் போய் சரிப்பட்டு வராது. அமைதியா இடங்களைப்பார்க்க வேணுமென்றால் நாலைந்து பேர் அடங்கிய கூட்டத்தோடு போவது தான் நல்லது. இன்னும் இரண்டு தினங்களில் அவர் ஒரு அம்பாசிடர் டூரிஸ்ட் டாக்ஸிக்கு ஏற்பாடு செய்து, அதில் நான்கு பெண்களை க்ஷேத்திராடனத்திற்கு அனுப்பப் போகிறார். அவளுக்கு மறுப்பு இல்லை என்றால் ஐந்தாவதாக அவள் கலந்து கொள்ளலாமே.

ஒரு கணம் காவேரி கவலையுடன் மௌனமாக அந்த அலுவலரை வெறித்தாள்.

ஆப்பிரிக்காவிலிருந்து வருகின்ற பயணிகள் இப்படித் தான் நான்கு ஐந்தாகப் பிரிந்து ஒரு டூரிஸ்ட் டாக்ஸி வைத்துக் கொண்டு ஊர்களையும் கோயில்களையும் சுற்றிப் பார்க்க கிளம்புவது வழக்கம்.

அவளது நாட்டிலிருந்து-அதுவும் டர்பனிலிருந்து வந்திருக்கும் கும்பல் ஏதாவது ஒன்றில் அவள் மாட்டிக் கொண்டு விட்டால்...?

''எல்லோரும் நல்லா படிச்சவங்க. உத்தியோகம் பார்க்கிற பெண்கள். மூணு பேர் பம்பாயைச் சேர்ந்தவங்க ஒரு அம்மா டெல்லியிலிருந்து வராங்க! எல்லோரும் தமிழ்ப் பெண்கள். நான் அமர்த்தப் போகும் டாக்ஸிக்காரர் ரொம்ப நல்ல மனிதர். நல்ல காரா பார்த்து நல்ல டிரைவரா பார்த்து அனுப்புவார். அனுபவமிக்க டிரைவருக்கு உங்களை எல்லாம் எங்கே கொண்டு போய்த் தங்கவைக்கிறது, எந்தெந்த இடங்களைப் பார்க்க உதவுவது என்று தெரியும். அவரை நம்பி நீங்க பயப்படாம கிளம்பலாம்.''

அவளுக்குத் தெரிந்தவர்கள்... அவள் ஊர்ப் பெண்கள் யாரும் இல்லை என்ற செய்தி அவளுக்கு நிறையத் தெம்பைக் கொடுத்தது.

ஒரு சின்னக் கூட்டத்தில் ஊரைச் சுற்றிப் பார்ப்பது எளிது. பஸ் கொண்ட மட்டும் உள்ள ஒரு பெரிய கோஷ்டி யுடன் கிளம்பினால், ஊர்களை நிதானமாக பார்க்க இயலாது போய்விடலாம்.

பலவும் எண்ணி அவர் கொடுத்த விளம்பரத் தாள்களை நின்று நிதானமாகப் படித்தாள்.

அந்தச் சுற்றுப் பயணத்தில் அவர்கள் எந்தெந்த ஊர்களுக்குப் போகப்போகிறார்கள், எத்தனை நாள் பிடிக்கும், என்ன செலவாகும் என்று அவர் விரிவாக அவளுக்கு எடுத்துரைத்தபோது கொஞ்சம் பயந்து விட்டாள்.

அவள் கணக்குக்குக் குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் பயணத்திற்குக் கட்டவேண்டி வரும். மற்றபடி சாப்பாடு, இதர செலவுகளை அவரவர் ஏற்க நேரும் என்றார் அந்த மனிதர்.

அவளிடம் எஞ்சி இருந்தது இரண்டாயிரம் ரூபாய்தான். பயணத்திற்குச் சம்மதப்பட்டால் டாக்ஸிக்கு உண்டான இரண்டாயிரத்தை முதலில் கட்டிவிட வேண்டும். ஒரு சமயம் பயணச் செலவு குறைவாக இருந்தால் மீதியைத் திருப்பித் தந்து விடுவார்கள். கொஞ்சம் கூடுதலாக இருந்தால் தந்து விடவேண்டும். புன்முறுவலித்தார். இனி யோசித்துக் கொண்டு தண்டச் செலவு செய்த வண்ணம் சென்னை மிலேயே தங்கியிருப்பதில் பயன்?...

பையிலிருந்த பணத்தை எண்ணி அவரது மேஜைமேல் வைத்து விட்டு ரசீதைப் பெற்றுக்கொண்டாள்.

புதன்கிழமை காலை பத்து மணிக்கு அவள் மற்றவர்களை அந்த அலுவலகத்தின் முன் சந்திக்கவேண்டும் என்பது ஏற்பாடு.

சென்னையை விட்டு வெளிப்பக்கம் போய், வந்தாலே தலையை இறுக்கமாக அமுக்கும் உணர்ச்சிகளின் அழுத்தம் சற்றுக் குறையும் போன்றதொரு பிரமையில் அவள் சிறிது உற்சாகத்துடன் ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தாள்.

பகல் உணவிற்குப்பின் உடனடியாக அவள் சந்திரசேகரைப் பார்க்க இயலவில்லை. அன்று மாலை அவர் தமது காரியமாக எங்கேயோ வெளியே போயிருந்தார்.

அதனால் மறுநாள் காலைவரை அவரைச் சந்தித்துப் பேசக் காத்திருக்க நேர்ந்தது.

காப்பி பலகாரத்திற்குப் பின்னர் அலுவலக அறைக்குள் நுழைந்தாள்.

''யெஸ் என்ன ஆச்சு?'' போலியான புன்முறுவலுடன் ஹாஸ்டலின் தலைவர் வரவேற்றார். அவரது மனைவி எப்பொழுதும்போல மண்பொம்மையாக அருகில் அமர்ந்திருந்தாள்.

''சுற்றுலாவுக்கு ஏற்பாடு பண்ணிப் பணமும் கட்டிவிட்டு வந்து விட்டேன். வருகிற புதன் அன்று ஹாஸ்டலைக் காலி பண்ணிக் கொண்டு கிளம்பிடுவேன்.''

''அப்படியா, அயாம் ஸாரி. ஒரு நல்ல ஹாஸ்டல் வாசியை நான் இழக்கப் போகிறேன் என்று வருந்துகிறேன்.''

''மூன்று மாதவாடகைப் பணம் முன்பணமாகக் கட்டியிருக்கிறேன். இந்த மாதத்திற்குச் சேரவேண்டியது போக மீதி இரண்டுமாதப் பணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டுமென்று கேட்கத்தான் வந்தேன்.''

காவேரி முடித்ததும்-மனிதன் கோபத்துடன் நிமிர்ந்து அவளை எரிச்சலுடன் பார்த்தார்.

''நீங்க இந்த ஹாஸ்டலில் சேர வந்தபோது இதன் விதிகள் அடங்கிய ஒரு தாளில் கையெழுத்துப் போட்டீர்களே ஞாபகம் இருக்கா?''

காவேரிக்கு ஒரே திகைப்பு! அதற்கும் அவள் திருப்பிக் கொடுக்கக் கேட்கும் முன்பணத்திற்கும் என்ன சம்பந்தம்.

தனது கையருகேயிருந்ததொரு ஸ்டீல் அலமாரித் தட்டிலிருந்து ஒரு ஃபைலைத் தூக்கி மேஜைமீது போட்டார்.

ஹாஸ்டலில் தங்கும் ஒவ்வொருவருக்கும் நாள் உடனடியாக ஒரு ஃபைல் திறந்து விடுவது வழக்கம். அவர்கள் கொடுக்கும் பணம், பாக்கி, வைத்தியச்செலவு, அதிகப் படியான உணவு வகைகள் சாப்பிட்டதின் பில் எல்லாவற்றையும் பத்திரமாக இதற்குள் வைப்பது வழக்கம். உங்கள் ஃபைலில் நீங்கள் ஆரம்பத்தில் கையெழுத்துப் போட்ட ஒப்புதல் தாள் இருக்கிறது. அதைப் படித்துப் பாருங்கள்.'' அதிகாரமான குரலில் அதட்டினார்.

காவேரி அவசரமாக ஃபைலைத் திறந்து அந்தத் தாளை எடுத்துப் படித்தாள். அவளுக்குத் தலை சுற்றியது. குறைந்த பட்சம் ஒரு ஆறு மாதமாவது அந்த ஹாஸ்டலில் தொடர்ந்து தங்குவேன் என்றும், அப்படி அவசரமாக வெளியேற நேரிட்டால் அதற்குண்டான தொகையைக் கட்டிவிட ஒப்புக் கொள்கிறேன் என்றும் பொடி எழுத்திலே அச்சாகியிருந்த கடைசி வரிகளை அவள் ஏன் அன்று அங்கே வந்த முதல் நாள் சரிவரப் படிக்கவில்லை?

இடம் கிடைத்தால் போதும் என்கிற அவசரத்தில் ஏற்பட்ட அசட்டையா?

தனது தூக்குத் தண்டனைக்குத் தானே கையெழுத்துப் போடுவது போல அதில் கையெழுத்துப் போட்டு நன்றாக மாட்டிக் கொண்டிருக்கிறாளே!

''அப்படின்னா நான் கொடுத்த பணத்தைத் திருப்பித் தரமாட்டீங்கன்னு சொல்றீங்களா?'' துன்பத்தை விழுங்கிக் கொண்டு திகிலுடன் கேட்டாள்.

''நீங்க இங்கே வந்து தங்க ஆரம்பித்து ஒண்ணரை மாதந்தான் ஆகிறது. மூன்று மாதத்துக்குத்தான் முன் பணம் கொடுத்திருக்கிறீங்க. இந்த மாதத்தின் கடைசியில்தான் பில் தயாராகும். இன்னும் இரண்டு மாதங்களுக்காவது நீங்கள் பணத்தைக் கட்டிவிட்டுத்தான் இங்கிருந்து போக முடியும்.''

உதட்டைக் கடித்துக்கொண்டு தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளத் தரையைப் பார்த்தாள் காவேரி.

''அப்படியே செய்கிறேன் சார். உங்ககிட்ட நான் கொடுத்த அந்த பிளாஸ்டிக் பையைக் கொடுங்கள். அதில் என் பாஸ்போர்ட்டும் மற்ற முக்கிய கடிதங்களும் இருக்கும். அதில் என் கழுத்துச் சங்கிலியையும் ஒரு சிறு தங்க மோதிரத்தையும் வச்சிருக்கேன். அவைகளை விற்றாவது உங்கள் கடனை...''

முடிக்க முடியாது அவள் பரிதாபமாக அவரைப் பார்த்தாள்.

''உங்களை நம்பி நான் அவைகளைத் தரமுடியாது. உங்கள் அறையிலிருந்த உங்கள் பெட்டியையும் எடுத்து வைக்க ஏற்பாடு செய்துவிட்டேன். முதலில் பணத்தை கொண்டு வந்து கட்டிவிட்டு அவைகளை வாங்கிக்கொண்டு போகலாம்.''

கடுமையாக, கோபமாகப் பேசினார் சந்திரசேகர்.

சங்கிலியையும் மோதிரத்தையும் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளட்டும். பாஸ்போர்ட் இல்லாவிட்டால் அவள் என்ன செய்வாள்?

தாமோதரன் சொல்லியிருக்கிறாரே-வெளியூரில் பயணப்படுகிறவர்கள் காசு பணத்தையோ நகையையோ பறிகொடுக்கலாம். அக்கறையில்லை. ஆனால் பாஸ்போர்ட்டை உயிர் போலப் பாதுகாக்கணும்.

உயிர் போன்ற பொருளை, சந்திரசேகரனைப்போல சூழ்ச்சிக்காரனை நம்பிக் கொடுத்தது எத்தனை தவறு? இப்போது அவள் என்ன செய்வாள்?

37

மூதாதையர் பிறந்த மண் என்று தாய்நாட்டை மிகவும் நம்பிக்கொண்டு பல எதிர்பார்ப்புகளுடன் அவள் தனியே பயணப்பட்டு வந்தது எத்தனை பெரிய தவறு?

சந்திரசேகர் இவ்வளவு மட்டமான ஒரு மனிதனா?

பிளாஸ்டிக் பையில் தங்கச் சங்கிலியுடன், ஒரு தங்க வளையலையும் மோதிரத்தையும் போட்டு வைத்திருந்தாளே?

சட்டென்று தோள்பையைத் திறந்து ஒரு சிறு தடுப்புக்குள் மடித்து வைத்திருந்த குறிப்புக் கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

''சார், நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். அந்த பிளாஸ்டிக் பையை எடுத்துத் திறந்து அதிலுள்ள சங்கிலி, வளையல், மோதிரம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு என்னுடன் கூடவே ஒரு நகைக்கடைக்கு வாருங்கள். அவைகளை விற்று வருகின்ற பணத்தில் உங்களுக்குச் சேர வேண்டியதை எடுத்துக்கொண்டு மீதியிருப்பதை என்னிடம் தந்து, என் பாஸ்போர்ட் முதலியவற்றையும் கொடுத்துவிடுங்கள். நான் போய்விடுகிறேன்.''

மிகவும் தாழ்மையாகக் கெஞ்சும் குரலில் குழைவாகக் கேட்டாள்.

''இதோ பார் மிஸ். காவேரி. என்னிடம் நீ கொடுத்த பொருள்களுக்கு நான் ரசீது ஏதாவது கொடுத்திருக்கேனா சொல்?''

நீங்கள் என்று மரியாதையாக இதுவரை அழைத்த மனிதர் ஒருமையில் பேசி அசட்டையாகப் பார்த்தார்.

''பிளாஸ்டிக் பையில் என் கழுத்துச் சங்கிலி, மோதிரம், வளை[illegible] முதலியவற்றையும் போட்டுக் கொடுத்திருக்கேன்.

குறிப்பு எழுதச் சொன்னீங்க. ஒரு காப்பி என்னிடம் இருக்கிறது. சந்தேகமானால் பாருங்க.''

''சரிதான் போ. முன்பு காதணியை யாரோ ரூம்மேட் திருடிக்கொண்டு விட்டதாகப் புகார் செய்ய வந்தே. இப்போ தங்கச் சங்கிலி, வளையல், மோதிரம் முதலியவற்றை என்கிட்டே கொடுத்தே. அவைகளைத் திருடிக் கொண்டு விட்டேன் என்று கதையா? பேஷ்...பேஷ்...! மீதிப் பணத்தை மரியாதையாகக் கொண்டுவந்து கட்டி விட்டுப் பழைய துணிகள் கொண்ட உன் பெட்டியையும், பாஸ்போர்ட் இத்யாதிகளையும் வாங்கிக்கொண்டு போகலாம். விணா இங்கே நின்றுகொண்டு என் வேலையைக் கெடுக்க வேண்டாம்!''

மிகவும் கடுமையாக அதட்டினார்.

காவேரி வெடவெடத்துப் போனாள்.

இதென்ன கொடுமை! இந்த மனிதன் இப்படித் திடீர் என்று ஒரு பொய்யைக் கூசாமல் சொல்கிறாரே?

கோபமும் அழுகையும் அவளுள் குமுறிக்கொண்டு வந்தன.

''சார் நீங்க என் பாஸ்போர்ட், நகை இவைகளைத் தர மறுத்தால் நான் போலீசில் புகார் எழுதித் தர நேரிடும். எச்சரிக்கிறேன்!''

ஆத்திரத்துடன் சீறினாள்.

சந்திரசேகர் பதிலுக்கு உரக்கச் சிரித்தார். ''பலே பலே! பார்த்தால் சாதுபோலத் தெரிகிறாய். பாய்ந்தால் புலியாக மாறிடுவாய் போலிருக்கு. ஆனால் நான் யார் தெரியுமா? சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது இந்தப் பனங்காட்டு நரி. நான் ஒரு பச்சைக் குழந்தையின்னு உன் எண்ணமா? போலீஸ்காரரைக் கூப்பிடுவேன், சாப்பிடு என்று அம்மா

மிரட்டுவாங்களே, அதைப் போல என்னைப் பயமுறுத்திப் பார்க்கிறியா? என்னைப்பற்றி நீ புகார் எழுதிக் கொடுத்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா?''

காவேரி கோபத்துடன் அவரை உறுத்துப் பார்த்தாள். என்ன செய்விங்க என்று அவளது பார்வை அதட்டியது.

''வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறாள்-வேலைக்குப் போய்வரும் பெண்-தனியாக இருக்கிறாள்-பாவம் என்று பரிதாபப்பட்டுக் கொண்டு கௌரவமான எங்கள் ஹாஸ்டலில் இடம் கொடுத்தேன். பிறகுதான் தெரிய வந்தது. இவள் வேலைக்குப் போய் வருவதில்லை. விபச்சாரத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கிறாள்னு புரிஞ்சுது. கண்ட கண்ட பசங்கள் இவளைத் தேடி வருகிறார்கள். கண்ட நேரத்தில் வந்து கதவைத் தட்டுகிறார்கள். எங்கள் ஹாஸ்டலின் மதிப்பும் கௌரவமும் இவளால் மண்ணாகிப் போய் விடுமென்று பயமாக இருக்கிறது. அதனால் காலி பண்ணச் சொன்னேன் என்று விவரமாக உன்மேல் ஒரு புகார் எழுதி வைத்துவிட என்னாலும் முடியும்.''

இடி விழுந்தாற் போன்று அதிர்ந்து போய்விட்டாள் காவேரி.

அப்படி அந்தக் கயவன் ஒரு கதையைக் கட்டிவிட்டால் அதனால் போலீஸ் விசாரிப்பு என்ற சிக்கல் ஏதாவது ஏற்பட்டு அவள் பெயர் பத்திரிகையில் வந்து விட்டால்... அந்தக் கதை விஸ்வரூபம் எடுத்து அவள் நாட்டிற்கு எட்டிவிடும்... அதற்குப்பின் அவள் எதையாவது சாப்பிட்டு உயிரை முடித்துக் கொள்ளலாம்.

காவேரி! எத்தனை சுகமாய் வாழ்ந்தாய்? காதல் ஏமாற்றத்தை தாளாது என்னென்னவோ எண்ணிக்கொண்டு தாய்நாட்டிக்கு வந்தாயே! பாரத நாடு பழம் பெரும் நாடு. காவேரியும்-கங்கையும் ஓடுவதால் புனிதமாக்கப்பட்ட

புண்ணிய பூமி என்று நம்பிக்கொண்டு தன்னந்தனியாகப் புறப்பட்டு வந்தாயே?

உன் கனவுகள் எப்படி குரூரமாகக் கலைக்கப்பட்டு விட்டன? பாவி மனிதன், பாஸ்போர்ட்டைத் தரமாட்டேன் என்கிறானே?

அடி வயிற்றில் வேதனை குடலை முறுக்க, கண்களில் நீர் புரள, சந்திரசேகரின் வார்த்தைகளால் அவமானத்தில் குறுகிப்போய் ஹாஸ்டலை விட்டு வெளியே வந்தாள்.

இப்படிச் செய்தால் என்ன? அந்த ட்ராவல் ஏஜன்சியில் கொடுத்த தொகையைத் திருப்பிக் கேட்டு, சுற்றுலாப் பயணத்திலிருந்து தன்னை விலக்கிவிடச் சொன்னால்? சந்திரசேகருக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்து விட்டால்... பாவி மனிதன் பாஸ்போர்ட் மற்ற முக்கிய காகிதங்களையாவது கொடுப்பார் இல்லையா! பாஸ்போர்ட்டைப் பெற்றுக் கொண்டு வெளியேறலாமே...

★ ★ ★

''எஸ்... என்ன வேணும்?'' புன்னகைத்தார் அந்த டிராவல் ஏஜன்சியின் அலுவலர்.

''தென்னாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள முடியாது ஒரு இடைஞ்சல். நான் முன்கூட்டியே பணம் கட்டியிருக்கேன். ரசீது கொடுத்திருக்கீங்க. தயவுசெய்து என்னை அந்தக் குழுவிலிருந்து விலக்கிவிட்டு நான் கொடுத்த பணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டும்.''

அவர் பகபகவென்று சிரித்தார். மேஜைமுன் கைகளை ஊன்றிக்கொண்டு அவளை வேடிக்கையாகப் பார்த்தார்.

''அதெப்படி முடியும். ஏற்கனவே டூரிஸ்ட் டாக்சிக்காரருக்கு முன்பணம் கொடுத்தாய் விட்டது. தங்கவேண்டிய

ஹோட்டல்களுக்குத் தந்தியடித்து இட வசதிக்கு ஏற்படாகி விட்டது. நீங்கள் கையெழுத்துப் போட்ட அந்தத் தாளின் நகலை நன்றாகப் படித்துப் பாருங்கள். திடீரென்று பயணம் ரத்தாகிவிட்டால் அதற்காகக் கட்டிய முன் பணத்தைப் பயணிகள் இழக்க நேரிடும் என்று இருக்கிறதே.''

தன் தோள் பையிலிருந்த அந்த நகலை எடுத்துப் பார்த்தாள். அவர் சொன்னபடிதான் இருந்தது.

காவேரிக்கு இப்படியா ஒரு அவசரம். ஹாஸ்டலில் சேரும்போது விதிமுறைகள் அடங்கிய விண்ணப்பக் காகிதத்தை நன்றாக ஆற அமரப் படிக்காது அவசரப்பட்டுக் கையெழுத்துப் போட்டு வசமாக மாட்டிக்கொண்டுவிட்டாள்.

இப்போது இரண்டாவது முறையாக-சுற்றுப் பயணத்தில் சேர விரும்பிக் கையெழுத்திட்ட தாளையும் சரிவரப் படிக்கவில்லை.

இவள் ஒரு படித்தப் பெண்... வெளிநாட்டிலிருந்து வருகிறவள்-விஷயம் தெரிந்தவள் என்று சொன்னால் 'யாராவது நம்புவார்களா?

அத்தனை ஒரு பத்தாம் பசலித்தனமாக-மனதில் ஏற்பட்ட சஞ்சலங்கள் காரணமாகப் புத்தி குழம்பிப்போய், தானே இந்தச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டுவிட்டிருக்கிறாளே! ஐயோ!

''சார்! ஏதாவது ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்டு, மீதிப் பணத்தைக் கொடுக்க முயற்சி செய்யுங்கள். ஊரிலிருந்து பணம் வருவதற்குள் நான் ரொம்பத் திண்டாடிப் போய்விடுவேன்.''

''ஐ யாம் வெரி சாரி மேடம். எல்லோருக்கும் அனுசரிக்கும் விதிமுறை இது. உங்களுக்காக அதை நான் எப்படி மாற்ற முடியும்-...உங்களை நம்பி டிரங்காலில்

ஹோட்டலில் இடம் புக் செய்திருக்கிறோம். அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி சொல்லுங்கோ.''

கையை விரித்தார் ஏஜண்ட்.

பசி வயிற்றைச் சுருட்டியது. மெல்ல நடந்து அருகேயிருந்த ஒரு உணவு விடுதிக்குள் சென்றாள்.

ஒரு தட்டுப் பூரியும் மசாலா உருளைக்கிழங்கும் காப்பியும் கொண்டுவரச் சொல்லிவிட்டு, கைப்பையைத் திறந்து ஆராய்ந்தாள். சில பத்து ரூபாய் நோட்டுகளும் கொஞ்சம் சில்லரையும்தான் மீதமிருந்தன.

பசீர் என்ற உணர்வில், பையன் கொண்டு வந்து மேஜை மேல் வைத்த பூரி தொண்டையை முள்ளாகக் குத்தியது.

காப்பியை விழுங்கிவிட்டு வெளியே வருமுன் பையனிடம் மெல்ல விசாரித்தாள்.

''தங்குவதற்கு அருகில் ஏதாவது ஓட்டலில் அறையொன்று கிடைக்குமா? வாடகை எவ்வளவு இருக்கும்?''

பையன் நமுட்டுச் சிரிப்புடன் அவளை ஜாடை காட்டி அப்பால் வராந்தாவின் ஒரு மூலையருகே அழைத்துச் சென்றான்.

''எனக்குத் தெரிஞ்ச ஒரு லாட்ஜ் இருக்கு. ரொம்பத் தூரமில்லை'' என்றான்.

''அங்கே ஒரு நாள் தங்க என்ன வாடகை கேட்பாங் கன்னு நினைக்கிறாய்?'' என்று அவள் கேட்டதும் பையன் லேசாகச் சிரித்தான்.

''நீங்க எதுக்கு வாடகை கட்டணும். நான் அந்த லாட்ஜுக்குப் போன் பண்ணி குப்புசாமி அண்ணனை வரவழைக்கிறேன். அதுவரை இங்கே ஒரு பக்கம் உட்கார்ந் திருங்க.''

''குப்புசாமி அண்ணனா?''

''இதென்ன, விஷயம் புரியாததுபோலக் கேட்கிறீங்க. அம்மா, குப்புசாமி அண்ணன்தான் அந்த லாட்ஜில் ரூம் எடுத்து எல்லாம் பேசி முடிப்பார். உங்க ரேட் எல்லாத்தையும் கரெக்டா சொல்லிட்டா சரியா முடிச்சுக் கொடுப்பார். பிறகு உங்களுக்கு இஷ்டப்பட்டதை எனக்குத் தரலாம். கொஞ்சம் கூடக் குறைய இருந்தாலும் குத்தமில்லை. ஹி..ஹி..'' பையன் பற்களைக் காட்டினான்.

காவேரி புரிந்து கொண்டாள். அடப்பாவிப் பயலே! தங்க இடம் வேணும் என்று விசாரித்தால் இவன் வேறே வியாபாரத்தில் இறங்கிட்டானே? இதென்ன அக்கிரமம். ஒரு பெண் தனியாக வெளிவந்து தங்க ஏதாவது ஒரு இடம் வாடகைக்கு எடுத்துக்கொள்ள விரும்பினால் அதை இந்த ஊரில் உள்ள சிலர் இப்படியா புரிந்து கொள்வார்கள்? என்ன பயங்கரம்! திக்கற்றவள்? ஊருக்குப் புதிது என்று உணர்ந்ததும் எங்கு திரும்பினாலும் வாயில் போட்டு விழுங்கத் துடிக்கும் மனிதர்களையே அவள் சந்திக்கிறாளே! நல்லவர் யாரும் கிடையாதா, அல்லது அவளுக்கு அவர்களைச் சந்திக்கும் பாக்கியந்தான் இல்லையா?

''பையா வாயை அடக்கிப் பேசு, உன் தரகு வியாபாரத்தை வேறு யாரிடமாவது வச்சுக்கோ. நான் வெளியூரிலிருந்து ஊரைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கேன். எனக்கு வேண்டியவங்க-உறவுக்காரங்க பலர் இந்த ஊரில் இருக்காங்க. நீ இப்படி என்கிட்டே பேசினது அவங்க காதில் பட்டாலும் உன் முட்டியைப் பேத்திடுவாங்க'' கோபத்துடன் அதட்டினாள்.

பையன் பயந்து போய்விட்டான்.

''மன்னிச்சுக்கோம்மா. நான் தப்புக் கணக்குப் போட்டுட்டேன்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து மறைந்தே போனான்.

பையிலிருந்த மடக்குக் குடையை எடுத்து விரித்துக் கொண்டு அவள் மெல்லத் தெருவில் நடந்தாள்.

ஹோட்டல்கள் வரிசையாக இருந்த அந்தச் சாலைக்குள் புகுந்ததும் ஒரு யோசனை தோன்றியது.

தானே ஒரு ஹோட்டலுக்குள் சென்று ரிஸப்ஷனில் ஒரு அறையில் தங்க வாடகை என்ன பிடிக்கும் என்று விசாரித்தால்?

நட்சத்திர ஹோட்டல்களை எல்லாம் தாண்டி முடிவில் ஒரு சாதாரண ஹோட்டல் முன் வந்தாள். சூழ்நிலையும் ஹோட்டலின் தோற்றமும் பார்க்கத் திருப்தி தந்தன.

ரிஸப்ஷனிஸ்ட் ஒரு சிறிய மேஜைக்குப் பின் நகத்தைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அருகில்வந்து காவேரி விசாரித்ததும், சட்டென்று மேஜை இழுப்பறையிலிருந்து ஒரு அட்டையை எடுத்தாள்.

''பெட் அண்ட் பிரேக்பாஸ்டுடன் ஒரு நாள் தங்க எழுபத்தெட்டு ரூபாய்'' என்றாள்.

கைப்பையை மீண்டும் திறந்து காவேரி பணத்தை எண்ணிப் பார்த்தாள்.

ஒரே ஒரு நாள் அங்கே தங்கியிருக்கக்கூட அவளிடம் போதிய பணம் இல்லையே?

அவள் இப்போது என்ன செய்வாள்? மாற்றுப் புடவை இல்லாது, பணம் இல்லாது பாஸ்போர்ட் முதலிய முக்கியமான தஸ்தாவேஜுக்கள் இல்லாது...அவள் இப்போது என்ன செய்வாள்? என்னதான் செய்ய முடியும்?...

கவலையும் திகிலுமாக அந்த ஹோட்டலின் முன்னறையில் ஒரு நாற்காலியில் அமர்ந்து யோசித்தபோது பளீர் என்று மின்னல் போல் அந்த நினைப்பு ஏற்பட்டது.

டெலிபோன் டைரக்டரியை ரிஸப்ஷன் பெண்ணிடமிருந்து கேட்டு வாங்கி 'கே' என்று ஆங்கில எழுத்தில் ஆரம்பிக்கும் பெயர்களில் அந்தப் பெயரைத் தேடத் தொடங்கினாள்.

அவள் கண்டுபிடிக்க விரும்பும் அந்த அம்மாளுக்குத் தொலைபேசி இருக்கிறதோ என்னவோ?

தொலைபேசி இல்லாவிட்டால் அவளைக் காவேரி எப்படித் தொடர்பு கொள்வாள்? அந்தம்மாளின் முகவரியை எங்கேயோ ஒரு பக்கத்தில் தனது டைரியில் குறித்து வைத்திருந்தாள். அந்த டைரியும் இப்போது பாஸ்போர்ட் இத்யாதிகளுடன் அந்தப் பிளாஸ்டிக் பையில் சிக்கிக் கொண்டிருக்கிறதே!

வேகமாகப் பக்கங்களைப் புரட்டினாள். நெஞ்சு படபடவென்று துடித்தது. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. அந்தப் பெயர் டைரக்டரியில் இல்லாவிட்டால்?

வைத்யநாத ஈஸ்வரா!

டர்பனில் அம்கேனி ஆற்றருகே கோயில் கொண்டிருந்த தங்கள் குல தெய்வத்தை உதவிக்கு வேண்டிக்கொண்டாள்.

38

கல்யாணி என்று ஆரம்பித்த பெயர் வரிசையில் நெஞ்சு பதற ஊன்றிப் பார்த்தாள்.

திருமதி எஸ்.ஆர். கல்யாணி என்ற பெயரை வாசித்ததும், முன்னும் பின்னும் பார்த்தாள். சில கல்யாணிகள் நடுவே ஒரே ஒரு பெயர் முன்தான் எஸ்.ஆர். என்று காணப்பட்டதும் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி! பகவானே! இந்தம்மா நம் ஊரில் வசித்த மிஸஸ் எஸ்.ஆர். என்பவங்களாக இருக்கணும் பிரார்த்தித்துக்கொண்டு எழுந்தாள்.

பல ஆண்டுகளுக்குமுன் சேலத்தைச் சேர்ந்த ரகுநாதன் என்பவர் தமது மனைவியுடன் டர்பனிலிருந்த ஒரு தனியார் பள்ளியின் அழைப்புக்கிணங்கி கணக்கு ஆசிரியர் பதவி ஏற்கப்புறப்பட்டிருந்தார். மனைவி கல்யாணியும் கணக்கு ஆசிரியை. இருவரும் இரு பள்ளிகளில் தனித் தனியே ஆசிரியர் பதவியேற்று, அங்கிருந்த தமிழர்-மற்ற இந்தியச் சமுதாயத்தில் ஒன்றுபட்டுப் பல சமூக சேவைகளிலும் கலந்து கொண்டு அந்த நாட்டு மக்களுடன் நெருங்கி உறவாடியதின் பயன் சேலம் ரகுராமனை இந்தியச் சமுதாயம் மிஸ்டர் எஸ்.ஆர். என்று செல்லமாக அழைத்தது.

கணவனும் மனைவியும் வேலையினின்று ஓய்வு பெற்ற பின்னும் தொடர்ந்து அங்கேயே வசித்துக்கொண்டிருந்தனர். மூன்று ஆண்டிற்கு முன்னர்தான் திரு எஸ்.ஆர். மாரடைப்பில் மரணமடைந்து போனார். அதற்குப் பின் சில மாதங்களில் அங்கிருந்து அவர் மனைவி புறப்பட்டு வந்து தாய்நாட்டில் குடியேறிவிட்டாள். ஆப்பிரிக்காவிலிருந்து வந்து போன தமிழர்கள் அந்தம்மாள் சென்னையில் தனியே வசிப்பதாகச் சொன்னார்கள்.

தொலைபேசிப் புத்தகத்தில் அவள் கண்டுபிடித்த அந்த எண் உண்மையில் அவர்கள் எல்லோருக்கும் தெரிந்த திருமதி எஸ்.ஆர். கல்யாணியாக இருந்துவிட்டால்...

அந்தம்மாளும், மறைந்துபோன சவுந்தரி அண்ணியும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற பரிவில் ரொம்பவும் நெருங்கிப் பழகினவர்களாச்சே. குழந்தைகள் இல்லாத குறையாலே...எப்பொழுது அவர்கள் வீட்டுக்கு வந்தாலும் ஒரு பெரிய சாக்லேட் பெட்டியைக் காவேரிக்குப் பரிசாக எடுத்து வந்து கன்னங்கனிய முத்தமிட்டுத் தந்துவிட்டுப் போவார்களே அந்தம்மாளின் தொலைபேசியாக அந்த எண் இருந்து விட்டால்... வைத்யநாத ஈஸ்வரா!...

மனதில் பலவும் எண்ணியபடி அவள் ரிசப்ஷனை அணுகினாள்.

''டெலிபோனில் ஒருத்தரை அவசரமா கூப்பிடணும், உதவ முடியுமா?'' மேஜைக்குப் பின்னாலிருந்த பெண்ணிடம் பணிவாகக் கேட்டாள்.

''ஒரு தடவை தொலைபேசியை உபயோகிக்க ஒரு ரூபாய் கட்டணம். மூணு நிமிஷத்துக்கு மேலே பேசக் கூடாது. ஹோட்டல் அறையிலிருந்தும் வெளியிலிருந்தும் பலர் கூப்பிடுவாங்க. அதனால் உங்க பேச்சைச் சுருக்கமா முடிச்சுக்கிறதா இருந்தா உபயோகிக்கலாம்'' என்றாள்.

''தாங்க்யூ'' என்றபடி தொலைபேசிக் கருவியைத் தன் அருகே சிறிது நகர்த்திக்கொண்டு உள்ளங்கையில் எழுதி வைத்துக் கொண்டிருந்த அந்த எண்களை ஆவலுடன் பார்த்து... அவசரமாகச் சுழற்றினாள்.

''ஹலோ'' என்று மறுபுறத்திலிருந்து குரலைக் கேட்டதுமே அவள் உடல் சிலிர்த்துப் போனது. ஆண்டுகள் சில ஆன போதிலும் கல்யாணி அம்மாளின் கனிவு நிறைந்த இனிய குரலை அவளால் மறக்க முடியாதே!

நெஞ்சு படபடவென்று துடித்தது. அவள் இத்தனை கஷ்டங்களுக்கிடையேயும் அனாதையாகி விடவில்லை. கல்யாணி அம்மாளைக் கண்டு பிடித்துவிட்டாள். கஷ்டங்கள் எல்லாம் தீரப் போகிறது என்பதின் அறிகுறி அது. மகிழ்ச்சி கட்டுக்கொள்ளவில்லை-வார்த்தைகள் தடுமாறின. உணர்ச்சிக் கொந்தளிப்பில் உடல் முழுவதும் ஆடியது.

''ஹலோ...மிஸஸ் எஸ்.ஆர். நீங்க ரொம்ப ஆச்சரியப்படுவீங்க. நான் காவேரி பேசறேன். சவுந்தரி அம்மாளின் நாத்தி காவேரி ஞாபகமிருக்கா?'' படபடவென்று பொரிந்தாள்.

''அட நம்ம காவேரி! இங்கே எப்போ வந்தே? எங்கே தங்கியிருக்கே? முதல்லே நீ என்னைத்தானே வந்து பார்த்திருக்கணும்?'' மறுபுறத்தில் உரிமையும் அன்புமாகக் குழைந்த வார்த்தைகள் அவளது நெஞ்சைத் தொட்டன.

''உங்களைத்தான் வந்து பார்த்திருக்கணும். தப்பு செய்துட்டேன். அவசரமா உங்க உதவி இப்போ தேவை'' அவள் குரல் உடைந்தது.

''எங்கிருந்து பேசறே சொல்லு. நான் வந்து வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறேன்.''

''அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம். ஒரு ஹோட்டலிலிருந்து பேசறேன். வாசலில் டாக்ஸிகளும், ஆட்டோக்களும் நிறைய நிக்கிறது. உங்க விலாசத்தைச் சுருக்கமா சொன்னா.''

''நம்பர் ஒன்பது. ஷண்முகம் காலனி. சிங்காரம் தெரு, சாந்தோம். கடற்கரை ஓரமா சாந்தோம் மாதாகோயில் தாண்டி நேரே அடையார் போற வழியிலே ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்குப் பக்கத்தில் வலதுபக்கம் உருவாகியிருக்கிற சில கட்டடங்களைப் பார்ப்பே-அதுதான் ஷண்முகம் காலனி. அதில் ஒன்பதாம் எண் வீடு. முதலிலே எடுத்த எடுப்பிலேயே பளிச்சினு தெரியும். சமீபத்திலேதான் வீட்டுக்கு வர்ணம் பூசி முடிச்சேன். அதனாலே ரொம்பப் புதுசா கண்களில் படும். கலபமாகக் கண்டு பிடிச்சிடுவே...''

''இன்னுமா பேசிகிட்டிருக்கீங்க...'' எரிச்சலுடன் கேட்டாள் ரிஸப்ஷனிஸ்ட்.

''ஒரு நிமிஷம்'' என்று கையை அமர்த்திய காவேரி மறுபக்கத்திலிருந்து கல்யாணி கொடுத்த தகவலை ஒரு தாளில் அவசரமாக எழுதிக் கைப்பையில் போட்டுக்கொண்டு ''ஓ.கே. ஆண்ட்டி உங்களை அரைமணி நேரத்தில் சந்திக்கிறேன்''

என்று கூறிவிட்டு போனை வைத்தாள். முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

அப்பாடா என்று மனதில் ஒரு ஆறுதல்.

பையிலிருந்து ஒரு ரூபாய்த் தாளை மேஜைமேல் ரிஸப்ஷன் பெண் முன் வைத்தாள். ''தாங்க்யூ!''என்று கூறி விட்டு அவள் வெளியே நகர்ந்தபோது ரிஸப்ஷனிஸ்ட் முகம் சுருங்கிப் போனாள்.

'ஹோட்டல்ல தங்கப்போறப்பல எல்லாம் விசாரிச்சா. டெலிபோன் அடிக்கவா இந்தக் கதை, பிளடி...' என்று தன்னுள்ளே ஆத்திரத்துடன் அவள் முணுமுணுத்தது காவேரிக்குக் கேட்டிருக்க நியாயமில்லை.

அவள் வெளியே நின்றதொரு ஆட்டோவை சாந்தோமுக்கு அழைத்துச் செல்லப் பேசி முடித்து ஏறி உட்கார்ந்துகொண்டுவிட்டாள்.

சங்கிலித் தொடராக நீண்டுகொண்டு போன அவளது கஷ்டங்களுக்கு இப்போது ஒரு முடிவு கட்டாயம் ஏற்படும் என்ற நினைவில் மனம் இலேசாகிப் போனாள்.

அந்தக் குடியிருப்புப் பகுதியை அணுகியதுமே அவளது இதயம் ஆட்டோ எழுப்பிய சப்தத்திற்குப் போட்டி யிடுவதுபோல மார்புக் கூண்டின் மேல் பலமாக அடித்துக்கொண்டது.

சில்லரையை எண்ணிக்கொடுத்துவிட்டு இறங்கியவளின் காலும் கையும் பதறின.

ஒன்பதாவது எண்-அந்தப் பகுதியிலேயே முதல் வீடாக-கல்யாணியம்மாள் சொல்லியது போல பளீரென்று வெள்ளைச் சுற்றுச் சுவரில் தெரிந்தது. தனியானதொரு சிறு வீடு அது. கேட்டைத் திறந்துகொண்டு போகன்வில்லாவும் - அடுக்கரளியும் - செம்பருத்தியும் சிரித்துக்கொண்டு

குளுகுளுவென்று காட்சியளித்த அந்தச் சிறு தோட்டத்திற்குள் காலை வைக்கத் தயங்கியபடி நின்றாள்.

''பயப்படாதே, வா. நாய் எதுவும் நான் வச்சுக்கலை. அந்த வாழ்க்கை ஆப்பிரிக்காவோடு போயிட்டது. இங்கே நானும் நாலு சுவர்களுமாகத்தான் வாழ்கிறேன். வாம்மா காவேரி'' என்று வராந்தாவில் நின்றபடி குரல் கொடுத்த கல்யாணி அம்மாளைத் திரும்பிப் பார்த்தாள்.

சவுந்தரி அண்ணியை மீண்டும் உயிருடன் சந்தித்து விட்டது போன்றதோரு பிரமையில், தன் துன்பங்களை யெல்லாம் சொல்லி ஆறுதல் பெற அண்ணி மறுபடி வந்து விட்டாள் என்பது போன்றதொரு ஆவேச உணர்ச்சிக் கொந்தளிப்பில் தன்னையும் மீறியதொரு வேகத்திலே ஒரே ஓட்டமாக வராந்தாவைத் தாண்டி வராந்தா படிகளில் குதித்தோடி கல்யாணி அம்மாளை மார்புடன் இறுகத் தழுவிக் கொண்டு, ''ஆண்ட்டி!ஆண்ட்டி! உங்களை இன்னிக்குப் பார்க்க முடியாது போயிருந்தால்...ஆண்ட்டி!'' என்று திக்கித் திணறிக் குலுங்கி அழுதாள்.

கல்யாணி அம்மாள் அவளது முதுகை அன்போடு நடவினாள்.

''காவேரி, என்ன நடந்தது?... என்ன சங்கதி... இப்படி அழறே?...'' என்று அன்போடு விசாரித்தபடி அவள் முகத்தை நிமிர்த்திக் கன்னத்தில் தாரையிட்ட கண்ணீரைத் துடைத்து விட்டு, முகம் முழுவதும் பரவிக் கிடந்த கூந்தலைக் கோதிவிட்டு ஆறுதலாக விசாரித்தாள்.

உள்ளே அழைத்துச் சென்று மின்விசிறியைப் போட்டு அவளை முன்னறை சோபா ஒன்றில் உட்கார வைத்தாள்.

''இரு, தாகத்துக்குச் சாப்பிடக் கொஞ்சம் டீ போட்டு எடுத்துவரேன்'' என்று கூறிவிட்டுச் சமையலறைக்குள் மறைந்தாள்.

சிறிது பொழுதில் ஒரு பீங்கான் தட்டில் பிஸ்கட்டுகளும் இரண்டு கோப்பைகளும் ஒரு பீங்கான் கெட்டிலில் சூடான தேநீரும் வைத்து தட்டினை ஏந்தி வந்து முக்காலி மீது வைத்தாள்.

''முதல்லே டீ சாப்பிடு. பிறகு விஷயம் என்னன்னு சொல்லு.'' உற்சாகப்படுத்தியபடி கம்மென்று தேநீர் மணக்கக் கோப்பையில் அதை நிறைத்து அவளிடம் நீட்டினாள்.

ஒரு பிஸ்கட்டை எடுத்து மெல்லக் கடித்து விழுங்கிவிட்டுத் தேநீரை ஒருவாய் பருகிய காவேரி கண்ணீரிடையே புன்னகைத்தாள்.

''இப்படி ருசியான சௌத்ஆப்பிரிக்கன் டீயைச் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு தெரியுமா ஆண்ட்டி'' என்றாள் காவேரி.

''நீங்கள்ளாம் இங்கே வந்ததும் உங்க ஊர்சாப்பாடு பானங்கள் முதலியவற்றைத் தேடிக்கொண்டு அலைகிறீங்க. நாங்க உங்க நாட்டில் வந்து குடியேறிய புதிதில் இட்டிலி, சாம்பார், தோசை, மிளகாய்ப் பொடி, வத்தல் குழம்பு என்று நாக்கைச் சப்பிக்கொண்டு இவைகள் கிடைக்காதா என்று ஏங்கியிருக்கிறோம்.

''வேறு நாட்டுக்குப்போய் வசிக்க விரும்பியபின் வயிற்றைக் கட்டிக் கொள்ளாது நாக்கை வளர்த்துக் கொண்டால் உருப்படவே முடியாது. வாழ்க்கையில் நாம் முன்னேற முடியாது. வெள்ளைக்காரர்களைப் பார்! அவர்கள் எங்கே குடியேறினாலும் விரைவாக அந்த நாட்டில் கிடைக்கும் உணவைத் தின்று...பழகிக்கொண்டு... அந்த நாட்டு மக்களைப் போல வாழ முயலுகிறார்கள். அதனால்தான் அவர்கள் நம்மைவிடக் கெட்டிக்காரங்களாக-

வாழத் தெரிஞ்சவங்களா இருக்காங்க. அதுசரி, போகட்டும்... நீ ஏன் இப்படி அழுது கொண்டு நிக்கிறே? என்ன நடந்தது?'' கொஞ்சம் உரிமையோடு அன்போடு அதட்டலாகக் கேட்டாள்.

''ஆண்ட்டி...'' என்று ஆரம்பித்த காவேரிக்கு அழுகைபொங்கிக் கொண்டு வந்தது. தாயைக் கண்டதும் புக்ககத்தில் சிரமப்பட்டுவிட்ட பெண்களுக்கு அழுகை பொத்துக்கொண்டு வரும் என்பார்கள். அதைப்போலத் தாயன்பு மிக்க கல்யாணிஅம்மாளின் முகத்தைக் கண்டதுமே தான்பட்ட துன்பங்களையெல்லாம் கொட்டிக் கவிழ்க்க வேண்டுமென்ற ஆத்திரத்திலே பேச முடியாது அவளைத் துக்கம் உலுக்கியது. மெல்ல சமாளித்துக்கொண்டு, ஆப்பிரிக்காவிலிருந்து அவள் ஏன் புறப்பட்டு வந்தாள் என்பதிலிருந்து...அமுதா ஹாஸ்டலில் நடந்த கதைவரை விவரமாகச் சொல்லி முடித்தாள்.

''தாய்நாடு... இப்படி ஒரு மோசமான நாடு என்று தெரிந்திருந்தால் நான் புறப்பட்டு இங்கே வந்திருக்க மாட்டேன். இங்கிலாந்துக்குப் போயிருப்பேன்'' விக்கி விக்கி அழுதாள் காவேரி...

அருகில் வந்து அமர்ந்து கொண்டு அவளைத் தழுவிக்கொண்ட கல்யாணி அம்மாள் லேசாகச் சிரித்தாள்.

''காவேரி, கண்களைத் துடைச்சுக்கோ, முதலில் குளி. மாற்றுக்கு என் புடவை ரவிக்கைகளை அணிந்துகொள். பிறகு சாப்பிடு. சாவதானமாக மற்றவைகளைக் கவனிச்சுக்கலாம். இது இரண்டு படுக்கையறை கொண்ட வீடு. ஆப்பிரிக்காவில் இதைவிடப் பெரிய தோட்டம், வீடு, நீச்சல் குளம், நான்கு நாய்கள் என்று அமர்க்களமாக வாழ்ந்தோம். அது ஆப்பிரிக்கா. இந்தியாவில்-என் தாய்நாட்டில் எங்களைப் போன்ற மத்தியதர [illegible]ப்புக்காரங்களுக்கு இப்படி வாழ்வதே

ரொம்பப் பெரிய காரியம். குழந்தை குட்டியில்லாமல் தன்னந்தனியே செடிகளைப் பயிர் செய்து கொண்டு வாழ்கிறதை நான் ரொம்பவும் ரசிக்கிறேன்.''

''ஆண்ட்டி! இந்தியா-நம் தாய் நாடு-என்னவோ ஏதோன்னு நினைச்சுக் கொண்டு வந்ததற்கு...''

''அழுக்கு பிடித்த நாடு எங்கும் ஒரே குப்பை... தெருவில் குறுக்கேயும் நெடுக்கேயும் எருமை மாடுகள் நடைபோட்டுக்கொண்டு கேட்பாரற்றுத் திரிகின்றன. சில இடங்களில சாக்கடை வழிந்தோடுகிறது. வெய்யில் தலையைப் பிளக்கிறது. சாப்பாடு அதைவிட மோசம். சுத்தம் என்பதே தெரியாத மக்கள். சுகாதார அனுசரிப்பு ரொம்ப குறைவு. பிறரைச் சுரண்டித் தின்னும் மோசடி மனிதர்கள்... என்றுதானே சொல்லப்போறே?''

புன்முறுவலுடன் தலையை அசைத்தாள் காவேரி.

''ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கம் உண்டல்லவா. ஒரே ஒரு பக்கத்தைப் பார்த்துவிட்டுச் செல்லாது என்று மதிப்பிடுவது போல இந்தியாவின் ஒரு பக்கத்தை மட்டுமே நீ பார்த்ததினால் இப்படிப் பேசுகிறாய்.''

''குப்பை கூளம் நிறைந்த நாடானாலும் சரி-குற்றங்கள் நிறைந்த நாடானாலும் சரி, நான் என் தாய்நாட்டைப் பற்றி இழிவாகப் பேச மாட்டேன். அது என் தாயை நான் அவமதிப்பதற்குச் சமம். என் தாய் கெட்டவளாக இருந்தாலும் என்னைப் பெற்றவளாச்சே...அதைப்போல என் நாட்டில் பல சிரமங்கள் இருந்த போதிலும் நான் பிறந்த மண். அதை நான் மதித்துப் பாராட்டக் கடமைப்பட்டவள். ஒரு ஆங்கிலக் கவிதை உனக்கு ஞாபகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன்.

''இது என் பிறந்த நாடு என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியாத மனிதன், சுவாசித்த போதிலும் அவன் ஆத்மா [illegible]றந்து போனதினால் அவன் இறந்தவன் ஆவான்.

''ஞாபகமிருக்கா - பள்ளிக்கூட நாட்களில் படித்திருப்பாய்... என் பிறந்த நாட்டில் பல குற்றம் குறைகள் இருக்கு... இல்லையென்கவில்லை. எந்த நாட்டில் குறையில்லை. குப்பை, கூளம், ஸ்லம் என்ற சேரிகள்... பணப் புழக்கமுடைய மேலை நாடுகளிலும் இருக்கிறது. டர்பனையே எடுத்துக்கொள். ஒவர் போர்ட், சாட்ஸ்வொர்த் ஐந்தாவது யூனிட் இவைகளில் குப்பையில்லையா? குற்றங்கள் நடப்பதில்லையா?''

''ஜாதி வித்தியாசம் ரொம்பவே இங்கே இருக்கு.''

''தீண்டப்படாதவர் என்று ஒரு சில மக்களை ஒதுக்கிவைத்து நாம் நமது பண்பைக் குறைத்துக் கொள்கிறோம். ஒத்துக்கொள்கிறேன். நாளடைவில் அந்தத் தீமை இங்கிருந்து மறைந்து போய்விடும்...முன்னைவிட மக்கள் இப்போது தமது குறுகிய நோக்கங்களை உதறிவிட்டுப் பகுத்தறிவு மிக்கவர்களாக மாறிவிட்டிருக்கின்றனர்-அதை நீ ஊன்றிப் பார்க்காதது உன் தவறு. உன் நாட்டில் உள்ள இனவேற்றுமை என்னும் 'அப்பார்த்தீட்' தலை முழுகினாலும் நம்மைவிட்டுப் போகாத அபாரத் தீட்டாயிற்றே.''

துன்பங்களையெல்லாம் மறந்து கலகலவென்று சிரித்தாள் காவேரி.

''நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன் ஆண்ட்டி. நான் தாய்நாட்டைக் காமாலைக் கண்களால் பார்த்த விளைவு-தவறான மனிதர்களைச் சந்தித்ததால் ஏற்பட்ட பாதிப்பு-மன்னிக்கக்கோங்க.''

''பாரத நாடு பழம் பெரும் நாடு என்பது உண்மை. நீ என்னோடு கொஞ்ச காலம் தங்கியிருக்கப் போகிறாய். அப்போது இந்த நாட்டுச் சிற்பங்களை உனக்குக் காட்டி, சங்கீதத்தை அறிமுகப்படுத்தி, நடன நாடகங்களுக்கு உன்னை

அழைத்துச் சென்று இந்தியாவின் மறு பக்கத்தை அறிமுகப்படுத்தப்போகிறேன்.

''விஞ்ஞானத்திலும் தாய்நாடு எந்த வகையிலும் குறைந்ததில்லை. நல்ல மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். பண்பான-நாட்டுக்கே உழைத்த நல்லவர்களை நீ பார்த்தால் கண்களில் நீர் பனிக்கக் கையெடுத்துக் கும்பிடுவாய்.

''காவேரி... மை டியர் கேர்ள்... கவலைப்படாதே. முதலில் குளித்து வேறு உடை உடுத்திக்கொண்டு வா. பாஸ்போர்ட்டையும் நீ அந்த டிராவல் ஏஜென்ஸியில் கட்டிய முன் பணத்தையும் எப்படித் திரும்ப அடைவது என்பதைப் பற்றித் திட்டம் தீட்டலாம்.

''எங்கள் வீட்டுக் குளியலறையில் ஆப்ரிக்கா வீட்டு குளியலறைபோல டெலிபோன் ஷவர், பாத் டப் இத்யாதி கிடையாது. குழாயைத் திருப்பினால் இந்தத் தண்ணீர்ப் பஞ்சத்திலும் கொட்டும் தண்ணீர். அண்டாவும்-குளிக்க சிறு பிளாஸ்டிக் குவளையும் வச்சிருக்கேன்.''

''ஆண்டி. அவையெல்லாம்தேவையில்லை. உங்க அன்பு இருக்கே...அதற்கு முன்னால்... அந்த நாட்டில் காணும் போகப் பொருள் எந்த மூலைக்கு? ஆண்ட்டி... மை ஸ்வீட் ஆண்ட்டி...'' என்று நெஞ்சம் நெகிழ்ந்து கண்களில் நீர் புரள-நன்றி உணர்வுடன்...கல்யாணி அம்மாளின் கன்னத்திலே முத்தமிட்டாள் காவேரி.

39

குளித்து முடித்தபின் கல்யாணி அம்மாள் இரவல் தந்த புடவை ரவிக்கையை உடுத்திக்கொண்டு-அவள் சமைத்து வைத்திருந்த எளிய உணவை இருவரும் சாப்பிட்டுவிட்டு முன் அறையில் வந்து அமர்ந்து கொண்டனர்.

கல்யாணிதான் பேச்சைத் துவக்கினாள்.

''காவேரி! நீ மட்டும் தென் ஆப்பிரிக்காவின் குடிமகளாக இல்லாது வேறுநாட்டைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால் உனது பாஸ்போர்ட்டை வைத்துக்கொண்டு தரமறுக்கும் சந்திரசேகரை உன் நாட்டு ஹைகமிஷன் அலுவலகம் மூலம் ஒரு கலக்குக் கலக்கிவிட முடியும்.

''உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. வெள்ளைக்கார வாலிபன் ஒருவன் கிழிந்த சட்டையும், அழுக்குப் பிடித்த தோற்றமுமாக இங்குள்ள கோவில் எதிரே ஒரு அலுமினியத் தட்டை வைத்துக்கொண்டு பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். அதை வேடிக்கை பார்க்க ஒரு பெரும் கூட்டம் திரண்டுவிட்டது. சிறிது பொழுதில் அவன் நாட்டைச் சேர்ந்த கவுன்சிலின் வேன் ஒன்று வந்து அவனை அதில் தள்ளி எடுத்துக்கொண்டு போய்விட்டது. அவன் சிரமமின்றி ஊர் போய்ச்சேர அவன் நாட்டு ஹைகமிஷன் உதவி செய்திருக்கும் என்பது நிச்சயம்.

''ஆனால் உன் நிலை அப்படியல்ல. தென் ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே இருந்த அரசு உறவு பல ஆண்டுகளுக்கு முன்பே துண்டிக்கப்பட்டுவிட்டதே. அதனால் உன் நாட்டைச் சேர்ந்த ஹைகமிஷன் அலுவலகம் இங்கே கிடையாது. அதுபோல இந்திய ஹைகமிஷன் அலுவலகம் தென் ஆப்பிரிக்காவில் கிடையாது.''

''இப்போ நாம் என்ன செய்ய முடியும்னு நினைக்கிறீங்க?''

''சந்திரசேகரை அணுகி பாஸ்போர்ட்டைத் தரும்படி நியாயமான முறையில் கேட்கப் போகிறேன்.''

''மறுத்தால்?''

''போலீசில் அது காணாமற் போய்விட்டதாக அதன் விவரங்களைக் கூறி ஒரு புகார் எழுதித் தந்துவிடவேண்டும்.''

''போலீஸ் எந்த விதத்தில் உதவும்?''

''அவர்கள் கிரைம் அக்கரன்ஸ் ஷீட்டில் இதைச் சேர்த்து விடுவார்கள். உன் பாஸ்போர்ட்டை சந்திரசேகர் எதேச்சையாகக் கண்டு எடுத்ததாகக் கொண்டு போலீசில் ஒப்படைத்தாலும் வியப்பதற்கில்லை. அப்பொழுது போலீஸ் உன்னை அழைத்து உன் பாஸ்போர்ட்டை உன்னிடம் தருவார்கள்.''

''அவர் அதற்கும் அசையாதிருந்துவிட்டால்...''

''போலீசில் நீ கொடுக்கப் போகும் புகார்பற்றி ஒரு காப்பி வாங்கிக் கொள்வோம். தேதி-போலீஸ் ஸ்டேஷன் முத்திரை இத்யாதிகளுடன் உள்ள அந்தக் காப்பியை நாம் டர்பன் நகரத்தில் உள்ள இமிகிரேஷன் அதிகாரிகளுக்கு அனுப்பி, அத்துடன் ஒரு கடிதமும் சேர்த்து அனுப்பி, உடனடியாக ஒரு புதுப் பாஸ்போர்ட்டை அனுப்பும்படி கேட்டுக்கொள்வோம். சில நாட்களில் அங்கிருந்து ஒரு புது பாஸ்போர்ட் வந்துவிடும். போலீசில் புகார் கொடுத்த கடிதத்தின் ஒரு நகலும் நமக்கு அனுப்பி விடுவார்கள்.''

''ஆண்ட்டி, உங்களுக்கு இத்தனை விவரம் எப்படித் தெரியும்?''

''உன்னைப்போல ஒரு அசட்டு இளைஞன் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவன் தன் பாஸ்போர்ட்டைத் தொலைத்துவிட்டு வந்து என்னிடம் அழுதான். நான் என் நண்பர் திவாகரனை அணுகி அவனுக்கு உதவினேன்.''

''உங்கள் நண்பர் திவாகரன் ரொம்ப செல்வாக்கு உடையவரோ?''

''நல்லவேளை, இப்போது எனக்கு இன்னொரு யோசனையை நீ ஞாபகப்படுத்தினாய். நண்பர் திவாகரன் ஒரு வழக்கறிஞர். சட்ட நுணுக்கங்கள் மூலம் அவர் ஏழைகளுக்கு இலவசமாக உதவி செய்யும் ஒரு சமூக சேவகர்; ஏழை

பங்காளன். அவர் மூலமாக அந்த டிராவல் ஏஜன்டிடம் நீ கட்டிய இரண்டாயிரத்தைத் திரும்ப வாங்க முயற்சிக்கப் போகிறேன்.''

''அந்த டிராவல் ஏஜன்சி பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டதே?''

''நண்பர் திவாகரனின் சாமர்த்தியத்தை நீ அறிய மாட்டாய். முதலில் மரியாதையாக உனது வழக்கறிஞர் என்ற நிலையில் ஒரு கடிதம் எழுதிக் கேட்பார். அவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்தால், ஒரு சிவப்புக் கொடியைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு பெரிய கரும் பலகையில், 'இந்த டிராவல் ஏஜென்சியிடம் பணம் கொடுத்து ஏமாந்து போனேன்-நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்' என்று கொட்டை கொட்டையாக எழுதி வைத்துவிட்டு, ஒரு துண்டை விரித்து நடைபாதையில் போட்டுக் கொண்டு-கையில் கொடியுடன் உட்கார்ந்து ஓலமிட ஆரம்பித்து விடுவார். அவ்வளவுதான்-ஒரு பெரிய கூட்டம் விரைவில் திரண்டு விடும். பத்திரிகை நிருபர்களுக்குக் கொண்டாட்டம்-காமிராவுடன் ஓடி வந்து விடுவார்கள்.

''ஏஜென்சிகாரர் போலீசைக் கூப்பிட்டு அதை நிறுத்த முயன்றால் திவாகரன் போலீஸ், சிறை எதற்கும் அஞ்சாதவர். இதனால் பத்திரிகையில் விவரம் வெளிவந்து ஏஜன்சிக்குத் தான் பெயர் வீணாகிப் போகும். வியாபார நஷ்டம் ஏற்படும். ஏன் இந்த வீண்வம்பு என்று திவாகரனையும் சிவப்புக் கொடியையும் கண்டதும் கும்பிடு போட்டு உள்ளே அழைத்துப் போய் காதும் காதும் வைத்தது போல ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு பணத்தைக் கொடுத்தனுப்பி விடுவார்கள்.''

காவேரி தன் கவலை எல்லாம் மறந்து கலகலவென்று சிரித்தாள்.

''ஆண்ட்டி தாய்நாட்டில் இப்படி ஒரு விநோதம் நடக்கிறதா?''

''உங்கள் நாட்டில் மகாத்மா காந்தி ஆரம்பித்து வைத்த சத்தியாகிரகத்தின் வெவ்வேறு ரூபங்கள் இவை என்று வைத்துக்கொள்ளேன்.''

அவளது கவலைகளுக்கும் கஷ்டங்களுக்கும் ஒரு முடிவு விரைவில் வந்துவிட்டதே என்ற நினைப்பில் காவேரி மறுபடியும் மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

★ ★ ★

ஒல்லியாக-உயரமாக... முன் நெற்றிமுடி பட்டையாக நரைத்திருந்தும் முகத்தில் கம்பீரம் கட்டிய அந்த மூக்குக் கண்ணாடி அம்மாளை சந்திரசேகர் இதற்கு முன்னர் பார்த்ததில்லை.

''அமுதா ஹாஸ்டலின் தலைவர் நீங்கதானே?'' என்று கேட்ட அந்த அதட்டல் குரல் அவருக்கு அதிசயமாக இருந்தது.

காவேரியின் பெயரைச் சொல்லி, அவளது பாஸ் போர்ட்டை உடனடியாகத் தராவிட்டால் நண்பர் திவாகர் மூலம் அதை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கல்யாணி கடுமையாக விளக்கியபோது, ஒரு கணம் அசந்து போய்விட்டார் சந்திரசேகர்.

ஆனாலும் அவர் மிகவும் எச்சரிக்கையான பேர்வழியாயிற்றே?

''இது ஒரு பக்கத்து வழக்கு. என் பக்கமும் காவேரியைப் பற்றிய புகார் நிறைய இருக்கு. அந்தப் பெண் ரொம்பவும் பொய் பேசுகிறாள். எங்கள் வசம் அவள் பெட்டி இருக்கிறது. அவள் தர வேண்டிய பணத்திற்கு அதைத் தர மறுத்து வைத்துக் கொண்டிருந்தேன். போகட்டும் அந்தப் பணம் என்று ஒதுக்கிவிட்டு உங்களுக்காகப் பெட்டியைத் திருப்பித் தந்து விடுகிறேன். மற்றபடி பாஸ்போர்ட், நகை இத்யாதி

அவ்வளவும் சுத்தப் பொய். அவைகளை நான் கண்ணால் கூடப் பார்க்கவில்லை'' என்று அழுத்தமாகப் பேசினார்.

ஹாஸ்டல் ஆள் ஒருத்தனை அழைத்து, உள்ளே வைத்திருந்த காவேரியின் பெட்டியை எடுத்து வரச் செய்து அதைக் கல்யாணி வசம் ஒப்படைத்தார்.

சந்திரசேகருக்கு நரியைவிடக் கூர்மையான தந்திரமிக்க மூளையிருந்தது உண்மை. போலீசில் புகார் செய்வேன் என்று காவேரி சொல்லிவிட்டு வெளியேறியவுடனேயே அவர் துரிதமாகச் செயல்பட்டார். பிளாஸ்டிக் பையிலிருந்த அந்த நகைகளை எடுத்துத் தமக்குத் தெரிந்தவர் ஒருவரிடம் விற்றுத் தர ஏற்பாடு செய்தார். தங்கம் மலிந்த ஊரில் வசித்தாலும் ஆப்பிரிக்காவில் வசிக்கும் இந்தியர் அணியும் நகைகள் தரத்திலே மிகவும் குறைவான தங்கமாகத்தான் இருக்கும் என்பதைப் பின்னர்தான் உணர்ந்தார்.

அவர் எதிர்பார்த்த பணம் அவைகளுக்குக் கிட்டவில்லை. ஆனாலும் ஓரளவு கிடைத்ததைத் தமக்குச் சேர வேண்டிய கணக்கில் சரிக்கட்டிக் கொண்டுவிட்டார். பாஸ்போர்ட், மற்ற கடிதங்கள் தம்மிடம் இருந்தால் அபாயம் என எண்ணி அவைமீது மண்ணெண்ணையை ஊற்றி நெருப்பு வைத்துச் சாம்பலாக்கித் தடயத்தை அழித்துவிட்டார். அந்தத் தெம்பில் அவர் கல்யாணியிடம் துணிவுடன் சொன்னார்.

''திவாகரன் வரட்டும். போலீஸ் வந்து ஹாஸ்டலைச் சோதனை போடட்டும். என்னிடம் பாஸ்போர்ட் இருந்தால் தானே பயப்படணும்?''

பெட்டியுடன் வீடு திரும்பிய கல்யாணி கோபத்துடன் பேசினாள்.

''அந்த சந்திரசேகரன் பெரிய மோசக்காரன். அவன் உன் பாஸ்போர்ட்டை எங்கேயோ சாக்கடையில் தூக்கி எறிந்து விட்டிருக்கிறான். அந்தத் தைரியத்தில் எதிர்த்துப்பேசுகிறான். இனி நாம் வேறு வழியில்தான் முயலவேண்டும்.''

''ஐயோ ஆண்ட்டி! பாஸ்போர்ட் எண், கொடுக்கப்பட்ட இடம், தேதி எல்லாம் குறிச்சு வச்சிருந்த என் டைரியையும் அந்த மனிதன் எங்கேயோ தூக்கி எறிஞ்சிட்டாரே! இப்போ நான் என்ன செய்வேன்?''

''இப்பொழுதும் குடிமுழுகிப் போகவில்லை. தென் ஆப்பிரிக்காவில் வாழும் ஒவ்வொரு இந்தியனுக்கும் இமிகிரேஷன் டிபார்ட்மெண்டில் ஒரு ஃபைல் இருக்கிறதல்லவா? உன் ஃபைலின் நம்பர் உனக்குத் தெரியுமா?''

வீட்டுக் டிபார்ட்மெண்டில் உள்ள தங்கள் குடும்பத்து ஃபைலின் நம்பரை ஒவ்வொரு இந்தியரும், ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார்கள்.

''எனக்கு எங்கள் ஃபைலின் எண் தெரியும் ஆண்ட்டி.''

''அதுபோதும். இன்று இரவு பத்து மணிக்குமேல் ஆப்பிரிக்காவுக்குத் தொலைபேசி மூலம் தாமோதரனைக் கூப்பிடுவோம். அப்போது ஆப்பிரிக்காவில் மாலை ஆறரை மணியாக இருக்கும். அவர் வீட்டில்தான் இருப்பார்...அவரது தொலைபேசி எண் ஞாபகத்தில் இருக்கா...'' கல்யாணி அன்போடு அதட்டினாள்.

காவேரியின் நெஞ்சு இனம்விளங்காத உணர்விலே படபடவென்று அடித்துக் கொண்டது. முகம் சிவந்து போனாள்.

தாமோதரனைப்பற்றி அசட்டையாக இருந்துவிட்டு அவரிடம் சொல்லிக் கொள்ளாது கிளம்பி வந்துவிட்டு, இப்போது உதவி கேட்பது நியாயமா என்ற உணர்வு தாக்க ''தெரியும் ஆண்ட்டி'' என்றாள் கலவரத்துடன்.

''சரி. இப்பொழுதே அவர் எண்ணுக்கு இரவு பத்து மணிக்கு ஒரு கால் புக் செய்து விடுகிறேன். சரிதானே'' என்று கூறிவிட்டுக் கல்யாணி வேகமாகச் செயல்பட்டாள்.

★ ★ ★

இரவு உணவுக்குப் பின் முன்னறையில் தொலைபேசி அருகே பல எதிர்பார்ப்புகளுடன் இருவரும் வந்து அமர்ந்து கொண்டனர். நேரம் நத்தையாக நகர்வது போன்று காவேரிக்கு ஒரு பிரமிப்பு.

பத்து மணியைத் தாண்டிச் சில நொடிகளில் தொலைபேசி கிணுகிணுத்தது.

''மிஸ்டர் தாமோதரன் ஃபரம் டர்பன். யூ வாண்ட் டு ஸ்பீக் டு ஹிம்?'' இடையே ஆங்கிலத்தில் ஒரு பெண்ணின் குரல் சன்னமாகக் கேட்டது.

''யெஸ்'' என்று கூறிய கல்யாணி தொலைபேசியைக் காவேரியிடம் கொடுத்தாள்.

தொலைபேசியை பிடித்த அவளது கரம் நடுங்கியது. உதடுகள் துடித்தன. முகம் இன்னமும் செம்மையாக மாறிப்போனது. நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. நெற்றியில் வியர்வை பூத்துக் கொண்டது. தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகரிலிருந்து லண்டன் வழியாக-சென்னை கல்யாணியம்மாள் வீட்டுத் தொலைபேசி வழியாக ஒலித்த தாமோதரனின் குரல் காற்றினால் சலனப்படாது...கணீரென்று கேட்டபோது அவள் ஒரு கணம் ஆடிப் போனாள்.

''ஹலோ! காவேரி! உண்மையா நீயா என்னைக் கூப்பிட்டே? என்னை வேண்டாம்னு உதறிட்டு எங்கேயோ போய் ஒளிஞ்சுகொண்டு என்னை எப்படித் தவிக்க வுச்சுட்டேன்னு உனக்குத் தெரியுமா? என் பாஸ்போர்ட்டை டிபார்ட்மெண்ட் திரும்ப வாங்கி வச்சுக்கொண்டு விட்டதால் என்னால் ஊரைவிட்டு நகர முடியலை; உன்னைத் தேடிக் கொண்டு இந்தியாவுக்கு வர முடியலை. காவேரி, நீ என்னை இப்படித் தண்டிச்சது நியாயமா?''

தாமோதரனின் அன்புக் குரல் காதைப் பட்டுப்போல மிருதுவாகத் தழுவியதும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது விம்மிவிட்டாள் காவேரி. கன்னங்களில் தாரையாக ஓடிய கண்ணீரை அசட்டைப்படுத்திய வண்ணம் திக்கலும் திணறலுமாகப் பேசினாள்.

''தாமு மன்னிச்சுக்கோங்க. எனக்கு இப்ப நீங்கதான் ஒரு உதவி செய்யணும்.''

''என் காவேரிக்கு இல்லாத உதவியா...?''

இடையே குறுக்கிட்ட தொலைபேசிப் பெண் உரத்த குரலில் கேட்டாள். ''எத்தனை நிமிஷம் பேசப் போறீங்க?''

தாமோதரன் அதற்குச் சட்டென்று பதிலளித்தான்.

''பதினைந்து நிமிஷங்கள் தேவை. அதன் கட்டணத்தை என் தொலைபேசி எண்ணுக்குச் சேர்த்துவிடவேண்டும்.''

அந்தப் பதினைந்து நிமிஷங்களில், சில மாதங்களாகக் கேட்காத குரலை இருவரும் கேட்டு மகிழ்ந்தனர்-பேசினர். காவேரி இடையே ஆனந்தமும் ஆத்திரமும் தாங்காது தொலைபேசியில் அழுதபடி பேசினாள்.

''நாளைக்கே நான் ஆவன செய்கிறேன். ஃபைல் நம்பரை மறந்துட்டாலும் நான் இமிகிரேஷன் டிபார்ட்மெண்டில் உங்க வீட்டு முகவரியைக் கொடுத்துத் தேடி எடுக்க முடியும். போலீஸ் புகார் நகல் ஒன்றை விரைவில் அனுப்பி வை. செலவுக்குப் பணம் கணிசமாக ஒரு டிராப்ட் அனுப்பி வைக்கிறேன். போலீஸ் புகார் நகல் கிடைத்தவுடன் ஒரே வாரத்தில் பாஸ்போர்ட்டும், ஊருக்கு வர விமான டிக்கெட்டுகளும் அனுப்பி வைக்கிறேன். காவேரி... உன்னைப் பார்க்க என் கண்கள் தவிக்கின்றன. மனசு ஆசையில் உருகுகிறது. காவேரி...ஐ லவ் யூ. உனக்காக நான் என் உயிரையும் தருவேன் காவேரி, பயப்படாதே.''

தாமோதரனின் அன்புக்குரல் அவளது உடலைப் புல்லரிக்கச் செய்தது.

''ஐ லவ் யூ... தாமு. ஐ லவ் யூ. நீங்கள்தான் என் உயிர்.'' காவேரி விக்கி அழுதாள். ஆனந்தத்தில் மெய் சிலிர்த்துப் போனாள்.

பதினைந்து நிமிடங்கள் முடிவு பெற்றன. இடையே தொலைபேசியை இயக்கும் பெண் அவர்கள் பேச்சைத் துண்டித்தாள்.

ஆனால் இனி எந்தச் சக்தியும் அவளுக்கும்-தாமோதரனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள காதலைத் துண்டிக்க முடியாது என்ற நம்பிக்கையில் ஆனந்தம் தாங்க முடியாது அவள் குலுங்கி அழுதாள்.

''ஆண்ட்டி ஐயாம் வெரி ஹாப்பி. தாங்க் யூ...'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்து அழுதாள்.

40

அண்ணா சாலையிலிருந்த அந்த டிராவல் ஏஜென்ஸியின் சொந்தக்காரர், மேஜைமுன் வந்து நின்ற நரைத்த தலை மனிதரையும், அவருடன் கூட நின்று கொண்டிருந்த அந்த வயதான அம்மாளையும் கண்களில் கேள்விக்குறியுடன் பார்த்தார்.

''ஆப்பிரிக்காவிலிருந்து தாய் நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்துள்ள மிஸ் காவேரி உங்களிடந்தானே தென்நாட்டுச் சுற்றுலாப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தாள்?'' நரைத்த தலை மனிதர் சற்று அதட்டலாகக் கேட்டார்.

''ஆமாம்'' என்று பதிலளித்த அந்த ஏஜென்சி அதிபர் அவரை வியப்புடன் ஊன்றிப் பார்த்தார்.

'இந்த மனிதரை எங்கேயோ பார்த்திருக்கிறோமே?' ஒரு கணம் மூளையைக் கசக்கிக் கொண்டதும் சட்டென்று நினைவுக்கு வந்து விட்டது.

பிரபலமானதெரு ரெடிமேட் துணிக்கடையொன்றை நடத்தி வரும் அவரது நண்பர் கடையின் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆசாமியாச்சே இவர்? வழக்கறிஞர் திவாகரன். தன் பிழைப்பை உதறிவிட்டு ஊருக்கு நல்லது செய்ய ஏழை பங்காளனாக மாறி விட்டிருக்கிற பைத்தியக்கார மனிதன். அந்தப் பெண் பார்க்கப் பத்தாம்பசலி போலத் தோன்றி னாளே? பணத்தைத் திருப்பித் தர இயலாது என்றதும் இந்த மனிதரை ஏவி விட்டிருக்கிறாள். கெட்டிக்காரி!... எண்ணியபடி தொண்டையைக் கனைத்துக் கொண்டார் ஏஜன்சியின் அதிபர்.

''மிஸ் காவேரி படித்த பெண்மணி. ஒப்புதல் தாளில் கண்ட நிபந்தனையை நன்றாகப் படித்துப் பார்த்து விட்டுத்தானே கையெழுத்துப் போட்டாங்க?''

''அது சரி. நீங்க முழு முதலையும் பயணம் ரத்தானால் இழக்க நேரிடும் என்று போட்டிருக்கும் நிபந்தனை தவறு. சாதாரணமாக ரயில் பயணத்தின் போதோ-விமானப் பயணத்தின் போதோ எதிர்பாராவிதமாகப் பயணத்தை ரத்து செய்ய நேரிட்டால், ஒரு சதவிகிதத்தைப் பிடிப்புச் செய்து கொண்டு மீதிப் பணத்தை டிக்கெட் வாங்கியவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் ஒரேயடியாக முழுவதையும் முழுங்கப் பார்ப்பது மிகவும் அநியாயம். இப்படிப் பலரை ஏமாற்றி நீங்கள் ஒரு டிராவல் ஏஜன்சி நடத்துவதாக நான் உங்கள் கடைமுன் ஒரு போராட்டத்தை நடத்தினால்...?''

எச்சிலை விழுங்கிக் கொண்டார் ஏஜென்சியின் அதிபர்.

''அப்படிப்பட்ட நிபந்தனைக்கு உட்பட்டவர்களுக்குத் தான் நாங்கள் சுற்றுலாப் பயணம் ஏற்பாடு செய்து தருகிறோம். அவர்களை நாங்கள் வற்புறுத்தி வரவழைப்ப தில்லையே?''

''நாளை மறுநாள் மிஸ் காவேரியும் மற்றவர்களும் கிளம்புவதாக ஏற்பாடு இல்லையா? போகட்டும், காவேரிக்குப் பதிலாக வேறு ஒரு பெண்ணை அனுப்பி வைக்கிறேன். உங்களுக்கு மறுப்பு இல்லையே?''

ஏஜென்சியின் அதிபர் தயக்கத்துடன் தலையைச் சொறிந்தார்.

''நாளை மறுநாள் அந்தப் பயணக்குழு கிளம்பப் போவதில்லை என்று எனக்கு முன்னதாகவே சங்கதி தெரியும். பம்பாயைச் சேர்ந்த அந்த மூன்று பெண்களும் ஒரே ஹோட்டலில் தங்கியிருக்கிறார்கள். உணவு ஒத்துக் கொள்ளாது, மூவரும் வாந்தி பேதியுடன் வைத்தியக் கவனிப்பில் ஹோட்டல் அறையில் படுத்துக் கிடக்கிறார்கள். அதனால் சுற்றுலாப் பயணம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது இல்லையா?''

இதென்னடா வம்பு. மனிதன் விடாக்கண்டனாக இருக்கிறானே! ஏஜன்சி அதிபர் பேச முடியாது வெறித்தார்.

''நமக்குள் வீண் விவாதம் வேண்டாம். மிஸ் காவேரி கட்டிய அந்த இரண்டாயிரத்தையும் திருப்பித் தந்துவிடுங்கள். இல்லையென்றால் குறித்த காலத்தில் பயணத்திற்கு ஏற்பாடு செய்து கொடுக்கத் தவறியதால் காலவிரயமும்-பலவித நஷ்டங்களும் ஏற்பட்டு விட்டதாகக் காவேரி சார்பில் நான் வழக்குத் தொடரநேரும். அத்துடன் எனது சத்தியாக்கிரகத்தையும் உடனடியாக உங்கள் வாசலில் ஆரம்பித்துவிடுவேன்.''

ஏஜென்சி அதிபருக்குத் தலைசுற்றியது. சரியான வம்பில் சிக்கிக்கொண்டுவிட்டிருக்கிறாரே?

இந்த திவாகரன் மகா பொல்லாதவனாயிற்றே? ரெடிமேட் துணி வியாபாரம் செய்யும் நண்பன் ஒரு சில்லரை வியாபாரிக்கு துணிப் பார்சல் ஒன்றை விற்கப் போக, அதை பிரித்துப் பார்த்தபோது சில சட்டைகளைப் பூச்சி யரித்திருந்ததைக் கவனித்த வியாபாரி திருப்பிக்கொண்டு வந்தார். அதை ஏற்க ரெடிமேட் கடைக்காரர் மறுக்க அதைச் சில்லரை வியாபாரி திவாகரனிடம் போய்ப் புகார் செய்ய, அடுத்த நாளே ஒரு கொடியுடன் மனிதன் கடைமுன் சத்தியாகிரகம் செய்து ஆர்ப்பாட்டம் செய்ய ஒரு பெருங்கூட்டம் திரட்டி விடவே.. அவரது நண்பர் தமது வியாபாரமும் கௌரவமும் நாசமடையுமுன் சமரசத்திற்கு வந்ததுடன், ஆர்ப்பாட்டம் நடத்திய ஆட்களுக்குக் குளிர் பானம் வழங்கி அவர்களைத் தாஜா செய்து அனுப்பியது நினைவுக்கு வந்தது.

இந்த நிலை நமக்கு வரவேண்டாம் என்று எண்ணியவர் தாடையை இறுக்கிக் கொண்டு குமுறி வந்த கோபத்தை அடக்கியபடி இரும்பு பீரோவைத் திறந்து இரண்டாயிரம் ரூபாய்களை எடுத்து எண்ணி மேஜை மேல் வைத்தார்.

''இடத்தை நீங்க காலி செய்தால் ரொம்ப நல்லதா யிருக்கும். நன்றி சார்'' என்று வெறுப்பு மிக்கதொரு கும்பிடு போட்டார்.

அன்று அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட திவாகரன் உதவியால் கல்யாணி அம்மாளும் காவேரியும் காந்தி சினிமாப் பார்க்கப் போயிருந்தனர்.

திவாகரனைத் தங்கள் வீட்டுக்கு மறுநாள் காலை காப்பி பலகாரத்திற்குக் கல்யாணி அம்மாள் அழைத்திருந்தாள்.

''மிஸ் காவேரி, உன்னை ஏன் இந்தப் படத்திற்கு அனுப்பி வைத்தேன் தெரியுமா? நீ தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவள். கல்யாணி அம்மாள் தாய்நாட்டைச் சேர்ந்தவங்க.

மகாத்மா காந்தி இந்த இரு நாட்டிலும் தமது சத்தியாகிரகத்தை நடத்தி வெற்றி கண்டவர். அதனால் அனுப்பிவைத்தேன். படம் எப்படி?'' தோசையைச் சட்டினியில் தொட்டுச் சுவைத்தபடியே வினவினார் திவாகரன்.

''படம் பிரமாதமாக இருந்தது. இயேசுநாதர், புத்தர் போன்றும் அன்பும் அகிம்சையுமே குறிக்கோளாக வாழ்ந்த மகாத்மாவும் ஒரு அவதார புருஷர்தான். எத்தனையோ இடங்களில் மனம் நெகிழ்ந்து கண்ணீர் உகுத்துவிட்டேன். ஆனால் தென் நாட்டவர் யாரையும் படத்தில் காட்டவில்லையே என்ற ஒரு குறை மனதை நெருடியது.'' கல்யாணியம்மாள் தன் அபிப்ராயத்தை வெளியிட்டாள்.

''மகாத்மா காந்தியைப் பற்றித் தென் ஆப்பிரிக்க மக்கள் எல்லா இனத்தவரும் நன்கு அறிவார்கள். அவர் நினைவைப் போற்றும் வகையில் காந்தி செந்தமிழ்ப் பாடசாலை-காந்தி தாகூர் நூல் நிலையம் என்பவை டர்பன் நகரில் உள்ளன. நகரத்திற்கு முப்பது கிலோ மீட்டர் தொலைவில் காந்தியடிகள் ஆரம்பித்து வைத்த பினிக்ஸ் செட்டில்மெண்ட் என்ற ஆசிரமம் இன்று ஒரு மியூசியமாகப் பாதுகாக்கப்பட்டு, அவரது மருமகள் திருமதி சுசிலாகாந்தி அம்மையாரால் செவ்வனே மேற்பார்வையிடப்பட்டு, பல நாட்டவர்களின் கவனத்தைக் கவரும் வகையில் பிரபலமாகியுள்ளது. ஜோகன்ஸ்பர்க்கிலும் அவர் ஆரம்பித்த டால்ஸ்டாய் பண்ணையைப் பற்றி அறிந்தவர்கள் பலர் இருக்கின்றனர். அந்த இடம் பத்திரமாகப் பாதுகாக்கப்படாது போனது ஒரு பெரும் தவறு. காந்தியடிகளை மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்திலே பிளாட்பாரத்தில் விழத் தள்ளிவிட்ட அந்த இடத்தை நான் என் பெரிய அண்ணனுடன் சென்று நேரில் பார்த்திருக்கிறேன். அவர் விழுந்த இடத்தைத் தொட்டுக் கும்பிட்டிருக்கிறேன்.

''பலே! உனக்குக் காந்தியடிகள் மீது அத்தனை பக்தியா?''

''மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதரும் அவர் காட்டிய வழியைப் பற்றிக் கட்டாயம் சிந்திப்பார்கள். அந்த வகையில் எனக்கு அவர்மீது மட்டற்ற பற்று உண்டு. தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய போராட்டங்களின் போது அதில் எல்லா இனத்து இந்திய மக்களும் கலந்து கொண்டனர். ஜோகன்ஸ்பர்க்கில் பி.கே. நாயுடு என்பவர் தம் குடும்பத்துடன் காந்தியடிகள் உட்கார்ந்து எடுத்துக் கொண்டுள்ளதொரு புகைப்படத்தை இந்த ஊர் குறளகத்தில் இன்றைக்கும் பார்க்கலாமே!

''இந்த நாயுடுவைப் பற்றியோ, வேறு எந்தத் தமிழரைப் பற்றியோ படத்தில் எந்த இடத்திலும் ஒரு வார்த்தை கூடப் பேசப்படவில்லை. முக்கியமாக நாங்கள் எல்லாம் பெரும் மதிப்புடன் பேசும் எங்கள் தில்லையாடி வள்ளியம்மாள் முனிசாமியை அதில் ஒரு இடத்தில்கூடக் காட்டவில்லை என்பது எனக்கு மகா குறையாகத் தெரிந்தது. ஏனென்றால் மகாத்மா காந்தி, அவர்களின் சுயசரிதையிலே வள்ளியம்மாளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

''பதினேழு வயதே நிரம்பிய வள்ளியம்மாள் முனிசாமி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்று-அதில் காய்ச்சலடைந்து விடுதலையாகி வீட்டில் மரணப் படுக்கையிலிருந்தபோது நான் அவளைக் கேட்டேன்.

''வள்ளியம்மா, நீ போராட்டத்தில் சேர்ந்து சிறைக்குச் சென்றதைப்பற்றி வருந்துகிறாயா?''

அவள் சொன்னாள். ''வருத்தமா? இப்பொழுது கைது செய்து மறுபடி சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்பேன்.''

''அதன் பலனாக இறந்து போனால்...?''

''உரிமைப் போராட்டத்திற்கு மன மகிழ்ச்சியுடன் உயிரைக் கொடுப்பேன்.''

''சில நாட்களுக்குப்பின் வள்ளியம்மாள் இறந்து போனாள். அவளுக்கு நாட்டில் பல இடங்களில் அனுதாபக் கூட்டங்கள் நடந்தன. தமிழ்நாட்டின் வீராங்கனையான இந்தப் பெண் செய்த தியாகம் சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே மங்காத இடம் பெற்றுவிட்டது.

''இந்தத் தோரணையில் காந்தியடிகள் தமது சுயசரிதத்தில் எழுதியிருக்கிறார். இதை மேற்கோளாகக் காட்டி 'காந்தி காட்டிய வழியிலே' என்ற தமது புத்தகத்தில் திரு.ஹோமர் ஏ ஜாக் என்பவர் எழுதியிருக்கிறார். அவர் ஆப்பிரிக்காவிற்கு வந்ததும், வள்ளியம்மாளின் கல்லறையைப் பார்வையிட விரும்பி நண்பர்களுடன் சென்று அவளுக்கு அஞ்சலி செலுத்தினார் என்ற விவரம் இருந்தது.

''அப்படிப்பட்ட எங்கள் தில்லையாடி வள்ளியம்மாளை இந்தப் படத்தில் காணாதபோது நான் கண் கலங்கிக் கண்ணீர் விட்டுவிட்டேன்.''

''மிஸ் காவேரி, இந்தப் படம் காந்தியடிகளைப் பற்றி-அவரது கொள்கைகள், போராட்டங்களைச் சுற்றியே எடுக்கப்பட்டது. அவருக்குத் தெரிந்த அத்தனை பேரையும் வைத்து எடுப்பது என்றால் சாத்தியப்படாது. உன் மனக்குறையை நீ வேறுவிதமாகத் தீர்த்துக்கொள்ள இயலும்.''

காவேரி திவாகரனை வியப்புடன் பார்த்தாள்.

''தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நாங்கள் வள்ளியம்மாளின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

தில்லையாடியில் அவளுக்குச் சிலை அமைத்து-சென்னையில் அவள் பெயரில் ஒரு கட்டிடம் கட்டி கைத்தறி விற்பனைக்கு அமைத்துவிட்டிருக்கிறோம். பெரும்பாலான தமிழருக்கு வள்ளியம்மாளைப் பற்றித் தெரியும். அவளுக்கு அஞ்சலி செலுத்த நீ விரும்பினால் உடனடியாக உன் பிறந்த நாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டும். பதினேழு வயதே நிரம்பிய அந்தச் சிறு பெண் ஏற்றி வைத்த தியாகத் தீயை நீ மேலும் சுடர் விட்டு எரியச் செய்யவேண்டும். அதுதான் நீங்கள் எல்லோரும் அவளுக்குச் செய்யக் கூடிய நினைவஞ்சலி.''

''காவேரி! மிஸ்டர் திவாகரன் சொல்வது முற்றிலும் சரி. தாமோதரன் உன் பாஸ்போர்ட் எண், தேதி முதலியவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுக் கடிதம் போட்டதும் உடனடியாகப் போலீசில் புகார் செய்து புகாரின் நகலை வாங்கி அவருக்கு அனுப்பு. உனக்குப் பாஸ்போர்ட்டும் கணிசமாகச் செலவுக்குப் பணமும் வரும். ஊருக்குக் கிளம்பு.''

''ஆண்ட்டி! தாமோதரனிடமிருந்து பண உதவி பெறுவது எனக்கு ரொம்ப வெட்கமாக இருக்கிறது.''

''இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கிறீங்க. இனி வெட்கம் ஏன்'' திவாகரன் உரத்துச் சிரித்தார்.

''காதலித்தால் மட்டும் போதுமா? ஆண்ட்டி...'' மெல்லிய குரலில் கல்யாணியின் காதுகளில் மட்டும் கேட்கும்படி சொன்னாள்.

''கவலைப்படாதே. சீக்கிரம் அதற்கு ஒரு நல்ல முடிவு கட்டிவிட்டதாக ஒரு கடிதம் வரும். பிறகு சொல்வாய்...'' செல்லமாக வேடிக்கையாக அவள் முதுகைத் தட்டினாள், கல்யாணி.

அதற்குப் பின்னர் நேரம் மிகவும் வேகமாக விரைவாக ஓடியது. கல்யாணி அம்மாளுடன் கச்சேரி, நடன-நாடகக்காட்சிகளுக்குப் போய் வந்தாள் காவேரி: ஊரிலிருந்த அத்தனை கோயில்களையும் தரிசித்தாள். டிராவல் ஏஜன்சி திருப்பித் தந்த பணத்தை உபயோகித்துக் கட்டச் சில புடவைகள் வாங்கிக் கொண்டாள்-பொருத்தமான ரவிக்கைகள் சில தைத்துக் கொண்டாள்.

கல்யாணி அம்மாளின் கவனிப்பு, திவாகரனின் உற்சாகமான பேச்சுகள், நல்ல உணவு, பல இனிமையான எதிர்பார்ப்புகள் இவைகளால் ஒரு சில நாட்களில் காவேரி நன்றாகவே மாறிப்போனாள்.

கண்களைச் சுற்றிப் படர்ந்திருந்த கருவளையங்கள் மறைந்து-கன்னத்தில் மகிழ்ச்சி பளபளக்க அவள் மிகவும் அழகாகத் தென்பட்டாள்.

இரண்டு வாரங்களுக்குப் பின்னர் காவேரியின் முகவரிக்குத் தாமோதரனிடமிருந்து ரிஜிஸ்டர் தபாலில் கடிதம் வந்தது.

கைகள் நடுங்க மனம் மகிழ்ச்சியில் பரபரக்கக் கடித உறையைக் கிழித்தாள்.

அவள் கைச்செலவிற்குக் கணிசமானதொரு தொகைக்கு ஒரு டிராஃப்ட் அனுப்பியிருந்தான் தாமோதரன். அத்துடன் பாஸ்போர்ட்டின் எண், கிடைத்த தேதி, ஊர் முதலிய விவரம் குறித்த கடிதமும் அனுப்பியிருந்தான். மூன்றாவதாக நீல வண்ண மெல்லிய காகிதத்தில் அவன் அவளுக்காக எழுதியிருந்ததை ஆவலுடன் படித்தாள்.

''அன்புள்ள என் காவேரி!

உனது குரலை மீண்டும் தொலைபேசியில் கேட்டு நான் அடைந்த மகிழ்ச்சியையும் வியப்பையும் வார்த்தைகளால் விளக்க இயலாது. மறுபடியும் வெட்கத்தைவிட்டுக் கேட்கிறேன், நீ என்னைத் திருமணம் செய்துகொள்வாயா? உன்னை மனைவியாக அடைவது பெரும் பாக்கியம் எனக் கருதுகிறேன். ஞாயிற்றுக்கிழமை தென் ஆப்பிரிக்க நேரம் இரவு ஒன்பது மணிக்கு - அப்போது தாய்நாட்டில் இரவு பனிரெண்டரையாக இருக்கும் - அதாவது முகூர்த்தநாளாம். நண்பர் ஒருவர் சொன்னார். அந்த நல்ல வேளையில் உன் வாயால் உன் விருப்பத்தைத் தொலைபேசி மூலம் கேட்க ஆசைப்படுகிறேன். எனது போனுக்காகக் காத்திரு. நாள் நட்சத்திரம் பார்க்கிறேனே என்று உனக்கு வேடிக்கையாக இருக்கிறதா? இவைகளை நீ நம்புகிறாயே. உன் நம்பிக்கையை அழிக்க எனக்கு மனமில்லை. உன்னுடன் எல்லா விஷயங்களிலும் ஒத்துப்போவது என்ற முடிவுடன்தான் எழுதுகிறேன். நல்ல எதிர்பார்ப்புடன் காத்திருப்பேன்.

அன்பன்

தாமோதரன்''

''ஆண்ட்டி'' என்று ஆனந்தத்தில் பேசமுடியாது திணறிய காவேரி கடிதத்தைக் கல்யாணி அம்மாளிடம் கொடுத்தாள்.

அதைப் படித்துவிட்டு முறுவலித்தாள் அவள். ''என்ன பதில் சொல்லப் போகிறாய் காவேரி?'' வேடிக்கையாக அவள் கன்னத்தைக் கிள்ளினாள்.

''என்ன பதில் சொல்வேன் என்று நினைக்கிறீங்க? ஐ லவ் தாமு. அவர் மணக்க ஆசைப்படுவதைக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். போனில் என் பதிலைக் கேட்கப்

போகிறார். இந்தப் பிறவியிலும் இனி எடுக்கப்போகும் பல பிறவிகளிலும் உங்களையேதான் மணக்க விரும்புகிறேன்னு சொல்லப் போகிறேன்.''

''பலே!பலே! சமீபத்தில் உன்னை நான் சில பழைய தமிழ்ப் படங்களைப் பார்க்க அழைத்துப் போனேன் இல்லையா? அதனுடைய பாதிப்பு. பரவாயில்லை, தாமோதரன் நல்ல மனிதன்.''

''என்னை சந்தோஷமாக வைத்துக் காப்பாற்றப்போகும் ஒரு கண்ணியமானவர்-மனதிற்கு இனியவர். அவரை நான் காதலிக்கிறேன். கடைசி மூச்சுவரை அவரது உண்மையான மனைவியாக இருந்து அவரது எல்லாப் பணிகளிலும் அவருக்குத் துணையாக இருப்பேன்.''

''அதுதான் ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு அழகு. இனி முகூர்த்தப் புடவை, நகைகள் இவைகளைப் பற்றிச் சிந்திக்கணும். கடைகளுக்கு அலையணும். ஆமாம், நான் யார் வீட்டைச் சேர்ந்தவள்? தெரியலையே, எனக்குத் தாமோதரன் குடும்பத்தையும் நல்லாவே தெரியும்'' கல்யாணி சிரித்தாள்.

''என் பெரிய அண்ணி சவுந்தரிக்கு நீங்க ரொம்ப நெருங்கிய தோழி. அந்த வகையில் பெண் வீட்டைச் சேர்ந்தவங்க. தாமுவின் கடிதத்தைப் பார்த்துவிட்டுக் கட்சி மாறிடாதீங்க, பத்திரம்.'' மகிழ்ச்சி கட்டுக்கொள்ளாது காவேரி சிரித்தாள்-நிம்மதியாகச் சிரித்தாள்-வருங்காலத்தை எண்ணி இனிய எதிர்பார்ப்புகளுடன் சிரித்தாள்.

41

ஊருக்குத் திரும்பப் பயணச்சீட்டு, புதுப் பாஸ்போர்ட், பணம் இத்தியாதிகள் வருவதற்குச் சில நாட்களாகின.

தாமோதரன் அவளைத் தொலைபேசியில் அழைத்துப் பத்து நிமிடங்களுக்குமேல் மறுபடியும் பேசினான்.

''நம் நாட்டு அரசு தரும் பயணச் சலுகை முழுவதையும் நீ எடுத்துக்கொண்டு புறப்படவில்லை, அதனால் அதில் உள்ள பாக்கியையும், இந்த ஆண்டு அரசு தரவிருக்கும் பயணச் சலுகையையும் சேர்த்து உன் பெயரில் நான் நாலாயிரம் ரூபாண்டுக்கு டிராஃப்ட் எடுக்கப் போகிறேன். அத்துடன் பயணச் சீட்டு, பாஸ்போர்ட் எல்லாவற்றையும் சேர்த்து அனுப்பி வைப்பேன். நீ நமது திருமணத்துக்கு வேண்டிய புடவை, நகை முதலியவைகளை வாங்கிக் கொண்டு வர வேண்டும்'' என்றான்.

காவேரிக்கு மகிழ்ச்சி கட்டுக்கொள்ளவில்லை. ஏற்கனவே அவன் அனுப்பிய டிராஃப்ட்டைப் பாஸ்போர்ட் கைவசம் இல்லாததால் மாற்றாது வைத்துக் கொண்டிருந்தாள். எல்லாம் கிடைத்ததும் அவைகளை ஒட்டு மொத்தமாக வங்கியில் மாற்றினால்?...

''அப்பப்பா நான் ஒரு அரை லட்சாதிபதியாகி விடுவேன் ஆண்ட்டி?'' மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தாள்.

''சென்னையில் பார்க்க வேண்டியவைகள் பலவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டாய். நடன-நாடகக் கச்சேரிகளுக்கும் ஓரளவு போய் வந்தாகிவிட்டது. ஆனால் தாய் நாட்டின் மறுபக்கத்தை நீ இன்னமும் பூரா பார்க்கலை. திவாகரனிடம் சொல்லி ஒரு சுற்றுலாப் பயணத்துக்கு ஏற்பாடு செய்யச்சொல் கிறேன். பணம் பற்றிக் கவலைப் படாதே. நான் முன்கூட்டிச் செலவழிக்கிறேன். உன் பணம் கைக்கு வந்ததும் உன் செலவைக் கணக்கிட்டுக் கொடுத்திடு. ஓ.கே.'' என்றாள் கல்யாணி.

காவேரி நன்றியால் நெகிழ்ந்து போனாள்.

''சும்மா தங்க வைத்துச் சாப்பாடு போடுவதுடன் எனக்கு என்னென்ன உதவிகள் செய்கிறீங்க ஆண்ட்டி. நான் உங்களுக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

''கெட்டவர்களையே இதுவரை சந்தித்து நீ மனம் கசந்து போயிருந்தாய். உதவி செய்ய நல்லவர்களும் இந்த நாட்டில் இருக்காங்க என்று நிரூபிக்கவேண்டாமா? அந்த வகையில் இது என் நாட்டுக்காக நான் செய்யும் பணி'' என்று கல்யாணி வேடிக்கையாகச் சிரித்தாள்.

காவேரியைப் போலத் துடிப்புடன் ஒரே மூச்சாகச் சுற்றுலாப் பயணத்தைக் கல்யாணி முடிக்க முடியாதவள்... வயதானவள். எனவே திவாகரன் அவர்கள் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள்-கோயில்கள் முதலியவற்றைச் சிறுசிறு பயணப் பகுதிகளாகப் பிரித்து, காரில் போய்வர ஏற்பாடு செய்து உதவியிருந்தார்.

இரண்டு வாரங்களில் ஓரளவு தமிழகத்தின் சுற்றுப் பயணத்தை அவர்கள் முடித்துக் கொண்டிருந்தனர். வடநாடு முழுவதும் போய் வர நேரம் அதிகமில்லாததால், காவேரியும் கல்யாணியும் விமானப் பயணத்தை மேற்கொண்டு தாய்நாட்டின் தலைநகரான டெல்லியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஆக்ராவுக்குப் போய் உலக மகா அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைக் கண்டு மகிழ்ந்து விட்டுத் திரும்பியிருந்தனர்.

★ ★ ★

பயணங்கள் ஓரளவு முடிவடைந்தது. அன்று மாலை அவளும் கல்யாணியும் ஓய்வாக திவாகரனுடன் முன்னறையில் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தனர்.

''இப்போது எங்கள் நாட்டைப்பற்றி உன் அபிப்ராயம் என்னம்மா?'' விளையாட்டாகச் சீண்டினார் திவாகரன்.

''முற்றிலும் மாறுபட்ட அபிப்பிராயம்னா நீங்க ஆச்சர்யப்படுவீங்க. மகாபலிபுரத்துச் சிற்பங்களைப் பார்த்துத் திகைக்கப்போய் நின்னுட்டேன். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோவில் கதவைப் பார்த்து அசந்து போயிட்டேன். எத்தனை பெரிய கதவு; எத்தனை பெரிய கோயில்? சங்கிலி போலக் கல்லாலேயே செய்திருந்த அற்புத வேலைப்பாட்டைப் பார்த்து அதிசயித்தேன். காமாட்சியம்மன்-ஏகாம்பரேஸ்வரர்-வரதராஜன் குமரப்பெருமாள் இத்தனை கடவுளரையும் தரிசித்த பின்னர் காஞ்சிபுரத்தில் இன்னம் எத்தனை கோயில்கள். எனக்கு உடனே என் நாட்டில் கேப் ராஜதானியில் உள்ள கிராம்ஸ் டவுன்தான் ஞாபகத்துக்கு வந்தது.''

''ஆமாம் காவேரி. டவுன் ஆஃப் சர்ச்சஸ் என்பார்கள் அதை. ஒரு தெருவுக்குள்ளேயே பத்து மாதா கோயிலுக்கு மேல் இருக்கும். அப்படி ஒரு நகரம் அது'' கல்யாணி சிரித்தாள்.

''கோயில்களுக்கு மட்டும் காஞ்சி பிரபலமானதல்ல. நெசவுத்தொழில், ஆன்மீக வளர்ச்சி, அரசியல், சரித்திரம் என்று பல விஷயங்களுக்கும் பிரபலமானதொரு நகரம். பாடல் பெற்ற ஸ்தலம்'' என்றார் திவாகரன்.

''கன்யாகுமரியில் தேவியை தரிசித்து மகிழ்ந்தேன். கடலில் சூரியன் உதித்துக் கடலிலேயே அஸ்தமிக்கும் அதிசயத்தைப் பார்த்தேன். விவேகானந்தர் பாறை என்ற நினைவு மண்டபத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். திருச்செந்தூர் முருகனுக்கு விபூதி அபிஷேகம் செய்து ஆனந்தப் பட்டேன். திருநெல்வேலியில் நெல்லையப்பர் ஆலயத்தில் சிவலிங்கத்தைக் கும்பிட்டுவிட்டு நடராஜர் சிலையைத் தரிசிக்க நின்றபோது என் பின்னாலிருந்து வந்த குரலைக் கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன் ஆண்ட்டி. வெள்ளைவெளேரென்று சேலை கட்டிய ஒரு வயதான பெண்மணி-தும்பைப்பூவான தலையை வாரிச் சொடுக்குப் போட்டுக்கொண்டிருந்தாங்க. நெற்றியில் பட்டையாகத் திருநீறு. காரைக்கால் அம்மையாரைப் பார்த்திட்டது போல எனக்கு ஒரு திகைப்பு. 'குனித்த புருவமும் கொவ்வைச்

செவ்வாயில் குமிழ் சிரிப்பும்' அப்படின்னுதானே இந்த நடராசனைப் பார்த்ததும் உனக்குத் தோணுது...ஏம்மா' அப்படின்னு அவங்க கேட்டப்போ நான் அதிர்ந்து போனேன். அதே பாடலைத்தான் நான் மனதிலே பாடிக்கொண்டு நடராசரைத் துதித்துக் கொண்டிருந்ததை டெலிபதிபோல அந்தம்மா சொன்னதும் எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சு. 'ஆமாம் அம்மா' என்று சொன்னேன். அவங்க மீதிப்பாட்டை அழகாகப் பாடினாங்க. மெய்மறந்து கேட்டுக்கிட்டிருந்தேன். ஆண்ட்டி-திருநெல்வேலிக்காரங்க பேசுகிற தமிழ் ரொம்ப இனிமையா இருக்கு.''

''தமிழ்னாலே இனிமைன்னுதானே அர்த்தம்'' கல்யாணி முறுவலித்தாள்.

''சுசீந்திரம் பார்த்தியாம்மா...'' வாயைக் கிண்டினார் திவாகரன்.

''அங்கே நிற்கும் தூண்களைத் தட்டிக்காட்டினார் ஒரு கைடு. அதிலிருந்து சங்கீத த்வனி வந்ததைக் கேட்டு பிரமிச்சுப் போயிட்டேன். அங்கே இருந்த ஆஞ்சநேயர் சிலை. அப்பப்பா எத்தனை பெரிசு!''

''நாமக்கல்லில் கூட அப்படி ஒரு பெரிய ஆஞ்சநேயரைப் பார்த்திருப்பியே.''

''ஆமாம்...அங்கிள். எல்லாக் கோயில்களையும் விட எனக்கு ரொம்ப பிடிச்சது சீர்காழி தோணியப்பர் ஆலயம், அதுபோல மாயவரம்கிட்டே இருக்கே...வைத்தீஸ்வரன் கோயில், அதுவும் பிடிச்சது. தோணியப்பர் ஆலயத்தில் குளத்தருகே எங்கே உட்கார்ந்து ஞான சம்பந்தர் ஞானப்பால் அருந்தினார் என்ற இடத்தை கைடு குறிப்பிட்டுக் காட்டினபோது நான் விழுந்து கும்பிட்டேன்.''

''ஞானசம்பந்தர் என்றால் உனக்கு மிகவும் பிடித்த சைவமதப் பெரியாரோ?''

''சமயக்குரவர் நால்வரைப் பற்றிய கதை பூராவும் எங்கள் நாட்டுப் பெண்களுக்குத் தெரியும். கோயிலில் குருபூஜை செய்யும்போது என் பெரிய அண்ணியைப் போல தமிழில் நல்லா பேசத் தெரிஞ்சவங்க அந்தப் பெரியாரைப் பற்றி உபந்யாசம் செய்வாங்க. நாங்க கூட்டமா அவர்கள் இயற்றிய பதிகங்களை இடை இடையே பாடுவோம். எனக்கு அதுமாதிரி திருக்கூட்டங்களில் பாட ரொம்பப் பிடிக்கும்! சாதாரணமாகத் திங்கட்கிழமை மாலை பிரார்த்தனையின் போது நாங்க கோயிலில் தோடுடைய செவியன் என்ற தேவாரத்தை முதலாவதாக ஆரம்பித்துப் பாடுவோம். அதனால், அந்தப் பாட்டு தோன்றிய இடம்னு... மனம் கனிந்து வணங்கினேன்.''

''பரவாயில்லை. உனக்குத் தெய்வபக்தி ரொம்பவும் இருக்கு'' என்றார் திவாகரன்.

''எங்க நாட்டுப் பெண்கள் பலருக்குத் தேவாரத் திருவாசகம் மனப்பாடமா தெரியும். தமிழில் படிக்கத் தெரியாட்டிக்கூட அதை இங்கிலீஷில் எழுதி வச்சுக் கொண்டு படிச்சு-பாடத் தெரிஞ்சு கொள்வதில் ரொம்ப ஆர்வம். வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயம் என்பதை இங்கேயுள்ள வைத்தீஸ்வரர் கோயிலின் நினைவுக்காக எங்கள் மூதாதையர்கள் அம்கேணி ஆற்றங்கரை ஓரத்திலே கட்டி வைத்தார்கள். அதனால் ஒரிஜினல் வைத்தீஸ்வரர் ஆலயத்தைப் பார்த்து வழிபட விரும்பினேன். நியாயந்தானே?''

''பலே! பலே! நீ ரொம்ப நன்றாகவே பேசறே!'' சிரித்தார் திவாகரன்.

''ரொம்ப நன்றாகப் பாடுவா. நல்ல குரல். பெரிய அண்ணிகிட்ட நல்லா பாடம் கிடைச்சிருக்கு.''

''ஆண்ட்டி! வைத்தீஸ்வரன் கோயிலில் நான் எனக்கும் தாமோதரனுக்கும் அர்ச்சனை செய்யச் சொல்லிவிட்டு சாமி சந்நிதியிலே நின்னப்போ என் மனதில் நாங்க எங்க ஊர்

கோயிலில் பாடும் அத்தனை பாட்டும் நினைவில் வரவே, எனக்குள்ளேயே பாடிக்கொண்டேன். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது வேதம். நான்கினு மெய்ப்பொருளாவது...நாதன் நாமம் நமச்சி வாயவே' என்பதை எனக்குள் பாடியபோது நான் சிரித்துவிட்டேன்.''

''ஆமாம், ஏன் சிரிக்கிறேன்னுகூட நான் கேட்டேன்- பிறகு சொல்றேன்னியே'' கல்யாணி தூண்டினாள்.

''பூசை நடுவில் கரடி போல அதைப் பேசக்கூடாதுன்னு மனதுக்குக் கடிவாளம் போட்டுக் கொண்டேன். திடீரென்று எனக்குத் தாமோதரன் நினைப்பு நெஞ்சை பலமா அமுக்கிச்சு. ஒரு தடவை, அவங்க அம்மா உயிரோட இருக்கிறப்போ குரு பூஜைபோது நான் இதைத் தனியாகப் பாடினேன். தாயாரை அழைச்சிட்டுப் போக வந்த தாமோதரன் வெளியே சுவர் ஓரமா கேட்டுக்கொண்டு நின்றார். நான் வெளியே வந்தப்போ என்கிட்டே ஓடி வந்தார்.

''ரொம்ப உருக்கமா அழகா பாடினே. ஆமாம், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கின்னு பாடினாயே, யார்மேல் அப்படி உனக்குக் காதல்?...''

''அபச்சாரம். விளையாட்டாப் பேசாதீங்க. சம்பந்தர் ஓதிய பதிகம். கடவுள் மேல் காதல்.''

''ஓ! உனக்குக் கடவுள் மேல் காதல். எனக்கு அரசியல் மேல் காதல். இந்த இரண்டு காதலும் இணைஞ்சா...என்று அவர் கூறி முடிக்கு முன்பு ஒரே ஓட்டமாக நான் ஓடி எங்க வீட்டுக் காருக்குள் ஏறி உட்கார்ந்து விட்டேன். தாமோதரன் ரொம்பக் குறும்புத்தனமாப் பேசுவார். அதை நினைச்சுச் சிரிச்சேன் ஆண்ட்டி.''

''இப்போ எப்படி நிலைமை?'' கல்யாணி அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.

''அரசியலும் ஆன்மீகமும் இணைஞ்சு போச்சு இல்லையா? பிடிச்சதோ பிடிக்கலையோ, தன் மனைவி கோயிலுக்குப் போய் வருவதைத் தாமோதரன் கட்டுப்படுத்தமாட்டார். அவரது அரசியல் கொள்கைகளை நானும் கட்டுப்படுத்த மாட்டேன். ஓரளவுக்குத் துணையாக இருப்பேன்.''

''அடி சக்கை! காவேரி ரொம்பவும் துணிவைப் பெற்று விட்டாள். உன் கல்யாணத்தன்னிக்கு இங்கே சக்திவிநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்துட்டு, கல்யாணி அம்மாள் வீட்டில் நாங்கள் விருந்து சமைத்து, நண்பர்களைக் கூப்பிட்டு அந்த வைபவத்தைக் கொண்டாடிவிடுவோம். அங்கே நாங்கள் வர முடியாவிட்டாலும் எங்கள் ஆசிகளும் வாழ்த்துக்களும் பறந்தோடி வந்து சேர்ந்துவிடும்'' சிரித்தார் திவாகரன்.

காவேரி அந்த நாளைக் கற்பனை செய்தபடி அவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

சில நாட்களில் அவள் எதிர்பார்த்த பாஸ்போர்ட், டிராஃப்ட்,பயணச்சீட்டு எல்லாம் கிடைத்தன.

அவ்வளவுதான்-காவேரி மிகவும் பரபரப்படைந்தாள். திவாகரன் உதவியுடன் விமானப் பயண அலுவலகத்திற்குச் சென்று தேதி விவரங்களைச் சரிபார்த்துக் கொண்டாள். வங்கியில் டிராஃப்டுகளை மாற்றிச் சில ஆயிரங்களுக்கு டிராவலர்ஸ் செக்காகவும், மீதியைப் பணமாகவும் எடுத்துக்கொண்டாள். கல்யாணியம்மாளுடன், கடைத் தெருவுக்குச் சென்று தயாராகச் செய்து வைத்திருக்கும் நகைகளில் தனக்குப் பிடித்தமானதொரு சிவப்புக்கல் நெக்லசும், தோடும்,கைவளையலும் வாங்கிக்கொண்டாள். 'விசேஷங்களுக்குப் போய்வர சில புடவைகள்- அவைகளுக் கேற்ற ஜாக்கெட்டுகள் - மாக்ஸிகள்-இரவு உடைகள் எல்லாம் வாங்கிக் குவித்துக் கொண்டாள்.

கல்யாணியம்மாளின் ஆலோசனைப்படி தாமோதரனுக்குப் பட்டு வேட்டியும் உத்தரியமும் பட்டு ஜிப்பாவும் வாங்கிக் கொண்டாள். அரக்கு வண்ணத்திலே சரிகை ஊசி வாணம் போட்ட முகூர்த்தப் புடவையும் தகுந்த ரவிக்கையும் எடுத்துக் கல்யாணியம்மாளுக்குத் தெரிந்த கடையில் திருமாங்கல்யம் செய்யக் கொடுத்து விரைவில் வாங்கி, சக்தி விநாயகர் கோயிலில் பூஜையில் வைத்து எடுத்து, பயணத்திற்குப் புதிதாக வாங்கிய பெட்டியில் நிறைத்துக் கொண்டாள். தோழிகளுக்குக் கொடுக்கச் சந்தன சோப்புக்கள், தங்கள் வீட்டுப் பூஜையறையில் உபயோகிக்கச் சந்தனப் பவுடர் டப்பாக்கள், ஊதுவத்திக் கத்தைகள் என்றுபெட்டியை நிறைத்துக்கொண்டாள்.

கல்யாண விருந்துக்குச் சில அப்பளக் கட்டுகளை வாங்கி ஓவர் நைட் பையில் திணித்துக் கொண்டாள்.

''இவைகள் எல்லாம் டர்பன் விக்டோரியா தெருவில் உள்ள இந்தியர் கடையிலேயே கிடைக்கும். அங்கே கிடைக்காத பொருள் ஏதாவது உண்டா?'' என்று கல்யாணி கேட்டாள்.

''ஒன்று உண்டு, சம உரிமை கிடைக்காத விஷயம். இவைகளை என் கையாலேயே என் கல்யாணத்திற்குத் தாய் நாட்டில் வாங்கினேன் என்று காலம் முழுவதும் ஒரு இனிப்பான நினைவுக்காக வாங்கிக்கொண்டு போகிறேன் ஆண்ட்டி'' என்றாள் காவேரி.

அவளது வற்புறுத்தலைத் தாளாது கல்யாணி அம்மாளும் அவளுடன் விமானத்தில் பம்பாய் வரை பயணப்பட்டாள். இருந்த பொழுதில் ஒரு டாக்ஸியில் பம்பாய் நகரைச்சுற்றிப் பார்த்து மகிழ்ந்த காவேரி, ஏர் இந்தியாவில் மொரேஷியஸ் வரை பயணப்பட, செக்யூரிடி முதலான விமான நிலையச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, கல்யாணி அம்மாளுடன் விடைபெற அருகே வந்தபோது, ஆனந்தமும் துயரமும் கலந்த உணர்வில் திணறிப் போனாள்.

''விஷ் யூ ஆல் தி பெஸ்ட். காவேரி, இப்போ தாய் நாட்டின் மறுபக்கத்தை நன்றாகவே பார்த்துட்டே இல்லே?...'' அவளை அன்புடன் தழுவியபடி கேட்டாள் கல்யாணி.

''தாய்நாட்டின் மறுபக்கம் இத்தனை அழகாக, அன்பு நிறைந்த பண்பாளர்கள் உடையதாக, கலாச்சாரம் மிகுந்த ஆன்மீக ஒளி வீசும் ஒரு பக்கமாக, இருப்பதைக் கண்டேன் ஆண்ட்டி. நம்நாடு... ஈஸ் ரியலி எ கிரேட் கண்ட்ரி. அதிலிருந்து என் மூதாதையர் வந்தனர் என்ற பெருமையோடு விடை பெற்றுக்கொள்கிறேன்... ஆண்ட்டி...'' என்று ஆனந்தத்தில் அழுதபடி கிளம்பினாள்.

மொரேஷியஸ் தீவையடைந்ததும் அவள் அடுத்த விமானத்திற்கு அதிக நேரம் காத்திருக்கத் தேவையிருக்கவில்லை. 'ஏர் மடகாஸ்கர்' ஏர் இந்தியாவில் வரும் பயணிகளுக்காகக் காத்திருந்தது. சிறிது நேரமே டிரான்சிட் லவுஞ்சில் உட்கார்ந்திருந்தாள்.

ஏர் மடகாஸ்கர் தரையிலிருந்து எழும்பி டர்பன் நகரை நோக்கி வானத்தில் பறந்தபோது, ஏறக்குறைய மூவாயிரம் மைல் தூரத்தில் அவள் இருந்தபோதிலும் அவள் கண்களில் தாமோதரன் விமான நிலையத்தில் காத்திருக்கும் காட்சி தெரிந்தது-மனம் உணர்ச்சிக் கொந்தளிப்பில் படபடவென்று அடித்துக் கொண்டது.

42

இரவு பத்து மணி அளவில் விமானம் டர்பன் நகரை நெருங்கியது.

''இன்னும் சில நிமிடங்களில் நாம் லூயி போத்தா விமான நிலையத்தில் இறங்கப் போகிறோம். காப்டன்

டர்பன் நகரைச் சுற்றி வந்து உங்களுக்கு நகரின் இரவுக் கோலத்தைக் காட்டப் போகிறார். கண்டு மகிழுங்கள். எங்களுடன் நீங்கள் பயணம் செய்தது பற்றி மிக்க மகிழ்ச்சி. நன்றி..'' தேன் கலந்த குரலில் விமானப் பணிப்பெண் ஒலி பெருக்கியில் கூறியதும் பயணிகளுக்குள் ஒரே பரபரப்பு.

நீல வானத்திடையே யாரோ வைரக் கற்களை வாரி இறைத்தாற் போல ஆயிரக்கணக்கான மின் விளக்குகள் கண்சிமிட்ட, டர்பன் நகர் கோலாகலமாகத் தெரிந்ததைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டுப் போனாள்.

பிறந்த நாடு என்றாலே அதற்கு ஒரு தனி ஈர்ப்பு உள்ளதே...அவள் நெஞ்சு விம்மி, கண்கள் கலங்கிப் போக மகிழ்ச்சியும் துன்பமும் கலந்த ஒரு வினோதமான உணர்வுடன் கையும் காலும் பதற ஜன்னல் வழியே தான் பிறந்து வளர்ந்து ஆளான தன் ஊரை ஆவலுடன் பார்த்தாள்.

விமானம் தரையைத் தொட்டுச் சீறிக்கொண்டு ஓடி நின்றது. போர்ட் ஹெல்த் அதிகாரிகள் உள்ளே நுழைந்து பயணிகளின் சீட்டுகளைப் பரிசோதித்தபின் பயணிகள் இறங்க அனுமதிக்கப்பட்டனர். அந்தச் சில நிமிஷங்களில் காவேரியின் நெஞ்சு வெடித்து விடும்போல் துடியாகத் துடித்தது.

'நீ ஊருக்குத் திரும்பிவரப் போவதாக உன் அண்ணனிடம் அவரது கடைக்குப் போய்ச் சொன்னேன். எனக்குக் காவேரி என்று ஒரு தங்கை இருந்தாள்-ஆனால் இப்போதில்லை என்ற அசட்டையாகப் பதிலளித்து விட்டார். கவலைப்படாதே. நான் உனக்காக நிலையத்திற்கு வந்து காருடன் காத்திருப்பேன்.'

தாமோதரன் தொலைபேசியில் சொல்லியிருந்தான்.

மொரேஷியஸ் தீவுக்கு உல்லாசப் பயணம் செய்யப் போயிருந்த நண்பர்களையும் தாய்நாட்டுக்கு விஜயம் செய்யப்போயிருந்த உறவினர்களையும் வரவேற்க நிலையத்தில்

ஒரு திருவிழாபோன்று கூட்டம். அந்தப் பெரிய கூட்டத்திலே அவளை வரவேற்க ஒரே ஆள்தான் வந்திருந்தான்.

காவேரியின் நெஞ்சைத் துக்கம் இறுக்கியது. சே! எதற்கு அழ வேண்டும். இனி தாமோதரன்தானே அவளுக்கு உற்றார் - உறவினர்- நண்பர்- கணவர்- என்ற எல்லாச் சொந்தங்களுக்கும் உரிமையானவர். அவர் ஒருவர் வந்திருப்பது போதுமே என்று கன்னத்தில் உருண்ட கண்ணீரை விரலால் தட்டிவிட்டு மற்றப் பயணிகளுடன் விமானத்தினின்று வெளிப்பட்டாள்.

சுங்கவரி இத்தியாதிகள் முடிந்ததும் ஆப்பிரிக்கன் ஆட்கள் பெட்டிகளைச் சுமந்துவர, வெளிப்பட்ட பயணிகள் தங்களது உறவினர்களை, நண்பர்களைக் கண்ணாடித் தடுப்பிற்கு அப்பால் கண்டதும் 'ஹாய். ஹலோ ஹௌ ஆர் யூ?... என்று கத்தி, கூச்சலிட்டபடி மார்புடன் தழுவி-கன்னங்கனிய முத்தமிட்டுக் கொண்டிருந்தவர்களிடையே புகுந்து காவேரி தூண் ஓரமாக நின்ற தாமோதரனை நெருங்கினாள்.

''தாமு...'' என்று கையை நீட்டி அவனது காங்களைப் பற்றியபடி அவன் தோள்மீது முகத்தைப் பதித்துக் கொண்டு இன்பமும் துன்பமும் தாங்க முடியாது விம்மி அழுதாள்.

''ஊருக்கு வந்துட்டே-நாம் ஒன்று சேர்ந்துட்டோம்-அடுத்த வாரம்-உன் கோரிக்கைப்படியே வைத்யநாத ஈஸ்வரர் ஆலயத்துக் கல்யாண மண்டபத்தில் நம் திருமணம் நடக்கப் போகிறது. இனி நீ மகிழ்ச்சியாகவல்லவா இருக்கணும்!''

அவளது முதுகைத் தடவி ஆறுதல் சொன்னான் தாமோதரன்.

தேன்நிலவுக்காக வாங்கியிருந்த தனது புதிய பென்ஸில் அவளை ஏற்றிக்கொண்டு வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அவளுக்கு அங்கே ஒரு அதிசயம் காத்து நின்றது. அவளை முதுகில் கட்டித் தன் குழந்தையாக வளர்த்த லீனா அங்கே தாமோதரன் வீட்டில் வேலைக்கமர்ந்திருந்தாள். வீட்டை நிர்வகிக்கவும் சமைக்கவும் லீனாவும்-தோட்டத்தைக் கவனித்து-மற்றக் காரியங்களைச் செய்ய எலியாட்டும் இருந்தனர்.

''ஹலோ...மிஸீஸ்...'' என்று பற்களைக் காட்டிப் பணிவுடன் வரவேற்றான் எலியாட்.

''மீனா பேபி, வாஸா லாப்பா காஷ்ல...(என் குழந்தையே நீ சந்தோஷமாக உள்ளே வா)'' என்று வரவேற்ற லீனா விரைந்து வந்து காவேரியைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

கல்யாணமாகும்வரை காவேரி தன் சிநேகிதியின் வீட்டில் தங்கியிருப்பதாக ஏற்பாடு. இரவு உணவுக்குப்பின் அவளைத் தாமோதரன் அவள் தோழி வீட்டில் கொண்டு சேர்த்தான்.

★ ★ ★

அவர்களது திருமணம் முன் ஏற்பாட்டின்படியே வைத்யநாத ஈஸ்வரர் கோயில் கல்யாண மண்டபத்தில் மிகவும் எளிமையாக நடந்தது. கல்யாணத்திற்கு வெள்ளையர்-கருப்பர் என்ற எல்லா இனத்து மக்களும் வந்திருந்தனர். செக்யூரிட்டி போலீஸ் அதிகாரிகளும் சாதா உடையில் வந்து கண்காணித்தனர்.

நாட்டின் பல பக்கத்திலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. தாய்நாட்டிலிருந்து கல்யாணி அம்மாள் வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்தாள். அவள் வாங்கித் தந்திருந்த அழகான பிரிண்டெட் பட்டுப் புடவையை

உடுத்திக்கொண்டு அன்று மாலையே அவள் தன் கணவனுடன் தேன்நிலவுக்கு கேப் டவுன் புறப்பட்டாள்.

ஆயிரத்தைந்நூறு கிலோமீட்டர் தொலைவிலிருந்த கேப் நகரை, அவள் ஆப்பிரிக்காவில் வசித்தும் இதுவரை பார்த்ததில்லை என்ற காரணத்தால் புதிய பென்ஸைத் தானே ஓட்டிக்கொண்டு அவளுக்குத் தென் ஆப்பிரிக்காவின் பார்லிமெண்ட் தலைநகரான கேப் டவுனைச் சுற்றிக்காட்டப் புறப்பட்டான் தாமோதரன்.

இளவேனிற்காலத் தொடக்கம். வழியெங்கிலும் செடியும்-மரங்களும் பூத்துக்குலுங்கின. ஆயிரம் குன்றுகளை வழியில் அவர்கள் பார்வையிட்டுக் கொண்டு நின்றபோது அவர்கள் தம்பதியர்களாக இப்போது வந்திருப்பதைக் கொண்டாடும் பாவனையில் பள்ளத்தாக்கிலிருந்த அத்தனை கல்யாண முருங்கை மரங்களும் இலை தெரியாது பூக்களில் சிவந்து சிரித்தன.

வழி நெடுகிலும் ஜெகராண்டா வெளிர் ஊதாப்பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தன. அசோலியாவின் வண்ண வண்ணப் பூக்கள் கண்களைக் கவர்ந்தன.

கேப் நகரத்திற்குப் போகும் வழியில் கார்டன் ரூட் என்ற பாதையின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்காகப் புரோடியாக்களும் பார்பர்ட்டன் டெய்சிகளும் சிங்காரச்சி பூக்களும் கொல்லென்று பூத்து அவர்களது தேன்நிலவுப் பயணத்தை மிக்க இனிமையாக்கிக் கொண்டிருந்தன.

''அப்பப்பா! எத்தனை பூக்கள்! இவைகளையெல்லாம் பார்க்கும்போது எனக்குத் தாய்நாட்டில் பார்த்த ஒரு படத்தின் பாடல் ஞாபகம் வருகிறது'' என்று கொஞ்சியபடி அவன் தோளில் சாய்ந்து கொண்டாள் காவேரி.

''கொஞ்சம் பாடேன்-கார் ஓட்டும் களைப்பு எனக்கு மாறும்'' என்றான் விளையாட்டாக அவன்.

''ஆயிரம் மலர்களே... மலருங்கள்... அமுதகீதம் பாடுங்கள்...'' என்று அந்தப் பாட்டை அவன் காதருகே மெல்லிய குரலில் பாடினாள்.

''நீ பாடியது முற்றிலும் உண்மை. நமது வாழ்வு இனிமையாக இருக்க இந்தப் பல்லாயிரக்கணக்கான மலர்கள் காற்றில் அசைந்து சிரித்துக் கொண்டிருக்கின்றன. நமது வருங்காலம் அமுத மயமாக இருக்கப் போகிறது.'' கூறியபடி அவளைத் தன் அருகே இழுத்து அணைத்து மகிழ்ந்தான் தாமோதரன்.

★ ★ ★

கேப் நகரில் அவர்கள் பார்ல் எனுமிடத்தில் தாமோதரனின் நண்பரது விவசாயப் பண்ணைக்குள்ளிருந்ததொரு அழகான வீட்டில் தனியே தங்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அந்தச் சில நாட்கள் அவள் கவலையெல்லாம் மறந்து கணவனுடன் கேப் நகரத்தின் முக்கிய இடங்களை எல்லாம் சுற்றிப் பார்த்து மகிழ்ந்து-வேண்டிய பொருள்களையெல்லாம் வாங்கிக் குவித்துக் கொண்டு தாமோதரன் வாங்கித் தந்த கோன் ஐஸ்கிரீமைக் குழந்தையைப் போல நக்கிச் சாப்பிட்டு-சாக்லேட் துண்டுகளை எச்சிற்படுத்தி அவனுக்குக் கொடுத்து மகிழ்ந்து-உலகத்தையே மறந்து இன்பத்திலே திளைத்துப் போயிருந்தாள்.

எங்கே திரும்பினாலும் கண்களில் தெரியும் டேபிள் மவுண்டன் என்ற மலைமீது மின்விசைக் கம்பி வண்டி மூலம் அன்று காலை அவர்கள் போய்ச் சேர்ந்தனர்.

யாரோ ராட்சசனுக்கு மேஜை போட்டு வைத்தது போல மலை உச்சி டேபிள் மவுண்டன் என்ற பெயருக்கேற்றபடி ஒரே சமதளமாக இருப்பதைக் கண்டு வியந்தாள் அவள்.

''அப்படியே நில்லுங்கள்'' என்று கூறிப் புகைப்படக் கருவியுடன் ஓடிவந்து ஒரு புகைப்படக்காரர் போட்டோ எடுத்தார்.

''பயணிகளை மகிழ்விக்க இப்படி ஒரு வியாபாரம்'' என்று சிரித்தபடி, தாமோதரன் படம் எடுத்ததற்கு உண்டான பணத்தையும், அதை அனுப்பித் தரவேண்டிய முகவரியையும் கொடுத்து ரசீதைத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

டேபிள் மவுண்டன் மேலிருந்ததொரு தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியே நகரத்தின் அழகைப் பார்க்க நின்ற கியூவில் காவேரியும் தாமோதரனும் வந்து நின்றனர். அவள் முறை வந்தபோது பார்வைக்குண்டான பணத்தைக் கருவியின் தலைமேல் தெரிந்ததொரு துவாரத்தில் போட்டுவிட்டுக் கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொடுத்தான் தாமோதரன்.

மலையடிவாரத்தைச் சுற்றிலும் அமைந்திருந்த கேப் நகரின் பல பகுதிகளையும் பார்த்துவிட்டு அவள் டேபிள்குடா பக்கம் கண்களைத் திருப்பியபோது தெரிந்ததொரு தீவை வியப்புடன் பார்த்தாள்.

''இதுதானே ராபின் அய்லண்ட்?'' என்று கேட்டாள். ஏனோ அவள் மனம் அதைக் கண்டதும் கலவரமடைந்தது.

''ஒருநாள் உன் கணவன் வந்து தங்க நேரும். இந்த இடத்தை நன்றாகப் பார்த்துக்கொள்'' என்று தாமோதரன் கூறியபோது அவளால் சிரிக்க முடியவில்லை. பயங்கர உணர்வில் அழப் போனாள். ஆரம்பக் காலத்திலே தொழுநோயாளிகளைக் கொண்டு அடைத்து வைத்திருந்த அந்தத் தீவில் பிற்காலத்தில் அரசியல் போராட்டக்காரர்களை அடைத்து வைக்க ஒரு சிறை எழுப்பியிருந்தனர். அதில் இன்னமும் புகழ்பெற்ற பல அரசியல் கைதிகள் அடைபட்டுக் கிடந்தனர்.

இன்பமாகத் தேன்நிலவுக்குப் புறப்பட்டு வந்த இடத்தில் துன்பத்தின் அடையாளமான அந்தத் தீவைப் பார்க்க நேரிட்டதே! உள்ளூர மனம் கலங்கிப் போனாள்.

ஆனால் அந்தத் துயர உணர்வு சில நிமிஷங்கள்தான் அவளை ஆட்டிப் படைத்தது. அதற்குப்பின் தாமோதரனின் அன்புச் செயலில் திளைத்து மகிழ்ந்து, காரணமற்ற கவலைகளையெல்லாம் உதறிவிட்டு மிக மகிழ்ச்சியுடன் தங்களது தேன்நிலவைக் கொண்டாடினாள்.

வீடு திரும்பியதும் சிலநாட்கள் முன் அறிவிப்புடன் அவள் தன் வேலையை ராஜினாமாச் செய்து விட்டு வீட்டுத் தலைவியாகக் குடும்ப வேலையில் மும்முரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

வீட்டைக் கவனிப்பதிலும், தாமோதரனுக்கு வேளைக்கு குசியாகச் சமைத்துப் போட்டுக் கவனித்துக் கொள்வதிலும் அவனுடன் கூட்டங்களுக்குப் போய் வருவதிலும், வீட்டிலே நடக்கும் பல இனத்தவர் கூட்டங்களுக்குத் தேநீரும், சமுசாவும், போளியும் செய்து பரிமாறி உபசரிப்பதிலும் பொழுது வேகமாகக் கழிந்தது.

★ ★ ★

அவளது கல்யாணம் முடிந்து, குடும்ப வாழ்க்கை மேற்கொண்டு மாதங்கள் ஆறும் ஆறு நொடியாக விரைந்து ஓடிப்போயின.

அன்று மாலை தாமோதரன் அலுவலகத்தினின்று முன்னதாகவே வந்துவிட்டிருந்தான். சுரீர் என்ற வெய்யிலின் வெப்பத்தைத் தணிக்க ஸ்நான உடையில் பின்புறமிருந்த தங்கள் வீட்டு நீச்சல் குளத்தில் குளிக்கக் கிளம்பினான்.

டைவிங் போர்டிலிருந்து குட்டிக்கரணம் போட்டுத் தண்ணீரில் தொப்பென்று குதித்து நீந்தியபடி, கரைமேல் வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவள் அருகே வந்து கம்பியைப் பிடித்துக் கொண்டு தண்ணீரில் மிதந்தபடி கேட்டான்.

''காவேரி, நீயும் ஸ்நான உடை அணிந்து கொண்டு வா. தண்ணீர் ரொம்பக் குளிர்ச்சியா உடம்புக்கு இதமா இருக்கு'' என்று வற்புறுத்தினான்.

''இனி நான் இப்படி உங்களோட தண்ணீரில் நீந்தி கொட்டமடிக்க முடியாது. டைவிங் போர்டிலிருந்து குதிக்கவும் முடியாது.''

''ஏன்?''

''இன்று காலை நம் டாக்டர்-அதான் உங்கள் தோழர் வில்லியம் அவர்களின் மனைவி டாக்டர் பாரதியைப் பார்க்கப் போயிருந்தேன். நீங்கள் வெகு விரைவில் தந்தையாகப் போறீங்களாம். நானும் டைவிங் போன்ற காரியங்களில் ஈடுபடுவதை நிறுத்துவது நல்லதாம்.''

''அட...இந்தச் சந்தோஷச் சங்கதியை இப்படி மெதுவாகவா சொல்லுவாங்க!''

தலையிலிருந்து தண்ணீர் முகத்தில் வழிய அவன் ஏணிப்படியேறி அவள் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான். பக்கத்தில் கிடந்த துண்டில் முகத்தைத் துடைத்துக்கொள்ள அவன் கை நீட்டியபோது, ''பாஸ்! உங்களைப் பார்க்க இரண்டு வெள்ளையர்கள் வந்திருக்காங்க.'' பின்னாலிருந்து லீனா குரல் கொடுத்தாள்.

டவலில் ஆன டிரஸிங் கவுனை மேலே சுற்றிக்கொண்டு அவன் உள்ளே போனான். காவேரி கவலையுடன் அவனைத் தொடர்ந்தாள்.

முன்னறையில் வந்து நின்ற அவர்களிருவரையும் அவன் பார்த்ததுமே புரிந்து கொண்டு விட்டான்.

''நான் உடுத்துக்கொண்டு வரச் சில நிமிஷங்கள் தேவை'' என்றதும் அவர்கள் தலையசைத்தனர்.

அவர்களில் முக்கியமானவனாகத் தெரிந்த அதிகாரி சொன்னான். ''மிஸ்டர் தாமோதரன்! உங்களை அரசின் பெயரால் கைது செய்ய வந்திருக்கிறோம். தாமதம் செய்யாது எங்களுடன் வந்தால் நலம். வாரண்டையும் கையுடன் கொண்டு வந்திருக்கிறோம்'' என்றான்.

பரபரப்பாக உடுத்திக்கொண்ட தாமோதரன் முன்னறைக்கு வந்தான்.

''நான் தயார். என் மனைவியிடம் விடைபெற்றுக் கொள்ள இன்னும் சில நிமிடங்கள் தேவை. அனுமதி தருவீங்களா?'' கேட்டான் தாமோதரன்.

படுக்கையறையில் சுவர் ஓரமாகக் குலுங்கி அழுது கொண்டிருந்த காவேரியை தன் மார்புறத் தழுவி அவளது கண்ணீரைத் துடைத்தான் தாமோதரன்.

''இந்த நிகழ்ச்சி நாம் ஒவ்வொரு வினாடியும் எதிர்பார்த்ததுதான். எனக்கேதாவது ஏற்பட்டால் நீ கஷ்டப்படக் கூடாது என்று இந்தச் சொத்து-கார்-வீடு எல்லாவற்றையும் உன்மேல் எழுதி வச்சிருக்கேன்.''

''தாமு...இந்தப் பணம் காசு எல்லாம் நீங்க கூட இல்லாம எனக்கு எதுக்கு?'' விசும்பினாள் அவள்.

''எனக்குப் பதில் என் குழந்தை உன்னுடன் இப்போகூட துணையாக இருக்கிறது. மறக்காதே. அதைப் பத்திரமாக வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பு உனக்கு இப்போது வந்திருக்கு. கல்யாணி அம்மா சொன்னதையும் மறக்காதே. இந்த நாட்டுக்கு உன் பங்கில் செய்ய வேண்டிய பணி மிச்சமிருக்கிறது.''

''தாமு! உங்களை நான் மறுபடியும் எப்போ பார்ப்பேன்?''

''கோழைபோல நீ கலங்கக்கூடாது. இன்று கைது செய்துகொண்டு போய் ஒரு நாள் சிறையில் வைத்து

நாளைக்கே விடுதலை செய்து வீட்டுக்கு அனுப்பிவிடலாம். அல்லது நீதியின் முன் கொண்டு வராது நூற்றி எண்பது நாள் தொடர்ந்து சிறையில் வைத்திருந்த பின்னர் ஹவுஸ் அரஸ்ட்டில் வைக்கலாம். என் மேல் புரட்சிப் போராட்ட குற்றம் அதிகப்படியாக நிரூபிக்கப்பட்டால் ராபின் அய்லண்டில் ஆயுள் கைதியாக வைக்கலாம். எதுவானாலும் என்ன?...''

''தாமு...தாமு...'' விசும்பினாள் காவேரி.

''காவேரி...அழுகையை நிறுத்திவிட்டு, நீ சொல்லுவியே தமிழ்நாட்டுக் கதைகள்-ஒரு தமிழ் வீரமங்கை தன் கணவனைப் போருக்கு அனுப்பும்போது துணிவுடன் வேலைக் கையில் கொடுத்து அனுப்புவாளே-அதைப்போல இந்த உரிமைப் போருக்கு என்னைத் துணிவுடன் விடை கொடுத்து அனுப்பு. திரும்பி வந்தால் நாம் அன்பான தம்பதிகளாக இன்பமாகக் கடைசி மூச்சுவரை ஒருவருக்கொருவராக வாழ்வோம். நான் வர முடியாது போனால் நான் விட்டுப்போன பணியைத் துணிவுடன் நீ தொடர்ந்து செய். நம் குழந்தையை ஒரு அறிவுள்ள பிரஜையாக வளர்த்து ஆளாக்கு. தாய்க்குலத்தின் தனிச் சிறப்புப் பெற்ற பெண்ணாக நீ வாழ்ந்து காட்டு.''

''தாமு...அப்படியே செய்கிறேன் தாமு...'' விசும்பினாள் காவேரி.

''எங்கே கொஞ்சம் சிரி. உன் சிரித்த முகத்தை மனத்தில் பதித்துக்கொண்டு நான் கிளம்பணும். சம உரிமை பெற்று இந்நாட்டில் உள்ள எல்லோரும் சுதந்திரமாக வாழும் நாள் வெகு தொலைவில் இல்லை. அப்போது சரித்திர ஆசிரியர்கள் எழுதுவார்கள்-ஒரு தில்லையாடி வள்ளியம்மாளைப்போல, ஒரு காவேரியைப்போல, தமிழ்ப்பெண்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர், தங்களது வாழ்க்கையை இந்தச் சுதந்திரத்திற்குத் தியாகம் செய்தனர் என்று. உன் பெயர் சரித்திரப் பொன்னேட்டில் மின்னும், வரட்டுமா?''

காவேரி பூஜையறைக்கு ஓடிக் குங்குமச்சிமிழை எடுத்துவந்து அவன் நெற்றியில் பொட்டு வைத்துக் கன்னங்களைத் தன் முகத்தோடு பதித்துக்கொண்டு வழியனுப்பினாள். காவல் துறை வண்டியில் அவன் ஏறியதைத் தெருவில் உள்ள பலர் தமது வீட்டு ஜன்னல் வழியே பார்த்தனர்.

மறுநாள் டர்பன் நகரே அவனைப் பற்றிய தகவலில் எப்படி அமர்க்களப்படப் போகிறது என்பதைக் காவேரி அறிவாள்.

அவள் தனியாக இந்த வேதனையை அனுபவிக்கப் போவதில்லை. கூட அவனது குழந்தை துணை இருக்கிறதே, அந்தத் தெம்பில் தன் கையை அசைத்துக் கண்ணில் பொங்கிய நீரை விழுங்கிக் கொண்டு சிரித்த முகத்துடன் விடை கொடுத்தபடி நின்றாள்.

கையை அசைத்து முறுவலித்தபடி சென்ற தாமோதரனைச் சுமந்து கொண்டு வண்டி தெருக்கோடியை நோக்கி விரைந்துவிட்டது.

அவள் மனதிலே ஒரு தெம்பு லலுவாக உருவாகியது. அவள் கணவன் சொன்னதுபோல-அவள் 'ஒரு காவேரியைப் போல' என்று ஊர் உலகம் மெச்சும்படி வாழ்ந்து காட்டப் போகிறாள்-அது நிச்சயம்!

உறுதியுடன் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள் காவேரி.

முற்றும்